Vol. XXVIII. Registered No. M. 209 No. 2

AUGUST, 1914

# மாதர் மித்திரி

OFFICE OF THE REGISTRAR OF [illegible]
17 SEP 1914
MADRAS

# Tamil Woman's Friend

"MATHAR MITHIRI"

---

PUBLISHED BY THE

Woman's Foreign Missionary Society

Methodist Episcopal Church

U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

---

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

162051

## பொருள் அடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| கீர்த்தனை | 19 |
| விநோத பொருட்களினின்று துணி செய்தல் | 20 |
| தகப்பனின் உண்மையான கதை | 21 |
| வெள்ளிக்கெண்டி | 23 |
| நிலப்புழுக்கள் | 25 |
| நரி | 28 |
| ஒரு சத்வீரன் | 29 |
| இந்திய ஸ்திரீகள். தொகை 1. | 30 |
| வர்த்தமானக் குறிப்புகள் | 31 |


Y15 r 211 1021
10 2 21 - 20



# மாதர் மித்திரி.

புத். ௨௮. ௧௯௧௪ ௵ - ஆகஸ்டு ௴. இல. ௨.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 SEP 1914
MADRAS.

HEARER OF PRAYER.

இராகம், இந்துஸ்தான் காப்பி. ஆதிதாளம்.

பல்லவி.

ஏற்றுக்கொண்டருளுமே, தேவா,—இப்போ
ஏழையேன் ஜெபத்தை யேசுவின்மூலம்.

சரணங்கள்.

1. சாற்றின ஆதி ஆயத்த ஜெபமும்,
சாந்தமாய் ஜெபித்த பாவ அறிக்கையும்,
தேற்றிக்கொண்டருளும் மன்னிப்பின் மருவும்
யேசுவின் பாதத்தில் வைக்கிறேன், ஸ்வாமி.— ஏற்றுக்

2. குறைவுண்டு இதிலே, அருமைப் பிதாவே,
குற்றம் மன்னித்திடும் யேசுவின்மூலம்;
முறைப்படி கேட்க நான்தெரியாத பாவி;
முழுதும் யேசையாமேல் வைக்கிறேன், ஸ்வாமி.— ஏற்றுக்

3. மறுரூப ஆவி மவணடும்மன் ஸ்வாமி;
மனமெல்லாம் புதிதாக்கிடும் ஸ்வாமி;
சிறுமைப்பட் டடியேன், கேட்கிறேன் ஸ்வாமி;
தேற்றிடும், புதுப் பெலன் ஊற்றிடுஞ் ஸ்வாமி.— ஏற்றுக்

4. விசுவாசம் பெருகி நிலைத்திடச் செய்யும்;
வெளிப்படும் மறைபொருள் பலப்படச் செய்யும்;
சிசுவைப்போல் மறுபடி பிறந்திடச் செய்யும்;
தேவாவி என்னுளந் தங்கிடச் செய்யும்.— ஏற்றுக்

## CLOTH FROM STRANGE MATERIALS.
## விநோத பொருட்களினின்று துணி செய்தல்.

தற்காலத்தில் அதிகத்தேவையாயிருக்கும் பஞ்சு, ரோமம், பட்டு முதலியவைகள் குறைவு படுதலினாலோ, அல்லது புது மாதிரியான சரக்குகள்மேல் ஜனங்கள் பிரியப்படுவதினாலேயோ, வெகு நூதனமான சாமான்கள் துணி நெய்வதில் உபயோகப்பட்டுவருகின்றன.

இவைகளில் ஒருபொருள், கண்ணாடியாம். இது புதிதான காரியமல்ல. வேடிக்கைக்கென்றாவது, அல்லது வேறு பொருட்களினின்று துணி நெய்யக் கூடுமென்பதைக் காட்டவாவது, இத்தொழில் அநேககாலமாய் அனுசரிக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஒரு ஆசிரியர் சொல்லுகிறப்போல், தற்காலத்தில் ஸ்திரீகள் விசேஷமாய்த் தரிக்கும் உடைகள், இந்தப் பொருளினின்று நெய்யப்பட்டு வருகின்றது.

இச்சரக்கினின்று உண்டாக்கப்படும் நூல்கள் முறடாயும், லேசாய் அறுந்து போகிறதாயுமிருக்குமென்று நினைக்கலாம். அப்படியல்ல. அவைகள் பட்டு நூற்களைப்போல், பளபளப்புள்ளவைகளாயும், நீட்டக்கூடியவைகளாயுமிருக்கின்றன. இவைகள் சகல நிறங்களிலும், வருணத்திலும் செய்யப்படுகின்றன. சில ரத்தின தூள்களில் காணப்படும் பிரகாசம் இவைகளுக்குண்டு.

சைபீரியா சுரங்கங்களில் அகப்படும் ஒருவிதமான கல் ருஷியாவில் உளது. சாதாரணமாய் அறுக்கப்படாதது. ஓர் விதமான நூலை இக்கல்லினின்று எடுக்கலாமென்று தெரிவிக்கப்படுகிறது. இதினின்று செய்யப்படும் துணி மெதுவாயும், வளைக்கக்கூடியதாயுமிருக்கிறது. அழுக்காகுமேயானால், இதை நெருப்பின்மேல் சற்றுவைப்பதினால், அ[illegible] முழுவதும் நீக்கிவிடலாம்.

எஃகு என்று சொல்லப்படும் இரும்பின் வகையினின்றும், துணிசெய்யப்படுகின்றது. அது குதிரை ரோமத்தை ஒத்திருக்கிறது. புருஷர்கள் தரிக்கும் சட்டைகளின் கழுத்துப் பட்டைகளை உறுதிப்படுத்த அது உபயோகப்பட்டு வருகிறது.

ஆட்டு ரோமத்தினின்றுண்டாகும் கம்பளியல்ல, வேறு கம்பளி மனுஷர்கள் ஆடைகட்கு உபயோகப்பட்டு வருகிறது. இதற்கு "சாக்குக் கம்பளி" என்று பேர். இது மின்சாரச்சூளையில் செய்யப்படுகிறது. சாக்குக்கட்டித்தூள்களோடு, சில மருந்துகளைச் சேர்த்து, சூளையில் போடுகிறார்கள். சூளையின் மேல் வீசும் ஒரு பலமான காற்றின் ஆதாரத்தினால் போடப்பட்ட சரக்கு ஓர் விதமான வெள்ளைக்கம்பளியாய் வெளியேவந்து விழுகிறது. இதற்குப் பிற்பாடு, சாயமேற்றப்பட்டு, துணியாகச் செய்யப்படுகிறது. இதினின்று உண்டாக்கப்படும் ஆடைகள், நெருப்பினால் அழிக்கக்கூடாததும், கொழுப்பினால் கெட்டுப்போகாததுமா[illegible]றுண்டாகும் கம்பளியைப்போல், அவ்வளவு வளைவுடையதாயிருக்கின்றன.

காகிதத்தினின்றும், கயிற்றினின்றும் துணி உண்டாக்கப்படுகின்றன. பழைய கயிறுகளினின்று ஒரு ஆங்கிலேயத் தொழிலாளி, துணிசெய்திருக்கிறார். பழைய கயிறுகளையும், நாறுகளையும் சேகரித்து, நூல் நூலாய்ப் பிரித்து, மற்றையோருக்கு மறை பொருளாயிருக்கும் ஓர் இரகசிய ஏற்பாட்டினால், துணிநெய்திருக்கிறார். இந்தத் துணி அதிக உறுதியுடையதாயிருக்கிறதால் பிரித்தானியாவின் புறநாடுகளில், இதையுண்டாக்கும் வர்த்தகம் அதிகப்பட்டிருக்கிறது.

ருஷியாவோடு, யாப்பானியர் சண்டை செய்தபோது, இவர்களுடைய சைனியங்கள் காகிதத்தினின்று செய்யப்பட்ட ஆடைகளைத் தரித்திருந்தார்கள். பருத்தியினின்று செய்யப்படும் துணிகளைவிட, அவை அதிகப் பிரயோஜனமும் சூட்டையுண்டாக்குவதாயுமிருந்தன. இங்கிலாந்திலும், ஐரோப்பாக்கண்டத்திலும் அநேகவகையான உடைகள், காகிதத்தினால் செய்யப்படுகின்றன. மையை ஒத்தியெடுக்கும் காகிதவகையும் உபயோகப்படுகிறது. சில புதுபக்குவங்கள் செய்யப்பட்ட பிற்பாடு, பலவிதமான நிறங்களில் தோய்க்கப்பட்டு, முத்திரை குத்தப்படுகின்றன. அடிக்கடி சுத்தஞ் செய்யக்கூடியதாயிருக்கிறதால், கைச்சட்டைகளும், இந்த சரக்கால் செய்யப்படுகின்றன.

மேற்சொன்ன பொருட்களின் அநேகவற்றின் விசேஷமென்னவென்றால், அவைகளின் உறுதிப்பாடே. அதுவன்றி, அவைகள் நெருப்பினால் எரிக்கப்படக்கூடாததாயும், அவைகளில் ஒன்று தண்ணீரினாலல்ல, நெருப்பினால் சுத்திசெய்யக் கூடியதாயுமிருப்பது அவர்களுடைய சிறப்புக்கு அனுசரணையே. காகிதத்துணி லாபமாயும், சூடுண்டாக்குகிறதாயுமிருந்தாலும், அது உறுதியுள்ளதோவென்பது சந்தேகம். அ[illegible] அ[illegible]க்காலத்திற்கு [illegible]ரோமம், பருத்தி, பட்டு [illegible] முதலியவற்றினின்றே துணி [illegible]செய்யப்பட்டு வருமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.



## PAPA'S TRUE STORY.
## தகப்பனின் உண்மையான கதை.

சிறுமோனியும், காருவும் கடுதாசி எடுத்துக்கொண்டு வாசிக்கும்படி உட்கார்ந்திருந்த தங்கள் தந்தையினிடம் ஓடிப்போய் "ஓ தகப்பனே, தகப்பனே எங்களுக்கு ஒரு கதை சொல்லும்" என்று சத்தமிட்டார்கள். நாலு பிராயமுள்ள சிறிய காரு தகப்பன் முழங்கால்மேல் ஏறிக்கொண்டு "எங்களுக்கு உண்மையான சரித்திரம் சொல்லவேண்டும்" என்றாள்.

முன் ஒரு காலத்தில் ஒரு பின்னங்கால் இழந்துபோய் மூன்றுகால்களுள்ள ஒரு மண்டூகம் இருந்தது.

"சண்டையில் அக்கால் சுடப்பட்டுப் போயிற்றா" என்று காரு கேட்டாள். "அதை எப்படி இழந்துபோனதோ எனக்குத் தெரியாது" என்று தகப்பனார் சொன்னார். பாம்போடு சண்டையிட்டு அக்காலை இழந்திருக்கலாம். எனக்குத் தெரிந்த சங்கதி என்னவெனில் "அதற்கு ஒருபின்னங்கால் மாத்திரம் உண்டு, அது தரையின்மீது குதிக்கும்போது ஒரு நொண்டி போர்வீரனைக்குறித்து யாருக்கும் ஞாபகப்படுத்துவதாய் இருந்தது. இப்படி அர்த்தக்கிழ மண்டூகம் ஊனப்பட்டுப்போனதால் தன் அன்றாடக ஆகாரத்தை அதிக கஷ்டத்தோடு சம்பாதிக்க நேரிட்டது."

"மண்டூகங்க[illegible] ரொட்டி தின்கிறதில்லை அல்ல[illegible]" என்று மோனி கேட்டாள். "ரொட்டிக்குப்பதில் ஈக்கள், கொசு முதலிய வஸ்துக்களைத் தின்னும். இந்த மண்டூகம் அவற்றைச் சம்பாதிக்க அதிகக்கஷ்டப்பட்டது" என்று தகப்பனார் சொன்னார். "முதலில் அதிக புத்தியை

உபயோகித்ததினால், பிறகு அதிக கெட்டிக்காரத்தனமுள்ளதாயிருக்கிறது. இலைக்கு அடியிலாகிலும், புல்கொத்துக்கடியிலாகிலும் பதுங்கிக்கொண்டு அசதியாயிருக்கும் ஈக்களை பிடிக்க இவ்விதமாகத் தன் பிழைப்பைக் கற்றுக்கொண்டது."

"ஒருநாள் தோட்டத்திற்குக் குதித்துப்போய், ஒருவித கீரையிலையினடியில் பதுங்கி, தன் ஆகாரத்திற்கு ஒரு நல்ல பெரிய ஈயைப்பிடிக்கலாம் என்று இருந்தது. ஆனால் அதிக ஆயாசத்தினால் அயர்ந்த நித்திரையடைந்தது. விழித்தபோது மிகவும் இருட்டாயிருந்தது.

"ஐயோ! நான் அதிகம் தூங்கிவிட்டேனே! எனக்கு எவ்வளவு பசியாயிருக்கிறது. இந்த இருட்டில் எனக்கு ஏதாவது ஜெந்து கிடைக்குமா பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே, குதித்துக்கொண்டு வந்தபொழுது சேறு நிறைந்த குளத்திற்குள் விழுந்துவிட்டது. அடியில்போய் உதைத்து உதைத்து தன் தலையை தண்ணீருக்குமேல் உயர்த்தினது.

"அங்கே நீந்திக்கொண்டே தான் இளைப்பாற இடம் தேடினது. கடைசியாக அந்தக் குளத்தின் மத்தியில் கொஞ்சம் மண் உயர்ந்திருந்தது. அதிலே உட்கார்ந்து, சூரியவெளிச்சத்திற்காக காத்துக்கொண்டிருந்தது. காலை விடிந்தபோது பாதிசேறு நிறைந்த ஒரு பள்ளத்திலிருந்ததாக கண்டது. அது என்ன பள்ளம் என்றால் அந்[illegible] தோட்டக்காரன் தோட்டத்தை உண்டாக்க [illegible]டின பள்ளம். "அந்த ஏழைத் தவளை அன்று முழுவதும், மறுநாள் இரவும் அங்கேயே ஆகாரமில்லாமலிருந்தது. மறுநாள் காலையில் இரண்டு சிறுபிள்ளைகள் தோட்டத்திற்கு வருவதைக் கண்டு களித்தது.

"இப்போது இந்தக் குழியிலிருந்து நான் தூக்கிவிடப்படுவேன். இந்த அருமையான இரண்டு பிள்ளைகளும் என் சிநேகிதராவார்கள்," என்று நினைத்துக்கொண்டது.

"அந்தப் பிள்ளைகள் கபிலநிறமுள்ள (Sash) கட்டின வெள்ளைச் சட்டைகளையும், கபில நிறமுள்ள (Ribbon) களைத் தலையில் கட்டிக்கொண்டும் வந்தார்கள். "தகப்பனே! இதேவிதமாகத்தான் நானும் மணியும் உடுத்திக்கொள்ளுகிறது." என்று காரு சொன்னாள். தகப்பனோ பதில் பேசாமல் தன்மட்டில் கதைசொல்லிக்கொண்டேபோனார். "அந்த இருவரும் பள்ளத்தண்டை வந்தபோது, பெரியபிள்ளை, "ஆ! அந்த கிழத்தவளை தண்ணீரிலே உட்கார்ந்திருப்பதைப்பார்" என்று சொன்னாள். சிறுபிள்ளையோ, "நாம் அதின்மேல் சேற்றை எறியலாம்" என்றது.

"ஆகவே இந்த இரண்டுபிள்ளைகளும் சேற்றையும் குச்சிகளையும் அந்த ஏழைத் தவளையின்மேல் எறிந்தார்கள். இதினால் தவளையைச்சுற்றிலும் அலைகள் உண்டாகி அமிழ்ந்துபோகிற நிலைமையிலேயிருந்தது."

"ஐயோ! இந்த இரண்டு பிள்ளைகளும் இவ்வளவு குரூரமுள்ளவர்களாயிருப்பார்கள் என்று நான் நினைக்கவேயில்லை" என்று தவளை மனதில் நினைத்துக் கொண்டிருக்கையில், ஒரு அழுக்குக் கட்டை அதன் தலையின்மேல் மோதி, தன்னை மல்லாத்திவிட்டது."

[illegible] அடியிலிருந்து அதுதேறினவுடனே, நக[illegible]நகர்ந்து தான் முன் இளைப்பாறின இடத்து[illegible]போய் சேர்ந்தபோது, ஒரு மனிதன் [illegible] தோளின்மேல் மண்வெட்டியொன்று



எடுத்துக்கொண்டு குழியண்டை வந்தான். "ஐயோ! இதோ ஒரு பெரிய மனிதன் வருகிறான், கட்டாயம் நான் கொல்லப்படுவேன்" என்று தவளை சொன்னது.

"ஆனால் அந்த மனிதனோ தன் சம்மட்டியால் அந்தத் தவளையைத் தூக்கி, குழியிலிருந்து எடுத்து வெளியேவிட்டு, காய்ந்த புல்லின்மேல் வைத்தான்."

"நல்லது, நல்லது, யார் இதை நம்புவார்கள்? தோற்றத்தினால் நாம் மனிதரை நியாயந் தீர்க்கக்கூடாது" என்று தவளை சொன்னது. இப்போது காரு தன் தலையைத்தொங்க விட்டாள். மோனியோ கெக்கெலித்துக்கொண்டிருந்தாள்.

"இந்த இரண்டு பிள்ளைகள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா," என்று தகப்பன் பிள்ளைகளைக் கேட்டான். "நான் எறிந்தபோது அதற்கு வலி எடுத்திருக்கும் என்று நான் நினைக்கவேயில்லை," என்று காரு அழுகையோடு சொன்னாள். "[illegible]லை, இன்னொருதரம் அதிகக்கவலையா[illegible]ப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று த[illegible]பனார் சொன்னார்.

இதுதான் தகப்பனாரின் மெய்யான கதை.

---

## THE SILVER TANKARD

## வெள்ளிக்கெண்டி.

---

### *A STORY OF LONG AGO*

### ஒரு பழைய கதை

திருடர்கள் தங்களுக்குமுன் பரிமாறப்பட்ட ஆகாரத்தைப் புசித்தபின்பு, அவர்களில் அதிகமூடனான ஒருவன் தலைவனைப்பார்த்து: "இந்தப் பக்திபோன்ற பயித்திய வார்த்தைகளைக் கேட்டதுபோதும். இப்போது இந்த வெள்ளிசாமான்களை எடுத்துக்கொண்டு, நாம் போகலாம்" என்று இப்படிச்சொல்லிக்கொண்டே, தன்கை எட்டக்கூடியவரை அகப்பட்டவைகளை சேர்த்துக்கொண்டான். இவனைப்பார்த்து, இவன் கூட்டாளிகளில் சிலரும் அப்படிச்செய்தார்கள். ஒருவன் தேயிலைப்போடும் பாத்திரத்தையும், இன்னொருவன் சர்க்கரைப் பாத்திரத்தையும், வேறொருவன் வெள்ளிக்கெண்டியையுந் தூக்கினான்.

ஏழைச்சாரிட்டியோ, (Charity) பரிதாபமாய் அழுதமுகத்தோடு, அசந்து நின்றாள். பயந்து நின்றாலும், தன்னை தைரியப்படுத்திக்கொண்டு, தலைவனிடத்திலோடி, தனக்கு உதவிசெய்யக்கேட்டாள். இவள் தலைவனிடம் போயிருந்த சமயத்தில் மேசையைச் சுற்றியிருந்தவர்கள் பெரியகுழப்பத்திலிருந்தார்கள். அந்த மூர்க்கர்கள் முகத்தில் பேராசையின் அவலக்ஷணங்கள் நன்றாய்த்துலங்கின. கையிலகப்பட்டதை தங்கள் பெரியபைகளில் போடுகிறதற்குமுன், 'லைட்புட் (Lightfoot,) "நிறுத்துங்கள்" யென்று கூச்சலிட்டான்: பெண்பயப்படுமென்று ஒருகையை அவள் தோள்மேற் போட்டு, மற்றொருகையால் தன்பெரிய கைதுபாக்கியை எடுத்து, அந்த நீசமனுஷர்களுக்கு நேரே நீட்டினான்.

"வெள்ளிச்சாமான்களை மேசையில் வையுங்கள். நம்மை யோக்கியர்களாகப் பாவித்து சகல மரியாதையுஞ் செய்த பெண்ணையா கொள்ளையடிக்க யோசித்திருக்கிறீர்கள்" என்று இரைச்சலிட்டான்.

தலைவன் மற்றவர்கள் எல்லாரைக் காட்டிலும் அதிக உயரமுள்ளவன். சாரிட்டி (Charity) அவன்மேற்சார்ந்து கொண்டு, தனக்கு உதவிசெய்வான்

என்கிற நம்பிக்கையோடு, அவன் முகத்தைப்பார்த்தாள். தலைவன் அதற்குத்தரவாக அவளை அன்பானமுகத்தோடு பார்த்து, தன் கூட்டத்தாருக்கு கடுரமுகத்தைக்காட்டினான். திருடர்களில் அநேகர் வெட்கமுற்றவர்களாய், தலைவன் சொன்னபிறகாரங் கீழ்ப்படிந்தார்கள். ஆனால் பொருள்களை கொள்ளையிடவேண்டுமென்ற ஆலோசனை சொன்ன திருடனோ, "இந்தத்தடவை நீ சொல்லுகிறபடி செய்யலாகாது. பிரசங்கம்செய்கிறதற்கல்ல, திருடவே, நீ நியமிக்கப்பட்டாய். வெள்ளிச்சாமான்களை திருடுகிறதற்கு நீதானே கொண்டுவந்தாய். ஆகையால் அவைகளை நான் எடுத்துக்கொள்வேன்" என்று பகடியாய்த் தலைவனைப்பார்த்துச் சொன்னான்.

இப்படிச் சொல்லிக்கொண்டு, வஞ்சக சிரிப்போடு, வேறொரு திருடன் வைத்துவிட்ட வெள்ளிக்கெண்டியைத் தூக்கினான்.

இந்தச்சமயத்தில், மைப்பெட்டியைத் தூக்கின திருடன் மற்ற ஒன்பது பேரையும் விட்டு, தலைவன் பின்னாலே வந்து நின்றான்.

பயங்கர சத்தத்தோடும், அதிகாரத்தோடும், அந்தக் கீழ்ப்படியாதத் திருடனை, "போக்கிரிப்பயலே" என்று திட்டினான். அப்போது வெள்ளிப்பாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு நடுநடுங்கி நின்றான். மறுபடியும் "கீழே வை, இல்லாவிடில் சாவாய், கீழ்படி" என்று அவனைப் பார்த்துச்சொல்லவே, குற்றவாளி உடனே கீழ்படிந்தான். "அநேக வருஷங்களுக்குப்பிற்பாடு, இந்த இடத்தில்தான் நமது வீட்டுச் சாப்பாட்டை அருந்தியிருக்கிறோம்" என்று குழறி குழறிச் சொன்னான். "துரைமகன்களைப்போல் நடத்தப்பட்டோம். செய்நன்றியை மறவாதிருக்கும் மிருகத்தைவிட நாம் கேவலஸ்தர்களா? இந்தப்பெண் நமக்கு செய்திருக்கும் உபசாரணைக்கு, கொள்ளையிடுவது நியாயமோ" என்று மீண்டுஞ் சொன்னான்.

சிறுபெண்ணோ, உதட்டைப் பிதுக்கிக்கொண்டு "என்தகப்பனாருடைய வெள்ளிச்சாமான்களையும், என்னுடைய தாயாருடைய வெள்ளிப் பொருட்களையுந் தயவுசெய்து எடுக்காதேயுங்கள். ஏனெனில், அவைகள் என்னுடையவைகளல்ல" என்று மத்தியில் பேசினாள்.

தலைவனுடைய பக்ஷமான பார்வையிலிருந்து மோசம் ஒன்றும் நேரிடாதென்று கண்டு, திகைத்து நின்றபெண், மேசை சமீபமாய்ப்போய், அருகிலிருந்த வெள்ளிக்கெண்டியை எடுத்து, அவனிடம் நீட்டினாள்.

"நீங்கள் ஏதாவது இங்கேயிருந்து எடுத்துக்கொண்டுபோக விரும்பினால், இந்தக்கெண்டியைக்கொண்டுபோகலாம். இது என் தாயார் எனக்குக்கொடுத்தது, ஆகையால் எனக்குக்கவையில்லை" என்று பெருமூச்சோடு சொன்னாள். இதைப் பார்த்ததலைவன் பிரமைகொண்டான். மனதிலே அதிக உணர்ச்சியடைந்தவனாய் சிறு பெண்ணைப்பார்த்து "நான் அதை எடுத்துக் கொள்ளுகிறேன். சென்ற பதினைந்து வருஷங்களிலின்று தான், உண்மையாய் நடந்திருக்கிறேன். பிரியமுள்ள குழந்தாய், இந்தப்பொருளை உன் ஞாபகத்திற்கு வைத்துக்கொள்ளுகிறேன்." என்று சொன்னான்.

இப்போது புருஷர்களே, "நீங்கள் போகலாம். எனக்குக் கீழப்படிந்து போங்கள். இங்கு வந்தபோது எப்படி இருந்ததோ, அந்த நிலைமையில் வீட்டை



விட்டுப்போங்கள்" என்று திருடரைப் பார்த்துச்சொன்னான். தலைவனோ, அவர்கள் எல்லோரும் போனபின் சிறு பெண்ணைத் தன்கரத்திலெடுத்து அவளை முத்தஞ்செய்தான். கண்களில் தண்ணீர் ததும்பினதை பிள்ளை கவனிக்குமென்று நினைத்துமுகத்தை வேறுபக்கமாய்த் திருப்பிக்கொண்டு, அவளை கீழேவிட்டான். தன் கையிலிருந்த கெண்டியால் தனக்குப் பழக்கமான வழியிலிருந்த செடிகளை நீக்கிக்கொண்டு, கடைசியாக அப்பாதை வழியாய்ச் சென்றான் எல்லாரும் போய் விட்டார்கள். கதவும் பூட்டப்பட்டது. வெள்ளிக்கெண்டியைத்தவிர, மற்றெல்லா வெள்ளிசாமான்களும் வீட்டிலிருந்தன.

சாரிட்டி என்னும் பெண் பெருமூச்சோடும் நடுக்கத்தோடும், ஒழுங்கீனமான மேசைக்கு முன் முழங்காற்படியிட்டு ஜெபிக்கப் பிரயாசப்பட்டாள். அப்போது 91-ம் சங்கீதத்திலடங்கியிருக்கும் முதலாம்வாக்கியத்தை ஏங்கலோடும் பெருமூச்சோடும் சொன்னாள். "உன்னதமானவரின் நிழலிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்."

சாரிட்டியின் வீடு அவளுடைய நல்ல விசுவாசத்தால் தப்புவிக்கப்பட்டது. மூன்றுமாதத்திற்கப்பால் ஆச்சரியமான செய்திகள் வெளிக்கு வந்தன. லைட்புட் என்னுந் தலைவன் தன் அக்கிரமச்செய்கைகளை அதிகரித்து நடத்திவந்ததினால், கைதியாக்கப்பட்டு, கொலைக்கு நியமிக்கப்பட்டான். சிறையிலிருக்கையில், தன்னிடமிருந்த வெள்ளிக்கெண்டியை தகுதியான ஒரு ஆள் மூலமாய்ச் சாரிட்டிக்கு அனுப்பினான்.

இந்தக் கெண்டியை வைத்திருந்தால், சாரிட்டியினிமித்தம் என்னை கடவுள் ஆசீர்வதிப்பாரென்று நான் வைத்திருந்தேன், அதை எந்த விலைக்கும் விற்கக் கூடாதென்று தீர்மானித்திருந்தேன். இதை அவளிடம் கொடுத்து நான் சமாதானமாய் மரிக்கும்படி, என்னைவந்து பார்த்துப் போகும்படி சொல் என்று செய்தியனுப்பினான்.

இதைக்கேட்ட சாரிட்டி, தேம்பியழுது அந்த ஏழைமனுஷனை தான் எப்படியாவது பார்க்கவேண்டுமென்று தன் தகப்பனாருடைய அநுமதியைக் கேட்டாள்.

தகப்பனே பிள்ளையை கூட்டிக்கொண்டு திருடன் வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையின் அறைக்குப் போனான். அவன் மரண தண்டனையை பெரும்வரை பெண் அவனோடிருந்ததாக தெரியவருகிறது.

கடைசியில் அவன் இந்தப் பெண் காண்பித்த விசுவாசத்தால் குணப்பட்டு கிறிஸ்தவனாக மரித்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வுலகத்தில் அம்மனுஷனுக்கு இவள் ஒருவளே, கிறிஸ்துவின் அன்பை புகட்டினவள். ஆகையால் அவனுக்கு எந்தவிதமான சேதமும் நேரிடவில்லை.

---

## EARTH WORMS.

## நிலப்புழுக்கள்.

வசந்த காலத்தில் நாம் விதையை விதைக்கும்படி தோட்டத்தை பண்படுத்த பாரையையும் முள்ளையும் உபயோகிக்கும்போது வயலில் முதலாவது கை வைத்தவர்கள் நாம் அல்லவென்று காண்கிறோம். இன்னும் அதிக தாழ்மையுள்ள, உபயோகமுள்ள நில வேலையாட்கள் தோட்டத்தின் நிலத்தை நமக்கு முன் பண்படுத்தி நமது வேலையை சுலபமாக்குகிறார்கள்.

இழிவிற்கும் தாழ்வுக்கும் அடையாளமான அற்பமாய் எண்ணப்படும் நிலப்புழு அநேகவழியில் உபயோகமான சிநேகிதனாயிருக்கிறது. இவன் இயற்கையிலேயே நிலம் உழுகிறவன், மாரி காலம் தவிர மற்ற நாட்களில் வருஷ முழுவதும் சுறுசுறுப்பாய், பயிரிடுவதற்கு நிலத்தை செவ்வைபண்ணி அடிமண்ணைத்தோண்டி மிருதுவாக்கி வைக்கிறான். இவன் பூமியை புடமிடுகிறவன். நிலத்தின்மண்ணாங்கட்டிகளை ஊடறுத்து கடினமான நிலத்தை உடைக்கிறான். இவன் ஒரு தோட்டி. மேலேயிருக்கும் குப்பைகளையும் அசுத்தங்களையும் பூமியினுள் செலுத்தி, அதை அடியிலே அழுகச்செய்து இப்படியாக நிலத்திற்கு உரம் போடுகிறான். இவன் உருமாற்றுகிற கருவியாக இருக்கிறான். கனிவர்க்கங்களைத் தின்று பதிலாக பிரயோஜனமான குணங்களையுடைய தன்மையை அந்நிலத்திற்கு கொடுக்கிறான். டார்வின் என்பவர் சொல்லுகிறதாவது: "உழுகிறது மனிதனால் கண்டு பிடிக்கப்பட்டதில் அதிக பிரயோஜனமுள்ளதும் முதிர்மையுள்ள வித்தையாய் இருக்கிறது. ஆனால் இவனுக்குமுன், மெய்யாகவே நிலப்புழுவால் நிலம் ஒழுங்காய் உழப்பட்டு இன்னும் அப்படியே செய்து வரப்படுகிறது."

நம்முடைய தோட்ட வேலையாட்கள் தங்கள் பிரயோஜனமுள்ள வேலையை எப்படிச் செய்து வருகிறார்கள் என்பதைக் கவனிப்பது நமது கருத்து. தாழ்ந்த நிலப்புழுவிற்கு அதிசயிக்கத்தக்கபடி நாம் கடனாளிகளாய் இருக்கிறோம். அவன் தோட்டத்தில் அதிக கூச்சமுடன் குடியிருப்பவன். அவன் வீட்டுக் கூரையின்மேல் தன் நற்குணங்களைக் கூறிக்கொண்டு இருக்கமாட்டான். அவன் அதிக அடக்கமுள்ளவன். தனது உட்சுரங்க வீட்டில் பகல்நேர முழுவதும் இருக்க விரும்புகிறான். இரவுகாலத்தில் தரையில் நீட்டிக்கொண்டு எங்கே ஒரு துண்டு இரை, காய், இலை, கிளை, வைக்கோல், இறைச்சி துண்டு, கொழுப்பு, வெங்காயம் முதலியவை கிடைக்குமோ என்று தேடிக்கொண்டு திரிவான். ஆனால் எப்போதும் சந்தடி கேட்கும்போது தன்னிருப்பிடத்திற்கு ஓடி ஒளிக்கும்படி அதன் சமீபமாய் இருப்பான். அந்தப் புழு தன்னிடம் தூர்ந்துவிட்டால் கண்டு பிடிக்க முடியாமல் திரும்ப இன்னொரு வீடு தயார் செய்ய ஆரம்பிக்கும். சாயந்திர வேளையில் தோட்டத்தில் உலாவப் போனால் உதிர்ந்த இலைகள் கிடக்கும் இடத்தில் ஓர்வித சலசல சப்தம் கேட்கும். நிலப்புழுக்கள் ஒரே எண்ணமாய் ஒருமனமாய் தங்கள் இருப்பிடங்களுக்கு பத்திரமாய் போய்ச்சேருகிறது. ஏதாவது சந்தடியுண்டானால், அந்தப் புழு அதின் துவாரத்திற்குள் பாய்கிறதைக் கவனித்தால் எவ்வளவு சுறுசுறுப்பாய் அதன் கிரியைகளை நடப்பிக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

அப்புழுவின் உடம்பில் 150 தசையாலுண்டான வளையங்கள் உண்டு. இவை சேர்ந்து அதற்கு உருண்டையும் நெளிவுமான உருவம் கொடுக்கிறது. அது முன் செல்லவும் பின் செல்லவும் ஏற்றதாக அதன் பக்கங்களில் விசேஷமான கருவிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கண்ட பாகத்திலும் அதாவது வளையத்திலும் நாலு ஜதை பொய்க்கால்கள் அதாவது சங்கீத கருவிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கருவிகள் பின்னாக லேசாய் வளைக்கப்பட்டிருக்கிறது. இப்புழு பின்னாகப் போனாலும் முன் சென்றாலும் இக்கருவிகள் தரையின் பாகத்தை கவர்ந்துகொள்ளுகிறது.



இப்படி நகருவதில் உடம்பின் தசைகளெல்லாம் மாற்றி மாற்றி சுருங்கவும் தளரவும் இருப்பதினால் சங்கீத கருவிகளுக்கு கொஞ்சம் கொள்வனடி கொடுக்கிறது. அதின் பொந்து அதாவது வளை மிருதுவாயும், மெல்லிய மண்ணால் மூடப்பட்டு தோலில் ஊறும் ஓர்வித பிசினியினால் கடினப்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சிறு சங்கீதக் கருவிகள் கால்களுக்குப் பதில் உதவியாய் இருந்து வளைக்குள் போகவும் வரவும் உபயோகப்படுகிறது. வளைக்குள் நுழையவேண்டுமானால் வால் பக்கத்தை விரித்து அப்பொந்தைக் கவர்ந்துகொள்ளுகிறது. இதைப் பிடித்திழுக்கவேண்டுமானால் அதின் உடம்பை இரண்டு துண்டாக்க வேண்டும். இவ்விதமாக இப்புழு பயப்படுத்தப்பட்டால் விரைவாக தன் வளைக்குள் ஓடிப்போகிறது.

நிலப்புழு தன்னைச் சேராத அநேக விஷயங்களை அறியாமல் இருக்கலாம். ஆனால் தனக்கு வேண்டிய காரியங்களில் அதிக கவனமாய் இருக்கும். இயற்கையை உண்மையாய் நேசிப்பவன் இதினிடத்தில் கவர்ச்சியுள்ள படிப்பைக் கற்றுக்கொள்ளலாம். இப்பூச்சி ஜீவாம்சங்களின் வகுப்பில் அதிக தாழ்ந்தவையாய் இருப்பதினால் சொற்ப மனோசக்தியுள்ளது. அதற்கு கண்கள் இல்லாமற்போனாலும் வெளிச்சத்தைக் காணமுடியும். பூர்வீக பிராணிகள் எகிப்து தேசத்திருள் வருவதற்குமுன் தோற்றம் கண்டுகொள்வதாக சாதனத்தில் கணித்திருக்கிறதை பார்க்கலாம். குருடர் வெளிச்சத்தை அறிந்துகொள்ளுகிறார்கள் என்று வாசிக்கிறோம். அப்புழு இரவில் நீட்டிப் படுத்துக்கொண்டு இரை தின்னும்போது வெளிச்சம் காண்பித்தால் உடனே அதிதீவிரமாய் தன் வளைக்குள் தன்னை இழுத்துக்கொள்ளும். புழுவிற்கு மற்ற பூச்சிகளைப்போல காதுகளும் உணர்ச்சியும் இல்லாதிருந்தாலும் விரியன் பாம்பைப்போல, தொடுகிறதினால் சப்தங்களை அறிந்துகொள்ளுகிறது. புழுக்களுக்கு செவி புலன் இருக்கிறதோ என்பது அதிக சந்தேகமாய் இருக்கிறது. ஆனால் தொடுகைபுலன் அதிகமாய் விர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. தோல் சப்தத்திற்கு அதிக உணர்ச்சியுள்ளதாய் இருக்கிறது. நிலப்புழு பார்வை அற்றுப்போன மனிதன்போல திரிகிறது. அது இரவில் ஆகாரம் அருந்துவதினாலும், தரையினடியில் இருட்டு பொந்தில் குடியிருப்பதினாலும் கண்பார்வை அதிக அவசியமானதாய் இல்லை.

இந்த ஜெந்திற்கு சுவை உணர்ச்சியுண்டு. ஏனென்றால் ஆகாரங்களை என்னென்னவென்று பிரித்தெடுக்கிறது. அதற்கு புதுமைகூட உண்டு என்று எண்ணுகிறேன். ஒரு குருவி முன்கதவண்டை நின்று தட்டும் சத்தம் மூலமாய் படுக்கையிலிருக்கும் வளைந்த பிராணியைக் கூப்பிடத்தெரியும். உள்ளே இருப்பவர்க்கு மழைத்துளிகளின் சப்தம்போல தோன்றும். கூப்பிடுதலுக்கு உத்தரவு கொடுக்க புழு புறப்பட்டதும் குருவிக்கு பூர்த்தியான இரையாகி விடுகிறது. இப்பிராணச்சேத சம்பவத்தையிட்டு நான் கண்ணீர் சிந்துவதில்லை. ஏனென்றால் நான் பட்சிகளை நேசிக்கிறேன். புழுக்களின் திரட்சியிலிருந்து பறவைகள் கொழுத்த ஆகாரம் உண்பதைப் பார்ப்பது சந்தோஷம். புழுக்கள் எவ்விடத்திலும் ஏராளமாய் உற்பத்தியாகி இருக்கின்றன. அவைகள்பேர் சேனை. என்னுடைய தோட்டத்து அனுபோகத்திலிருந்து ஒரு சதுரகெஜ அளவிற்கு 12 புழுக்கள் இருப்பதாய் தோன்றுகிறது.

ஒரு ஏக்கருக்கு 58,000 பிராணிகள் இருக்கின்றன. 13 பைகான் ஒருதோட்டத்தின் ஒரு மைல் சதுர அளவிலுள்ள புழுக்களை ஒன்றோடு ஒன்றின் நுனியைச் சேர்த்தால் அத்தொடரில் 37 பத்துலட்சத்து சங்கிலிகள் இருக்கும். அத்திலாந்திக் கம்பாகத்தின் (Cable) நீளத்திற்கு சமானமாய் இருக்கும். இப்போது செழிப்பாயுள்ள எத்தனையோ நிலங்கள் இச்சேனையாரின் கஷ்ட உண்மையான வேலையினாலுண்டானது. இவர்களில்லாதிருந்தால் மெய்யாகவே இப்பூமி ஒரு பெரிய வனாந்தரமாய் இருக்கும். ஒரு மனிதன் ஒரு தரம் சில பீப்பாய் மதுபானத்தை தன் நிலத்தின் மேல் கொட்டினான். விடியற்காலத்தில் கூட்டமான புழுக்கள் செத்துகிடந்தது. புளிப்பு புழுக்களுக்கு மரணம். நிலமுழுவதிலும் இப்படிச் செய்தால் வெகு சீக்கிரம் அதை பொட்டல் காடாக்கிவிடலாம்.

(இன்னும் வரும்.)

---

THE JACKAL.

## நரி.

நரிகள் வசிக்காத இடங்கள் வெகுசில. அவைகள் விசேஷமாய்க் காடுகளிலும், மலையடிவாரங்களிலும் தங்கும். அவைகளின் குரல், அழுகிற பிள்ளையின் சத்தத்தைப்போலும், அடிப்பட்ட வேட்டைநாயின் தொனியைபோலுமிருக்குமென்று வர்ணிக்கப்படுகிறது. அதன்குறல் இருபாங்குடைத்தது. ஒன்று நீண்ட ஊளை. மூன்று நான்கு தரம் அப்படி ஓலமிடுகிறது. ஒவ்வொரு தடவையிலும் தொனி உயர்கிறது. இதற்குப்பின் மூன்று சிறு ஊளைகள் செய்கின்றன. இதையும் மூன்று அல்லது நான்குதரம் சப்திக்கின்றன.

இதுதவிர ஒரு நூதனமான அபாய ஓலத்தையும் செய்கின்றன. இக்குரலை நரிகள், புலிக்குத் தொண்டூழியஞ் செய்யுங்கா லிடுகின்றனவென்று சுதேசி வேட்டைக்காரர் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு புலிக்கும், ஒரு நரி பணிவிடையாளாயிருக்கிறதென்பது அவர்களுடைய நம்பிக்கை. தண்ணீர் மட்டத்தில் கிடக்கும் இந்துக்களின் பிரேதங்களையும், தங்கள் இன நரிகளின் பிரேதங்களையும், அவைகள் பக்ஷிக்கும். சில வேளைகளில் மிருகக் குட்டிகளையும் பிடித்துத் தின்னும். இரண்டு நரிகள் ஒரு ஆட்டுக் குட்டியைப் பிடித்து சிறிது நேரத்திற்குள் கொன்றுவிட்டதை நான் கண்டிருக்கிறேன். அவை கோழை ஜெந்துக்களாகையால், தங்களை எதிர்க்கத் திராணியற்ற பிராணிகளையே பிடிக்கும். ஒரு கோழை மனிதனின் பயமுறுத்தலை நரியின் எதிர்க்குதலுக்கு ஒப்பிடுவார்கள். அவைகளின் சாமர்த்தியத்தைக்குறித்து அநேகக் கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த பிணத்தை எடுக்கப்போனபோது ஒரு முதலை பதிவிருந்து நரியின் காலை பிடித்துக்கொண்டதைப்பற்றி ஒரு கதையுண்டு. "தண்ணீர் சேருஞ் சகதியாயுமிருக்கிறபடியால், ஆழத்தைப் பார்க்கிறதற்கு தடிகொண்டு வந்தது நல்லகாரியமாய் விட்டது" என்று நரி தனக்குள்ளே சொல்லிற்று. இதைக் கேட்டுக்கொண்டிருந்த முதலை நரி சொன்னது மெய்தானென்று நினைத்துக் காலைவிட்டது. அப்போது முதலையைப் பார்த்து "புத்தியீனனே, நரி தடியை எப்போதாவது பிரயோகிக்கிறதைக் கேட்டிருக்கிறாயா" என்று சொல்லி தப்பிக்கொண்டது. இன்னொரு கதையுமுண்டு. ஒரு தடவை ஒரு



எருதுவின் பிரேதத்திற்குள்ளிருந்து மாம்சத்தைத் தின்றுகொண்டிருக்கையில், எருதுவின் தோல் சுருங்கவே, நரி பிரேதத்திற்குள் அகப்பட்டுக்கொண்டது. அப்போது நரி உரத்த சத்தத்தோடு சில வேத சுலோகங்களை உச்சரிக்கத் தொடங்கினது. இதைக் கேட்ட கிராமத்தார் நரியை ஒரு முனிவன் என்று நினைத்து அதை விடுதலைசெய்துவிட்டார்கள். நரியின் கெர்வத்தைக்குறித்து அநேக பழமொழிகள் உண்டு. "ஆகஸ்டு மாதத்தில் நரி ஜெனனமாகிறது. செப்டெம்பர் மாதத்தில் வெள்ளம் பார்க்கப்போகிறது. இப்பேர்கொத்த வெள்ளத்தை என் ஜீவிய முழுவதிலும் கண்டதில்லை" என்று பெருமையாய் நரி பேசுமாம்.

கிருஷ்ணன், தன் மாமன் கண்ணுக்குத் தப்பியோடினபோது யமுனை நதியைத் தாண்டுவதற்கு, துர்கையாகிய இந்துதேவதை நரிவேஷங்கொண்டு, அவனை நதிக்கப்பால நடத்தினதாம். ஆகையால் நரியை துர்கை ரூபத்தில் இந்துக்கள் வணங்குகிறார்கள். அதற்கு நித்திய பூசை செய்யப்பட்டு வருகிறது. அநேகர் நரியை வழியிற் கண்டால் கும்பிடுவார்கள். அது இடது பக்கமாய்ச் சென்றால் நல்லசகுனமென்று அநேகர் நினைக்கிறார்கள். நான் ஒருக்கால் ஒரு மூங்கில் நிறைந்துள்ள காட்டுக்குச் சமீபத்தில் இறங்கி இருந்தேன். அந்தக் காட்டின் மத்தியில் ஒரு கோவில் கட்டப்பட்டிருந்தது. அதன் பூசாலி கிழவனும், மிகவும் மெலிந்தவனும், முகமெல்லாம் தழும்புகளால் நிறையப்பட்டவனுமாய் இருந்தான், தழும்புகளின் காரணத்தை விசாரித்தபோது, இவன் லாகிரிவஸ்துக்களைச் சாப்பிடுகிறவனென்றும், ஒருநாள் இதன் மயக்கத்திலிருந்தபோது நெருப்பில் விழுந்துமுகத்தை காயப்படுத்திக் கொண்டானென்றும் கேள்விப்பட்டேன். இவன் சாயந்திரத்தில் அநேக சிறு மண்பாண்டங்களைக் கொண்டுவந்து கோவிலுக்கு எதிரில் வரிசையாய் வைத்தான். அவைகளில் தான் சமையல் செய்திருந்த ஏதோ ஒரு கூழை அவைகளில் வார்த்தான். எல்லாவற்றையும் நிறப்பினபின் ஒரு சங்கை எடுத்து ஊதினான். அப்போது நரிகள் கூட்டமாய் வந்து மண்பாண்டங்களிலிடப்பட்டிருந்த ஆகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு அமைதியாய்ச் சென்றன. இந்தக் காட்சியை அந்தக் கிழவன் பேசாமற் பார்த்துக்கொண்டிருந்தான். இந்தச் சாப்பாட்டுச் செலவு, சில இந்து தனவான்களாற் கொடுக்கப்பட்டது.

S. S. Dease, M. D.

---

THE TRUE KNIGHT.

## ஒரு சத்வீரன்.

சில வருஷங்களுக்குமுன், லண்டன் மாநகரத்தில ஒரு சத்வீரன் பிறந்தான். அவன் ஏழையாயினும், மெய்வீரன். சென்ற மாரிகாலத்தில் அதிகக்குளிரான ஒரு ராத்திரியில் கிரீசஞ்செய்யும் சமையல் அறையின் சமீபத்தில் கதவுதிறக்கையில் உள்ளேசெல்ல காத்திருந்தான். உறைபனியினிமித்தமும், பனிக்கட்டியினிமித்தமும் வேலை செய்யக் —— து பட்டினியாயிருக்கும் பிள்ளைகளுக்கு அங்கே இலவசமாய் சாப்பாடு கொடுக்கப்பட்டது. அவனோடு பலவிதமான பையன்களும் பெண்களும் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் கந்தைக்கோலமாயும் பசியாயுமிருந்தார்கள். வீசின காற்று அதிக குளிர்ந்ததாயிருந்ததோடு, அவர்கள் நின்றுகொண்டிருந்த இடம் கற்கள் பாவப்பட்டு படிந்திருந்த உறைந்த பனிகட்டியினால்

அதிககுளிர்ந்திருந்தது. இந்த வீரனுக்கு எதிரில் நின்றுகொண்டிருந்த பெண் குளிர் தாங்கமுடியாமல், சப்பாத்துயில்லாத தன் கால்களுக்குச் சூடுண்டாகும்படி காலின்மேல் கால்வைத்து நின்றாள். வீரனுடையகால்விரல்கள் வெளியேதெரியும்படி சப்பாத்து கிழிந்ததாயிருந்தபோதிலும், குளிரினால் விறைத்துப்போய் நின்ற பெண்ணின் பரிதாபமான நிலைமையைப் பார்த்து, தன் தொப்பியை கீழேபோட்டு "இந்தத் தொப்பியின் மேல் நில்" என்று சொன்னான்.

ராஜாத்தியின் பாதம் அழுக்குப்படாமல் நடந்து போகும்படி தன் அங்கியை எடுத்து சேற்றின்மேல் விரித்த சர். வால்ற்றர் ரேலி எவ்வளவு வீரனோ, அவ்வளவு வீரனாய் இப்பையனிருந்தான் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

---

INDIA'S DAUGHTERS. NO 1.

## இந்திய ஸ்திரீகள்· தொகை 1.

---

*ALIYA BAI, THE MODEL RULER.*

ஆலியாவென்னும் சிறந்த அரசி.

இந்த அரசி, சிந்தியா ராஜாவின் குடும்பத்தாளும், ஹோல்கார் ராஜாவின் குடும்பத்தைச் சேர்ந்த குந்தர்ராவின் மனைவியுமாயிருந்தாள். புருஷன் யுத்தத்தில மரித்துப்போனதினால் இளம்பிராயத்திலே கைம்பெண் ஆனாள். பட்டத்துக்குவரவேண்டிய அவளுடைய மகன் பயித்தியம் பிடித்து காலஞ்சென்றான். ஆகையால் அதிக முரட்டாட்டமான தன் ஜனங்கள்மேல் அரசுபுரிய நேரிட்டது. இவள் முப்பது வருஷங்களுக்குமேல் திறமையோடும் யுக்தியோடும் நீதியோடும் அரசாண்டு, தன் தேசத்திற்கு சமாதானத்தையளித்தாள். ஆகையால் இவள் அரசாட்சி, இந்துதேசச் சரித்திரத்தில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. தன் தேச ஆசாரத்தின் பிறகாரம் கோஷா ஸ்திரீயாயிருக்கவேண்டியதாயிருந்தும், அவள் பிரதிதினமும் கச்சேரியில் கொலுவீற்றிருப்பாள். ஒவ்வொரு நாளும் பிரஜைகளின் விண்ணப்பங்களை தனித்தனியாய்க் கேட்டு, அவர்களுடைய வழக்குகளை புத்தியோடும் பொறுமையோடும் நியாயந்தீர்ப்பாள்.

இப்பேர்கொத்த ராஜாத்தியை ஜனங்கள் புகழ்ந்து, மதித்து வந்தது ஆச்சரியமல்ல. ஆனால் அவளோ, முகஸ்துதிக்காரரை வெறுத்ததோடு, ஜனங்கள் தன்னைப் புகழவேண்டுமென்று சிறிதேனும் விருப்பமுள்ளவளாயில்லை. ஒரு தடவை ஒரு பாண்டித்திய பிராமணன் இவளுடைய நடவடிக்கைகளைப் புகழ்ந்து எழுதி, அதை அவளுக்கு முன்பாக வாசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, அவனுக்கு உத்தரவுகொடுத்தாள். வாசித்து முடிந்தபின், தான் ஒரு பலவீனமான பாப ஸ்திரீ ஆகையால் எந்த புகழ்ச்சிக்கும் பாத்திரமுடையவளல்லன் யென்று விடைபகர்ந்து, அப்புத்தகத்தை சுட்டெறிக்கக் கட்டளையிட்டாள். தான் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு யாதொரு பிரதிபலனும் கிடையாததால், ஆசிரியன் அதிக துக்கித்துச்சென்றான். தன் சொந்த பிரஜைகளைக்குறித்து சிலதடவைகள், பிரதிகூலமான தீர்ப்புச்செய்ய நேரிட்டாலும், நீதி ஒருபோதும் பிசகாதிருந்தாள். தன் சைனியத்தின் தளகர்த்தனான டுக்காஜீ ஹோல்கார் ஒரு ஐசுவரிய கைம்பெண்ணின் பொருளை அபகரிக்க முயன்றான். இவள் ராஜாத்தியினிடம் முறையிட்டபோது, தளகர்த்தனைக் கண்டித்து அவனை ராஜியத்தின் வேறொருபாகத்திற்கு அனுப்பிவிட்டாள். அவள் புத்தி



யுள்ள அரசியாயிருந்தபடியால், கிராம உத்தியோகஸ்தருடைய வேலையிலும், கிராமத்தாருடைய உரிமைகளிலும், அரசர்கள் அதிகமாய் தலையிட்டுக்கொள்ளக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டாள். மால்கம் என்பவர் இவளைக்குறித்து பின்வருமாறு எழுதுகிறார்:—

ஆலியா பாயைக்குறித்து எழுதப்பட்டிருக்கிற விஷயங்கள், ஆச்சரியமாயிருந்தாலும், அவைகளெல்லாம் நம்பககூடியதே. அவளுக்கு பெருமையென்பது கிடையவே கிடையாது. அவள் மதவைராக்கியமுடையவளாயினும், மதக்குரோதங்கிடையாது. அவள் அதிக அஞ்ஞானம் படைத்தவளாயினும், தன் பிரஜைகளின் பாக்கியத்தையே கருதி நடந்தாள். அவள் அதிக முயற்சியோடும் திறமையோடும் அதிகாரத்தோடும் அரசுபுரிந்துவந்தாலும், அதிக வணக்கத்தோடும், சுத்த மனசாட்சியோடும் தன் ராஜாங்கத்தை நடத்தினாள். இப்படியிருந்தும், தன் ஜனங்களுடைய தப்பிதங்களையும் பெலயீனங்களையும், அனுதாபத்தோடு திருத்துவாள்.

S. S. Dease, M. D.,

---

NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

---

சிறிது காலத்திற்குமுன் கூலிவேலை செய்வதற்காக, இங்கிலாந்திலுள்ள, பாய் ஸ்கௌட்ஸ் (Boy Scouts) என்னும் சங்கத்தார், சனிக்கிழமையைத் தெரிந்துகொண்டனர். அந்நாளில், தோட்டத்தில் களைபிடுங்குதல், கொல்லை சுத்திசெய்தல், வீடு துப்புரவுபடுத்தல் முதலியவற்றையும், இன்னுந் தங்களாலியன்றவற்றையும் அந்நாளிற்செய்ய தீர்மானித்தனர். இதனால் வரும் பணம் பிரெயில் (Braille) ஏற்பாட்டின் பிறகாரம் கபோதிகள் வாசிப்பதற்கு, புந்தகங்கள் வாங்கும்படியாய் ஒரு நிதிக்குக் கொடுக்கப்பட்டது.

—மே மாதம் 16-ந் தேதியில் இலங்கைத்தீவில் ஒரு பயங்கர சம்பவம் நேரிட்டது. போல் காவலையில் நடந்தேறின விசாக் (Wesak) திருவிழாவுக்கு அநேகஜனங்கள் போயிருந்தனர். அங்குள்ள ஆற்றின் பாலத்தை பழுதுபார்த்துக்கொண்டு வந்தபடியால், அதற்குப்பதிலாய் ஒரு கம்பி ஒத்தடிப்பாலம் போடப்பட்டிருந்தது. திருவிழாக்காலத்தில் திரள் கூட்டத்தார் அதின் வழியாய்ச்சென்றுகொண்டிருந்தனர். இப்படியிருக்கையில், புதுப்பாலத்தின் ஒரு பக்கத்துகம்பிகள் அறுந்து, பாலம் கவிழவே, அதன் மேல் நடந்துசென்ற கூட்டத்தார் ஆற்றுக்குள் தள்ளப்பட்டனர். ஆழமான தண்ணீருக்குள் விழுந்தவர்கள் சேதப்படாமல், படவுகளின் மூலமாய்க்காக்கப்பட்டனர். பாறை நிறைந்துள்ளயிடத்தில் விழுந்தவர்களோ படுகாயம் பட்டார்கள். இந்த அசம்பவத்திற்குள்ளானவர்களில், ஏழு பேர் மாண்டுபோயினர், நாற்பத்திரண்டுபேர் காயப்பட்டார்கள்.

—ஏப்பிரல் மாதக் கடைசியில் கல்கத்தாவின்மேலும், அதின் சுற்றுப்புறத்தின்மேலும், ஒரு பெரிய புசல் அடித்தது.

—மும்முரமான காற்றடித்து, பலமான மழை பெய்தபிற்பாடு, ஐந்து நிமிஷத்திற்

குள் உஷ்ணம் இருபது டிகிரி குறைவுபட்டது. மழைக்குப்பின், பனிக்கட்டி பெய்தது. அக்கட்டிகள் கோழிமுட்டைப் பருமனுயிருந்தனவென்று சிலர் சொல்லுகிறுர்கள். வதந்தி எவ்வாறுயிருந்தாலும், கட்டிகள் பெரியனவாயிருந்தனவென்பதற்குச் சந்தேகமேயில்லை. ஜனங்களின் தகர்க்கப்பட்டன, பக்ஷிகள் கால்கள் [illegible] கொல்லப்பட்டன [illegible] லுள்ள புஷ்பங்களும், இலைகளும் அழிக்கப்பட்டன. இவ்விதமாய்ப் பெருநஷ்டம் விளைந்தது. புசலடித்துக்கொண்டிருக்கையில், ஒருமணிக்கு அறுபதுமயில்தூரம் காற்றுவேகமாய்ச் சென்றது. மின்சாரக் கம்பிகள் அறுந்துவிழுந்ததால், அநேகக் கணக்கானபேருக்கு உயிர்ச்சேதம்நேரிட்டது. சிலயிடங்களில் மரங்கள் அக்கம்பிகள்மேல் விழுந்தபடியால் அறுபட்டு விழுந்தன. வேறுயிடங்களில் ஜனங்கள் மேலேயே விழுந்து அவர்களைக் கொன்றன. பட்டணமுழுவதும் பெருவெள்ளமாயிருந்தது.

—கீழ் அமெரிக்காவில் வாலிப ஸ்திரீகளுக்கென்று ஒரு கல்விச்சாலையுண்டு. அதின்பேர் வெல்லஸ்லி கலாசாலை. அதில் ஒரு பாகம் படுக்கையறையாயிருந்தது. ஒரு இரவு அது தீப்பற்றிக்கொண்டது. அங்கிருந்த துணிமணிகளையும், விலையுயர்ந்த சாமான்களையும் வெளியேற்றக் கூடாமற்போயிற்று. இவ்விதமாய் கல்விசாலையைச் சேர்ந்த விலையுயர்ந்த பண்டங்களெல்லாம் அழிந்துபோயின. அப்போது பெண்களெல்லாம் நித்திரை செய்துகொண்டிருந்தபடியால், தாங்கள் போர்த்துக் கொண்டிருந்த ஆடைகளைத் தவிர வேறொன்றுமில்லாமல் உயிர் தப்ப வெளியே ஓடினர். அதன் பின் அறையில் துயின்றவரெல்லாம் தப்பினாராவென்று பார்க்க அவர்கள் பெயர்கள் கூப்பிடப்பட்டன. அமரிக்கையாய்நின்று அறைக்கு அப்பெண்கள் உத்தரவு சொன்னர்கள். அப்போது ஒட்டுமேபர் இன்னும் நெருப்புப்பற்றிக்கொண்ட அறையில் அகப்பட்டுக்கொண்டிருந்ததாகத் தெரியவந்தது. அவர்கள் புகை நிறைந்துள்ள அறையிலிருந்து எந்த ஆத்திரமும் கூக்குரலுமில்லாமல் கொண்டுவரப்பட்டார்கள். இதனுலுண்டாகும் படிப்பினை என்னவென்றுல் கல்விச்சாலைப் பயிர்ச்சியானது அசம்பவ காலங்களில் அமரிக்கையாயும் தைரியமாயும் ஸ்திரீகள் நடந்துகொள்ளும்படி அவர்களை ஏவுகிறது.

—சில மாதங்களுக்குமுன், தபால் மூலமாயனுப்பப்பட்ட ஒரு விலையுயர்ந்த முத்துமாலை காணுமற்போய்விட்டது அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். அநேககாலமாய் அது காணுமற்போன வழி அறியாமலேயிருந்தது. பிற்பாடு லண்டன் வீதி ஒன்றில் அதின் முத்துக்கள், ஒரு கூலிக்காரனுல் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கே எப்படி வர நேரிட்டது என்பது ஆச்சரியமாயிருந்தது. கடைசியாய் ஒரு சிறிய முத்தைத் தவிர மற்றவையெல்லாம் அகப்பட்டன. இந்த முத்தின் விலை ஆறுயிரம் ரூபாய். இதிலிருந்து முழு முத்துமாலையும் என்ன விலை பெறும் என்று நீங்களே கணித்துக்கொள்ளலாம்.

Vol. XXVIII Registered No. M. 209 No. 3

SEPTEMBER, 1914

# மாதர் மித்திரி

28 OCT 1914 MADRAS

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... .... | 35 |
| ஒரு பரிசுத்தவான் ... .... .... .... .... | 36 |
| சுகத்தை பாதுகாக்கும் வழி ... .... .... .... | 37 |
| நிலப்புழுக்கள் .... .... .... .... .... | 39 |
| ஸ்தோத்திரம் செலுத்துதல் .... .... .... ... | 40 |
| பிலிப்பையின் விடுகதைகள் .... ... .... .... | 41 |
| இயேசுவின் பிரசன்னத்தை விட்டுப்போவது அவனுக்குக் கடினம் .... | 41 |
| ஸ்திரீகளும் நியாயஸ்தலமும் .... .... .... .... | 42 |
| வைத்திய ஆராய்ச்சி .... .... .... .... | 43 |
| எச்சரிக்கும் கடிகாரங்கள் .... .... .... .... | 44 |
| தேவ அன்பு நீதியான அன்பு ... .... .... .... | 45 |
| சிறுவர்களின் பக்கம் .... .... .... .... | 46 |
| சமாச்சாரக் குறிப்புகள் .... ... .... .... | 47 |


# மாதர் மித்திரி.


புத். ௨௮. ௧௯௧௪ ௵ - செப்டெம்பர் ௴. இல. ௩.


PLEA FOR HELP.

இராகம், மோகனம். அடதாளசாப்பு.

பல்லவி.

சருவேசுரா, ஏழைப்பாவி—என் பேரிலே
தயவாய் இரும், சுவாமி.

அநுபல்லவி.

திரியேக பரதேவா, நெறி மேவும் ஒரு யோவா,
சித்தம் இரங்கிக் காத்து, கிறிஸ்துவின் முகத்தைப் பார்த்து,— சரு

சரணங்கள்.

1. தந்தை நின் ஒன்றான மைந்தன் தனைக் கொடுத்தித் தகமை உலகை நேசித்தாய்;—நின்
சொந்தக் கிருபை தனைச் சிந்தித்துணர மறை தொகுத்தெனக் குபதேசித்
இந்தப் பெரிய நேசம் புந்திக் கொளியதாக்கும்; [தாய்;
எந்தப் படியும் என் தீப் பந்தம் அனைத்தும் போக்கும்— சரு

2. தேவரீர்க் கேற்காத தீவினைகளைச் செய்தும் தண்டியாமல் பொறுத்தீர்;—நீர்
யாவும் அறிந்திருந்தும், கோபித்துக் கைவிடாதென் நன்றி கெட்டைமறுத்
ஜீவனே, உமக்குப் பாவி பதில் என்செய்வேன்? [தீர்,
மேவி அடி தொழாமல் ஆவி எங்ஙனம் உய்வேன்?— சரு

3. நெஞ்சில் தெய்வ பயம் கொஞ்சமேனும் இலாமல் நீதி வழியைக் கடந்தேன்;—கெட்ட
வஞ்ச உலக வாழ்வை மிஞ்சத் தேடி, பேயின் மனதுக்கேற்கநடந்தேன்;
பஞ்ச பாவி கூவிக் கெஞ்சும் ஜெபத்தைக்கேளும்;
தஞ்சம் என்றேன்; உனக்கே அஞ்சல் என்றெனை ஆளும்,— சரு

A SAINT.

## ஒரு பரிசுத்தவான்.

ஐம்பது வருடத்திற்குமுன், ஒரு பால்ய ஸ்திரீ தன் கணவனோடு இந்தியா தேசத்திற்கு வந்தாள். அதிக தூரத்திலுள்ள அமெரிக்காக்கண்டத்தைவிட்டு, சூயெஸ்கெனல், அக்காலத்தில் வெட்டப்படாதிருந்ததினால், ஆப்பிரிக்காக் கண்டத்து தென்முனையைச் சுற்றி நான்கு மாதம் கப்பல் பிரயாணஞ்செய்து இத்தேசத்திற்கு வந்தாள். மேலும், அக்காலத்தில் நீராவிக்கப்பல்கள் கிடையாததினால், அவளும் அவள் நாயகனும், பாய்மரக் கப்பலில் பிரயாணஞ்செய்ய வேண்டியதாயிருந்தது.

இத்தேசத்திற்குவந்தநோக்கமென்ன? அதென்னவெனில், இவள் இத்தேசத்தையதிகமாய் நேசித்ததினால், இங்குள்ள ஜனங்களுக்கு உதவிசெய்ய விரும்பினாள். இந்த எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமானால், அவள் இங்குவந்து, ஜனங்கள் மத்தியில் ஊழியஞ்செய்ய வேண்டும். தான் வந்தகாலந்தொடங்கி, அப்படியே உழைத்திருக்கிறாள். அநேக வருஷங்களாய், இருவரும் ஐக்கியமாய் ஊழியஞ்செய்தார்கள். பிற்பாடு புருஷன் மரித்துப்போனான். ஆனபோதிலும், அவள் தன் சொந்த ஊருக்குப் போய்விடவில்லை. இத்தேசத்தாரை அவள் அதிகமாய் நேசித்துவருகிறபடியால், இன்னும் வேலை நடப்பித்து வருகிறாள். அவளுக்கு இப்போது எண்பது பிராயமாகிறது. அவளைப் பார்க்கப்போயிருந்த சிநேகிதர் பின்வருமாறு எழுதுகிறார்: "பார்க்கர் அம்மாள் வயதுசென்றவர்களாயினும், அதிக சுறுசுறுப்பும் அதிக அனலுள்ள ஆவியுமுள்ளவர்கள். வயோதிபனானாலுஞ்சரி, வாலிபனானாலுஞ்சரி, யாரார் அவளுடைய சகவாசத்திற்குள் வருகிறார்களோ, அவர்கள் உற்சாகமடைந்து, மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்ய வேண்டுமென்கிற தீர்மானத்தோடு திரும்புகிறார்கள்.

அந்த அம்மாளுடைய ஆதீனத்திற்குள்ளிருக்கும் ஒரு உபாத்தப்பெண்ணிற்கு கலியாணமானபோது, அவளை முதற்தடவையாகச் சந்தித்தோம். மணவாட்டியின் உற்சாகத்தைப்போல், அந்தம்மாள் சுறுசுறுப்பாயும், உற்சாகமாயுமிருந்தார்கள். மாதா, தன் பிள்ளைகளுக்கு எந்த அந்தஸ்து வரவேண்டுமென்று விரும்புவாளோ, அதேபிரகாரமாய் தன் வசத்திலிருந்த எழுபது பிள்ளைகளைக்குறித்தும் விரும்பினார்கள்.

வெயில் அதிக தீக்ஷண்யமாயிருந்த காலத்தில் கோடைகாலத்து பள்ளிக்கூடத்தைப் பார்க்கப்போனபோது, பார்க்கர் அம்மாளை இரண்டாமுறை சந்தித்தோம். தன் உடன் ஊழியரொருவரின் மனைவியினுதவியைக்கொண்டு, அங்கிருந்த ஸ்திரிகள் மேற்பார்த்துக்கொண்டிருந்தார்கள். விடுமுறை நாட்களாயிருந்தபோதிலும், சில பெண்களுக்கு லீவு நாட்களைக் கழிக்க வீடு இல்லாதபடியால், அவர்கள் நிமித்தமும், அயல் பள்ளிக்கூடத்திலிருந்து விடுமுறையினிமித்த மனுப்பப்பட்டிருந்த பிள்ளைகளினிமித்தமும், அந்த அம்மாள் இருக்கும்படி நேரிட்டது. மேல் விசாரணை செய்வதிலும், நோயாளிகளைக் கவனிப்பதிலும், தன்னிடம் வந்தவர்களின் துயரத்தையும், கஷ்டத்தையும் கேட்பதிலும், பள்ளிக்கூடம், ஸ்திரிகளின் வேலை முதலியவற்றைக்குறித்த கடிதாசி எழுதுவதிலும், வீட்டுக்காரியங்களைப் பார்ப்பதிலும், அதிக சுறுசுறுப்பாயிருந்தார்கள்.



இவ்வளவு கடினமாய் வேலைசெய்து வருகிறவர்கள், வாலிப ஸ்திரீயல்ல. இப்பத்திரிகையை வாசிக்கிற அநேகரைக் காட்டிலும், மூன்றுமடங்கு வயது சென்றவர்கள். மேலும், தன்னுடைய பரிபாலனத்திற்கென்று அவர்கள் வேலை செய்யவில்லை. தன்னுடைய சுய தேசத்திற்கு திரும்புவார்களேயானால், அநேகர், அவர்களை ஆதரிப்பார்கள். அவர்கள், ஒருக்காலும் தன் தேசத்திற்குத் திரும்பிப் போகமாட்டார்கள். காரணங்களென்னவோவெனில். இத்தேசத்தாரை அதிகமாய் நேசிக்கிறார்கள். அநேகரிடத்திலிராத சில குணங்கள் இவர்களிடத்திலுண்டு. தேவன் தன்னை நேசிக்கிறாரென்றும், தான் அவருடைய பிள்ளையென்றும், தன்னை பிரதிதினமும் காப்பாற்றி வருகிறாரென்றும் நன்றாயறிந்திருக்கிறார்கள். தன்னுடைய பாவங்களை நீக்கி தன்னை இரக்ஷித்திருக்கிறார்: ஆகையால் சந்தோஷமாயிருக்கிறார்கள். தன்னைச்சுற்றிலுமிருக்கிற ஜனங்களுக்கு இவைகளைப் போதித்து, தான் அனுபவித்துவரும் ஆசீர்வாதங்களை அவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே அவர்கள் கண்ணுங்கருத்துமாயிருக்கிறது. ஜனங்களில் அநேகருக்கு தேவன் யாரென்றும், அவரையடையும் விதமின்னதென்றுந் தெரியாது. ஆகையால், தனக்கு பாத்தியமுடையவர்கள் யாதொருவரும், இத்தேசத்திலில்லாவிட்டாலும், அநேக வருஷம் தான் ஜீவிக்கக்கூடாதிருந்தும் தன் நோக்கத்தை நிறைவேற்ற, இத்தேசத்திலே தன் கடைசி நாட்களைக்கழிக்க தீர்மானித்திருக்கிறார்கள.

இந்தம்மாளுடைய அன்பே இத்தகைமையானால், இயேசுகிறிஸ்துவென்கிற நாமதேயத்தைப் பூண்டு, விரோதிகளாகிய நமக்காக ஜீவித்து மரித்த தேவனுடைய அன்பு எவ்வளவுபெரிது! பார்க்கர் அம்மாள் எவ்வளவு பாசத்தோடு, இந்தியா தேசத்தை நேசித்தார்களோ, அவ்வளவு அன்போடு, இவ்வுலகிலுள்ள மாந்தரை, அவர் நேசித்தார். ஆனால் அவருடைய அன்பு அதிக சிறந்ததாயிருக்கிறபடியால், அதின் பொருளையறிய நமக்குத்திராணியில்லை. அவரும், தம்முடைய இருப்பிடத்தைவிட்டு நமது மத்தியில் ஜீவித்து, நித்திய ஜீவன் இன்னவென்பதைக்காட்ட, இவ்வுலகிற்கு வந்தார். தன்னை பகைத்த மனுஷர்களுக்காக அவர் பிராணத்தியாகமானார். நண்பர்களே இதைக் காட்டிலும் அன்புசெய்யக்கூடிய செயல்வேறு உண்டோ?

## சுகத்தை பாதுகாக்கும் வழி.

THE SAFE GUARDING OF HEALTH.

சொற்பகாலமாய்த்தான், பூமியிலுள்ள அரசாங்கங்கள், வியாதிகளை தடுப்பதற்காகவும், அவைகளினின்று ஜனங்களை சுகப்படுத்தவும், அவைகளின் கூறுபாடுகளை ஆராய்வதற்குப் பிரயத்தனஞ்செய்திருக்கின்றனர். தற்காலத்தில் நாகரீகமடைந்த இராஜாங்கங்களெல்லாம் தங்கள் தேசத்திலுள்ள பண்டிதர்களைக்கொண்டு இந்த வேலையை நடத்தி வருகிறார்கள்.

சிறிதுகாலத்திற்குமுன், எல்லா ஜாதியாருஞ்சேர்ந்த ஒரு பெரியகூட்டம் நடந்தது. அமெரிக்காவின் ஐக்கிய மகாணத்தின் தலைமுகப்பட்டணமாகிய உவாஷிங்டனென்னும் பட்டணத்தில் இது நடந்தேறினது. இதற்கு வந்தவர்களின் தொகை இரண்டாயிரத்துக்கு மேலாயிருந்தது. இவர்களிலநேகர் உலக முழுவதி

னும் பிரசித்திபெற்ற வைத்திய சாஸ்திரிகளாயிருந்தார்கள்.

சகல படிப்பாளிகளுமறிந்திருக்கிற பிரகாரம், சகல வியாதிகளும், பெசிலஸ் (Bacillus), அல்லது ஜர்ம்ஸ் (Germs) யென்று சொல்லப்படும், உயிருள்ள சிறு கிருமிகளாலுண்டாகின்றன. இக்கிருமிகளையும் இவைகளின் விஷத்தை முறிக்கும் மருந்துகளையும் கண்டுபிடித்தால், வியாதிகளைத் தடுக்கலாம். சில வியாதிகளைப் பிறப்பிக்கும் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் ஆரவாரத்தை அடக்குமருந்துகள், கவனமாய்ப் பிரயோகிக்கப்படும்போது, அவ்வியாதிகளின் கோஷ்டம் ஒருவாறு அடங்குகிறது. பெரிபெரி (Beriberi) என்னும் புதிய வியாதி மேற்கூறிய அனுசரணைகளினால் கண்டிக்கப்பட்டுவருகிறது. இந்தியாவில் சிலகாலமாக இந்த வியாதி நடந்தேறிவருகிறது. பிலிப்பியன் தீவுகளில் சைனியங்களின் மத்தியில் அதிக ஆரவாரஞ்செய்தது. இப்போது அவர்களுக்குள் நடமாடாதபடி வேரோடழிக்கப்பட்டுப்போயிற்று.

சுகாதாரவறிவை பிரசுரஞ்செய்ய உலகத்தில் பற்பலயிடங்களில் முயற்சிசெய்யப்பட்டு வருகிறது. ஜனங்களிந்த அறிவைப் பூரணமாயடைவார்களானால், பெரிய நன்மையைக்கொண்டுவரும்.

அப்பெரிய கூட்டத்தில், கண்டுபிடிக்கப்பட்ட நூதனங்கள் கூறப்பட்டன. அவைகளில் ஒன்று என்னவென்றால் நிலக்கரிவெட்டுவதனால் எழும்பும் தூசியை அடக்கும் விதம். இந்தத் தூசியினால் சுரங்கங்கள் வெடித்து அநேகர் உயிர்ச்சேதமாகிறார்கள். இந்தப் புதிய காணுகையினால் சுரங்கவெடிப்புகளை முழுவதும் தடுக்கக்கூடாவிட்டாலும், இப்பேர்கொந்த அசம்பவங்களின் தொகைகளைக் குறைவுபடுத்தலாம். வேறொரு பண்டிதர், பிளேக்நோயை நிக்ரகிப்பதற்கு தன்னுடைய காணுகையைச் சொன்னார். இதினால் பிரயோஜனமுண்டாகுமேயானால், அது இந்தியாவிற்கு, ஒரு பெரிய நன்கொடைபோலிருக்கும்.

தட்டம்மையென்னும் வியாதி, ஆரம்பத்தில் அதினால் பிடிக்கப்பட்டவர்கள் தும்முவதினால் மற்றவர்களுக்குப் பரவுகிறது என்றறிவிக்கப்பட்டது.

க்ஷயரோகம் பெரும்பாலும், மதுபான வஸ்துக்களை அருந்துகிறதினால் வருகிறது என்று ஒரு பிரான்சு சாஸ்திரி தன் நெடுங்கால முயற்சியின் பலனைத் தெரிவித்தார். அது மாத்திரமல்ல, கல்லீரல் வியாதியும் (Liver disease) புக்கம் வியாதியும் (Kidney disease) பைத்தியமும், இரட்டத்தனையாய் அல்லது மூன்றுமடங்காய் குடிகாரருக்குள் மேள நடமாடுகிறதென்றுங் கூறினர்.

பாலகருக்குள் உண்டாகும் பாரிசவாயுவைப் பிறப்பிக்கும் கிருமியைக் கண்டுபிடித்திருக்கிறதாகவும் தெரிய வந்தது. அவ்வியாதிக்கு ஏற்ற சிகிச்சையும், சீக்கிரம் வெளிக்கு வருமென்று நம்புகிறோம். கண்வியாதிகள் இந்தியாவில் சாதாரணம். இதை ஜனிப்பிக்கும் கிருமி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாயும் அங்கே விளம்பரமாயிற்று. இதைக்கொன்று, அவ்வியாதிகளை சுகப்படுத்தும் வகைகளும் சீக்கிரம் வெளியரங்கமாகும். அவ்வாறே குளிர்காய்ச்சல் சுரமும், இம்முறைகளையனுசரித்ததினால், இத்தேசத்தில் குறைந்து வருகிறது.

அந்த மகாஜனசங்கத்தில் காட்டப்பட்டபொருட்களில் ஒன்று அதிசயிக்கத்தக்கது. பத்துவிநாடிக்கொருதரம், இரவும்



பகலுமாய் பிரகாசித்து மங்கிப்போகும் ஒரு மின்சாரவிளக்கு காட்டப்பட்டது. அந்த வெளிச்சம், ஒரு குழந்தையின் மரணத்தைக் குறிக்கிறது. பத்துவிநாடிக்கொருதரம், பன்னிரண்டு மாதத்திற்குக் குறைந்த வயதுள்ள ஒரு குழந்தை, உலகத்தில் எங்கேயோ ஒரு இடத்தில் மரிக்கிறது. இப்படியாக, இருபத்துநாலுமணிநேரத்தில், இரண்டாயிரத்து அறுநூற்று நாற்பது குழந்தைகள் மரணமடைகிறார்கள். அதாவது பத்து நிமிஷத்திற்கு ஒரு தடவை ஒரு குழந்தை சாகிறது.

அதிகாரவுரிமைப் பத்திரமுடைய அநேக மருந்துகள் கூட்டத்தில் காண்பிக்கப்பட்டன. அவைகளில் அநேகம், பிரயோஜனமற்றதாயும், தீங்கு விளைவிப்பதாயும், தீயபழக்கத்தை பிறப்பிக்கும் மருந்துக்களாயுமிருந்தபடியால், அவைகள் கூட்டத்தாரால் தள்ளப்பட்டன.

மேற்சொன்ன குறிப்புகளை வாசிக்கும் புத்திசாலிகள், இவைகளினால் பிரயோஜனமடைவார்களென்று நம்புகிறோம்.

## EARTH WORMS.

## நிலப்புழுக்கள்.

ஜெந்துக்களில் அதிக பிரயோஜனமுள்ளவை புழுக்கள். அது தன் காரியத்தைக் கருதிய, தனித்தஜாதி. முதுகெலும்பில்லா ஜனங்கள் என்றாலும் அது காண்பிக்கும் வல்லமை அதிசயிக்கத்தக்கது. அவர்கள் வேலையின் முக்கிய கருத்து தன்தன் காரியத்தை ஒட்டியது என்பதை யாரும் மறுத்துச்சொல்ல முடியாது. ஆனால் தங்களுடைய லாபத்தை கருதுவதினால் உலகத்தின் விர்த்தியை முன்னுக்குக் கொண்டுவருகிறார்கள். நிலத்தின் செழிப்பையும் கூட்டுகிறார்கள். உரம் நிறைந்த காய்கனி விளையும் நிலமானது முதலாவது நிலப்புழுக்களின் வழியாய் பண்படுத்தப்பட்டு பிற்பாடு காய்கனி, புஷ்பங்கள் விளையக்கூடிய பிரயோஜனமான செழிப்புள்ள நிலமாயும், காளான், வேர் பூண்டுகள் முதலியன விளையக்கூடிய தோட்டமாயும் ஆயத்தப்படுத்தப்பட்டு வருகிறது. காடுகளில் வருஷா வருஷம் உலர்ந்துபோய் விழும் இலைகள் எப்படி இப்பேர்ப்பட்ட பொந்துக்களுக்குள் இழுக்கப்படுகிறது என்பதைக் காண்கிறோம். நிலப்புழுக்கள் குடைந்து வெளியே எறிந்த பொடிமண் உலர்ந்த இலைகளை மூடிக்கொள்ளுகிறது. இப்படி அநேக நூற்றாண்டுகளாக நடத்தப்பட்ட வேலை சந்தேகமில்லாமல் ஆழமுள்ள நில பூமி உரத்தை உண்டுபண்ணி இருக்கும். கால்படாத பாதைகளிலும் காடுகளிலும் வயல்களிலும் இயற்கையினால் உண்டான ஏர் உழுபவன் சுறுசுறுப்போடு, அந்தரங்கமாய் அமைதியாய் செய்யும் வேலையை நாம் அங்கீகரித்து மனுஷருக்கு செய்யப்படும் பெரிய அனுகூலமென்று கருதவேண்டும்.

இவ்விதமாக நிலப்புழு உழும் நிலம் வருஷத்திற்கு 10 டன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தியாதேசத்தின் நிலத்திலும் தோட்டங்களிலும் மேலே மூடப்பட்டிருக்கும் மெதுவான மண் ஏறக்குறைய ஒரு அங்குலத்தில் ஐந்தில் ஒருபாகம் திண்ணமுள்ளது. நாம் நினைக்கும் பிரகாரம் இந்தப் புழுவின் உள் அமைப்பு அவ்வளவு லேசானதல்ல. அந்தப்பிராணிசெய்யும் வேலைக்கு ஏற்ற பிரகாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. முள்போன்ற வாயாலும், அதன் நீண்டமேல் உதட்டாலும் இலைகளையும், குச்சுகளையும்

மற்றும் பலபொருள்களையும் தன் வளைக்குள் இழுத்துக்கொண்டுபோய் இவைகளையும், மற்றமண்ணையும் சாப்பிட்டு, நல்ல நிலமாக்குகிறது. ஆகாரம் Pharynx (தொண்டை) வழியாய்ப்போய், Gullet-க்குள்போய், பிறகு Muscular Gizzard-க்குள் வந்து, இங்கே இருக்கும் சிறு சிறு கற்களால் நன்றாய் கூழாய் அரைக்கப்படுகிறது. Gullet-க்கு இருபுறமும் சாதனங்கள் இருக்கிறது. இவைகளின் மூலமாய் சுண்ணாம்பு உண்டாகிறது. இலைகளைச் சாப்பிடுவதனால் ஒருவிதமான Acid உடையபலனைச் சரிப்படுத்துவதற்காக இந்த சுண்ணாம்பு உண்டாகிறது.

## THANKSGIVING.
## ஸ்தோத்திரம் செலுத்துதல்.

அமெரிக்கா தேசத்திலே வருஷத்திற்கு ஒருநாள் விசேஷித்த காணிக்கை செலுத்தும் நாளாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லா நன்மையான காரியங்களையும் கொடுக்கிறவருக்கு எல்லாரும் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டுமென்று அந்த ஸ்தானுபதி சொல்லுகிறார். நமது பரமபிதாவின் அருமையான இரக்கங்களையும் பட்சத்தையும் ஞாபகப்படுத்துவதற்கு நல்ல சமயம் இதுவே. இந்த சமயத்தை நன்றாய் ஆசரித்தால் விசேஷித்த ஆசீர்வாதம். பின்வரும் தியானங்களில் சிலவற்றை அந்தச் சமயத்தில் பிரயோகிக்கலாம்.

நான் இழிவான நோக்கத்திற்காக உண்டாக்கப்படவில்லையென்று எனக்குக் கற்பிக்கும் தேவபக்திக்காக நான் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

எனக்காகமட்டும் அல்லாமல் மற்றவர்களுக்காகவும் அநுதாபப்படும் ஆவியை அளித்ததற்காகவும் நான் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

நல்ல ஸ்திரீகளும், மனிதரும் காண்பித்த நல்முன்மாதிரிக்காகவும், அவைகளின் மூலமாய் என் குறையை அறியவும், நானும் பக்தியுள்ளநிலைமைக்கு வரலாம் என்று அறிந்துகொண்டதற்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

மேலான காரியங்களிலே நான் மெய் நம்பிக்கைவைக்கும்படி எனக்கு உதவிசெய்யும் ஸ்திரீகளுக்குள் மனிதருக்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

என்னை அன்பாய் நினைத்து என் ஜீவபாதையில் எனக்கு உதவிசெய்யும் எல்லா சிநேகிதருக்காகவும், அவர்களுடைய சுயநயமற்ற பரிசுத்த ஜீவியத்திற்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

எனக்கு அதிக இனிமையாயிருக்கும் என் அருமையும் மகாப்பெரிய சிநேகிதனின் நிலையுள்ள பிரசன்னத்திற்காகவும், என் பாவங்களை மன்னித்து, மற்றவர்கள் என்னை நம்பாமலிருக்கும்போதும், நானே என்னை நம்பாமலிருக்கும்போதும், அவர் என்னை நம்புகிறதற்காகவும், அவருடைய அன்பானது வானத்தைப்பார்க்கிலும் உயரமாயும், நம்மைச் சுற்றிலுமுள்ள உலகத்தைப்பார்க்கிலும் அகலமாயும், மாண ராஜ்யத்தைப்பார்க்கிலும் அதிக ஆழமாயும், மாறிமாறி வரும் இரவுபகலைப்பார்க்கிலும் அதிக ஒழுங்காயும், நிலைக்கத்தக்கதாயுமிருக்கும், ஆகிய இந்தக்காரியங்களுக்காக உம்மைஸ்தோத்திரிக்கிறேன்.

அவரிலேயும், உலகரட்சகராகிய அவருடைய குமாரனில் வைத்திருக்கும் விசுவாசத்திற்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நல்ல மனிதரில் விசுவாசம்



வைப்பதற்காகவும், அவர்கள் நற்குணத்தில் [illegible], அவர்கள் தப்பிதத்திற்காக விசனப்படுகிறதற்காகவும், அவர்கள் குற்றங்களை மன்னிப்பதற்காகவும், இந்த உலகத்தில் அடையக்கூடிய சந்தோஷத்தை அடையவும், நித்திய பாக்கியமும் சந்தோஷமும் மறு உலகத்தில் அடையவேண்டும் என்று விரும்புகிறதற்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

என் இருதயம் இளகவும், துக்கத்தால் நிறைந்தவர்களோடு துக்கப்படவும் கொடுத்த அநுதாபத்திற்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

## PHILLIPPINE RIDDLES.
## பிலிப்பையின் விடுகதைகள்.

"நாம் எழுந்து நிற்கலாம்" என்று தாயார் சொல்லுவாள், "நாம் குறுக்கே படுத்துக்கொள்ளலாம்" என்று பிள்ளைகள் சொல்லும்.—ஏணி.

இரவிலே அழைக்காமல் வருகின்றன, பகலிலே திருடாமல் காணமற்போகின்றன.—நட்சத்திரங்கள்

ஒரு இலையைக் கொடுக்கும் ஒரு மெல்லிய மரம்.—மெழுகுவர்த்தி.

அவனுடைய வார்த்தைகள் கேட்கக்கூடியது, ஆனால் அறிந்துகொள்வது கஷ்டம். அவருடைய முகத்தைப்பார்த்தால், அவர் சொல்லுவது இன்னதென்று அறிந்துகொள்ளலாம்.—கடியாரம்.

நான் இரண்டு படகுகளைக் கண்டேன், ஆனால் ஒரு மனிதன் தான் அதில் போனான்.—செருப்புகள்.

"இங்கே! இங்கே" என்று சொல்லுகிறான், ஆனால் வாயில்லை.—சுட்டுவிரல்.

ஒரு குச்சியை இழுத்தான், உடனே பாம்பு புறப்பட்டது.—ஊசிநூல்.

"[illegible] போகிறது, விட்டால் படுத்துக்கொள்ளுகிறது."—பேனா.

உட்காரும்போது உயரமாயிருக்கிறான், நிற்கும்போதோ, தாழ்வாயிருக்கிறான்.—நாய்.

இரண்டு அரசிகள் மலைகளின் இருபக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள், ஒருத்தி அழுதால் இருவரும் அழுகிறார்கள்.—கண்கள்.

வெட்டிவிட்டால் உடனே குணமாகிவிடுகிறது.—தண்ணீர்.

## HE COULD NOT GET AWAY FROM JESUS.
## இயேசுவின் பிரசன்னத்தை விட்டுப்போவது அவனுக்குக் கடினம்.

ஒரு யாப்பானிய வாலிபன் வேதாகமத்தை அதிகமாக வெறுத்தான். அவன் எப்போதாவது வாசிப்பானாயின், அந்த புத்தகத்தில் குறை கண்டுபிடிக்கவே, அதைக்கையாடுவான். இப்படி வாசிக்கையில், தான் ஒரு பாவியான மனுஷனென்றும், இயேசுகிறிஸ்துவே தன்னை மீட்கும் ரக்ஷகரென்றும் உணர்ந்தான். அவன் கிறிஸ்தவனாகி தன் ஊராருக்குத் தான் அடைந்திருக்கும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பயமின்றி பிரசங்கித்தான்.

இதைக் கேள்வியுற்ற ஒரு பழைய உடன்மாணாக்கன், இவன்மேல் அதிக கோபாவேசமாயிருந்தான். இவனும் மற்றைய மாணாக்கரும், வாலிபனைப் பார்த்து "இந்த அருவருப்பான கொள்கையை விட்டுவிடு; இல்லாவிடின், எங்களுடைய கல்விச்சாலையை விட்டுப்போகவேண்டுமென்று சொன்னார்கள்."

"அப்படியே நான் போகிறேன். ஆனால் போகுமுன், நான் இப்போது கொண்டிருக்கும் கொள்கையைக் குறித்து சற்றுச் சொல்ல விரும்புகிறேன்" என்றான்.

பிற்பாடு, தன் ஜோபியிலிருந்த வேதாகமத்தைத் திறந்து, தேவனுடைய அன்பு கிறிஸ்துவில் அடங்கியிருக்கிறதென்னும் சத்தியம் தனக்கு எப்படிப் புலப்பட்டதென்று அன்று ராத்திரி தன் ஊராருக்குச் சொன்னான். இவ்விதமாய் ஒவ்வொரு ராத்திரியும் பேசுவான். இதன் பலனாக ஒரு ஓய்வுநாள் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் பழைய சிநேகிதனோ, இதையெல்லாம் கண்டு அதிகக் கோபப்பட்டதோடு கிறிஸ்துவையும் பகைக்க ஆரம்பித்தான்.

சிலகாலத்திற்கு பின்பு இந்த அஞ்ஞான வாலிபன், யாப்பானிய சேனையில் சேர்க்கப்பட்டு மஞ்சூரியாவுக்குப்போனான். ஆனால் இயேசுவைவிட்டு பிரிந்திருக்க அவனால் கூடாமற்போயிற்று. ஏனென்றால், அவனுடைய மேலதிகாரி ஒரு ஊக்கமான கிறிஸ்தவன். இந்த உத்தியோகஸ்தன், வாலிபன், வாசிக்கிறதற்கு ஒரு புதிய ஏற்பாட்டைக் கொடுத்தான். அவன் சைனியத்தில் சேர்ந்திராதிருந்தால், அதைச் சுட்டெரித்திருப்பான்.

சில நாட்களுக்குப்பின் யாப்பான் தேசத்திற்குத் திரும்பினான். ஊருக்குத் திரும்புமுன், இவனுமிவன் கூட்டாளிகளும் ஒரு சீனனுடைய வீட்டைக் கொள்ளையடித்து, அங்குள்ள விலையுயர்ந்த சாமான்களை எடுத்துக்கொண்டார்கள். வாலிபனுக்கு நேர்த்தியாய், அலங்கரிக்கப்பட்டிருந்த சுருள் கொள்ளைப்பொருளாய்க் கிடைத்தது. தன் ஜனன ஊருக்குவந்தபோது, ஊரார் இவனுக்கு ஒரு பெரிய விருந்து பண்ணினார்கள். அப்போது இந்த இராணுவவீரன், பெருமையோடு, சுருளையெடுத்து அதில் வரையப்பட்டிருந்த வாக்கியத்தை வியந்து பேசினான். இவனுடைய பழைய சிநேகிதன், இதைக் கேட்டுக்கொண்டிருந்து "அந்த வார்த்தைகள் சீனஞானியுடையதல்ல, அவைகள் நீ அலக்ஷியஞ்செய்து வெறுக்கிற இயேசுவின் புத்தகத்திலிருக்கிறதென்று சொன்னான். இராணுவ வீரன் இதைக்கேட்டு பிரமைகொண்டான். இயேசு தன்னை பின்தொடர்ந்து வருகிறதை நன்குணர்ந்தான். தன் சிநேகிதனிடம் வந்து என்னை ஒப்படைக்கிறேன், என்னை ஒப்படைக்கிறேன், உன்னுடைய கடவுளும், புத்தகமும் நான் செல்லுமிடமெல்லாம என்னைப் பின்செல்கின்றன. அவைகளைக் குறித்து அறிவடையப் பிரயாசப்படுவேன்" என்று சொன்னான்.

## WOMEN AND THE BAR.
## ஸ்திரீகளும் நியாயஸ்தலமும்.

சென்ற வருஷத்தில் விசாரிக்கப்பட்ட ஒரு பெரிய வழக்கில் வாதியின் வக்கீல், ஒரு பெண்பிள்ளையாயிருந்தாள். இவள் வெகு சாதுரியமாய், நியாயசட்டத்தை நியாயாதிபதிக்குமுன் குறிக்கப்பட்ட நேரங்களில் மூன்றுநாள் விவரித்துப் பேசினாள். இந்த உபந்நியாசமும், நியாயாதிபதி வியந்துபேசினதும், ஸ்திரீகள் வக்கீல் வேலைக்கு லாயக்கானவர்களென்பதை ஊர்ஜிதப்படுத்தியிருக்கின்றன.

பிரான்சு தலைமை பட்டணத்தில் பன்னிரண்டிற்குமேற்பட்ட பெண் நியாயவாதிகளுண்டு. ஒல்லாந்து தேசத்தில் முதல் பெண் நியாயவாதி வான்டார்ப்பு



அம்மாள். திருட்டு நிமித்தம் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஒரு குடியானவனுடைய நியாயவாதியாயிருந்து, ஏக்பென்னும் பட்டணத்திலுள்ள பெரிய கோர்ட்டில், இவனுக்காக வழக்காடி, சித்திபெற்றாள்.

அநேக பெண் நியாயவாதிகள், தங்களுடைய ஜாதிக்கே உதவிபுரிந்து வருகிறதாகத்தோற்றுகிறது. இந்தியாவில், கொர்னீலியா சொராப்ஜி அம்மாள், பங்காள ஆதீனத்திற்குள்ளிருக்கும் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் (Cout of Wards) என்னும் ஸ்தாபனத்திற்கு நியாயவாதியாய் சென்ற பத்து வருடங்களாய் நல்ல வேலை செய்து வந்திருக்கிறார்கள். அநேக விதவைகளுக்கும், மயினர்களுக்கும் வழக்கு விஷயங்களில் தேர்ந்த ஆலோசனை கொடுக்கத்தகும். அப்படியே நட்டாலி மைக்கல் என்னும் அம்மாளும் தன் பரீட்சைகளிலே அதிகத் திறமையோடு ஒப்பேறி, ரோமனெகிப்திய நியாய சட்டத்திலிருந்து ஸ்திரீகள் நியாயவாதிகளாகலாம் என்று நியாயாதிபதிகளுக்கு ஒரு விபாசகமளித்தபிற்பாடு, எகிப்திய கோர்ட்டுகளில் அப்பியசிக்கலாமென்று விடைபெற்றார்கள்.

ஐரோப்பா கண்டத்தின் அநேக தேசங்களிலும், அமெரிக்காவிலும் பேர்போன பெண் நியாயவாதிகளுண்டு.

உன்னால்கூடிய நன்மையை எல்லாஞ்செய், அதை எல்லாவகையிலுஞ் செய், எல்லோருக்குஞ்செய், உன்னால் கூடியமட்டும் எப்போதுஞ்செய்.

## MEDICAL RESEARCH.
## வைத்திய ஆராய்ச்சி.

வியாதிகள் வருவதற்கு காரணங்களும் அவற்றைத் தடுப்பதற்கு ஏதுகளும் எப்படி என்று கண்டுபிடிக்க எத்தனையோ மனிதர் தங்கள் ஜீவகாலமுழுவதையும் செலவழிக்கிறார்கள். இவர்களுக்கு நாம் எவ்வளவோ கடமைப் பட்டவர்கள என்பதை எண்ணுகிறவர்கள் வெகு சொற்பமாய் இருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்னே, தப்பிக்கக்கூடாத பயங்கர வாதைகள் என்று எண்ணின எத்தனையோ வியாதிகளை தற்காலத்தில் சில இடங்களில் அடியோடே அற்றுப்போகச்செய்திருக்கிறார்கள்.

இப்படி எண்ணின வியாதிகளில் ஒன்று வைசூரி. இப்போதும் அது பயங்கரமானதாய்த் தோன்றினாலும் முன்னே கண்டுபிடிக்காமல் இருந்து இப்போது அதை எப்படி தடுத்துக்கொள்ளலாம் என்று அறிந்திருக்கிறார்கள். அம்மை குத்திக்கொள்ளக்கூடாது என்கிற வைராக்கியம் இப்போது அநேக இடங்களில் தணிந்துபோனது. இப்போது இவ்வியாதி அதிக குறைந்திருப்பது இதற்கு அத்தாட்சியாக இருக்கிறது.

மஞ்சள் காய்ச்சல் என்று சொல்லப்படும் ஜுரம், ஐக்கிய மாகாணங்களில் அநேக ஊர்களையும் மேற்கு இந்திய (West Indies) தீவுகளையும் இப்போது பீடித்ததுபோல சில வருஷங்களுக்கு முன் இருக்கவில்லை. முந்தி ஜனங்களுக்கு இவ்வியாதியிலிருந்து தப்ப நம்பிக்கை இல்லை. அதற்கிரையானவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள். இவ்வியாதிக்குக் காரணம் ஓர்விதமான கொசுவென்று கண்டுபிடித்தார்கள். இப்படியே மலைக்காய்ச்சலும் (மலேரியா) உண்டாகிறதற்கு இன்னொருவித கொசு மூல காரணம். காரணத்தை நிவிர்த்தி செய்வதினால் வியாதியும் நீக்கப்படுகிறது.

Beriberi (பெரிபெரி) என்று இப்போது இந்தியாவில் புதிதாய் ஏற்பட்ட

ருக்கிற வியாதி ஜப்பான், பிலிப்பைன்ஸ் முதலிய இடங்களில் நூற்றாண்டுகளாக உற்பத்தியாயிருந்து இப்போது இங்கு வந்தது. ஆனால் இராணுவ ஜனங்களுக்கு சாப்பாடு போடும் விஷயத்தினால் ஆகாரத்தால் உண்டாகும் வியாதி என்று ரூபிக்கப்படுகிறது. பர்மாவிலிருந்து வரும் வெள்ளை அரிசி யந்திரங்களால் குத்தப்பட்டு கடைக்கு வரும். அரிசிகளில் ஆகாரத்துக்கு முக்கியமாய் வேண்டிய வஸ்து அரைக்கப்பட்டுப் போவதினால் இவ்வியாதி வருவதற்கு முக்கிய காரணமாய் இருக்கிறது.

மத்திய அமெரிக்காவில் பனாமா கால்வாய் அமைக்கப்படும் பூசந்தி ஒரு காலத்தில் மரணகூண்டு என்று ரூபிக்கப்பட்டிருந்தது. அப்பேர்ப்பட்ட உஷ்ண பூமியை இப்போது அதிக சவுக்கியமான பூமியாக மாறுபடுத்தியிருக்கிறது. வியாதியின் மூலகாரணங்களை விலக்கி சுற்றுப்புறங்களை எல்லாம் சுத்தமாக்கினதினால் இப்போது சவுக்கியம் உண்டானது. வைத்தியர்கள் எல்லாரும் தற்காலத்தில் வியாதிக்கு மருந்து கொடுத்து குணமாக்குகிறதை விட்டு பெரும்பான்மையோர் வியாதி வராமல் தடுக்கும் வழிகளையே அனுசரிக்கிறார்கள். வியாதியை குணப்படுத்த முயல்வது ஒரு பெரிய ஆசீர்வாதம். ஆனால் அதை வராமல் தடுப்பது மகா பெரிய உபகாரமாய் இருக்கிறது. ஒவ்வொரு வகுப்பாரும் வீட்டாரும் தங்கள் தங்கள் வீட்டையும் சுற்றுப்புறங்களையும், கிராமங்கள் கிராமத்து குளங்குட்டைகள் முதலியவற்றை சுத்தமாய் வைத்து யாதொரு தொற்றுவியாதியும் அணுகாமல் காத்துக்கொண்டால் நலம். வியாதியைப் பரவச்செய்யாமல் ஜாக்கிரதையாயும் இருக்க வேண்டும்.

ALARM CLOCKS.

## எச்சரிக்கும் கடிகாரங்கள்.

எச்சரிக்கும் கடிகாரத்தை நீ எப்போதாவது பார்த்ததுண்டா? இல்லாவிடின், அதைப்பற்றி விபரமாய் கூறவேண்டும்.

சிலகடிகாரங்கள், ஒருமணிநேரத்திற்கொருதரமும், அரைமணிக்கொருதரமும், கால்மணிநேரத்திற்கொருதரமும் அடிக்கின்றன. சிலகடிகாரங்கள் மணியடிக்கிறதில்லை. இந்த இருதன்மையுமுள்ள கடிகாரங்களுமுண்டு. இவைகளிலுள்ள யந்திரங்களை நன்றாய் சுற்றிவைத்தால் குறித்தநேரத்தில் அதிக சத்தத்தோடு, மணியடித்துக்கொண்டிருக்கும். அதிகநேரந் தூங்கிவிடாதபடிக்கு, தங்களை எழுப்பும்படி, இவ்வித கடிகாரங்களை ஜனங்கள் பிரயோகிக்கிறார்கள். இவ்வித கடிகாரத்தின் யந்திரங்களை சுற்றிவிட்டு, உன் படுக்கைக்குச் சமீபத்தில்வைத்து நித்திரை செய்தால், நீ எவ்வளவு அயர்ந்த நித்திரை செய்தாலும், குறித்த நேரத்தில், உன்னை எழுப்பச் செய்யும். இப்படியிருந்தும், அவைகள் சில தடவைகளில் மனுஷரை எழுப்பக் கூடாமற்போய்விடுகின்றன.

இக்கடிகாரங்கள் மணியடிக்கும்போது ஒரு தடவை, அல்லது இரண்டு தடவை, அல்லது மூன்றுதடவை ஒருவன் தூக்கத்தினின்று விழித்துக்கொள்வான். படுக்கையினின்று எழுந்திராமல் திரும்பிப் படுத்துத் தூங்குவானாயின், எவ்வளவு உரப்பாய் மணியடித்துக்கொண்டிருந்தாலும் அதின் சத்தத்தைக் கேளாதவன்போல் நித்திரைகொள்வான்.

இதுபோல, நம்மொவ்வொருவரிடத்திலும், ஒரு எச்சரிக்கும் கடிகாரமுண்டு. நாம் ஏதாவது தப்பிதம்செய்து ஆபத்தி



லிருக்கும்போது, நம்மை எழுப்பி அந்தக் குற்றத்தைக்குறித்துக் கண்டிக்கிறது. துவக்கத்தில், அதிக சத்தத்தோடு நமக்குள் தொனிக்கிறது. அதை நாம் கவனிக்காவிடில், அதின் தொனி கொஞ்சங்கொஞ்சமாய் குறைந்து, கடைசியில் நிசப்தமாய் மாறிவிடுகிறது. நாம் கவனியாதபடியால், அதின் தொனியை நாம் கேட்கிறதில்லை.

நமக்குள்ளே சத்தமிடும் அந்தத் தொனியின்பேர் "மனசாட்சி." இது தப்பிதம், அது சரியென்று நம்மிடத்திலே பேசும் அந்தத்தொனி, தேவவாக்காம். இந்த சத்தத்தைக் கேட்டு கீழ்ப்படிகிற பையனாவது, பெண்ணாவது, பத்திரமாய்க் காக்கப்படுவார்கள். அவன் சரியானதை செய்கிறதினால், அவனுக்குப் பயமில்லை.

பையன்களே, பெண்களே, இந்த சத்தத்திற்கு செவிகொடுங்கள். இல்லாவிட்டால் "மனிதனும் எச்சரிக்குங் கடிகாரமும்" என்கிற உவமையிற் சொல்லப்பட்டிருக்கும் மனுஷனுடைய நிலைமையில் வந்துவிடுவாய். நீ விரும்பினாலும், கேட்கக்கூடாதபடி, உன் செவி மந்தப்பட்டுப்போம்.

"GOD'S HEART IS JUST LOVE."

## "தேவ அன்பு நீதியான அன்பு."

சீனர்களுக்குள் இருபது வருஷமாய் ஊழியஞ் செய்து வந்த மிஷனெரி பின்வரும் நேர்த்தியான சரித்திரத்தைச் சொல்லியிருக்கிறார்.

சென்ற வசந்தகாலத்தில் ஒரு கிராமத்திற்குப் போயிருந்தேன். அங்கிருந்த கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு நான் நடத்தின கூட்டத்தின் முடிவில், கூனிப்போய் நரை நிறைந்து, தோல் சுருங்கிப்போயுள்ள ஒரு கிழவி அதிக ஆவலாய் உள்ளே வந்தாள். நேரே உட்கார்ந்து, எல்லாரையும் பார்வையிட்டபின், என்னை உற்றுப்பார்த்து, சீனர் சாதாரணமாய் வினவிக் கொள்ளும் கேள்விகளைக் கேட்டாள். உன் வயது எவ்வளவு? நீ எங்கேயிருந்து வந்தாய்? இங்கு நீ வந்த காரணமென்னவென்று கேட்டாள். அதற்கு நான் அன்று காலை செய்த வேலையைக்குறித்துச் சொன்னேன். அவள் சுவிசேஷத்தின் மகத்துவத்தைக் குறித்து யாதொன்றுங் கேள்விப்பட்டிராதிருந்ததினால், நான் அவளுக்குச் சொன்னது நூதனமாய்த் தோன்றிற்று. அங்கிருந்த ஸ்திரீகளில் சிலர் அவளோடு சற்று சம்பாஷணை பண்ணினார்கள். நான அவளுக்கு "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்கிற வேதவாக்கியத்தை உபதேசித்தேன். சீனபாஷையில் இந்த வாக்கியம் "தேவனுடைய இருதயம் நீதியுள்ள அன்பு" என்று பொருட்படுகிறது. அவள் இந்த வாக்கியத்தைத் திருப்பத் திருப்பச் சொன்னாள். அவளுக்குத் தெளிவாக இந்த வாக்கியத்தை வியாக்கியானம்பண்ணியும் முதற்தடவையில் அதை விசுவாசியாதவள்போல் காணப்பட்டாள்.

சாப்பாட்டு வேளையாயிருந்தபடியால், அவளும், மற்றைய ஸ்திரீகளும் வீட்டுக்குப் போனார்கள். கிழவியோ அந்த வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு, சாயந்தரவேளையில் என்னிடம் வந்தாள். சில நேரத்திற்கு பிற்பாடு எழுந்து போய்க்கொண்டிருக்கையில, சற்று நின்று "நீர் சொல்லுகிற வார்த்தைகளில் உண்மையுண்டாவென்று" என்னைக்கேட்டாள்.

"ஆம், அவைகள் சத்தியமான வார்த்தைகள்" என்றேன். "தேவனுடைய

"இருதயம் நீதியுள்ள அன்பு" என்று சொல்லிக்கொண்டு கதவண்டை போனாள். அப்போது மறுபடியும் "அவைகள் உண்மையான வார்த்தைகள்தானா" வென்று என்னைக்கேட்டாள். அவைகள் சத்தியமான வார்த்தைகள்தானென்று உறுதிவாக்களித்தேன்.

மறுநாள் மறுபடியும் என்னிடம் வந்தாள். நான் ஊரைவிடவேண்டியிருந்ததால், வேதாகம ஸ்திரீயொருத்தியினிடம் கிழவியை கவனித்துக்கொள்ளும்படி சொன்னேன்.

மே மாதம் அந்த ஊருக்கு நான் போயிருந்தபோது, கிழவி அதிக சந்தோஷத்தோடு என்னைச் சந்திக்க வந்தாள். அப்போது "தேவனுடைய இருதயம் அன்பு, அதை நான் விசுவாசிக்கிறேன்" என்று சொன்னாள்.

சுவிசேஷ செய்தியைக்கேட்க இவ்வளவு ஆவலாயிருந்த ஸ்திரீயைப்போல், வேறொருவரையும் நான் கண்டதில்லை. அதைக் கேட்கக் கேட்க ஆவல் அதிகரிக்கவே, வீட்டுக்குப்போக அவளுக்குப் பிரியமில்லாமற்போயிற்று.

பிற்பாடு நான் வேறு சிலகாலத்தில் அந்த ஊருக்குப் போயிருந்தபோது, தன்னுடைய வீட்டிற்கு வரும்படி என்னைக் கூப்பிட்டாள். அவளுடைய குடும்பம் ஒரு பெரியகுடும்பம். எழுபத்துமூன்று வயதுள்ள ஒரு மகன் அவளுக்குண்டு. அவனும் சுவிசேஷத்தைக் கேட்க அதிக ஆவலாயிருந்தான். வேதாகம ஸ்திரீயும் நானும் அங்கு ஒரு ஜெபக்கூட்டம் வைத்தபிற்பாடு, போரடிக்களத்திற கூடியிருந்த ஜனங்களுக்குப் பிரசங்கிக்கப்போனோம்.

ஜனங்கள் அமைதியாயிருந்து கேட்டார்கள். கிழவி "தேவனுடைய இருதயம் அன்பு, சொல்லக்கூடாத பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது" என்று எப்போதும் சொல்லிக்கொண்டிருக்கிறபடியால், ஜனங்கள் அவளை பாக்கியக்காரி என்று நினைக்கிறார்கள்.

---

CHILDREN'S PAGE.

## சிறுவர்களின் பக்கம்.

குறும்புசெய்யும் உவில்லியின் கால்.

தன் சகோதரி பிரியயீனமானதைச் செய்வாளாயின் அவளை உவில்லி உதைப்பான். இனிமேல் அப்படிச்செய்தால், அவளைத் தண்டிப்பதாக தாயார் அவனுக்குச் சொன்னாள். தன் தாயார் சொன்னதை மறந்துபோனதினாலேயோ, அல்லது அசட்டை செய்ததினாலேயோ, தன் சகோதரியை, மறுபடியும் உதைத்தான். ஜன்னலிலிருந்து இதைக்கவனித்துக்கொண்டிருந்த தாயார், வீட்டிற்குள்ளே அவனை வரும்படி சொன்னாள்.

"உன்சகோதரியை உதைத்தால், உன்னைத்தண்டிப்பதாக தயார் உனக்குச் சொன்னதுண்டா" வென்றுகேட்டாள்.

"ஆம்" என்று உவில்லி சொன்னான். சரிதான். "நீ சாப்பிடுமறைக்குப்போய், தாயார் வரும்வரை காத்திரு" என்றாள். தாயார் தோட்டத்திற்குப்போய், கைநிறைய புல் அறுத்துக்கொண்டு, வீட்டிற்குள் வந்தாள். பையன் பயந்துபோய், அழுதுகொண்டிருந்தான்.

அவனுடைய கால் அதிக குறும்புள்ள காலாயிருக்கிறபடியால், அதற்கு போல்டீஸ் (Poultice) ஒத்தளம் போடவேண்டுமென்றுசொன்னாள். ஆகையால் தன் கையிலிருந்தபுல்லை அவன் காலில்வைத்து துணியினால் கட்டவேண்டுமென்று சொன்னாள். ஆகையால், அவனை கட்டிலில் படுக்கும்படி கட்டளையிட்டாள்.



"அவனுடைய கால் குறும்புசெய்கிறது. அவனுடைய கால் தன் சகோதரியை உதைக்கிறது. அதை நிவிர்த்திசெய்ய ஒருபெரிய போல்டீஸ் போட்டிருக்கிறேன். அந்தக்கெட்ட வழக்கத்தை இந்தமருந்து சுகப்படுத்துமல்லவா" என்று, அவருக்கு மாறுத்தரஞ் சொன்னாள். அவர் அவளுடைய கருத்தை நன்றாயறிந்துகொண்டார்.

உவில்லி அதிகவெட்கமுற்றவனாய், தன் முகத்தை கீழேபோட்டுக்கொண்டான். அக்கிரமக்காரரின் வழி கடினமாமென்று வேதாகமங்கூறுகிறது. சிறுபிள்ளையாவது, அல்லது மற்றுயாராவது, தப்பிதம் செய்தால், தண்டனையடைவார்களென்பதே, அதின் பொருள்.

ஏழைப்பையனின் விளையாட்டு தடங்கலாய்ப்போய்விட்டது. அவன் காற்கட்டு வாழைக்குலையைப்போல் பெரிதாயிருந்தது. அதோடு அவன் கட்டிலில் படுத்து விம்மி, விம்மி அழுதுகொண்டிருந்தான். அச்சமயத்தில் ஒரு துரை வீட்டிற்குள்ளே வந்தார்.

"உவில்லிக்கென்னசெய்கிறது" என்று கேட்டார்.

NEWS AND NOTES.

## சமாச்சாரக் குறிப்புகள்.

---

1912-ம் வருடத்தில் உலகமுழுவதிலும் கிடைத்த நிலக்கரி ஒரு லக்ஷத்து பத்துகோடி டன். அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களில்தான் எல்லாதேசங்களிலும் அதிகமாய் எடுக்கப்பட்டது. அது சராசரி தலைக்கு ஐந்து டன் ஆகிறது. இங்கிலாந்திலும் தலைக்கு ஐந்து டன் வீதம் கிடைத்ததென்றாலும் மொத்தநிறை ஐக்கிய மாகாணங்களில் கிடைத்ததைவிட குறைவுதான். ஜெர்மெனியிலோ தலைக்கு மூன்று டன் வீதமேதான் கிடைத்தது.

இங்கிலாந்தில் ஒருபட்டணத்தின் தெருவழியாய்ப்போய்க் கொண்டிருந்த வேலையாளிடத்தில் ஒரு பெண் ஓடிவந்து யாரோ ஒருபையன் கால்வாயில் விழுந்துவிட்டானென்றுசொல்ல, அவன் உடனே அந்த இடத்துக்கு ஓடி, கிராதிகளைத் தாண்டி, தண்ணீரில் குதித்து, ஸ்மரணையற்றுகிடந்த பையனை எடுத்துக்கொண்டு வெளியேறி பார்த்தபோது அந்த பையன் தன் சொந்த பிள்ளை என்று கண்டான்.

சிகரெட் பிடிப்பதினால் சேனையின் சுகம்கெட்டுப்போவதைத் தெரிவித்து, அப்பழக்கத்துக்கு விலக எச்சரிக்கும் தாக்கீது ஒன்றை அச்சேனையின் உயர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவர் வெளியிட்டிருக்கிறார். சேனையின் மற்ற உத்தியோகஸ்தர் அக்கெட்டபழக்கத்தை தங்களாலானமட்டும் தவிர்க்கவும் இராணுவ மனுஷர் வேலை ஸ்தானத்திலிருக்கும்போது சிகரெட் பிடிக்கவே கூடாதென்றும் உத்தரவு செய்திருக்கிறார்.

இங்கிலாந்தில் ஒரு பட்டணத்திலிருக்கும் மேரி கன்னிகாம் என்னும் விதவைக்கு 80 வயதாயிற்று. அவள் அப்பட்டணத்தில் தந்திசெய்திகொண்டு போகிறவள், அப்படி செய்திகொண்டு போகும் பல சமயங்களில் நாளொன்றுக்கு 12 மைல் நடந்து போகிறாள்.

நமது ராஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்தன்று ஆயிரக்கணக்கான மாணாக்கர் (பள்ளிக்கூடத்துபிள்ளைகள்) அவரை

வாழ்த்தி மங்கள கடிதம் எழுதினர். அதற்கு பதிலுத்தரவாக அரசன் வந்தன கடிதமெழுதி அதில் கடைசியாக "அவர்கள் என் பிறந்த நாளில் எனக்குக் கூறின வாழ்த்துதலை எல்லாம் அவரவர் தன் தன் பிறந்த நாளில் முற்றும் அனுபவிப்பார்களென்று நம்புகிறேன்" என்று முடித்தார்.

தபால் கொண்டுவரும் ஸால்செட் என்னும் நீராவிக்கலம் இந்த ஆறு வருஷக்காலத்தில் சென்றவாரந்தான் முதல் தடவையாக நேரம் பிந்திவந்தது. சனிக்கிழமையன்று பொம்பாய்த் துறைக்கு வரவேண்டிய கப்பல் செவ்வாயன்றுதான் தபால்களை இறக்கிற்று. ஏடெனிலிருந்து வரும்போது சமுத்திரத்திலுண்டான கொந்தளிப்பினாலும், நீராவி யந்திரத்திலுண்டான சில தவறுகளாலும் கப்பலானது மணிநேரத்துக்கு இரண்டு மைல் தான் போகக்கூடியதாயிருந்தது. ஆயினும், கடைசியாக எல்லாம் பத்திரமாய் வந்து சேர்ந்தது.

லூஸி பார்க்கர் அம்மாள் இந்தியாவில் ஐம்பத்தைந்து வருஷகாலமாக தேவதிருப்பணி (மிஷனரி) செய்துவருகிறார்கள். அவர்கள் நல்ல பாலிய வயதில் இந்தியாவுக்கு வந்தார்கள். தான் அருமையாய் நேசித்து, தன்னோடு உழைத்துவந்த அவர்கள் கணவர் சில வருஷங்களுக்கு முந்தி இறந்துபோனார். அந்த அம்மாளோ இன்னும் திருப்பணி செய்ய ஒரு மிஷன் வட்டத்தை நடத்திவருகிறார்கள். சில நாளைக்கு முந்திதான் அவர்கள் தன் எண்பதாம் பிறந்த நாளைக்கொண்டாடினார்கள். அவர்கள் இவ்வளவுகாலம் ஜீவனோடிருந்து வேலைசெய்யத் திராணியுள்ளவர்களாயிருப்பதற்காக அவர்களோடு சந்தோஷப்பட்டு அவர்களுக்கு வாழ்த்துகூற பல சிநேகிதர் அச்சமயத்தில் கூடினர். அவர்கள் உண்மையும் சுறுசுறுப்புமுள்ள ஊழியர். அவர்கள் எப்போதும் கஷ்டப்பட்டுழைத்து, சாதாரணமாய்ச் சாப்பிட்டு ஜீவனம் செய்கிற வழக்கமுள்ளவராயிருப்பதால்தான் அவர்கள் இவ்வளவு வயதுபட்டும் சுகமாயிருக்கிறார்கள்.

ஒருபால்ய அரசன் தன் நாட்டை நன்றாய் அரசாளவேண்டுமென்கிற தீர்மானத்தோடு இராஜாங்கம் ஆரம்பிக்கும்போது நாம் எப்போதும் சந்தோஷப்படுகிறோம். ஆகவே, இன்டோர் ஹோல்க்கராகிய இருபத்திநாலு வயதுள்ள பால்ய அரசன் மூன்று வருஷங்களுக்கு முன் தன் நாட்டின் ராஜ்யபாரத்தை ஒப்புக்கொண்டார் எனக்கேட்டு சந்தோஷித்தோம். அவர் குடிமுறை நன்குணர்ந்த அரசன் என்பதில் ஐயமில்லை. அவர் தன் நாட்டின் நிமித்தமும், அதன் நன்மைக்காக அவர் செய்யப்புகுந்த காரியங்களினிமித்தமும் அவருக்கு கௌரவம் உண்டாயிருக்கிறதென்று அவர் நாட்டின் அரசாட்சி ரிப்போர்ட்டு நிரூபிக்கிறது. பெண்களின் கலியாண வயது, கல்வி அபிவிர்த்தி, விசேஷித்த பட்டணங்களில் லைபிரேரிகளை ஸ்தாபித்தல், நோய்களைத் தடுக்கவும், பட்டணத்தைச் சிறப்பிக்கவும் ஏதுள்ள திருத்தங்களை நாட்டின் பிரதான பட்டணத்தில் ஏற்படுத்தல், பிரிட்டிஷ் உத்தியோகஸ்தரைக்கொண்டு ஊர்க்காவல், துரைத்தனத்தை அநுஷ்டித்தல், பட்டுநூல் கைத்தொழில் இவைகள்தான் அவ்வரசன் செய்யக் கருதும் சீர்திருத்தங்களில் சில.

Vol. XXVIII. Registered No. M. 209. No. 4

OCTOBER 1914

# மாதர் மித்திரி

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"


PUBLISHED BY THE

Woman's Foreign Missionary Society

Methodist Episcopal Church

U. S. A.





METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, ***Methodist Publishing House***, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை | 51 |
| எஜமானிகள் தங்கள் வேலைக்காரிகளுக்காக செய்யக்கூடியது | 52 |
| இந்திய கோமாளி | 54 |
| கிராமக்கூட்டுச் சகாய சங்கம் | 56 |
| பக்ஷிகளைப்பற்றிய சிறுகதைகள் | 58 |
| வாத்தியப் பிரியமுள்ள புறா | 59 |
| பள்ளிக்கூடத்துக்குப்போன காகம் | 59 |
| சிறுவர்களின் பக்கம் | 60 |
| அவர்கள் போதுமான அளவு நேசித்ததில்லை | 62 |
| புத்திமதியான வசனங்கள் | 62 |
| "யாருக்குச் சொல்வது" | 63 |
| ஞான வளர்த்தி | 63 |
| நன்மொழிகள் | 63 |
| ஸார் சக்கரவர்த்தியால் முடியாத விஷயம் | 64 |



# மாதர் மித்திரி.

புத். ௨௮. ௧௯௧௪ ௵ - அக்டோபர் ௴. இல. ௪.


## BOUGHT WITH A PRICE.

இராகம், சஹானா. ரூபகதாளம்.

பல்லவி.

நீயுனக்குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி.
நீயுனக்குச் சொந்தமல்லவே.

அநுபல்லவி.

நீயுனக்குச் சொந்தமல்லவே. ரீ-ரீ-ரீ-ரீ
நிமலன் கிறிஸ்து நாதருக்கே சொந்தம்.—

சரணங்கள்.

1. சிலுவைமரத்திற்றொங்கி மரித்தாரே; திருரத்தம், ரத்தம்
திரு விலாவில் வடியுது, பாரே;
மிகுந்த பரிசத்தால் கொண்டாரே;—ரீ-ரீ-ரீ-ரீ,
மோட்சமதினை யுனக்கீவாரே.— நீ

2. இந்த நன்றியை மறந்துபோவையோ? யேசுவைவிட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்ததமுனதிதயங் காயமும்,—ரீ-ரீ-ரீ-ரீ,
சுவாமி கிறிஸ்துவுடையதல்லவோ?— நீ

3. பழைய பாவத்தாசை வருகுதோ? பசாசின்மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அற்ப நிமிஷத்தாசை காட்டியே,—ரீ-ரீ-ரீ-ரீ,
அக்கினிக்கடல் தள்ளுவானேன்?— நீ

4. பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே; உலகைவிட்டு
மரிக்கினும் அவர்க்கே மரிப்பாயே;
மரித்து உயிர்த்த யேசுநாதரின்,—ரீ-ரீ-ரீ-ரீ,
மலரடி எந்நாளும் நினைப்பாய்.— நீ

## WHAT LADIES CAN DO FOR THEIR SERVANTS.

## எஜமானிகள் தங்கள் வேலைக்காரிகளுக்காக செய்யக்கூடியது.

குலாசார அனுகூல முயற்சிகளைப் பற்றித் தற்காலத்தில் எங்கும் அதிகமாய்ப் பேசப்படுகிறது. அநேகர் அது என்ன என்று அறியவிரும்புகின்றனர். பிறருடைய நல்விர்த்திக்கானவைகளைச் செய்வதே குலாசாரமுயற்சியாகும். அத்தகையமுயற்சியால் விளையும் பயன்கள் நிலைபெற்றுள்ளனவாயிருத்தல் வேண்டும். எளியவனொருவனுக்குப் பணம்கொடுத்துதவுவதுதானே குலானுகூலமுயற்சியாகாது. அவ்வெளியவன் யாசகம்செய்வதொழிந்து தானே பணம் சம்பாதித்து ஜீவனம் செய்யுமாறு அவனைப் பழக்குவதே சிறந்தது. ஒருவர்க்கு வஸ்திரதானம் செய்வதினும் தானே வஸ்திரத்தைத் தைக்க பழக்குவது மிக்க அனுகூலமானது.

ஆக, தங்களால் கூடியதைத் தாங்களே செய்யப்பழகும்படி செய்வதுதான் நாம் இவ்விஷயத்தில் கவனிக்கவேண்டிய விஷயம். நாம் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயமும் உண்டு; அது யாதெனின், நாம் செய்யும் உதவியினால் உதவிபெறுபவனது சுயசங்கை கெடாதபடி பார்ப்பதுதான். உதவிசெய்வோன் அவ்வுதவி பெறுபவனிலும் மேலானவனாகத் தன்னைப் பாராட்டாமல், தான் பாலுள்ள சாதனம் யாவும் மற்றவர்களுக்கு உதவுமாறு அளிக்கப்பெற்றனவென்றும், அவ்விதம் அளியாவிடின் தன்மேல் தவறுகுமென்றும் உணர்தல் வேண்டும். செல்வமும் சாவகாசமும் உடையவரே இத்தகைய வேலைசெய்வதற்குத் தக்கவரென நினைக்கலாம். அது அப்படியன்று. சாவகாசமும் பணச்செலவும் இன்றி எவரும் மிக்க பயனுறும் உதவிசெய்வது சாத்தியமாகும். வீட்டிலிருக்கும் எஜமானி தன் வேலைக்காரிகளிடத்தில் மிக எளிதாய் இத்தகைய ஊழியம் செய்யக்கூடும். திருஷ்டாந்தமாக அவர்களுக்கு ஊசி, நூல் முதலியவைகளை வைத்துக்கொள்வதற்கான பைகளையும், தங்கள் உடுப்புகளையும் தைக்கக் கற்றுக்கொடுக்கலாம். கிழிந்த துணிகளைத் தைக்கத்தெரிவது அவர்களுக்கு நல்லது. சாதாரண தையல் கற்றுக்கொடுப்பதற்கான ஒருசிறுபுஸ்தகம் இந்துசீர்திருத்த சங்கத்தாரால் இந்தி, உருடு என்னும் பாஷைகளில் பிரசுரிக்கப்பட்டு எட்டு அணுவுக்கு விற்கப்படுகிறது. சிறுபெண்கள் தங்களுக்கு ஐரோப்பிய பெருமாட்டிகள் கொடுக்கும் பொம்மைகளுக்கு இந்தியபாவனையாக உடுப்புதைத்து இப்படியே தங்கள் தையல்வேலையை ஆரம்பிக்கலாம். சில சிறுவருக்குத் தையலில் ஆசைமிஞ்ச அவர்களோடொத்த மற்ற சிறுவரும் அதைப் பார்த்துத் தாங்களும் தையல் வேலை படிக்க ஆரம்பித்தார்கள். இதினால் ஒவ்வொரு நாளும் அரைமணிநேரத்துக்காகிலும் சிறுவர் குறும்புத்தொழிலொழிந்து அமைதியாயிருந்தனர். ஏழை ஸ்திரீகளுக்கு இத்தகைய உதவிசெய்யும் விதம் யாதெனின், குப்பை முதலிய அசுத்தங்கள் சேராமலும், ஈ, கொசு முதலிய பூச்சிகள் அணுகாமலும் தங்கள் வீடுகளைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளக் கற்றுக்கொடுப்பதுதான். இவைகளை அறிந்திருப்பது மிகவும் நல்லது. க்ஷயரோகம் அதிகரித்து வருகிற இக்காலத்தில் அவ்வியாதியை வேரறுப்பதற்காக பெரிய பட்டணங்களில் பல முயற்சிகளும் செய்யப்படுகின்றன. இதற்கென்று ஏற்பட்டிருக்கும் சங்கத்



தார் அச்சிட்டிருக்கும் புஸ்தகங்களை வீட்டெஜமானிகள் வாங்கி வாசித்து தங்கள் வேலைக்காரிகளுக்கும் சொல்லிக்கொடுப்பதும், இவ்விஷயங்களைப்பற்றிப் பேசப்படும் கூட்டங்களுக்கு அவர்களைப் போகச் செய்வதும், அல்லது இவ்விஷயங்களை அறிந்த இந்திய வைத்திய ஸ்திரீகளை அழைத்து வேலைக்காரிகளுக்கு வேண்டிய போதனைசெய்வதும் மிக்க பயன் விளைப்பதாகும். பல எஜமானிகள் ஒன்றுசேர்ந்து சுகத்தைப்பற்றியும், சாதாரண நோய்களின் சிகிச்சையைப் பற்றியும் அவர்களுக்குப் போதிக்கலாம். பணக்காரரான எஜமானிகள் மருந்துகள் வாங்கி வைத்துக்கொண்டு வேலைக்காரருக்கு நோய்க்கு மருந்து கொடுத்துதவலாம், அல்லது அவர்களை தங்கள்நோய்களைப்போக்கும் வழிவகைகளை காட்டிவரலாம். வேலைக்காரிகளிடத்தில் செல்வாக்குடைய எஜமானிகள் தங்கள் பிள்ளைகுட்டிகளின் சுகம் நிலைத்துவரச் செய்யக்கூடும். எஜமானிகள் தங்கள் வேலைக்காரரின் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகும்படி பிரயாசப்பட வேண்டும். கூடாதபக்ஷத்தில் அவர்களுக்குத் தினம் தினம் தாமே கொஞ்சம் படித்துக் கொடுக்கவேண்டும். ஒரு பள்ளிக்கூடத்தில் வேலைக்காரருடைய பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குப் போகாவிட்டால் அந்த வேலைக்காரருக்கு அபராதம் போடுகிறதும், அவர்கள் ஒழுங்காய்ப் போய் தேர்ச்சியடைந்தால் கிறிஸ்து ஜெனன நாளில் அவர்களுக்கு அதிக இனாமும் கொடுக்கப்படுகிறது. எஜமானிகள் பல நல்ல கதைகளைச் சொல்லி சிறுவர்களின் மனதில் அநேக நல்லெண்ணங்களை உண்டாக்கலாம். காரியங்களை நேரே பார்த்தறிய முடியாதவர்களுக்குச் சிறு படப் புஸ்தகங்களால் அநேக நன்மைகள் உண்டாகக்கூடும். பொருள்காக்ஷிசாலையைப் பார்ப்பது பிள்ளைகளின் அறிவுவிர்த்திக்கு மிக்க அனுகூலமானது. தோட்டத்தின் மூலையில் உள்ள மணல் குவியலில் விளையாடுவது பிள்ளைகளுக்கு மிக்கச்சந்தோஷகரமானது. மரத்தில் ஊஞ்சல் கட்டி பிள்ளைகளை ஆடச்செய்வது அவர்கள் சந்தோஷத்துக்கும் அப்பியாசத்துக்கும் அனுகூலமானது. இதற்குச் செலவுமில்லை, பிள்ளைகளும் சண்டையிடாமல் விளையாடுவார்கள்.

வேலைக்காரர் குடியிருக்கும் அறைகளில் ஏதேனும் காலியாயிருந்தால், அதைப் பிரசவத்திற்காகவும், அல்லது தனித்து வைக்கப்படவேண்டிய நோயாளிக்காகவும் வைத்தியசாலையாக உபயோகிக்கலாம். வேலைக்காரர் படிப்பிக்கப்பட்டுவந்த வீடுகள் ஒன்றில் அவர்களுக்கு ஒரு அறையும் ஒரு விளக்கும் சொந்தமாகக்கொடுக்கப்பட்டது. அதில் அவர்கள் இராத்திரிதோறும்கூடி வாசித்து, வாத்தியங்களோடு பாட்டுகள்பாடி சம்பாஷித்து ஒழுங்கும் மேரையுமாய் நடந்தார்கள். அங்கே அவர்கள் சுருட்டு பிடிப்பதற்கு மாத்திரம் உத்திரவுஇல்லை. இப்படியே வேலைக்காரர் சுத்தத்திலும் ஒழுங்கிலும் முன்னுக்கு வந்தார்கள். காய்கறிச்செடிகளையும் புஷ்பச்செடிகளையும் பயிர்செய்வதில் பழக்கப்பட்ட வேலைக்காரர் குடும்பம் ஒன்றில் அவர்களுக்கு அந்தந்த செடி தொட்டிகளிலிருந்த சந்தோஷம் மிகவும் வியக்கத்தக்கது. இப்பழக்கத்தினால் அவர்கள் குடும்பத்தில் முன்னிராத சந்தோஷமும் மேன்மையும் உண்டாயிற்று.

வேலைக்காரருக்குச் செய்யவேண்டிய விசேஷித்த உதவி என்னவெனில், அவர்

கள் கடன்படாதிருக்கும்படி பழக்குவித்தலே. சிறுதொகைகளை போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் சேர்த்துவைக்கும்படி செய்வதினால் இதற்கு வழியுண்டாக்கலாம். ஒவ்வொரு மாதமும் அவன் சம்மதப்பட்டு ஏதோ ஒரு தொகையைப் பிடித்து சேர்த்துவைத்தால் அதினால் அவனுக்கு அவ்வளவு நஷ்டமுண்டாகாது. அவசியமானபோது ஒரு நல்ல தொகை கிடைக்குமென்கிற நம்பிக்கையும் உண்டாகும். இவ்விதமாக சில வருஷங்களுக்குள் ஒரு ஆயாள் இருநூறு ரூபாய் சேர்த்துக் கடன்வாங்காமலே தன் பெண்ணுக்குக் கலியாணம் செய்யக்கூடியவளானாள். அப்படியே ஒரு வண்ணானும் இரண்டு வருஷம் காத்திருந்து தன் பெண்ணுக்குக் கலியாணம் செய்ததினால் சேவிங்ஸ் பாங்கியில் சேர்ந்த பணமும், குறைந்தவட்டிக்குக் கொடுத்த சிறுதொகையும் சேர்ந்து கலியாணசெலவுக்குப் போதுமானதாயிருந்தது.

தங்களை அடுத்திருக்கிறவர்களுக்கும், மற்றவர்கள் கையைப் பாராமல் தாங்களே பிரயாசப்பட்டு சம்பாதிக்க அறியாத மற்றவர்களுக்கும் எஜமாட்டிகள் செய்யக்கூடிய பல உதவிகள் உண்டு. நன்மையும் மேன்மையும் உண்மையுமாய் தாமும்நடந்து மற்றவர்களையும் அவ்வழியில் பழக்குவதினால் நமது ஜீவியம் இன்னும் சிறந்த ஜீவியமாகும். இதை வாசிப்போர் வேலைக்காரருக்காக செய்யும் இவ்விஷயங்களைப்பற்றி எளனம் செய்யாமல், நாம் அனுபவிக்கும் நன்மைகளில் மற்றவர்களும் பங்குபெறுவதற்கு வேலைக்காரர் தேவனால் நமக்கு அருளப்பட்ட எத்தனங்களென்று எண்ணுவார்களாக.

## AN INDIAN JESTER.
## இந்திய கோமாளி.

மகா அக்பர் சக்ரவர்த்தியின் அரண்மனையில் பிர்பால் ராஜாவென்னும் பெயருள்ள கோமாளி ஒருவனிருந்தான். அவன் மேன்மேலும் சுகமாய் வாழ்ந்து, அரசனைச் சந்தோஷிப்பித்து, தன் எதிரிகளை எல்லாம் மேற்கொண்டான். கடைசியில் சக்ரவர்த்தியின் சேனையில் தீரமாய் சண்டைசெய்து மாண்டுபோனான். மத்திபகாலத்து ஐரோப்பிய அரசர்க்குள்ளிருந்தது போலவே கிழக்கத்திய தேசத்து அரசரிடத்திலும் கோமாளிகள் இருந்தார்கள்.

இந்த பிர்பால் ராஜாவைப்பற்றிய விசேஷமென்னவெனின், அக்பரும் அவன் மந்திரி அரண்மனை உத்தியோகஸ்தர் யாவரும் மகம்மதியராயிருக்க இவன் ஒருவனே பிராமணனாயிருந்தான். மகம்மதிய பக்திவைராக்கியமுள்ளவனாகிய அவ்வரசனே தன் மார்க்கவிரோதியாகிய அந்தப் பிராமணன் தன்னோடு சிம்மாசனத்தில் நெருங்கிப்பழக உத்தரவு கொடுத்ததினால் பிர்பாலின் சாமர்த்தியமும் புத்திச்சாதுரியமும் நன்கு விளங்குகின்றது. தவிர, அரண்மனையிலிருந்த சகல மகம்மதியரையும் தன் புத்திச்சாதுரியத்தினாலே வென்றவன் இவன்.

சர்பர் கோத்திரத்தைச்சேர்ந்த இந்த பிர்பால் 1541-ம் வருஷம் பிறந்தான். மிகச் சிறுபோதிலேயே அவன் தாய் தந்தையரை இழந்து அனாதையானான். ஆயினும் இவன் மேன்குணத்தைக் கண்ட லிலிஞ்சர்நாட்டு பண்டிதர் தன் மகளை இவனுக்கு விவாகம் செய்வித்தனன். அதுமுதல் அவன் செல்வ மிகுந்து வாழ்ந்துவந்தான். ஒருநாள் அக்பர் அரசனது வேலைக்காரன் அரசனுக்குத் தாம்பூலம் கொடுத்தபோது சுண்ணாம்பு அதிகமாய் தடவிகொடுக்க, அரசனுக்கு வாய் வெந்துபோயிற்று. இதினால் அரசன் கோபமூண்டு அவ்வேலையாளைக்கடைக்கனுப்பி கால்படி சுண்ணாம்பு வாங்கி வரும்படி கட்டளையிட்டான். வேலைக்காரன் கடையில் சுண்ணாம்பு வாங்குவதைக் கண்ட பிர்பால் என்பவன் அவ்வளவு சுண்ணாம்பு வாங்குவதற்குக் காரணம் என்னவென்று கேட்க, வேலையாள் நடந்தவைகளைச் சொன்னான். அது கேட்ட பிர்பால் அரசன் அந்தச் சுண்ணாம்பு அவனைக் கொல்வதற்காக வாங்கி வரச்சொன்னதாக அவனுக்குச்சொல்லி, அந்தசுண்ணாம்பு அவ்வளவு நெய் வாங்கிக்கொண்டுபோய், சுண்ணாம்பை குடித்த பிறகு நெய்யையும் குடிக்கும்படியாக யோசனை சொன்னான். அப்படியே அரசன் அந்தச் சுண்ணாம்பைத் தண்ணீரில் கரைத்துக் குடிக்கும்படிக்கு அந்த வேலைக்காரனுக்குக் கற்பிக்க அவன் உடனே குடித்துவிட்டு பிறகு நெய்யையும் குடித்துவிட்டான். அவன் யாதொரு சேதமுமில்லாமல் மறுபடியும் ராஜசமுகத்தில் வரவே, அரசன் ஆச்சரியப்பட்டு அவன் சுண்ணாம்பைக் குடித்தும் சாகாமல் பிழைத்திருந்ததெப்படி என்று வினவ, வேலைக்காரன் நடந்தவைகளை அரசனுக்குச் சொன்னான். அது கேட்ட அரசன் பிர்பாலை உடனே வரவழைத்து, அவனைப்பக்ஷமாய் வினவி அதுமுதல் அவனை அரண்மனையிலிருக்கக் கட்டளையிட்டான்.



ஆயினும், அக்பர் அரசன் இயற்கையிலேயே கொடுமையைப் பகைத்தவனாகையால் இக்கதை உண்மையல்ல என்று சில சரித்திரக்காரர் கூறுவர். பிர்பாலது புத்திச்சாதுரியமும், வாத்திய வல்லமையும் நாடெங்கும் பரவக்கேட்ட அரசன் அவனைத் தன் அரண்மனைக்கு அழைப்பித்தான் என்றும் சொல்லுகின்றனர்.

ஒரு சமயத்தில் தன் உத்தியோகஸ்தர் பலர் தங்களில் அதிக புத்திக்கூர்மையுள்ளவன் ஆர் என்று ஒருவரோடொருவர் தர்க்கம் செய்வதைக்கண்ட அரசன் தரையில் ஒரு கோடுவரைந்து அதைக் கொஞ்சமேனும் அழிக்காமல் அதைகுட்டையாக்கச் சொல்ல யாவரும் மதியழிந்து விழித்தனர். உடனே பிர்பால் அக்கோட்டின் பக்கத்தில் அதைவிட நீண்டகோடு வரைய, அரசனும் உத்தியோகஸ்தரும் யோசித்து பின்வரைந்த கோட்டோடு முதல் கோட்டை ஒப்பிடும்போது முதல் கோடு குட்டையாய் இருப்பதால் பிர்பால் செய்தது சரியென்று ஒப்புக்கொண்டார்கள். மற்றொரு சமயத்தில் தான் அரசனுக்கும் அஞ்சாதவனென்பதை மிக்க புத்திச்சாதுரியமாய் சொன்னான். எப்படியெனின், அரசனும் அவனும் அரசமாளிகையின்மேல் நின்றிருக்கும்போது, புகையிலைத் தோட்டத்தில் நின்றிருந்த ஒரு கழுதையை அரசன் அவனுக்குச் சுட்டிக்காட்டி, புகையிலையைக் கழுதைகூட தின்னாது என்றான். பிர்பால் அதிகமாய் புகையிலை உபயோகிப்பவனாதலால் இதனால் அவனுக்கு அவமானம் வரும் என்று எண்ணின அரசனுக்குப் பதிலுத்தரவாக அவன் சிரித்துக்கொண்டு ஆம், கழுதையைப் போன்றவர்களுக்குத்தான் அந்த இலையின் வாசனை தெரியாது என்றான்.

அக்பரின் உத்தியோகஸ்தர் எல்லாரும் பிர்பாலை எப்படியாவது கெடுக்க எண்ணி அரசனிடம் ஒரு நாள் வந்து

பின்வரும் கேள்விகளுக்கு பிர்பால் உத்தரவு சொல்லும்படி கேட்கச்சொன்னார்கள். அவையாவன: பூமியின் மத்தி எது? வானத்திலுள்ள நக்ஷத்திரங்கள் எத்தனை? உலகத்திலுள்ள மனிதரின் தொகையென்ன? அரசன் பிர்பாலை அழைத்து இக்கேள்விகளைக்கேட்க, பிர்பால் தரையில் ஒரு கொம்பை நாட்டி, அக்கொம்பு நிற்கும் இடம்தான் பூமியின் மத்தியென்றும், அது அரசனுக்கு சந்தேகமாயிருந்தால் பூமியைஅளந்துபார்த்துக்கொள்ளலாம் என்றும் சொன்னான். பிறகு ஒரு ஆட்டைக் கொண்டுவரச் சொல்லி அதன்மேல் எத்தனை மயிர் உண்டோ அத்தனை நக்ஷத்திரங்கள் வானத்திலிருக்கின்றன. ராஜாவுக்கு சமயம் இருக்கும்போது எண்ணிக்கொள்ளலாம் என்றான். மூன்றாவதுகேள்விக்குச் சரியான உத்தரவுகொடுப்பது கொஞ்சம் கஷ்டம். ஆயினும் எல்லா மனிதரையும் கொன்றுவிட்டால் அப்போது முழுத்தொகையையும் சொல்லி விடலாம் என்றும் சொன்னான்.

கடைசியாய் நான் கோக்கோ யுத்தத்துக்குப்போனபோது, அபுல் பாஸல், பிர்பால் இருவர்பேரில் அரசன் சீட்டு போட பிர்பால் பேருக்குச்சீட்டுவிழவே பிர்பால் அரசன் சேனையோடு யுத்தத்துக்குப்போகவேண்டியதாயிற்று. சண்டையில் கொல்லப்பட்ட 8,000 போர் வீரரில் பிர்பாலும் கொல்லப்பட்டான். அவன் அக்பரிடத்தில் எவ்வளவு புத்திச் சாதுரியமாய் விளங்கினானோ அதே தீரமாய் அவன் சண்டை செய்திருப்பானென்று எண்ணலாம். தன் அரசனின் சேனையை நடத்தி, சண்டையில் தன் அரசனுக்காக தன் உயிரைக் கொடுத்தக் கோமாளி இவன் ஒருவனே.

## WHAT IS A VILLAGE CO-OPERATIVE SOCIETY.

## கிராமக்கூட்டுச் சகாய சங்கம்.

கிராமக்கூட்டுச் சகாய சங்கமானது என்ன என்று சிலருக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும், மற்றும் சிலருக்குத் தெரியாதிருக்கலாம். இச்சங்கத்தினால் இந்தியருக்குக் கிடைத்திருக்கும் பல்வேறு நன்மைகளுக்கு முக்கிய சாதனமாயிருத்தலின் அதைப்பற்றி அநேகம் அறிந்திருப்பது மிக்க நன்மையேயாம். பின்வரும் வியாசம் யாரும் எளிதில் விளக்கிக்கொள்ளுமாறெழுதப்பட்டிருப்பதால் அதை யாவரும் வாசித்தும் பயன்பெறும்படி இங்கு பிரசுரிக்கிறோம்.

குறைந்த வட்டிக்குப் பணம்கொடுத்து வாங்கும் நோக்கமாய் ஓர் கிராமத்து மனுஷர் சிலர், முக்கியமாய் விவசாயிகள் சேர்ந்த கூட்டமே கிராமக்கூட்டுச் சகாய சங்கமாகும். இச்சங்கத்தில் குறைந்தது பத்து பெயர் இருத்தல் வேண்டும். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆணோ, பெண்ணோ, தனவந்தனோ, ஏழையோ எவரும் யாதொரு பேதமின்றி இச்சங்கத்தில் அவயவமாகலாம். இப்படி ஒன்றுகூடுவதினால் சங்கத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் நன்மைகள் பலவுண்டு. இந்நன்மைகள் சங்கத்தில் அங்கத்தினரெல்லார்க்கும் தனித்தனியே கிடைத்தல் இல்லை. அங்கத்தினர் ஒருவனுக்குப் பணமோ, சொத்தோ ஏது இல்லாவிட்டாலும் அவனுக்கு நல்யோக்கியதையும், வேலைக்கு சாமர்த்தியமுமிருக்குமாயின் அவனுக்குச் சங்கத்தின் ஈடுகிடைக்கிறது. அதாவது சங்கத்தின் அவயவமாயுள்ள ஒவ்வொருவனும் மற்ற ஒவ்வொருவனுக்கும் பிணையாகிறான். அவர்களில் ஒருவன் தன் கடனைக்



கொடுக்கத் தவறினால் கடைசியாக அவனுடைய கடனை மற்ற அங்கத்தினர் யாவரும் கொடுத்துத் தீர்க்கவேண்டியதாகிறது. இப்படிப்பட்ட ஓர் சங்கம் கடன் கேட்கும்போது, கொடுக்கும் கடனுக்கு சங்கத்தின் அவயவங்கள் யாவரும் ஜவாப்தாரிகள் ஆவதால் குறைந்த வட்டிக்கு கடன் கிடைக்கக்கூடும். இப்படிப்பட்ட சங்கங்கள் பலவிருந்தால் முதலுடையோர் வலிய கடன்கொடுக்க விரும்புவர். சென்னையிலுள்ள நகர தாய்நிதிக்குக் கூட்டுச்சகாய சங்கங்களின் ரிஜிஸ்தாரால் சிபாரிசு செய்யப்படும் எந்த சங்கத்துக்கும் மேற்படி நிதியானது வேலைக்கு முதல் கொடுத்துதவ தயாராயிருக்கிறது. ஆயினும் ஒவ்வொரு சங்கமும் அந்தந்த ஊரிலேயே பணம் பெரும்படி பிரயாசப்படவேண்டும். தவிர, இப்படி குறைந்த வட்டிக்குக் கடன்வாங்கி லாபமடைந்த சங்கத்தினர் தாங்கள் மீர்த்து வைக்கும் தொகையிலிருந்தே கடன் கொடுக்கக் கூடியவர்களாகவேண்டும்.

ஒரு சங்கத்துக்குப் பணம் கிடைத்தவுடனே அத்தொகையை மிக்க யோசனையோடும் புத்தியோடும் உபயோகிக்க வேண்டும். பணம் வீண் உபயோகப்படுத்தப்படாதபடி சில ஒழுங்குகள் ஏற்பட்டுள்ளது. முதலாவது: சங்கத்தின்வேலை முழுவதும் அதன் அவயவங்களாலேயே நடத்தப்படவேண்டியது. அவயவங்களல்லாதவர்களுக்கு கடன் கொடுக்கக் கூடாது. சங்கத்தின்வேலை அந்தக் கிராமத்துக்குள்ளேயே நடக்கவேண்டும். அதே கிராமத்தில் நம்பிக்கையுடையவரே மெம்பர்களாகலாம்.

இரண்டாவது: கடன்வாங்கும் ஒவ்வொரு மெம்பரும் தான் பணம் பெறுமுன் கடன்வாங்குவதின் நோக்கத்தைத் தெரிவிக்கவேண்டும். கடன் கொடுக்கலாமோ, எவ்வளவு அவசியமாகவேண்டிய தொகை என்பதை மெம்பர்கள் தீர்மானம் செய்யவேண்டும்.

மூன்றாவது: கேட்டு வாங்கின நோக்கத்துக்காகவே பணத்தைச் செலவிடவேண்டும். அப்படி செய்யத் தவறினால், பணம் நஷ்டமாகாதபடி மெம்பர்கள் அக்கடனைத் திரும்ப செலுத்த உத்தரவு செய்யலாம்.

நான்காவது: கடன்வாங்கும் ஒவ்வொருவனும் சங்கத்தில் வேறு இருவரை தன் கடனுக்கு ஜாமீனாக்கவேண்டும். இந்த ஜாமீன்தாரர் கடன்வாங்கினவன் பணத்தைச் சரியாய் உபயோகிக்கிறானோ என்று கவனிக்கவேண்டும்.

இந்த ஒழுங்குகளினால் இப்படிப்பட்ட சங்கங்களில் பணம் சேதமில்லாமல் காக்கப்படவும், பண நஷ்டமுண்டாகாதிருக்கவும் கூடியதாகிறது.

ஐந்தாவதும், மிக முக்கியமானதுமான ஒழுங்கு எதுவென்றால்: சர்க்கார் உத்தியோகஸ்தரால் சங்கத்தின் கணக்குகள் பரிசோதிக்கப்படுவதுதான்.

சங்கத்தின் நடபடியெல்லாம் சங்கத்தினர் தங்களுக்குள் ஏற்படுத்தும் கம்மிட்டியாராலேயே நடத்தப்படும். இவர்கள் இதைச் சம்பளமில்லாமல் கௌரவ வேலையாக எண்ணிச் செய்வார்கள். இவர்கள் செய்யவேண்டிய வேலை அதிகமாயிராவிட்டாலும், ஒவ்வொருவனும் மாறி மாறி கம்மிட்டியில் வேலைசெய்வது சங்கத்திலிருக்கும் ஒவ்வொருவனுக்கும் நல்லது. கம்மிட்டி மாதந்தோறும் ஒழுங்காய் கூடி வசூலாகவேண்டிய தொகை அட்டியின்றி வசூலாக்கப்படவும், மெம்பர்கள் நிதியில் பணம் கட்டவும், சங்கத்தின் வேலையில் சிரத்தையாயிருக்கவும், சங்கத்தின் வேலை விர்த்திக்கச்செய்யவும்

பிரயாசப்படவேண்டும். இந்த சங்கம் சாதாரணமாய் வருஷத்துக்கு நூற்றுக்கு $7\frac{1}{2}$ வீதம் வட்டிக்கு கடன்வாங்கி சங்கத்தினருக்கு நூற்றுக்கு $9\frac{3}{4}$ வீதம் வட்டிக்கு கடன்கொடுக்கிறது. இந்த வட்டியில் கிடைக்கும் மிச்சத்தைக்கொண்டு சங்கத்தின் சிலவுக்குக் கொடுத்ததுபோக மீதமிருப்பது சங்கத்தின் சேமநிதியாகும். இன்னிதியிலிருந்து எதிர்பாராத நஷ்டங்கள் சரிப்படுத்தப்படும். இச்சேமநிதி முழுச்சங்கத்துக்கும் உரியதேயன்றி தனிதனி மெம்பருக்கு இதில் யாதொரு பாத்தியமுமில்லை. சங்கம் உடையும்காலத்தில் இச்சேமநிதியை சங்கத்தார் செய்யும் தீர்மானப்படி ஏதோ பொதுஜன நன்மைக்கு உபயோகிப்பார்கள்.

இப்படிப்பட்ட கூட்டுச்சங்கங்கள் இத்தேசத்தில் செழிக்கும்படியாக கவர்ன்மெண்டார் சில உதவிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். திருஷ்டாந்தமாக: (1) சங்கத்தின் கணக்குகளைப் பரிசோதிக்கும் சர்க்கார் ரிஜிஸ்தார்களுக்கு யாதொரு சம்பளமும் சங்கம் கொடுக்கவேண்டியதில்லை. (2) சங்கத்தின்பேரால் எழுதப்படும் தஸ்தாவேஜுகளுக்கு முத்திரைக் கடிதம் அவசியமில்லை. (3) இப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்தர்பண்ணுவதற்கு பீஸும் கிடையாது. (4) வெளியூர்களில் வேலைசெய்யும் சங்கங்களுக்கு அந்தந்த ஜில்லா கெஜட்டுகள் செலவின்றி அனுப்பப்படும். இப்பேர்ப்பட்ட சங்கங்களினால் ஜனங்களுக்கு கிடைக்கும் நன்மைகள் அநேகம். வேளாண்மை செய்வோர், சிறு வியாபாரிகள், கைத்தொழிலாளிகள், கூலிவேலை செய்வோரும்கூட இச்சங்கத்தில் சேருவதினால் குறைந்த வட்டிக்குப் பணம் கடன் வாங்கி தாங்கள் வெளியில் கடுவட்டிக்கு வாங்கின கடன்களைத் தீர்த்து சுகமாய் வாழவும் வழியுண்டாகிறது. வேளாண்மைக்காரன் கடன்காரனுக்கு தன் விளைச்சலை அனியாயமாய்க் கட்டிக்கொடுக்கவேண்டிய அவசியமில்லை. தனக்கு லாபம் கிடைக்கக்கூடிய காலத்தில் தானே விற்று, கிடைத்த லாபத்தினால் நல்ல விதை, எரு, கால்நடை முதலியன வாங்கி இப்படியே மேலும்மேலும் முன்னுக்கு வந்து நல்ல ஜீவனம் பண்ணக்கூடியதாகும். ஏழைகள் தங்கள் அவசரத்துக்கு உதவும்படியாக பணம் மீத்துவைக்கவும் கூடியதாகும். ஆகவே சிக்கனம், சுய முயற்சி, சுயாதீனம் முதலிய குணங்கள் உண்டாவதற்கு இச்சங்கங்கள் மிகவும் ஹிதகரமானவை. இக்குணங்களைப்பயிற்சி செய்வதினால் ஒவ்வொருவனும் முன்னுக்கு வரக்கூடும். தவிர உடனொத்து வேலைசெய்வதினால் ஜனசீர் விர்த்தியடையக்கூடியதாகும். இச்சங்கத்தில் சேர்ந்திருப்பவர்கள் தங்களுக்குள் உண்டாகும் வழக்குகளைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ளுகிறபடியால் கச்சேரி செலவும் மீதமாகும். பொதுஜன நன்மைக்கான எண்ணங்களுண்டாகி கிராம பள்ளிக்கூடங்களும் மற்ற நல்ல ஏற்பாடுகளும் ஏற்படுத்துவதற்கு வேண்டிய பொருளுதவிக்கும் வழியுண்டாகும். இதனால் தேசத்துக்கும் சுயாதீனத்துக்கும் நன்மையுண்டாவதுமல்லாமல் ஜனங்களுக்கு நற்குணமும் நல்லொழுக்கமும் உண்டாகும்.

---

## LITTLE STORIES OF BIRDS.
## பக்ஷிகளைப்பற்றிய சிறுகதைகள்.

---

### *WORKING HOURS OF BIRDS.*
### பக்ஷிகள் வேலைசெய்யும் நேரம்.

இயற்கைசாஸ்திர மாணாக்கன் ஒருவன் சொன்னது நாம் வேலைசெய்யும் நேரத்தை பக்ஷிகள் வேலைசெய்யும் நேரத்தோடு ஒத்திட்டுப்பார்த்தால் நம்முடைய வேலைநேரம் மிகக்கொஞ்சம் என்று சொல்லவேண்டும். சிலபக்ஷிகள் கோடைகாலத்தில் நாளொன்றுக்கு 19-மணி நேரம் வேலைசெய்கின்றன. அவைகள் களைப்படையாமல் பூச்சிக்கூட்டங்களை அதமாக்குகின்றன.

த்ரஷ் என்னும் குருவி கோடைகாலத்தில் அதிகாலை $2\frac{1}{2}$-மணிக்கு விழித்துக்கொண்டுவேலைசெய்ய ஆரம்பித்து இரவு $9\frac{1}{2}$-மணிவரைக்கும் ஓரேமுச்சாய் 19-மணிநேரம் வேலைசெய்கிறது. அச்சமயத்தில் பசித்திருக்கும் தன் குஞ்சுகளுக்கு 206-தடவை இரைகொடுக்கிறது. கருங்குருவி த்ரஷ் பக்ஷியைப்போலவே வேலை ஆரம்பித்தாலும் அதற்குமுந்தியே வேலை முடித்துவிடுகிறது. அது இரவு $7\frac{1}{2}$-மணிக்கு வேலைமுடிக்கிறது. இந்த 17-மணி நேரத்தில் அது தன் குஞ்சுகளுக்கு 100-தரம் தீனிகொடுக்கிறது. Tetmainse என்னும் குருவி காலை 3-மணிக்கு எழுந்து வேலை ஆரம்பித்து இரவு 9-மணிக்கு வேலைமுடிக்கிறது. இந்தக்குருவி இந்த 18-மணிநேரத்தில் தன் குஞ்சுகளுக்கு 417-தரம் புழுக்களை விசேஷமாய் ஆகாரமாகக் கொடுக்கிறது.

---

### A MUSIC-LOVING PIGEON.
### வாத்தியப் பிரியமுள்ள புறு.

---

லிகிதர் வீட்டுக்குச் சமீபத்தில் அவர் மனைவிக்கு அருமையான தவிட்டுப்புறு ஒன்று இருந்தது. அதற்கு வாத்தியமென்றால் மிகப்பிரியம். அந்த அம்மாள் கின்னரம்கொட்ட ஆரம்பித்தவுடனே அந்தப்புறு ஜன்னலண்டைவந்து கதவை டக் டக் என்று தட்டி உள்ளே வர உத்தரவுகேட்பதுபோல் நிற்கும். உள்ளே விட்டவுடனே நேரே கின்னரப்பெட்டியண்டைபோய் அந்த அம்மாள் காலண்டை படுத்துக்கொண்டு அவ்வாத்திய தொனியினால் மகிழ்ந்து மெல்லிய குரலாய்க் கூவிக்கொண்டேயிருக்கும்.

---

### THE CROW THAT WENT TO SCHOOL.
### பள்ளிக்கூடத்துக்குப்போன காகம்.

---

கனடா தேசத்தில் பீற்றர் என்னும் ஒருகாகம் இருந்தது. அதை வளர்த்தவன்பெயர் ஸால் ரீலாஸ். பள்ளிக்கூடத்து பிள்ளைகள் எல்லாரும் அதைத் தங்களுடையதாகவே எண்ணினார்கள். அது பலவகுப்புகளுக்கும் போய் பிள்ளைகளிடத்தில் அனேக விஷயங்களைக்கற்றுக்கொண்டது. அக்காகம் ஒரு பள்ளிக்கூடத்துக்கருகில் எப்போதும் காலங்கழித்துவந்ததால், அது அப்பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளிடத்தில் பேசக்கற்றுக்கொண்டது. வரவர அது நன்றாய்ப் பழகி பள்ளிக்கூடத்து ஜன்னலில் உட்கார்ந்துகொண்டு பிள்ளைகளிடத்தில் வீண்பேச்சு பேசிக்கொண்டிருக்கும். இதைக்கண்ட உபாத்தியாயர் அதைத் துரத்துவார். 'வாவா,' 'சீக்கிரம் வா,' 'நேரம் ஆகிறது,' 'நீ சொல்கிறது எனக்கு விளங்கவில்லை,' 'ஆகட்டும்,' "நீ நன்றாய் செய்கிறாய்" இப்படிப்பட்ட பேச்சுகளை அது பிள்ளைகளிடத்தில் கற்றுக்கொண்டது. அது நன்றாய் வாய்விட்டு சிறிப்பதுபோல் சிறிக்கும். சிலசமயங்களில் யாராகிலும் வழியேபோகும்போது மரத்திலிருந்துகொண்டு அவர்களைக் கூப்பிடும். அது கேட்டு அவர்கள் சுற்றுமுற்றுப்பார்த்து ஒருவரையும் காணாமல் ஆச்சரியப்படுவார்கள்.

அந்தகாகம் வேடிக்கையான சேஷ்டைகள் எல்லாம் செய்யும். பிள்ளைகளின் உடுப்புகளைக் கொத்தி இழுக்கும். உடுப்புகளில் குத்தியிருக்கும் ஊசிகளைப்பிடுங்கிவிட்டு சுத்தமான உடுப்புகள் தரையில் விழுந்து அழுக்காகும்படி செய்யும். நட்டுவைத்த கிழங்குகளைப்பிடுங்கி எறிந்துவிடும். சில சமயங்களில் தோட்டங்களில் அதிக சேதத்தை உண்டாக்கிவிடும். அது உண்டாக்குகிற நஷ்டத்தினிமித்தம் அதைத்துரத்தும்போது அது சிறிதுதூரம் பறந்துபோய் "ஓடிவா ஓடிவா" என்றுகூப்பிடும். இன்னும் தூரத்தினால் எட்டாத தூரத்தில்பறந்துபோய் "ஆ, இப்போது ஓடிவா" என்று மனிதனைப்போல் கூப்பிடும். நான் வெளியில் உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருக்கும்போது அது என் தொடையில் வந்து உட்கார்ந்துகொள்ளும். அதன் தலையைத் தடவிக்கொடுத்தால் ஒரு பூனைக்குட்டியைப்போல் படுத்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கும். நான் சிலசமயங்களில் வெளியே உலாவப் போகும்போது அதுவும் என்னோடு என் தலைக்குமேலேயே பறந்து போகும். அந்தகாகம் புத்தியுள்ள பறவையென்பது உண்மை. அதைப்பாராதிருப்பது எனக்கு மிகவிசனமாயிருக்கும். அந்தக் காகம் தன்சின்ன எஜமானியோடுகூட சாப்பிடுகிறபாவனையாக படம் எடுக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு அருமையான காகம்!

---

## CHILDREN'S PAGE.

## சிறுவர்க்கான பக்கங்கள்.

---

### *THE CHILDHOOD OF QUEEN VICTORIA.*

### விக்டோரியா இராணியின் பிள்ளைப் பருவம்.

ஒரு பெருமாட்டி தான் நேசித்த சிறுவருக்கு எழுதியதாவது: நான் ஒருநாள் பகலில் ஒரு நேர்த்தியான சிங்காரவனத்தில் மூன்றுமணி நேரமாக உலாவிக்கொண்டிருந்தேன். அந்த சிங்காரவனத்தில் நெடுந்தூரம் பசும்புல் வளர்ந்து, மரங்கள் பசுமையான இலைகளால் நிறைந்து, வெகு அழகான புஷ்பங்களையுடைய பாத்திகள் நிரம்பி இருந்தன. அது லண்டன் பட்டணத்தில் ஜன சந்தடியான தெருக்களுக்குச் சமீபமாயிருந்தது.

பிறகு அழகான புஷ்பங்கள் நிறைந்துள்ள ஒரு ரம்மியமான தோட்டத்துக்கு வந்தோம். அதற்கப்பால் கென்ஸிங்டன் மாளிகையைப் பார்த்தோம். ராஜ இளங்குமரி வசித்த அந்த மாளிகை கண்ணைக் கவரத்தக்க விசித்திரமாளிகையாயிராமல் சாதாரண பெரியதோர் வீடுபோல் காணப்பட்டது. என்றாலும் உலகெங்கும் கீர்த்திபெற்ற விக்டோரியா ராணி பிறந்த இடம் அதுவே. விக்டோரியா ராணி ஏறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன்னே அதாவது 1819-ம் வருஷம் மேமாதம் 24-ம் தேதி அந்த மாளிகையில் பிறந்தார்கள். அந்த ராணி தன் சிறுவத்தைக்குறித்துத் தானே எழுதிய வைகளை நான் வாசித்திருக்கிறேன்.

அதைப்பற்றி அந்த ராணி ஒரு இடத்தில் எழுதுகிறதாவது: "கென்ஸிங்டன் மாளிகையில் போட்டிருந்த மஞ்சள் நிறமான கம்பளத்தில் நான் ஊர்ந்து விளையாடினதுதான் என் சிறுவத்தைப் பற்றி என் ஞாபகத்திலிருப்பது" என்பதே. இதனால் அந்த ராணிக்கு நல்ல ஞாபகசக்தி இருந்ததென்று விளங்குகிறது. நாம் நடக்க துவக்குமுன் நடந்த காரியங்கள் நம்மில் அநேகருக்கு ஞாபகமிராது. விக்டோரியா ராணிக்குச் சகோதரர் சகோதரிகளில்லை. அவர்கள் மிக அழகும் லக்ஷணமுமாயிருந்தபடியால் எல்லாரும் அவர்களை மிக செல்லமாய்



வளர்த்து போற்றி வந்தார்கள். இளமையிலே பிடிவாதமுள்ள பிள்ளையாயிருந்ததால் வரவர முரட்டுப்பிள்ளையாகி ஒருவருக்கும் அஞ்சாததாகிவிட்டது. இதைப்பற்றி அவர்களே எழுதுகிறதாவது: நான் முரட்டுத்தனம் செய்தபோது, மூன்றாம் ஜார்ஜ் அரசனின் மகனாகிய சஸ்ஸெக்ஸ் என்னும் என் சிறிய தந்தை வந்து என்னைத் தண்டிப்பார் என்று சொன்னார்கள். அதனால் நான் அவரைப் பார்க்கிறபோதெல்லாம் கூச்சலிட்டு அலறுவேன் என்பதே. அன்றியும் அக்காலத்து அத்தியக்ஷர்கள் தலையில் போட்டிருக்கும் போலிமயிர் தொப்பியைப் பார்த்து அவர்கள் பயப்படுவார்களாம். ஒரு அத்தியக்ஷர் அந்தப் பிள்ளையை எப்படியாகிலும் பிரியப்படுத்தலாமென்று எண்ணி அதன் அழகான சப்பாத்துகளைக் கட்டசொன்னதற்குக்கூட அது மாட்டேன் என்றுவிட்டது. ஆயினும் ஸாலிஸ்பரி அத்தியக்ஷர் பிள்ளைகளின் குணத்தை நன்குணர்ந்தவராதலின் அவர் பிள்ளையின் பக்கத்தில் முழங்காலிலிருந்து தான் போட்டிருந்த உடுப்பிலிருந்த ஆபரணங்களைப் பிடித்து அந்தப்பிள்ளை விளையாடும்படி விட்டதினால் அதைப் பிரியப்படுத்தக்கூடியவரானார்.

இவ்விளவாசி இங்கிலாந்தின் சிம்மாசனத்துக்குச் சுதந்தரவாளியல்லாதிருந்தும் சிம்மாசனத்துக்கு வரவேண்டிய அவரது தாயாதிகள் பலரும் இறந்துவிட்டமைபற்றி அவரே ஒருவேளை அரசியாகலாம் என எண்ண இடமுண்டாயிற்று. அறிவும் புத்தியும் மிகுந்த அவரது தாயார் அவரை நல்வளர்ப்பில் வளர்க்கப் பிரயாசப்பட்டனர். அவரது தாதிகளில் ஒருத்தி அவருக்கு எழுத்துகளைக் கற்றுக்கொடுத்தபோது அதைப் படிக்காமல் இருந்துவிட்டார். அவருக்கு ஐந்து வயதானபோது புத்திக்கூர்மையும் சாமர்த்தியமும் வாய்ந்த ஒரு ஆசாளின் விசாரணையில் வைக்கப்பட்டு அவளுடைய சாமர்த்தியத்தினால் அங்கில நெடுங்கணக்கை வெகு சீக்கிரம் கற்றுக்கொண்டார்கள். இந்த ஆசாளைப்பற்றி இராணி பிற்காலத்தில் "அவள் மிக பக்ஷமுள்ளவளாயிருந்தாலும் என்னைத் தனக்கு எவ்விதத்திலும் கீழ்ப்படித்திக்கொண்டதால் எனக்கு அவளைப்பற்றி போதுமான மதிப்பு இருந்தது" என்று எழுதினார். நமது இளவரசி இந்த ஆசாளிடத்தில் படித்துக்கொண்டதும் எப்போதும் தன் ஞாபகத்திலிருந்ததுமான முதல்பாடம் என்னவென்றால்: தனக்குக் கீழானவர்களிடத்தில், தன் வேலைக்காரியிடத்தில் கூட முரட்டுத்தனத்தைக் காண்பித்து கோபப்படுத்தினால் அவர்களிடத்தில் அதற்காக மன்னிப்பு கேட்கவேண்டுமென்பதே. இதைப்பற்றி அவர், "யாராகிலும் வார்த்தையினாலாவது செய்கையினாலாவது யாருக்காவது விசேஷமாய் தனக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு வருத்தத்தை உண்டாக்கினால், அவர்கள் தன் தப்பிதத்தை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று எழுதுகிறார்.

இந்த புத்திமொழியைத் தானே அப்பியாசித்ததுமல்லாமல் பிற்காலத்தில் தன் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்தார். இவர் இளவரசியாயிருந்தும் தற்காலத்திலுள்ள இவரைவிட கீழ்தரமான பிள்ளைகளைப் பார்க்கிலும் மிக அமைதலும் டம்பமில்லாமலும் ஜீவனம் செய்தார். இவர் படிக்கவேண்டிய பாடங்கள் அநேகம். கிடைத்த விடுமுறை நாட்களோ கொஞ்சம். பெரியவராகும்வரைக்கும் இவருக்குத் தனியான சயனவறையில்லாமல் தாயாருடைய அறையிலேயே நித்திரை செய்வார். சுகத்துக்காக அவர்கள்

போகும் இடங்களில் உட்கார்ந்து தன் பாடங்களைப் படிப்பதற்குத் தனக்குச் சொந்த அறை இல்லாமல் தன் ஆசாளின் படுக்கை அறையிலேயே உட்கார்ந்து படிப்பார்.

அவரது உணவும் மிகச்சாதாரணமானது. காலை $8\frac{1}{2}$-மணிக்கு காலைச்சாப்பாடும், பகல் $1\frac{1}{2}$-மணிக்குப் பகல்சாப்பாடும், இரவு 7-மணிக்கு இராச்சாப்பாடும்தான் அவரது வழக்கபோஜனம். இராச்சாப்பாட்டில் அவருக்கு ரொட்டியும் பாலும் தான் ஒரு வெள்ளிப்பாத்திரத்தில் கொடுக்கப்பட்டது. இளவரசி வளர்ந்து இராசாத்தியானபோது அதிக சாமர்த்திய முள்ளவர்களாயிருந்தார்கள்.

---

THEY DID NOT LOVE ENOUGH.

## அவர்கள் போதுமான அளவு நேசித்ததில்லை.

பர்மாவிலுள்ள ஒரு மிஷனரி ஒரு நாள் ஒரு கிராமத்திலுள்ளவர்களுக்கு நாம் பிறத்தியாரை நம்மைப்போல் நேசிக்கவேண்டுமென்றும், அப்படி நமது ஜீவியத்தில் சிநேகம் ஆளுகைசெய்யுமானால் அது எல்லா சண்டைகளையும், கொலைகள், திருட்டு, கொள்ளை, மோசம், வஞ்சகம், பொய் முதலிய எல்லாவிதமான தீமைகளையும் நீக்கிவிடும் என்று சொல்லி பிரசங்கித்தார். அன்று பிற்பகலில் தன் சாப்பாட்டுக்காக சில முட்டைகள் வாங்கும்படி பிரயாசப்பட்டும் கிடைக்கவில்லை. ஏனெனில் அங்கே யாரும் கோழிகள் வளர்த்ததில்லை. கடைசியாய் அந்த மிஷனரி அம்மாள் அங்கிருந்த ஒரு ஸ்திரீயிடத்தில் வந்து இந்த ஊரில் ஒருவரும் ஏன் கோழிவளர்க்கிறதில்லை என்று கேட்க, அந்த ஸ்திரீ சற்று நேரம் யோசித்துப்பிறகு, “அம்மா, போதகரே, நாங்கள் ஒருவரை ஒருவர் போதுமானபடி நேசிக்கிறதில்லை. நாங்கள் ஒருவரை ஒருவர் நேசித்தால் கோழி வளர்க்கிறவர்களுக்கே அதன் அதனால் வரும் ஊதியமும் சேரவேணும். ஆனால் இப்போதிருக்கிறபடி பார்த்தால், கோழியை ஒருவள் வளர்க்க, அதன் முட்டையையும் குஞ்சுகளையும் வேறொருவள் சாப்பிடுகிறாள். அதனால் நாங்கள் மனம் வேசாறிப்போய் கோழி வளர்க்கிறதில்லை” என்றாள். அந்த அம்மாளோ அதைமறுத்து, இந்த ஊர் ஜனங்கள் கோழி வளர்ப்பதினால் லாபம் கிடைக்கத்தக்கவாறு போதுமான அளவு ஒருவரை ஒருவர் நேசிக்கிறதில்லை என்று பதில் கூறினார்.

---

SOME WISE SAYINGS:

## புத்திமதியான வசனங்கள்.

காப்டன் ஸ்காட் என்பவர் தைரியசாலி, ஞானி. அவர் தென் துருவத்தைக் கண்டுபிடிக்கப் போனபோது, புசலில் அகப்பட்டு, ஒன்றும் விளையாத மிகக் குளிர்ச்சியான இடத்தை யடைந்து, புசிக்க ஒன்றுமில்லாமல் கஷ்டப்பட்டு அவரும் அவரோடிருந்தவர்களும் மாண்டு போனார்கள். அவர் தினக்குறிப்புப் புஸ்தகம் ஒன்று வைத்திருந்தார். அதில் அவர் கடைசியாய் எழுதினவைகளில் ஒன்று ஆங்கிலேயருடைய மனதை அசைக்கத்தக்கதாயிருந்தது. இந்தக்குறிப்புகளையெல்லாம் அவர் ஒரே புஸ்தகத்தில் எழுதாமல், தனக்கு அப்போதப்போது தோன்றும் நல்ல வசனங்களை ஒவ்வொரு வெறும்புஸ்தகத்தின் ஆரம்பத்தில் எழுதுவார். அவற்றுள் சிலவற்றை பின் பிரசுரிக்கின்றோம்:



“உன்னைப் பெரியவனாக எண்ணிக் கொள்ளத் தடையில்லை, ஆயினும் மற்றவர்களை சிறியவர்களாக எண்ணாதே.”

“ஒவ்வொருவனுடைய வேலையையும் அறிந்தவன் தன் சொந்தவேலையை நன்றாய் அறிந்தவனல்ல.”

“நீ அநியாயத்தைச் சகிக்கும்போது, தீமைசெய்கிறவனாய்க் காணப்படாதே; அதிக நல்லவனாகவும் காணப்படாதே.”

ஒருவனும் அதிக நல்லவனாயிருக்க முடியாது. அதிக நல்லவனைப்போல் காணப்படக்கூடும்.”

---

WHOM TO TELL.

## “யாருக்குச் சொல்வது”

புத்தியும் பக்தியுமுள்ள ஸ்காட்டிஷ் குரு ஒருவரிடத்தில் அவர் சபையான் ஒருவன்வந்து வேறொரு சபையான்செய்த குற்றத்தைச் சொல்லவிரும்பினான். அப்போது அந்தபோதகர் அச்சங்கதி உன்னையல்லாமல் வேறுயாருக்காவது தெரியுமோ என்று கேட்க, அவன் இல்லை என்றான். வேறு யாருக்காகிலும் நீ இதைச் சொன்னாயோ என்று போதகர் கேட்க அதற்கும் இல்லை என்றான். அப்போது அந்த நல்லபோதகர் அப்படியானால் நீ வீட்டுக்குப்போய் அந்த காரியத்தை இயேசுவின் பாதத்தண்டை மறைத்துவை. அந்த மனிதனிடத்திலேயே நீ அதைப் பற்றி பேச தேவன் உன்னை நடத்தினாலொழிய நீ இனி அதைப்பற்றி ஒருபோதும் பேசாதே. தமது சபைக்கு அவகீர்த்தி வரப்பண்ண ஆண்டவருக்குச் சித்தமானால், அவரே அதைச்செய்யட்டும். நீயோ அதற்கு எத்தனமாயிராதே என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.

SPIRITUAL GROWTH.

## ஞான வளர்த்தி.

இயேசு, நீங்கள் பிழைத்திருப்பதற்கும், இன்னும் அதிகமாய் நீங்கள் ஜீவன் பெற்றிருப்பதற்குமாக நான் வந்தேன் என்று சொன்னார்.

நல்ல நிலத்திலும் தகுந்த பருவகாலத்திலும் நாட்டப்பட்டு போதுமான வெயிலும் ஆகாயமும்பெற்று வருகிற செடியானது நன்றாய் வளரும் என்றாலும், ஆண்டவர் அளவின்றி கொடுக்கச் சித்தமான எல்லாநன்மைகளையும் பெற்றுக்கொள்ள ஆசிக்கிறவனைப்போல் அவ்வளவு பூரணமாய் அந்தச் செடி வளராது. ஏனெனில், சகல நன்மைக்கும் ஊற்றும் காரணருமாகிய ஆண்டவர், தம்மில் பங்குபெற ஆசிக்கிறவனுக்குத் தம்மைக் கொடுக்கிறதில் பாதி நிச்சயத்தோடு முதலாய் முளைக்கிற முளைக்குச் சூரியன் தன் கதிர்களைக் கொடுக்கிறதில்லை.

---

GOOD WORDS.

## நன்மொழிகள்.

விசுவாசம், அறிக்கை, போதனை இவற்றின் சரியான ரூபகாரம் அவற்றினின்று பிறக்கும் ஜீவியமும் சாதனையுமே. நன்மையாக்கும் வார்த்தைக்குச் சக்தியும் உண்டு.

சுயவெறுப்பைப்போதித்து அதை சந்தோஷமாய் அப்பியாசிக்கச் செய்தால் நீ உலகத்துக்குக் கனவிலும் காணாத மேன்மையை உண்டாக்குவாய்.

விளைச்சலின் சட்டமாவது, விதைத்ததுக்கு அதிகமாக அறுப்பது. செய்கை வழக்கமாகும், வழக்கம் நடக்கையாகும், நடக்கை முடிவான பலனாகும்.

சந்தோஷமாயிருந்திருக்கிறதினால் மனிதர் சந்தோஷப்படுகிறார்கள். இப்போது அவர்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்கினால் இன்னும் இருபது வருஷம் கழித்து சந்தோஷப்படுவார்கள், “ஐயா! மனிதன் தன் சிநேகத்தை இடைவிடாது தொடர்ந்து அப்பியாசிக்க வேண்டும்” என்று சர் யோசுவா ரெயினால்டல் என்பவர் ஒருதரம் சாமுவேல் ஜான்சன் என்பவருக்குச் சொன்னார்.

---

## WHAT THE CZAR COULD NOT DO?

## ஸார் சக்கரவர்த்தியால் முடியாத விஷயம்.

ருஷிய சக்கரவர்த்தி வலிமைமிக்கவோர் அரசன். தன் பிரஜைகளில் ஒருவனுக்குப் பின்னால் சொல்லப்படும் விஷயத்தைச் செய்யக் கற்பிப்பாரானால், அக்கட்டளைக்கு விரோதமாய்ச் செய்யக்கூடாதென்னும் பயம் காரணமாகவே அவர் கற்பித்தவாறு செய்வான். ஆயினும் இதைவிட பெரியதோர் பலம் உண்டு. அது, மனிதர் தன்னை நேசிக்கச் செய்வதினால் வரும் சன்மார்க்க சக்தியே. அதினால் அவர்கள் தனக்காக அநேகம் காரியங்களைச் செய்யவும், தன் அதிகாரத்துக்குட்பட்டவர்களைத் தான் நம்பவும் சாத்தியமாகின்றது.

ஸார் சக்கரவர்த்திக்குள்ள அப்பேர்பட்ட அதிகாரம் தென்மார்க் அரசனுக்கில்லை. அப்படியே இருந்தாலும், ஸார் சக்கரவர்த்தி சில சமயங்களில் கையாடினதுபோல் அவர் அதை உபயோகித்திருப்பாரோ என்பதும் சந்தேகமே. (ஸார் என்பது ருஷிய சக்கரவர்த்திகளுக்குப் பரம்பரையாயுள்ள ஓர் பட்டம்). ஸார் சக்கரவர்த்தி கற்பித்ததைப்போன்ற ஒரு விஷயத்தை தென்மார்க் அரசன் தன் குடிகளில் எவனையும் ஒருபோதும் செய்யச் சொல்லியிருக்கவுமாட்டார். அப்படிப்பட்ட கட்டளைக்கு அவன் கீழ்ப்படியவேண்டுமென்று எதிர்பார்த்திருக்கவுமாட்டார். ஆயினும் அவர் தன் பிரஜைகளால் நேசிக்கப்பட்டார் என்பது பின்வரும் விஷயத்தால் புலப்படும். ருஷிய சக்கரவர்த்தி தென்மார்க் ராஜாவை சந்தித்து, அவ்விருவரும் பிரதான நகரமாகிய கோப்பனேஹகனைச்சுற்றிப் பவனிவரும் ஒருநாள், அரசன் சக்கரவர்த்திக்கு உயர்ந்ததோர் கோரியைச் சுட்டிக்காட்ட, சக்கரவர்த்தி அரசனைப் பார்த்து, உமது குடிகளின்மேல் உமக்கிருக்கும் அதிகாரம் எவ்வளவு? உமது குடிகளிலெல்லாம்மிக்க எளியவனை அக்கோரியின் உச்சிக்கு ஏறி அங்கிருந்து குதிக்கச் செய்ய உம்மால் முடியுமா என்றார். அதற்கு அரசன், என்னால் முடியாது. என்றாலும் அந்த எளியவனால் நான் விருந்துக் கழைக்கப்பட்டு அவனது குடிசையில் சுகநித்திரைசெய்ய என்னால் கூடும் என்று பதிலுரைத்தார். சக்கரவர்த்தியோ, இத்தகைய காரியம் தனக்குச் சாத்தியமல்லவென்றறிந்து மவுனமாயிருந்தனர். அன்பு அதிகாரத்திலும் வலிது வலிதே.

தேவன் உலக அரசரெவரினும் வல்லமையுடையரானமைபற்றி நாம் அவரில் அன்புகூர்வதொழிந்து, அவர் நம்மை நேசித்த காரணமாக அவரில் அன்புகூருகிறோம்.

Vol. XXVIII. Registered No. M. 209 No. 5

65

NOVEMBER, 1914

OFFICE OF THE …IRTRA… 15 J… 191…

# மாதர் மித்திரி.

# Tamil Woman's Friend

"MATHAR MITHIRI"





PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

## மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு, கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

## THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.


## பொருள் அடக்கம்.


| | |
|---|---|
| | பக்கம். |
| கீர்த்தனை .... .... .... .... .... | 67 |
| ஞானமான வார்த்தைகளும் பெரிய நினைவுகளும் .... .... | 68 |
| உன் பிள்ளை உன்னை கவனிக்கிறது ... .... .... | 69 |
| கடிதம் எழுதுவதைக் குறித்து .... .... .... .... | 69 |
| தன்னைத்தானே சார்ந்திருத்தல் .... .... .... .... | 71 |
| ஒரு சுண்டெலியின் சாமர்த்தியம் .... .... .... | 73 |
| உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ .... .... .... | 73 |
| ஜெர்மென் சக்ரவர்த்தியும் மதுவிலக்கும் .... .... .... | 74 |
| ஜோனாஸ் ஹான்வேயினுடைய சாமர்த்தியம் .... .... .... | 74 |
| பிரதிதினமும் சொல்லவேண்டிய மாத ஜெபம் .... .... .... | 76 |
| நீ செய்யாதுவிட்ட கடமைகள் .... .... .... .... | 76 |
| ஜோன்ஸ் பாதிரியார் கண்ட தரிசனம் .... .... .... | 77 |



# மாதர் மித்திரி.

புத். ௨௮. ௧௯௧௪ ௵ - நவம்பர் ௴. இல. ௫.



OF THE REGISTRAR O...
15 JAN 1915


### REWARDS.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

**பல்லவி.**

வருவார் கிறிஸ்தேசு நாதர்தான்; அன்று
தருவார் அவரவர் பலன்தான் மெய்யாய்.

**அநுபல்லவி.**

குருவாய், ரட்சிப்பின் அதிபதியாய்,—யூதக்
கோத்திர மனுச் சக்கரவர்த்தியாய், மெய்யாய்— வரு

**சரணங்கள்.**

பொய்யில்லை; அதி சீக்கிரத்தில்தான்,—அவர்
புண்ணியர் மறுரூபமாகத்தான்,
தாய்யோரெழும்பி யொன்றாய்ச் சேரத்தான், உலகின்
துர்ச்சனரின் கண்களுங் காணத்தான், மெய்யாய்— வரு

ஜெயங்கொள்ளுந் தாசனைக் கண்டெடுக்க,—தமது
சிம்மாசனம் அவனுக்குக் கொடுக்க,
பயங்கொள்ள உலகைக் கோலாலொடுக்க, தமது
பாதரட்சை அவன் காலில் தொடுக்க, மெய்யாய்— வரு

உலகமுழுது மொன்றாயாள,—சபை
யொரு மங்கையாய்க் கூடி வாழ,
அலகை நரகில் வீழ்ந்து மாள, மூவுல
கனைத்தும் வணங்கியடி தொழவே, மெய்யாய்— வரு

பசிதாகம், துக்கம் பறந்தோட,—வென்ற
பரிசுத்தர் புதுப்பாட்டுப் பாட,
வசித்த துட்டர் நரகில் வாட, இங்கே
வறுமைப் பட்டோர் சுகங்கொண்டாட, மெய்யாய்— வரு

## WISE WORDS AND GREAT THOUGHTS.
## ஞானமான வார்த்தைகளும் பெரிய நினைவுகளும்.

இயல்பாகவே தீமையானதும், தீய எண்ணத்தோடு செய்யப்படுகிறதுமான வேலைகளைத்தவிர மற்றெல்லா வேலைகளும் மிகப்பரிசுத்தமுள்ளதாகவே இருக்கவேண்டுமென்பது தெய்வதீர்மானம். எந்தெந்த தொழிலினால் தேவனுக்கு ஊழியமும், மகிமையும் உண்டாகுமோ அத்தொழில் பரிசுத்தமானதுதான். நமதுதொழில் ஒவ்வொன்றும், ஒரு கிறிஸ்தவன், இன்னொருவனுக்கு பிரயோஜனமாயிருக்கத்தக்கதாக தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வழியாம். அவ்வேலை ஒருவேளை தையல் வேலை, கப்பல் வேலை, பாங்கில் வேலை, காலேஜ் வேலை அல்லது ராஜாதிபத்தியம் இதில் ஏதொன்றாகவாவது இருந்தாலும் முன்சொன்ன சத்தியம் எல்லாவற்றிலும் விளங்கும். வேலை செய்வதற்கு வேண்டிய சகவாசத்தை கர்த்தர் காண்பித்துத் தரும்போது அவ்வேலை மெய்யாகவே பரிசுத்தமாயிருக்கும். ஒரு வேலையை அவருக்காக உண்மையாய் நாம் செய்யும்போது, அது பரிசுத்தமாகும். இச்சத்தியம் எல்லாராலும் அறியப்பட்டது என்றாலும் அது நடந்தேறும் விதம் சிலவேளை நமது நடக்கையில் அனேக தவறுதல்களுக்கும், புதுப்புது விபரீதகொள்கைகளுக்கும் காரணமாய்த் தவறுவதுண்டு. நமது ஜீவியத்தில் கிறிஸ்துவை திருஷ்டாந்தப் படுத்த வேண்டுமானால், எப்போதும் அவர் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை நினைத்து, உண்மையாயும் செம்மையாயும் செய்வதுதான் அவருக்கு பிரியமான பக்தியுள்ள வேலை.

நாம் இனிமேல் செய்யக்கூடிய எல்லாவற்றையும் விட, நாம் இப்போது இருக்கிறோமே அதுவே மிகுந்த வல்லமையுள்ளது.

ஜீவியத்தைப் பிரஸ்தாபப்படுத்துவது நமது நினைவும், நமது தொழிலுமே. இவைகளுக்குள் மறைந்திருக்கும் ஜீவியத்தின் சுபாவத்தினால்தான், நமது குணமும், பெறுமதியும் தீர்மானமாக்கப்படுகிறது.

நமது ஜீவிய நோக்கங்கள் நட்சத்திரங்களைப்போலிருக்கின்றன. அவைகளை நமது கைகளினால் தொடுவதினால் மாத்திரம் நாம் ஜெயமடைவதில்லை. மகா ஏராளமான ஜலத்தில் பிரயாணம்போகும் கடலோடியைப்போல் அவைகளை நம்முடைய வழிகாட்டிகளாக்கிக்கொண்டு, அவைகளைப் பின்சென்றால், நாம் நினைத்தகாரியம் முற்றுப்பெறும்.

வேலைசெய்யக் கட்டாயப்படுத்தப்பட்டு அவ்வேலையை உன்னாலியன்றமட்டும் நேர்த்தியாய்ச் செய்தால், அது எத்தனையோ நூற்றுக்கணக்கான நற்குணங்களை நமக்குள் பிறப்பிக்கும். சோம்பேறிகளுக்கோ ஒருபோதும் நன்மை வரப்போகிறதில்லை.

ஒரு மனிதன் எந்த நாளிலாகிலும்; தான் செய்த வேலையைக்குறித்தாவது, தான் நடத்திவரும் ஜீவியத்தைக்குறித்தாவது, தான் எண்ணும் நினைவுகளைக் குறித்தாவது பூரண திருப்தியடைந்திருப்பானானால், அவனுக்கு ஐயோ! ஏனென்றால் அவனுடைய ஆத்துமாவின் கதவில் எப்போதும் தான் தேவனுடைய பிள்ளையாக உண்டாக்கப்பட்டபடியினால் இன்னமும் இதைவிட பெரிய காரியங்களை நான் செய்யவேண்டும் என்ற ஆசை அடித்துக்கொண்டேயிருக்கிறது.



எந்த சிறிய வேலையையும் நாம் குறைவின்றிச் செய்தால், பூரணமாய் வேலை செய்யும் வழக்கத்தைப் படித்துக்கொள்வோம். நமது ஜீவியத்தில் ஏகதேசம் எல்லாம் அவ்விதமாய்ச் செய்யவேண்டியதுதான். பெரிய சிற்பாசாரி தான் தொடுவதையெல்லாம் முற்றுமுடியச் செய்கிறான். அத்தொழிலாளியை மிக நேர்த்தியாய் கவலையோடு அவ்வேலையைச் செய்ய ஏவிவிடுவது தேவன் தன் வேலையைப் பார்க்கிறார் என்கிற உணர்வுதான். தேவனுக்குப் பிரியமானது, அவருடைய கிரியைகள் அறிவிக்கிறபடியே பூரணமாக எல்லாவற்றையும் குறைவின்றிச் செய்வதுதான். நம்முடைய கண்களால் காணக்கூடாததும், பூதக்கண்ணாடியினால் மாத்திரம் காணக்கூடியதுமான மிகச்சிறிய பொருளையும் நாம் உற்றுநோக்கினால் அதில் ஒருகுறைவும், மாசும் இருக்கிறதை நாம் காணமுடியாதது அத்தனை ஆச்சர்யமாயிருக்கும்.

## YOUR CHILD IS WATCHING YOU.
## உன் பிள்ளை உன்னை கவனிக்கிறது.

ஒரு பிள்ளை கற்றுக்கொள்வது எப்படி? இக்கேள்விக்கு உத்தரம் கூறுவது வருத்தமன்று. தாயினுடைய கண்களில் பிரகாசிக்கிற ஒளியானது அவள் குணத்தைக் காண்பிக்கிறதில் ஒன்று. ஆகையால் அது பிள்ளைக்கு அருளைக் காண்பிக்கும். தாயினுடைய புருவம் கோபமில்லாதிருக்கையில் அவ்வருளைக்காணலாம். அவளுடைய உதடுகளிலிருந்து இன்பமான மெல்லிய வார்த்தைகள் வரும்போது அருளைக்காணலாம். கோபமான கடுஞ்சொற்கள் புறப்படுகையில் பிள்ளை நடுங்குகிறதைக் காணலாம். மற்றவர்களிடமிருந்து அவள் அறிவைச் சம்பாதித்து தன் பிள்ளைக்கு அதைப் புகட்டுகையில் அதைக் காணலாம். அவளுடைய இருதயம் தயாளசிந்தையுள்ளதானால், மற்றவர்களுடைய நடபடிகளை அவள் உற்றுநோக்குகையில் காண்பிக்கும் தாக்ஷிண்யத்தை பிள்ளை கவனிக்கிறது. தன்னோடு சம்பந்தப்படுபவர்களுக்கு அவள் செய்வதை மெய்யாகவே பிள்ளை கவனித்துக்கொண்டே இருக்கிறது, அதற்குச் சந்தேகமே இல்லை. ஆகையால் தாயினுடைய கடமை என்ன? தன் பிள்ளையை கேவலத்தினின்றும், அற்பத்தனத்தினின்றும், பெருந்தன்மைக்கும், மேன்மையான எண்ணங்களுக்கும் எழுப்பிவிடத்தக்கதான ஜீவியமும், பேச்சும் காண்பித்து, சந்தேகமின்றி தன் குழந்தைக்கு நல்ல சுதந்தரத்தை சேர்த்துவைக்கிறதே தாயின் கடமையாம்.

## ABOUT WRITING LETTERS.
## கடிதம் எழுதுவதைக் குறித்து.

நாம் எல்லாரும் இப்போது எழுதக்கூடும். கடுதாசி சுலபமாய்க் கிடைக்கும். பேனாக்களும் மையும் எவ்விடத்திலும் கிடைக்கும். அதிக விலையுள்ள பவுன்டன் பேனாக்கள் (Fountain pens) முதலாய் ஆபிசுகளிலும், பள்ளிக்கூடங்களிலும், வயல்வெளிகளிலிருக்கும் சமுசாரி வீடுகளிலுங்கூட பிரவேசிக்கத் தொடங்கிவிட்டன. முற்காலத்திலோ அப்படியில்லை. ஒரு அமெரிக்கா நூலாசிரியர் கொஞ்சநாட்களுக்கு முன்னே, தன் இளம்பிராயத்தில் நடந்தவற்றிற்கும், இப்போது நடக்கிறவைகளுக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறித்து எழுதுவதில்,

தபால் ஆபீசுகளில் பண்ணியிருக்கும் ஒழுங்குகளைக்குறித்து மிக மேன்மையாய்ச் சொல்லியிருக்கிறார்.

அவர் சொல்லுகிறதாவது:—"அக்காலத்தில் பெரிய பூல்ஸ்-காப் (Fools cap) கடுதாசிகளை மடித்து, அவைகளில் எழுதி பெரிய முத்திரை வில்லைகளாலும் அல்லது சூடாக்கப்பட்ட அரக்கு மெழுக்கினாலும் அவைகளை ஒட்டி அனுப்பவேண்டியதிருந்தது. அவைகளின் தபாற்கூலி சிறிது தூரத்திற்கு 3 அணாவும், 30-மைலுக்கு மேலானால் 5 அணாவும், 80-மைலுக்கு மேலானால் 6 அணாவும், 150-மைலுக்கு மேலானால் 9 அணாவும், 400-மைலுக்கு மேலானால் 12 அணாவும் கொடுக்கவேண்டும். கடிதம் இரண்டு துண்டுகளாயிருந்தால், தபாற்கூலி இரட்டிப்பாகும். மூன்று துண்டுகளாயிருந்தால், மூன்றுமடங்காகும். இதே வீதம் எல்லாவற்றிற்கும். இப்பொழுதோ ஐக்யமாகாண முழுவதும் 3000, 5000, 10000-மைல் தூரத்திற்கும், கனடாவுக்கும், மக்சிக்கோவுக்கும் 2 சதம் தபாற்கூலியில் ஒருவன் மற்றொருவனுக்குக் கடிதம் அனுப்பலாம். பூமியின் மற்றப் பாகங்களுக்கும் 5 சதத்துக்கு அனுப்பலாம். 2 சதம்=4 பைசா, 5 சதம்= 10 பைசாவுக்குச் சரி.

நமது இந்து தேசத்தில் ஒரு காலணா போஸ்ற் கார்ட், கல்குத்தாவிலிருந்தும் அல்லது தூத்துக்குடியிலிருந்தும் ஏடனுக்கு எத்தனையோ மைல் தூரமாயிருந்தாலும் போகும். அதினால்தான் ஏகதேசம் எல்லாருக்கும் கடிதங்கள் வருகின்றன, சிலருக்கு அதிகம் வருகின்றன. ஆகையால் இந்தியாவில் கடுதாசி எழுதுகிறவர்கள் கவனிக்கும்படியாக சில குறிப்புகள் எழுதுவது நலம் என்றெண்ணுகிறேன்."

முதலாவது—உனக்கு என்ன வேண்டுமென்றும், நீ யாரென்றும், உன் இருப்பிடம் எதுவென்றும் எழுதுகிற உனக்கு நன்றாய்த் தெரியும்; ஆனால் நீ எழுதப்போகிறவர்களுக்கோ இதொன்றும் தெரியாது. அவர்கள் உன் கடிதத்தின் மூலமாய்த்தான் இவைகளை அறியவேண்டும். ஆகையால் சாதாரணமான ஒரு கடுதாசியில் நாம் முதலாவது கவனிக்கவேண்டியது தெளிவான விஷயங்களை எழுதுதல். நீ எழுதப்போகிற விஷயங்கள் என்னவென்று நீ எழுத ஆரம்பிக்குமுன் நன்றாய் நினைத்துப்பார். அப்புறம் அவைகளை ஒழுங்குபடுத்தி உன் மனதில் தெளிவாய் வைத்துக்கொள்.

இரண்டாவது— சுத்தமாய் எழுதுதல். இதுவும் அதிக முக்கியமான விஷயந்தான். ஏனெனில் எவ்வளவு திட்டமான தெளிவான விஷயங்களை எழுதினாலும், அவைகளை வாசிக்க முடியாதிருந்தால் நாம் எழுதுவதில் ஒரு பிரயோஜனமுமில்லை. இதை எழுதினவர் சொல்லுகிறதாவது: "கிறுக்கி எழுதப்பட்ட சில கடிதங்கள் என்னண்டை வருவதுண்டு. அதை எழுதுபவர்களுடைய எண்ணம் யாதெனில் தாங்கள் அதிகம் படித்தவர்களென்றும், இங்கிலீஷ் பாஷையிலதிகம் பழகினவர்களென்றும் மற்றவர்கள் நினைக்கவேண்டுமென்றே." ஆனால் அதற்கு சுத்த எதிராக அக்கடிதத்தை நாம் மகா கஷ்டத்தோடுதான் வாசிக்க முடியும். ஆட்களுடைய பெயரையும், இடங்களின் பெயரையும் மிகத் தெளிவாய் எழுதவேண்டும். ஏனென்றால் வேறெந்த வகையாலும் வாசிக்க அறியாத விதமாய் எழுதப்பட்ட பெயர்களை வாசிக்கவே முடியாது. கேவலமாய் எழுதப்பட்ட கடிதத்தை வாசிக்கும்போது எரிச்சல் உண்டாகும்.



எழுதினவரைக் குறித்து கேவலமான எண்ணம் உண்டாகும். உடனே வாசிக்க முதலாய் இஷ்டமிராது. முழுவதும் வாசித்து முடிக்கவும் இஷ்டமிராது. சில சமயங்களில் அவ்விதமான கடிதங்களை சிலர் வாசிக்கவே மாட்டார்கள். அந்த விதமாய் கடிதங்களை ஆத்திரமாய் கிறுக்கி எழுதுவதினால் இப்பேர்ப்பட்ட அனாவசியமான தொந்தரவுகளை உண்டாக்குவது அந்தக் கடிதம் எழுதுகிறவன் பண்ணும் ஓர் பெரிய தப்பிதமாம்.

மூன்றாவது—உன் கடிதத்தில் வலது பக்கத்தின் தலைப்பில் விலாசத்தின் கீழ் எழுதவேண்டிய தேதியை கவலையாயும், தெளிவாயும் எழுது. தேதி என்று சொல்லும்போது கடிதம் எழுதுகிற தினம். அதை மறந்துவிட்டால், அதிக தொந்தரவு உண்டாகும். தேதி என்பது அம்மாதம், வருஷம், தினம் இம்மூன்றையும் குறிக்கிறது. அவைகளை சரியாய் எழுதுவது எப்போதும் நல்லது. ஏனெனில், அநேக முக்கிய விஷயங்களுக்காக சில கடிதங்களை எடுத்துப் பார்க்க வேண்டியதிருக்கிறது. தேதி குறிப்பிடும் விதம் எத்தனையோ இருக்கிறது. என்றாலும் மாதத்தின் பெயரை எழுதாமல் இலக்கத்தில் குறிப்பது சரியன்று. நீ, கடிதம் எழுதினவர் எத்தனையோ பெரிய காரியங்களை கவனிக்கவேண்டியிருக்கலாம். அப்படியிருக்க அவருக்கு எந்தமாதம் இத்தொகையிலுள்ளது என்று அவர் ஏன் எண்ணி பார்க்க சமயத்தை செலவுபண்ணவேண்டும்?

நாலாவது— உன் மேல்விலாசத்தை எழுது. அது கடுதாசியின் வலது பக்கத்து மேல் அற்றத்தில் எழுதப்படவேண்டும். மேல்விலாசம் முழுவதும் திட்டமாய் எழுதவேண்டும். அவசியமானால் தெருவின் பெயர், நம்பர் இவைகளை தெளிவாய் பிசகின்றி எழுது. ஊரின்பெயரும், மாகாணத்தின் பெயரும் கொடு. அப்படிக் கொடாவிட்டால் உன் கடுதாசிக்கு மறுமொழி வாராதே போகும். ஒரே பெயருள்ள எத்தனையோ பட்டணங்கள் இருக்கின்றன. அதன்றி கடுதாசி உன் கையில் சேராதபடி ஊர்கள்தோறும் அலைந்து திரியும். நீ வசிக்கும் ஊரின் பெயர் அல்லது கிராமத்தின் பெயரையும் தெளிவாய் எழுதினால் எவ்வளவோ கஷ்டத்துக்கு தபாலாபீசை நீக்கிவைப்பாய்.

காகிதக் கூட்டுக்குள்ளே நீ எழுதவேண்டியவைகளையோ அல்லது அனுப்பவேண்டியவைகளையோ பத்திரமாக வைத்து, அதன்பின் மேல்விலாசத்தை சரியாய் எழுதி, அப்புறம் முத்திரை ஒட்டி, நீ செய்யவேண்டிய எல்லாவற்றையும் சரியாய் செய்தாயா என்று கவனமாய்ப் பார்த்து பிறகு தபாலில் அனுப்பிவை. ஒரு வருஷத்தில் பெரிய பிரித்தானியாவில் போஸ்ற்றாபீசுக்கு வந்த 400,000 கார்டு, கடிதம், பார்சல் முதலியவைகள் சரியான மேல்விலாசம் பண்ணாதவைகளாயும், விலாசமே இல்லாதவைகளாயுமிருந்தன. இதினிமித்தம் தபாலாபீசுக்காரருக்கு எவ்வளவு தொந்தரவு நேரிட்டிருக்கும்!

## SELF-RELIANCE.

## தன்னைத்தானே சார்ந்திருத்தல்.

உபாத்தியாயர் வேலைசெய்கிற அநேகருக்கு, பையன்களும் பெண்களும் வகுப்பில் ஒருவரையொருவர் திருட்டளவாய்ப் பார்த்து எழுதுகிற வழக்கம் நன்றாய்த் தெரியும். அதினால் ஒருவன் போடுகிற தப்பிதத்தையும் இன்னொருவன் பார்த்து எழுதுகிறது மாத்திர

மன்றி உபாத்தியாயரும் அப்படித் திருட்டுத்தனம் பண்ணுகிற மாணாக்கரை மிக லேசாய்க் கண்டுபிடித்துக்கொள்ளக் கூடும். ஏனெனில் ஒரேவிதமான தப்பிதத்தை, ஒருவரையொருவர் பார்த்தெழுதுவதினாலன்றி மற்றப்படி பண்ணுவது அபூர்வம். இதற்கு காரணம், ஒரு பிள்ளை தன் வேலையைச் செய்ய தன்னைச் சாராமல், பிறனைச்சார்வதினால்தான்.

அப்படிப் பார்த்து எழுதுகிற பையன் தன்னைத்தானே வஞ்சிக்கிறான். ஏனெனில் அவன் பார்த்தெழுதின விடை தப்பாயிருந்தாலும் சரியாயிருந்தாலும் சரி, எப்போ அவன் மற்றவனைப் பார்த்து எழுதுவானோ அப்போ அவனுக்கு படிப்பின்மேல் சரியான ஆசையேயில்லை. அவன் ஒருபோதும் முன்னுக்கு வரப்போகிறதே இல்லை. அதன்றி நல்லவேலை செய்வதினால் உண்டாகும் திருப்தியை அவன் இழந்து போகிறான். பின்வரும் கதை ஒரு சிறுவன் தன் வேலையை விட வேறொருவன் வேலையை நம்பினதினிமித்தம் உண்டான தப்பிதத்தை உணர்ந்து அதற்கப்புறம் பெரியவனானதை விளக்கிக் காட்டுகிறது.

அந்தப்பையன் இப்போது மிகவும் பிரக்யாதைபெற்ற ஓர் புத்தகவீரனாயிருக்கிறான். அவன் சொல்லுகிறதாவது:—

“நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் உபாத்தியாயர் மனக்கணக்கு கொடுத்தார். முதல் பையனிலிருந்து கேள்வி கேட்டுக் கொண்டுவரவே நான் நடுவில் நின்றேன். எனக்கு அடுத்தவன் எனக்கு மூன்று வயது மூத்தவன். அநேக பாடங்களில் என்னைவிட கெட்டிக்காரன்.

உபாத்தியாயர் எங்களைப்பார்த்து:—13-ம், 9-ம், 8-ம் கூட்டினால் எவ்வளவு? என்றார்.

முதல் பையன் முதல், அநேக ஆண்களும், பெண்களும் தப்பாய்ச் சொன்னார்கள். இதற்குள்ளாக நான் யோசித்து மனதில் வைத்துக்கொண்டிருக்கவே, உபாத்தியாயர் என்னிடம் கேட்டார். அதற்குள்ளாக பக்கத்திலிருந்த பையன் தனக்குள்ளே “29, 29, 29” என்று சொல்லிக்கொண்டதைக் கேட்டேன்.

உபாத்தியாயர் என்னைப்பார்த்து “நல்லது உல்லி உனக்குத் தெரியுமா என்று பார்ப்போம்; கெட்டிக்காரன், சரியாய்ச் சொல்லு” என்றார்.

நான் என் தலையை சரித்துக்கொண்டு, பெருமையாய் “29” என்று சொன்னேன்.

உபாத்தியாயர் உடனே அடுத்த பையனைப் பார்த்து “13-ம், 9-ம், 8-ம்என்ன” என்று கேட்டார்.

அந்தப் பெரிய பையன் “30” என்று சொன்னான். அதுதான் நான் முதலாவது யோசித்து வைத்திருந்த எண். அன்றுமுதல் நான் என் மனதில் ஓர் தீர்மானம் பண்ணினேன். யாதெனில்:- “என்றைக்கும் நான் எந்தக்காரியத்தைச் செய்யவேண்டியது வந்தாலும், நன்றாகவும், சரியாகவும் செய்யவேண்டிய வழியை நானே யோசித்துச் செய்யவேண்டும், வேறொருவரையும் சாரக்கூடாது” என்பதே. அத்தீர்மானத்தின்படியே செய்தேன். வகுப்பில் தேறினேன். ஜனங்கள் எப்போதாவது என்னை கேவலமாய்ப் பேசவோ அல்லது ஏமாற்றவோ பிரயத்தனிக்கையில், அந்தப் பெரிய பையன் என்னை ஏமாற்றின விதத்தை நினைப்பேன். உத்தியோகத்திலும்பெரியவனானேன்” என்பதே. இதினால் நாம் எந்தக்காரியத்தைச் செய்யவும் ஒருபோதும் மறறவர்களைச் சாராமல், நம்மைத்தான் சார்ந்திருக்கவேண்டுமென்று நாம் அறிகிறோம்.



## THE SKILL OF A MOUSE.

## ஒரு சுண்டெலியின் சாமர்த்தியம்.

ஒரு நாள் இயற்கைசாஸ்திரி ஒருவர் ஒரு காட்டிலுள்ள பெரிய மரக்கட்டை ஒன்றின்மேல் அசைவின்றி படுத்துக்கொண்டு, சமீபத்திலிருந்த புல்லின்மேல் விளையாடிக்கொண்டிருந்த ஒரு மிருகத்தைக் கவனித்துக்கொண்டிருந்தார். அம்மிருகம் ஒரு பெரிய எலி. அதின்முதுகு தவிட்டு நிறமாயிருந்தது. மரக்கட்டையின் கீழிருந்த தன் வளைக்குள்ளிருந்து அது வெளியேவந்து வெகுநேரம் விளையாடின பிற்பாடு, தன்னை அலங்கரிக்க ஆரம்பித்தது. தன் முன்னங்கால்களை கைகளாக உபயோகித்து, தன் மார்பிலுள்ள வெள்ளை ரோமத்தை வாரிக்கொண்டது. தன் தேக முழுவதையும் தன் நாக்கினாலேயே சுத்தப்படுத்திக்கொண்டது. தான்முழுவதும் நன்றாயிருப்பதை திட்டமாயறிந்தபிற்பாடு இரைதேட ஆரம்பித்தது. அதற்காக அது அதிகதூரம் போகவேண்டியதாயிருந்ததில்லை. ஏனெனில் அதற்கு சமீபத்தில் அடர்த்தியான நாணற்செடிகள் இருந்தன. சமீபத்தில் கோதுமைத்தண்டுகள் சில வளர்ந்து நின்றன. அந்த எலி மிகப் பெரிதாயிருந்தபடியால், அக்கோதுமைச் செடிகளின் தண்டுகளை வளைத்து அதிலுள்ள தானியத்தை தின்னக்கூடும். அப்படிக் கூடாவிட்டால், அத்தண்டின்மேல் ஏறக்கூடும். என்றாலும், இதொன்றையும் அது செய்யாமல், தன் வழக்கப்படியே நேராய் உட்கார்ந்துகொண்டு, தனக்கு எட்டும் உயரம் வரையிலும் தண்டைக் கடித்தது. சுற்றிலுமுள்ள நாணல் அடர்த்தியாயிருந்தபடியால், வைக்கோல் முழுவதும் விழவில்லை.

## GO ABOUT YOUR BUSINESS.

## உன்வேலையைப் பார்த்துக் கொண்டுபோ.

லண்டனிலுள்ள ஓர் பழைய கடிகாரத்தில் விநோதமான ஓர் வாசகம் வரைந்துள்ளது. அவ்வாசகத்தின் வரலாறு தற்செயலாய்க்கூறிய ஒருவருடைய வார்த்தையே. சில நூற்றாண்டுகளுக்கு முன் கைதேர்ந்த வேலைக்காரனொருவன் அக்கடிகாரத்தைப் பழுதுபார்த்து அதற்குப் புதிய ஒரு பார்வைத் தகடுபோட ஒப்புக்கொண்டான். அந்தவேலை முடிந்துவருங்காலத்தில் அந்த கடிகாரத்தின் அடியில் வரைவதற்கான தக்கதோர் வாசகத்தைச் சொல்லும்படி நியாயவாதிகளைக் கேட்டான். (அந்தகடிகாரம் நியாயவாதிகள் கூடும் கட்டடத்தின்மேல் வைக்கப்பட்டிருந்தபடியால்) அவர்களும்யோசித்து சொல்வதாக அவனுக்குச் சொன்னார்கள். அவன் வாரம் வாரம் வந்து அவர்களைக் கேட்டும் அவர்கள் சொல்லாமல் தாமதப்படுத்திக்கொண்டே வந்தார்கள். ஒருநாள் அவன் அவர்களை மைதானத்தில் ஆலோசனை சபையிலிருந்தனைக் கண்டு, மகா துரையவர்களே! கடிகாரத்தின்மேல் என்ன வாசகம் வரையலாம் என்று கல்விமுதிர்ந்த நியாயாதிபதியைக் கேட்க, “நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ” என்று கோபமாய் உரத்துக் கூவினார். அது கேட்ட கடிகாரக்காரன், நான் திரும்பும்போது ஆ! வீணான சோம்பேறிக் கூட்டத்துக்கு இது தகுந்த புத்தி வசனம் என்று வாய்க்குள்ளே சொல்லிக்கொண்டுவந்து, “உன் வேலையைப் பார்த்துக்கொண்டுபோ” என்கிற வாசகத்தையே அக்கடிகாரத்துக்கு அடியில் வரைந்தான். அதைவிட

சிறந்த வேறு வாசகம் ஒருபோதும் கிடைக்காது என்று தீர்த்தார்கள். அந்த வாசகம் இன்னும் அப்படியே இருக்கிறது.

---

GERMAN EMPEROR AND TEMPERANCE

## ஜர்மென் சக்ரவர்த்தியும் மதுவிலக்கமும்

---

தினசரி வர்த்தமானங்களில் கூறியிருக்கின்ற ஓர் சத்தியம் யாதெனில், ஜர்மென் சக்ரவர்த்தி ஜர்மானியர் சாதாரணமாய் எப்பொழுதும் சாப்பிட்டுவருகிற பீர் (Beer), ஒயின் (Wine) என்னும் மதுக்களை விட்டுவிட்டார் என்பது. இப்போது அவர் கிச்சிலி, ஆரஞ்சு இப்பழச்சாற்றினால் செய்யப்பட்ட ஒருவகை ஷெர்பத்தை சாப்பிட்டுவருகிறார். இங்ஙனம் இவர் செய்யக் காரணம்யாது? உலகமுழுவதும் அறிந்த ஓர் சாஸ்திர பூர்வ சத்தியமே. யாதெனில் மதுவைக் கையாடிவரும் மானிடர் யாவரும் வெகு சீக்கிரத்தில் வேலைசெய்ய சக்தியற்றுப் போகின்றார் என்பதே. இச்சத்தியத்தை சக்ரவர்த்தி நன்றாய் அறிந்திருப்பதால் இங்ஙனம் நடத்தி வருகின்றார். சக்ரவர்த்தி மிகவும் சுறுசுறுப்புள்ளவர். எப்போதும் ஏதாவது ஒருவேலை செய்துகொண்டிருப்பார், அல்லது வாசித்துக்கொண்டிருப்பார். அது ஒன்றிலோ ராஜ்யசம்பந்தமாய் அல்லது ஜனசமுதாயத்துக்கடுத்ததாய் அல்லது சாஸ்திர சம்பந்தமானதாயிருக்கும். சில காலத்துக்கு முன்னே தமது ராஜ்யத்தில் குடிவெறியினால் நடந்த தற்கொலைகள், சடுதி அபாயங்கள், கொலைபாதகங்கள் இவற்றின் கணக்கெவ்வளவு என்று கேட்டார். அக்கணக்கை நன்றாய் ஆராய்ந்ததின் பின், தாமே தமது ஜீவியத்தில் அதை சோதித்துப்பார்த்தார். தாம் எவ்வளவு கொஞ்சமாய் மதுவை அருந்தினாலும் அவ்வளவுக்கு தமது பெலன் குறைகிறதை அவர் கவனித்தார். ஆகவே தம்சக்தியை குறைக்கின்ற இப்பயங்கர மதுபானங்களை முற்றிலும் தொடக்கூடாதென்று தீர்மானித்து அவ்விதம் நடத்தி வருகிறார்.

---

JONAS HANWAY'S PLUCK

## ஜோனஸ் ஹான்வேயினுடைய சாமர்த்தியம்

---

ஏகதேசம் 150-வருஷங்களுக்கு முன்னே லண்டன் பட்டணத்தில் ஜோனஸ் ஒருகாரியத்தைச் செய்தான். அவனுக்கு முன்னால் ஒருவரும் அதைச் செய்யவில்லை. முக்கியமாய் நகரத்துக்குள், பகல்வெளிச்சத்தில் யாரும் செய்ததில்லை. ஒருநாள் அவன் தன் மனதில் அக்காரியத்தைக் கட்டாயமாய்ச் செய்யத் தீர்மானித்துக்கொண்டு வெளியே புறப்பட்டான்.

அவன் வீட்டுக்காரியத்தை நடத்திவந்த அவன் சகோதரி அவனைப்பார்த்து "நீ செய்யத் தீர்மானித்த காரியத்தைச் செய்யாதே. ஏன் அவ்வளவு புத்தியீனமாய் இருக்கிறாய்?" என்றாள்.

அவனுடைய சகோதரி மகள் "நீர் அதைச்செய்யவேண்டாம், ஜனங்களெல்லாரும் கைகொட்டிச் சிரிப்பார்கள்" என்றாள்.

உடனே அவன் "அப்படிப் பேசவேண்டாம்," நான், என் எண்ணத்தை நிறைவேற்றவே செய்வேன் என்று சொல்லிக்கொண்டு தன்சகோதரியையும் மருமகளையும் முத்தமிட்டு வெளியே போய்விட்டான்.



அப்புறம் அவள் ஜன்னல் வழியாய்ப் பார்த்துக்கொண்டு மழைபெய்யாமலிருக்கவேண்டும் என்று விரும்பினாள். அவளுடைய மகளும் அப்படியே விரும்பினாள். ஏனென்றால் மழைபெய்யாதிருந்தால் அவன் அதைச் செய்யவேண்டுவதில்லை.

ஆனால் பகல் பன்னிரண்டு மணிக்கு மழைபெய்ய ஆரம்பித்தது. ஜனங்கள் அவனைப் பார்த்து கோபங்கொண்டார்கள். அப்புறம் கைகொட்டிசிரித்தார்கள். ஏனெனில் அவன் சகோதரியும் மருமகளும் எவ்வளவோ தடைபண்ணியும் அவன் தான் நினைத்த காரியத்தைச் செய்துவிட்டான். அதைப்பார்த்துதான் ஜனங்கள் நகைத்தார்கள். அப்போது ஒரு சிநேகிதனோடு அவன் நடந்துபோனான். அச்சமயம் அவனிடம் நான் இன்னகாரியத்தை செய்யப்போகிறேன் என்று சொல்லவே, அவன் ஜோனஸைப் பார்த்து: "நான் ஒருபோதும் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யமாட்டேன், நீ அதைச் செய்யும்போது மிகக்கேவலமாயிருக்கும்" என்றான். ஆனால் அவனோ உடனே அதைச் செய்ய ஆரம்பித்தான். அவனுடைய சிநேகிதன் அதைப்பார்த்து "இதென்னவேடிக்கை" என நகைத்து வெட்கத்தோடு வேறு வழியாய்ப் போய்விட்டான்.

அவனோ அக்காரியத்தைச் செய்யவே செய்தான். ஜனங்கள் நகைத்துக்கொண்டே இருந்தார்கள்.

ஒரு வருஷம் சென்றுபோயிற்று. இரண்டு மனிதர் அக்காரியத்தைச் செய்தார்கள். ஆனால் ஜனங்கள் அதைப்பார்த்து வழக்கமாயிற்று. புதிதாய் அக்காரியத்தைக் கண்டவர் மாத்திரம் நகைத்தார்கள். அப்புறம் ஜோனஸ் நாட்டுப்புறத்துக்கு சுகத்துக்காகப்போக வேண்டியது வந்தது. அங்கே அவன் அக்காரியத்தைச் செய்தான். அவ்விடத்துஜனங்களெல்லாரும் இந்த நூதன வழக்கத்தைப்பார்த்து கைகொட்டி சிரித்தார்கள். அவனுடைய ஏழை சகோதரி வெட்கத்தினால் முகஞ்சிவந்திருப்பாள். அவனுடைய சின்ன மருமகளுக்கும் இது சற்றேனும் இஷ்டமில்லை. ஆனால் அம்மனிதனோ அக்காரியத்தை விடாப்பிடியாய்ச்செய்துவந்தான்.

அநேக வருஷங்கள் கடந்துபோயின. அநேக ஜனங்கள் அக்காரியத்தைச் செய்தனர். ஏனெனில் ஜோனஸ் செய்த காரியம் மிக நல்லதாகக் காணப்பட்டது. ஜோனஸ் ஆரம்பித்தான், மற்றவர்கள் நாளடைவில் பின்தொடர்ந்தனர். இப்படியாக முப்பது வருஷங்களுக்குள் எல்லாரும் அக்காரியத்தை செய்தார்கள். அநேக ஷாப்புகளில் அது காணப்பட்டது. அநேக பிள்ளைகள் தங்கள் தகப்பன்மாருக்கு பிறந்தநாள் இனாமாக அதை வாங்கிக்கொடுத்தார்கள். அவர்கள் அதை உபயோகித்தால் பிரயோஜனமுண்டென்று கண்டார்கள். அப்புறம் வர வர ஒருவரும் நகைக்கவில்லை.

நல்லது இப்போ மழையில் வெளியிலே யாராகிலும் போய் முப்பது வருஷத்துக்கு முன்னே ஜோனஸ் முதலாவதாகசெய்த காரியத்தைச் செய்யாமல் போனால் நாம் எல்லாரும் சிரிக்கிறோம்! நல்லது இத்தனை வேடிக்கையையும் விந்தையையும் லண்டன் பட்டணத்தில் பிறப்பித்ததும், ஜோனஸ் முதல் முதலாகச் செய்ததுமான அந்தக்காரியம் எது? அது வேறொன்றுமல்ல, குடை பிடிக்கிறதுதான். ஆச்சரியம்! ஆச்சரியம்!

அந்த முதல் குடையைப்பிடிக்க எவ்வளவோ தைரியமும் சிரமமும் வேண்டிய

தாயிருந்தது பார்த்தீர்களா? ஜோனுஸ் ஹாரன்வேய் என்பவனுக்கு மிக விசேஷித்த தைரியம் இருந்தது. மனிதர் தன்னைப்பார்த்து எவ்வளவோ நகைத்து பகிடிபண்ணியும், தான் கொண்ட நோக்கத்தை அதைரியப்பட்டு விட்டுவிடாமல், முன்னிலும் அதிக தைரியமாய் நிறைவேற்றி முடித்தான்

அதன்றி, எப்போதும் சிம்னிக் குழாயை ஏறி சுத்தம்பண்ணும் சிறுவர் தங்கள் கைகால்களை விழுந்து முறித்துக்கொள்ளாதபடி அவர்களை ரட்சிக்க ஏற்ற வகையைத்தேடினான். முரட்டுக் குணமுள்ள சிறுவரை பழக்கக்கூடிய கப்பல்களையும் உண்டுபண்ணினான். இன்னம் அநேக நூதனங்களையும் செய்தான். முதலாவதாக குடைபிடிக்க ஒரு மனிதனுக்குத் தைரியமிருந்தானால் வேறெந்த காரியத்தையும் செய்கிறதற்கும் அவனுக்குத் தைரியமிருக்குமென்பதற்கு சந்தேகமுண்டோ?

A DAILY PRAYER FOR THE MONTH.

## பிரதிதினமும் சொல்லவேண்டிய மாதஜெபம்.

ஆ, கர்த்தாவே! எங்கள் பாவங்களை மன்னித்து சகல அநீதியினின்றும் எங்களை சுத்திகரிக்க நீர் உண்மையும், நீதியுமுள்ளவராயிருக்கிறீரென்று எங்களுக்கு வாக்களித்திருக்கிறீர். ஆகையால் தண்டனையையல்ல, மன்னிப்பை எதிர்பார்க்கிறவர்களைப்போல் நாங்கள் உண்மையாயும், பூரணமாயும் பாவங்களையறிக்கையிட எங்களுக்கு உதவிசெய்தருளும். எங்கள் விசுவாசமும், எதிர்நோக்குதலும், கீழ்ப்படிதலும், அன்பும் அதிகக் குறைவுள்ளது. தேவனற்ற மனிதர்களைப்போல ஜீவித்து வந்தோமென்று அறிக்கையிடுகிறோம். விசேஷமாய், எங்களுடைய இயற்கை சுபாவத்தை மாற்றிக்கொள்ள எங்களுக்கு சக்தியில்லையென்று நம்புகிறோம். நாங்கள் பாவத்திலே நிலைத்திருந்தாலுஞ்சரி, உமது இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு ஜீவித்தாலுஞ்சரி, உமக்கு நாங்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் என்பதை நாங்கள் சிந்தித்து நடந்ததில்லை. எங்கள் இரட்சிப்பின் தேவனே, உம்முடைய நாமம் மகிமைப்படும்படி எங்களை விடுதலைசெய்து, உம்முடைய நாமத்தினிமித்தம் சுத்திகரித்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

WHAT YOU LEAVE UNDONE.

## நீ செய்யாதுவிட்ட கடமைகள்.

நீ செய்ய மறந்த கடமைகள், செய்யப்படாமலேயிருக்கும். அக்கடமைகளுக்குப் பதிலாக வேறு சில செய்யப்பட்டாலும், அவைகள் நீ செய்ய மறந்தவைகளல்ல. மற்றொருவன் உனக்குப் பதிலாகச் செய்தவைகள் வித்தியாசமானவைகளே. நீ செய்யாமற்போனவேலை, செய்யப்படாமலேயிருக்கும். உனக்குக் கொடுக்கப்பட்ட வேலையில், உன்னுடைய வேலைப்பாடு காட்டப்படவேண்டும். அதை வேறொருவனுடைய உதவியால் செய்யக்கூடாது. உன் கடமையை நிறைவேற்றாது, வேறொருவனை செய்யவிட்டுவிடுவாயானால் உன் வேலைப்பாட்டுக்குறை அதில் சதாகாலமாகத் தங்கியிற்கும்.



PARSON JONE'S VISION.

## ஜோன்ஸ் பாதிரியார் கண்ட தரிசனம்.

உவேல்ஸ் நாட்டு மலைகளை நாம் போய் பார்க்குங்கால், அங்கே மரங்கள், செடிகள், புல்மெத்தைகள் மிகவும் அடர்ந்திருக்கக் காண்போம். மலையின் நீரருவிகள் பாய்ந்தோடும் சப்தம் மகா உரப்பாயிருக்கும். அதினருகில் நின்று நாம் பேசும் ஒரு வார்த்தையும், நமக்கு முதலாய்க் கேட்காது. தங்களை அடக்குவாரில்லாததுபோல் அவ்வளவு யம் தஷ்டமாய் சந்தோஷத்துடன் பாய்ந்தோடிக்குப்போவிருக்கும். இம் மரங்களில் நிழல்படுமிடத்தை அஸ்தமனவேளையில் பார்த்தால் அம்பலைகளும், மலைச்சார்புகளும் கண்களுக்கு பரமானந்தத்தை கொடுக்கக்கூடிய காட்சியைக் கொடுக்கும். அப்பிரகாசம் மேலோகத்தின் மாட்சிமை பொருந்தியதாய் இருக்கும். வானவில்லின் ஜோதியை அங்கே காணலாம். அம்மலையினோரமாயுள்ள பள்ளத்தாக்கின் அந்தண்டை காட்டுப்புஷ்பங்கள் வனசேனையாய் பார்க்கலாம். நீலம், மஞ்சள், வெள்ளை நிறமுள்ள புஷ்பங்கள் மிகநேர்த்தியாய் கமளிக்கின்றன. அப்புறம் அம்மலைகளை கடந்து செல்லுங்கால் இடைக்கிடையே, ஆட்டுக்கிடைகளும், மேய்ப்பரின் குடிசைகளும் காணப்படும். ஆனால் எத்தனை மைல்கள் கடந்து சென்றாலும், ஜனங்கள் குடியிருக்குமிடமொன்றையும் காணமாட்டோம்.

நான் இப்போது சொல்லப்போகிற மனிதன் தமது ஜீவியத்தை இந்த மலைகளில் கழித்தவர். அவர் தெய்வபக்தியுள்ளவர். அவர்பெயர் ஜோன்ஸ். கொஞ்சக்காலத்துக்கு முன்னால் இருந்தவர். அவரைக்குறித்து யாவரும் மேன்மையாய்ப் பேசிக்கொள்வார். உலகத்தில் மனிதரை மேன்மைப்படுத்துவதாகிய நற்குணம் அவருக்கோர் அணிகலமாயிருந்தது.

ஒவ்வொரு நாளும் தனது பலமுள்ள குதிரையின்மேலேறி, தூரத்திலிருந்த தமது சபையின் அங்கங்களை சந்திக்கப் போவார். தாம் எவ்வளவு தூரம் பிரயாணம் பண்ணினாலும் ஒருபோதும் சோர்ந்துபோவதில்லை. அந்த தூரம் அவருக்கு கஷ்டமாகத் தோன்றுவதுமில்லை. ஏனெனில், அவருடைய எண்ணமெல்லாம் ஆத்துமபிரகாரம் சாகிற நிலைமையிலிருந்த தமது சபையார்மேலிருந்ததினால்தான். நாம் எல்லாரும் அறிந்தபடி பரிசுத்த ஜீவியம் செய்வது மகா கஷ்டமல்லவா? சில மனிதர் நல்லவர்களாய் ஜீவிக்க எவ்வளவோ பிரயாசப்பட்டும் அது கஷ்டமாயிருப்பதால் இதைவிட செத்துப்போனால் தாவிலை என்று சொல்வதை நாம் கேள்விப்பட்டதில்லையோ? ஆனால் அவ்விதம் பேசுவது மகா புத்தியீனமன்றோ. ஏனெனில் அவ்விதம் செய்வதினால் நாம் ஒருபோதும் நல்லவராகமாட்டோம்.

ஆனால் இந்தப் பாதிரியாரோ தமது சபையாரை என்ன பிரயாசப்பட்டாவது நல்வழிக்குக் கொண்டுவரவேண்டுவதற்காக தாம் என்ன சிரத்தை எடுக்க வேண்டுமோ அதை கடவுள் கிருபையால் நிறைவேற்றிவந்தார். நாள்தோறும் 'கிருபையின் தூதை' அவர் பிரஸ்தாபப்படுத்தினார். அந்தவிதமாய் சுவிசேஷ நற்செய்தியை கொண்டுபோக இந்த மலைகள் மேல் ஏறி, இறங்கும்போது அடிக்கடி ஜெபிப்பார். தேவனை தமது பக்கத்தில் பிரயாணமாகும் ஒரு அருமையான நண்பனாக எண்ணினார்.

இப்படியிருக்க அவர் ஒருநாள் நெடுந்தூரம் பிரயாணம் பண்ணவேண்டியதாயிருந்தது. இவ்விதமாய்ப் பிரயாணம் போகையில்தான் நான் சொல்லப்போகிற ஆச்சர்யமான குதிரை வீரனை சந்தித்தார். ஜோன்ஸ் பாதிரியார் வெகுதூரம் சவாரிசெய்து வருகையில் அதிக உஷ்ணத்தினிமித்தம் களைப்படைந்து பசியினால் சோர்ந்தவராய் புசிக்கவும் குடிக்கவும் ஏதாகிலும் கிடைக்குமா என்று பார்க்க ஒரு சத்திரத்தில் இறங்கினார். தமக்கு மாத்திரமன்றி தமது குதிரையின் பசியையும் ஆற்ற ஆசித்தார். அப்படியே பசி ஆற்றினபின் மறுபடியும் சவாரி செய்து போகையில் ஒரு மனிதன் அவரிடம் வந்து "மணி என்ன?" என்று கேட்டான்.

அக்கேள்வி மிக சாதாரணமானது. நற்குணமுள்ள அந்தப்பாதிரியார் உடனே தமது பழைய வெள்ளிக்கடிகாரத்தை எடுத்து சமயமென்னவென்று சொல்ல, அம்மனிதன் தாம் சத்திரத்தில் பார்த்தவர்களில் ஒருவன் என்பதையும் ஞாபகம் பண்ணிக்கொண்டார். அப்புறம் மறுபடியும் அவனை உற்றுப்பார்க்கவே வேலை செய்துவிட்டு திரும்பிப்போகும் ஒரு வேலையாள் என்பதைப் பார்த்தார். அவன் தோள்மேல் வைக்கோலால் மூடப்பட்ட ஒரு அரிவாள் தொங்கினது. வேலை முடிந்தவுடன் அவ்வரிவாள்களை வைக்கோலால்தான் மூடுவது வழக்கம்.

அப்புறம் அந்த நல்ல மனிதன் யாதொரு தீங்கையும் நினைக்காமல் தமது உத்தம இருதயத்தில் அன்பும் சமாதானமும் குடிகொண்டவராய் மறுபடியும் பிரயாணம் போனார். கோடைகாலநேரத்தில் ஏற்றத்திலும் இறக்கத்திலும் மிகச் சந்தோஷமாய்ச்சென்றார். அப்புறம் மலையின் ஓர் ஓரத்தில் நின்று பார்க்கையில் தம்மைச் சுற்றிலுமுள்ள காட்சிகள், கண்ணுக்கு சேர்த்தியாய்த் தோன்றின. பக்கத்திலுள்ள வேறுகுன்றுகளும், மிகத் தெளிவாய்க்காணப்பட்டன. பச்சையும், பொன்னிறமுமான பசும்புல் தரைகளும் அதைச்சுற்றிலுமுள்ள வேலிகளும் கண்களை இழுத்தன. அதோடு வேறொன்றும் அவர் கண்ணுக்குத் தென்பட்டது. அது யாதெனில்:—

அவர் போகவேண்டிய பாதையில் ஒரு குன்று இருந்தது. அக்குன்றின் அடிவாரத்தில் ஒரு வேலியும், அதின் சமீபத்தில் ஒரு வாசலும் காணப்பட்டது. அதன்றி அவ்வேலியோரம் ஏதோ ஒன்று படபடவென்று நடக்கிறதைக கண்டார். அதை உற்றுப்பார்க்கையில் அது ஓர் பசுவுமன்று, குதிரையுமன்று, நாயுமன்று. பின்னை வேறு யாது? அவர் நன்றாக உற்று கூர்மையாய் நோக்கிப்பார்த்தார்.

நல்லது, கடைசியில் அவர் அது ஒரு மனிதன் எனக்கண்டார். அம்மனிதன் சற்றுநேரத்திற்குமுன் அவரிடத்தில் சமயம் என்னவென்று கேட்டவன்தான். அவன் நடக்க நடக்க தன் கூரிய அரிவாளைச் சுற்றிலுமிருந்த வைக்கோலை மெதுவாய் அவிழ்த்துக்கொண்டே போனதையும் கவனித்தார்.

ஜோன்ஸ் பாதிரியார் அதை பார்க்கவும் நடுங்கினார். காரியத்தின் உண்மை உடனே அவருக்குப் புலப்பட்டது. யாதெனில், அம்மனிதனுக்கு அன்று முழுவதும் ஒன்றும் கிடையாததினால் பட்டினியாயிருந்தான். பாதிரியார் கையில் வெள்ளிக் கடிகாரத்தைக் காணவும், அதை எப்படியாகிலும் அவர் கையிலிருந்து பறிக்க வேண்டுமென்று, அதற்காக ஒருவேளை தன் அரிவாளை உபயோகிக்க நேரிடும்



என்பதற்காகத் தன்னைத் தயார்பண்ணினதையும் அவர்கண்டார். அவனுக்கு அந்நாடு முழுவதும் நன்றாய்த் தெரியும். ஜோன்ஸ் பாதிரியார் அவ்வழியாய் வரும்போது வாசலண்டை அவரை மடக்குவதற்காக குறுக்குப் பாதையாய்ப்போய் ஒருபக்கமாய் நின்றான்.

இனி என்ன பண்ணவேண்டுமென்று தோன்றவில்லை. அவர் கையில் ஆத்துமாயுதங்களைத் தவிர வேறொரு ஆயுதமுமில்லை. அவர் கையில் ஆயுதங்களிருந்தாலும் தாம் ஒரு பாதிரியாராகையால் அவைகளை உபயோகிக்கவும் மாட்டார். ஒருதடவை தான் வந்தவழியே திரும்பிப் போய் விடுவோமா என்று யோசித்தார். ஆனால் அவர் மனச்சாட்சிக்கு அது சரியாகத் தோன்றவில்லை. தேவனுடைய தாசனாகிய அவர் ஏன் பயப்படவேண்டும்? தாம் போவது அவருடைய வார்த்தையைப் பிரஸ்தாபப்படுத்தவேண்டியதாயிருப்பதால், தாம் திரும்பி பயந்து ஓடுவது கர்த்தருக்குப் பிரியமாயிருக்காது என்று தெரியும்.

இனிச் செய்யவேண்டுவதென்ன? கதவைத் திறக்க அவர் குதிரையிலிருந்து இறங்குகையில், அம்மனிதன் கட்டாயமாய் தன்கையிலிருந்த அரிவாளினால் இவருக்கு மோசஞ் செய்வான் என்றும், அவனை எதிர்க்க தன்னிடம் ஒன்றுமில்லையென்பதையும் அவர் திட்டமாயறிந்தார். ஆகையால் அந்த நல்ல பாதிரியார் ஆபத்தில் உதவிசெய்கிற கர்த்தருக்கு நேராகத் தன் இருதயத்தை உயர்த்தி ஜெபித்தார். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து தனக்கு ஒத்தாசை வரும். அவர் மாத்திரம் தன்னை இரட்சிக்கக்கூடும்:

தம்முடைய பயத்தினால் குதிரையின் கடிவாளத்தை அதின் கழுத்தின்மேல் அவர்போட்டுவிட்டார். அந்தபுத்தியுள்ள குதிரை, சத்துருவை தைரியமாய் எதிர்க்க நினைத்தாற்போல், கதவுக்கு நேராக விரைவாய்ச் சென்றது. அதின் சமீபத்தில்தான் அந்த சத்துரு வேலி மறைவில் ஒளித்திருந்தான்.

ஜோன்ஸ் பாதிரியார் தமது நடுக்கத்தில் நாலுதிசைகளையும் பார்த்தார். ஒருவரையும் காணோம். அப்படியே நடுக்கத்தோடு அவ்வாசலை சமீபிக்கவே, அவர் ஆச்சரியப்படத்தக்கதாக, வேறோர் குதிரையின் காலடிகள் அவர் செவியில் பட்டன. அப்புறம் தன்பக்கத்தில் வேறொருவர் சவாரிபண்ணி வருவதை அவர் பார்த்தார். குதிரை மங்கின நிறமாயிருந்தது, அதின் மீதிருந்தவர் இருண்ட மேலங்கி உடுத்தியிருந்தார்.

ஜோன்ஸ் பாதிரியார் மிகச் சந்தோஷத்தினாலும், ஆச்சரியத்தாலும் நிறைந்தார். அந்த அதிசயக் குதிரைவீரன் ஒன்றும் பேசவில்லை. அவருடைய கண்களெல்லாம் அந்த வாசலையே நோக்கின. அதினிமித்தம் அவர் இவர் சொன்ன வார்த்தைகளை கவனிக்காததுபோல் இருந்தது. பாதிரியார் உற்றுக் கவனித்துக்கொண்டே போகையில், அந்த அறுப்பாளி, தான் ஒளித்திருந்த இடத்திலிருந்து வெளியேவந்து, வயல் வழியாய் ஓடி இடது பக்கம் திரும்பி, அரிவாளை தான் பிரித்த வைக்கோலால் மூடிக்கொண்டேபோனதைக் கண்டார். சந்தேகமின்றி அம்மனிதன் பாதிரியார் தனிமையாயல்ல, வேறொருவர் அவரோடுகூட வருகிறதைக்கண்டு தான் நினைத்த தீமையான காரியத்தைச் செய்ய முடியாது விட்டுவிட்டான்.

மறுபடியும் ஒரு தடவை பாதிரியார் அவ்வனனியனைப் பார்த்து, அந்தப் பெரிய ஆபத்திலிருந்து அவரை விடுதலை பண்ணினதற்காக அதிக நன்றி பாராட்டுகிறேன் என்று சொன்னார். ஆனால் அக்குதிரை வீரனோ ஒரு மறு உத்தரவும் கூறவில்லை.

அவருக்கு இங்கிலீஷ் பாஷை தெரியாது என்று அவர் நினைத்து, உவேல்ஸ் பாஷையில் அவரோடு பேசினார் என்றாலும் அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அந்த அறுப்பாளி இதற்குள்ளாக மலையுச்சியில் ஏறி மறைந்து விட்டான். அதைக்காணவும் அந்த நல்ல பாதிரியார் சந்தோஷத்தினால் நிறைந்து கர்த்தருக்குத் ஸ்தோத்ரம் செலுத்தி "கர்த்தர்தாமே, இந்த அபாயத்திலிருந்து என்னை விடுவிக்க ஒரு தோழனை அனுப்பியிருக்கிறார்" என்றார். சர்வ வல்லமையுள்ள கர்த்தர் என்கிற பெயரைக் கூறினதைக் கேட்கவும் அந்த அதிசயக் குதிரை வீரன் ஒரே ஒரு வார்த்தை சொன்னார். ஜோன்ஸ் பாதிரியார் காதில் தொனித்தமாதிரி இருந்தது. அது "ஆமென்" என்னும் வார்த்தையே.

அப்புறம் பாதிரியார் குதிரையிலிருந்திறங்கி அவர் கடந்துபோகும்படியாக வாசலைத்திறக்கும்படி பார்க்கவே, அவர் இல்லை, போய்விட்டார். அவர் எப்படி ஆச்சர்யமாக வந்தாரோ அப்படியே அதிசயமாக மறைந்துவிட்டார். மகா ஆச்சர்யமாயிருந்தது. ஒருவேளை தான் கண்டது ஒரு கனாவோ என்றுசந்தேகித்தார். ஆனால் அது நிஜமாக நடந்ததென்பது தெளிவானகாரியம். அப்பொழுது முதலாய் அவர் கண்களுக்கு முன்பாக மங்கின நிறமுள்ள அந்த குதிரையும், இருண்ட நிறமுள்ள அங்கி தரித்த குதிரை வீரனுடைய முகமும் நின்றாற்போலிருந்தது. ஒருபோதும் அது கனவல்ல. தான் மாத்திரமல்ல, அந்தப்பொல்லாத அறுப்பாளியும் அவ்வன்னியனைக் கண்டான். அப்படியில்லாதிருந்தால் இவன் ஏன் ஓடிப்போகவேண்டும்? அதன்றி அவ்வீரன் எப்படித் திடீரென மறைந்துவிட்டார். அப்படி அவர் யோசித்துக்கொண்டிருக்கையிலே, அவனுடைய உத்தமமும் விசுவாசமுமுள்ள இருதயத்திற்கு உண்மை புலப்பட்டது. என்னவெனில், 'ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உனக்கு மறு உத்தரவு கொடுப்பேன்' என்று சொன்ன வார்த்தையின்படியே இவர் தம் ஆபத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டதால் கர்த்தர் கேட்டு தமது தூதனை அனுப்பி அவரை விடுவித்தார். அவர் தூதனாயிருந்ததால் மாத்திரம் கர்த்தர் செய்த நன்மைக்கென்று ஸ்தோத்ரம் பண்ணவும் 'ஆமென்' என்று சொல்லிக்கொண்டு, மற்ற வார்த்தைகளுக்கு உத்தரம் ஒன்றும் கூறாதிருந்தார். அது நியாயந்தானன்றோ! ஜோன்ஸ் பாதிரியார் பரிசுத்த பயத்தினால் நிறைந்தார். பின் தமது குதிரையினின்று இறங்கி உடனே தமது முழங்காலூன்றி, நன்றியறிதலோடு கர்த்தருக்கு ஸ்தோத்ரம் செலுத்தினார்.

இதுவே அந்த அதிசய குதிரை வீரனைக்குறித்த சரித்திரம்.

81

Vol. XXVIII. Registered No. M. 209 No. 6

DECEMBER, 1914

# மாதர் மித்திரி.

OFFICE OF THE ... 15 JA... 1915 ...AS.

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"

PUBLISHED BY THE

Woman's Foreign Missionary Society

Methodist Episcopal Church

U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு, கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... .... | 83 |
| ரோலான்டு என்னும் சிறு வீரன் .... .... .... .... | 84 |
| கிறிசாந்திமம் என்னும் மஞ்சள் பூ ... .... .... | 85 |
| எழுப்புதலான வார்த்தைகள் .... .... .... .... | 85 |
| பேசமாட்டாத மிருக ஜீவன்களைப் பட்சமாய் நடத்துதல் .... .... | 86 |
| வீட்டு விஷயமான சில குறிப்புகள் .... .... .... | 88 |
| தேவனுடைய பிதாவடைவு .... ... .... .... | 89 |
| ஒரு விசேஷித்த சாட்சி .... .... .... .... | 89 |
| இரண்டு நோக்கங்கள் .... .... .... .... | 90 |
| யுத்தம் .... .... .... .... .... | 92 |
| ஒரு யாப்பானிய பணக்காரி .... .... .... .... | 95 |







புத். ௨௮. ௧௯௧௪ ௵ - டிசம்பர் ௴. இல. ௬.

### WONDER OF THE INCARNATION.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி.

ஆதாமின் பாவத்தாலே அரூபன் உருபமான
அதிசயம், இதோ! பாரும்.

அநுபல்லவி.

மாதேவை புத்திரரான மானிடர் குழாங்களே, நீர்
வல்லமைப் பிதாவின் ஒரு மைந்தனைச் சந்திக்க வாரும்.— ஆதா

சரணங்கள்.

1. ஆதி பிதாவின் திரு பாசனத்தைத் துறந்தார்;
அழகான மோட்ச செல்வப் பாக்கியத்தை மறந்தார்;
பாதகந் தீர வேண்டிப் பெத்தலேயில் பிறந்தார்;
பராபர வஸ்து வானோர் பாலனாகப் பிறந்தார்;— ஆதா

2. உன்னத வஸ்து வானோர் உலகத்தை நேசித்தார்;
ஒப்பில்லா தேவ தேவன் மனுஷரை ஆசித்தார்;
தன் ஒளிவை விளங்க, தானே பிரகாசித்தார்;
ஜாதிகளுக்குத் தயவாய் உபதேசித்தார்;— ஆதா

3. மந்தை ஆயர் சந்திக்க, சந்தோடமே விண்டார்;
வான நாட்டைப் பிரிந்து, மாட்டுக் கொட்டிலைக் கண்டார்;
விந்தைத் திரு முதலார் கந்தைத் துணியைக் கொண்டார்;
வேத காரணர் தானே மேவி, தாயின் பால் உண்டார்,— ஆதா

Vol. XXVIII. No. 6. December, 1914.

ROLAND THE CHILD KNIGHT.

## ரோலான்டு என்னும் சிறு வீரன்.

வெகுகாலத்திற்கு முன்னே ரோலாண்டு என்னும் ஓர் சிறுவன் இருந்தான். அவனுடைய தாயாரின் பெயர் பெற்தா பெருமாட்டி. பெற்தா பெருமாட்டி, ஷார்லிமேன் சக்ரவர்த்தியின் சகோதரி. ஆனால் ராஜ குலத்தைச் சேர்ந்த ஒரு பிரபுவை அவள் கலியாணம் பண்ணாமல் மிகவும் ஏழையான ஒருவனைக் கட்டிக் கொண்டாள்.

பெற்தாவின் புருஷன் அதிக காலம் உயிரோடிருக்கவில்லை. ரோலாண்டு என்பவன் சிறு குழந்தையாயிருக்கையில் தகப்பன் இறந்துபோனான். அந்த ஏழை விதவையின் கையில் ஒரு காசில்லை. ராஜாவாகிய தன் சகோதரனிடத்தில் போய் தனக்கு உதவிசெய்யும்படி கேட்க அவளுக்கு அதிக பயமாயிருந்தது. அவள் இத்தனை ஏழையான மனிதனைக் கலியாணம் பண்ணினதினிமித்தம் ராஜா அவள் மேல் அதிக கோபமாயிருந்தார். அப்புறம் அரமனைக்கு அருகேயிருந்த ஒரு குகைக்குள்ளே அவள் போய் ஒளித்துக் கொண்டாள். சின்ன ரோலாண்டு அவளைக் காப்பாற்றப் பிரயாசப்பட்டான்.

ஒருநாள் அவன் ராஜாவின் அரமனைக்கருகே போகையில் கீதவாத்தியத்தைக் கேட்டான். அநேக ஏழை ஜனங்கள் வாசலண்டை உட்கார்ந்திருக்கிறதையும் கண்டான். ராஜா தமது மத்தியான சாப்பாட்டை முடிக்கிறதற்காக காத்திருக்கிறதை அவன் அறிந்தான். அவர் சாப்பிட்டு மீந்தது அவர்களுக்குக் கொடுக்கப்படும். அவர்கள் எல்லாரும் உட்கார்ந்திருந்த வழியாய் இவன் கடந்துபோய், நேரே ராஜா உட்கார்ந்திருந்த இடத்திற்கு போனான்.

ராஜா அவனைக் கண்டு பேசாமலிருந்தார். கந்தை வஸ்திரம் தரித்த அந்தப் பையன் ஏழையாயிருந்த போதிலும், சற்றாகிலும் பயமுடையவனாயிருக்கவில்லை. அவன் ராஜாவைப் பார்த்து சிரித்துக்கொண்டு, சுடச்சுட வைக்கப்பட்டிருந்த அவருடைய போஜனத்தை தட்டோடு தன் இரு கைகளாலும் எடுத்துக்கொண்டு, வெளியே கொண்டு போய்விட்டான். வேலைக்காரர் அவனைத் தடைபண்ணி நிறுத்தப்போனார்கள். ஆனால் ராஜாவோ தமது தலையை அசைத்துக்கொண்டு பேசாதிருந்தார். ஒருவேளை அந்தப் பையன் யாரென்று அவருக்குத் தெரிந்திருக்கலாம். பெற்தா பெருமாட்டி அதிக தொலையில் இல்லை என்று அவர் அறிந்திருக்கலாம்.

நல்லது, பையன் சற்று நேரத்திற்குள் திரும்பி வந்தான். மறுபடியும் மேஜையண்டை போய், ராஜாவுக்கு வைத்திருந்த பழத்தட்டை எடுத்தான். ராஜா உரத்த சத்தமாய் "பேசாமல் நில்" என்று கூவினார். ரோலாண்டு பேசாமல் நின்றான். ஆனால் தட்டைக் கீழே வைக்கவில்லை. அப்புறம் "ஓ ராஜாவே! பெருமாட்டியாகிய என் தாயாருக்கு சாப்பிடுகிறதற்கு ஒன்றுமில்லை. ராஜாவாகிய நீர் அவர்களுக்காக ஒரு கவலையும் எடுத்துக் கொள்ளாததினால் அவர்களுடைய மகனாகிய நான் கவலை எடுக்கத்தான் வேண்டும்" என்று மறு உத்தரவு சொன்னான்.

அதைக்கேட்ட ராஜா மூர்க்கத்தோடு அவனைப் பார்த்தார். ஆனாலும் அவன் சற்றேனும் பயப்படவில்லை. அவருடைய முகத்தை அவன் நேராக நின்று நோக்கிப் பார்த்தான். அப்பெரிய அரசன் அவனுடைய விடையையும், அவனுடைய தைரியத்தையும் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார். தாம் எழுந்து நின்று கொள்கையில் அவருடைய கோபம் அவரை விட்டுப் போயிற்று.

ராஜா அப்புறம் பையனைப்பார்த்து "இப்பேர்ப்பட்ட தைரியமுள்ள பையனுடைய தாயாருக்கு ஒரு குறைவும் உண்டாகக்கூடாது" என்று சொன்னதோடு "பையனே உன் தாயார் இருக்கும் இடத்திற்கு என்னைக் கொண்டு போ" என்றார்.

உடனே சின்ன ரோலாண்டு முன்னாலே குதித்து நடந்துபோய், குகையண்டை காண்பித்தான். ராஜா பெற்தா பெருமாட்டியாகிய தன் சகோதரியை அரமனைக்குக் கொண்டுவந்தார். அங்கே பெற்தா மிகச் சந்தோஷமாய் வாழ்ந்திருந்தாள். சின்ன ரோலாண்டு பெரியவனாகி, ராஜாவின் ராணுவத்தில் பராக்கிரமமும், தைரியமும், பெலனுமுள்ளவனாய் பேர்போன தலைவனானான். ராஜா அவனை அதிகமாய் சிநேகித்தார். தற்காலத்தில் பேர்போன ராணுவத்தலைவர் எவ்விதமாய் உபத்திரவத்திலும் துன்பத்திலும் இருப்பவர்களுக்கு உதவி செய்வார்களோ அப்படியே ரோலாண்டும், தான் சிறுவனாயிருக்கும்போதே தன் தாயார் கஷ்டத்திலும், வறுமையிலுமிருப்பதைப் பார்த்து, தைரியமாய் உதவி செய்தான். ஆகையால் அப்பேர்ப்பட்ட சிறுவன் மெய்யாகவே பெரியவனாகும்போது பெரிய வீரதீரன் ஆவான் என்பதற்கு சந்தேகமா!

---

CHRYSANTHEMUMS.

## கிறிசாந்திமம் என்னும் மஞ்சள் பூ.

ஜெர்மனி தேசத்தில் ஒருநாள் ஒரு ஏழைக் குடியானவன் மாரிகால இருட்டில் வேலை முடிந்து வீட்டுக்கு போனான். அந்த இருட்டுவேளையில் தூரத்தில் ஒரு சிறு குழந்தையின் அழுகுரல் கேட்டது. அந்தச் சத்தம் எங்கேயிருந்து வருகிறதென்று அவன் பார்த்துக்கொண்டு போகையில் பனிக்கட்டியின் நடுவில் ஒரு சிறு குழந்தை அழுதுகொண்டு கிடந்தது. அந்தப் பையனை இவன் எடுத்து தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தன் வீட்டுக்குக் கொண்டுபோகவே, அவ்வீட்டிலிருந்த அவன் மனைவியும் பிள்ளைகளும் அச்சிறு குழந்தையை மிகப் பட்சமாய் நடத்தி வந்தார்கள். கொஞ்ச நாட்களுக்குப் பிற்பாடு அக்குழந்தை காணாமற்போயிற்று. அது எங்கே போயிற்று என்று கண்டுபிடிக்க முடியவில்லை. என்றாலும், ஒருநாள் அக்குடியானவன் மறுபடியும் அவ்வழியே போனான். அவன் ஆச்சரியப்படத்தக்கதாக அந்தக் குழந்தை கிடந்த இடத்தில் பொன்மயமான பூக்கள் கிடந்தன. அப்புஷ்பங்களை அவன் பொறுக்கி வீட்டிற்கு கொண்டுவந்தான். அவர்கள் காணாமற்போன அந்தக் குழந்தையின் ஞாபகத்திற்காக அதற்கு ஒரு விசேஷித்த பெயர் கொடுத்தார்கள். அது யாதெனில் கிறிசாந்திமம் என்பதே. வேறொரு பாஷையில் அதற்கு பொன்னிறமான பூ என்று அர்த்தமாம்.

---

STIRRING WORDS.

## எழுப்புதலான வார்த்தைகள்.

ஜனசமுதாய அபிவிர்த்திக்காக ஒரு பெரிய கூட்டம் வருஷந்தோறும் இந்தியாவின் முக்கிய பட்டணங்கள் ஏதாவதொன்றில் நடந்து வருகிறது. அப்பேர்ப்பட்ட கூட்டம் ஒன்றில் திவான் க்வுரம்மா என்பவர் பின்வரும் வார்த்தைகளைச் சொன்னார்.

"கண்ணியவான்களே, ஜாதிவித்தியாசம் இல்லாமல், ஒரு ஜாதி இன்னொரு ஜாதியோடு கலந்துபோய், இந்தியாவுக்கு நன்மை உண்டாக இன்னமும் 30 சந்ததியானாலும் நடக்காது. அவ்விதமாக இந்தியாவில் எல்லாரும் பேசிக்கொண்டபோதிலும் அதினால் பிரயோஜனமில்லை. இந்தியாவிலே ஜனசமுதாயம் அபிவிர்த்திக்கு வரவேண்டியதிருக்கிறது. மார்க்க சீர்திருத்தம் அவசியம். ஜனங்களை நல்வழிக்கு கொண்டு வரவேண்டியது அதிலும் அவசியம். இப்படியிருக்க இந்தியா முழுவதும் அசைக்கப்படவேண்டும். அதற்கு பெரியதடை ஜாதிவித்தியாசம். அது தொலைந்துபோனால் நமது தேசம் முன்னுக்குவரும். அது லேசான காரியமல்ல. கடவுள் நம்மிடம் கேட்கிற காரியமும் அதொன்றுதான். நாமும் நமது தேசமும் ரட்சிக்கப்பட அவர் விரும்புகிறார். அதன்றி காலதாமசம் செய்யாமல் உடனே ஜாதிவித்தியாசத்தை ஒழித்துவிட பிரயாசப்படவேண்டும் என்று அவர் விரும்புகிறார்" என்பதே.

---

KINDNESS TO DUMB ANIMALS.

## பேசமாட்டாத மிருகஜீவன்களைப் பட்சமாய் நடத்துதல்.

பரிசுத்த வேதபுஸ்தகத்தில் சாலொமோன் ராஜா எழுதியிருக்கும் நீதிமொழிகள் என்னும் புஸ்தகத்தில் ஒரு அதிகாரம் உண்டு. அது முழுவதும் குணசாலியான ஸ்திரீயைக் குறித்தது. "தயையுள்ளபோதகம் அவள் வாயிலிருக்கிறது" என்று அவர் கூறினதின் அர்த்தம் அவள் எல்லாவற்றோடும் பட்சம் காண்பிக்கிறாள் என்பதே. ஆகவே நாம் எல்லாரும் இந்த சட்டப்பிரகாரமே நடக்கவேண்டும். கிறிஸ்தவர்களின் முக்கிய வேலை அதுவே.

தேவனால் உண்டாக்கப்பட்ட பெரிய பூந்தோட்டமாகிய பூமியில் நாம் வெளியே உலாவித் திரியும்போதுதான் நமது குணம் எப்பேர்ப்பட்டது என்று தெளிவாய் அறிகிறோம். மற்றவர்களும் அறிந்துகொள்வார்கள். வாய்பேசாத மிருக ஜீவன்களை பட்சமாய் நடத்தினால் நமது குணம் எப்பேர்ப்பட்டது என்று மற்றோர் அறியக்கூடியது மிக ஆச்சரியமல்லவா? வாய்பேசாத எல்லா ஜீவன்களும், பட்சம் காண்பிப்பதை மிக மரியாதையோடு ஏற்றுக்கொள்ளும். அதன்றி அதற்கு எப்படி பதில் செய்யலாம் என்று வகைதேடும். மிகவும் அறிவுள்ளவைகள். பூனைகளைக் குறித்து எல்லாரும் அவைகள் கோபமுடையனவென்றும், மற்றவர்களைப் பறண்டும் சுபாவமுடையது என்றும் சாதாரணமாய் பேசிக்கொள்வார்கள். ஆனால் அவைகளைப் பட்சமாய் நடத்தினால் ஒருபோதும் அவைகள் அப்படிப்பட்ட உபத்திரவம் கொடுக்காது.

சில பையன்கள் பூனைகள் கல்லெறியப்படவும், வேதனைப்படுத்தப்படவும் மாத்திரம் உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறார்கள். ஆனால் அப்படி நினைக்கிற பையன்களையும் அதுபோல கல்லெறிந்து துன்பப்படுத்தினால் பூனைகளைப்போலவே அவர்களும் கோபமும் வெடுவெடுப்புள்ளவர்களுமாயிருப்பார்கள்.

அப்புறம் பறவைகளை நோக்கிப் பார்ப்போம். குருவிக்கூடுகளில் இருக்கும் முட்டைகளை எடுக்க வேண்டுமென்னும் ஆவல் எல்லாப் பையன்களுக்கும் உண்டு. அது ஒரு பெரிய சோதனை. அவர்கள்



அவைகளை எடுத்துக்கொண்டு ஏழைத் தாய்க்குருவியை ஆறாக்கவலையிலும், வருத்தத்திலும், சங்கடத்திலும் விட்டுப் போகிறார்கள். அப்படிச் செய்கிற பையன்கள் இந்தப் பத்திரிகையை வாசித்து, நான் சொல்லப்போகும் கதையையும் கவனமாய் வாசித்தால், இனிமேல் ஒருபோதும் அப்பேர்ப்பட்ட குரூரச் செய்கைகளைச் செய்யமாட்டார்கள்.

அமெரிக்காவில், நினைத்துண்டு பண்ணுகிற சாமர்த்தியமுடைய பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் கார்லஸ் இயந்திரம் என்று பேர்போன இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்தார். அந்த இயந்திரத்துக்கு தமது பெயரையே கொடுத்தார். ஒரு தடவை அவர் தம்முடைய தொழில்சாலையை பெரிதாக்கும்படி யோசித்து அதற்கருகே ஒரு சிறு கட்டடம் கட்ட ஆரம்பித்தார். அதற்கு அஸ்திபாரம் போட அங்கிருந்த ஒரு கற்பாறையை வெடிமருந்துபோட்டு பிளக்க வேண்டியதாயிருந்தது. அதற்காக அநேக கூலியாட்கள் வந்து வெடிமருந்துபோட்டு பிளக்க ஆரம்பித்தார்கள். அடுத்தநாள் மிஸ்டர் கார்லஸ் அவ்வழியே வந்தார். அப்போது மேஸ்திரி அவரைக் கூப்பிட்டு, அவர் சாதாரணமாய் பிரியப்படுகிற நல்ல காட்சி ஒன்றைக் காண்பித்தான்.

"இங்கே பாரும் மிஸ்டர் கார்லஸ். நாங்கள் ஒரு சிறு குருவிக்கூட்டைக் கண்டுபிடித்திருக்கிறோம். இந்தக் கூட்டை இங்கே வைத்திருக்க முடியாது" என்று சொன்னான்.

அங்கே ஒரு பாறையின் பிளப்புக்குள்ளே சில நாணல் செடிகளுக்குள்ளே ஒரு ருபின் பட்சி தன் கூட்டின்மேல் உட்கார்ந்திருந்தது. அவர்கள் இருவரும் கூட்டின் அருகே போகையில் குருவி பறந்துபோயிற்று. அங்கே பார்க்கையில் அழகான ஐந்து நீல முட்டைகள் இருந்தன. அப்போதுதான் அவைகள் இடப்பட்டதுபோல் தோன்றின.

மிஸ்டர் கார்லஸ் மேஸ்திரியைப் பார்த்து "அந்தக் கூட்டை நாம் வேறெங்கேயாகிலும் எடுத்து வைக்கலாமா" என்றார்.

"அப்படி வைக்கமுடியாது ஐயா. நாம் அந்தக் கூட்டை எடுத்தால் அது துண்டு துண்டாய் பிய்ந்துபோகும். அதன்றி குருவி மறுபடியும் அவைகள்மேல் உட்காராது. நமது வேலைக்கும் பெரிய தடையாயிருக்கும். ஆகையால் அந்தக் கூட்டைப் பிரித்து, முட்டைகளை எடுத்து எறிந்துவிட்டால் நல்லது" என்றான் மேஸ்திரி.

"இல்லை, ஒருபோதும் அந்த ஏழைக் குருவியை நாம் அலட்டவேண்டாம். அதே இடத்தில்தான் அது உட்கார்ந்து அவயங்காத்து குஞ்சுபொரிக்கட்டும்" என்றார் துரை.

"அப்படியானால் வேலை முழுவதையும் நிறுத்தவேண்டியதாகுமே" என்றான் மேஸ்திரி.

"நல்லது, வேலையை நிறுத்தி விடு" என்றார் துரை. அப்படியே வேலை நிறுத்தப்பட்டது. கூலியாட்கள் வேறே ஏதாகிலும் சொற்ப வேலைகளைச் செய்துகொண்டு சரியான சம்பளத்தையே பெற்றுக்கொண்டுபோனார்கள். ருபின் குருவியோ மிகச்சந்தோஷமாய் ராணியைப்போல அதின்மேல் உட்கார்ந்துகொண்டு, ஆண் குருவி கொண்டுவரும் இரையைச் சாப்பிட்டுக்கொண்டு, கடைசியாக குஞ்சு பொரித்தது.

கார்லஸ் துரை அடிக்கடி அவைகளைப் போய்ப் பார்த்தார். அப்படி அவர் செய்

யக் காரணம் சீக்கிரம் அவைகளைத் துரத்திவிடும்படியல்ல, அவைகள் வளருகிறதாவென்று பார்க்கத்தான். தாய்ப்பறவைகள் குஞ்சுகளை வளர்க்கவும் பறக்க பழக்கவும் போதுமான சமயம் கொடுக்கப்பட்டது. குஞ்சுகள் வளர்ந்து தாங்களாக பறக்கும் சக்தி வந்தது. அப்புறம் அவைகள் பறந்துபோயின. பின் துரை வேலை ஆரம்பிக்க உத்தரவு கொடுத்தார்.

நல்லது சிறியபறவைகளின்மேல் இவ்வளவு பட்சம்காண்பித்த கார்லஸ் என்பவரைப்போன்ற ஒருவர், தம்மைப்போன்ற மனிதஜாதிக்கு எவ்வளவு அதிகமான பட்சம் காண்பிப்பார்! இவ்வித அன்பான செய்கையினால் அவருடைய மேலான குணம் வெளியாகிறதில்லையா?

இதை வாசிக்கிறவனே, உதவியற்றதும், வாய்பேசக்கூடாததுமான மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் நீ காண்பிக்கிற பட்சத்தைக்கொண்டோ அல்லது குரூரத்தைக்கொண்டோ உன் குணத்தை நியாயந்தீர்க்கிறதானால் நீ எந்த விதமான தீர்ப்பை பெற்றுக்கொள்வாய்!

## HOUSEHOLD HINTS.

## வீட்டு விஷயமான சில குறிப்புகள்.

ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில், வீட்டில் மீந்துபோகிறதும், பிரயோஜனம் இல்லாததுமான வஸ்துக்களை ஏதாவதொரு வழிபார்த்து வீட்டுக்கு அப்புறப்படுத்தி வீட்டை சுத்தமாயும், துர்வாடையில்லாமலும் வைத்துக்கொள்ளவேண்டியதாம். அழுக்குகளையும், குப்பைகளையும் ஒரு மூலையில்வைத்தால் ஈக்கள், பூச்சி புழு முதலியவை அவைகளினின்று உண்டாகி, அவைகள் நோயையும் பிறப்பிக்கும். கட்டாயமாய் வீட்டிலோ அல்லது வீட்டண்டையோ ஒரு பெரிய தகரபாத்திரம் வைத்திருக்கவேண்டும். அதற்குள்ளே அக்குப்பைகளை கொட்டவேண்டும். ஆனால் வண்டிகள் கொண்டுவந்து அவைகளை உடனே எடுத்துக்கொண்டு போய்விடவேண்டும். அந்தத் தகரபாத்திரம் நாள்தோறும் வெறுமையாக்கப்பட்டால் மிகவும் நல்லது, அல்லது அதினால் அநேக தீமைகள் விளையும். அந்தப்பெரிய தகரத்தை சுத்தமாய் வைக்கும் விதம் யாதெனில் குப்பைகளை அதினின்று கொட்டினவுடனே ஒரு பழைய வர்த்தமானக் கடுதாசியையாகிலும், ஒரு கைப்பிடி வைக்கோலையாகிலும் அதற்குள்போட்டு எரித்துவிடவேண்டும். அப்போ அதற்குள் ஒரு ஈரமுமிருக்காது, அதன்றி கொழுப்பு ஒன்றும் ஒட்டியிருக்காது, துர்வாடையும் ஓடிப்போகும்.

நம்மிடத்தில் ஒரு கம்பளம் இருந்து அதை சுத்திசெய்ய விரும்பினால், சில பெரிய உருளைக்கிழங்குகளைக் கொண்டுவந்து, அவைகளின் தோலைச்சீவி தண்ணீரில் போட்டு நன்றாக கலக்கி அப்புறம் அதை வடிகட்டி அந்த ஜலத்துக்குள் ஒரு துணியை துவைத்து கம்பளத்தின் மேல் தேய்க்கவேண்டும். அந்த துணி அழுக்கானவுடன் அதைப் பிழிந்துவிட்டு, மறுபடியும் துவைத்து அப்படியே எல்லா அழுக்கையும் துடைத்து நீக்கிவிடலாம். அதன்றி சாதாரணமாய் சலவை பண்ணமுடியாத கம்பளித்துணிகளையும் இந்தவிதமாய் சுத்தம்பண்ணலாம்.

நாம் புது துணிகள் வாங்கும்போது, எவ்வளவு நல்லமாதிரி வாங்கக்கூடுமோ அப்பேர்ப்பட்டதை வாங்கவேண்டும். அதினால் மட்டுக்குமிஞ்சி செலவு பண்ணக்



கூடாது. கொஞ்சம் ஜாஸ்தி செலவானாலும் அதிகநாளுக்கு உபயோகமாகக் கூடியதை வாங்கவேண்டும். என்றபோதிலும் வரும்படி குறைவானால் அதற்குத்தகுந்த உடையைத் தரிக்கவேண்டும். அப்படி வாங்கி உடை தைக்கும்போது, சரியான அளவு கொடுத்து நன்றாகத்தைத்து, அதைத் தரிக்கும்போது நமக்கும் மற்றவர்களுக்கும் சந்தோஷம் உண்டாகத் தக்கதாய்" இருக்கவேண்டும். முடித்தவுடன் அந்த வஸ்திரத்தை மிகக்கவலையாய் தரித்துக்கொண்டு, எப்போதும் அது புதிதாய்க் காணப்படத்தக்கதாயும், அதிககாலம் உபயோகிக்க தக்கதாய் உபயோகப்படுத்தவேண்டும்.

## THE FATHERHOOD OF GOD.

## தேவனுடைய பிதாவடைவு.

ஒரு இளவயதுள்ள மனைவி தன் புருஷனைக்குறித்து சொன்னதாவது: "என்னுடைய சிறு குழந்தை நோயினால் கஷ்டப்பட்டு வருத்தப்படும்போது என்னுடைய புருஷன் காண்பித்தபொறுமையை நான் கண்டபோதுதான், 'பிதா' என்னும் வார்த்தையின் சரியான அர்த்தத்தை நன்றாகப் பார்த்தேன். வேதனைப்பட்டுக்கொண்டிருந்த என் சிறுகுழந்தையை தன்னால் ஆன பிரயாசப்பட்டு சந்தோஷப்படுத்தினார். தேவனும் பிதாவாக நம்மை இப்படியே நடத்துகிறாரல்லவா என்று உணர்ந்தேன்.

இதற்குமுன்னால் ஒரு பிதா பிள்ளைக்கு எவ்விதமான பட்சம் காண்பிக்கக்கூடும் என்பதை அறியாமலும் உணராமலும் இருந்தேன். தாயைப்போலவே தகப்பனும் பெருந்தன்மையுடையவரும், கருணையுள்ளவரும், பிள்ளைக்காக தானும் பாடுபட மனதுள்ளவரும், எவ்வளவு அதிகம் பாடுபட்டாலும் பிள்ளை நோவுநீங்கி சுகமானால் போதும் என்கிற எண்ணமுடையவராய் இருப்பதை நன்றாக அறிந்தேன். பிள்ளை தனக்கு [illegible]தவை என்று சொல்லுமுன்னதாகவே அதற்கு என்ன அவசியம் என்பதை அறியத்தக்க ஞானமுள்ளவர். என்னுடைய பக்கத்தில் நின்ற அவரைப்பார்க்கையில் என் பிள்ளைக்காக தான் கண் விழித்ததினிமித்தம் மெலிந்துபோயிருந்ததையும், தன் பெலவீனத்தை பிள்ளையின்மேலுள்ள அன்புக்காக தான் சட்டைபண்ணாதிருந்ததையும், ஒவ்வொரு விஷயத்திலும் காண்பித்த பொறுமையையும் நான் உற்று நோக்கினேன்.

இதுபோலவே நாம் அடிக்கடி காண்பிக்கும் கேவலகுணத்தினால் நமது பரமபிதாவுக்கு எவ்வளவோ வருத்தம் உண்டானபோதிலும், அவருடைய பிள்ளைகளாக நாம் இருப்பதால், அவற்றையெல்லாம் அதிகபொறுமையாக சகிக்கிறார் என்பது என் ஞாபகத்துக்கு வந்தது. ஆகையினால் நாம் அவருடைய சிங்காசனத்தை சமீபித்து அவரை நோக்கி "பிதாவே" என்று ஜெபிக்கும்போது நம்முடைய சத்தம் எவ்வளவோ அமைதலும், ஆழ்ந்த யோசனையுடையதுமாயிருக்கவேண்டும்."

## A REMARKABLE TESTIMONY.

## ஒரு விசேஷித்த சாட்சி.

திருவிதாங்கோட்டு மகாராஜா ஒருவர் இந்தியாவிலுள்ள சுதேச ராஜாக்கள் எல்லாரிலும் மிகவும் படிப்பாளி என்று பெயர் பெற்றிருந்தார். அவர் இப்போதிருக்கிற மகாராஜாவுக்கு முன்னே இருந்தவர். அவர் வாலிபனாயிருந்த சமயத்தில் தமது தேசத்திலுள்ள வாலிபருக்கெல்லாம்

உபந்நியாசம் செய்தார். தாம் கிறிஸ்து மார்க்கத்தை ஒருபோதும் அனுசரியாதிருந்தும் வேதபுஸ்தகத்தைக்குறித்து பின்வரும் வார்த்தைகளைச் சொன்னார். அவ்வார்த்தைகள் மிகவும் ஆச்சரியப் படத்தக்கதாய் இருக்கிறது. "இங்கிலீஷ் காரருக்கு எங்கேயிருந்து இவ்விதமான அறிவும், புத்தியும், வல்லமையும், சாமர்த்தியமும் வந்தது? அவர்களுடைய வேத புஸ்தகந்தான் அவர்களுக்கு இவைகளையெல்லாம் கொடுத்தது. இப்பொழுது அவர்கள் அதை நம்மிடத்தில் கொண்டு வந்து, நமது பாஷையில் அதை மொழி பெயர்த்து, நம்மிடத்தில் 'இந்த புஸ்தகத்தை எடுத்து உங்கள் வீடுகளில் வைத்து அதை வாசியுங்கள், சோதித்துப்பாருங்கள், அப்போ அதுநல்ல புஸ்தகமோ, அல்லவோ என்று தெரியும்' அங்கிலேயர்கள் ஒருபோதும் நம்மை மார்க்கவிஷயமாய் கட்டாயம் பண்ணுகிறதில்லை. மகம்மதியர்தான் நம்மை, கோரான் என்னும் அவர்களுடைய புஸ்தகத்தை வாசிக்க கட்டாயம் பண்ணுகிறார்கள். ஆனால் இவர்களோ, மிகவும் பட்சமாய் நம்மோடு பேசி, "இதுதான் எங்களை உயர்த்தினது, நீங்களும் அதைவாசித்து அதின்படி நடப்பீர்களானால் உயர்த்தப் படுவீர்கள்" என்கிறார்கள்.

ஒரு சங்கதி இதினால் எனக்கு வெளிப்படுகிறது. யாதெனில்:—அந்தப் புஸ்தகத்தை என்ன பண்ணவேண்டுமானாலும் பண்ணலாம். ஆனால் ஒருபோதும் நாம் அந்தப் புஸ்தகத்தை அழிக்கவே முடியாது. நாம் அதை எவ்விதமாயும் எதிர்க்கலாம். என்றாலும் அந்தக் கிறிஸ்தவர்களுடைய வேத புஸ்தகந்தான் நமது தேசத்திற்கு சீர்திருத்தத்தை உண்டு பண்ணுமேயல்லாமல் வேறொன்றினாலும் முடியாது."

TWO AIMS.

## இரண்டு நோக்கங்கள்.

ஜார்ஜ் தன்னுடைய வேலை ஆயுதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, தனது சொக்காவைப்போட்டுக்கொண்டு, வேலைமுடிந்துவிட்டதால் வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமாயிருந்தான். அப்போது தன்னோடு வேலைசெய்கிறவனைப்பார்க்க ஆத்திரமாய்த் திரும்பிக்கொண்டு,

"தாமி, வேலை முடிந்து வீட்டுக்குப் போகிறநேரமாயிற்று. கையிலிருக்கும் ஆயுதத்தை கீழே வை. ராமுழுவதும் வேலைசெய்தாலும் என்னையல்லாமல் ஒரு வேலையையும் நீ முடித்துக்கொள்ள மாட்டாய். நான் ஒருபோதும் சமயத்துக்கு மிஞ்சி வேலைசெய்யமாட்டேன். நாம் குறிக்கப்பட்ட சமயத்துக்கு அதிக நேரம் வேலைசெய்தாலும் சம்பளம் ஜாஸ்தி ஒரு தம்பிடிமுதலாய் கொடுக்கமாட்டார்களே" என்று கோபத்தோடு சொன்னான்.

தாமி இதைக் கேட்டு புன்சிரிப்புக்கொண்டு தானும் வீட்டுக்குப்போக ஆயத்தப்பட்டான். தாங்கள் செய்துகொண்டிருந்த தச்சு வேலையில் வெகு நேர்த்தியாய் முடித்துவைத்த பாகத்தை அவன் சந்தோஷத்தோடு பார்த்துக்கொண்டு, "அதோ அந்த பாகத்தை மிக்க பெலனாயும், உறுதியாயும் பண்ணிவைத்தால்தானே, இன்று ராத்திரி எவ்வித பயங்கரமான காற்று வந்தாலும் அது ஒடிந்துபோகாமல் இருக்கும்" என்றான். இளவயதுள்ள மற்ற வாலிபனோடு அவன் வீட்டுக்குப் போகையில் அவன் முகத்தில் சந்தோஷமும், மனதில் திருப்தியும் உண்டாகிப்போனான்.

சுருக்கிச் சொல்லவேண்டுமானால் அவர்கள் இருவரும் தங்களுடைய ஜீவியத்தின் அளவு இன்னதென்று தங்கள் கொஞ்ச வார்த்தைகளினால் காண்பித்தார்கள் என்று பார்க்கிறோம். ஏனெனில் சில வருஷங்கள் ஆகவே, ஜார்ஜ் என்பவன் ஓர் நூதன வேலைக்காரனானான். அவனுடைய நிலைமையைக் குறித்து எப்போதும் அதிருப்தியாகவே இருந்தான். அவன் சம்பளம் அவன் செலவுக்கே போதுமானதல்ல. தாமி என்பவனோ மிக்க செல்வவானான கண்டிராக்டர் அல்லது ஒப்பந்தக்காரன் ஆனான். அவனிடம் கட்டட வேலைகள் ஒப்பிக்கப்பட்டது. அவனை எல்லாரும் நம்பினார்கள், மதித்தார்கள்.

"நல்லது இதினால் வேலையாட்கள் இருவருடைய நோக்கங்கள் என்ன என்று பார்க்கிறோம். ஒருவன் என்னவேலை செய்தாவது சமயத்தைப் போக்கவேண்டும் என்றும், மற்றவனோ எவ்விதமாயாவது நல்ல வேலை செய்யவேண்டும் என்றுமே. அவரவருடைய நோக்கங்களுக்கு இசைவாகவே ஜார்ஜுடைய ஜீவியம் கேவலமாயும், தாமியுடைய ஜீவியம் மேன்மையுள்ளதாயும் முடிந்தது.

"நமது கர்த்தராகிய இயேசு பூலோகத்திலே தமது வேலையை ஆரம்பிக்கும்போது அதை மிகக் கேவலமானதாகக் கண்டார். ஆனால் அதை விட்டுப்போகும்போதோ மிக மேன்மையுள்ளதாக விட்டார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த உறுதிச் சொல்லை எல்லா வேலையாட்களும் ரூபித்துக் காண்பிக்கலாம். தான் தெரிந்துகொண்ட வேலையை எவ்வளவு மேன்மையாக்கக்கூடுமோ, அந்த மேன்மைக்குக் கொண்டுவர, அந்த வேலையைச் செய்பவன் தான் சரியானபடி பிரயாசப்பட்டால் அதை மேன்மையானதாக்கலாம். அதற்கு சக்தி அவனில் உண்டு. அப்படிச் சொல்வதின் அர்த்தம் யாதெனில் வேலை முடிக்கவேண்டிய நேரம் எப்போ வரும் என்று காத்திருந்து அதை குறைவாக விட்டுப் போவதல்ல; குறிக்கப்பட்ட சமயத்துக்கு மேலாக இன்னமும் சற்றுநேரம் நின்று அந்த வேலையை குறைவின்றி கண்ணுக்கு இன்பமாகத் தீர்த்துவிட்டு போவதே நல்ல வேலை என்பதாம். ஸ்திரீகளாகிய நாமும் இதை நமது ஜீவியத்தில் பார்க்கிறோம்! சமையல் அறையிலோ, தையல் வேலையிலோ அல்லது மற்ற எந்த இடங்களிலோ நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதை நம் கண்ணுக்கு அலங்காரமாகவும், பிரயோஜனமாகவும் செய்ய சில சமயங்களில் சற்று அதிகநேரம் பிடிக்கிறதில்லையா? எந்த வேலையைச் செய்யும்போதும் நான் செய்கிற இந்த வேலை எனக்கு எவ்வளவு துட்டு கொண்டுவரும் என்பதை மாத்திரம் எண்ணாமல், மற்றவர்களுக்கும் எனக்கும் எவ்வளவு சந்தோஷத்தையும் நன்மையையும் கொண்டுவரும் என்பதையும் எப்போதும் மனதில் வைக்கவேண்டும். சோம்பேறியாய் வீணாய் நாட்கழிக்காமல், ஏதாகிலும் ஒரு வேலையைச் செய்வதுதான் நமக்குப் பெருமை. நல்லது, மேற்கூறிய கதையில் தச்சு வேலையன்றி மற்ற வேலைசெய்பவர்களுக்கும் ஒரு நல்ல பாடம் இருக்கிறது. வேலை செய்கிற ஒவ்வொருவரும் எந்த வேலை செய்தாலும் இந்த புத்திமதியை நினைத்துக்கொள்வது நல்லது. ஒருவன் மிகவும் கேவலமான வேலையைச் செய்யலாம், அல்லது மிகவும் மேன்மையான உத்தியோகத்தைச் செய்யலாம்; அவன் தன் கையினால் ஒரு தொழிலைச் செய்யலாம் அல்லது தன் புத்தியினால் ஒரு ஆபீஸில் வேலை செய்யலாம். எல்லா தொழிலாளிகளுக்கும் உத்தியோகஸ்தருக்கும் இந்தச் சட்டம் மிகவும் ஏற்றது.

அநேக வாலிபரைக் குறித்து "இவன் ஒரு காலத்தில் கெட்டிக்காரனாவான்" என்று மற்றவர்கள் பேசுவதுண்டு. ஆனால் அவர்களோ தாங்கள் சிலவருஷம் வேலைசெய்து முடியுமுன்னே, நல்ல நோக்கத்தோடு அதைச் செய்யாததினால், ஜீவிய முழுவதும் நிர்ப்பந்தமும், திருப்தியற்ற நிலைமையுடையவர்களுமாயிருக்கிறார்கள். ஒரு வேலையை நன்றாயும் ஆசையோடும் செய்தோமானால் அதினால் மனத்துக்கு திருப்தியுண்டு. அவ்வித திருப்தி சம்பளத்துக்காக மாத்திரம் வேலை செய்கிறவர்களுக்கு ஒருபோதும் கிடையாது. அந்தத் திருப்திதான் சம்பளத்தின் ஒரு பாகம். அது பணத்தைவிட விலையுயர்ந்தது. ஆனால் ஒருவன் அதினால் மாத்திரம் ஜீவிக்கமுடியாது. வேதபுஸ்தகத்தில் "தேவன் தாம்செய்த எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது" என்று சொல்லியிருக்கிறது. அதுவே நமக்கு நல்ல புத்தியைக் கற்பிக்கிறது.

---

## THE WAR.
## யுத்தம்.

---

இந்த மாசத்தில் வேறு வர்த்தமான குறிப்புகளை சொல்லுவதைப் பார்க்கிலும், தற்காலம் ஐரோப்பாவில் நடந்து வரும் மகா பயங்கரமான யுத்தத்தைக் குறித்து எழுதுவது நலமென்றெண்ணுகிறேன். யுத்தம் உண்டாகக் காரணமென்ன? யுத்தம் எவ்விதமாய் நடந்து வருகிறது என்பவைகளைக் குறித்து சற்று அறிவிக்கிறேன்.

யுத்தம் உண்டானதற்கு காரணம் என்னவென்று அறிவதற்கு முன்னே, இந்த பயங்கர யுத்தத்தில் சேர்ந்திருக்கும் ராஜ்யங்களைக் குறித்து இரண்டொரு வார்த்தைகளைச் சொல்வது மிகவும் நல்லது என்று எண்ணுகிறேன். முழுவதையும் விஸ்தரித்துச் சொன்னால், எத்தனையோ கடுதாசிகளில் எழுத வேண்டியது வரும். ஆகையால் சுருக்கிச் சொல்லுகிறேன். ஆஸ்திரியா ஹங்கேரி தேசத்திற்கு தெற்கே இருக்கும் செர்வியா என்னும் சிறு தேசம் தனக்கு மேலாக இருந்த ஆஸ்திரியா தனக்கு ஏதோ ஒரு பெரிய தீங்கை செய்ததினால் சில வருஷங்களாக மனதில் பகையை வைத்துக்கொண்டிருந்தது. காரியம் இப்படியிருந்ததினால் செர்வியா தேசத்தவர் கூடிய சீக்கிரத்தில் தங்கள் தேசம் ஆஸ்திரியாவின் அரசாட்சியினின்று நீங்கிக்கொள்ளவேண்டுமென்றும், அப்புறம் ஆஸ்திரியாவைப் பழிவாங்கவேண்டுமென்றும் விரும்பினது ஆச்சரியமல்ல.

அப்படியே கடந்த ஜூன் மாசம் 26-ம் தேதி ஆஸ்திரியாதேசத்து பட்டத்து ராஜகுமாரனும் அவருடைய மனைவியும் தங்கள் அரசாட்சிக்கு உள்பட்டிருந்த போஸ்னியா என்னும் நாட்டின் தலைநகரத்தைப் பார்க்கப் போயிருந்தபோது, இரண்டு செர்விய நாட்டு மாணாக்கர் அவர்களைக் கொன்று போட்டார்கள். இக்கொலையை ஆஸ்திரியா சகிக்கமாட்டாமல் உடனே யுத்தத்திற்கு எத்தனித்தது. இதற்கு முன்னால் நடந்த சில சம்பவங்களுக்கு இது ஒரு பெரிய தூண்டுகோலாய் இருந்தபடியால் யுத்தம் கட்டாயம் வருமே. செர்விய கவர்ன்மென்றார்தான் இவ்விதமாக அந்த வாலிபரை ஏவி விட்டிருக்கவேண்டுமென்று ஆஸ்திரியா கவர்ன்மென்றார் சொல்லவே, அவர்கள் எவ்வளவோ தாழ்மையாய் "நாங்கள் அப்படி ஏவி விடவில்லை, ஆனால் அந்த விதமான சமுசயம் எங்கள்பேரில் உங்களுக்கு இருக்குமானால் நாங்கள்



அதற்காக மன்னிப்புக் கேட்கிறோம்" என்றார்கள். ஆஸ்திரியரோ "இல்லை நாங்கள் மன்னிக்கமாட்டோம்" என்று சொல்லி ஜூலை மாசம் 28-ம் தேதி யுத்தத்துக்கு ஆரம்பித்தார்கள். ஐரோப்பாவிலுள்ள மற்ற ராஜ்யங்களெல்லாம் இது மகா அநியாயம், செர்வியா யுத்தத்திற்கு காரணமாக ஒன்றும் செய்யவில்லை என்று நினைத்தார்கள். ஜெர்மனி மாத்திரம் மற்ற ராஜ்யங்களோடு சேராமல் ஆஸ்திரியாவோடு சேர்ந்தது. உடனே ருஷியா செர்வியாவோடு சேர்ந்துகொண்டது. அப்படியே ஒவ்வொரு ராஜ்யமும் ஒன்றுக்கொன்று பலவிஷயங்களில் சம்பந்தப்பட்டிருந்ததினால் இந்த யுத்தம் மற்ற ராஜ்யங்களையும் இழுத்தது. ருஷியாவுக்கும் பிராஞ்சுக்கும் உடன்படிக்கை இருந்ததினால், ஜெர்மனி ருஷியாவுக்கு பிராஞ்சு உதவிசெய்யும் என்று நினைத்துக்கொண்டே, பிராஞ்சுவின்மேல் படையெடுத்தது. ஆனால் பிராஞ்சுக்காரரிடம் அது உண்மையா என்று விசாரிக்கவேயில்லை.

அப்படியே ஜெர்மனி ஆகஸ்டு மாதம் முதல் தேதி ருஷியாவை யுத்தத்துக்கு அழைத்துக்கொண்டு, அப்புறம் பிராஞ்சுவின்மேல் படையெடுத்தது. இப்படிச் செய்ததின் நோக்கம் என்னவென்றால் முதலாவது பிராஞ்சு தேசத்தை ஜெயித்துக்கொண்டால் அப்போ ருஷியாவுக்கு உதவிசெய்ய யாருமில்லாததினால் மிக லேசாய் அதையும் ஜெயிக்கலாம் என்கிற எண்ணத்தினால்தான். ஜெர்மானியருக்கு, இங்லிஷ்காரர் ஒருவரோடும் சேரமாட்டார்கள், அப்படி சேர்ந்தாலும் தங்கள் பக்கமாய்த்தான் சேருவார்கள் என்று எண்ணினார்கள்.

புறதேசகாரியங்களை நடத்திவரும் மந்திரி மூலமாய், எல்லா தேசங்களுக்கும் சமாதானத்தை உண்டுபண்ணவும், யுத்தத்தைத் தடுக்கவும் இங்கிலாந்து ராஜாங்கத்தார் தங்களால் ஆன பிரயத்தனம் செய்தார்கள். இங்கிலாந்திலுள்ள ஒருவருக்காகிலும் யுத்தம்பண்ண இஷ்டமில்லை. முன் ஒருதடவை பிராஞ்சுக்காரர் வடகடலில் சென்ற தங்கள் யுத்தக் கப்பலை இங்கிலீஷ்காரர் வேண்டிக்கொண்டதின்பேரில் தன்தேசத்துக்கு திரும்பிக் கொண்டுபோனார்கள். அதன்றி மத்தியதரைக் கடலில் பிரிட்டிஷ்காரருக்குரியவைகளை பாதுகாத்து வருபவை, பிரஞ்சு கப்பல்களே. ஆகையால் இங்கிலீஷ்காரர் ஜெர்மன்காரரோடு "நீங்கள் வடதிசையாய் வந்து பிரஞ்சு தேசத்தின் வடபாகத்தை ஜெயிக்க ஆசைப்பட்டால் நாங்களும் எப்படியாவது பிராஞ்சு பக்கமாய் சேர்ந்துகொள்வோம்" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லக்காரணம் வடகடலில் (North sea) இங்கிலீஷ்காரருக்கு யுத்தக்கப்பல்கள் இருந்ததினாலே.

நல்லது, இப்படியிருக்க ஜெர்மனி, இருபக்கமும் சேராதிருந்த பெல்ஜியம் தேசத்தின்மேல் அவர்கள் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும், மிக அநியாயமாய் படையெடுக்க தீர்மானித்தது. இந்த அநியாயத்தைக் கேட்ட பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இனிமேல் தாங்கள் அமைதலாயிருப்பது ஒருபோதும் சரியல்ல என்று கண்டார்கள். ஜெர்மனி, இதைக்கேள்விப்பட்டு இங்கிலாந்தோடு "நீங்கள் பெல்ஜியத்துக்கு ஒரு உதவியும் செய்யாமலிருந்தால் நாங்கள் உங்களோடு ஒரு வருத்தமும் உண்டாக்காமல் நடந்துகொள்வோம் என்று பல வாக்குகள் கொடுத்தார்கள். இதற்கு முன்னாலே ஜெர்மனியும், இங்கிலாந்தும், மற்ற ராஜ்யங்களும் பெல்ஜியதேசத்துக்கு, நாங்

கள் எல்லாரும் சரியான காரணத்தாலன்றி உன்னோடு ஒரு யுத்தமும் செய்யமாட்டோம். நீ எப்போதும் சுயாதீனமாகவே இருக்கலாம்" என்று வாக்குக்கொடுத்திருந்தார்கள். ஜெர்மனி பிராஞ்சு ராஜ்யத்தோடு சண்டை செய்யப்போகையில் பெல்ஜியம் வழியாய் கடந்துபோகும்படி உத்தரவு கொடுக்கவும், அதினால் உண்டாகும் நஷ்டங்களை தான் கொடுக்கவும் வாக்குப்பண்ணினது. அதற்கு பெல்ஜியம் ராஜா சம்மதிக்கவில்லை. உடனே ஜெர்மனி பெல்ஜியத்தின்மேல் படையெடுத்தது. இங்கிலாந்துக்கு ஜெர்மனியின் எண்ணப்படி ஒரு பக்கமும் சேராமல் இருப்பது மிகவும் கேவலமான காரியமாகக் காணப்பட்டது. ஆகவே தங்களை அவமதிப்பாய் எண்ணின ஜெர்மனியை யுத்தத்துக்கு தயாராயிருக்க அறிவித்தது. இது ஆகஸ்ற்று மாதம் 4-ம் தேதி நடுராத்திரி நடந்தது. அதுமுதல் பிராஞ்சுக்காரருக்கு உதவிசெய்து ஜெர்மானியரை எதிர்க்கவேண்டுமென்று வேண்டிய பிரயத்தனங்கள் இங்கிலாந்தில் செய்யப்பட்டன. இங்கிலாந்து யுத்தத்துக்கு கேட்டதும், தனக்கு உதவிசெய்யாமல் பிராஞ்சுக்கு உதவிசெய்யயெத்தனித்ததும் ஜெர்மனிக்கு அதிசயத்தையும், ஏமாற்றத்தையும் உண்டுபண்ணிற்று.

நல்லது பிரிட்டிஷ் ராஜ்யத்திற்குள்ளேதானே இதுவரையிலுமுள்ள வாக்குவாதம், பிரிவினை, விரோதம் இவைகளெல்லாம், இப்படிப்பட்ட ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்போகிறது என்றவுடனே, நின்றுபோய் ஒரே ஐக்கியமாய் ஒருவருக்கொருவர் உதவிசெய்ய ஆரம்பித்தார்கள். ஏனெனில் ஜெர்மனியின் சேனை மிகவும் பெரியதாயிருந்தது. அதன்றி பிரிட்டிஷ் ராஜ்யத்தின் கீழுள்ள எல்லா மாகாணங்களும் உடனே தங்கள் சேனைகளை பிரிட்டிஷ்காரருக்கு உதவியாக அனுப்புவோம் என்று வாக்குக்கொடுத்தன. நாம் எல்லாரும் அறிந்தபடி இந்து தேசத்திலிருந்து இந்திய பட்டாளத்தார் பிரிட்டிஷ் பட்டாளத்தோடு சேர்ந்து யுத்தஞ்செய்யப் போயிருக்கிறார்கள். நல்லது இங்கிலீஷ், பிராஞ்சு இந்த இரண்டு பட்டாளங்களும் தயாராகும் முன்னாலே ஜெர்மனி பெல்ஜியத்தின்மேல் படையெடுக்க, அவர்கள் தனிமையாய் ஜெர்மானியரை எதிர்க்கவேண்டியதாயிற்று. ஆனால் பெல்ஜியரோ தனித்தும் மகா தைரியமாய் அவர்களோடு எதிர்த்து போர் செய்தார்கள். வெகுநாள் போர் நடந்தபின்தான் ஜெர்மானியர் ஜெயித்தார்கள். அந்த நாட்களுக்குள்ளே, பிராஞ்சுக்காரரும் இங்கிலீஷ்காரரும் ஒன்று சேர்ந்து தங்களை யுத்தத்துக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டார்கள். அப்படியே ஜெர்மன்காரர் பிரான்சுக்குள் பிரவேசிக்கையில் ஒரு பலத்த சேனை தங்களை எதிர்க்க ஆயத்தமாயிருக்கிறதைக் கண்டார்கள். பிராஞ்சு தலைநகராகிய பாரிஸ் பட்டணத்தைப் பிடிக்க அவர்களுக்கு முடியாமல் போய்த் திரும்பிவிட்டார்கள். என்றாலும் எதிரிகள் ஒருவரோடு ஒருவர் மைல்களாக நின்றுகொண்டு இன்னமும் யுத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். வர்த்தமானப் பத்திரிகைகளில் நாம் வாசிக்கிறபடி ஜெர்மன் ஆஸ்திரியா இவ்விரு ராஜ்யத்தோடும் பிராஞ்சு, இங்கிலீஷ், இந்திய ராஜ்யத்தார் யுத்தஞ் செய்கிறார்கள். இவர்கள்தான் ஜெயிப்பார்கள்போல் தோன்றினாலும் இந்தப் பயங்கரமான யுத்தம் எப்போ முடியுமென்றும், என்னமாய் முடியுமென்றும் ஒருவராலும் சொல்லமுடியாது.



ஜெர்மானியர் பக்கம் என்னென்ன நடக்கிறதென்று ஒருவருக்கும் திட்டமாய்த் தெரியாது. ஏனெனில் ஒரு விஷயத்தையும் வெளியே அறிவிக்கக் கூடாது என்றிருப்பதால்தான். நமக்கு ஒன்றுதெரியும். ருஷியர் கொஞ்ச நாளுக்குமுன்னே ஜெர்மனி, ஆஸ்திரியா தேசங்களின் கீழ்பாகத்தின்மேல் படையெடுத்து, ஆஸ்திரியரை அநேக இடங்களில் முறிய் அடித்தும் இருக்கிறார்கள். பிரான்சை ஜெயித்துவிட்டு அப்புறம் ருஷியரை ஜெயிக்கலாம் என்று ஜெர்மானியர் எண்ணியிருந்ததற்குப் பதிலாய் ருஷியர் அவர்களுடைய ராஜ்யத்தை ஜெயிக்க படை எடுத்திருந்தார்கள். என்றாலும் சில இடங்களில் ருஷியரை ஜெர்மானியர் மகா பயங்கரமாய் முறியடித்தார்கள்.

நன்றாய் நிதானிக்கக்கூடியவர்களெல்லாரும், எப்படியாகிலும் ஜெர்மானியர் கடைசியில் ஜெயிக்கப்பட்டுப்போவார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனாலும் முடிவு என்னமாய் இருக்கும் என்று ஒருவராலும் தீர்மானமாய் சொல்லமுடியாது. அநேக ஆண்டுகளாக இராணுவ வீரத்தில் சிறந்தவர்கள் என்று எண்ணப்படுகிற ஜெர்மானியருடைய நம்பிக்கை இனிமேல் அற்றுப்போகும்போல் தோன்றுகிறது. இந்த ஏற்பாடு ஐரோப்பாவுக்கே பெரிய தொந்தரவை கொடுத்தது. அதன்றி மற்ற தேசங்களிலும் தற்காலம் நடக்கும் குழப்பத்தை போலொத்தவைகளுக்கும் யுத்தத்துக்கும் தயார்செய்ய ஏராளமான பணச்செலவை உண்டாக்கிவிட்டது. மேலும் இனிமேல் நடக்கும் யுத்தங்கள் ஒன்றும் இப்போது நடக்கும் யுத்தத்தைப்போல் ஒருபோதும் பயங்கரமான யுத்தம் அல்ல. இதுதான் கடைசிப் பெரிய யுத்தம் என்று எண்ணப்படுகிறது. இனிமேல் ஜாதிகளுக்குள் நடக்கும் யுத்தங்களுக்குப் பதிலாக தீமைக்கு விரோதமானதும் பரிசுத்தத்துக்கு அனுசரணையுமான யுத்தங்கள் நடத்தப்படும்.

நமது இந்து தேசத்தில் ஜனங்களுக்குள்ளே அனுவசியமாய் உற்பவித்திருக்கும் மன ஆயாசத்தையும் பயத்தையும் அதைரியத்தையுங்குறித்து சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். உண்மையில்லாத அநேக யுத்த சமாச்சாரங்கள் பிரசுரிக்கப்பட்டு அநேகருக்கு அதிக சஞ்சலத்தை கொடுக்கிறது. அதைரியப்பட்டுப் போகிறார்கள். ஜனங்களுக்கோ அச்செய்திகள் பொய்யென்று அறிந்துகொள்ளுகிறது கூடாத காரியமாயிருக்கிறது. நான் தங்கியிருந்த இடத்தில் ஒரு பிரகாசமான நட்சத்திரம் வானத்தில் ராத்திரிதோறும் காணப்பட்டது. அதை நாம் ஒவ்வொரு ராத்திரியிலும் காணலாம். என்றாலும் அது நமது சத்துருவின் ஆகாய கப்பல்களிலொன்று என்றும் உளவுபார்க்க வந்ததென்றும் அநேக இடங்களில் பொதுஜனங்களெல்லாரும் பேசிக்கொண்டார்கள். ஜெர்மானியர் ஆகாயக்கப்பல்களை இத்தேசத்துக்கு அனுப்புவது கூடாதகாரியம். ஆகையால் அவைகளைக்குறித்து பயப்படவேண்டியதற்கவசியமில்லை. இதேபிரகாரம் பேசிக்கொள்ளப்படுகிற மற்றசமாசாரங்களெல்லாம் நாம் நம்பக்கூடாது. உனக்கு போதுமான முகாந்தரம் கிடைக்குமளவும் முன்னே சொன்ன சமாச்சாரங்களைப்போலொத்தவைகளை நம்பி பயப்படாதே.

## A JAPANESE BANKER.
## ஒரு யாப்பானிய பணக்காரி.

யாப்பானிய ஸ்திரீகளை ஜனங்கள் அதிகம் மதிக்கிறார்கள். பௌத்தமதமும் இராணுவ ஜீவியமும் அவர்களுடைய முகமையை குறைத்து அந்தப்புரத்தில் அவர்களை ஒதுக்கிவிட்டன. ஆனாலும் யாப்பானிய தாய்மாரும் மனைவிகளும் அதிக மரியாதையோடு நடத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். ஸ்திரீகளும் தங்கள் தேசத்துக்கு செய்யவேண்டிய கடமைகளை நன்றாக செய்துமுடிக்கக்கூடும் என்கிற விஷயத்தை டோக்கியோவி

னுள்ள சீனோ பொக்கிஷ சாலையின் தலைமையாயுள்ள சீனோ என்னும் அம்மாளின் ஜீவியத்தில் காணலாம்.

அவர்களுடைய முயற்சிகளை சிறிது காலத்துக்குமுன் வெளிப்பட்ட ஒரு யாப்பானிய பத்திரிகையில் விசேஷித்து காட்டியிருக்கிறது. சீனோ அம்மாளின் புருஷன் ஒரு விர்த்தியுள்ள வியாபாரி. தன்னுடைய சொந்த ஊரிலே ஒரு பொக்கிஷ சாலையை ஏற்படுத்த தீர்மானித்திருந்தான். ஆனால் அவனுடைய எண்ணம் கைகூடிவருமுன் மரித்துப்போனான். அவனுடைய பெண்ஜாதி தன்னுடைய எஜமானனின் ஏற்பாடுகளை செய்துமுடிக்க தீர்மானம்பண்ணினாள். ஆனால் தன்னுடைய ஊரில் அல்ல டோக்கியோ நகரத்தில் அந்த வேலையை தொடங்கினால் அதிக விர்த்தி உண்டாகுமென்று உறுதிப்படுத்திக்கொண்டாள். அப்படியே அந்த நகரத்திற்குப் போய் அந்தபுரத்திலுள்ள ஓர் இடத்தில் ஒரு நல்ல இடத்தை விலைக்கு வாங்கினாள்.

அங்குள்ள ஒரு பொக்கிஷ சாலையில் வேலை கற்றுக்கொள்ளும்பொருட்டு தன் சுவிகார புத்திரனை ஒரு வேலையில் வைத்தாள். அவன் வேலையில் திறமையான போது ஏழரை லக்ஷம் ரூபாயை முதலாக வைத்து சீனோ பொக்கிஷ சாலையை ஸ்தாபித்தான். இந்த புதிய ஸ்தாபனம் குடும்பத்திலுள்ள அநேக அவயவத்தாரால் வேலை நடத்தப்பட்டு வந்தது. அதின் முதல் வருஷத்தின் வேலையில் அதிக லாபம்கிடைத்தது, அதாவது நூற்றுக்கு ஆறு லாபம் கிடைத்தது.

சீனோ அம்மாளுக்கு இப்போது எழுபது வயது. ஒவ்வொருநாள் காலையிலும் தலைமை உத்தியோகஸ்தனுடைய ஆபிசுக்கு வந்து பொக்கிஷ சாலைகளின் வேலைகளை எல்லாம் மேற்பார்க்கிறார்கள். அவர்கள் சாதாரண உடையை உடுத்தவர்களும் யாவராலும் அண்டிக்கொள்ளப்படக் கூடியவர்களும் தன் வேலையாட்களால் அதிக மதிக்கப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள். வாஸ்தவமாகவே தன்னுடைய ஸ்தாபனத்திற்கு மெய்யான தலையாயிருக்கிறார்கள். கடன் கொடுப்பதிலும் பணம் வாங்குவதிலும் இந்த அம்மாளுடைய உத்திரவு வேண்டும். அங்குள்ள ஸ்தாபனத்தில் எல்லாரையும்விட தேர்ந்த உக்கிராணக்காரி. தன்னுடைய வேலையாட்களோடு அதிக பட்சமாயும் அதிக இரக்கமாயும் இருப்பார்கள். இவர்களிடத்தில் புத்திக்கூர்மையும் சுறுசுறுப்பும் பெருந்தன்மையும் அதிகமாய் உண்டு. அவர்கள் எப்போதும் ரெயிலில் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்வார்கள். அவர்கள் ஒரு ரெயில்வே கமபனியில் ஒரு பெரிய அங்கமானபோது முதல் வகுப்பு டிக்கட்டு அவர்களுக்கு கொடுக்கப்பட்டபோதிலும் அவர்கள் மூன்றாம் வகுப்பிலே பிரயாணம்பண்ணினார்கள். ஒரு ரெயில்வே உத்தியோகஸ்தன் அதற்கு ஆக்ஷேபித்தபோது தனக்கு அந்த ரெயிலில் கொஞ்சம் உரிமை உடையதாகையால் பிரயாணிகளுக்கே சகல மரியாதையையும் செய்யவேண்டுமென்றும் தன்னுடைய இடத்தை முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கியிருந்தும் இடம் கிடையாதபடியால் தாழ்ந்தவகுப்புக்கு போகும் ஜனங்களுக்கே கொடுப்பதாக மறுஉத்திரவு சொன்னார்கள். அவர்கள் அநேக தருமங்களைச்செய்தார்கள். ருஷியாவுக்கும் யாப்பானுக்கும் சண்டை ஆரம்பித்தகாலத்தில் தன் தேசத்திற்கு பண உதவிசெய்தவர்களில் இவர்கள் முதன்மையானவர்கள். சாயந்தர நேரங்களில் தன்னுடைய பேரப்பிள்ளைகளுக்கு கதை சொல்வதிலும் பாடங்களை கேட்பதிலும் கின்னர ஓசையைக் கேட்பதிலும் தன் நேரத்தை சந்தோஷமாக கழிக்கிறார்கள்.

“யதார்த்தம்” என்கிறவார்த்தை அவர்களுடைய குடும்பத்தில் சட்டப்பிரமாணம். தன்னுடைய பிள்ளைகளாவது பேரபிள்ளைகளாவது தப்பிதம் செய்யும்போது இந்த சட்டபிரமாணம் தொங்க வைத்திருக்கும் இடத்திற்கு கொண்டுபோய் அதை பார்க்கச் சொல்லுவார்கள்.

Vol. XXVIII. Registered No. M. 209 No. 7.

...OF THE RE... 19 FEB 19.. MA..RAS

JANUARY, 1915

# மாதர் மித்திரி.

# Tamil Woman's Friend

"MATHAR MITHIRI"

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு, கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபால் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபால் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபால் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்' பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... .... | 99 |
| உண்மையான பெரியோரின் தாழ்மை .... .... .... | 100 |
| மேல் உலகம் .... .... ... .... .... | 100 |
| இந்தியாவின் பஞ்சங்கள் .... .... .... .... | 101 |
| தன்னைத்தான் சார்ந்திருத்தல் .... .... .... .... | 103 |
| கஷ்டப்படாமல் குழந்தைகளைப் பெற்றுவளர்த்தல் .... .... | 105 |
| சிறுபெண்ணும் எறும்பும் .... ... ... .... | 107 |
| சிகரெட்: அதினாலுண்டாகும் தீமைகள், அதினோடு எதிர்த்து நிற்குதல் .... | 108 |
| வர்த்தமானக் குறிப்புகள் .... .... .... .... | 110 |
| அசுத்த எண்ணங்களை அகற்றிவிடக்கூடிய ஜெபம் .... .... | 112 |
| அதிக விசேஷித்த தைரியம் .... .... .... .... | 112 |



# மாதர் மித்திரி.

புத். உ௮. ௧௯௧௫ ௵ - ஜனுவரி ௴. இல. எ.


## PRAYER FOR THE NEW YEAR.

இராகம், தோடி. ஆதிதாளம்.

### பல்லவி.

ஞான திரி முதலொரு பொருளே, நரர் சுகமொடு வர அருள்,
ஞான திரி முதலொரு பொருளே.

### அநுபல்லவி.

வானவர் துதி செய் அநாதி குருபரனே, நீ நீ நீ நீ
மானுவேல் ஏசெனும் நாம சங்கீதனே,— ஞான

### சரணங்கள்.

1. மாதுக் குரைத்த ஆதி வார்த்தையின் வித்தே,
மண்ணில் ஈசாயின் வேராய் வழுத்தும் விண் முத்தே,
வேதப்ரமாணம் ஈந்த ஆறு லட்சண சித்தே,
விளங்கும் திருச்சபையில் இலங்கும் அரூப வஸ்தே,— ஞான

2. நித்தம் விக்கினம் வாராமல் ரட்சித்த நன்னேசா,
நெஞ்சில் கவலை, துயர் நீக்கும் சந்தோஷா,
சத்துருப் பசாசின் முடி தகர்த்த உல்லாசா,
சந்ததம் இச்சபையை ஆதரிப்பாய், சர்வேசா.— ஞான

3. புவியில் அநேக நரர் போயினர் முன்மாண்டு;
பூர்த்தியாய்க் காப்பாற்றி வைத்தீர் புகுத இவ்வாண்டு,
திவ்ய திருச்சபையோ சிறிய கடுகுப் பூண்டு
திரண்ட மரம்போலாகிச் செழிக்கவும் நீண்டு.— ஞான

4. தின முனதருள் புரி சீயோன் அனுகூலா,
தேசிகர் உளம் களிக்கச் சிறக்கும் நன்னூலா,
மன நலம் தரும் ஒரு பரகுரு பாலா,
வருட முதலில் புது வரமருள், சீலா.— ஞான

THE HUMILITY OF THE TRULY GREAT.

## உண்மையான பெரியோரின் தாழ்மை.

ஒருவன் பெரியவன் என்று அழைக்கப்படுவது உண்மையானால் அதற்கு முதலாம் ரூபகாரம் அவன் எப்பொழுதும் தாழ்மை உடையவனாயிருப்பான். அதினால் அந்த மனிதனுக்கு ஒரு காரியமும் செய்யத்திராணி இல்லை என்பது அர்த்தமாகாது. அவன் தன்னுடைய அபிப்பிராயங்களை மற்றவர்களுக்குச் சொல்லும்போது ஒருபோதும் தவறமாட்டான். தன்னால் செய்யக்கூடிய காரியங்கள் என்னவென்றும், தான் பேசக்கூடிய விஷயங்கள் எவையென்றும் நன்றாய் அறிவான். அதுமாத்திரமல்ல, உலகம் செய்யக்கூடியது எது, அதுபேசக்கூடியது எதுவென்றும் அறிவான். எல்லாப் பெரிய மனிதரும் தங்களுடைய சொந்தவேலை என்னவென்று நன்றாய் அறிவார்கள். அதன்றி அவர்களுக்கு தங்கள் வேலையை நன்றாய் செய்யத் தெரியும். தாங்கள் ஒரு கூட்டத்தில் ஏதாகிலும் பேசினால் அது மற்றவர்களும் சரியென்று ஒப்புக்கொள்ளக் கூடியதாயிருக்கும். ஆனால் அவர்கள் தங்களைப்பற்றி பெருமையான எண்ணம் ஒருபோதும் கொள்ளமாட்டார்கள். அவர்கள், மற்ற மனிதர்கள் தங்களை விழுந்து கும்பிடவேண்டுமென்றும், ரொம்ப மதிக்கவேண்டுமென்றும் பெருமையான எண்ணம் கொள்ளுகிறதேயில்லை, அவர்கள் தங்களில் ஒரு சக்தியுமில்லையென்றே எப்போதும் நினைப்பார்கள். பெருமையான எண்ணம் அவர்களிலில்லை. அவர்கள் வேலை செய்கையில் தான் செய்ய வேண்டும் என்கிற நினைவோடு, தங்கள் வேலையைச் செய்கிறார்கள், தங்கள் வேலையைத் தாங்கள் செய்யாமல் அவர்கள் இருக்க முடியாது.

THE WORLD BEYOND.

## மேல் உலகம்.

பிராஞ்சு தேசத்தில் உள்ள பெரிய நூலாசிரியர்களில் விக்டர் ஹயூகோ என்பவரும் ஒருவர். அவருடைய ஜீவியம் மகா விசேஷித்த அனுபவங்களால் நிறைந்துள்ளன. அவருக்கு அனேக விஷயங்களில் தவறுதல்கள் உண்டாயிற்று. ஆனாலும் மிக மேன்மையான பதவிக்கு வந்தார். தமது ஜீவியத்தில் தாம் பார்த்த விசேஷங்களையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு புத்தியாக பின்வரும் வார்த்தைகளை எழுதியிருக்கிறார்.

“தற்காலத்தில் ஒரே மனிதனிடத்தில் எல்லாக் காரியத்தையும் வைப்பது மிகவும் துர்லபம். பூமியிலே தனக்கு எல்லாம் கிடைக்கும் என்று எண்ணி பூலோக ஜீவியம் செய்வது மகா கஷ்டமே. இதினால் துன்பம் வரும்போது தேவனுடைய சட்டமாகிய பாடுபடுதல், நரகத்தின் சட்டமாகிய அவநம்பிக்கையாகி விடுகிறது. இதினால் நமது கடமை யாதெனில் எல்லாருடைய முகங்களையும், வானத்திற்கு நேராக ஏறெடுக்கப்பண்ண வேண்டும். நமது ஜீவியத்தின் முன்பாகமாகிய மோட்சத்துக்கு எல்லா ஆத்துமாக்களும் நடத்தப்பட பிரயாசப்பட வேண்டும். நாம் எப்படியாகிலும் இறந்து போகிறது நிச்சயம். அதினால் இவ்வுலகத்தில் இருப்பதில் பிரயோஜனம் என்ன என்று நினைப்பது மகா புத்தியீனம். இவ்வுலக ஜீவியம் ஒருவகையான இருட்டு. நாம் நல்லவர்களாய் நடப்போமானால் இந்த இருட்டு வெளிச்சமாக மாறி, வேறொரு இன்பமான உலகத்துக்குள் பிரவேசிப்போம். இவ்வுலகத்திலுள்ள கஷ்ட நஷ்ட துன்பங்களெல்லாம், அந்தப் பரம காட்சியின் எண்ணத்தினால் மாத்திரம் லேசாக இருக்கும், பரிசுத்தமாக இருக்கும். எத்தனையோ மாற்றங்கள் நிறைந்துள்ளவாயிருக்கிற இப்பூலோக ஜீவியம் அழிந்துபோகும். ஆனால் அந்த மேலோகமோ எப்போதும் நிலைநிற்கும். இந்தக் காட்சிதான் என் கண்முன் எப்போதும் காணப்படுகிறது. என்னுடைய ஆத்துமாவுக்கு முசிப்பாறுதலையும் நிச்சயத்தையும் கொடுக்கிறதும் அந்த நம்பிக்கைதான்.”



16251

INDIAN FAMINES.

## இந்தியாவின் பஞ்சங்கள்.

நமது இந்து தேசத்தை முன்னே இந்து அரசர்களும் மகம்மதிய அரசர்களும் ஆண்டு வந்தார்கள். அக்காலத்தில் கொடிய பஞ்சங்கள் உண்டாகவில்லை. அடிக்கடியும் வரவில்லை. ஆனால் இப்போ பத்து பன்னிரண்டு வருஷங்களாக கொடிய பஞ்சங்கள் உண்டாகி இந்து தேசத்தில் பல பாகங்கள் மகா நிர்ப்பந்த நிலைமையிலிருக்கின்றன. இதற்கு காரணம் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் அரசாட்சிதான் என்று அநேக ஜனங்கள் நினைக்கிறார்கள்.

இது உண்மையல்ல என்று நாம் ரூபித்துக் காண்பிப்பது மகா கஷ்டம். ஏனென்றால் நாகரீகமில்லாத ஜனங்கள் தாங்கள் கண்டதும், அனுபவித்ததுமான பஞ்சகாலத்தைக்குறித்து வெகு லேசாய் ஞாபகம் பண்ணிக்கொள்ளலாம். ஆனால் வெகு காலத்திற்குமுன் உண்டான பஞ்சங்களைக்குறித்து அவர்கள் கேள்விப்பட்டது மாத்திரமேயன்றி கண்ணால் காணவில்லை. ஆதலால் அதைக் குறித்து மற்றவர்கள் இந்தக் கொடிய பஞ்சங்களெல்லாம் அடிக்கடி வரக்காரணம் பிரிட்டிஷ்காரருடைய கொடிய அரசாட்சிதான் என்று சொல்லும்போது உடனே நம்பிக்கொள்வார்கள். இதினிமித்தம் பெரிய துன்பங்கள் வரும்.

சில நாட்களுக்கு முன்னே ஒரு புஸ்தகம் பிரசுரமாச்சுது. அதிலே பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இந்த பஞ்சங்கள் உண்டாகிறதற்கு காரணமானதொன்றும் ஒருபோதும் செய்ததில்லையென்று அனேக திருஷ்டாந்தங்களாலும், உண்மையான சங்கதிகளாலும் ரூபித்துக் காட்டியிருக்கிறது. பூர்வத்தில் நடந்த சங்கதிகளை காண்பிக்கிற ஆதாரங்கள் அல்லது றெக்கார்டுகள் இல்லை. அதினால் அப்போது நடந்த பஞ்சங்களைக் குறித்து ஒன்றும் திட்டமாய் எழுதப்படவில்லை. ஆனால் இந்துப்புராணமாகிய றிக் வேதத்தில் (Rig Veda) உள்ள பாடல்களில் மழைக்காக எத்தனையோ ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகிறதுபோன்ற அனேக பாடல்கள் நிறைந்திருக்கிறது. அதினால் இப்போது போலவே முன்னேயும் பஞ்சங்கள் உண்டாயிருந்தன என்று அறியலாம். கி. பி. 917-முதல் 918-வரையும் காஷ்மீரத்தில் கருப்புக்காலம் உண்டாகி, ஜனங்கள் மகா கஷ்டத்துக்குள்ளும் நஷ்டத்துக்குள்ளும் ஆனார்கள் என்றும், ஜீலம் நதி முழுவதும் பிரேதங்களால் நிறைந்திருந்ததென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்றி மந்திரிமார்கள் அதிக கடும் விலைக்கு அரிசி விற்று தனவந்தரானார்களாம். பூர்வகால புஸ்தகமொன்றில் இவ்வளவு திட்டமாய் அக்காலத்து கொடிய அரசாட்சியையும், கொடுமையையும் குறித்துச் சொல்லியிருக்க, பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இதற்கு விரோதமாக, பஞ்சகாலத்தில் எத்தனையோ நன்மைகளைச் செய்து வருவதை நமது கண்கள்

715m211,M87

காணவில்லையா? அல்லது காதுகள் கேட்கவில்லையா? 1291-ம் வருஷம் மகா கொடிய ஒரு பஞ்சம் வந்தது. மறுபடியும் 1348-முதல் 1345-வரை நீண்ட பஞ்சமும் மழைத்தாழ்ச்சியும் வரவே சுல்தான் மகம்மதுவின் ராஜ்யம் முழுவதையும் இல்லாமலாக்கிவிட்டது. பஞ்சம் ஒரு தேசத்தில் வருவது சுயமாக அல்ல, ஏதாகிலும் பெருநஷ்டம், மழைத்தாழ்ச்சி, யுத்தம் முதலியவைகளால்தான் ஆரம்பிக்கிறது. 1597-ம் வருஷம் ஜாம்மிற்டா என்னும் சிந்து நாட்டு அரசன், மிக நிஷ்டூரமான காரியங்களை நிறைவேற்ற அந்நாட்டு தானியங்களையெல்லாம் அழித்துவிட்டான். அதற்கு 13-வருஷங்களுக்குப்பின் மிர்சா ஷா ஹுமாயுன் தானியம் விதைக்கவேகூடாது என்று கட்டளையிட்டு ஜனங்களெல்லாரிடமும் பத்திலொன்று வாங்கின வரியினால் தரித்திர நிலைமையிலானார்கள்.

1396-ம் வருஷம் ஆரம்பித்த பஞ்சம் 12-வருஷங்களாக இருந்ததென்று ஒரு இந்திய கட்டுக்கதை உண்டு. ஆனால் இது முழுவதும் நிஜமன்று. ஒரு சங்கதி உண்மை. தக்ஷணத்தில் அடிக்கடி பஞ்சம் உண்டாகிறதென்பது நிச்சயம். 1433, 1630, 1660, 1685-இந்த வருஷங்களில் மகா கொடிய பஞ்சங்கள் உண்டாயிருந்தது என்று சரித்திரத்தில் வாசிக்கிறோம்.

சரித்திரம் மெய்யானால் இவ்வித கொடிய பஞ்சகாலத்தில் என்ன பயங்கரமான துன்பமும், வருத்தமும் ஜனங்களுக்கு உண்டாயிருக்கும்! எத்தனையோ ஜனங்கள் மாண்டிருப்பார்கள்! தற்காலத்திய ஜனங்களால் அதை கிரகிக்க முடியுமோ! அப்பேர்ப்பட்ட பஞ்சம் ஒன்றில் அநேக ஜனங்கள் பசியின் கொடுமையை ஆற்றமுடியாமல் திரள்திரளாய் குடும்பம் குடும்பமாய் ஒரு ஆற்றில் முழுகி அமிழ்ந்து உயிரை விட்டார்கள் எனக் கேள்வி. அப்போ நடந்தவைகளை மகா பரிதாபமாய் விஸ்தரித்து எழுதியிருக்கிறது. "எத்தனையோ இடங்களில் மனிதர் தங்கள் ஜீவனை ஒரு ரொட்டிக்கு ஈடாகவும், அந்தஸ்தை ஒரு கேக்குக்கு ஈடாகவும் கொடுத்ததோடு, மற்றவர்களுக்கு தானதர்மங்கள் செய்த கைகள் பிச்சைக்காக கைகளை நீட்டுங்காலமும் வந்தது." என்ன பரிதாபம்! சூரத்தில் மாத்திரம் முப்பதினாயிரம் ஜனங்கள் மாண்டார்கள். ஆராய்ந்து பார்த்தால் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் காலத்தில் நமது தேசத்தில் இத்தனை கொடிய பஞ்சம் வரவில்லை. ஜனங்கள் இவ்வித கஷ்டம் அடைய அவர்கள் விடவுமில்லை. பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் காலத்திலும் பஞ்சங்கள் இந்தியாவில் வந்திருக்கின்றன. அதிகமாக ஈஸ்ட் இந்திய கம்பெனியார் காலத்திலேதான். பிரிட்டிஷ்காரர் பஞ்சம் வராமல் தடுக்க தங்களாலான முயற்சி செய்து வருவதோடு பஞ்சம் வந்துவிட்டால் ஜனங்கள் படுகிற கஷ்டத்தை நிவிர்த்தி செய்யவும், ஆகாரம் சவதரித்துக்கொடுக்கவும் தகுந்த ஏற்பாடுகள் செய்வார்கள். வருஷங்கள் செல்ல செல்ல அவ்வித ஏற்பாடுகள் அதிகப்பட்டு வருகின்றன. ஈஸ்ட் இந்திய கம்பெனியார் சில சமயங்களில் தங்கள் கடமைகளில் தவறியிருந்தபோதிலும், பஞ்ச நிவிர்த்தி விஷயங்கள் சுதேச ராஜ்யங்களில் நடக்கிறதைவிட பிரிட்டிஷ் நாடுகளில் அதிகம் நடந்துவந்தது. பிரிட்டிஷ் ராஜாங்கம் வந்ததினால்தான் இந்தியாவில் பஞ்சம் வந்ததென்று ஒருபோதும் சொல்லக்கூடாது. ஏனென்றால் தற்காலத்திலிருக்கிறதைவிட பிரிட்டிஷ்காரர் வருமுன்னே இந்தியாவில் பஞ்சம் அதிகமாயிருந்ததென்றும், அதிகமான நஷ்டத்தை விளைவித்ததென்றும் நம்புவதற்கு அநேக நியாயங்களிருக்கின்றன.



---

## தன்னைத்தான் சார்ந்திருத்தல்.

பையன்களும் பிள்ளைகளும் தாங்கள் பள்ளிக்கூடத்தில் புஸ்தகங்களிலிருக்கிறவைகளை மாத்திரம் படித்தால், படிப்பில் தேறினவர்களாயும், ஜீவியத்தில் நேரிடும் எல்லாக் காரியங்களுக்கும் ஏற்றவர்களாயுமிருப்பார்களென்றெண்ணுகிறார்கள். இது ஒரு பெரிய தப்பிதம். புஸ்தகத்திலிருக்கிறவைகளை மாத்திரம் படிப்பிக்கிற பள்ளிக்கூடம், அதில் படிக்கிற பிள்ளைகளுக்கு செய்யவேண்டிய கடமையில் தவறுகிறது. ஜீவியத்திற்குப் பிரயோஜனமான சில பாடங்கள் பள்ளிக்கூடத்திலேயாவது அல்லது அதற்கு வெளியேயாவது படிக்கப்படலாம். ஆனால் ஒரு பையனாவது பிள்ளையாவது அந்தப் பாடங்களை எங்கேயாவது படிக்காவிட்டால், அவர்கள் ஜீவியத்தில் அநேக தவறுதல்கள் வருமென்பது நிச்சயம். அதாவது ஜீவிய ஓட்டத்தில் வருகிற அநேக கஷ்ட சம்பவங்களில் ஏற்றவிதமாய் நடந்துகொள்ளக்கூடாமலிருப்பார்கள். அநேகர் அப்பாடங்களை அறியாமலே ஜீவிய ஓட்டத்தை முடிக்கிறார்களென்றாலும், அவர்களாவது மற்றவர்களாவது அறியாவிட்டாலும், அவர்களுடைய ஜீவியம் தவறுதலே.

ஜீவிய ஓட்டம் நிச்சயமாகவே பிரயோஜனமாயிருக்கும்படியாக ஒவ்வொரு பையனும் பிள்ளையும் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களென்னவென்று பார்ப்போம்.

அநேகமாயிருக்கிற ' அப்பாடங்களில் விசேஷித்த இரண்டு காரியங்கள் **தன்னடக்கமும், தன்னை சார்ந்திருத்தலுமே.** இவ்விரண்டும் என்னவென்று தெரியுமா? அநேக பிள்ளைகள் தங்களுக்குப் பிரியமில்லாத காரியங்களைத் தங்கள் பெற்றோர் கண்டிப்புப்பண்ணுகிறதினால் செய்கிறார்கள். அவர்கள் எதைச்செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாதென்பதை பெற்றோர் சொல்லும்படியாக எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் இப்படிச்செய்வது ஒருவாறு நல்லகாரியந்தான். ஆனால் எப்போதும் அவர்கள் இப்படிச்செய்ய முடியாது. கொஞ்சக்காலத்திற்குப்பின் அவர்கள் தங்களுடைய சொந்தப் பையன்களையும் பிள்ளைகளையும் நடத்தவேண்டியதிருக்கும். அப்போது அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று யாரிடம் எதிர்பார்க்கக்கூடும்? அப்போது தாங்களே காரியங்களை நடத்தவேண்டியதிருக்குமே. அதை எப்படிச் செய்யவேண்டுமென்பதை அவர்கள் படிக்கவேண்டும். அல்லாவிட்டால் அவர்கள் தங்கள் நாடோடிய கடமைகளை நன்றாய் செய்யமாட்டார்கள். அவர்கள் செய்யவேண்டிய காரியங்களை மற்றவர்களால் ஏவப்படாமல் தாங்களாகவே செய்யப் படிக்கவேண்டும். படியாவிட்டால் அவர்கள் உபயோகமற்றவர்களாயிருப்பார்கள். புருஷர்களாய் தங்கள் குடும்பத்தை ஆதரிக்கவேண்டியதாயிருக்குமானால், அவர்கள் தங்கள் கடமையை நன்றாய் செய்யமுடியாது.

உலகத்திலிருக்கிற ஒவ்வொருவரும் ஐசுவரியனாயிருந்தாலும் ஏழையாயிருந்தாலும், உயர்ந்தோரானாலும் தாழ்ந்தோரானாலும், மற்ற எவராலும் ஏவப்படாமல் தாங்களே காரியங்களை நடத்தப் படிக்கும்வரைக்கும் அவர்கள் ஜீவியம்

தவறுதலாகவேயிருக்கும். இதனால் நாம் மற்றவர்களிடத்தில் ஆலோசனை கேட்கக்கூடாதென்றல்ல, நாம் எப்போதும் நமக்குத் தெரிந்த ஞானமுள்ள சிநேகிதரிடத்தில் ஆலோசனை கேட்டே நடக்கவேண்டும். ஆனால் அந்த ஆலோசனை சரியானதா என்று அறியும் திறமையும், நாம் நடக்கவேண்டிய வழியைத் தெரிந்துகொள்ளும் ஞானமும் நமக்கு இருக்கவேண்டும்.

ஒருபையன் தன்மேல் சார்ந்திருத்தலாகிய இச்சிறந்தகுணத்தை எப்படிப்படித்தானென்று ஒரு சரித்திரம் சொல்லுகிறேன். அமெரிக்காவில் எல்லாராலும் கண்யமாய் எண்ணப்பட்ட ஒரு மனுஷனிருந்தார். அவர் மனஉறுதியுள்ளவராயும், தன்மேல் சார்ந்தவராயும், வாக்குவல்லமையுடைய போதகராயுமிருந்தார். ஆனால் அவர் பள்ளிக்கூடத்தில் படித்த பாடங்களே அவரை மனஉறுதியுடையவராக்கியிருந்தது. அவர் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும்போது ஒருநாள் ஒரு கணக்கை கரும்பலகையில் செய்ய முடியாமலிருந்தார். அவருடைய உபாத்தியாயர் அவரைப்பார்த்து, "அந்தப்பாடத்தை கட்டாயமாய்ப் படிக்கவேண்டும்" என்று அமரிக்கையாய் ஆனால் அதிக உறுதியாய்ச் சொன்னார். அவர் ஒரு போக்கையாவது ஏற்றுக்கொள்ளாமல், "அந்தப்பாடம் படிக்கப்படவேண்டும், அது படிக்க முடியாதென்று எந்தப்போக்கும் எனக்குக் கொடுக்கக்கூடாது" என்று சொன்னார்.

அப்போது பையன் உபாத்தியாயரைப் பார்த்து, "நான் அதை இரண்டுமணி நேரம் படித்தேன்" என்றான். அப்போது உபாத்தியாயர், "அது எனக்குக் கவையில்லை. எனக்குப் பாடம் ஒப்புவிக்கப்படவேண்டும். நீ அதைப் படியாமலேயிருக்கலாம் அல்லது பத்து மணி நேரம் படிக்கலாம், அது உன் பிரியம். ஆனால் எனக்குப் பாடம் ஒப்பிக்கப்படவேண்டும்" என்றார்.

இன்னொரு சமயத்தில், உபாத்தியாயர் ஒரு கணிதத்தை பலகையில் மற்றப்பையன்களுக்கு விளக்கிக் காட்டும்படி அந்தப் பையனை அனுப்பினார். அவன் அதைச் செய்துகொண்டிருக்கும்போது, உபாத்தியாயர் "அது அப்படியல்ல" என்று சத்தமிட்டுச்சொன்னார். பையன் சந்தேகித்து, திரும்பவும் முதலிலிருந்து துவக்கினான். அச்சமயத்திலும் உபாத்தியாயர் கண்டிப்பாய் "அல்ல" என்றார். பையன் தன் மனசு குழம்பி தன் இடத்திற்குப்போய் உட்கார்ந்தான். இன்னொரு பையன் கணிதத்தைச் செய்யத்துவக்கினான். அவன் செய்ததையும் உபாத்தியாயர் "அல்ல" என்று சொல்லி நிறுத்தினார். ஆனால் அந்தப் பையன் அத்தோடு நிறுத்திவிடாமல் கடைசிவரைக்கும் அதைச்செய்து கணக்கை சரியாய் முடித்தான். அப்போது முதல் பையன் உபாத்தியாயரைப்பார்த்து, "நான் அப்படித்தானே செய்தேன். நீர் 'அல்ல' என்று சொன்னீரே" என்றுகேட்டான். அப்போது உபாத்தியாயர் உத்தரமாக, "நான் அல்ல என்று சொன்னபோது நீ ஏன் அது அப்படித்தான்' என்று சொல்லி உன் கணக்கை முடிக்கவில்லை? உன் பாடத்தைப் படிக்கிறது மாத்திரம் போதாது. அது உனக்கு நன்றாய்த் தெரிகிறதென்று நீ பார்க்கவேண்டும். உன் பாடம் உனக்குத் திட்டமாகும் வரைக்கும் நீ அதைப் படித்ததாகச் சொல்லமுடியாது. உலக முழுதுவதும் 'அல்ல' என்று சொன்னாலும், நீ 'ஆம்' என்று சொல்லி, அதை ரூபித்துக்காட்டக் கூடியதாயிருக்கவேண்டும்" என்று சொன்னார்.



இவ்வகையாய் அந்தப்பையன் படித்த பாடம், கணக்கு முதலிய முக்கியமான பாடங்களைவிட அவனுக்கு பிரயோஜனமாயிருந்தது. அவன் மன அடக்கத்தையும் தன்மேல் சார்ந்திருக்கும் குணங்களையும் அடைந்தவனானான்.

---

## MATERNITY WITHOUT SUFFERING.

## கஷ்டப்படாமல் குழந்தைகளைப் பெற்றுவளர்த்தல்.

---

சாதாரணமாய் ஜனங்களுக்குள்ளே இருக்கும் அபிப்பிராயம் யாதெனில் ஒரு ஸ்திரீ குழந்தை பெறப்பெற அவளுடைய தேக சௌக்கியம் கெட்டுப்போவதோடு, பெலவீனமுமதிகப்பட்டுப் போகிறது என்பதே. ஆனால் கடவுள் ஒரு ஸ்திரீயை சிருஷ்டித்தது அவள் இல்வாழ்க்கைக்குள் பிரவேசித்து, பிள்ளைகளை பெற்று குடும்பக்காரியாகி இருப்பதற்காகவுந்தான் என்பதை நாம் அடிக்கடி மறந்து போகிறோம். பிள்ளைப்பேறு என்னும் பாரத்தை தாங்குவதற்கு தகுந்த சக்தியையும், ஏற்பாடுகளையும் அவர் செய்திருக்கிறார். ஒரு ஸ்திரீ பூரண பக்குவமடைய சரீர ஆத்தும சன்மார்க்க வல்லமை அவளுக்கு உண்டு. தன்னை "தாய்" என்று அழைக்கிற சிறு குழந்தைகளை போஷிக்கத்தக்க திராணியும் அவளுக்கு கடவுளால் அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்படிச் சிருஷ்டிக்கப்பட்ட அந்த ஸ்திரீ தன் இஷ்டப்படி நடந்து தன்னைக் கெடுத்துக் கொள்ளும்போதும் அல்லது வேறே தொழில்களில் பிரவேசித்து தன் நேரத்தைப் போக்கும்போதும், இல்வாழ்க்கையில் திடீரென பிரவேசிக்க நேரிட்டால் மனைவியாக தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய சக்தி ஒன்றும் இருக்காது. இயல்பாக ஜீவித்து தன் பலத்தை வீணாக்காவிட்டால், குழந்தைகள் பிறக்கப் பிறக்க பலன் அதிகமாகிக் கொண்டு ஆரோக்கியமாயுமிருப்பாள். அதிக குழந்தைகளை பெற்ற ஸ்திரீகளை நாம் கவனித்தால் மற்ற ஸ்திரீகளை விட அதிக காலம் உயிரோடிருக்கிறதை நாம் பார்க்கிறோம். அதிலிருந்து குழந்தைப்பேற்றினால் ஒரு ஸ்திரீயின் ஆயுள் குறுகிப்போகாது, ஆயுள் நீடிக்கும் என்பது ருசுவாகிறது. அதன்றி இயல்புக்கு விரோதமாய் ஜீவியம்செய்து வந்தால்தான், குழந்தை பிரஸவம், முன்னும் பின்னும் துன்பத்தை உண்டாக்குமேயன்றி மற்றப்படி எப்போதும் சந்தோஷத்தையும் பெலனையும் உண்டாக்கும்.

கலியாணம் பண்ணி பிள்ளைபெற்ற ஸ்திரீகள் கலியாணம் பண்ணாத ஸ்திரீகளைவிட, சரியான ஜீவியம் செய்தால், அதிக காலம் உயிரோடிருக்கிறார்கள் என்பது ரூபித்துக் காட்டப்பட்டிருக்கிறது. கர்ப்பமாயிருக்குங்காலத்தை ஆராய்ந்து பார்த்தால் ஒரு ஸ்திரீ நல்ல சுகமாயிருக்குங்காலமன்றி ஒருபோதும் நோய்ப்பட்ட காலமல்ல. அப்படி ஏதாகிலும் நோய் அச்சமயம் வந்தால், அது அந்த ஸ்திரீயின் கர்ப்ப குற்றத்தினிமித்தம் உண்டானதென்று எண்ணவேண்டுமே யொழிய, இபற்கையால் உண்டானதென்று ஒரு போதும் நினைக்கக்கூடாது.

ஸ்திரீகளின் சரீரம் இயல்பாக பிள்ளைபேற்றுக் கேற்றதாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. அந்த இயல்புபிரமாணத்துக்கு அடங்கி நடக்க இஷ்டமில்லாத ஸ்திரீதான் அதற்கு விரோதமாய் நடந்து தன் தேக சுகத்தையும் ஆத்தும இன்பத்தையும் தன்னைவிட்டு பிரித்துப்

போடுகிறார்கள். நல்லது, இவ்விதமாக கடவுளால் அமைக்கப்பட்ட இந்த இயல்புப்பிரமாணத்தைப் பின்பற்றி ஒரு ஸ்திரீ நடப்பாளானால் பிள்ளைப்பேறு ஒருபோதும் கஷ்டத்தைக் கொடுக்காது.

இதை வாசிக்கிற அநேகர் தங்களுக்குள்ளே "எத்தனையோ ஸ்திரீகள் மகா பெலவீனமாய் ஆயாசமாய் கஷ்டப்பட்டு இருக்கையில், தங்களுக்கு இஷ்டமானாலும் அல்லாவிட்டாலும் பதினெட்டு மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது அதற்கு குறைவாய்கூட அடிக்கடி குழந்தைபெறக் கட்டாயப்பண்ணப்படுகிறார்களே! அது நியாயமா?" என்று கேட்பார்கள். இப்பேர்ப்பட்ட சங்கதிகள் மகா பரிதாபம். அப்பேர்ப்பட்ட நிலைமையிலிருக்கும் ஸ்திரீகளோடு நாம் அதிகம் அநுதாபம் காண்பிப்பதோடு, அந்த ஸ்திரீகளை எப்போதும் சந்தோஷப்படுத்தி அவர்கள் பாரங்களையும் லேசாக்கவேண்டும், அவர்களுக்கு மேலாகத்தக்க புத்தி கற்பிக்க வேண்டும்.

சரீரம் நன்றாக வேண்டுமானால், நம்முடைய புத்தி நன்றாகவேண்டும். நம்முடைய மனதில் ஒரு விஷயத்தைக்குறித்து அதிகமாக நினைத்தால் சரீரமும் அப்படியே இளைத்துப்போகிறது. பிள்ளைப்பேற்றினால் தேகம் பெலவீனப்படும் என்று நினைத்துக்கொண்டே இருந்தால், தேகம் பெலவீனமாகவே போகும். ஆகையால் ஸ்திரீகள் தங்கள் மனதை எப்போதும் தைரியப்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும். ஒரு ஸ்திரீக்கு கடவுள் இயல்பாக அமைத்திருக்கும் சகல காரியங்களையும் கவனித்தால் பிள்ளைகளைப் பெறுமலோ அல்லது ஒன்று இரண்டு மாத்திரம் பெறுவதைவிட ஒரு குடும்பத்துக்கு அவசியமான பிள்ளைகளைப் பெற்று அவர்களை நன்றாக வளர்த்துவருவது எல்லாக்காரியங்களிலும் அதிக மேன்மையானதாய் இருக்கிறது. கலியாணம் பண்ணாத ஸ்திரீயும், குழந்தை பெறாத ஸ்திரீயும், எப்போதும் தன் காரியத்தை மாத்திரம் பார்த்துக்கொண்டு, தன் கண்ணுக்கு இன்பத்தையும், தன் மனதுக்கு களிப்பையும் உண்டுபண்ணுபவைகளை மாத்திரம் எப்போதும் கவனிக்கவேண்டியதிருப்பதால் ஒருவகையான வெறுப்பும் சலிப்பும் உண்டாகிப்போகிறது. ஆனால் பிள்ளைகள் உள்ள தாய்க்கோ தனக்கு வேண்டியவைகள் மாத்திரமல்ல தன் பிள்ளைகளுக்கு வேண்டியவைகளையும் கவனிக்கவேண்டியதிருப்பதாலும், அவர்கள் தன்னை சந்தோஷப்படுத்துவதாலும், முன்னிலும் மேலான காரியங்களைச் செய்ய அவர்கள் பலிவிடுவதாலும், அவள் மனதில் சந்தோஷமும், முன்னிலும் நற்காரியங்களைச் செய்து நம் பிள்ளைகளுக்கு நல்ல மாதிரியைக் காண்பிக்க வேண்டுமென்ற ஆவலும் அதிகப்படுகிறது. ஆகவே அவள் சுகம் விர்த்தியடைந்து ஆயுளும் நீடிக்கிறது.

இல்வாழ்க்கைக்குள் பிரவேசிக்கும் ஒரு புருஷனும், ஸ்திரீயும் தங்கள் குடும்பம் சகலவிஷயத்திலும் மேன்மையுள்ளதாயிருக்க வேண்டுமென்ற ஆவலோடு, அடக்கமுடையவர்களாய், சன்மார்க்க வழியில் ஜீவிப்பார்களானால் அவர்களே உத்தம புருஷனும், உத்தம ஸ்திரீயுமாவார்கள்.

மேற்கூறிய வார்த்தைகள் எம்மா ஏஞ்சல் டிரேக் என்னும் ஓர் டாக்றர் துரைசானியால் எழுதப்பட்ட "கஷ்டமில்லாமல் பிள்ளைகளை பெற்று வளர்த்தல்" என்னும் புஸ்தகத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டது.



## THE LITLE GIRL AND THE ANT.

## சிறுபெண்ணும் எறும்பும்.

சுரோஜா என்னும் பெண் தரையில் உட்கார்ந்துகொண்டு, சுறு சுறுப்புள்ள ஜெந்துவாகிய எறும்பு வேலை செய்வதைப் பார்த்து 'ஓ எறும்பே, நீ என்ன வேலை செய்கிறாய் என்று சொல்லமாட்டையா?' என்று கேட்டாள்.

எறும்பு பிரதியுத்தரமாக: "என்னுடைய வீட்டுக்கு ஒரு புது கதவைக் கட்டுகிறேன். இதைவிட அழகான ஒரு கதவு இருந்தது. அதை இன்னொரு எறும்பு உடைத்துவிட்டது. இந்த வட்ட துவாரம் என்னுடைய புது வாசல்" என்றது.

"ஜன்னல்கள் எங்கே?" என்றாள் சுரோஜா. "எங்கள் வீட்டிற்கு ஜன்னல்கள் கிடையாது. ஆனால் நாற்பது மெத்தைகள் உண்டு" என்று எறும்பு கூறிற்று.

'அதென்ன ஆச்சரியம்! உன் வீட்டைப்பார்க்க எனக்கு எவ்வளவோ ஆசையாயிருக்கிறது' என்றாள் பெண்.

"நல்லது உனக்குக் கூடுமானால் உள்ளே வா. அப்போ நீண்ட நிலவறைகளைக் காண்பாய். அவைகள் வழியாய்ப்போய் எல்லா மெத்தைகளையும் பார்க்கலாம். அவைகள் உள்ளே இருக்கும் சின்ன அறைகளும் மிக நேர்த்தியாயிருக்கும்" என்றது.

'நல்லது, இப்போ நீ என்ன செய்கிறாய்?' என்றாள் பெண். "நான் என் உடுப்பை சுத்தம்செய்கிறேன். ஏனெனில் நாங்கள் எப்போதும் சுத்தமாய் இருக்க விரும்புகிறோம். மயிருள்ள எங்கள் முன்னங்கால்களால்தான் உடுப்பைத் தேய்த்துத் துடைப்போம். நான் செய்கிறதைப் பார். எங்கள் எச்சில்தான் சோப். எங்கள் மெதுவான நாக்குதான் எங்கள் கடற்பஞ்சு" என்றது எறும்பு.

சுரோஜா அதிகம் சிரித்துக்கொண்டு, "நல்லது உன் பிள்ளைகளைக் குறித்து ஏதாகிலும் சொல் பார்ப்போம்" என்றாள்.

"நாங்கள் எங்கள் பிள்ளைகளை மிகப் பட்சமாய் நடத்துவோம். கவலையாய்ப் பார்ப்போம். மழைநாளில் அவைகளை கீழ்த்தட்டுகளுக்குத் தூக்கிக்கொண்டு போவோம். அங்கே நல்ல அனலாயும், தரை உலர்ந்ததாயும் இருக்கும். வெயிற்காலத்தில் மேல்தட்டுகளுக்குக் கொண்டு வருவோம். சில சமயங்களில் அவைகளை வெளியே வெயிலில் கொண்டுவருவோம். நல்லது நான் இப்போது என் வீட்டுக்கு போகவேண்டும்" என்று சொல்லி தன் புற்றுக்குள் ஓடி மறைந்துபோனது.

அப்போ சுரோஜா குனிந்து அந்தச் சிறு துவாரத்துள்ளே பார்க்கும்போது, அவளுடைய கையில் ஏதோ ஒன்று துள்ளிக்குதித்தது. அப்போ அது என்னவென்று பார்த்தால் வெட்டுக்கிளி ஒன்று பச்சை கால்சட்டை, மேல்சட்டை, தொப்பி போட்டுக்கொண்டு வெளியே ஆகாயத்தில் குதித்தது.

சுரோஜா அதைப்பார்த்து: 'நீ எப்படி அவ்வளவு லேசாய் குதிக்கக்கூடும்?' என்றாள்.

"நீ என்னுடைய கால்களைப்பார். பின்னங்கால்கள் மற்றவைகளைவிட இரண்டு மடங்கு பெரிதாயிருக்கிறது" என்று வெட்டுக்கிளி சொன்னது.

"நீ உன் வீட்டை எப்படிக் கட்டுகிறாய்?" என்று சுரோஜா கேட்க:

"நாங்கள் வீடு கட்டுகிறதில்லை. புல்லுக்குள்ளே எங்கள் வீடு இருக்கிறது. எங்கள் உடையும் புல் நிறமாயிருப்பதை

நீ ஒருவேளை கவனித்திருப்பாய். அந்த நிறந்தான் எங்களைப் பாதுகாக்கிறது" என்றது.

"உங்கள் பிள்ளைகளைப் பற்றி கொஞ்சம் சொல்வாயா?" என்றாள் சுரோஜா மறுபடியும்.

"சிறு வெட்டுக்கிளிகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டவுடனே, தாய் தகப்பனைப்போலவே அதிகமான ஜாடையிருக்கும். செட்டைகள் மாத்திரம் சரியான பச்சை நிறமாயிருக்காது. நல்லது நான் இனி ஒரு நிமிஷங்கூட இங்கே நிற்கமுடியாது என்று சொல்லிக்கொண்டே பறந்து போய்விட்டது.

---

CIGARETTE: ITS EVILS AND THE BATTLE AGAINST IT.

## சிகரெட்: அதினாலுண்டாகும் தீமைகள், அதினோடு எதிர்த்து நிற்குதல்.

---

தற்காலம் உலக முழுவதிலுமுள்ள பையன்கள், வாலிபர் இவர்களில் அனேகருக்கு துன்பத்தையும், துக்கத்தையும், சேதத்தையும் உண்டாக்குகிற பயங்கரமான தீமைகளில் ஒன்று சிகரேட். இது மற்ற அனேக தீமைகளுக்கும் ஏவிவிடுகிறதினால் இதைக் குறித்து எல்லாரும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

அதினாலுண்டாகும் தீமைகள் சிலவற்றை பின்வருமாறு ஒரு பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறது. "முதலாவது: அது வாயையும் தொண்டையையும் சுவாசாசயத்தையும் மூடியிருக்கும் மெல்லிய தோல்களில் எரிச்சலும் உண்டாக்கி, அவை தங்கள் வேலையைச் சரியாய்ச் செய்யாதபடிக்கு கெடுக்கிறது. மேலும் அது சுவாசாசயத்தை நடத்தும் நரம்புகளைக் கொஞ்சம் மரத்துப்போகச் செய்கிறதினால் சிகரெட்டு குடிப்பவனது சுவாசாசயத்தில் ஆகாயம் குறைவுபடுவதினிமித்தம் அவன் சங்கடமடைகிறான்.

இரண்டாவது: அது இருதயத்திலுள்ள நரம்புகளைப் பெலவீனப்படுத்தி அதிக விரைவாக அல்லது அதிக மெதுவாக நாடி அடிக்கும்படி செய்கிறது. சிலவேளை அந்தத் துடிப்பை நிறுத்திப் போடுகிறது. அதினால் இருதயம் சாதாரணமாய்ச் செய்யும் வேலையைவிட அதிகமாய்ச் செய்யவேண்டியதாயிருந்தும் முன்போல இரத்த ஓட்டம் சரியாயிருக்கிறதில்லை. ஆகவே சிகரெட்டு குடிப்பவனுடைய இரத்தம் பூரண சிவப்பு நிறமாயிருப்பதற்கு மாறாக நீலம் கலந்த சிவப்புப் போலாகிறது. அவன் உட்கொள்ளும் ஆக்ஸிஜன் அதிக குறைந்த அளவாயிருப்பதினால் இரத்தம் அப்படியிருக்கிறது. அதினால் அவன் அதிக பலவீனப்பட்டுப்போகிறான்.

மூன்றாவது: புகையிலையானது இரைப்பையிலுள்ள ஆகாரத்தை ஜீரணமாக்கும் நீரை அதிகமாய் சுரக்கச்செய்கிறது. குடிகாரன் நினைத்த நேரமெல்லாம் மதுபானம் குடித்துக்கொண்டிருப்பதுபோல சிலர் என்னேரமும் சிகரெட்டு குடித்துக்கொண்டிருப்பதினால் ஜீரண நீர் அனாவசியமாக எப்போதும் சுரந்துகொண்டே இருக்கிறது. அதினால் இரப்பையும் மிதமிஞ்சி வேலைசெய்கிறது. இப்படி அனாவசியமாக உபயோகமில்லாத வேளைகளிலெல்லாம் ஜீரண நீர் சுரந்துகொண்டேயிருப்பதினால் இரைப்பை வெகுசீக்கிரத்தில் பலவீனப்பட்டுப் போகிறதுமல்லாமல், பிறகு ஆகாரம் ஜீரணிக்கிறதற்கு வேண்டிய நீர் சுரக்காமல நின்றுபோகிறது. அதினால் அஜீரணமுண்டாகி வயி



ற்றிற்கு கெடுதியும் தேகத்திற்கு பலவீனமும் உண்டாகிறது.

நான்காவது: சிகரெட்டு குடிக்கும் பையன்களுக்கு அவர்கள் அயர்ந்து நித்திரை செய்யவேண்டிய போதுமான அளவு நித்திரை வராது. அடிக்கடி நித்திரை கெட்டுப்போகும்.

ஐந்தாவது: அவர்கள் எந்த வேலையையும் செய்ய மனமற்றவர்களாய் போய், தேக அப்பியாசத்தைக்கூட அசட்டை செய்வார்கள். இப்படி ஆகாயம் குறைவுபட்டு சுவாசாசயத்திற்கு வேண்டிய போதுமான ஆக்ஸிஜன் இல்லாமல் இருதயம் பெலவீனப்பட்டு நித்திரையும் குறைந்து போகிறதினால் பையன்களுடைய சரீரம் வளரவேண்டிய வளர்ச்சியின் அளவு குறைந்துபோகிறது."

மேலே சொல்லப்பட்ட இவ்வளவு கெடுதிகள் ஒருவனுடைய கேட்டுக்குப் போதுமானவை. ஆனால் இவைமாத்திரமல்ல இன்னும் அதிக கேடான தீமைகளும் சிகரெட்டு குடிப்பதினால் விளையும். பையன்களுடைய புத்திக்கூர்மை குறைந்து மங்கிப்போகிறது. அவர்கள் கவலையற்றவர்களாயும் மந்தமுள்ளவர்களாயும் ஆகிறார்கள். எந்த உத்தரவாதத்தையும் அவர்களால் சுமக்கமுடியாது. படிக்கவும், ஒழுங்காய் தேகாப்பியாசம் செய்யவும், விளையாடவும் அவர்களால் முடியாது. அவர்கள் எப்போதும் தங்கள் சிகரெட்டைப்பற்றியே நினைத்துக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு எவ்விதத்திலும் அது எப்போதும் தேவையாய் இருக்கும். அது கிடைக்காவிட்டாலும், அல்லது கடையில் வாங்கிக்கொள்ளப் பணமில்லாவிட்டாலும் திருட ஆரம்பிப்பார்கள்.

சிகரெட்டு ஒருவனுடைய சன்மார்க்கத்தைக் குறைத்துப்போடும். ஒரு சமயத்தில் பதினைந்து பையன்கள் நியாயஸ்தலத்தில் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டார்கள். அவர்களில் பத்துப்பேர் சிகரெட்டு இல்லாததினால் அதை வாங்கும்படி பணம் திருடினதாக தெரியவந்தது."

அமெரிக்கா கண்டத்தில் இந்த தீயபழக்கம் செய்திருக்கிற தீமை ஜாஸ்தி. அதை எதிர்க்க ஒரு கூட்டக் கட்டுப்பாடு (League) செய்திருக்கிறார்கள். இவர்கள் முதலாவது சிகரெட்டை, மதுவை உண்டாக்கும் வழக்கங்களுக்கு உட்படுத்தியிருக்கிறார்கள். ஜனங்கள் புகையிலையை பலவிதமாக உபயோகிக்கிறார்கள். அது சிகரெட்டில் அதிகமாக சேர்ந்திருக்கிறது. அதைப் பார்க்கும்போது "இது என்ன தீமையைச் செய்யும்?" என்று சொல்லக்கூடியதாயிருப்பதாலும் சுருட்டுப் பிடிப்பதினால் உண்டாகும் புகையைவிட லேசாயும், வாசனை அதிகமாயும் இருப்பதினாலும், லேசாய்ப் புகையை உள்ளே இழுக்கக்கூடியதாயிருப்பதால் வாலிபர் சிகரெட்டை அதிகமாய் விரும்புகிறார்கள். அதினுள் கலந்திருக்கும் வஸ்துக்கள் வெகு சீக்கிரம் புத்தியை ஏமாற்றி, துர்ப்பழக்கத்தை ஜெயிக்கமுடியாதவர்களாக்கிவிடுகின்றன.

ஒருகாலத்தில் சிகரெட்டுகளை அதோடு நைக்கொற்றீன் (Nicotine) என்னும் லாகிரி வஸ்து கலந்திருந்ததால் சாப்பிடக்கூடாது என்று விலக்கியிருந்தது. இப்போதோ அநேகமாய் அதைவிட பயங்கரமான வஸ்துக்கள் அதில் கலந்திருக்கிறதென்றும், அவைதான் ஒரு ஆளின் ஆத்தும சுகத்தைக்கூட கெடுத்துவிடுகிறது என்றும் அறிவோம். லண்டன் லான்ஸற் ('London Lancet') என்னும் பத்திரிகைக்காரர் தங்களால் ஆன பிரயாசப்பட்டு சிகரெட்டு செய்யும் தீமைகளை உண்டாக்குவது எவை என்று பரீட்சித்துப் பார்த்தார்கள். அவை சிகரெட்டு புகையிலை எரிக்கும் சமயம் வெளியாகிறவைகளிலிருக்கின்றன.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

சூரத்து நாட்டில் நவ்சாரி என்னுமிடத்திலுள்ள பார்சிகளுக்கென்று கட்டப்பட்ட பெரிய ஆஸ்பத்திரியில் மிக விசேஷித்த காரியமொன்று நடந்தது. அந்த ஆஸ்பத்திரியில் எல்லாராலும் மிக ஏழையாக எண்ணப்பட்ட ஒரு பார்சி நோயாளி இருந்தார். மற்றவர்கள் கொடுக்கும் ஆஸ்பத்திரி செலவு ஒன்றும் அவரால் கொடுக்கமுடியாது என்று ஜனங்கள் எண்ணினார்கள். அவருடைய வியாதி நீங்கி சுகமாகி அவர் வீட்டுக்குப் போகையில் பெரிய டாக்டரிடம் நன்றி சொல்லி தன் ஜீவகால முழுவதும் சம்பாதித்து வைத்திருந்த 17,000 ரூபாயையும் அவர்கையில் கொடுத்து, அதில் வரும் வட்டியை மாத்திரம் தனக்குக் கொடுக்கவும், தன் மரணத்திற்கு பிற்பாடு அந்தத் தொகை முழுவதையும், தாம் சிகிச்சை செய்யப்பட்ட ஆஸ்பத்திரியை அதிகம் செம்மையாக்குகிறதற்காகச் செலவுபண்ணவேண்டும் என்று கேட்டார். டாக்டர் அதை சந்தோஷத்தோடும் நன்றியோடும் பெற்றுக்கொண்டார். ஆச்சர்ய நன்கொடை!

தூரங்களில் நடக்கப்போகும் பூமியதிர்ச்சியைக் குறித்து அறியக்கூடிய ஒரு விசேஷித்த ஆயுதம் சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். கடந்த ஜூன் மாசம் 25-ம் தேதி, ஸிம்லாவிலிருந்த அப்பேர்ப்பட்ட ஒரு ஆயுதத்தினால் 2,000 மைல்களுக்கப்பால் ஒரு பூமியதிர்ச்சி நடக்கப்போகிறது என்று கவர்ன்மென்டார் அறிந்தார்கள். அது மிகவும் கொடியதாயிருக்கும் என்று எண்ணப்பட்டது. அதற்கு அடுத்தநாள் சுமாத்திராவிலுள்ள பற்றேவியா என்னும் ஊரில் பயங்கரமான பூமியதிர்ச்சி உண்டாயிற்று என்று தந்தி வந்தது. இதற்கும் ஸிம்லாவுக்கும் தூரம் 2,000 மைல் இருக்கும். இந்த பூமியதிர்ச்சியினால் தந்தி சமாச்சாரம் போகும் கம்பிகளும், கடல் வழியாய்ப் போகும் கம்பிகளும் உடைந்துபோயிற்று. கவர்ன்மென்று கட்டடங்களும், அனேக வீடுகளும் விழுந்துபோயின. அனேக ஜனங்கள் மாண்டார்கள். இன்னொரு விசேஷித்த காரியமும் நடந்தது. பவளத்தீவண்டை சென்ற ஒரு கப்பல் அங்கே நின்றுபோனது. அக்கப்பல் நிறைய ஜனங்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் ஒரு தேசத்திலிருந்து மற்றோர் தேசத்திற்கு குடியேறச் சென்றவர்கள். அந்தக் கப்பல் செல்லவேண்டிய இடத்தில் போய்ச் சேரக் குறிக்கப்பட்ட நாளுக்கு தாமதித்ததினால் அதைத் தேட ஆரம்பித்தார்கள். ஆனால் மகா ஆச்சர்யப்படத்தக்கதாய், அந்தப் பூமியதிர்ச்சியினால் அலைகள் அந்தக் கப்பலை தள்ளிக்கொண்டுபோய், ஒரு மோசமும் வராத இடத்தில் கொண்டுபோய்த் தள்ளினது. கப்பலைத் தேடினவர்கள் அந்த இடத்தில் அதைக் கண்டுபிடித்து, அதிலிருந்த ஜனங்களை வேறு இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

கடந்த மார்ச்சு மாசம் கல்குத்தாவில் நடந்த மத்திம சர்வகலாசாலை பரீட்சையில் (Intermediate) ஒரு இந்தியப் பெண் முதன்மையாக ஒப்பேறினாள். அது மிகவும் சந்தோஷமே. அப்பெண்ணின் பெயர் மிஸ் நற்றினி குப்தா. அவள் பெத்யூன் காலேஜில் வாசித்தவள். 400 பேருக்கு மேலாக நின்றாள். அலகபாத்து எம். ஏ. பரிட்சையில் (Literature) கலைஞானபாகத்தில் பிரம் நாத் டாஸ் என்னும் விவாகமான பெண் 400 பேருக்கு மேலாக முதலாவதாய் ஒப்பேறினாள். கலியாணமாகுமுன் அவள் பேர் மிஸ் கான்ஸ்றன்ஸ் மைய டாஸ். அப்போ அவள் லக்னவ் என்னும பட்டணத்திலுள்ள இஸபெல்லா தோபர்ன் காலேஜில் படித்து பி. ஏ. பட்டம் பெற்று, ஐக்ய மாகாணத்திலுள்ள பால்றிமோர் காலேஜில் எம். ஏ. பரீட்சைக்கு வாசித்து அலகபாத்துக்கு வந்து ஒப்பேறினாள்.



இரண்டு வருஷங்களுக்கு முன்னே டைற்றானிக் என்னும் அலங்காரமான பெரிய புகைக்கப்பல் தன்முதல் பிரயாணத்தில், பனிக்கட்டியோடு மோதி உடைந்து, அனேக பிரபுக்களும், ஏராளமான ஜனங்களும் மாண்டதை அறிந்து உலக முழுவதும் துக்கமடைந்திருந்ததை நாம் அறிவோம். மறுபடியும் கடந்த மே மாசம் 29-ம் தேதி இன்னொரு பெரிய புகைக்கப்பல் கன்னடா தேசத்திலிருந்து இங்கிலாந்துக்குப் போகையில் சேதமடைந்தது. அதில் 1,400 பேர் பிரயாணம் பண்ணினார்கள். மூடுபனியிருந்த இடத்தில் நடுராத்திரியில் வேறோர் கப்பல் அதில் மோதி, சில நிமிஷங்களுக்குள் கப்பல் அமிழ்ந்துவிட்டது. அச்சமயம் பிரயாணிகள் தூங்கிக்கொண்டிருந்தபடியால், அபாயத்தை அவர்களுக்கு அறிவிக்கமுடியவில்லை. அதற்கு சமயம் சற்றுகிலும் இல்லை. கொஞ்ச ஜனங்கள் மாத்திரம் ரட்சிக்கப்பட்டார்கள். 1,000 ஜனங்களுக்கு மேலாக மாண்டுபோனார்கள். அந்தக் கப்பலின் பெயர் அயர்லாந்தின் சக்ரவர்த்தினி.' ('Empress of Ireland'.)

ஐக்கிய மாகாணத்தின் முந்தின பிரஜாதிபதியாகிய கர்னல் ரூஸ்வென்ற் துரை, தென் அமெரிக்காவுக்கு கொஞ்ச காலத்துக்குமுன் பிரயாணம் போனார். சாஸ்திர சம்பந்தமாய் அநேக நூதனங்களை அவர் கண்டுபிடித்தார். அவைகளில் முக்கியமானவை நூற்றுக் கணக்கான மைல் நீளமான ஒரு ஆற்றைக் கண்டுபிடித்து, அதை வெட்டித் திருத்தினதே. அந்நதி ஒரு பெரிய காடுநிறைந்த தேசவழியாய் ஓடினது. அந்தப் பிரயாணத்தின் மிக்கப் பாகத்திலும் அவரோடு கூடப்போனவர்களும், அவரும் அதிக கஷ்டத்தை அனுபவித்தார்கள். அதிக விரைவாய்ச் சென்ற நீரோட்டத்தில் அவர்கள் படவுகள் அடிபட்டுப் போயின. நாள்தோறும் சரியான சாப்பாடு அவர்களுக்கு கிடைக்கவில்லை. சிலசமயங்களில் இரண்டு மைல்தூரம் மாத்திரம் ஒருநாள் முழுவதும் போனார்கள். கொஞ்ச கொஞ்சதூரம் மாத்திரம் பிரயாணம் பண்ணக்கூடியதாயிருந்தது. அவருடைய மூத்தமகன் அவரோடு போயிருந்தார். விரைவாய் சென்ற நீரோட்டத்தில் ஒருநாள் அவர் உயிரை இழக்கப்பார்த்தார். ஜுரத்தினால மிஸ்டர் ரூஸ்வெல்றும் மிகக் கஷ்டப்பட்டார். அவரோடு சென்ற ஒருவனுக்கு பைத்தியமுண்டாகி, இன்னொருவனைக் கொன்றுவிட்டு காட்டுக்குள் ஓடிவிட்டான். அதற்கப்புறம் அவனைக்காணவில்லை. இவ்விதக் கஷ்டங்களெல்லாம் அடைந்துகொண்டு, இந்தப் புது ஆற்றைக் கண்டுபிடித்ததோடு சற்றேனும் நாகரீகமில்லாத நிர்வாணிகளான ஜாதியாரையும் கண்டுபிடித்தார்.

## A PRAYER AGAINST EVIL THOUGHTS.
## அசுத்த எண்ணங்களை அகற்றி விடக்கூடிய ஜெபம்.

‘உமக்கு முன்பாக நாங்கள் நாள்தோறும் செய்துவரும் கேவல ஜீவியத்தையும், நடப்பித்திருக்கும் தப்பிதங்களையும் எங்களுடைய இருதயத்தில் உண்டானதும் அங்கே பேணிவைத்திருக்கிறதுமான அசுத்தமான எண்ணங்களைக்குறித்தும், தீமையான விருப்பங்களைக்குறித்தும் நாங்கள் உமது சந்நிதானத்தில் அறிக்கையிடுகிறோம். இவைகளுக்காக எங்களை சிட்சித்து, நாங்கள் செய்கிற ஒவ்வொரு தப்பிதத்தினின்றும் நாங்கள் திரும்புகிறவரை இருதயத்திலே குத்துண்ணப்பட்டு, நாங்கள் வருத்தப்படும்படியாகவும், எங்களுடைய மனசாட்சியானது துன்மார்க்கத்தினாலே கறைப்பட்டு கேவலப்படுத்தப்பட்டு அதில் உண்டாயிருக்கும் களிம்புகளை நீக்க எங்களுக்கு புதிய ஜீவனைத்தரவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறோம்.’

## THE HIGHEST BRAVERY.
## அதிக விசேஷித்த தைரியம்.

ஐக்கிய மாகாணங்களின் பிரஜாதிபதியாகிய வூட்ரோ உயில்சன் என்பவர் கொஞ்ச நாட்களுக்கு முன் பின்வரும் வார்த்தைகளை ஒரு கூட்டத்தில் சொன்னார். அவைகளை நாம் எல்லாரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நலம்; அவைகள் நிஜமானவை.

“யுத்தம் என்பதை நாம் நன்றாய் ஆராய்ந்து பார்த்தால் அது ஒரு நாடகம் போலிருக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய ஆயிரமான கடமைகளை காண்பிக்கிற நாடகக் குறிப்புகள் அதில் உண்டு. நான் ஒருபோதும் யுத்தத்துக்குப் போனதில்லை. சத்துருவின் குண்டு என்மேல் பட்டதில்லை. ஆனாலும் சண்டையில் ஒரு மனிதன் என்மேல் துப்பாக்கி குண்டு அனுப்புவதும், நான் இருக்கிற ஊரிலே வேறோர் மனிதன் என்னைக் கேவலமாய் நிந்தித்துப் பேசுவதும் ஒன்றுபோல்தான். அவன் துப்பாக்கி குண்டு எறிகிறான். மற்றவன் வசச்சொல்லாகிய குண்டு எறிகிறான். அங்கேயும் என் கடமையைக் கஷ்டத்தோடு நிறைவேற்றவேண்டும்; இங்கேயும் அப்படித்தான். துப்பாக்கிகொண்டு சுடும்போது குண்டுபட்டால் என் உயிர் போய்விடும். ஆனால் என்னை நிந்தித்தால் என் இருதயம் காயப்பட்டுப் போய்விடும். நல்லது இப்பேர்ப்பட்ட உலகத்தில் எந்த மனிதன் மிகத் தைரியமும், மன உறுதியும், நல்வழக்கங்களில் மாறாத குணமும் உடையவனாயிருந்து எந்தத துன்பம் வந்தாலும், மற்றவர்கள் எவ்வளவு நிந்தித்தாலும், உற்சாகப்படுத்திப் புகழ்ந்தாலும் ஒரே எண்ணமுடையவனாய், தன் கடமையை சரியாய்ச் செய்வானோ அவன்தான் மனிதர்களில் மிகப்பெரியவன். அப்பேர்ப்பட்ட மனிதரைக் குறித்துதான் ஒரு தேசம் பெருமையாய் பேசக்கூடும். ஆராய்ந்து பார்த்தால் நஷ்டமும் ஜெயமும் ஒரு மனிதனை வஞ்சிக்கிறவைகளேயன்றி வேறல்ல. நம்மைக் குறித்து மற்றவர்கள் புகழ்ந்து பேசினவைகளைக்குறித்து நாம் அடிக்கடி நினைத்து நம்மைப் பெரியவர்களாக எண்ணாமல், நம்முடைய மனச்சாட்சி நம்மைக் குறித்து என்ன சொல்லுகிறது என்றும், மற்றவர்களுடைய மனச்சாட்சி என்ன சொல்லுகிறது என்றும் நாம் நினைக்கவேண்டும்.”

Vol. XXVIII Registered No. M. 209 No. 8

FEBRUARY, 1915

THE REGISTRAR 9 - APR 1915 MADRAS.

# மாதர் மித்திரி.

# Tamil Woman's Friend

## “MATHAR MITHIRI”

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு, கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை. | 115 |
| நல்ல போதனை | 116 |
| பிள்ளைகளுடைய சின்ன சிநேகிதன் | 118 |
| ஒரு சிறு பையனுடைய தீர்மானம் | 119 |
| வர்த்தமானக் குறிப்புகள் | 120 |
| ஐக்கியம் | 122 |
| தொளாயிரம் வருஷங்களாய் மறைந்துகிடந்த ஆபரணங்கள் | 124 |
| சிகரட்டு பிடியை நிவர்த்திக்கும், ஏற்பாடு | 126 |


# மாதர் மித்திரி.


புத். உஅ. ௧௯௰௫ ௵ - பெப்ருவரி ௴. இல. அ.


## INVITATION.

இராகம், உசேனி. ஆதிதாளம்.

### பல்லவி.

நற்கருணைத் திரு விருந்தை நாடுஞ் சகோதரரே,
நம்மைமீட்ட ரட்சண்யத்தைப் பாடுஞ் சகோதரரே.

### அனுபல்லவி.

சற்குருவா யுலகில்வந்து சஞ்சரித்துக் குருசில் நொந்து
சரீரம் நொறுங்குண்ணை நைந்து தளர்ந் தெமக்காய்ச் சோரிசிந்து—நற்கரு

### சரணங்கள்.

1. பரமகுரு சீடரோடும் பந்திதனிலிருந்து,
பாடுபடுமுன் ரா வனுபவித்த திருவிருந்து
வரமிது பாவப்பிணிக்கு வகுத்தவொரேயொரு மருந்து;
வாருங் கூடிவாருமே கமனமாயிங்கே பொருந்து.— நற்கரு

2. அப்பமெடுத்தாசீர்வதித் தவர்கள் கையிற் கொடுத்து,
அருந்துமிதையென் சரீர மாமென்றுரை தொடுத்துச்
செப்பி, என்னை நினைப்பதற்காய்ச் செய்யுமென்றுருரை தடுத்து,
தேவ முனிவடையாமற் செறி அகிதந் தனைவிடுத்து.— நற்கரு

3. பாத்திரத்தைக் கையேந்தித் தோத்திரஞ்செய்தன்று,
பருகுமிதன் புதிய உடன் படிக்கை ரத்தமென்று
காத்திரமாய்மொழி பகர்ந்தார்; கருதுமைந்து புலனைவென்று
கர்த்தனடி சேருமவர் காருண்யத்தையுன்னி இன்று.— நற்கரு

## GOOD TEACHING.
## நல்ல போதனை.

ஒரு ஊரில் ஞானமும் தெய்வ பக்தியும் நிறைந்த ஒரு போதகர் இருந்தார். ஒருநாள் அவருடைய சீஷரில் ஒருவன், வேறொரு சபையானைக்குறித்து கேவலமான ஒரு காரியத்தை பாதிரியாரிடம் சொன்னான். அப்போ பாதிரி "வேறே யாருக்காகிலும் இந்தக்காரியம் தெரியுமா?" என்று கேட்டார். "இல்லை ஐயா" என்றான். "வேறு யாருக்காகிலும் இவ்விஷயத்தை நீ சொல்லியிருக்கிறாயா?" என்றார் மறுபடியும். "இல்லை" என்றான். அப்போ அந்த நல்ல பாதிரி, அவனைப் பார்த்து, "அப்படியானால் நீ வீட்டுக்குப் போய் இயேசுவின் பாதங்களில் அவ்விஷயத்தை ஒளித்துவை. கர்த்தர் உன்னை அந்த மனுஷனிடத்தில் நேராகப்போய் பேச உன்னை ஏவிவிட்டாரானால், அவனிடம்போய் பேசு, வேறொருவரிடமும் இதைச் சொல்லாதே. கர்த்தர் தமது சபையின் ஆட்டைக்குறித்துக் கேவலம் பேசப்பட சித்தமாயிருந்தால் அவரே அதைச் செய்யட்டும். ஆனால் நீ ஒருபோதும் அப்பேர்ப்பட்ட காரியத்துக்கு தூண்டுகோலாய் இராதே" என்றார். **"ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்"** என்றாள் ஒளவையாரும்.

உலகமுழுவதும் மனிதர் ஒரு பாவம் என்றெண்ணாததும் வேறொருவனுடைய குணநிசயத்தைக் கேவலப்படுத்தி அதினால் பேசுவதுமான பாவமான காரியம் ஒன்றுண்டு. அது யாதெனில் மற்றவர்களைக் குறித்து முறுமுறுப்பதாம். அது காற்றைப்போல் பொதுவாயிற்று. பேச்சைப்போல் சாதாரணமாயிற்று. அது எவ்வளவு சாதாரணமாயிருக்குமோ அவ்வளவு பொதுவாய் ஒருவரும் அதைக்குறித்து கவனிப்பதுகூட இல்லை. பொதுவான சில ஜனங்கள் கூடியிருக்கும் ஒரு இடத்தில் சற்றுநேரம் நாம் நின்றால், சற்றுநேரத்தில் யாராகிலும் ஒரு ஆள் ஏதாகிலும் ஒரு விஷயத்தைக்குறித்து முறுமுறுக்க ஆரம்பித்து விடுவதை கவனிக்கலாம். அவ்விஷயம் அங்கிருக்கும் எல்லாருக்கும் நன்றாய்த்தெரியும். அவர்களில் ஒருவருக்கும் அவ்விஷயத்தை நிவிர்த்தி செய்ய முடியாது. அதைக்குறித்து நாம் பேசினதினால் ஏதாகிலும் பிரயோஜனமுண்டோ? இல்லை. அந்த முறுமுறுப்புத்தான் என்ன? "ஒரு தேசம் குளிராயிருக்கிறது, வேறொன்று சூடாயிருக்கிறது, இன்னொன்று வறட்சியாயிருக்கிறது. ஒருவன் என்னைக் கோபமூட்டிவிட்டான், சாப்பாடு கேவலமாய் சமைத்திருக்கிறது, சம்பளம் என் இஷ்டப்படி கிடைக்கிறதில்லை." ஆகவே இப்படி முறுமுறுக்க ஆரம்பித்தால் ஒரு நாளெல்லாம், ஜீவகாலமுழுவதும் முறுமுறுத்துக் கொண்டே இருக்கத்தகுந்த விஷயங்கள் உலகத்தில் உண்டு. ஆகையால் நாம் முறுமுறுப்பதில் பிரயோஜனம் இல்லை. அதற்கேதுவான விஷயங்களை நாம் ஒருபோதும் நினைக்க முதலாய்க்கூடாது. சிலருக்குப் பேசுகிறதற்கு வேறு சங்கதிகள் இல்லாததால் அவ்விதமாய்ப் பேசுகிற வழக்கம் உண்டு. சிலருடைய சாதாரண குணமே இவ்வித முறுமுறுப்பாயிற்று. சிலருக்கு அவர்களுடைய துர்ச்சுபாவம், மற்றவர்களைக் குறித்து முறுமுறுக்க ஏவிவிடுகிறது. நாம் ஒருபோதும் முறுமுறுக்காதிருக்க பிரயாசப்படுவோமாக. அது ஒரு பாவம் என்று நினைத்துக்கொள்வோமாக.

தேவன் உன் ஜீவகாலத்தில் இதற்கு முன்னால் கொடுத்ததைவிட இன்றைக்கு அதிகம் நல்லகாரியங்களை உனக்குக் கொ



டுக்க கூடும். எமர்சன் என்பவர் "உன் இருதயத்தில் ஒவ்வொரு நாளும், வருஷத்தில் முக்கியமான நாள் என்று எழுதிக்கொள்," என்று சொன்னார். அதின் அர்த்தம் யாதெனில் ஒவ்வொருநாளும் நாம் பிரயாசப்பட்டால் மிக நேர்த்தியான நாளாகும் என்பதே. சென்ற காலங்களில் கடந்துபோன மிகநேர்த்தியான நாட்கள், தேவனுடைய நீரூற்றுகளாகிய-அவர் வல்லமை, தயை, அன்பு இவைகளை ஒருபோதும் குறைக்காது. நாம் தாராளமாய் இன்னமும் அவரிடம் கேட்டதில்லை. நாம் அவருக்கு கொடுத்தவைகளில் அதிகம் மேன்மையான நாள் நம்முடையவைகளில் அதிகமான பாகத்தை அவரிடம் ஒப்பித்த நாள் தான். ஆனாலும் இதிலும் அதிகம் அவருக்குக் கொடுக்கக்கூடும், அப்போ அவரும் நமக்கு அதிகம் தருவார். நாம் எவ்வளவுக்கு அதிகம் கொடுத்து அதிகம் வாங்குகிறோமோ, அவ்வளவுக்கு இவ்விதமான கொடுக்கல் வாங்கலில் அதிகமாய் முன்னேறிச் செல்வதைக்குறித்து நன்றாய் அறிகிறோம். அதன்றி தேவனுடைய அளவற்ற களஞ்சியங்களிலிருந்து எவ்வளவு தூரத்தில் நாம் இருக்கிறோமென்பதைக்குறித்தும் அறியலாம். தேவனுடைய இஷ்டம் யாதெனில் நாம் அவரிடம் அதிகம் கேட்டு, அதிகம் பெற்றுக்கொண்டு, அதின் மூலமாய் நாம் மற்றவர்களுக்கு அவரிடம் பெற்றுக்கொண்டவைகளை தாராளமாய்க் கொடுக்கவேண்டும் என்பதே. ஆகையால், நம்முடைய நல்ல நாட்கள் நம்மை அவருடையவைகளுக்காக ஒப்புவித்தலிலும், ஊழியஞ் செய்தலிலும் வளருவதாம். இன்றுதானே இவ்வித நல்ல நாளை நமது ஜீவியத்தில் ஆரம்பிப்பது நமது கடமையல்லவா?

இதை வாசிக்கிறவர்களே உங்களுக்கு என் பெரிய சிநேகிதரைக்குறித்தும், நான் அவரோடு பழகினதைக்குறித்தும் சொல்லட்டுமா? நான் அவரைக்குறித்து அதிகமாய்க் கேள்விப்பட்டும், அதை சட்டைபண்ணவில்லை. எனக்கு அவர் அநேக வெகுமதிகளையும் பரிசுகளையும் அனுப்பினார். ஆனாலும் அவருக்கு நான் நன்றி சொல்லவில்லை. அடிக்கடி அவர் என்னோடு சிநேகம்பண்ண விரும்பினார், ஆனாலும் நான் அசதியாயிருந்தேன். எனக்கு வீடில்லை, சாப்பாடில்லை, நிர்ப்பாக்கிய நிலைமையிலிருந்தேன். ஒவ்வொரு மணிநேரமும் துன்பத்திலிருந்தேன். அவர் எனக்கு நிழலும், ஒதுக்கிடமும், ஆறுதலும், ஆகாரமும் கொடுத்தார்; ஆனாலும் நான் நன்றிகெட்டவளாகவே இருந்தேன்.

கடைசியாக அவர் நான் இருந்த வழியில் வந்து, கனிவோடு என்னண்டை நின்று "நீ வந்து என்னோடு தங்கியிரு" என்று கேட்டார். நான் அவர் சத்தத்துக்கு செவிகொடுத்தேன். இப்போ அவர் என்னை நடத்தும் விதத்தை சொல்லட்டுமா?

அவர் எனக்குத் தேவையானவைகளையெல்லாம் தருகிறார். நான் கேட்பதற்கும் அதிகமாகத் தருகிறார். எனக்கு அவசியமானவை என்னவென்று முன்னதாகவே அறிகிறார். அதிகமாய்க் கேட்கும்படி என்னை வருந்திக்கேட்கிறார். நான் முன்னே காட்டின நன்றிகேட்டை அவர் ஒருபோதும் ஞாபகப்படுத்துகிறதில்லை. என்னுடைய முந்தின நிர்க்கேட்டினிமித்தம் என்னை ஒருநாளும் கோபித்ததில்லை.

அவரைக்குறித்துள்ள என் எண்ணம் என்னவென்று நான் இன்னம் கொஞ்சம் சொல்லட்டும். அவர் எவ்வளவு பெரியவரோ அவ்வளவு அவர் நல்லவர்.

அவருடைய அன்பு, அவர் எவ்வளவு உண்மையுடையவரோ அவ்வளவு அதிகமும் ஆழமுமாயிருக்கிறது. அவர் அனேக வாக்குத்தத்தங்களைப் பண்ணியிருக்கிறார். அந்த வாக்குத்தத்தங்களை கட்டாயமாய் நிறைவேற்றவும்செய்வார். நான் அவரை நேசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வேறொன்றையும் நான் அவரைப்போல் நேசிக்க அவர் சம்மதியார். நான் அவருடைய பெரிய கடன்காரியாயிருந்தபோதிலும், அவரை எப்போதும் என்னுடைய சிநேகிதர் என்றே அழைக்க உத்தரவு கொடுத்திருக்கிறார். என்ன ஆச்சரியமான சிநேகிதர்!

## THE CHILDREN'S LITTLE FRIEND.
## பிள்ளைகளுடைய சின்ன சிநேகிதன்.

போன கோடைகாலத்தில் ஒரு குடும்பத்தார் வெயில்காலத்தை மலையில் செலவழிக்கப் போனார்கள். ஒவ்வொரு நாள் சாயங்காலத்திலும் அடுப்பு பற்றவைத்து அந்த நெருப்பைச் சுற்றிலும் குடும்பத்தார் எல்லாரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பது வழக்கம். அக்குடும்பத்தில் டாற், ரூமி என்று பேர்கொண்ட ஒரு பெண்ணும், பையனும் இருந்தார்கள்.

அவர்கள் நெருப்பண்டை உட்கார்ந்திருக்கும்போது ஒவ்வொரு நாளும், ஒரு வண்டு இரைந்து பாடுவதைக் கவனித்தார்கள். முதலாவது பிள்ளைகள், தன் தொண்டை வழியாய்த்தான் அந்த வண்டு பாடுகிறதென்று நினைத்தார்கள். ஆனால் சிலநாள் கவனித்துப் பார்க்கவே இரக்கைகளால் அவ்வித சத்தம் உண்டாக்கினதை கவனித்தார்கள். ஒரு இரக்கையில் அதற்கு ஒருவகை அரமும், இன்னொரு இரக்கையில் ஒருவகை திரிகைபோன்றதும் இருந்தன. அவைகளால் இராகம் உண்டாக்க அவசியமாகையில் அவ்வண்டு, அவைகளை ஒன்றோடொன்று தேய்க்கும். அந்த வண்டு இவ்விதமாகச் செய்துவரவே அதை ஒருவரும் துரத்தவில்லை. அதினால் அதற்குத் தைரியம் உண்டானது. தான் எவ்வளவு நேரம் பாடினாலும் அது அக்கூட்டத்திலுள்ளவர்களுக்கு சந்தோஷத்தை கொடுக்குமேயன்றி, அவர்கள் ஒருவரும் தன்னை உபத்திரவப்படுத்தமாட்டார்கள் என்று அந்த வண்டு அறிந்தாப்போல் காணப்பட்டது.

நல்லது பிள்ளைகள் இருவரும் இவ்வித சத்தம் எங்கேயிருந்து வருகிறதென்பதைக் கண்டுபிடிக்க ஒருவாரம் ஆச்சுது. தன்னை ஒருவரும் கவனியாத சமையம் வெகு சத்தமாய் இரையும். தன்னை டாற்றும், ரூமியும் கவனித்துத்தேட ஆரம்பித்த உடனே வெகு அமைதலாய் விடும். அப்புறம் அவர்கள் தேடுவதை நிறுத்தினவுடனே மறுபடியும் ஆரம்பிக்கும். இப்படியே அந்த வண்டும் பிள்ளைகளும் ஏழுநாள் விளையாடினார்கள்; கடைசியில் அடுப்பு செங்கல்கள் ஒன்றின் வெடிப்புக்குள்ளே அந்த வண்டு இருந்ததைக் கண்டார்கள். அப்போ அந்த வண்டு "நல்லது, நீங்கள் என் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தீர்கள், இனிமேல் நான் வெளியே வந்து, அடுப்பண்டை உட்கார்ந்து அதிக கஷ்டமில்லாதிருப்பேன்" என்று சொன்னாற்போலிருந்தது. அப்படியே ஒவ்வொரு ராத்திரியும் அந்தக் கோடைகால முழுவதும் அந்த வண்டு செய்தது.

காலையில் சாம்பல் எடுக்கப்போகிறவன் அந்த வண்டை பத்திரமாய்ப் பார்த்துக்கொள்வான். அடுப்பை சுத்தம்பண்ணுகிறவனும் அதற்கு ஒரு தொந்தரவும்



கொடுக்காமல் பார்த்துக்கொண்டான். அப்படியே ஒவ்வொருவனும் தங்கள் சிறிய சிநேகிதனாகிய வண்டை மிகக் கவலையாய் பார்த்துக்கொண்டார்கள்.

கோடைகாலம் முடிந்து, அந்தக் குடும்பம் திரும்ப ஊருக்குப் போகவேண்டியதாயிற்று. அப்போ அவர்கள் எல்லாரும் மிக வருத்தத்தோடு வண்டாகிய தங்கள் சிநேகிதனைவிட்டுப் போனார்கள். அந்த வண்டு ராத்திரிதோறும் நெருப்பைத் தேடும் என்று எல்லாரும் சொல்லிக்கொண்டார்கள். ஆனாலும் அது நன்றாய் நித்திரைசெய்து, அடுத்த கோடைகாலத்தில் அவர்கள் மலைக்குப்போனால் அதுவும் வெளியேவந்து அவர்களை ஏற்றுக்கொள்ளும்.

இந்த ஜாதி வண்டிற்கு வீட்டு வண்டு என்று பெயர். ஏனெனில் அது வீட்டில்தான் வசிக்கும் வேறுவகையான வண்டுகளும் உண்டு. மூஞ்சிறு வண்டு என்று இன்னோர் வண்டிற்கு பெயர், ஏனெனில் மூஞ்சிறுவைப்போல அவைகளும் பூமிக்குள்ளே வசிக்கும். டாற்றும் ரூமியும் ஒருநாள் ஒரு கல்லின்கிழ் ஒரு வண்டைக்கண்டார்கள். மரவண்டுகள் சிலவற்றையும் அவர்கள் கண்டுபிடித்தார்கள். அந்த வண்டுகள் தங்கள் சிநேகிதனாகிய வீட்டுவண்டைவிட அதிக அழகாயிருந்தன. அந்த வண்டுகளுடைய தேகம் மங்கின பச்சை நிறமாயிருந்தது. அவற்றின் இரக்கைகள் அழகான மெல்லிய கண்ணாடித் துண்டுகள்போலிருந்தன. அவைகளும் இரைச்சலிட்டு, இரைச்சவிட்டுப் பாடி ஒரு மரத்திலிருந்து இன்னோர் மரத்திற்கும், ஒரு செடியிலிருந்து இன்னோர் செடிக்கும் தாவிக்கொண்டு சென்றதை பிள்ளைகள் பார்த்து, அவைகள் ஆச்சர்ய காட்டுப் பதுமைகள் வந்து ஆடுவதற்காகத்தான் இந்தவிதமாக ஆடிப்பாடுகின்றன என்று நினைத்தார்கள்.

மரவண்டுகள் எவ்வளவோ அழகாயும், மூஞ்சிறு வண்டுகள் எவ்வளவோ வேடிக்கையாயும் இருந்தாலும், அந்த பிள்ளைகள் இருவருக்கும் தாங்கள் மலையில் பார்த்த வீட்டு வண்டைப்போல், அவர்கள் மனதுக்கு வேறொரு வண்டும் சந்தோஷப்படுத்தினதில்லை. அது அவர்கள் வீட்டில் இருந்தது. அவர்கள் குடும்பத்தில் ஒன்றாயிருந்தது. அதினால் அவர்கள் அதை மறக்க முடியவில்லை. நல்லது அடுத்த வருஷம் அவர்கள் மலைக்குப் போகையில் அது அவர்களுக்காகக் காத்திருக்கும் என்று நீ நினைக்கிறாயா?

## A LITTLE BOY'S DETERMINATION.
## ஒரு சிறு பையனுடைய தீர்மானம்.

குளிரான தேசங்களில் மாரிகாலத்தில் ஜலம் கல்லைப்போல் கடினமாகிறது. எல்லா ஜலமும் அப்படி உறைந்துபோகிறதில்லை. எந்தப் பாகம் குளிருக்கு நேராயிருக்கிறதோ அதுதான் முதலாவது உறைந்துவிடும். அப்படி பனிக்கட்டியாக உறையும் ஜலம் கண்ணாடியைப்போல் மெதுவாயும், வழுக்காயும் இருக்கும். அப்படிப்பட்ட வழுக்கான பனிக்கட்டிமேல் சறுக்கி விளையாட பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் கூட அதிகப்பிரியம். அதற்கென்று பிரகாசமுள்ள இரும்புத்துண்டினால் ஒருவகை மெல்லிய சப்பாத்து உண்டு. அவைகளைக் காலில் மாட்டிக்கொண்டு பனிக்கட்டிமேல் சறுக்கி விளையாடலாம். அந்த இரும்பின் அற்றம் பனிக்கட்டியைத் தொட்டுக்கொண்டிருக்கும். இவ்

வித விளையாட்டு அடிக்கடி மோசத்தைக் கொண்டுவரும். அதைப் பழகுகிறதும் அதிகக் கஷ்டம். அதைப்பழகுகிற பையன்கள் அடிக்கடி விழுந்து காயப்படுகிறார்கள். ஒருநாள் ஒருபையன் இந்த விளையாட்டைப் படிக்கப் பிரயாசப்பட்டான். எத்தனையோ தடவை கீழே விழுந்து காயப்பட்டான். அதைப் பார்த்துக்கொண்டு நின்ற ஒரு மனிதன், "என் பையனே உனக்கு எத்தனையோ காயங்கள் உண்டாயிருக்கிறது. ஆகையால் நீ அந்தப் பயங்கரமான விளையாட்டை நிறுத்தி, உட்கார்ந்து மற்றவர்கள் விளையாடுகிறதைப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாதா?" என்று அவனிடம் சொன்னான். அந்தப் பையனுடைய கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. காயம் அவ்வளவு நோவை உண்டாக்கிற்று. ஆனாலும் அவன் அம்மனிதனைப்பார்த்து "நான் புதிய சறுக்குச் செருப்புகளை, கூடாது என்று இந்த விளையாட்டை விட்டுவிடுகிறதற்காக வாங்கவில்லை, பனிக்கட்டியில் சறுக்கி விளையாட படிப்பதற்காகவே வாங்கினேன்" என்றான்.

## NEWS AND NOTES.
## வர்த்தமான குறிப்புகள்.

**எம்டன்** என்னும் ஜர்மானியச் சூறைக் கப்பலின் சரித்திரம். கடந்த செப்டெம்பர் மாதம் மத்தியில் கல்குத்தாவிலும், இந்தியாவின் மற்றப் பாகங்களிலுமுள்ள ஜனங்களெல்லாம் எம்டன் என்ற ஒரு காவற் கப்பலைக்குறித்து நடுங்கினதை நாம் அறிவோம். அந்த சூறைக்கப்பலில் யுத்த ஆயுதங்கள் இருந்தன. அது கல்குத்தா சமீபத்திலிருக்கும் ஹூக்ளி நதியண்டை நின்றுகொண்டு அவ்வழியாய் வரும் கப்பல்களை வழிமறித்தது. அதை முதலாவது கண்ட கப்பல்கள் எச்சரிக்கப்பட்டு ஆற்றில் ஒதுக்கிடமான பக்கமாய் திரும்பி, அப்புறம் கல்குத்தாவிற்குச்சென்று. யுத்த ஆயுதந்தரித்த எம்டன் சூறைக்கப்பலைக் குறித்துள்ள செய்திகளை அறிவித்தன. ஆனாலும் அதற்கு முன்னாலே கல்குத்தாவிலிருந்து மற்ற தேசங்களுக்கும், மற்ற தேசங்களிலிருந்து கல்குத்தாவுக்கும் சென்ற கப்பல்கள் சிலவற்றை, இந்த எம்டன் ஒரு குண்டு போட்டு நிற்கச்சொல்லி, ஒவ்வொன்றையும் எதிர்த்து தாக்கி, அந்தக் கப்பலுக்குள் எம்டன் கப்பலிலுள்ளவர் போய் ஏறிக்கொண்டு, இதர கப்பல்களிலுள்ளவர்களை எம்டனில் ஏற்றி அவர்களைக் கைதிகளாக்கிக்கொண்டு அப்புறம் ஒவ்வொரு கப்பலையும் பாரமான குண்டுகள் போட்டு அமிழ்த்தவோ, வெடிமருந்து போட்டு பெயர்க்கவோ செய்தார்கள். ஐந்து கப்பல்கள் இவ்விதமாய் அமிழ்த்தப்பட்டன. கல்குத்தாவில் அதுமுதல் கப்பல்களின் போக்குவரவு சிலகாலம் நிறுத்தப்பட்டுப்போயிற்று. அமிழ்த்தப்பட்டுப்போன கப்பல்கள் ஒன்றும் பிரயாணிகள் கப்பல் அல்ல. வேறொரு தடவை பிரயாணிகளினித்தம் நிறுமித்திவைக்கப்பட்ட ஒரு கப்பலை, எம்டன் விடுதலைபண்ணிற்று. கவர்ன்மென்றிலிருந்து அனேக காவற்கப்பல்கள் எம்டனைத் தேடிப்பிடிக்க அனுப்பப்பட்டன. அவைகள் எவ்வளவோ பிரயாசப்பட்டுத் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கு காரணம் எம்டன் கப்பலில் கம்பியில்லாத தந்தி சூத்திரம் வைத்துக் கொண்டு கப்பல் தலைவன் தன் செய்தி ஒன்றையும் மற்ற இடங்களுக்கு அறிவிக்காமலிருந்துகொண்டு மற்ற இடங்களுக்கு கப்பல்களின் போக்குவரவைக்



குறித்து அறிவிக்கும் செய்திகளை மடக்கி, கப்பல்கள் நிற்குமிடங்களை அறிந்துகொண்டதுதான். ஒருவகையாய் பார்த்தால், ஜர்மானியர் தங்களுக்கும், பிரான்சு இங்கிலீஷ் இவ்விரு ஜாதியாருக்கும் உண்டான யுத்தத்தை சம்பந்தித்ததாகவே இக்கப்பலை அனுப்பியிருந்திருக்கலாம். ஆகையால்தான் அவர்களுடைய வியாபாரக் கப்பல்களை எம்டன் எதிர்த்தது. அதிகமாக இங்கிலீஷ் கப்பல்களைதான். ஏகதேசம் இரண்டு மாசங்களாக இந்த எம்டன் தன்னாலியன்ற பிரயாசப்பட்டு அனேககப்பல்களை எதிர்த்துத்தாக்கி அமிழ்த்தினது. எத்தனையோ கப்பல்கள் இதைத் துரத்தியும் கைக்குள்ளகப்படாமல் தப்பியோடிற்று. கடைசியாக ஆஸ்றேலியாவிலுள்ள ஒரு காவற்கப்பல், எம்டன் ஒரு துறைமுகத்துக்குப் போனதாக, அறிந்தது. அதன்றி கடல் தந்தி அனுப்பும் ஆபிஸ் ஒன்றுக்குப் போய், தந்திகளை அறுத்துவிடத்தான் எம்டன் அங்கே போயிருக்கவேண்டும் என்று சமுசயித்தது. பிற்பாடு அக்காரியம் நிஜந்தான் என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆகவே அதைத்துரத்திப்பிடிக்க ஆரம்பித்து, எம்டனைவிட சற்றுத்துரிதமாய் ஓடும் கப்பலானதால், பின்தொடர்ந்து ஒன்றோடொன்று சண்டை செய்தன. கடைசியில் எம்டன் அழிக்கப்பட்டது. அதை ஜெயித்த ஆஸ்திரியா கப்பலின் பெயர் ஸிட்னி.

இது நடந்த இடம் யாதெனில் இந்து சமுத்திரத்திலிருக்கும் அந்தமான் தீவுக்குச் சற்று வடக்கே இருக்கும் **கோக்கோஸ்** அல்லது **கீலிங்** தீவுகளில்தான். அந்தச் சண்டையில் எம்டன் கப்பலிலுள்ள அநேகர் மாண்டார்கள். ஆனால் கப்பல் தலைவனும், அவரோடு ராஜபிரபுவாகிய **பிரான்ஸ் ஜோசப்** என்பவரும் உயிரோடு காக்கப்பட்டார்கள். அவர்களை கைதிகளாக்கி, ஒரு பத்திரமான இடத்தில் வைத்திருந்தார்கள். அந்தக் கப்பலில் ஜர்மானிய சக்ரவர்த்தியின் புத்திரனும் இருந்தார் என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள், ஆனால் அப்படியல்ல. போர்த்துக்கல் தேசத்து மனுவேல் ராஜாவின் பத்தினியின் சகோதரனாகிய பிரபுதான் அதிலிருந்தார். அவருக்கு வயது 23. அவரைத்தான் ஜர்மானிய ராஜகுமாரன் என்று ஜனங்கள் தப்பாய் நினைத்தார்கள். இந்த எம்டன் கப்பல் 15 பிரிட்டிஷ் வியாபாரக் கப்பலையும், ஒரு ருஷிய கப்பலையும், ஒரு பிரஞ்சு யுத்தக்கப்பலையும் சேதப்படுத்திவிட்டது. பிரஞ்சு யுத்தக்கப்பலை மகா தந்திரமாய் பிடித்தது. தன்னுடைய கப்பலில் ஒருவகை பொய் புகைக்கூண்டை வைத்துக்கொண்டு, அதிக சாமான் கொண்டுபோகிற கப்பல்போல் பாசாங்கு பண்ணி, பினாங்கு துறைமுகத்திற்கு சென்று, திடீரென கப்பலைத் தாக்கி அமிழ்த்திவிட்டது. இதன்றி தான் ஆரம்பத்தில் பண்ணின வீரச்செய்கைகளின் மத்தியில் ஒரு தடவை ஒரு துறைமுகத்தில் பல கொடுமைகள் செய்துவிட்டுப் போகையில், கரையில் நின்ற வேறோர் பிரிட்டிஷ் கப்பல் இதைத் தாக்காதபடி, வெகு தந்திரமாய் பிரிட்டிஷ்காரருடைய கொடிகளைக் காண்பித்து தானும் ஒரு பிரிட்டிஷ் கப்பல் என்றெண்ணத்தக்கதாய் சென்றது. அதோடு பிரிட்டிஷ் வாழ்த்து (Salute) கொடுக்கவும், அந்தகப்பலிலுள்ளவர்கள் இதற்கொரு தீமையுஞ் செய்யாது விட்டுவிட்டார்கள். ஆகவே கணக்குப் பார்க்கையில் இருபது லட்சம் ரூபாய்க்குமேல் நஷ்டம் உண்டாக்கி, பிரிட்டிஷ் வியாபாரத்துக்கு எவ்வளவோ தீமை செய்திருக்கிறது. என்றாலும் அந்த

கப்பல் தலைவனையும், அதில் பிரயாணஞ்செய்தவர்களையும் நாம் அதிகமாய் புகழவேண்டியது. அவர்கள் எவ்வளவோ துணிகரமும், யுக்தியும், புத்தியுமுள்ளவர்கள். இப்பொழுது இந்தியாவிலுள்ள எல்லாரும், தங்களுக்கு அந்த எம்டன் கப்பல் இனிமேல் ஒரு தீங்குஞ் செய்யாது என்று சந்தோஷப்படுகிறார்கள்.

காணாமற்போன கிரீடம் அகப்பட்டது. போலண்டு நாட்டுக்குத் தலைநகரியாயிருந்த கிறக்கோ என்னும் ஆஸ்திரிய கோட்டைக்குள் ஒரு பயங்கரமான புசல் உண்டாகி, ஓர் பழைய எல்ம் (Elm) என்னும் விசேஷித்த மரத்தை வேரோடு விழத்தள்ளினது. அதனடியில் பார்க்கும்போது, ஒரு கிரீடம் காணப்பட்டது. அந்தக் கிரீடம் போலண்டு ராஜாவினுடையது. அதை யாரோ எடுத்து ஒளித்து வைத்திருந்தார்கள். அந்தக் கிரீடம் 600 வருஷங்களுக்குமுன் உண்டாக்கப்பட்டது. 150 வருஷங்களுக்குமுன் காணாமற்போயிற்று. அதிலிருந்த இரத்தினக்கற்கள் அநேகம் விழுந்துவிட்டபோதிலும் அவைகளையெல்லாம் தேடிக் கண்டுபிடித்தார்கள்.

---

## COMMUNION.
## ஐக்கியம்.

---

"என் ஆடுகள் என் சத்தத்துக்கு செவிகொடுக்கிறது." யோவா. 10 : 27. "இதோ, இப்பொழுது அடியேன் ஆண்டவரோடு பேசத் துணிந்தேன்." ஆதி. 18 : 27.

என் பிள்ளையே, நீ என்னைப் பிரியப்படுத்த அதிகம் அறியத் தேவை இல்லை. அதிகம் சிநேகித்தால் போதும். தன்னை அன்பாய் கூப்பிடும் ஒரு தாயினிடத்தில் பிள்ளைபோய் நின்றுகொண்டு எவ்வளவு தாராளமாய்ப் பேசுமோ அந்த விதமாய் பேசு., நீ யாருக்காகவாகிலும் என்னண்டை ஜெபம்பண்ணவேண்டியதிருக்கிறதா? உன்னுடைய இனத்தார் பேர்களெல்லாம் சொல்லு. உன் சிநேகிதர்கள் பெயரெல்லாம் சொல்லு. ஒவ்வொரு பெயருக்குப் பின்னும், அவர்களுக்காக நான் செய்யவேண்டியது என்னவென்று சொல். என்னிடத்தில் அதிகம் கேள். அதிகமாய்க் கேள். மற்றவர்களுக்காக தங்களை மறக்கிற தயாளமுள்ள ஆத்துமாக்களை நான் எப்போதும் சிநேகிக்கிறேன்.

நீ விடுதலையாக்கப்போகிற ஏழைகளைக் குறித்தும், கஷ்டத்திலிருக்கும் நோயாளிகளைக்குறித்தும், மனந்திரும்பவேண்டுமென்று நீ விரும்புகிற பாவிகளைக்குறித்தும், உன்னோடு மனஸ்தாபப்பட்டு பிரிந்துபோனவர்களின் சிநேகம் உனக்குத் திரும்பவேண்டுமென்றும் என்னிடத்தில் கேள். எல்லாருக்காகவும் ஊக்கமாய் ஜெபி. உண்மையான இருதயத்திலிருந்து வரும் எல்லா ஜெபங்களையும் நான் கேட்பேன். நாம் சிநேகிக்கிறவர்களுக்காகவும், நம்மை சிநேகிக்கிறவர்களுக்காகவும் இருதயத்திலிருந்து பண்ணும் ஒரு ஜெபம் இருக்கிறதல்லவா?

உனக்காக நீ கேட்கவேண்டிய கிருபைகள் இருக்கின்றனவா? நீ விரும்புகிற எல்லாவற்றையும் குறித்தும், உன் ஆத்துமாவுக்குத் தேவையானவைகள் எவை என்றும் ஒரு நீண்ட டாப்பு எழுதி, அப்புறம் வந்து என்னண்டை அவைகளை வாசி. நீ எவ்வளவு பெருமைக்காரி, நான் என்கிற எண்ணமுடையவள், கேவல புத்தியுடையவள், ஆங்காரமுடையவள், எளிதில் கோபப்படுகிறவள் என்பவைகளை விஸ்தரித்துச் சொல். இவைகளையெல்லாம் ஜெபிக்கிறதற்காக நீ என்ன



பிரயாசப்படுகிறாயென்[illegible], அதற்காக நான் வந்து உதவிசெய்ய வேண்டுமென்றும் விரும்பி என்னிடத்தில் கேள். ஏழைப்பிள்ளையே நீ வெட்கப்படாதே. மோட்சத்தில் இப்போ எத்தனையோ பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒருகாலத்தில் உன்னைப்போல் தப்புப்பண்ணி அப்புறம் என்னை நோக்கி ஜெபித்தார்கள். அப்புறம் கொஞ்சங் கொஞ்சமாய் அவர்கள் குற்றம் அவர்களைவிட்டு நீங்கச்செய்தேன். சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் வேண்டியவைகளைக் கேட்கத்தாமதியாதே. அதன்றி சுகத்துக்காகவும், ஞாபகசக்திக்காகவும், ஜெயத்துக்காகவும் கேள். நான் எல்லாக் காரியங்களையும் கொடுக்கக்கூடும். ஆத்துமாக்களை அதிகப்பரிசுத்தமாக்க ஆசீர்வாதங்கள் அவசியமாகும்போது நான் எப்பொழுதும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன்.

என் பிள்ளையே, இன்று உனக்கு என்ன வேண்டும்? உனக்கு நன்மைசெய்ய எவ்வளவோ ஆசையாயிருக்கிறேன் என்பது உனக்குத்தெரியுமா? உன் மனதில் ஏதாகிலும் எண்ணங்கள் இருக்கிறதா? அவைகளையெல்லாம் என் முன்னாலேவை. உன் அழைப்பைக்குறித்து ஏதாகிலும் சம்பந்தப்பட்டவைகளா? உன் ஜீவியத்தின் நோக்கம் என்ன? என்ன வேலை செய்ய உனக்கு ஆசை? உன் தாயாருக்கும், உன் குடும்பத்தாருக்கும், நீ யார்மேல் சார்ந்திருக்கிறாயோ அவர்களுக்கும் நீ சந்தோஷத்தைக் கொடுக்க விரும்புகிறாயா? நீ அவர்களுக்காக என்ன செய்ய ஆசிக்கிறாய்?

நல்லது, எனக்காக ஒரு வைராக்கியமான எண்ணமும் இல்லையா? நீ நேசிக்கிற உன் சிநேகிதருடைய ஆத்துமாக்களுக்காக ஒரு சிறு நன்மை செய்ய உனக்கு இஷ்டமில்லையா? அவர்களில் அநேகர் என்னை மறந்துவிட்டார்களே!

உனக்கு இஷ்டமானவர்கள் யாரென்றும், உன் மனதில் என்ன எண்ணம் கிரியைசெய்கிறதென்றும், என்ன காரியங்களைச்செய்யப்போகிறாயென்றும் சொல். உன் வேலையின் மூலமாய் யாரைப் பிரியப்படுத்தப்போகிறாய்? என் பிள்ளையே, நான்தான் எல்லா இருதயங்களுக்கும் எஜமான். எனக்கு இஷ்டமான இடத்துக்கு அவைகளை நடத்துவேன். உனக்கு அவசியமானவர்கள் யாரென்று எனக்கு நன்றாய்த் தெரியும், அவர்களை உன் பக்கத்துக்கு திருப்பிவிடுவேன். ஆகையால் அமர்ந்து காத்திரு.

உன் தவறுதல்களை எல்லாம் என்னிடம்கொண்டுவா. அவைகளுக்குகாரணம் என்னவென்று நான் காண்பிப்பேன். உனக்கு தொந்தரவுகள் உண்டா? என் பிள்ளையே, எல்லாவற்றையும் தெளிவாய் ஒன்றும் மறைக்காமல் சொல்லு. உனக்கு யாராகிலும் நோவு கொடுத்ததுண்டா? எல்லாவற்றையும் எனக்குச் சொல். சொல்லி முடியும்போது நீ அவர்களுக்கு மன்னிப்பேனென்றும், அவர்கள் செய்ததை மறந்துபோவேனென்றும் எனக்கு வாக்குக்கொடு; அப்பொழுது உன்னை ஆசீர்வதிப்பேன்.

உனக்கு நோவுண்டாக்கும் ஒரு விஷயத்தைக்குறித்து உனக்கு பயமிருக்கிறதா? உன்னுடைய இருதயத்தில் அனாவசியமாய் ஒரு வீணான பயம், அதுண்டாக்கும் வேதனையினிமித்தம் இருக்கிறதா? நல்லது அப்பேர்ப்பட்ட விஷயத்தை என்னண்டையில் சொல். முற்றிலும் என்னை நம்பு. நான்இதோ இருக்கிறேன். நான் எல்லாவற்றையும் பார்க்கிறேன். நான் உன்னை ஒருபோதும் கைவிடுவதில்லை.

முன்னே உன்மேல் அதிகப் பட்சம் காண்பித்து, இப்போ உன்னை கடினமாய் நடத்தி, அவபிரியம் காண்பித்து, அலட்சியம்பண்ணுகிற யாராகிலும் இருக்கிறார்களா? அவர்கள் இப்படி பண்ண நீ யாதொரு தப்பும் செய்தில்லையென்று. உனக்குத் தோன்றுகிறது. அப்படிப்பட்டவர்களுக்காக ஊக்கமாய் ஜெபம்பண்ணு. உன் ஜீவியத்தைப் பரிசுத்தம்பண்ணுகிறதற்காக அவர்கள் தேவையானால் நான் அவர்களை உன் பக்கமாய்த் திருப்பிவிடுவேன்.

உன் கஷ்டங்களையெல்லாம் என்னண்டை சொல்லக் கேட்டாயிற்று; உனக்கு சந்தோஷகாரியங்கள் இல்லையா? அவைகளிலும் நான் பங்குபெற எனக்கு இடம் கொடுப்பாயா? நேற்றுமுதல் உனக்கு நேரிட்ட சந்தோஷங்கள் எவை? எந்த விஷயங்களெல்லாம் உன்னை ஆறுதல்படுத்தி சந்தோஷப்படுத்திற்று? எதிர்பாராத ஒரு ஆள் உன் வீட்டிற்கு வந்து உனக்கு நன்மை செய்ததா? இதுவரையில் உனக்கு உண்டாயிருந்த பயம் உன்னை விட்டுப்போய்விட்டதா? நீ நினைத்திராத விஷயத்தில் ஜெயம் கிடைத்ததா? உனக்கு வந்து சேர்ந்தது கடிதமா, அன்பின் அடையாளமா, அல்லது வெகுமதியா? உன் எண்ணப்பிரகாரம் பெலவீனமாக்காமல், அதிக பெலமாக்கின ஒரு சோதனையா? அப்படியானால் இவைகளெல்லாவற்றையும் நான் உனக்காகத் தயார்பண்ணினேன் என்று அறிவாயாக. இவைகளுக்காக உன் நன்றியறிதலையும், உபகாரத்தையும் சொல்லக்கூடும்.

எனக்கு ஏதாகிலும் வாக்குகள் கொடுக்கவேண்டியிருக்கிறதா? நான் உன்னுடைய இருதயத்தின் உள்ளிந்திரியங்களை அறிவேன். மனிதரை நீ வஞ்சிக்கக்கூடும்,° ஆனால் தேவனையோ வஞ்சிக்கமுடியாது என்று உனக்குத் தெரியும். ஆகையால் உண்மையுள்ளவளாயிரு.

உனக்கு உண்டான இவ்வித சோதனைக்கு உன்மனதை இனிமேல் திருப்பக்கூடாது என்று நீ தீர்மானிக்கிறாயா? ஏனென்றால் அது உன்னைத் தீமைக்கு நடத்துகிறது. சன்மார்க்கத்தான் அல்லாத ஒரு ஆளோடு இனிமேல் நீ சிநேகஞ்செய்யக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறாயா? அப்பேர்ப்பட்டவனுடைய சமுகம் உன் ஆத்தும சமாதானத்தைக் கெடுக்கும். உன்னை மனநோவுபடுத்தின உன் கூட்டாளிக்குப் பட்சம் காண்பிக்க உடனே போவாயா?

நல்லது என் பிள்ளையே, இப்போ நீ போய் உன் வேலையைச்செய். அமைதலாயிரு, தாழ்மையுள்ளவளாயிரு, கீழ்படிந்திரு, பட்சமுள்ளவளாயிரு. மறுபடியும் நாளைக்கு வா. அதோடு உன் இருதயத்தில் முன்னைவிட அதிக பக்தியும் அன்பும் உண்டா?

அப்படியானால் நாளைக்கு இதைவிட அதிகம் ஆசீர்வாதங்கள் வைத்திருப்பேன்.

---

## JEWELS HIDDEN NINE-HUNDRED YEARS.

## தொளாயிரம் வருஷங்களாய் மறைந்துகிடந்த ஆபரணங்கள்.

ஜர்மனி தேசத்திலுள்ள மேயன்ஸ் பட்டணத்தில் 1880-ம் வருஷம், சாக்கடைகளை சுத்தமாய் வைக்கும் விதத்தைக்குறித்து அநேக சீர்திருத்தங்கள் உண்டாக்கினார்கள். யூதர்கள் ஒருகாலம் மேயன்ஸ் பட்டணத்துக்கு சமீபமாய் இருந்தார்கள். அங்கே பூமியை தோண்டிப்பார்த்தார்கள். அப்போ சில வேலையாட்கள் ஒரு பழைய நிலவறையின் சுவர்களை



இடித்தார்கள். அ[illegible]ப்புகளிலே ஏகதேசம் இருப[illegible] நகைகள் இருந்தன. அவைகள் மிகவும் விலையுள்ளதென அவர்கள் கண்டு ஒருவருக்குஞ் சொல்லாமல் தங்களுக்குள்ளே அவைகளைப் பங்கிட்டுக் கொண்டார்கள். ஆனால் சீக்கிரம் ரகசியம் வெளிப்பட்டது. பூர்வீக ஆபரணங்களை சேகரிக்கிற இரண்டுபேர் அந்த ஆபரணங்கள் எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிக்கொண்டார்கள். அவைகளுக்குள் தங்கத்தால் பண்ணின ஒரு மாலையும், காதணிகளும், மார்பூசிகளும் (Brooches), குண்டூசிகளும், ஒன்பது மோதிரங்களும் இருந்தன. அப்புறம் மூன்றும் ரோமானேல் சக்ரவர்த்தியின்மேலெழுத்து பதித்திருந்த ஒரு தங்க நாணயமும், வைரக்கற்கள் பதிக்கப்பட்ட ஒரு காதணியும் மறுபடியும் அந்தச் சுவர் வெடிப்பிலிருந்து கிடைத்தது. அதன்றி இன்னொரு முக்கியமான ஆபரணமும் கிடைத்தது. யாதெனில் கழுத்தில் அணியும் ஓர் மாலை. அது ஐந்து சங்கிலிகளுள்ளது. அவைகள் கீழே தொங்கும். அவைகளோடு ஒன்பது வைரக்கற்களும், முத்துக்களும், பழையகால ரத்னங்களும் சேர்த்து உண்டாக்கிய வேறு ஆறு சங்கிலிகள் சேர்த்திருந்தது. அதின் கீழ் கடைசி சங்கிலியில் கோமேதகம், வைடூரியம், முத்து இவைகளால் பண்ணப்பட்ட ஒரு பதக்கம் தொங்கவைத்திருந்தது.

விலையுயர்ந்த கற்களை பரிசோதித்தறியும் ஒரு ஜர்மானிய துரை அவ்வாபரணங்களையெல்லாம் அதிக திட்டமாய் சோதித்து அவைகள் மிக அழகான பர்கண்டி தேசத்து கைசலா ராஜகுமாரத்தியினுடைய ஆபரணங்கள் எனக் கண்டுபிடித்தார். அந்த ராஜகுமாரத்தி இரண்டாவது கான்ரூட் ஜர்மானிய சக்ரவர்த்தியின் மனைவி. அவர் 1024-முதல் 1039-வரை அரசாண்டார். பதினோராவது நூற்றாண்டிலுள்ள தட்டான்மார் வேலையையும் இந்த ஆபரணங்களின் விநோததங்கமிடுதலையும் கல்லிழைத்தலையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்றாயிருக்கிறது தற்காலத்தில் வீயன்னா நகரத்தின் ராஜாவின் கிரீடத்திலுள்ள கல்வேலையும் அந்தக் கல்வேலையும் ஒன்றாயிருக்கிறது. இந்தக் கிரீடமும் கான்ரூட் சக்ரவர்த்திக்காகத்தான் 1027-ம் வருஷத்துக்குமுன் உண்டாக்கப்பட்டது. சரித்திரங்களில் கைசலா ராஜாத்தி ரோமாபுரியில் பட்டாபிஷேகத்தன்று தரித்திருந்த ஆபரணங்கள் மிகவும் விலையேறப் பெற்றது என்றும், அப்புறம் அந்த ராஜ்யத்தில் உண்டான பெருந்துன்பங்களினிமித்தம் அவைகள் ஒளித்துவைக்கப்பட்டன அல்லது அடமானமாக்கப்பட்டன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி 900 வருஷங்களுக்குமுன் ஒளித்துவைக்கப்பட்ட இந்த அலங்காரமான ஆபரணங்கள் தற்சமயம் ஜர்மானிய சக்ரவர்த்தியிடம் இருக்கின்றன.

நல்லது இப்பேர்ப்பட்ட விசேஷித்த ஆபரணங்களைக்குறித்து நாம் கேள்விப்படும்போது அந்தவிதமான ஆபரணங்கள் நம்மிடமிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று நாம் நினைப்போம். இரத்தினங்கள் என்று நாம் சொல்லும் கற்களை கடவுள் உண்டாக்கி மனிதர் அவைகளைக் கண்டுபிடித்து ஆபரணமாக உபயோகிக்கத்தக்க இடத்தில் அவைகளை வைத்திருக்கிறார். அவைகளை நம்முடைய கண்களால் பார்த்து, அவைகளின் அழகைக்கண்டு ஆனந்திக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். இன்னும் °அநேக அலங்காரமானவஸ்துக்களை அவர் உண்டாக்கி அவைகளை நாம் பிரயோகித்து

சந்தோஷத்தை அனுபவிக்கவேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் எந்த ஸ்திரீயாகிலும் இப்பேர்ப்பட்ட ஆபரணங்களையும் மற்ற வஸ்துக்களையும் தன் சொந்தப் பிரயோகத்திற்காக மாத்திரமும், புத்தியீனமான விஷயங்களுக்காகவும் உபயோகித்து தான்மாத்திரம் சந்தோஷப்பட்டுக்கொண்டு, தன்னை மாத்திரம் அலங்கரித்துக்கொண்டு ஜீவித்தால், கர்த்தர் அவளுக்கு கொடுத்த தாலந்தை அவள் துர்ப்பிரயோகம் பண்ணினாற்போலாகும். ஒரு ஸ்திரீ தன்னிடத்தில் துட்டில்லாதிருக்கும்போது, கடன் வாங்கி நகைகளைப் பண்ணுவாளானால் அல்லது வீண்டம்பம் பண்ணுவாளானால் அவளும் தேவனுடைய நல்ல ஈவை அலட்சியம் பண்ணுகிறவளாவாள். தேவனுடைய ஈவுகள் எல்லாம் நல்லவைகள். அவைகளை நாம் மற்றவர்களுக்காகவும், நல்ல வழியிலும் உபயோகிக்காதிருந்தால் அவைகளைக் கொடுத்தவரை துக்கப்படுத்துகிறவர்களாவோம்.

ஆனால் இன்னொரு விசேஷித்த ரத்தனக்கல் உண்டு. அந்த ஆபரணத்தை எல்லாரும் அணிந்துகொள்ளக்கூடியது. எல்லாருக்கும் அது சொந்தம். அது ஒருவருக்கும் தீமையையும் மோசத்தையும் கொண்டுவராது. அந்த ஆபரணத்தை அணிந்திருக்கிறவள் முகம் ஒருவேளை அழகில்லாமல் போகலாம், ஆனால் அவள் ஆத்ம அலங்காரமுடையவளாயிருப்பாள். அவள் நல்ல கொடையாளியாயும் பிரயோஜனமுடையவளாயுமிருப்பாள். இதைப்பற்றி ஒரு ஆச்சர்யமான சங்கதி உண்டு. இது மிகவும் விலையேறப்பெற்றதாயிருந்தாலும், எவ்வளவு ஏழை ஜனங்களும் அதை கேட்டு வாங்கலாம். ஏனென்றால் அதற்கு விலைகொடுக்கத் தேவையில்லை. எவ்வளவோ மதிக்கக்கூடாத விலையை ஒருவர் மோட்சலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கிவந்து ஜீவித்து அதற்காக கொடுத்து அதை எல்லாருக்காகவும் சம்பாதித்து வைத்துப் போயிருக்கிறார். அவர் யார்? இயேசுகிறிஸ்துதான்.

கிறிஸ்து பூமியிலிருந்தபோது இந்த ஆபரணத்தைக்குறித்து "விலையுயர்ந்த ஒரு முத்து" என்று சொன்னார். அதைக் குறித்து ஒரு உவமையை சொன்னார். அதாவது "பரலோக ராஜ்யம நல்ல முத்துகளைத் தேடும் ஒரு வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான்." இந்த முத்துக்கு வேறொரு பெயர் 'இரட்சிப்பு.' கிறிஸ்து எந்த ஸ்திரீயை இரட்சித்து, அவளுடைய பாவங்களை நீக்கி சுத்திகரிக்கிறாரோ, அவளிடத்தில் இந்த ஆபரணம் உண்டு. பூலோகத்திலுள்ள எந்த விலையேறப்பெற்ற ஆபரணமும் இதற்கு ஈடாகமாட்டாது. ஆகையால் பிரிய சகோதரிகளே, நாம் அழிந்துபோகிற ஆபரணங்களை சம்பாதிக்கிறதைவிட, அழியாத இந்த முக்கியமான ஆபரணத்தை சம்பாதித்துக் கொள்வோமாக.

---

THE BATTLE AGAINST THE CIGARETTE.

## சிகரட்டு பிடியை நிவர்த்திக்கும் ஏற்பாடு.

(தொடர்ச்சி).

சிலர் சொல்லுகிறபிரகாரம், பாஷாண வஸ்துக்கள் அவைகளில் சேர்க்கப்படுகிறதில்லை. புகையிலை மெதுவாயும் எளிதில் தீப்பிடிக்கும்படியாயுமிருக்கும்படி வேறு சாமான்கள் சேர்க்கப்படுகின்றன. கிளிசரின், சர்க்கரை, அதிமதுரம், வெடி



உப்பு முதலானவைகள் சேர்க்கப்படுகின்றன. இவைகள் தம்மில் தாமே தீங்கானவைகளல்ல. ஆனால், புகையிலையோடும் மூடியிருக்குஞ் சோற்றுத்தாளோடும் சேர்ந்து எரியும்போது, விஷமுள்ள வாயுக்கள் உண்டாகவே, அவைகள் உள்ளே உறிந்து, சிகரட்டு குடிப்பவர்களின் சுவாசக்குழாய்களுள் சொல்லுகின்ற ஆலிடிஹைட் என்னும் வகுப்பை சேர்ந்தவர்வாலும், ஆக்ரோலினும, அவ்விஷங்களில் சில. இவைகளில் முக்கிய வஸ்துவாகிய வர்வால் சாராயத்தை விட ஐம்பது மடங்கு வல்லமையுள்ளது. பிந்தியவஸ்துவாகிய ஆக்ரோலின், எடிசன் துரை சொல்லுகிறபிரகாரம், சரீரத்தை கெடுக்கும் கொடிய பாஷாணங்களிலொன்று. லாகிரிவஸ்துக்களை சாப்பிடுவது எவ்வளவு கொடியதோ, அவ்வளவு கொடியதாய் சிகரட்பிடிப்பதுமிருக்கிறது. ஆகையால்தான், இந்த வழக்கம் அதிகரித்து வருவதோடு, அதை உபயோகிக்கும் வாலிபருக்கு சரீரக்கெடுதியும், சன்மார்க்க ஊனத்தையுமுண்டுபண்ணுகிறது. லாகிரி வஸ்துக்களைப்போல் சிகரட்டும் அதிகத் துர்ப்பழக்கத்தை தருவதால், சிகரட்டுப்பழக்கத்தை நிவர்த்திக்க ஏற்பட்டகமிட்டியார், மருந்துகளை பிரயோகிக்கிறார்கள். சிகரட்டுப் பிடிப்பவர்களும், அதின் தீயபழக்கத்தைவிட பிரயாசைப்படுகிறவர்களும் "சிகரட்டுப் பிடிக்க தவிர்க்கக் கூடாத ஒரு அவா எங்களை இழுப்பதினாலும், மனதைச் சாந்திப்படுத்துவதினாலுமே யொழிய வேறு காரணத்தில் அந்தப் பழக்கத்தை நாங்கள் கையாடுகிறதில்லை" என்று சொல்லி தங்கள் செய்கையை தேற்றிக்கொள்ளுகிறதை நாம் சாதாரணமாய் கேட்டிருக்கிறோம். இந்தச் சுபாவம், லாகரி வஸ்துக்களை உபயோகிக்கிறவர்களுக்கு சாதாரணமாயுள்ள ஒரு அடையாளமென்று வைத்தியர் சொல்லுகிறார்கள். ஆகையால் இந்தப் பழக்கத்தை அனுசரிக்கக் கூடிய நிலைமையில் அதைத்தவிர்க்க "சிகரட்டுப் பரிகாரம்" ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேற்சங்கத்தார், அந்த தீய பழக்கத்தை விடுவதற்கு உதவிசெய்யக் கூடுமேயன்றி, அதின் வேரை முழுவதும் பிடுங்கிப் போடுவதாகச் சாதிக்கிறதில்லை.

அவர்கள் உபயோகிக்கும் மருந்து சாதாரணமானதும், இரண்டு வஸ்துக்கள் மாத்திரமடங்கியதுமாயிருக்கிறது. [illegible] ஜென்ஷியன் வேர் மற்றொன்று. ஒவ்வொரு சாப்பாட்டிற்குப்பின வெள்ளி திராவகத்தை (One Per cent Solution) ஒரு வாரமாக வாய் கொப்பளிக்க உபயோகிக்கவேண்டும். இது விஷமாகையால் உள்ளே சாப்பிடக்கூடாது. அதன்றி, ஏழு நாளைக்குமேல், அதைப் பிரயோகஞ் செய்யவுங் கூடாது. இப்படிச் செய்வதினால், வாய்ருசிகெட்டுப் போய், சிகரட்டின்மேல் உண்டாகும் அவா நீங்குவதற்கு நல்லவழியாயிருக்கிறது. பூரணகுணத்தை உண்டாக்குவதற்கு வயிற்றை கேடுபண்ணும் ஆகாரமாவது அல்லது அதிக பெலமான சாப்பாடாவது கொடுக்கக்கூடாது.

மேற்சொன்ன பரிகாரத்தை யனுசரித்ததினால் அநேகர் தங்களுடைய தீயபழக்கத்தைவிடக் கூடியவர்களானதைக் குறித்து அநேக நற்சாட்சிபத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள். அடிமைகள் சுயாதீனமடைந்தபோது காட்டிய நன்றியைப் போல, இந்தப் பழக்கத்தை விட்டவர்கள், தங்கள் நன்றியை எழுதிய நற்சாட்சி பத்திரங்களில் காட்டியிருக்கிறார்கள். ஒருவர் "மரணத்தைத்தவிர வேறொன்றுமென்னை இந்தக் கொடியபழக்கத்தினின்று விடுதலை செய்யாதென்று நினைத்தேன்" என்று தெரிவித்திருக்கிறார்.

வேறொருவர் "மரணத்தைக்காட்டிலும் பயங்கரமான ஒரு ஆபத்தினின்று என்னைத் தப்புவித்திருக்கிறீர். கடவுள் உம்மை ஆசீர்வதிப்பாராக. நான் உலகத்திலே பிரயோஜனமான மனுஷனாக இனிமேல் ஜீவிக்கக்கூடுமென்று இப்போது உணருகிறேன்" என்று எழுதுகிறார்.

இன்னுமொருவர் "என்னை அடிமைப் படுத்தின சங்கிலி அறுந்துபோயிற்று. உங்களுடைய பரிகாரமே அதற்குக் கருவியாயிருந்தது என்று வரைந்திருக்கிறார். சிலர் இந்த சாதாரண வகையை தங்களுடைய பிள்ளைகளுக்கு உபயோகித்ததினால், அதிகப் பிரயோஜனமடைந்திருக்கிறதாகத் தெரியவருகிறது.

பள்ளிப்பிள்ளைகளும், ஆபீசில் வேலை செய்யும் சிறுவரும், சிகரட்டுப் பழக்கத்தைவிட அவர்களிடம் வாக்குத்தத்தச் சீட்டைப்பெற மேற்சொன்ன கூட்டத்தார் பிரயாசப்படுகிறார்கள். ஏறக்குறைய அரைகோடி ஆட்கள் கையொப்பமளித்திருக்கிறார்கள். அச்சங்கத்தாரின் கூட்டமொன்றில ஒரு சிறுவன் எழுந்து பேச அனுமதி கேட்டான். விடைபெற்று, "நான் சிகரட்டுக் குடிக்கமாட்டேனென்று வாக்குக்கொடுத்து அநேகநாள் குடியாமலேயிருந்தேன். என்னுடைய இடத்தை விட்டு வேறொரு இடத்திற்குச் சென்றபோது, அங்கிருந்த சிறுவரெல்லாம், சிகரட்டுப் பிடிக்கிறவர்களாயிருந்தபடியால் நான் என் வாக்கை மீறி பழைய வழக்கத்தையநுசரிக்கலானேன். ஆனால் என்னுடைய வாக்குத்தத்தத்தை ஞாபகப்படுத்த நான் குத்தியிருந்த அடையாளம் என்னை கண்டித்ததினால் அந்த ஞாபகக்குறியை யெடுத்து அது அழிந்துபோகவேண்டுமென்று ரெயில் தண்டவாளத்தின்மேல் வைத்தேன். அது ரெயிலினால் நசுங்கிப்போயிற்று. ரெயில்வண்டி அதை நசுக்கி அழித்திருக்கும். இனிமேல் அது எனக்கு ஞாபகக்குறியாயிருக்காதென்று நினைத்தேன். பிற்பாடு, நசுங்கிப்போன அந்த அடையாளத்தை எடுத்து ஒரு நிலக்கரி சுரங்கத்திற்குள் எறிந்துவிட்டேன். ஆனால் இன்னும் அந்த அடையாளம் என் ஞாபகத்திலிருக்கிறது. இந்த ராத்திரி நான் மறுபடியும் உறுதி வாக்குக் கொடுக்கப்போகிறேன். ஒரு புதிய அடையாளத்தைப் பெற்று மறுபடியும் என் புதிய ஜீவியத்தை ஆரம்பம் பண்ணப்போகிறேன்" என்று அச்சிறுவன் சொன்னான். பையன்களும் பெண்களும், இந்தக் கெட்ட பழக்கம் அவர்களை அதற்கு அடிமைகளாக்குகிறது என்று அறிந்தார்களேயானால், சிகரட்டு பிடிக்கவேமாட்டார்கள். ஆகையால் சகல விதத்திலும் அவர்களை எச்சரிக்கவேணடும். அதை ஆரம்பித்திருப்பார்களேயானால் அதை விட்டுவிடுவதற்குத் தகுந்த விதமாய் முயற்சிசெய்யவேண்டும். எங்களுடைய பரிகாரத்தினால், அநேகர் இப்போது சிகரட்டுப் பிடிக்கிறதில்லை. அந்தப் பழக்கத்திற்கு அடிமையாயிருப்பதைவிட அதினின்று விலகி சுயாதீனராயிருப்பது எவ்வளவு விசேஷம்!

ஆகையால் நாம் நேர்த்தியான தேசத்தை கெடுக்கும் இத்துர்ப்பழக்கத்தை முழுவதுமாய் ஒழித்துவிட நம்மால் கூடிய பிரயாசை செய்வோமாக. இதற்கு அடிமைகளாயிருந்து தங்களை கெடுத்துக் கொள்ளும் ஆட்களை நாம் சந்திப்போமானால், நம்முடைய பரிகாரத்தின் மூலமாய் அதினின்று விலக அவர்களுக்கு உதவிபுரியப் பிரயாசப்படுவோமாக. இந்தப் பழக்கம் குடிக்கிறவர்களை மாத்திரமல்ல, தங்களுடைய சிநேகிதருக்கு மதிகத் தொந்தரவைக் கொடுக்கிறது.

சிகரட் பிடிந்ததினாலுண்டாகும் சில கெடுதிகளை, பின்வருவதில் காண்க. சரீரத்திற்கு பெரிய விஷம், பணத்திற்கு பெரிய சிலவு, புத்திக்கு நாசம், சன்மார்க்கத்திற்கு ஊனம், ஆத்துமாவிற்கு இருள். ஆகையால், நமது தேசத்திற்கு ஒரு பெரிய மோசமாய் வளர்ந்துவரும் இந்தப் பழக்கத்தை மேற்சொன்ன விஷயங்களின் சம்பந்தமாய் ஒழித்துவிட பிரயாசப்படுவோம். கடைசியாக ஆத்துமாவையும் மனதையும் சரீரத்தையும் முழுவதுமாய்க் காக்க வல்லவராகிய கிறிஸ்துவே இந்தப் பழக்கம் அடியோடே அற்றுப்போகிறதற்கு பெலனளிக்க வல்லவர்.

129.

Vol. XXVIII. Registered No. M. 209 No. 9

MARCH, 1915

# மாதர் மித்திரி.

OFFICE OF THE REGISTRAR ...
9 - APR 1915
MADRAS

# Tamil Woman's Friend

**"MATHAR MITHIRI"**

PUBLISHED BY THE

**Woman's Foreign Missionary Society**

**Methodist Episcopal Church**

**U. S. A.**

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு, கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

## THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... | .... 131 |
| வனாந்தரத்தில் வழிகாட்டி மரங்கள் .... .... | .... 132 |
| உறைக்கத்தக்க மதுவிலக்குப்பாடம் .... .... | .... 133 |
| ஓர் விசேஷித்த "லக்ஷணம்" .... .... .... | .... 135 |
| ஒரு ருஷிய ஓநாயின் சரித்திரம் .... .... | .... 137 |
| கஷ்டமில்லாமல் பிள்ளைகளை பெற்றுவளர்த்தல் .... | .... 141 |




# மாதர் மித்திரி.

புத். உஅ. கதுகூடு௵ - மார்ச்சு ௴. இல. கூ.

### PSALM 121.

இராகம், பிலகிரி. ஏகதாளம்.

பல்லவி.

உனக்கொத்தாசை வரும் நல் உயர் பருவதம், இதோ !

அநுபல்லவி.

தினமும் மனது நொந்து சிந்தை கலங்குவானேன்,— உன

சரணங்கள்.

1. வானம் புவி திரையும் வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமையுள்ள தல்லோ?— உன

2. காலைத் தள்ளாடவொட்டார், கரத்தைத் தளரவொட்டார்;
மாலை யுறங்கமாட்டார்; மறதியாய்ப் போகமாட்டார்.— உன

3. கர்த்தருன்னைக் காப்பவராம், கரமதில் சேர்ப்பவராம்;
நித்தியமு முந்தனுக்கு நிழலாயிருப்பவராம்.— உன

4. பகலில் வெயிலெனிலும் இரவில் நிலவெனிலும்
துயர் தருவதுமில்லை, துன்பஞ் செய்வதுமில்லை.— உன

5. தீங்கு தொடாதுன்னை, தீமை படாதுன்மேல்;
தாங்குவார் தூதர் கோடி, தாளிடாதபடி.— உன

6. போக்கும் ஆசீர்வாதமாம், வரத்தும் ஆசீர்வாதமாம்;
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பினிடுமே.— உன

7. துன்ப துயரத்திலும் துக்க சமயத்திலும்
இன்பமுறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே;— உன

GUIDEPOSTS ON THE DESERT.

## வனாந்தரத்தில் வழிகாட்டி மரங்கள்.

நீ வனாந்தரத்தை ஒருபோதும் பார்த்திராவிட்டாலும், அது எதைப்போலிருக்குமென்று உனக்குத்தெரியும். குறைந்தபட்சம் உனக்கு அதைப்பற்றி கொஞ்சம் அறிவிருக்கும். கண்ணுக்கெட்டிய தூரம்வரைக்கும் மணலைத்தவிர வேறெதையுங்காணமுடியாது. அது தளப்பமும் (Undulation) அங்கங்கே சிறு சிறு திட்டுகளுள்ளதாயுமிருந்தபோதிலும், பாதையைக் காட்டக்கூடிய யாதொரு அடையாளத்தையாவது, குறிப்பையாவது அங்கே காணமுடியாது. ஏனென்றால், காற்றினால் அந்தத் திட்டுகளுங்கூட இடம்பெயர்ந்து போகின்றன. தளப்பங்களு மாறிப்போகின்றன. சில நூற்றாண்டுகளாக மெதுவான பாதங்களுள்ள ஒட்டகங்கள் நடந்துசென்ற கால்தடங்கள் தானுண்டு. அவைகள் அவ்வனாந்தரத்திலுண்டாகும் எவ்வித பெருங்காற்று மழித்துப்போடாதபடி மணல்களால் கெட்டிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதமான பாதைகள், அநேக நூற்றாண்டுகளாக ஒட்டகத்தின் மூலமாய் வர்த்தகம் நடந்த தேசங்களிலுள்ள வனாந்தரங்களிலிருக்கின்றன.

அமெரிக்காவிலும் அதுபோன்ற பாழானவிடங்களுண்டு. ஆனால் அவைகளில் அப்படிப்பட்ட பாதைகளில்லை. ஏனென்றால் அந்த வனங்கள் யாதொரு காரணத்திற்காகவாவது, பெரும்பாதைகளாக உபயோகிக்கப்படவில்லை. வனாந்தரத்தில் ஒருவனை வழிநடத்தும் ஏது ஒன்றுண்டு. அது பழைய உலகத்தில் பூர்வீககாலமுதல் வழிநடத்தி வந்திருக்கும் ஒரு விசேஷித்த ஏதுவே. இது நக்ஷத்திரங்கள்தான். ஆனால் மப்புமந்தாரமில்லாத காலத்தில்தான் வழிகாட்டுமேதுகரங்களாயிருக்கக்கூடும். தவிர, ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட வழிகாட்டிகளைக் கண்டுபிடித்து செல்லுவது கஷ்டமே. தண்ணீரிருக்கிற இடந்தெரியாமல் சில பிரயாணிகள் தாகத்தினால் கஷ்டப்பட்டு வருந்துகிறார்கள். இப்படிக் கஷ்டப்பட்டவர்கள்தான், மற்றவர்களை வழிகாட்டக்கூடிய ஏதுகரங்களை உண்டுபண்ணுகிறதில் முயற்சியுள்ளவர்களாயிருக்கிறது மாத்திரமல்ல, வனாந்தரத்தில் பிரயாணஞ்செய்யும்போது, தண்ணீரை எங்கே, எப்படிக் கண்டுபிடிக்கிறதென்பதைப்பற்றியும் பிரயாணிகளுக்கு சொல்லிக்கொடுக்கிறவர்களாயுமிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்களை நிவிர்த்திபண்ணுகிறதற்காகவே, வனாந்தரத்தில் அநேகவிடங்களில் வழிகாட்டி மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. இரண்டுபாதைகள் பிரிகிற இடமெல்லாம், ஒரு வழிகாட்டி மரம் நடப்பட்டிருக்கிறது. இந்த வழிகாட்டி மரங்கள் ஜலமிருக்கிறவிடம் இத்தனை மைல் தூரமென்றும், அதைக் கண்டுபிடிக்கும் விதமிவ்விதமென்றும், பிரயாணிகளுக்குத் திட்டமாகச் சொல்லுகின்றன.

முதலாவதாக, வழிகாட்டி மரங்கள் சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்னே நடப்பட்டன. இத்தூண்கள் காற்றினாலெழும்பிவரும் மணல் தாக்கி மோதினாலும், அசையாமற் நிற்கத்தக்கதாக இரும்பினால் செய்யப்பட்டிருந்தன. ஆனால் மணல் அத்தூண்கள்மேல் எவ்வளவு பலமாய் மோதியடித்ததென்பதற்கும், அவைகளின்மேல் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் மறைந்து, அந்தத் தூண்களும் தேய்ந்து ஒன்றுக்கும் பிரயோஜனப்படாமற் போனதற்கும்



யாதொரு காரணமுங் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்குப்பிறகு ஒரு புது ஒழுங்கு அனுசரிக்கப்பட்டது. யாராவதொருவன் தன் தாகத்தைத் தீர்க்க வேண்டியவிடத்திலெல்லாம் ஒரு வழிகாட்டி மரம் நாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அது முன்னே நடப்பட்டிருந்த மரங்களைப்போலல்லாமல் புது மாதிரியாகச் செய்யப்பட்டதாயிருக்கிறது. எழுத்துக்களடங்கியிருக்கும் குறுக்குச் சட்டமானது துத்தநாகத்தினால் (Zinc) செய்யப்பட்டு இருப்புத்தூணினுச்சியில் பொருத்தப்பட்டிருக்கிறது. எழுத்துக்களும் வர்ணங்கொடுக்கப்படுகிறதற்குப் பதிலாக அத்துத்தநாகச் சட்டத்திலேயே வெட்டப்பட்டிருக்கின்றன. ஆயிரவருஷங்களாக மணல் அந்தத் தூண்கள்மேல் மோதியடித்தாலும், அவைகள் அசையாமல் உறுதியாய் நிற்கும். அவைகளில் எழுதப்பட்ட எழுத்துக்களும், அந்தத் தூண்கள் நிற்கும் வரையில் மறைந்துபோகாமல் அவ்வளவு தெளிவாகவுமிருக்கும். இப்போது எவரும் அந்த வனாந்தரத்தினூடே தன் வழியைக் கண்டு பிடித்து, யாதொரு கஷ்டமுமில்லாமல் போகக்கூடும்.

நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய நமது ஜீவியத்தின் பிரயாணமும், சில விஷயங்களில் ஒரு வனாந்தரத்துக்கொப்பாகவேயிருக்கிறது. அதில் பிரயாணம் பண்ணுகிற எல்லாருக்கும் உதவியாக வழிகாட்டி மரங்கள் நாட்டப்பட்டிருக்கின்றன. நல்லவர்களும், கல்விமான்களும் அதே பாதையாகவே பிரயாணஞ்செய்து, நாமும் திட்டமாக வழிநடத்தப்படும்படியாக, நமக்கு அநேக ஞாபகசாதனங்களை வைத்துப்போயிருக்கிறார்கள். அவைகள் மிகவும் பிரயோஜனமானவைகளாகவேயிருக்கின்றன. மற்ற எல்லாவற்றிலும், மிகவும் சிறந்ததும், மகாமேன்மையுமான ஒரேயொரு வழிகாட்டி மரமுண்டு. அதுதான் இயேசுகிறிஸ்து. "நானே வழி" என்று அவர் சொல்லியிருக்கிறார். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவனெவனோ, அவன் தன் பாதையைவிட்டு விலகாமல், மிகவும் அழகானதும், பரிசுத்தமானதுமான மோட்சத்தில் கடைசியாகச் சேர்வானென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

AN IMPRESSIVE TEMPERANCE LESSON

## உறைக்கத்தக்க மதுவிலக்குப் பாடம்.

மதுவிலக்கைப்பற்றி உபந்நியாசங்கள் செய்த ஒரு துரை பின்வருங் கதையைச் சொன்னார்.—

நாங்கள் வைத்த கூட்டங்களுக்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். அப்போது புகையிலையினால் விளையும் கொடிய தீமைகளையும், சரீரத்தின் கூறுபாடுகளை அது எப்படித் திமிர்படுத்திப்போடுகிறதென்பதைப்பற்றியும், அதற்குத் திருஷ்டாந்தமாக பூனையின் நாவில் நைக்கொற்றீன் (Nicotine) என்ற திராவகத்தில் ஒரு சிறு துளியை விடுவதினால், அது எவ்வளவு சீக்கிரத்தில் செத்துப்போயிற்றென்றும் எடுத்துக் காண்பித்தேன். ஒரு பூனை இருபது அல்லது முப்பது செக்கண்டிலும் (Seconds) ஒரு நாய் ஒரு நிமிஷத்திலும் (Minute) செத்துப்போயிற்று.

புகையிலையின் எவ்விதமான உபயோகத்தினாலுமுண்டாகிற விசேஷமான கெடுதிகளையும், அது நரம்புத்துவாரத்திலுள்ள சிறுசிம்புகளை (Fibrils) கெடுத்து அவைகளிலுள்ள வெண்மையான மூளை

போன்ற வஸ்துவை எப்படி அழித்துப் போடுகிறதென்பதையும், அங்கே கூடி வந்திருந்த வாலிபர் மனதில் பதியச் செய்யும்படி, நாங்கள் மிகவும் முயற்சி எடுத்துக்கொண்டோம். புகையிலையிலுள்ள அந்த நைக்கொற்றீன் (Nicotine) என்ற லாகிரி வஸ்து ஒரு மனிதனுடைய சரீரத்தின் கூறுபாடுகளை விஷமாக்கிப் போடுகிறபடியால், அவன் தன்னை முழுவதுமாக அடக்கியாளக்கூடாதவனாகவும் எதையும் அதிசீக்கிரத்தில் கிரகித்துத் தெளிவாகச் சிந்திக்கக்கூடாதவனாகவுமிருக்கிறான் என்றும் அவர்களுக்குத் தெளிவாக விவரித்துக் காட்டினேன். அடுத்த நாள் நான் கூடாரத்தின் வாசலண்டையில் உட்கார்ந்து வாசித்துக் கொண்டிருக்கும்போது வெறுங்காலோடு (Barefoot) சில வாலிபப்பையன்கள் ஒரு பெரிய ஆமையைப் பிடித்திழுத்துக் கொண்டு, நானுட்கார்ந்திருந்த இடத்துக்கு நேராக வந்து, அதிக உற்சாகத்தோடு நின்றார்கள். நானெழுந்து, அவ்வளவு பெரிய பிராணியை அவர்களெங்கே கண்டுபிடித்தார்களென்றும், நான் அதை என்ன செய்யவேண்டுமென்று என்னிடம் கொண்டுவந்தார்களென்றும் அவர்களைக் கேட்டேன். அப்பொழுது அவர்களில் ஒரு சிறுவன் மரியாதையோடு தன் தொப்பியைக் கையிலெடுத்துக்கொண்டு "தயவுசெய்து ஐயா—நாங்கள் நேற்றிரவு உமது பிரசங்கத்தைக் கேட்க வந்திருந்தோம். புகையிலையிலிருக்கும் நஞ்சால் பூனைகளையும், நாய்களையும் நீர் எப்படிக் கொன்றீரென்று சொன்னதையும், அப்போது கேட்டோம். இன்று நாங்களிந்த ஆமையைக் காட்டில் கண்டபோது, அதையும் நீர் வைத்திருக்கும் விஷத்திராவகத்தால் கொல்லும்படி உம்மிடத்தில் கொண்டு வந்தோம்" என்று சொன்னான்.

அப்பொழுது, நான் என்னசெய்யவேண்டுமென்று எனக்குத் தெரியாதிருந்தது. என்றாலும், ஏதோ ஒரு காரியம் செய்யவேண்டுமென்று அறிந்துகொண்டேன். ஏனென்றால் மற்ற ஜீவஜெந்துக்களைப்போல அவ்வளவு சீக்கிரத்தில் சாகக்கூடாத அவ்விதமான ஒரு பிராணியோடு அந்தப் பையன்கள் என்னிடம் வந்தார்கள். இவ்விதமான ஒரு ஆமையைக் கண்டங்கண்டமாகத் துண்டித்துப்போட்டாலும், யாதொன்றும் நேரிடாததுபோல, அதின் இரத்தாசயம் அநேக மணிகள் நேரமாகத் துடித்துக் கொண்டேயிருக்கும்.

ஆயினும், அவர்கள் என்னைக் குறைவாக நினைக்காதபடி, நான் செய்யவேண்டிய ஒரேயொரு காரியமாத்திரமிருந்தது. நான் அந்த ஆமையின் நாவில் ஒரு துளி நைக்கொற்றீனை (Nicotine) விடுவேனென்றும், அவர்களுடனே அதைக் கொண்டுபோய், அது வெளியில் வாராதபடி அவ்வளவு பத்திரமாக மூடிவைத்து இரண்டு வாரங்களாக அதை விழிப்போடு பார்த்து வரவேண்டுமென்றும் சொன்னேன். ஏனென்றால் அதின் கழுத்தை முழுவதுமாகத் துண்டித்து, ஒரு குளிர்ச்சியானவிடத்தில் வைத்திருந்தால், ஒரு வாரம் அல்லது பத்துநாள்களுக்கு அது உயிரோடிருக்கும். அப்படிப்பட்ட ஒரு பிராணியைக் கத்தியினால் துண்டித்துக் கொல்லுவதிலும், நைக்கொற்றீன் மூலமாய்க் கொல்லுவது அதிகக் கஷ்டமென்று நாமும் நினைக்கவேண்டியிருக்கிறது. அந்த வாலிபரும் நான் சொன்னபிரகாரஞ் செய்வதாக உண்மையாக வாக்குப்பண்ணினார்கள். நான் எவ்வளவு காலத்திற்கு அந்த ஆமையை வைக்கச் சொல்லுவேனோ அவ்வளவு காலத்திற்கும் அதை வைத்திருப்பதா



கவும், அதின் நிலைமையைப்பற்றி அடிக்கடி தெரியப்படுத்துவதாகவும், அவர்கள் சொன்னார்கள். பிற்பாடு, புகையிலைச் செடியிலுள்ள ஒவ்வொரு இலையிலும் எடுக்கக்கூடிய ஒரே துளி விஷத்திராவகத்தை அந்த ஆமையின் நாவில் விட்டேன். இருபத்தாறு நிமிஷத்திற்குள்ளே அந்த ஆமை செத்துப்போயிற்று.

இதை வாசிக்கிற சிலர் ஒரு பிராணியின் உயிரைக் கொல்லுவது, ஒரு பெரிய குற்றமென்று நினைப்பார்கள். ஆனால் மனிதனுடைய உயிரையும் ஒரு சிறு பிராணியின் உயிரையும் ஒப்பிட்டுப் பார்த்தால், முந்தினதே மிகவும் அருமையானது என்று அவர்கள் மெய்யாகவே கண்டுகொள்ளுவார்கள். அவ்விதமாகக் காரியங்களை ஆராய்ந்தறிந்து பரீட்சை செய்து பார்ப்பதினால் பெரிய மனிதரும் பையன்களும் புகையிலையையுபயோகிக்கிறதினால் விளையுந்தீமைகளைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்துக்கொள்ளுவதுமாத்திரமல்ல, இவ்விதமாகப் பரீட்சைசெய்து பார்ப்பதும் மிகவுமவசியமென்றும், நிச்சயமாயறிந்துகொள்ளுவார்கள்.

இந்தியாவில் சிகரட்டை உபயோகிக்கும் கெட்ட பழக்கம் இருக்கயிருக்க பயங்கரமான விதமாய் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஒவ்வொருவர் கையிலும் சிகரட்டை நாம் பார்க்கிறோம். சிகரட்டுகளைத் தவிர வேறெதையும் விற்காத ஷாப்புகள் அநேகமிருக்கின்றன. சிறு பையன்களும் அதையுபயோகிக்கிறார்கள். பெரிய மனிதரும் உபயோகிக்கிறார்கள். அவைகள் மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறபடியால், அவர்கள் அநேகஞ் சிகரட்டுகளை உபயோகிக்கிறார்கள். அவைகளைப்பற்றி நன்றாயறிந்தவர்கள், அவைகளின் கெடுதியைப்பற்றிச் சொல்லும்போது, நாம் அவர்களுடைய வார்த்தைகளை நம்பி எவ்வித உருவமாயுமமைக்கப்பட்ட புகையிலை மிகவும் தீங்கையுண்டாக்குமென்று அறிவோமாக. விசேஷமாய் சிகரட்டிலுள்ள புகையிலையானது, மிகவுங் கொடியதீங்கையுண்டாக்கக் கூடியதாயிருக்கிறது. ஏனென்றால் அதின் புகையை மனிதர் உட்கொள்ளுகிறபடியினால், சரீரத்திற்கு அது அதிகத் தீமையையுண்டாக்குகிறது. அது ஏன் அதிகத் தீமையையுண்டாக்குகிறதென்பதற்கு இன்னொரு காரணமுமுண்டு. சிகரட்டைச் சுற்றியிருக்கும் கடுதாசியானது, தன்னில்தானே கெடுதியுண்டாக்கக்கூடிய தன்மையுள்ளதாயிராவிட்டாலும் புகையிலையோடு சேர்ந்து எரியும்போது சாவுக்கேதுவான விஷத்தையுண்டுபண்ணுகிறதென்று உண்மையும் பலமுமான அத்தாக்ஷியின்பேரில் சொல்லப்பட்டிருக்கிறது.

நமது அழகான தேசத்திலிருந்து இவ்விதமான பொல்லாத சத்துருவைத் துரத்தும்படி நம்மால்கூடியமட்டும் பிரயாசப்படுவோமாக.

---

## AN IMPORTANT "SPECIALTY."
## ஓர் விசேஷித்த "லக்ஷணம்."

இரண்டு பையன்கள் தங்களுடைய பிற்கால கல்வி விஷயமாய்த் தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவன் "நான் சிறு பிராயமுதல் யந்திரங்களோடு வேலைசெய்துகொண்டு வந்திருக்கிறேன். அது ஒரு விஷயந்தான் நான் கற்றுக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் நான் வித்தியாவிலக்கண (Technology) பாடசாலையில் கற்றுக்கொள்ளவேண்டிய கல்வி விஷயத்தைப்பற்றித்தான் ஒரு தொந்தரவிருக்கிறது. இங்கிலீஷ் பாஷை

யையும், சரித்திரத்தையும் நான் கற்றுக்கொள்ளவேண்டியதவசியமாயிருக்கிறது. இவையிரண்டையும் நான் அதிகமாக வெறுத்துவந்தேன். ஆனாலும், அவைகளில் விர்த்தியடையத்தக்கதாக ஏற்றமுயற்சி எடுப்பேன்" என்று சொன்னான். மற்ற சகோதரன் "நான் ரசாயன (Chemistry) சாஸ்திரத்தையும், ஜெர்மன் பாஷையையும் படிக்க விரும்புகிறேன். அவைகள் முக்கியமானவைகளும், நான் வைத்திய கலாசாலையில் சேருங்காலத்தில் கற்றுக்கொள்ளவேண்டிய விசேஷமான இரண்டு பாடங்களாகவுமிருக்கின்றன. கணித சாஸ்திரத்தையுமாயத்தஞ்செய்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். ஆனால் அப்படிச் செய்யவும் என்னால் முடியாது" என்று சொன்னான்.

அவர்களுடைய தகப்பனார் புஸ்தகசாலையில் (Library) உட்கார்ந்து, சிலபுஸ்தகங்களை வாசித்துக்கொண்டிருந்தார். இரண்டு பையன்களுக்கும் நடந்த சம்பாஷணையில் சேரவேண்டிய அவருடைய முறை இப்போது வந்தது. "பையன்களே நீங்களிருவரும் நான் நம்புகிறபடி கைக்கொள்ளவேண்டிய விசேஷித்த லக்ஷணமொன்றுண்டு. ஒன்பதாவது தெருவிலுள்ள ஓர் மனிதன் அப்படியே கைக்கொண்டு வருகிறான். அவனுடைய அரைக்கு முன்னால் தொங்கின அறிக்கைப்பத்திரத்தில் (Notice) காணப்பட்ட சில குறிப்புகள் என்னைக் கவர்ந்துகொண்டன. நான் கடந்தவாரம் அந்த அறிக்கைப்பத்திரத்தைப் பார்த்தபொழுது, என்னால் கூடிய எல்லாவித வேலையையும் அவனுக்குக் கொடுக்கத்தக்கதாக, அவனைப்பற்றிய அவ்வளவு பிரியம் எனக்குள்ளுண்டானது. இன்று பிற்பகலில் மறுபடியும் அவனைப் பார்க்கப்போகிறேன். பையன்களே நீங்களும் என்னோடுவர இஷ்டப்படுகிறீர்களா?" என்று தகப்பன் சொன்னார்.

அவருடைய இரண்டு குமாரரும் உடனே சம்மதித்தார்கள். அந்த மனுஷனிடத்தில் காணப்பட்ட விசேஷித்த லக்ஷணமின்னதென்று அறியும்படி அவர்கள் ஆவலாயிருந்தார்கள். அவர்கள் தகப்பனோ புன்சிரிப்போடு தலையை அசைத்துக்கொண்டு "கொஞ்சம் பொறுமையாயிருங்கள், நீங்களே பார்த்துக்கொள்ளுவீர்கள்" என்று சொன்னார்.

அப்படியே பிற்பகலில் தங்கள் தகப்பனோடு அவர்கள் பட்டணத்திற்குச் சென்றார்கள். மின்சாரவண்டியை (Electric Tram) விட்டிறங்கி வேலைஸ்தலத்திற்குள் தகப்பன் பிரவேசித்து "இதோ நான் சொன்ன விசேஷித்த லக்ஷணமுள்ள மனுஷன் இவன்தான்" என்று சொன்னான். அவனுடைய நேர்த்தியான சிறு ஷாப்பின் கதவிற்கு முன்னால் ஒரு நோட்டீசுப்பலகை (Notice Board) தொங்கினது. அதை அந்த இரண்டுபையன்களும் வாசித்துப்பார்த்தபோது "கண்ணாடி, வீட்டு தட்டுமுட்டு முதலிய எல்லாவிதமான சாமான்களும் பழுதுப்பார்க்கப்பட்டு புதுப்பிக்கப்படும். கஷ்டமான குத்தகை வேலைகள் ஒரு விசேஷித்த இன்பம் (Difficult jobs a special delight) என்று எழுதப்பட்டிருந்தது.

"அவன் பிரசித்தம் பண்ணினபடியே ஜீவிக்கிறான். உங்களுடைய தாயாரால் அவ்வளவதிகமாய் விலைமதிக்கப்பட்ட அந்த உடைந்த கிண்ணத்தை அவனிடங் கொண்டுபோனேன். இந்த மனிதனும் அதைப் பழுதுபார்த்துக்கொடுக்க இஷ்டப்படுவானோவென்று அவ்வளவு



சந்தேகப்பட்டேன். ஆனால் அவன் அந்த வேலையைச் சந்தோஷத்தோடும், அபிமானத்தோடும் மேற்றுக்கொண்டான். நாமும் அவனதை என்னவிதமாகச் செய்து முடித்திருக்கிறானென்று இப்போது பார்ப்போம்" என்று அவர்கள் தகப்பனாகிய Mr. எவரெட் அந்த ஷாப்பின் வாசற்படியண்டையில் போகும்போது சொன்னார். அப்படியே அவர்கள் உள்ளே பிரவேசித்தபோது புதுப்பிக்கப்பட்ட அந்தக்கிண்ணமானது எவரெட் எதிர்பார்த்ததிற்கதிகமாகச்செய்து முடிக்கப்பட்ட ஒரு நேர்த்தியான வேலையாகக் காணப்பட்டது. சற்று நேரத்திற்கப்புறம் மூன்றுபேரும் வீட்டுக்குத் திரும்பினார்கள். தங்கள் தகப்பன்சொன்னவைகளையெல்லாம் மனதிலெண்ணினவர்களாக அந்த இரண்டு பையன்களும் ஆழ்ந்தயோசனையோடு தங்கள் தகப்பனை நோக்கிப் பார்த்தார்கள். அப்பொழுது தகப்பன் "நீங்களிருவரும், அந்த மனிதனிடத்தில் காணப்பட்ட விசேஷித்த லக்ஷணத்தையே உங்கள் ஜீவியத்திற்கும் பிரமாணமாக்கிக்கொண்டால், நீங்கள் உயர்தரபாடசாலையிலுங்கள் படிப்பைத்தொடங்கும்போது, நீங்கள் எப்படி உங்கள் படிப்பை முடித்து, அப்பாடசாலையைவிட்டு வெளியேறுவீர்களென்பதைப் பற்றி எனக்குள் யாதொரு சந்தேகமுமுண்டாகாது. உங்கள் பிற்கால ஜீவியத்திற்கு, ஒரு பிழைப்பையுண்டாக்கக்கூடிய உங்களுக்குப் பிரியமான பாடங்களைமாத்திரம் உண்மையாய்க் கற்றுக்கொள்ளவேண்டுமென்பது மாத்திரமல்ல, கணக்கு, சரித்திரம், இங்கிலீஷ் முதலிய பற்பலவிதமான படங்களையும், உங்களால் கூடியமட்டும் பிரயாசப்பட்டுக் கற்றுக்கொள்ளவேண்டுமென்பதுதானதின் கருத்து. உங்கள் கல்விவிஷயத்தில், உங்களுக்கிஷ்டமில்லாத பாடங்களுமிருக்கலாம். அப்படிப்பட்டசமயத்தில், நமது சிநேகிதனுடைய நோட்டீசுப்பலகையில் எழுதப்பட்ட "வருத்தமான குத்தகை வேலைகள், ஒரு விசேஷித்த இன்பம் (Difficult jobs a special delight) என்ற வாக்கியத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். பையன்களே, உங்களிருவராலும் பெருமையடையலாமென்று நான் எதிர்பார்த்திருக்கிறேன்" என்று சொன்னான்.

---

## A RUSSIAN WOLF STORY.

## ஒரு ருஷிய ஓநாயின் சரித்திரம்.

ருஷிய தேசத்தில் சில காடுகளில் ஓநாய்கள் ஜாஸ்தி. அவைகள் கூட்டங்கூட்டமாய் அவ்வழியாய்ப் போகும் பிரயாணிகளை எதிர்க்கும். அதற்காக பிரயாணிகள் கைவெடிகள் வைத்திருப்பார்கள். வேகமான குதிரைகள் பூட்டின வண்டிகளில் சவாரி செய்வார்கள். ஆகவே இவ்வோநாய்களை சுட்டுக்கொல்லவாவது அல்லது குதிரைகள் அதிவேகமாய் கடந்துசெல்லவாவது கூடாதிருந்தால், அவர்களைப் பிடித்துக்கொன்று தின்னும்.

இப்பேர்ப்பட்ட ஒரு இடத்தில் ஒரு ருஷிய துரையும் அவர் மகளும் வசித்தார்கள். அப்பெண் பெயர் ஆல்கா. ஒரு நாள் அவர் வீட்டை விட்டு சற்றுதூரம் ஓர் அலுவலாய்ப்போய் இருந்தார். மாரி காலதனில் ருஷிய காடுகளில் பனிக்கட்டி ஜாஸ்தி. அப்பனியைக் கடக்க அவர்களுக்கு ஒருவகை வண்டி (Sledge) உண்டு. அப்பேர்ப்பட்ட ஒரு வண்டியில் தகப்பனார் போயிருந்தார். மகள் வீட்டில் தனிமையாயிருந்தாள். நேரம் இருட்டிப்போகுது. தகப்பனாரைக் காணோம். ஏழைப்பெண் என்னசெய்வாள்?

இப்படிக் கவலையோடு ஒவ்வொரு சத்தத்தையும் கவனித்துக்கொண்டிருக்கையில் திடீரென ஒரு சத்தம் கேட்டது. தகப்பனார் வரும் பாதைக்கு நேராய் அந்த சத்தம் காட்டுக்குள்ளிருந்து வந்தது. அது என்ன சத்தம்? ஒரு ஓநாயின் பயங்கரமான ஊளைச்சத்தம்! அவள் உற்றுக் கவனித்தாள். சத்தம் நின்றது. எல்லாம் அமைதலாயிற்று. ஏழைப் பெண் சாதாரணமாய் ஒரு விஷயத்திற்கும் பயப்படாதிருக்கிறவள், ஒரு சின்ன சத்தத்திற்கும் பயந்து பயந்து எட்டிப் பார்த்தாள். ஒரு இலை விழுகிறபோதும், கடிகாரம் அடிக்கும்போதும், நெருப்புத் தழல் எரிந்து விழுகிறபோதும் பயந்து பயந்து எட்டிப்பார்த்தாள்.

அப்புறம் அவள் உட்கார்ந்து, கொஞ்ச நேரம் வாசித்துப் பார்த்தாள். அதுவும் முடியவில்லை. அவள் நினைவெல்லாம் அலைசடிப்பட்டுக்கொண்டிருந்தது. சற்று நேரம் யோசித்துப்பார்த்தாள். அடிக்கடி அவள் தகப்பனார் இருட்டு வேளையில அந்த வழியாய் வந்திருக்கிறார். ஒரு நாளும் ஒரு மோசமும் உண்டானதில்லை. அதோடு அவர் கையில் குண்டு நிரப்பிய இரண்டு கைவெடிகள் இருந்தன. பின்னை ஏன் பயம்? என்றாலும ஏழைப்பெண்ணுக்கு மன ஆறுதலை இல்லை.

மறுபடியும் அந்த சத்தம் கேட்டது. அது ஆல்காவை பயத்தினாலும் நடுக்கத்தினாலும் நிரப்பினது. ஏதோ ஒரு துன்பம் நடக்குது என்று நினைத்தாள். தன் சிறு பிராயமுதல் ருஷியாவின் கீழ் பாகத்தில் பாழான காட்டுக்குள்ளே ஜீவித்துவந்த அவளுக்கு அந்தச்சத்தம் பசியினால் வருந்தும் ஓநாயின் பயங்கர ஊளைச்சத்தம் என்று திட்டமாய்த் தெரிந்தது. அந்த நாடு மாரிகாலக் கொடுமையின்கீழ் அநேக மாசங்களாய் அகப்பட்டதால் ஏகதேசம் எல்லா மிருக ஜீவன்களும் செத்துப்போயிற்று. ஆனால இக் தக்கொடிய ஓநாய்கள்மாத்திரம் இன்னும் சாகாமல் யாரைக் கொன்று தின்னலாம் என அலைந்து திரிந்தன.

அந்த சத்தம் அவள் வீட்டண்டை கேட்டதுபோலிருந்தது. உடனே ஜன்னல்கள் கதவுகளெல்லாம் சரியாய்ப் பூட்டியிருக்கிறதா என்று ஆல்கா பார்த்தாள். ஓநாய்கள் சிலசமயம் தனிமையான வீடுகளில் ஜன்னல் கதவு வழியாய் உள்ளே வந்து மோசம்செய்வது வழக்கம். ஆகையால் அவள் இரட்டைத் தாழ்ப்பாள் போட்டாள். அச்சமயம் மணிச்சத்தமும், காய்ந்த பனிக்கட்டியின்மேல் ஓடிவரும் குதிரைகளின் காலடிச்சத்தமும் அவள் காதில் தொனித்தாப்போலிருந்தது. தகப்பனார் வந்துவிட்டார் என்று நினைத்து கதவைத் திறந்துவைத்தாள். ஆனால் எவ்வளவு சீக்கிரம் அவள் மனதில் சந்தோஷம் உண்டாயிற்றோ அவ்வளவு சீக்கிரம் மனவருத்தமும் வரத்தக்கதாய் அங்கே ஒருவரும் வரவில்லை. அது அவள் மன ஆசையின் சத்தமேயன்றி நிஜமான சத்தமல்ல. அவள் கொஞ்ச நேரம் அந்த பயங்கரமான குளிருக்குள்ளே நின்றாள். முகம் குளிரால் விறைத்தது. தகப்பனார் வரவே காணோம். ஓஹோ! மோசம் வந்துவிட்டது. தகப்பனார் பெரிய ஆபத்துக்குள்ளானார் என்று நிச்சயமாகிவிட்டது. ஏனெனில் ஒருநாளும் அவர் இவ்வளவு தாமதித்து வரமாட்டார். ஒரு தடவை அந்தப்பயங்கர ஓநாய்கள் அவரைப் பின்தொடர்ந்தால் அவர் மீண்டுவருவது அபூர்வம். ஐயோ! என்ன செய்வார்!

கல்லது வரவரக் குளிரின் கொடுமை ஜாஸ்தியாச்சுது. அவளால் வெளியே நிற்கமுடியுவில்லை, அவள் உள்ளேபோய்



கதவை அடைத்தாள். என்ன செய்யவென்று அவளுக்குத் தோன்றவில்லை. தன் தகப்பனுக்கு உதவிசெய்ய வேறு யாருமில்லை. ஆதலால் தான் ஏதாகிலும் செய்யவேண்டும். அவள் பிரயாசப்படவேண்டும். அந்த நிமிஷத்தில் ஏதோ பயங்கரமான ஒரு ஆபத்தில் தகப்பனார் இருக்கலாம். அவளுடைய உதவி அவருக்குக் கட்டாயமாய் வேண்டியதிருக்கும் என்று இப்படியாக பலவிதமாய் யோசித்தாள்.

இந்த எண்ணம் அவள் மனதை அறுத்துக்கொண்டிருக்கவே, அவள் குளிரை நீக்கப் போடவேண்டிய வஸ்திரங்களை போட்டுக்கொண்டு, இரட்டை குழாயுள்ள கைத்துப்பாக்கி ஒன்றை கையில எடுத்து அந்த இரவில் காட்டுக்குள் போனாள். மனதில் ஒரு எண்ணமுமில்லாதவள் போல் பனிக்கட்டி மூடியிருந்த பாதையின் வழியாய் அவள் ஓடினாள். தனக்கு மோசம் வரும் என்று முதலாவது அவள நினைக்கவே இல்லை. அப்புறம் அவள் கொஞ்சநேரம் நின்றாள். யோசித்தாள். ஒருவேளை திடீரென்று அந்த பட்சிக்கிற ஓநாய்க்கூட்டம் தன்னை வந்து எதிர்த்தால் தன்னுடைய நிலைமை எவ்வளவு நிர்ப்பந்தம் என்று நினைத்தாள். குதிரைமேல் வந்தால், காட்டுக்குள் துரிதமாய்ப் போகலாம். ஆகையால் திரும்பவும் தன் வீட்டுக்கு ஓடி, குதிரை லாயத்துக்குள்போய் தன்னுடைய குதிரைக்கு சேணம் வைத்துக்கொண்டு வெளியே நடத்தி, குதிரைமேல் ஏறி, காட்டுக்கு நேரே சென்றாள். தன் குதிரையை அதிவேகமாய் ஓடும்படி தட்டினாள். அந்தக் குதிரையும் தனக்கு நல்ல காற்றுள்ள இடத்தில் ஓடுகிறதற்கு சாவகாசம் கிடைத்ததே என்று நினைத்தாப்போல் ஒரே ஓட்டமாய் சந்தோஷத்தோடு ஓடினது.

காட்டுக்குச் சமீபமாய் ஆல்கா என்ற பெண்வந்தவுடனே, ஓநாய்கள் பயங்கரமாய்க் கத்றுவதைக்கேட்டாள். மூர்க்கமான அந்த மிருகங்கள், மெய்யாகவே அவளுக்கு முன்னாகவே போய்க்கொண்டிருந்தன. ஒரு நிமிஷநேரம் பயத்தினால் மேற்கொள்ளப்பட்டவளாக, கடிவாளத்தையும் தளரவிட்டுவிட்டாள். பெட்ரூவ் (குதிரையின்பெயர்) தன் மூர்க்கமான ஓட்டத்தை விட்டு நின்றிராவிட்டால், அவள் பலவந்தமாய் தரையில் எறியப்பட்டு, மோசத்திற் குள்ளாயிருப்பாள். ஆனால் அறிவுள்ள அந்த மிருகமானது, ஓநாயின் சத்தத்தைக்கேட்டு, ஏதோ மோசம் நேரிடுமென்று உணர்ந்து, என்னசெய்கிறதென்று தெரியாமல் ஒரு நிமிஷம் சந்தேகித்து துடிதுடித்து தரித்து நின்றது. ஆல்காவும் தைரியங்கொண்டு குதிரையைச் செல்லவிடாமல், கடிவாளத்தை இறுகப்பிடித்திழுத்தாள். குதிரை சற்று அமைதியாக நின்றது. பிறகு, அவள் காட்டுக்கு நேராகக் குதிரையை நடத்தி, பத்து நிமிஷத்திற்குள் அவ்விடஞ் சேர்ந்தாள். அவள் சென்ற ஒடுக்கமான பாதையானது இருபக்கங்களிலும் தேவதாரு விருக்ஷங்களால் சூழப்பட்டு இருளாகவும், பயங்கரமாகவும் காணப்பட்டது. என்றாலும், ஆல்கா காட்டுக்குள்ளே பிரவேசித்தாள். கொஞ்சத்தூரம் போன பிறகு ஓநாய்களால் மோசம் நேரிட்டாலும், தப்பித்துக் கொள்ளலாமென்ற எண்ணத்தோடு, காட்டின் வெளிப்புறமாகப் போக யோசித்து, குதிரையை அதற்கு நேராகத் திருப்பி நடத்தினாள். அப்படிப்போகையில், மரங்களுக்குள்ளே திருட்டுத்தனமாய்ப் பதுங்கிக்கிடந்த ஓநாய்களின் இருண்ட உருவங்களைக் கண்டதாக மனதிலெண்ணி, அவ்வளவுக்கதிகமாக அதை

ரியப்பட்டுக் கலங்கினாள். அவளுடைய தகப்பன் இன்னும் உயிரோடிருந்திருப்பானானால், அவ்வழியே வந்து அவளுக்கு உதவிசெய்திருப்பான். அவளும் தன் தகப்பனுக்காக அந்த அவாந்தர வழியில் காத்துக்கொண்டிருந்திருப்பாள். ஐயோ, அடர்த்தியான அந்த மரங்களுக்கு நடுவே, மூச்சற்றவளாக மயங்கி நின்றாள். குதிரையும் அதிகமாகத் திடுக்கிட்டுப் பயந்திருந்தபடியால், அவளுக்கு அடங்கி நிற்கவில்லை.

திடீரென்று குதிரைகளின் பலமான காலடிச்சத்தத்தையும், சக்கரமில்லாத வண்டியின் (Sledge) மணியோசையையும், குதிரைகளை வேகமாய் நடத்திக்கொண்டுவரும் ஒரு மனிதன் சத்தத்தையுங் கேட்டாள். உடனே, ஆல்கா அது தன் தகப்பன் சத்தமென்றறிந்துகொண்டாள். அவன் ஓநாய்களால் பின்தொடரப்பட்டானென்றும் மெய்யாகவே அறிந்துகொண்டாள். ஏனென்றால், அவனிட்ட சத்தமானது, அவள் காதுகளில் அவ்வளவு பயங்கரமாய்த் தொனித்தது. குதிரைகளின் அடிச்சுவடுகளை அவ்வளவு ஆவலோடு பின்தொடர்ந்தபடியால், பசியும் பட்டினியுமாயிருந்த அந்த ஓநாய்களின் சத்தமும் நின்றுபோயிற்றென்று விளங்கிக்கொண்டாள்.

ஆல்கா சஞ்சலத்தினால் நிறைந்து, நம்பிக்கையற்றவளாய்ப் போய்விட்டாள். தன் தகப்பனை இரட்சிக்க இப்போதவள் செய்யவேண்டியதென்ன? அவ்விதமான துஷ்டமிருகங்களோடு சண்டைசெய்யக்கூடியதார்? திடீரென்று ஒரு வேட்டுச் சத்தங்கேட்டது. சற்று நேரத்திற்கப்புறம் இன்னொன்று. உடனே தங்கள் தோழரின் மேல்விழுந்து பக்ஷித்த மற்ற ஓநாய்கள் சத்தமாயுறுமிக் குலைத்ததையுங் கேட்டாள். மதிமயங்கின குதிரைகள் அதிவேகமாய்ப் பாய்ந்து, மிகவும் சமீபமாய் ஓடிவருவதை அவள் கண்டு, உதவிசெய்யுங்காலம் வந்ததென்றுணர்ந்தாள். என்றாலும், தான் ஒரு கல்லைப்போல அசைவற்றுப்போனதை ஆல்கா உணர்ந்தாள். அவள் பேச்சற்று, உணர்வற்று, அசைவற்று நின்றாள். தன் தகப்பனுக்கு நேரிட்ட பயங்கரமான மோசமும், அதிலிருந்து அவனை இரட்சிக்கக்கூடாமலிருந்த நிலைமையையும்பற்றிய ஓரெண்ணந்தான் அவளுடைய மனதை நிரப்பியிருந்தது. தனக்கெதிரே ஒடுக்கமான இருண்ட பாதையின் வழியாகக் காணப்பட்ட சக்கரமில்லாத வண்டியின் விளக்கு வெளிச்சத்தையுங் கண்டாள். குதிரைகளைத் தைரியப்படுத்தி நடத்திவரும் தன் தகப்பன் சத்தத்தையுங்கேட்டாள். ஆல்கா தன் மேகலையில் (Belt) தொங்கவைத்திருந்த கைத்துப்பாக்கியைக் கையில் பிடித்துத் தன் தகப்பனுக்குதவிசெய்ய வேண்டுமென்று ஆயத்தமாயிருந்தாள். என்றாலும் அவளிருகரங்களையும், முழுப்பலத்தையும் குதிரைமேலிருந்து உபயோகப்படுத்த வேண்டியதாயிருந்தது. இவ்விதமான கடைசிநேரத்தில் அவளுடைய குதிரை அவளை மோசம்பண்ணிவிட்டு ஓடிப்போகுமா? ஆகவே தனக்கு நேரிடும் மோசத்தை கவனியாதவளாகக் குதிரையைவிட்டுக் கீழிறங்கினாள். ஆனால், குதிரையோவென்றால் தைரியமான தீர்மானத்தோடு தன் தகப்பனுக்குதவிசெய்யும்படியாக, ஆல்காவைத் தனியே நிற்கவிட்டு, பசித்த ஓநாய்களால் பின்தொடரப்பட்டதுபோல நினைத்துக்கொண்டு தன்வீட்டுக்கு நேராக விரைந்து சென்றது.

இருண்ட காட்டிலிருந்து பளிச்சென்று அந்த சக்கரமில்லாத வண்டி



எதிரேவந்தது. உடனே ஒருவித பயங்கரமான சத்தத்தோடு ஆல்கா அதற்குள் குதித்தேறினாள். அவள் தகப்பனோ, ஏதோ ஒரு இருண்ட உருவத்தை மாத்திரங் கண்டதாகவும், தன்னை அது இறுகப்பிடித்ததாகவும் உணர்ந்ததினால், ஓநாய்களில் ஒன்றுதான் தன்மேல் பாய்ந்துவிட்டதோவென்று நினைத்துக்கலங்கினான். தன்னை அவளுடைய பிடிப்பிலிருந்து நீக்கி, அவளைச்சுடும்படியாகப் பிரயாசப்பட்டான். ஆனால் ஏதோ ஒரு நன்மைக்கென்று, அவனுடைய கைத்துப்பாக்கியில் யாதொரு தோட்டாவுமில்லாமற் போயிற்று. ஆல்காவோ "தகப்பனே, தகப்பனே" என்று நடுநடுங்கி, பதைபதைத்துத் திகைத்துக்கதறினாள். "பிள்ளையே நீயா" என்று மாத்திரந்தான் அவன் சொல்லக்கூடியவனாயிருந்தான். ஏனென்றால், அதற்குள்ளாக ஒரு ஓநாய் அவன் குதிரைகளில் ஒன்றின்மேல் பாய்ந்து தாக்கவே, அவன் தன் சவுக்கால் அதை அடிக்கும்படி எழுந்து நின்றான்.

காரியங்கள் மிகவும் நம்பிக்கையற்ற விதமாய்க் காணப்பட்டன. அவளிடத்தில் அந்தச் சமயத்தில் கைத்துப்பாக்கியில்லாமலும், அவள் தகப்பனுடைய கைத்துப்பாக்கியில் சீக்கிரமாய் தோட்டா போட்டு ஆயத்தப்படுத்தாமலுமிருந்திருந்தால், மெய்யாகவே அவர்களுடைய முடிவு மிகவும் பயங்கரமாயிருந்திருக்கும். அவள் தகப்பனும் கைத்துப்பாக்கிகளைத் திட்டமாயுபயோகித்தபடியால், அந்த மூர்க்கமான மிருகங்களைக் கடந்து தங்களுயிரைத் தப்புவித்துக்கொண்டார்கள். திகிலடைந்திருந்த அவனுடைய குதிரைகள் இன்னுமதிகமாகப் பயந்து வெருண்டுபோகாதபடி, தன் கைத்துப்பாக்கியில மறுபடியும் தோட்டாவைப் போட்டுச் சுடக்கூடாதவனாகவிருந்தான்.

கடைசியாக அவர்கள் வீட்டின் வெளிச்சம் இருட்டில் பளிச்சென்று காணப்பட்டது. களைத்துப்போன குதிரைகள், தங்கள் வீட்டுக்குச் சமீபமாய் வந்துவிட்டதையறிந்து புதுப்பெலனடைந்ததாகக் காணப்பட்டன. ஆவலோடு விரைந்து முன்சென்று தங்களிருப்பிடஞ் சேர்ந்து, தங்கள் எஜமானுடைய கட்டளையில்லாமலே வாசற்படியண்டை வந்து நின்றன. அபாயமெல்லாங் கடந்துவிட்டதாகவும், தனக்குள்ளே ஏதோவொருவித உணர்ச்சியுண்டாயிருப்பதாகவும், ஆல்கா திடீரென்று நினைத்து, சக்கரமில்லாத அந்த வண்டியிலேயே யாதொரு அசைவுமற்றவளாக உட்கார்ந்திருந்தாள். அவள் தகப்பன் அவளைப் பிடித்துத் தாங்கி, அன்போடு முத்திமிட்டான். ஆனாலும் தான் பேசக்கூடுமோவென்று தன்னைத்தானுமவன் நம்பவில்லை.

அவர்கள் வாசற்படியில் சற்று நின்று தூரத்திலே ஏமாற்றப்பட்டுப்போன பசித்த ஓநாய்களின் ஓலத்தைக் கவனித்துக் கேட்டார்கள்.

## MATERNITY WITHOUT SUFFERING.
## கஷ்டமில்லாமல் பிள்ளைகளைப் பெற்றுவளர்த்தல்.

நாகரீகமான தேசங்களிலுள்ள ஸ்திரீகள் நாகரீகமில்லாத தேசங்களிலுள்ள ஸ்திரீகளைப் பார்க்கிலும், பிரசவத்தில அதிகக் கஷ்டப்படுகிறார்கள் என்பது நன்றாய்த் தெரிந்தவிஷயமே. இதற்குக் காரணங்களுண்டு. நாகரீகமில்லாத தேசங்களிலிருப்பவர்கள், நாகரீகமான தேசங்களிலிருப்பவர்களைப் பார்க்கிலும் மிகவும் இயற்கையான ஜீவியஞ்செய்கிறார்கள் என்பது ஒரு காரணமே.

அதிக கஷ்டமான பிரசவத்திற்கு முதலாவது காரணம்-என்னவென்றால், நமது முன்னோர்களிடத்திலிருந்து நாம் சுதந்தரித்துக்கொண்ட நமது சரீரக்குறைவுகளே. ஆனால் நாம் அதிகக் கவலையெடுத்துக் கடும்பிரயாசத்தோடு ஜீவித்தால், இப்படிப்பட்ட குறைவுகளையும், நமது தற்கால சந்ததியாரிடமிருந்து நீக்கிப் போடலாம். இரண்டாவது காரணம்-நமக்கு முன்னாகவருகிற பரீக்ஷைநிலைமையில் நாம் யாதொரு கஷ்டத்தையும் உணராதபடி, நமது சரீரத்தைப் பலப்படுத்தி, விர்த்திபண்ணக்கூடிய தளர்ந்த சவுக்கியமான உடைகளைத் தரித்துக்கொள்ளாமல், இறுக்கமான வஸ்திரங்களை உடுத்தி சரீரத்தில் சரியான இரத்த ஓட்டமில்லாமல் செய்வதுதான். மூன்றாவது காரணம்-கர்ப்ப ஸ்திரீகள் சரியான தேகாப்பியாசஞ்செய்யாமல் இருப்பது. இந்த நிலைமைக்குட்பட்ட ஒரு ஸ்திரீ, தன்னை அதிகமாகக் களைத்துப்போகச் செய்யாதபடி கவலை எடுத்துக்கொண்டு தன்னால் கூடிய எல்லாவித அப்பியாசங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடிவயிற்றின் தசை நரம்புகளைப் பலப்படுத்தக்கூடிய எந்த அப்பியாசமும் எடுத்துக்கொள்ளலாம். முதலாவது, முழங்கால்களை வளைக்காமல் நேரே நிமிர்ந்து நிற்பது. இரண்டாவது, தலைக்கு மேலுள்ள ஏதாவதொன்றை கால் நுனி விரல்களால் எட்டிநின்று கைவிரல் நுனியால் தொடப் பிரயாசப்படுவது. இவைகளை முதலில் செய்வது கூடாதகாரியமாகவிருந்தாலும், தினந்தோறும் ஒழுங்காகச்செய்து வருவதினால், சரீரத்தின் முக்கிய தசை நரம்புகளைப் பலப்படுத்துவதில் மிக்க பிரயோஜனமாயிருக்கும். செய்யக்கூடிய இன்னுஞ்சில அப்பியாசங்களுமுண்டு. இருகைகளாலும் இடுப்பைப் பிடித்துக்கொண்டு, முன்னும் பின்னுமாக கூடியமட்டும், சரீரத்தை வருத்தப்படுத்தாமலும், அதிகக் களைப்பையுண்டாக்கிக்கொள்ளாமலும் வளைந்துகொடுத்து, அப்புறம் வலபக்கமாகவும் இடபக்கமாகவும் அதேபிரகாரமாகச்செய்தால் நல்லது. கைகளினால் ஏதாவதொன்றைத் தேய்ப்பது, மாபிசைவது, சரீரத்தின் தசைகளைத் தட்டிக்கொடுப்பதாகிய இப்படிப்பட்ட அப்பியாசங்களும் சரீரத்தைப் பலப்படுத்தி, தசைநரம்புகளை உயிர்ப்பித்து உற்சாகப்படுத்துமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

அதிகப் பலவீனமானவர்களைத் தவிர மற்ற யாரும் இவ்விதமான அப்பியாசங்களைச் செய்தால் மிகவும் உத்தமம். இவைகளிலெல்லாவற்றிலும் மிகவும் சிறந்த அப்பியாசம் என்னவென்றால், தன் வீட்டிலுள்ள வேலைகளைத் தினந்தோறும் யாதொரு சோம்பலுமில்லாமல் ஒழுங்காய்ச் செய்வதுதான். கர்ப்பமாயிருக்கும் எந்த ஸ்திரீயும், தன் வீட்டு வேலையை யாதொரு சாக்குப்போக்கில்லாமல், தனக்குப் பிரசவகாலம் வரும்வரையில் செய்யவேண்டியதவசியம். நான்காவது-கெடுதியான சாப்பாடுகள் கர்ப்ப ஸ்திரீக்கு அதிக மோசத்தையும், தொந்தரவையும் கொடுக்கும். இரைப்பையானது குழந்தைக்கும் தாய்க்கும் சரியான போஷிப்பைக் கொடுத்து, சரீரத்தின் கூறுபாடுகளை நல்ல ஸ்திதியில் வைக்கக்கூடிய நிலைமையிலிருக்கவேண்டும். பழங்கள், காய்கறிகள், இலேசான இனிய பொருள்கள், (Simple Sweets) ஒரு நாளைக் கொருமுறை கொஞ்சம் மாமிசம் ஆகிய இவ்விதமான இலேசான உணவுகள் எந்தக் குடும்பத்துக்கும் மிகவும் உசிதமானது.



இவ்வித உணவுகளை யாதொரு மாறுதலுமின்றி கொடுத்துக்கொண்டே வருவது நல்லது.

பிரசவகாலத்தில் நோவைக் கொடுக்கக்கூடிய முக்கியமானதும் கடைசியுமான காரணம் என்னவென்றால், கர்ப்ப ஸ்திரீயின் மனோநிலைமையே. பிரசவகாலத்திலுண்டாகிற கஷ்ட நஷ்டங்களைக் கேள்விப்பட்டு, அவைகளைப்பற்றிப் பேசி சிந்திக்கிறபோது, பயத்தினால் மேற்கொள்ளப்பட்டவளாய், அவ்வித நோவுகளுக்கும் பலவித தொந்தரவுகளுக்கும் தன்னை ஒப்புக்கொடுத்து விடுகிறாள் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அப்படிப்பட்ட நிலைமையிலுள்ள ஒரு ஸ்திரீ, தனக்கு வரும் அநேகவிதமான பரீக்ஷை நிலைமைக்கு ஆயத்தப்படாதவளாய் அதைரியப்பட்டுப் போகிறாள்.

வேதனையில்லாமல் பிரசவமாகக்கூடாதா என்பதைப்பற்றி அநேக தர்க்கங்கள் உண்டானது. கொஞ்சமாவது வேதனையில்லாமலே பிரசவமாகக்கூடுமென்று சிலர் நம்புகிறார்கள். அவ்வித எண்ணமில்லாவிட்டாலும், பகுத்தறிவோடு அநுசரிக்கக்கூடிய சில விதிகளோடும், விவேகமாய் ஜீவிப்பதினாலும், உடையினாலும் பிரசவகாலத்திலுண்டாகக்கூடிய வேதனையை நிவிர்த்திபண்ணலாமென்று நம்புகிறதற்கிடமுண்டு. நமது ஜீவியத்தில் அவ்விதிகளைக் கைக்கொள்வதினாலும் நாமே பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொள்ளலாம். கர்ப்ப ஸ்திரீயும் பிரசவகாலத்தில் உண்டாகக்கூடிய வேதனையையாவது அதற்குப் பின்னான மோசத்தையாவது மறந்து யாதொரு பயமுமற்றவளாய் அந்த நேரத்திற்காகக் காத்துக்கொண்டிருப்பாள்.

பிள்ளைகளைப் பெறுவது இயற்கையான ஒரு காரியமாக இராவிட்டால், இது முற்றிலும் ஒரு மாறான விஷயமாகவேயிருக்கும். பகுத்தறிவோடு அநுசரிக்கக்கூடிய சில முறைகளின் மூலமாய் கர்ப்ப ஸ்திரீகள் அவ்வித கடும் பரீக்ஷையின் நிலைமையில் யாதொரு வேதனையுமற்றவர்களாயிருந்தார்கள் என்று எந்த வைத்தியனும் ரூபிக்கச் சக்தியற்றவனாயிருந்தால், நமது கர்ப்ப ஸ்திரீகளைத் தைரியப்படுத்தத்தக்கதான எவ்வித முகாந்தரமும் நாம் காணமுடியாது.

எந்த வைத்தியனும் தன் சொந்த அநுபவத்தில் கண்டபடி பிரசவ விஷயத்தில் கர்ப்ப ஸ்திரீகள் யாதொரு வேதனையுமற்றவர்களாகவே இருந்தார்கள் என்று சொல்லக்கூடும். ஆனால் அநேக விஷயங்களில் பிள்ளைப்பேறு வேதனையில்லாமல் ஆகிவிடுமென்று உறுதிப்படுத்திக்கொள்வது ஒரு பெரிய தப்பிதமான காரியமாகத் தோன்றுகிறது. அநுபவம் கொடுக்கிறதைவிட நாமே கர்ப்ப ஸ்திரீகளுக்கு அதிக தைரியங் கொடுக்கிறதுபோல இருக்கிறது. நாம் ஏன் அப்படிச் செய்யவேண்டும்? பிரசவகாலத்தில் நேரிடக்கூடிய அவசியமான வேதனைகள் அவைகளின் மூலமாய் விளைகிற ஆசீர்வாதத்தைப் பார்க்கிலும் அவ்வளவு அளவுகடந்தவைகளாகவாயிருக்கின்றன? எல்லா வேதனைகளின் மூலமாயும் அநேக பிள்ளைகளுக்குத் தாயானேன் என்று சொல்லக்கூடாத ஒரு ஸ்திரீயைக் காண்பது மிகவும் அரிதான காரியமே. பிரசவம் வேதனையில்லாமல் ஆகவேண்டுமானால் சாப்பாட்டு விஷயத்தைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

அவரவர் சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளக்கூடியதும், சரீரத்தைப் போஷிக்கக்கூடியதுமான இலேசான உணவுகளை உட்கொள்ளவேண்டும். போஜனத்தோடு

பழங்களைச் சாப்பிட்டால் நலம். ஆனால் இடைக்கிடையே அவைகளை உபயோகிக்கக்கூடாது. சௌக்கியமும், அனுலு முன்றா உடைகளை அவசியமான போதெல்லாம் உடுத்திக்கொள்ளுவதினாலும், போதுமான தேகாப்பியாசத்தின மூலமாயும், (இது மிகவும் முக்கியம்) மனதை எப்போதும் சந்தோஷமாய் வைத்துக்கொள்ளுவதினாலும் அதிகமான நன்மை விளையும். கடைசியுப், மிகவும் விசேஷமுமானது என்னவென்றால், உட்கார்ந்த நிலையிலேயே வெதுவெதுப்பான தண்ணீரில் குளிப்பதுதான். (Sitz-bath).

வேதனையில்லாமல் பிரசவமாகிறது கூடியகாரியமா? ஆம் அதற்கான சகல காரியங்களும் அநுகூலமாயிருந்தால் மாத்திரந்தான். அதாவது உற்சாகம், பூரணசுகம், வீட்டுக்காரியங்களில் செய்யவேண்டிய கடமைகளாகிய அப்பியாசம், ஏற்ற தோழரோடு உலாவுதல், பலவிதமானதும் அந்தக் குடும்பத்தில் மற்றவர்கள் சாப்பிடக்கூடியதுமான இலேசான உணவு ஆகிய இவைகளே. ஆனால் தன் நிலைமைக்கேற்றபடி ஒவ்வொரு உணவைப்பற்றியும் எச்சரிக்கையாயிருக்கத்தக்க அவ்வளவுக்கு தன்னை ஒடுக்கத்தக்கதான அவ்வளவு வித்தியாசமான உணவு அவசியமில்லை. சந்தோஷத்தையும், ஒத்தாசையையும் கொடுக்கக்கூடிய ஏற்ற நல்ல தோழமையும் அவசியமான ஒரு காரியமே. இயற்கையாகவே எந்தப் பக்கத்திலும் அசைவாடத்தக்கதாக சரீரத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் சுவாதீனத்தைக் கொடுக்கக்கூடிய அவ்வித உடையை ஆரம்பத்திலிருந்தே தரித்துக்கொள்ளவேண்டும். உட்கார்ந்த நிலையில் எடுக்கும் ஸ்நானத்தை (Sitz-bath) ஆரம்பத்தில் வாரத்திற் கொருமுறை, பின்பு இரண்டு முறை, அதற்கப்புறம் மூன்றுமுறை, கடைசி மாதத்தில் ஒவ்வொரு இரவிலும் நித்திரைக்குப்போகு முன் கையாடவேண்டியது. தண்ணீர் குளிர்ந்திராமல் கை பொறுக்கக்கூடிய அவ்வளவு சூடாக இருக்கவேண்டும்.

ஒரு நாள ஒரு ஸ்திரீ அவள் முதல் பிள்ளை பெற்ற பிறகு என்னிடம் வந்து "பிள்ளை பெறும்போது எனக்குண்டான வேதனைகள் நான். எப்போதுமறியாத அவ்வளவுக்கதிகமான இன்பத்தையுண்டாக்கினது. எனக்காக அந்த வேதனைகளைச் சகிக்கும்படி ஒருவரையும் நான் கேட்கமாட்டேன்" என்று சொன்னாள்.

என் சொந்த அனுபவத்தில் நான் கண்ட ஒரு திருஷ்டாந்தம் தருகிறேன். சிலமாதங்களுக்கு முன்னே என்னிடத்தில் ஒரு துரைசானி வந்தாள். அவள் முதல் பிள்ளை பெற்று பதினொரு வருஷங்களுக்குப் பின்பு கர்ப்பிணியானாள். அவள் தன்னுடைய முதல் பிரசவத்திலடைந்த வேதனையையும், துன்பங்களையும் மறந்துபோகவில்லை என்று சொன்னாள். இப்போது மறுபடியும் அந்த நிலைமைக்குள்ளானதைப்பற்றி அவள் நினைத்து, மனங்கலங்கிப் போயிருந்தாள். நான் அவளுக்குச் சொல்லவேண்டியவைகளையெல்லாம் சொல்லி அவளைத் தைரியப்படுத்தினேன். அவள் நான் மேலே சொன்ன எல்லா விதிகளையுந் தவறாமல் அனுசரித்தவளாய், அந்தப் பயங்கரமான பிரசவ நிலைமைக்குள் யாதொரு கவலையும் பயமுமற்றவளாய் சந்தோஷமாய்ப் பிரவேசித்து, யாதொரு வேதனையுமற்றவளாய் பிள்ளை பெற்றாள். இப்போது அவள் அநேக பிள்ளைகளுக்குத் தாயாயிருக்கிறாள். பிரசவகாலத்தில் யாதொரு பயமும் அவளுக்கிருக்கவேயில்லை. எந்த ஸ்திரீயும் அதைப்பற்றி பயப்படவேண்டியதில்லையென்று சொல்லக்கூடியவளாயிருக்கிறாள்.

(இன்னும் வரும்)

145

Vol. XXVIII. Registered No. M. 209 No. 10

APRIL, 1915

# மாதர் மித்திரி.

# Tamil Woman's Friend

"MATHAR MITHIRI"

9 - 1915 MA

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, Mount Road, Madras.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை | 147 |
| கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள் | 148 |
| ஒரு வாலிபப்பெண்ணின் தைரியம் | 149 |
| சிறுவர்க்கான பக்கம் | 152 |
| சில பிராணிகள் எப்படித் தூங்குகின்றன? | 153 |
| சர் வால்ட்டர் ஸ்காட் | 154 |
| கஷ்டமில்லாமல் பிள்ளைகளை பெற்றுவளர்த்தல் | 157 |
| வர்த்தமானக் குறிப்புகள் | 159 |



# மாதர் மித்திரி.

புத். உஅ. ௧௯௱௧௫ ௵ - ஏப்பிரல் ௴. இல. ௰.


## ARISE, O LORD

இராகம், லாலி. சாப்புத்தாளம்.

### பல்லவி.

எழுந்தருளும், ஏசு சுவாமி.

### அனுபல்லவி.

விழுந்தலகை அழிந்தொழிய,
தொழுஞ் சீரரும் வரல் ஆச்சே;— எழுந்

### சரணங்கள்.

1. பத்தினிகள் கந்தவர்க்கம் எடுத் தேந்தி, பிரேதாலங்கா
ரத்தின் முறை நாடி, இதோ! ஆசரிக்க வந்தாரே;— எழுந்

2. மகதலா வூர் மரியாள் மகிழ்ந்து தெரிசித் தேற்ற,
கமகிழ்ந்த அப்போஸ்தலர்கள் அதிசயித்துப் போற்ற,— எழுந்

3. முத்திரையும் காவல்களும் மூடிய கல்லதும் நீங்கி,
சத்துருக்கள் நடுநடுங்கி, தயங்கி, மனங் கலங்க,— எழுந்

4. வேதாளம் நடுங்கி விழ, விண்ணோர்கள் ஒடுங்கித் தொழ,
பாதாளம் இடிந்து விழ, பாரபரனே, எழுந்தருளும்,— எழுந்

5. விஸ்தார உலகமதில், மெய்யான திருச்சபையில்,
இஸ்தோத்ர சங்கீர்த்தனம் எந்நாளும் உண்டாக,— எழுந்

EASTER.

## கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள்.

கிறிஸ்து கல்லறையிலிருந் தெழுந்த நாளாகிய உயிர்த்தெழுந்த அந்த விசேஷமான நாளின் கதையைப்பற்றி, நான்கு சுவிசேஷங்களிலும் மிகவுந்தெளிவாயும், நேர்த்தியாயுஞ் சொல்லப் பட்டிருக்கிறது. காதுகளினால் கேட்டிராததும், அவ்வளவு அதிசயமுமான விசேஷ சம்பவத்தின் காட்சியைப்பற்றி, எந்த நூலாசிரியனாவது பிரத்தியக்ஷமா யெடுத்துக் காட்ட நாடியிருந்திருப்பானானால், மெய்யாகவே, அந்தக்காட்சியைப்பற்றி எவ்வளவுக்கு அலங்கரித்து, அதைப்பற்றி விஸ்தரிக்கக்கூடுமோ, அவ்வளவுக்கதிகமான வார்த்தைகளையும், அவன் முழு சக்தியையும் உபயோகித்திருந்திருப்பான். ஆனால் கிறிஸ்துவின் சீஷரே அதைப்பற்றி எழுதியிருக்கிறபடியால், எவ்வளவுக்கதிகமாய் மனதில் பதியக் கூடிய சம்பவமாயிருக்கிறது.

கல்லறையில் கிறிஸ்துவானவர் வெள்ளிக்கிழமை வைக்கப்பட்டார். யூதர்கள் மரித்தவர்களை அடக்கம்பண்ணுகிறது வழக்கமாயிருந்தது. ஞாயிற்றுக்கிழமையில், காலை வெளுக்கிற நேரத்தில், இயேசுவுக்கு ஊழியஞ்செய்துவந்த ஸ்திரீகளில் சிலர், அவருடைய சரீரத்தை அபிஷேகம்பண்ணும்படியாக, வாசனைத்திரவியங்களோடு கல்லறைக்கு வந்தார்கள்.

யூதர்கள் அவரை அதிக நிந்தையும், குரூரவேதனையும் நிறைந்த மரணமடையும்படி நீசச்சிலுவையிலறைந்தார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அவர்களுடைய பாவங்களையும், மாய்மாலத்தையும் எடுத்துக்காட்டி, அவர்களைக் கோபமூட்டின மனுஷனை நீக்கிப் போட வேண்டுமென்றே இவ்வகையான ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள். ஆனால், இதோ அவரைச் சிலுவையிலறைந்த மூன்றாம்நாள் அவர் கல்லறையைவிட்டு எழுந்தார். இதற்குமுன் யாராவது மரித்தோரிலிருந்தெழுந்ததாக நமக்குத் தெரியுமா? மெய்யாகவே, தேவனுடைய வல்லமையினால், மரித்தவர்கள் ஜீவனடைந்திருக்கிறார்கள். ஆனால் மரித்தபிறகு தானே உயிர்த்தெழுந்ததாக ஒருவரைப்பற்றியும் நாம் அறியவில்லை.

இயேசுவின் உயிர்த்தெழுதல் மூலமாக, எல்லாமனிதருக்கும் நம்பிக்கையுண்டு. அவர் உயிர்த்தெழுந்தார் என்றுமாத்திரமல்ல, இப்போதும் உயிரோடிருக்கிறார் என்ற முழுநம்பிக்கையுமுண்டு. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் வைத்திருக்கிற எல்லாரையும், அவர்கள் சரீரங்கள் அழிந்தபிறகு, அவரோடு ஜீவிக்கும்படி அவர் செய்வார். மரணத்திற்குப்பின் நமது ஜீவியத்தைப்பற்றி நமக்கிருக்கவேண்டிய முழுநம்பிக்கை இது ஒன்றுதான். எல்லாரும் இயேசு உயிர்த்தெழுந்த நாளின் காலையில் ஆனந்த சந்தோஷங் கொண்டாடுவோமாக. அந்த இயேசுவோடு என்றும் ஜீவிக்கவும், அவருடைய மகிமையில் நாமும் பங்குள்ளவர்களாகத்தக்கதாக, நமக்குக் கிடைத்த மகாப்பெரிய இரட்சிப்பினிமித்தமாக, தேவனுக்கு நன்றிசெலுத்தி அவரை முழு இருதயத்தோடும் ஸ்தோத்திரிப்போமாக.

இயேசு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டபிறகு, முதல்முதலாக அவரைப் பார்க்கப்போனவர்கள் ஸ்திரீகளே. இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார் என்று முதலாவதாக அறிந்தவர்களும் ஸ்திரீகளே. வாசனைத்திரவியங்கள் கொண்டுவந்த ஸ்திரீகள்தான் முதலாவது கல்லறையண்டை வந்தார்கள். அவர்கள் வரும்போதே நம்மில் கல்லறையின்மேலிருக்கும் அந்தப் பெரிய கல்லைப் புரட்டித்தள்ளக்கூடியவள் யாரென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டே வந்தார்கள். அந்தக்கல் மிகவும் பளுவாயிருந்தபடியால், அவர்கள் அதைப் புரட்டித்தள்ளக்கூடிய அவ்வளவு பலமுள்ளவர்களாயிருக்கவில்லை. ஆனால் அவர்கள் அதிசயிக்கத்தக்கவிதமாய், கல்லறைக்குச் சமீபமாய் வந்தபோது அந்தக்கல் புரட்டப்பட்டிருந்ததையும் கல்லறை வெறுமையாயிருந்ததையுங் கண்டார்கள். அவர்கள் இயேசுவின் சீஷரண்டைபோய் நடந்தகாரியங்களைச் சொல்லும்படியாக ஓடினார்கள்.



இந்தப்பெரிய சம்பவத்தைப் போய்ப் பார்ப்பதில் பெண்கள் முதலாவதாக இருக்கவேண்டுமென்பது மிகவும் தகுதியான ஒரு காரியமே. ஏனென்றால் கிறிஸ்துவின் ஜீவியமும், மரணமும், உயிர்த்தெழுதலும் மனிதருக்கு அநேக நன்மைகளைச் செய்திருந்தாலும், அவைகளைவிட ஏராளமான நன்மைகளை ஸ்திரீகளுக்குச்செய்திருக்கிறது. மனிதர்கள் ஸ்திரீகளுக்கு எஜமான்கள் தாங்கள்தான் என்று தங்களைப்பற்றி அதிகப் பெருமையாக நினைத்திருந்தார்கள். ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷங்கள், அவர்கள் கொண்ட நினைவு மிகவும் தப்பிதமென்று அவர்களுக்கு மிகவுந்தெளிவாய்ப் போதித்தது. கிறிஸ்துவானவர் மனிதருக்கும், ஸ்திரீகளுக்கும் யாதொரு வித்தியாசத்தையுங் காட்டவில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட இடமெல்லாம், ஸ்திரீகள் அதிக கனமாய் மதிக்கப்பட்டுவருகிறார்கள். ஒரு தேசத்திலாவது ஸ்திரீகள் இருக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறதாகத் தோன்றவில்லை. ஏனென்றால் எல்லாருடைய இருதயங்களிலும் கிறிஸ்துவின் அரசாட்சி உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவரப்படவில்லை. கிறிஸ்து வணங்கப்படுகிற இடமெல்லாம், ஸ்திரீகளின் நிலைமையும் எல்லாவற்றிற்கும் மேலாகத்தானிருக்கிறது.

ஏனென்றால், கிறிஸ்துவானவர் ஸ்திரீகளுக்கு அளவிடக்கூடாத பெரிய கிருபையின் வார்த்தையும், அவர்கள் ஆத்துமாவிற்கு இரட்சிப்பையும், மறு உலகத்திற்குரிய நம்பிக்கையையும் தந்திருக்கிறார். நாம் அவரை வேண்டியபிரகாரம் நேசித்து, நமது நேசத்தை நமது கிரியைகளின் மூலமாகக் காட்டக்கூடுமா? ஆகையினால் கிறிஸ்து உயிர்த்தெழுந்த அந்நாளில் நமது முழு இருதயத்தோடும் அவரைத் துதித்து, நம்மை அவருக்கென்று ஒப்புக்கொடுத்து, அவரை சந்தோஷப்படுத்தும்படியாக ஜீவிக்கப் பிரயாசப்பட்டு, நமது ஜீவியத்தினால் அவரை மகிமைப்படுத்துவோமென்று தீர்மானம் பண்ணுவோமாக.

A YOUNG GIRL'S COURAGE.

## ஒரு வாலிபப்பெண்ணின் தைரியம்.

அமெரிக்க ஐக்கியமாகாணங்களுக்குத் தெற்கே மெக்ஸிகோ (Mexico) என்ற ஒரு நாடிருக்கிறது. அது ஐக்கியமாகாணங்களுக்குச் சகல விஷயங்களிலும் மிகவும் வித்தியாசமானது. அதில் வசிக்கும் ஜனங்களில் பாதிப்பேர் ஸ்பானியரும், மற்ற பாதிப்பேர் அமெரிக்க இந்தியருமே. அவர்கள் மதம் ரோமன் கத்தோலிக். ஆனால் அமெரிக்க ஐக்கியமாகாணங்களிலுள்ள முக்கால் வாசிப்பேர் சுவி

சேஷமார்க்கத்தார் (Protestants). அதாவது சில வேளைகளில் நீ சந்திக்கிற பாதிரிமாருடைய மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவ்விரண்டு தேசங்களின் கவர்ன்மெண்டும், ஒன்றுக்கொன்று முற்றிலும் வித்தியாசமானது. மெக்ஸிகோ நாட்டின் கவர்ன்மெண்டு மிகவும் பலவீனமாயும், தேசக்கலகங்களுக்கும், அநேக குழப்பங்களுக்கும் உள்ளாகி, சகல குடி ஜனங்களுக்கும், கஷ்டநஷ்டங்களை உண்டுபண்ணினபடியால், அவைகளிலிருந்து அந்நாட்டைக் காக்கும்படிக்கு, ஐக்கியமாகாணத்தின் தேசாதிபதி (President of the U.S.A.) தன் போர்வீரரை அங்கே அனுப்பி அந்த நாடு முழுவதும் சமாதான முண்டுபண்ணும்படி செய்தார்.

இப்படிப்பட்ட சமயத்தில், அநேக வருஷங்களுக்கு முன்னே ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பெரியபெண்பாடசாலை ப்யூப்லா (Puebla) என்னப்பட்ட ஒரு பெரிய பட்டணத்திலிருந்தது. இவ்விந்து தேசத்திலிருக்கிற பிரகாரம், அந்தப்பாடசாலை அமெரிக்க கிறிஸ்தவ துரைசானிகள் மூலமாக ஸ்தாபிக்கப்பட்டது. எல்லா ஜனங்களுக்கும் அப்பாடசாலையின்மேல் அதிக இஷ்டமிருந்தது. ஏனென்றால், தங்கள் பிள்ளைகள் சீக்கிரத்தில் அறிவில் விர்த்தியடையத்தக்கதாக அவ்வளவு நல்ல பாடசாலையாக இருந்தது.

இவ்வித தேசக்கலகமுண்டானபோது, அந்தப் பாடசாலையிலுள்ளவர்களையும் கலகக்காரர் (Insurrectionists) வந்து தாக்கி மோசஞ்செய்வார்களென்று அப்பாடசாலைத்தலைவர்கள் மிகவும் பயந்து கலங்கிப் போயிருந்தார்கள். அமெரிக்காவிலிருந்து போர்வீரர் மெக்ஸிக்கோவில் பிரவேசித்தவுடனே, அந்நாட்டிலிருந்தவர்கள், அப்போர்வீரர் வந்த நோக்கத்தை யறியாமல், தங்கள் நாட்டைப் பிடித்து அமெரிக்கா தேசத்தோடு சேர்த்துக்கொள்ளப்போகிறார்கள் என்று நினைத்துக்கொண்டு, தங்கள் நாட்டிலிருந்த அமெரிக்கர்கள் எல்லாரையும் சத்துருக்களாகப் பாவித்து, அவர்களையும், அவர்கள் கவர்ன்மெண்டையும் பகைக்கத் தொடங்கினார்கள். அந்தப் பாடசாலையும் அமெரிக்கருடையதாயிருந்தபடியால் அதிலிருந்த பிள்ளைகளையும் துன்பப்படுத்தாதபடி, அமெரிக்க பாதிரிமார்களிடத்திலும் அப்பாடசாலையை நேசித்தவர்களிடத்திலும் அவர்களை அனுப்பும்படிக்கு, அப்பாடசாலைத் தலைவர் தீர்மானம் பண்ணினார்கள். அப்படியே செய்தார்கள். ரோமன் கத்தோலிக்கரும், சுவிசேஷமார்க்கத்தாரும், அப்பாடசாலைப் பிள்ளைகளை மிகுந்த பக்ஷத்தோடு ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்தார்கள்.

ஒருபெண்ணை அங்கேயுள்ள ஒருகுடும்பத்தார் ஏற்றுக்கொண்டார்கள். ஒருநாள் அந்த வீட்டின் வழியாக ஏராளமான ஜனங்கள் பவனிபோவதையும், சில பிரதான கலகக்காரர், அமெரிக்கர் தங்கள் நாட்டில் வந்ததினிமித்தமாக தங்கள் நாட்டிற்கு ஏதோ ஒரு பெரிய பொல்லாப்பு நேரிட்டிருக்கிறதென்று பிரசங்கம்பண்ணிக்கொண்டு போவதையுங் கேட்டு, இந்தப் பெண் அந்தக் குடும்பத்திலிருந்தவர்களோடு வெளியே போய் நின்று நடந்த சகல காரியங்களையும் மிகவும் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவ்விதமான சந்தடியில் அந்தப் பவனியை நடத்தினவன், "யாராவது ஒருவர் வந்து என் கையிலிருக்கும் நமது தேசக் கொடிக்குச் செய்யவேண்டிய மரியாதை



யைச் செய்யலாம்" என்று சொன்னான். நான் மேலேசொல்லிய அந்தப்பாடசாலையின் உபாத்திமார் பிள்ளைகளுக்கு உண்மையான தேசாபிமானத்தைப்பற்றியும், கடந்துபோன காலங்களில் பெரிய காரியங்களைச்செய்து பேர்பிரஸ்தாபமுள்ளவர்களாயிருந்தவர்களைப்பற்றியும், தங்கள் தேசநன்மைக்கென்று தங்களுயிரையுங்கொடுத்த சிறந்த ஸ்திரீகளின் ஜீவியத்தைப்பற்றியும் கற்றுக்கொடுப்பதில் போதுமான முயற்சி எடுத்திருந்தார்கள். அது மாத்திரமல்ல, இராஜவிசுவாசத்திற்கு அடையாளமாக, தங்கள் தேசக் கொடியை வந்தனஞ் செய்யும்படியும், பிள்ளைகளுக்கு விசேஷமாய்க் கற்றுக் கொடுத்திருந்தார்கள். ஆகவே, இந்தச் சிறுபெண் அங்கே நடந்த கொண்டாட்டத்தில் சேர்ந்து, அந்தக் கலகக்காரர்களோடு தன் அனுதாபத்தைக் காட்டாவிட்டாலும், அவள் உண்மையான இராஜவிசுவாசமும், சுதேசாபிமானமுமுள்ள பெண்ணாயிருந்தாள். அந்தக் கலகத்தலைவன் திரும்பத்திரும்ப அந்தக் கொடியை வந்தனஞ் செய்யும்படி எவனைக்கூப்பிட்டாலும், ஒருவனும் அப்படிச்செய்ய இஷ்டப்படவில்லை. அப்படியே யாராவது செய்யத் தலைப்பட்டாலும், எப்படிச் செய்கிறதென்று தெரியாதவனாக இருந்தான். கடைசியாக பதினாலுவயதுள்ள அந்தப்பெண் தான் அப்படிச் செய்கிறதாக வலிய தன்னை ஒப்புக்கொடுத்தாள். அந்தப்பவனியை நடத்தினவர்கள் எல்லாரும் அந்தப்பெண்ணைப் பற்றி அதிகச் சந்தோஷப்பட்டு, உடனே அவளைத்தூக்கி ஒரு குதிரை வண்டியின்மேல் ஏற்றி நிறுத்தினார்கள். அவளோவென்றால், ஜனக்கூட்டத்தைப் பார்த்து, அந்தக்கொடியை அவர்கள் எப்படி மரியாதை செய்யவேண்டுமென்பதைப்பற்றி வைராக்கியமாயும், மிகச்சாதுரியமாயும் பேசி, எல்லா ஜனங்களும் எக்களிப்போடு ஆரவாரிக்கும்போது அந்தக் கொடியைக் கையில் தூக்கிப்பிடித்து, அதின் மடிப்புகளை முத்தியிட்டாள்.

அந்தத்திரண்ட கூட்டத்திலுள்ள ஜனங்கள் எல்லாரும் சந்தோஷித்து, ஆர்ப்பரிப்போடு அந்தப்பெண்ணை வாழ்த்தி "நீ இம்மாதிரிக்காரியத்தை எங்கே கற்றுக்கொண்டாய்" என்று கேட்டார்கள். அவள் பாடசாலையை அந்தக்கலகக்காரர் நாசப்படுத்திவிடுவார்கள் என்ற பயத்தினால் அதைவிட்டு வந்தாளென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் அந்தப்பெண்ணோ, யாதொன்றையும் மறைக்கப்பிரயாசப்படாமல் மனோதைரியமாய் "மெதடிஸ்ட் பாடசாலையில்" என்று உடனே விடைபகர்ந்தாள். ஜனங்கள் அவளைத் துன்பப்படுத்துகிறதற்குப் பதிலாக, அவளை ஆனந்தப்படுத்தி, அவள் படித்த பாடசாலையையும் முழு இருதயத்தோடும் வாழ்த்தினார்கள்.

சற்றுநேரத்திற்கப்புறம் "நீ சுவிசேஷமார்க்கத்தைச் சேர்ந்தவளா?" (Are you a Protestant?) என்று கேட்டார்கள். அவள் மறுபடியும் சற்றும் சந்தேகியாமல் "ஆம்" என்று சொன்னாள். இது மிகவும் தைரியத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தது. ஏனென்றால், சுவிசேஷ மார்க்கத்தாரும் அமெரிக்கருக்கு உதவிசெய்கிறதாக சந்தேகிக்கப்பட்டிருந்தார்கள். இதுவிஷயமாய் அவளையும் அடித்துத் துன்பப்படுத்தியிருப்பார்கள். ஆனால் அவளுடைய தைரியமும், அமெரிக்கர் தங்களுக்குக் கீழிருந்த பிள்ளைகளுக்கு அவர்களுடைய சொந்த தேசக் கொடியை மரியாதை செய்யும்படி கற்றுக்கொடுத்திருக்கிறார்கள் என்ற நிச்

சயமுமே அந்தக் கலகக்காரருக்குச் சந்தோஷத்தையுண்டாக்கி "சுவிசேஷ மார்க்கத்தார் வாழ்க" (Viva los Protestantes) என்று ஆர்ப்பரித்தார்கள்.

அந்தப்பெண் பாடசாலைக்குத் திரும்பி வந்தபோது தன் தைரியத்தைப்பற்றி யாதொரு பெருமையுங்கொள்ளாதவளாய் நடந்த சகல காரியங்களையும் திட்டமாய் ஒரு சாதாரண சங்கதியைப்பற்றிச் சொல்வதுபோல சொன்னாள். ஆனால் அமெரிக்க பாதிரிமார் தங்கள் பாடசாலையைப்பற்றியும், தங்கள் சொந்த ஜனங்களைப்பற்றியுங் கொண்டிருந்த பயங்கள் நீங்கிப்போயிற்றென்று நினைத்து அந்தப் பெண்ணின் தைரியத்திற்காக கடவுளுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செலுத்தினார்கள்.

---

## CHILDREN'S PAGE.
## சிறுவர்க்கான பக்கம்.

---

ரோசா என்ற ஒரு பெண்ணின் ஏழாவது பிறப்புநாள் தினத்தில் அவளுடைய தாய் "ரோசா நீ வீட்டில் உதவி செய்யக்கூடிய அவ்வளவு பெரிய பிள்ளையாகிவிட்டாய். ஆகையால் இந்த நாளிலிருந்து உன் உடைகளையும், உன்னறையையும் நீயே சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். வாரத்திற்கு மூன்று முறை உன்னறையின் மூலைகளை அதிகக் கவலையோடு பெருக்கிச் சுத்தப்படுத்தவேண்டும். உன் விளையாட்டுச்சாமான்களை தரையில் போடாதபடி, அதினதின் ஸ்தானத்தில் அவைகளை வைக்கவேண்டும். இப்போது வேலை புதிதாக இருக்கிறபடியால் இம்மாதக்கடைசியில் உனக்கு ஏதாவது தருவேன். உனக்கதிக இஷ்டமானதெது?" என்று கேட்டாள்.

"ஒரு சரம் பவளமணிகள்" என்று சற்றும் சந்தேகியாமல் ரோசா சொன்னாள்.

அடுத்தநாள் ரோசா தன் புது வேலையை ஆரம்பித்தாள். முதல் இரண்டு வாரங்களாக கவலையோடு நல்ல வேலை செய்தாள். அவள் பெருக்கும்போதெல்லாம் தன் விளையாட்டுச் சாமான்கள் இருந்த பெட்டியையும், சப்பாத்துப் பெட்டியையும் எடுத்துத் தூரவைத்துவிட்டு, பெருக்கினபிறகு திரும்பவும் அவைகளை அதினதின் ஸ்தானத்தில் வைப்பாள். சில தினங்களுக்குபின்போ அவ்வளவு கஷ்டத்தோடு வேலைசெய்கிறதைப்பற்றி மிகவும் மனஞ்சலித்துப் போய்விட்டாள். உள்ளறையைப் பெருக்குகிறதற்குப் பதிலாக, அதின் மத்தியிலுள்ள தரையைமாத்திரம் ப்ரஷ் (Brush) மூலமாகச் சுத்தஞ்செய்வது அவளுக்கு மிகவும் எளிதான காரியமாகக் காணப்பட்டது. அந்த அறையும் அவள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றினது. அவளுக்கு விளையாடுகிறதற்கு அதிக நேரமுங்கிடைத்தது.

முதல்மாதக்கடைசியில் ரோசாவின் தாய் அவளுக்கு பவளமணிகள் கொடுப்பதைப்பற்றி யாதொன்றும் சொல்லவில்லை. ரோசாவின் குற்றமுள்ள மனச்சாட்சியும், அவைகளுக்காக அவள் தாயாரிடம் கேளாதபடி அவள் மனதைக் கடினப்படுத்திக்கொண்டிருந்தது.

இரண்டாவதுமாதமும் ஏறக்குறைய கடந்துவிட்டது. அப்போது ரோசாவின் தாய் ஒருநாள் அவளைப்பார்த்து "ரோசா பவளமணிகளை நீ ஏன் அணிந்துகொள்ளவில்லை" என்று கேட்டாள்.

"ஏன்! தாயே நீங்கள் அவைகளை எனக்கொருபோதும் கொடுக்கவில்லையே, அவைகள் எங்கேயிருக்கின்றன" என்று ஆச்சரியத்தோடு கூவினாள்.

"ஏறக்குறைய ஆறு வாரங்களுக்கு முன்னால் உன் உள்ளறையின் மூலையிலுள்ள உன் சப்பாத்துப் பெட்டிக்குக் கீழே போட்டேன். ரோசா அந்த மணிகளைப் பெற்றுக்கொள்ள நீ தகுதியுள்ளவளா?" என்று தாயார் சொன்னாள்.

"இல்லை, நான் தகுதியுள்ளவளல்லவென்று எனக்குத் தெரியும். தாயே, நான் துக்கமும், வெட்கமுமுள்ளவளாயிருக்கிறேன். ஆனால் நீங்கள் இன்னும் இரண்டுமாதங்களுக்கு அவைகளை வைத்திருந்தால், அதற்குள்ளாக என்னால் கூடியமட்டும் பிரயாசப்பட்டு, அவைகளைப் பெற்றுக்கொள்ளுவேன்" என்று அந்த உண்மையுள்ள சிறுபெண் வெட்கத்தோடு சொன்னாள். அவள் தனக்குத் தகுமென்று நினைத்த சரியான தண்டனை அதுவே.

"மிகவும் நல்லது, உனக்கு இன்னுமொரு தவணைகொடுக்கிறேன்" என்று தாய் சொன்னாள்.

அதற்குப்பிறகு ரோசா கண்டுபிடியாத எந்தக் குண்டூசியும் அவளுடைய உள்ளறையில் யாரும் ஒளித்துவைத்திருக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் அவள் உள்ளறையை உண்மையாய்ப் பெருக்கி அவ்வளவு சுத்தமாய் வைத்திருந்தாள்.

---



## HOW SOME ANIMALS SLEEP?
## சில பிராணிகள் எப்படித் தூங்குகின்றன?

---

—யானைகள் நின்றுகொண்டே தூங்குகின்றன. ஒரு பெரிய மந்தையில் சில யானைகள் காவல் காத்துக்கொண்டிருக்க மற்றவைகள் தூங்கும். ஏனென்றால் பெரிதும், பராக்கிரமுமுள்ளவைகள் இரவில் கோழைத்தனமாயும், எச்சரிக்கையாயுமிருந்து, காவலில்லாமல் நித்திரைசெய்யமாட்டா.

—வௌவால்கள் தங்கள் கால்விரல்களின் நகங்களால் மரக்கிளைகளை இறுக்கமாய்ப் பிடித்துத் தலைகீழாகத் தொங்கிக்கொண்டே தூங்கும்.

—பட்சிகள் (சிலவற்றைத்தவிர) தங்கள் தலைகளை வால்புறமாகத் திருப்பிக்கொண்டு, தங்கள் அலகுகளை செட்டைகளுக்குள்ளே நுழைத்துக்கொண்டு தூங்கும்.

—கொக்குகள், கடற்புள் (Gulls) முதலிய நீண்ட கால்களுள்ள பட்சிகள் நின்றுகொண்டே தூங்கும்.

—வாத்துகள் தண்ணீரின்மேல் மிதந்துகொண்டு தூங்கும். தண்ணீரால் மோதியடிக்கப்பட்டு, கரைக்கிழுத்துக்கொண்டுபோகப்படாதபடி, ஒரு காலால் தண்ணீரில் நீந்திக்கொண்டே தூங்கும்.

—நரிகளும், ஓநாய்களும் சுருண்டு படுத்து, தங்கள் மூக்கையும் உள்ளங்கால்களையும் ஒன்றாகச் சேர்த்துவைத்து தங்கள் வால்களால் முகத்தை மூடிக்கொண்டு தூங்குகின்றன.

—ஆந்தைகள் கண்களைத் திறந்துகொண்டு பகலில் தூங்கும். அவைகளுடைய கண்களில் கண்மடல்களோடு (Eyelids) திரைபோன்ற ஒருவித வஸ்து உண்டு. அவைகளுடைய கண்மடல்கள் திறந்திருக்கும்போது இந்தத் திரையானது கண்ணின் இருபக்கங்களிலும் வந்து வெளிச்சம் கண்ணில் விழாதபடி மூடிக்கொள்ளும். ஆனால் பார்க்கிறவர்கள் ஆந்தைகள் விழித்துக்கொண்டிருக்கிறதாக நினைத்து சீக்கிரத்தில் ஏமாற்றப்பட்டுப்போகிறார்கள்.

இவைகள் எல்லாம் தெய்வ சிருஷ்டிப்பின் அதிசயத்தைக் காட்டுகின்றதல்லவா?

## SIR WALTER SCOTT.

## சர் வால்ட்டர் ஸ்காட்.

ஒவ்வொருவரும் இந்தப் பேரைப் பற்றி நன்றாய்க் கேள்விப்பட்டிருக்கலாம். ஏறக்குறைய பிரவேசப்பரீட்சைவரைக்கும் (Entrance Examination) கற்றிருக்கும் எல்லா மாணாக்கருக்கும் இவரைப்பற்றி நன்றாய்த்தெரியும். உலகமுழுவதும் இவரால் எழுதப்பட்ட புஸ்தகங்கள் அறியப்பட்டும், வாசிக்கப்பட்டுமிருக்கின்றன. அதுமாத்திரமல்ல, இவைகளைப்போலொத்த புஸ்தகங்கள் எங்கும் கிடையாதென்று ஒவ்வொருவரும் சொல்லக்கூடும். அவரால் எழுதப்பட்ட புஸ்தகங்களைப்பற்றியாவது அல்லது அவைகளின் மூலமாய் அவருக்குக்கிடைத்த கீர்த்திபிரஸ்தாபத்தைப்பற்றியாவதல்ல, ஒருகேவலமான செய்கையை செய்யவிடாமலும், அவருக்கு நேரிட்ட உபத்திரவத்திலிருந்து அவரைக் காப்பாற்றினதுமான அவருடைய ஜீவியத்தில் காணப்பட்ட சிறந்த லக்ஷணங்களைப் பற்றியே நான் இப்போது உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு குடும்பத்திலுள்ள மற்ற பெரிய பிள்ளைகளையெல்லாம், மரணம் வாரிக்கொண்டுபோக, இவர் ஒருவரே இளைய மகனாக உயிரோடே விடப்பட்டிருந்தார். அவர் பிறவிச்சப்பாணியும், பலவீனமான பிள்ளையுமாயிருந்தபடியால், அவருடைய இனத்தார் எல்லாரும் அவரை அதிகப்பட்சத்தோடும், கவலையோடும் செல்லப்பிள்ளையாக நடத்திவந்தார்கள். ஆனால் அவருடைய பலவீனமான சின்ன சரீரத்திற்கு முற்றுமாறாக, ஒருவிதமான கடுமுயற்சி அவருக்கிருந்தது. அவர் களைப்புற்றவராக அவருடைய படுக்கையிலிருந்த மணிநேரங்களையெல்லாம் அவ்வளவு சாவகாசமாயும், சவுக்கியமாயுங் கழித்துவந்தார். எல்லாவற்றிலும் சிறந்ததும், அந்தச் சிறு நோயாளிக்கிஷ்டமானதுமான ஒருவித முயற்சி என்னவென்றால், கதை சொல்லுகிறதுதான். மூதாக்கள், பெற்றார், பிறவிகள், ஆயாள், கிராமக் கதாப்பிரசங்கிகள் முதலியவர்களையழைத்து, அவருடைய போராசையுள்ள மனோபாவனைக்கேற்ற கதைகளைச்சொல்லும்படி கேட்பார். இவர்களுடைய முறைகள்கழிந்தவுடன், பூனையை, நாயை அல்லது தன்னோடு விளையாடக்கூடிய சிறு தோழர்களையழைத்து அவர்களுக்கு தன்னிருதயத்தில் வந்தவைகளை கதையாகச் சொல்லுவார். ஸ்காட்லாந்து கட்டுக்கதைகளுக்கு (Folklore) பேர்போன ஒருதேசம். ஒவ்வொருநாளும் புதிது புதிதாய் அவருடைய ஞாபகமாகிய களஞ்சியத்தில் ஏதாவதொருகதையைக் கூட்டிச்சேர்த்துக்கொண்டே வந்தார். இவ்விதமாக அவர்காலத்திலிருந்த எவரையும்விட அதிகமான கதைகளை அவர் ஞாபகத்தில் பொக்கிஷமாகச் சேர்த்துக்கொண்டார்.

அவர்பெரிய பையனானவுடனே பாடசாலைக்குப்போகக் கூடியவரானார். அங்கேயும் மற்ற எல்லாப்பையன்களுக்கும் தலைவரானார். அவருடைய அன்புள்ள சுபாவம், அவரைப் பின்பற்றும்படியாக மற்ற பையன்கள் எல்லாரையும் தூண்டினது. அவர் சிறுபிராயத்தில் கேள்விப்பட்டகதைகள் மூலமாகவாவது தேசச்சரித்திரத்தைக்கற்று அதின் மூலமாக அவரடைந்துகொண்ட அறிவினிமித்தமாகவாவது, அவருக்குத்தெரிந்த விசேஷமான இடங்களைப் பார்க்கும்படியாக மற்றபையன்களை அடிக்கடி அழைத்துக்கொண்டுபோவார்.



தன தகபபனைச் சந்தோஷப்படுத்தும்படியாக, சர் வால்டர் நியாயசாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டு வந்தார். ஆனால் அதில் அவருக்கு அவ்வளவு விருப்பமில்லாதபடியால் அதை விட்டுவிட்டு நூலாசிரியனாக (Author) வேண்டுமென்று விரும்பி கலைஞானத்தை (Literature) கற்றுக்கொள்ளும்படி, அதற்காக தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்துவிட்டார். அவருடைய புஸ்தகங்களை எழுதினவர் யாரென்று அறியு முன்னே அவருடைய கீர்த்தி எங்கும் பிரஸ்தாபமாயிற்று. முதலில் அவர் அதைக் காட்டிக்கொள்ளாதபடி இரகசியமாக வைத்துக்கொண்டிருந்தார். சர் வால்டர் ஸ்காட், மற்றவர்களுக்கு உதவி செய்கிறதைப்பார்க்கிலும் வேறெதையும் அதிகமாக நேசிக்கவில்லை. அவருடைய கீர்த்தி உன்னதஸ்திதிக்கு வந்தவுடனே அவர் அபட்ஸ்போர்ட் (Abbotsford) என்ற அழகான ஒரு ஸ்தலத்தை வாங்கி, அதிலுள்ள பழைய கட்டடங்களைச் சீர்ப்படுத்தி விஸ்தாரமான தோட்டத்தையும் விர்த்திபண்ணி எல்லாம் நன்றாயிருக்கிறதென்று கண்டவுடனே, தன்னைச் சார்ந்திருந்த தன் இனஜனத்தாரையும் அவசியமான சிநேகிதரையும் தன்னோடு சேர்த்துக்கொண்டார். அவ்விதமான ஒரு பெரிய குடும்பத்தை நடத்துவதற்கு ஏராளமான பணம் சென்றது. ஆனால் தான் சம்பாதித்த பணத்தைக்கொண்டு சர் வால்ட்டர் ஸ்காட் இந்தப் பெரிய ஸ்தலத்தை வாங்கினது இப்பெரிய சந்தோஷத்திற்காகவே.

எல்லாம் நன்றாகத்தான் இருந்திருக்கும். ஆனால் அவருக்கு ஒரு பெரிய துரதிஷ்டம் நேர்ந்தது. அவருடைய சிநேகிதரில் இரண்டுபேருக்குதவிசெய்யும்படி அவர்களை எடின்பரோ பட்டணத்தில் வந்து அச்சாபீஸ் ஒன்று ஸ்தாபிக்கும்படியாக ஏற்ற ஒழுங்குகள் செய்தார். அந்த அச்சாபீஸ் அவர்கள் எதிர்பாராத வண்ணம் விர்த்தியடைந்து வந்தது. ஆனால் அச்சாபீசுக்குச் சொந்தக்காரரான அந்த இரண்டு சகோதரருக்கும் ஒரு பொல்லாதகாலம் சம்பவித்தது. அவர்கள் பணத்துவிஷயமான பலவித துன்பங்களுக்குள்ளாகி, லாபங் கிடைக்கத்தக்க விதமாய் அதை நடத்தக்கூடாதவர்களாகிவிட்டார்கள். கடைசியாக, அந்த அச்சாபீசை மூடும்படியான காலம் வந்தது. இவ்வித கஷ்டகாலத்தில் சர் வால்டர் ஸ்காட்டில் காணப்பட்ட பெருந்தன்மையையும், மகத்துவமான குணசீலத்தையும் பார்க்கலாம். ஆயிரக்கணக்கான சிப்பந்திகளடங்கிய அவ்விதமான ஒரு பெரிய அச்சாபீசுக்கு நேரிட்ட கடனுக்காக பேர்பெற்ற அந்த நூலாசிரியன் ஏன் உத்தரவாதமாயிருக்க வேண்டுமென்பதற்கு யாதொரு காரணமும் காணமுடியவில்லை. ஆனால் அவரால் மற்றவர்களுக்குக் காண்பிக்கப்பட்ட ஒரு சன்மார்க்கப் போதகமேயன்றி வேறொன்றுமில்லை. மெய்யாகவே அவரும் ஏராளமான பணத்தை அந்த அச்சாபீசுக்காக செலவிட்டிருந்தார். அவைகளையும் அவர் இழந்துவிட்டார். நியாயப்படி மறுத்துவிடுகிறதற்குப் பதிலாக, எல்லாக் கடன்களையும் ஏற்றுக்கொண்டு, அவரே கொடுத்துத் தீர்த்துவிட்டார்.

அந்த அச்சாபீசுக்கு வரும்படியாக ஜனங்களை இழுத்தது அவருடைய பெயர்தானென்று அவர் நன்றாயறிந்தார். அதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சியையும் நன்குமதித்தார். அம்முயற்சியே மற்றவர்களையும் நம்பிக்கை வைக்கச் செய்ததென்றுமறிந்தார். ஆகை

யால் அதினால் வரும் நஷ்டத்தையும் முழு மனதோடு மேற்றுக்கொண்டார். அவர் கொடுத்துத்தீர்த்த கடன் மொத்தம் 117,000 பவுண்கள் அதாவது, 1,750,000 ரூபாயாகிறது. (17½ லக்ஷம்).

அதற்குப் பின்னுள்ள அவருடைய ஸ்திதி மிகப்பரிதபிக்கக்கூடியதும், மற்றவர்களை எழுப்பிவிடக் கூடியதுமாயிருந்தது. அபட்ஸ்போர்டிலுள்ள அவருடைய பெரிய குடும்பம் சிறுமைக்குள்ளானது, வீட்டுச்செலவும் சுருக்கமாகிவிட்டது. தன் மேன்மையைக் கெடுக்கக்கூடிய எவ்வித கேவலமான காரியத்தையும், தான் வைத்துக்கொள்ளக்கூடாதென்று நினைத்து தன் சுகத்தையும், சொந்த சந்தோஷத்தையும் வெறுத்து, அவைகளை தியாகஞ் செய்துவிட்டார் (Sacrifice). கடனைகொடுத்துத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணமானது அவரை தன் சொந்த சந்தோஷத்திற்காக ஒரு ஷில்லிங்கையாவது செலவிடாதபடி செய்துவிட்டது. புஸ்தகங்கள் எழுதி கஷ்டப்பட்டுச் சம்பாதித்த எல்லாப்பணமும் கடன்காரருக்குக் கொடுக்கப்பட்டது. இப்போது அவர் கஷ்டப்பட்டு உழைத்ததுபோல, இதற்குமுன் அவர் ஜீவியத்தில் எப்போதாவது உழைத்திருக்கமாட்டார். ஒரு நாளாவது அவருடைய எழுத்து மேஜையைவிட்டு அக்கம் பக்கம் போகவில்லை. பணக்குறைவினிமித்தம் அவர் சொந்த தோட்டக்காரரில் அநேகர் நிறுத்தப்பட்டார்கள். எல்லாக் கஷ்டங்களோடும் அவர் தன் சொந்த வீட்டையும், தோட்டத்தையும் போய் மேல்பார்ப்பது மிகவும் அவசியமாயிருந்தது. இந்தச் சமயத்திலும் அவருடைய தோழர்கள் பலவித விளையாட்டுகளுக்கும், விருந்துக்கும் வரும்படி அவருக்கு அழைப்புக் காகிதங்கள் அனுப்பியிருந்தார்கள். என்றாலும், இவ்வித் இன்பங்களை அனுபவிக்கவேண்டுமென்று கிஞ்சித்தும் நினையாதவராக, அவைகளுக்கு பதில் யாதொன்றும் அனுப்பவில்லை. அவருடைய காதில் பலமாய் தொனித்துக்கொண்டிருந்த ஓரேயொரு சப்தம் என்னவென்றால், **"மரியாதையைக் காத்துக்கோள்."** இந்தச் சப்தமானது, அவரை நாளுக்குநாள் நெருக்கி, நெற்றி வேர்வை நிலத்தில் விழத்தக்கதாக அவ்வளவு கஷ்டப்பாடுபட்டு உழைக்கும்படி செய்தது. அவருடைய வீரதீரமான பிரயத்தனங்கள் எங்கும் பிரஸ்தாபமானது. நாளுக்குநாள் அவருடைய கடனும் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்துகொண்டே வந்தது. இச்சமயத்தில் அநேகர் உதவிசெய்கிறதாக அவருக்கு வாக்குப்பண்ணியும் திடீரென்றுமோசஞ் செய்து ஏமாற்றிவிட்டார்கள். கொஞ்சப்பணம் அவருக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், ஆனால் அதை அவர் தற்சமயம் எடுக்க முடியாதென்றும் பாங்கிகளிலிருந்து நோட்டீசுகள் அவருக்கு வந்தன. ஐயோ! என்ன பரிதாபம். அவருடைய கண்யத்தைக் காத்துக்கொள்ளும்படியாக அவர் சொந்தக் கைகளினால் வேலைசெய்து கடனைத்தீர்க்க வேண்டியிருந்தது. ஆகவே, அளவுக்கு மிஞ்சி கஷ்டப்பட்டு உழைத்ததினால், எல்லாரும் நினைத்தபிரகாரம், சர் வால்ட்டர் ஸ்காட்டின் சுகங்கெடத் துவங்கினது. ஒரு மனுஷன் தன்னால்கூடிய அவ்வளவு முயற்சியெடுத்துத் தன் வேலையைச் செய்துவருங்காலத்தில் திடீரென்று அவன் சுகங்கெடுமானால், அதைவிட பரிதாபமான காரியம் வேறொன்றுண்டோ? தன் மனதையடக்கி, தன்னிருதயத்திலுள்ள எண்ணத்தை வெளியிடக்கூடிய வார்த்தைகளைச் சொல்லக்



கூடாத நிலைமைக்குள்ளாகிவிட்டதாக அவர் கண்டுகொண்ட ஒருநாள் வந்தது. அவர் முன்னிருந்ததுபோல அவ்வளவு பலசாலியாக இருக்கவில்லையென்று தன் மருமகனைக் கூப்பிட்டு திகிலோடு சொன்னார். அதோடு, தான் சீக்கிரத்தில் சுகப்பட்டு, எல்லாக் கடன்களையுங் கொடுத்துத் தீர்க்கும்படியாக, இத்தாலியா தேசத்துக்குப்போய் ஒரு மாரிகாலத்தைக் கழிக்கவேண்டுமென்று தீர்மானம் பண்ணினார். ஆனால் காலதாமதமாகிவிட்டது (Too late). அவரெடுத்துக்கொண்ட சகல அரும்பிரயாசமும் வீணாய்ப்போய்விட்டது. கடைசியாக, அபட்ஸ்போர்டில் போய் தன் அந்திய காலத்தைக் கழிக்கும்படி திரும்பினார். அங்கே அவர் உலாவும்படியாக வண்டியில் போகும்போது, ஒரு அழகான இடத்தைக்கண்டவுடன் குதிரைகளை நிறுத்தி, அங்கேயுள்ள காட்சிகளைக் கண்குளிரப்பார்த்துச் சந்தோஷிப்பார். சர் வால்ட்டர் ஸ்காட்டைப்போல ஒரு பெரிய மனுஷன் சாகும்போது, அவரைச் சேர்ந்தவர்களும், அறிந்தவர்களுமிருக்கிற இடங்களிலெல்லாம் ஒரு பெரிய அமைதலுண்டாகிறதல்லவா? அவர் மரித்தவுடனே அப்படியேயிருந்தது. அபட்ஸ் போர்டிலுள்ள அவர் வீட்டின் அறைகளும், சபாமண்டபங்களும், அவர் சென்ற எல்லா கிராமங்களும், தாங்கள் இனி கேட்கக்கூடாத அவர் நொண்டி நொண்டி நடக்கும் சத்தத்தையும், அவரது இனிய குரலையும் ஆவலோடு உற்றுக் கவனிக்கிறதுபோலக் காணப்பட்டன.

அவர் எப்போதும் வண்டியில்போட்டு, தன் இனிய குரலால் நடத்திக்கொண்டுபோகும் குதிரைகளே அவரைக் கல்லறைக்குக் கொண்டுபோயின. லக்ஷக்கணக்கான ஜனங்கள் அவருக்குப் பின்னாக பவனி சென்றார்கள். கல்லறையில் அவருடைய சரீரத்தை அடக்கம்பண்ணின பிறகு, அவருடைய குதிரைகள் அவருடைய அன்பான இனிய குரலைக்கேளாததினால் ஒரு அடியாவது முன்னெடுத்து வைக்கக் கூடாதவைகளாயிருந்தன.

அவர் மரித்து அநேக வருஷங்களாகிவிட்டன. ஆனாலும், சர் வால்ட்டர் ஸ்காட்டின் பெயர் கண்யப்படுத்தப்பட்டும், நேசிக்கப்பட்டும் இருக்கிறது. ஜனங்கள் அவர் எழுதின புஸ்தகங்களுக்காக அல்ல, அவர் ஜீவியத்தில் காணப்பட்ட சிறந்த லக்ஷணங்களுக்காகவே அவரை கனப்படுத்திவருகிறார்கள்.

"இவரது ஜீவியம் உனக்குச் சிறந்த முன்மாதிரியல்லவா?"

---

MATERNITY WITHOUT SUFFERING.

## கஷ்டமில்லாமல் பிள்ளைகளைப் பெற்று வளர்த்தல்.

பிள்ளைப்பேறு இயற்கையான ஒரு காரியமே. இயற்கைப் பிரமாணத்திற்கிசைய ஒரு ஸ்திரீ சுத்தஜீவியம் பண்ணுவாளானால் அவளுடைய நிலைமையைப் பற்றி பயப்படவாவது அல்லது அவள் உணவை அடிக்கடி மாற்றவாவது வேண்டியதில்லை. ஒருவளுக்கிஷ்டமில்லாத வஸ்துக்களைத். தின்னும்படி அவளைக் கட்டாயப்படுத்தவேகூடாது. ஏனென்றால் அவளுடைய மனதில் ஒருவித வெறுப்பும், பயமுமுண்டாகி அவளுடைய சுகத்தைக் கெடுக்கக்கூடியதாயிருக்கிறது. அதுமாத்திரமல்ல, கர்ப்ப நிலைமையும், பிரசவகாலத்திலுண்டாகிற துன்பங்களும், உயிருக்குப்பாயமான காரி

யமென்ற ஒரு எண்ணத்தையும் அவள் மனதிலுண்டாக்கிவிடுகிறது.

ஆகையால், ஒவ்வொரு ஸ்திரீயும் ஏதோ ஒரு பெரிய அபாயம் தனக்கு நேரிடுமென்று தன்னிருதயத்தில் நினையாதபடி, இயற்கைப்பிரமாணத்திற்கிசைய, தன் சுயாதீன சித்தத்தை நிறைவேற்றுகிறாள் என்ற அறிவினால் தன் மனதை நிரப்பவேண்டியதவசியம்.

பிள்ளைப்பேறு ஏதோ ஒரு வியாதியென்று நினைக்கக்கூடாது. வியாதியாயிருக்கிறதென்று சொல்வதாவதென்ன? சரீரமானது ஏதோ ஒரு நோயினால் பிடிக்கப்பட்டு, தேக சௌக்கியமே கெட்டுப்போவதுதான். அப்படியிருக்க பிள்ளைப்பேறு ஒரு வியாதியென்று அழைக்கப்படுவானேன்?

இன்னிலைமையிலுள்ள ஒரு ஸ்திரீக்கு ஒழுங்கான தேகாப்பியாசம் மிகவும் அவசியமானது. ஆனால், எடுக்கும் அப்பியாசமானது அளவுகடந்து போகக்கூடாது. வீட்டு வேலைகளை ஆரம்பத்திலிருந்து கடைசிவரையில் ஒழுங்காகச் செய்வது, வெளியில் ஒவ்வொருநாளும் உலாவுதல் ஆகிய இவ்வித அப்பியாசங்கள் மிகவும் நல்லதென்று நான் நம்புகிறேன். சுகத்துக்கனுகூலமான அப்பியாசங்களாயிருக்கவேண்டுமேயன்றி, அதிகக் களைப்பையுண்டாக்கக்கூடிய வேறெதையும் செய்யக்கூடாது.

எந்தக்காரியத்திலும் முன் எச்சரிக்கையுள்ளவளாயும், பூரண சுத்தம் உள்ளவளாயுமிருக்கவேண்டும். விசேஷமாக தான் செய்கிற எல்லா காரியங்களிலும் அதிக கவனமுள்ளவ்ளாயிருக்கவேண்டும்.

சுகமுள்ளவளாய் ஜீவி. உன் சரீரத்திற்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய உணவை எடுத்துக்கொள். உன் சரீர விர்த்தியைக் கெடுக்கக்கூடிய எவ்வித உடையையாவது தரித்துக்கொள்ளாதே. சாதாரண நிலைமையிலிருக்கும்போது செய்யக்கூடிய அவ்வித அப்பியாசங்களையே கையாடு. உன் வீட்டுக்கடமைகளை ஒழுங்காய்ச்செய். எல்லாவற்றிற்கும் மேலாக, எப்போதும் மனமகிழ்ச்சியாயிருந்து, பிள்ளைபெற்ற ஒரு தாய் தன் பாலகனுக்குப் பாராட்டும் அன்பையும், அவளுடைய இன்ப துன்பங்களையும் நன்றாயறிந்த நமதருமையுள்ள கர்த்தர், உனக்காகக் கவலையெடுத்து, நீ உன்னை முழுவதுமாக அவருக்கு ஒப்புக்கொடுத்தால் அவர் உன்னை முற்றுமுழுவதும் வழிநடத்துவாரென்றும் எண்ணி, உன் முழு நம்பிக்கையையும் அவர்மேல் வைத்து, உன் பாரத்தை அருமையுள்ள இரட்சகர் பாதத்தண்டையில் போட்டுவிடு. சகல நீதிநெறிகளின்படியும் ஜீவிக்க, நீ செய்யவேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்து முடித்தபிறகு உன்னைப்போலொத்த மற்ற ஸ்திரீகளுக்கு உண்டாகக்கூடிய சிறு நோவை நீயும் சகிக்கக்கூடுமென்று யாதொரு சந்தேகமுமின்றி நம்பி, சிறந்த எண்ணங்களோடும் உன் பிரசவ நிலைமைக்குள் பிரவேசி. நீ அப்படிச்செய்வாயானால் மாத்திரம் உன் சந்தோஷம் அளவிடக்கூடாததாயிருக்கும்.

உத்தம ஸ்திரீகள், தேவன் தங்களை வைக்கச்சித்தமான அந்த நிலைமையில் சந்தோஷமாயிருந்து, விசேஷமாக தாங்கள் பெண்களாக சிருஷ்டிக்கப்பட்டதினிமித்தமாக பேரானந்தங்கொள்ளுகிறார்கள். அதுமாத்திரமல்ல, "பெற்றுப் பெருகி உலகத்தை நிரப்புங்கள்" என்ற விசேஷ ஆசீர்வாதத்தை சிருஷ்டி கர்த்தாவினிடத்திலிருந்து பெற்று மேன்மைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், உண்மையான ஸ்திரீகள் உலகத்தின் மேன்மக்களோடு போய் ஜீவிக்கும்படியான அதிகாரத்தைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கக்கூடிய வல்லமை தங்களுக்குண்டென்று உணருகிறார்கள். விழுந்துபோன உலகத்தை உயிர்ப்பிக்கும்படியாக, பிள்ளைகளைப்பெறுகிறதும், வளர்க்கிறதுமான இந்த மகாவேலையைப் பார்க்கிலும் விசேஷமானது வேறுண்டோ?



ஒரு ஸ்திரீ பிரத்தியேகமான ஓர் விசேஷித்த வேலையைச் செய்கிறாள். எவ்விதமான பாதையின் மூலமாயாவது அடையக்கூடாத ஒரு உயர்ந்த ஸ்தலத்திற்குத் தன்னைக்கொண்டுபோகிறாள். அதுமாத்திரமல்ல உலகத்தின் எவ்விதமான படிப்பும் தரக்கூடாத ஒரு விசேஷித்த அறிவையும், சிலாக்கியத்தையும் பெற்றனுபவிக்கிறாள். ஸ்திரீப்பருவம், தாய்ப்பருவம், எந்தப்பாஷையிலும் உள்ள வார்த்தைகளிலெல்லாம் இந்த இரண்டு வார்த்தைகளும் மிகவும் இனியவைகள். அப்படியிருந்தும், அடிக்கடி பெண்கள் தங்களுக்கு கிடைத்திருக்கும் சிலாக்கியத்தையும், சுதந்தரத்தையும் மறந்துவிடுகிறார்கள். எப்படியாவது, சொல்லவேண்டிய ஒரேயொருவார்த்தையுண்டு. அடிக்கடி பிள்ளைகளைப் பெறக்கூடாது. அதாவது வருஷத்திற்கொருதரம். ஒரு பிள்ளைப் பெற்றபிறகு இடையில் இரண்டு வருஷங்கள் செல்லவேண்டும். மூன்று வருஷஞ்சென்றாலும் அதிலும் நல்லது. ஞானமாயும், யூகமாயும் தன்னை அடக்கி ஆள்வதினால் இது செய்யமுடியும். கர்ப்பத்தை நிறுத்துவதற்கான எவ்விதமருந்தையுங் கையாடவேகூடாது. ஆனால் அடிக்கடி பிள்ளைகளைப் பெறாதபடி புருஷனும் பெண்ஜாதியும் அவ்வளவு விவேகமாய் தங்களை அடக்கிக் கொள்ளவேண்டும். இதற்கு விரோதமாய் நடப்பதினால் பெண்ஜாதி அனாவசியமான தொந்தரவுக்கும் நோயுக்கும் பலவீனத்திற்கும் உள்ளாகி, பெரிய பாரத்தைச் சீக்கிரத்தில் சுமக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறாள்.

(இன்னும் வரும்)

---

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

சதுப்பு நிலத்தைப் பயிராக்கக்கூடிய நிலமாக்குதல்.—(Reclaiming a Swamp). கராச்சிக்குத் தென்பக்கத்தில் மூன்றுமைல் நீளமான ஒரு பாழான சதுப்பு நிலமுண்டு. இது அந்தப் பட்டணத்தின் விர்த்திக்கு ஒரு பெரிய தடையாயிருக்கிறது. இந்த சதுப்பு நிலத்தைப் பயிரிடத்தக்க நிலமாக்குகிறதற்கு ஒரு நல்லமுறை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது, கிழக்குத் தேசங்களில் அதிக வல்லமையுள்ள சூத்திரமாகிய ஆகுஷண யந்திரத்தின் மூலமாய் (Suction Dredger) கப்பற்றுறைமுகத்தின் அடிப்பாகத்திலுள்ள கல், மண், மணல் முதலிய வஸ்துக்களை எடுத்து, அந்த சதுப்பு நிலத்தை நிரப்புவதுதான். கப்பற்றுறைமுகம் அச்சதுப்புநிலத்திலிருந்து அதிக தூரத்திலிருக்கிறது. ஆனால், துறைமுகத்தின் அடியிலுள்ள சகல வஸ்துக்களையும வளையத்தக்க குழாய்கள் (Flexible Pipes) மூலமாய், எத்தனை மைல் தூரத்திலுள்ள சதுப்பு நிலத்திற்கும் அனுப்பத்தக்கதாக மேற்சொல்லப்பட்ட யந்திரம் அவ்வளவு வல்லமையுடையதாயிருக்கிறது. இம்முறையைக் கையாடுவது, தூரமான இடத்திலிருந்து மண்ணைவெட்டி வண்டிகளில் ஏற்றிக்கொண்டுவந்து அப்படிப்பட்ட சதுப்பு நிலங்களை நிரப்பும் பணச்செலவையும், மலைப்பையும் நிவிர்த்திபண்ணுகிறதென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

அவுரி சாகுபடிசெய்தல்.—அவுரி சாகுபடி செய்தல், சிலகாலத்திற்கு முன்னே நமது தேசத்தில் அதிக லாபத்தை உண்டாக்கின சகல கைத்தொழில்களிலும் விசேஷமானவைகளில் இது ஒன்று. ஆனால் அவுரியைப்போல நிறங்கொடுக்கக் கூடியதும், அதைப்பார்க்கிலும் சற்று விலை சகாயமுமான ஒரு போலிச்சாயத்தை ஒரு ஜெர்மன் ரசாயன சாஸ்திரி கண்டுபிடித்தான். இது அவுரி வர்த்தகத்துக்கே பெரிய நாசத்தை உண்டாக்கினது. இந்த வஸ்து அவுரியைப்போல நெடுநாளைக்கிருக்கத்தக்கதான உண்மையான சாயத்தை கொடுக்கக்கூடுமோ என்பது சந்தேகமான காரியமே. இப்போது யுத்தத்தின் மூலமாய்,

ஜெர்மனியிலிருந்து அவ்வஸ்துவை தருவிப்பது கூடாதகாரியமானதால், ஆயிரக்கணக்கான ஜனங்கள் முன்போல அவுரியைச் சாகுபடி செய்வதில் அதிக முயற்சி எடுத்து வருகிறார்கள். கைத்தொழிலை விர்த்திபண்ணவேண்டுமானால், அவுரியை சாகுபடி செய்கிற விஷயத்திலும், அதிலிருந்து சாயம் எடுக்கிற விஷயத்திலும், அதைப் பயிரிடுகிறவர்கள் புது முறைகளைக் கையாடவேண்டுமென்று இவ்விஷயத்தில் அறிவும், அனுபவமும் உள்ளவர்கள் சொல்லுகிறார்கள்.

ஊமையன் பேசினது.—ஊமையும், செவிடுமான ஒரு குளிகாரன் (Diver) ஆச்சரியமான பிரகாரம் முன்படியும் காதுகளினால் கேட்கிறான், வாயினால் பேசுகிறான். பத்து வருஷங்களுக்கு முன்னே, அவன் கடலுக்குள்ளே மூழ்கிற தன் வேலையைச் செய்துகொண்டிருக்கும்போது, ஒரு சுறாமீன் அவனைத் தாக்கி அவன் காலைக்கடித்துவிட்டது. பயமானது அவனை ஊமையனும், செவிடனுமாக்கிவிட்டது. அதற்குப் பிறகு, தனக்கு ஒரு ஜீவனத்தைத் தேடிக்கொள்ளும்படியாக இந்திரஜாலவித்தைகளைக் கையாடி அதின் மூலமாக அநேக மைல் தூரம் பிரயாணஞ்செய்து, தன் நாட்களைக் கடத்திக்கொண்டுவந்தான். ஒரு நாள் அவன் வழக்கம்போல தன் தொழிலைச் செய்துகொண்டிருக்கும்போது அவனுக்குத் திடீரென்று ஜன்னி வந்துவிட்டது. இது அவன் மூளையில் கட்டிப்போயிருந்த இரத்தத்தை நீக்கி, அதை சுவாதீன நிலைமைக்குக் கொண்டுவந்து அவனை முன்போல பேசவும், கேட்கவுஞ் செய்தது.

ஒரு பெண் அரசிறைக்கணக்கி (A Woman Financier).—ஜப்பான் தேசத்திலுள்ள பெண்களின் நிலைமையைப் பற்றி அறியாதவர்கள், அத்தேசத்தில் தான் முதல்முதலாக பாங்க் (Bank) ஒரு பெண்ணால் ஸ்தாபிக்கப்பட்டு, அந்தப் பெண்ணாலேயே நடத்தப்பட்டு வந்ததென்பதைப்பற்றி அறிந்து மிகவும் ஆச்சரியப்படுவார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இது ஜப்பான் தேசத்திற்கும் ஒரு பெரிய கீர்த்தியே. M[…] கின்செனோ முதலாவதாக டோக்கியோவில் (Tokyo) பாங்கை ஸ்தாபித்து […]ற்கு அவளே அக்கிராசனாதிபதியாக இ[…]ந்தாள். ஆகையால் உலகத்தில் இந்[…]மைக்குவந்த முதல் பெண் இவளே. ஆனால், Mrs. செனோ இப்போது […] வயதுக்கு மேல்பட்டவள் என்றும், அந்த பாங்க் உண்டாகி ஒரு வருஷத்திற்கு சற்று அதிகமாகிறதென்றும் அறியும்போது அதிலும் மிக ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறதல்லவா? அந்த பாங்கிக்கு தலைமை அவள்தான். கணக்குப் பார்க்கிறதில் அதிகத்திறமை உடையவள்.

வோட்கா (Vodka).—ருஷியா தேசத்தில் உபயோகிக்கப்படுகிற ஒரு லாகிரி வஸ்து. அங்கே அது ஒரு சாதாரண பானமாக வழங்கப்படுகிறது. ஆனால், வெறியற்று சொஸ்தபுத்தியுள்ள ஒரு சேனையின் மூலமாகத்தான் தற்சமயம் நடக்கிற யுத்தத்தில் வெற்றியடைய முடியுமென்று நினைத்து, சார் (Czar) வோட்கா செய்யவாவது விற்கவாவது கூடாதென்று உத்தரவு பண்ணியிருக்கிறார். துவக்கத்தில் ஜனங்கள் அதற்கிணங்கவில்லை. ஆனால் அந்த வோட்காவை உபயோகிக்காததினால் விளையும் நன்மைகளைக் கண்டுகொண்ட பிறகு, அவர்கள் தங்கள் மனதைமாற்றி, சார் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து இப்போது அந்த லாகிரிவஸ்துவை முற்றிலும் செய்யாமல் விட்டுவிட்டார்கள். அதுமாத்திரமல்ல சார் அந்த கட்டளையை நிலையான ஓர் சட்டமாக்க வேண்டுமென்று குடிகள் மனுப்பண்ணியிருக்கிறார்கள். லாகிரி வஸ்துக்களை கவர்ன்மெண்ட் கடைகளிலும் விற்கக்கூடாதென்று கட்டளை பிறப்பிக்கத் தீர்மானம்பண்ணியிருக்கிறதாக சார் மறுமொழி பகர்ந்தார்.

161

Vol. XXVIII. Registered No. M. 209 No. 11

MAY, 1915

MADRAS … 1915

# மாதர் மித்திரி.

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"

PUBLISHED BY THE

Woman's Foreign Missionary Society

Methodist Episcopal Church

U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபால் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபால் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபால் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருளடக்கம்.



| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... | 163 |
| "இயேசுவின் கரத்தில் பத்திரமாயிருக்கிறேன்" .... .... | 164 |
| யாரைப்போலிருக்க நீ விரும்புகிறாய் .... .... .... | 167 |
| கஷ்டமில்லாமல் பிள்ளைகளைப் பெற்றுவளர்த்தல் .... .... | 168 |
| யுத்தம்—காரணம் யார் ... ... .... .... | 173 |



# மாதர் மித்திரி.

புத். ௨௮. ௧௯௧௫ ௵ - மே ௴. இல. ௰௧.

## VICTORIOUS LORD.

இராகம், மணிரங்கு. ஆதிதாளம்.

### பல்லவி.

தேவன் மரித்தே, இவ்வுலகில் உயிர்த்தே
விண்ணுக் கெழுந்தார், ஜெயம்! ஜெயம்!

### அநுபல்லவி.

பாதகர்க்காகப் பரிந்தவர் பேச
பரத்துக்கெழுந்தார், நயம்! நயம்! - கிறிஸ்து— பர

### சரணங்கள்.

1. பன்னிரு சீடரும் பகைவருங் காண
பதியதற் கேகினர், ஜெயம்! ஜெயம்!-கிறிஸ்து —பதி
உன்னத சுவிசேஷம் உலகினில் கூறியே,
உம்பர மேகினர், நயம்! நயம்!-கிறிஸ்து—உம்

2. ஆகமப் படியே அவனியில் வந்தே
அனைத்தையு முடித்தார், ஜெயம்! ஜெயம்!-கிறிஸ்து ;—அ
மேகமீதேறி மிகப்புவியோர்க்காய்
வேண்டல்புரிகிறார், நயம்! நயம்!-கிறிஸ்து.—வேண்

3. மோசே முனிவர்கள், முன்னுரை தீர்க்கர்கள்
முதல்வனைத் தொழுகிறார், ஜெயம்! ஜெயம்!-கிறிஸ்து ;— முதல்
ஆசைகொண்டெல்லா அரூபிகள் கூடி
அமலனைப் பணிகிறார், நயம்! நயம்!-கிறிஸ்து.—அம

4. பாவியே, உனக்காய்ப் பரிந்தவர் பேசப்
பரமதற்கெழுந்தார், ஜெயம்! ஜெயம்!-கிறிஸ்து ;—பர
சாவில் நின்றுன்னை மீட்டவர் மோட்ச
தலமதைத் தருவார், நயம்! நயம்!-கிறிஸ்து.-தல—தேவ

"I AM SAFE IN THE ARMS OF JESUS"

## "இயேசுவின் கரத்தில் பத்திரமாயிருக்கிறேன்"

தொண்ணூற்றைந்து வருஷங்களுக்கு முன்னே, அமெரிக்காவில் வசித்த ஒரு குடும்பத்தில் ஒரு சிறிய பெண்குழந்தை பிறந்தது. அவள் மிகவும் அழகு சௌந்தரியமுள்ளவளும், ஆறுமாத மாகும் வரையில் மற்ற சிறு பெண்குழந்தைகளைப்போல அதிகமாக நேசிக்கப்பட்டவளுமாயிருந்தாள். பிறகு, அவள் முழு ஜீவியத்தையும் மாற்றின ஒரு பெரிய ஆபத்து அவளுக்கு நேரிட்டு, மற்ற பிள்ளைகளுக்கும் இவளுக்கும் ஒரு பெரிய வித்தியாசத்தை உண்டுபண்ணிவிட்டது.

அவளுக்கு, சிறுபிள்ளைகளுக்கு சாதாரணமாய் வரக்கூடிய ஒரு வியாதிவந்து, வைத்தியன் அவளுடைய கண்களுக்கு எவ்விதமருந்தும் பிரயோகிக்கக்கூடாதபடி செய்துவிட்டது. அதற்குப் பலனாக, அவளுடைய வியாதி பகலின் வெளிச்சத்தை என்றும் காணாதபடி, அவள் கண்களை அப்படியே மூடிவிட்டது. அநேகருக்கு இது பெரிய மனவருத்தத்தை உண்டுபண்ணி, மற்றவர்களைச் சார்ந்திருப்பதில் யாதொரு பிரயோஜனமில்லையென்று தீர்மானம் பண்ணும்படி செய்துவிடலாம். இன்னும் சிலர் முற்றிலும் அதைரியப்பட்டு, தங்களால் ஒன்றுமே செய்யமுடியாதென்று நினைத்து தங்களுடைய நம்பிக்கையை முழுவதுமாக மற்றவர்கள்மேல் போட்டு, அவர்களுடைய ஒத்தாசையின் மூலமாக ஜீவித்து வருகிறார்கள். ஆனால் இந்த சிறிய பெண்ணோ, தன் இளம் பருவத்திலேயே, தான் ஒருபோதும் துக்கமுள்ளவளாக ஜீவிப்பதில்லை என்று தீர்மானம்பண்ணி, அவள் எட்டு வயதாயிருக்கும்போது பின்வரும் கவியை எழுதினாள்.

"ஆ, மெய்யாய் நானோர் பாக்கியவதி!
கண்பார்வையற்ற தெந்தன் தெய்வநீதி
மகிழ்வேன் மன்னுள்ளமே
மாயவுலகில் சதா நித்தமே."

"மற்றவர்க்கில்லா தெத்தனை ஆசீர்
பெற்றனுபவிக்கிறேன் அற்பவாசி!
குருட்டுப்பிள்ளை என்றத்தனை, [னே."
பெருமூச்சிட்டழ மாட்டேன் நித்த

அவள் சிறுபிராயத்தில் பண்ணிக்கொண்ட தீர்மானத்தின்படியே அவளுடைய ஜீவியகாலமெல்லாம் இருந்து, மிகவும் சந்தோஷமும் பாக்கியமுமுள்ள பிள்ளையாயிருந்தாள். அவள் தனக்கு நேரிட்ட துரதிஷ்டத்திற்காக தெய்வத்திற்கு நன்றிசெலுத்தினாள். ஏனென்றால், அது அவளை மிகவும் பிரயோஜனமுள்ளவளாயிருக்கும்படி செய்தது. "எனக்கு இந்த ஆபத்து ஏன் நேரிட்டதென்று தெரியவில்லை. ஆனாலும், என் கண்கள் இரண்டும் குருடாய்ப்போனது எனக்கு ஒரு பெரிய நன்மையாயிருக்கிறது. நான் குருடியாயிராவிட்டால் மற்றவர்களுக்குச்செய்கிற இந்தப்பெரிய நன்மையை எப்போதாவது செய்யமுடியுமா? எனக்குக்கிடைத்திருக்கும் இந்த நிலைமையில் திருப்தியுள்ளவளாயிருக்கிறேன்" என்று ஒரு சமயத்தில் சொன்னாள். அவள் மனமகிழ்ச்சியுள்ளவளாய் ஜீவித்ததிற்கும், மற்றவர்களுக்குச் சந்தோஷமாய் உதவிசெய்து, மிகுந்த பிரயோஜனமுள்ளவளாயிருந்ததற்கும், மெய்யான ஒரு இரகசியம் உண்டு. தன் கர்த்தரும் எஜமானுமாகிய, இயேசு கிறிஸ்துவை நேசித்து, முழுவிசுவாசத்தோடும், உண்மையோடும் அவருக்கு ஊழியஞ்செய்துவந்தாள். அது மாத்திர



மல்ல, அவரோடு நெருங்கி தினந்தோறும் சம்பாஷித்துவந்தாள். உலகத்துக்குஆசீர்வாதமாகவும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமுமாக, அவள் சந்தோஷமாய்ச் செய்துவந்த உதவியென்னவென்றால், குருடான பையன்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் படித்துக் கொடுப்பதுதான். தற்காலத்தில் குருடர் வாசிக்கிற ஒருவித உயரமான எழுத்துக்களை அவள் வாசிக்கக் கூடாதவளாயிருந்தாலும், மற்றவர்களுக்கு கற்றுக்கொடுத்த சகல விஷயங்களையும் அவள் ஞாபகத்தில் சேகரித்துக்கொண்டேவந்தாள். கிரேக்குப்பாஷை, ரோம, அமெரிக்க சரித்திரங்கள், இங்கிலீஷ் இலக்கணம், அணியிலக்கணம் (Rhetoric) முதலியவைகளையும் அவள் கற்றுக்கொடுக்கக்கூடியவளாயிருந்தாள். பதினொரு வருஷக்காலமாக குருடருக்கென்று ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையில் உபாத்தினியாயிருந்து, அதிலே கற்றுக்கொடுத்த இன்னொரு உபாத்தியாயரை விவாகம் பண்ணிக்கொண்டாள். அவள்புருஷன் பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னே மரித்துப்போனார்.

கற்றுக்கொடுப்பதின் மூலமாக மற்றவர்களுக்குப்பிரயோஜனமாக இருந்தாள். ஆனால், உலகம் அவளை அறியத்தக்கதாக அவள் செய்துகொண்ட ஒரு விசேஷித்த காரியமுண்டு. அதென்னவென்றால், அவளுடைய கீதங்களே (Hymns). ஏராளமான கவிகளைப்பாடினாள். 6,000 கவிகள் பாடினதாக அவளே நம்பினாள். அவைகளில அநேகம் வெளியாக்கப்படவேயில்லை, மற்றவர்களுக்கு பிரயோஜனத்தை உண்டாக்கக்கூடிய கணக்கற்ற கவிகள் மறந்துபோகப் பட்டன. ஆனால், அவைகளில் சில கீதங்கள் வெளியாக்கப்பட்டு, கிறிஸ்தவ கீதங்கள் எங்கெங்கே பாடப்பட்டுவருகின்றனவோ அங்கெல்லாம் அவைகள் பாடப்பட்டு வருகின்றன. அவைகள் அநேக பாஷைகளில் திருப்பப்பட்டு, ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவைகளின் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவள் இப்படிப்பட்ட கீதங்களை எழுதத் தொடங்கினபோது 45 வயதுள்ளவளாயிருந்தாள். ஆனால் அதற்குமுன் சிலபாட்டுகளையும், கவிகளையும் அவள் எழுதியிருந்தாள். அவைகளிலெல்லாவற்றிலும் சிறந்ததும், உலகத்தாரால் மதிக்கப்பட்டு மிகவும் பிரியமாய்ப் பாடப்படுகிறதுமான பாட்டு என்னவென்றால், இந்தக் கதையின் தலைப்பிலிருக்கிற "இயேசுவின் கரத்தில் பத்திரமாயிருக்கிறேன்" என்ற கீதம்தான்.

ஒருகாலத்தில் இராகம் பாடக்கூடிய ஒருவர் தானாக ஒரு கவிகட்டி அதைப் பியானாவில் பாடிக்கொண்டிருக்கும்போது பானி கிராஸ்பி (Fanny Crosby) என்ற இந்தக் கண்கெட்ட ஸ்திரீயும் அங்கேயிருந்தாள். அப்போது அந்தக் கவிஞர் தான் பாடின அந்த இராகத்துக்கிசைய ஒருபாட்டுக்கட்டும்படியாக அவளைக் கேட்டார். அவர் பிரயாணமாக ரெயிலில் போகவேண்டிய அவசரமிருந்தபடியால், சீக்கிரமாக அந்தப்பாட்டைக் கட்டி தன்னோடு கொண்டுபோக விரும்பினார். இரண்டொரு நிமிஷம் யோசித்துப் பார்த்து, "இயேசுவின் கரத்தில் பத்திரமாயிருக்கிறேன்" (I'm safe in the Arms of Jesus) என்ற கீதத்தையே பாடி, அதைத்துரிதமாய் எழுதிக்கொள்ளும்படி அக்கவிஞரைக் கேட்டாள். "இதுதான் எனக்கு ஆனந்தத்தையும், தைரியத்தையும் தரக்கூடிய எல்லாக் கீதங்களிலும் மகா இன்பமான கீதம். இதை எனக்குச் சொல்லிக்கொடுத்தவ

தேவ ஆவியானவரே. இது ஒரு மிஷனுக்காக உண்டாக்கப்பட்டகீதம்" என்று சொல்லி இக்கீதத்தை அவர் கையில் ஒப்புவித்தாள்.

பானி கிராஸ்பி உலகத்துக்குப் பெரிய ஒரு ஆசீர்வாதமாயிருந்தாள். இதற்குக் காரணம் தெரியுமா? அவள் தனக்காக ஒருபோதும் ஜீவிக்கவில்லை, தனக்குள்ளவைகளையும், தன்னையும் தன் பரம பிதாவின் பாதத்தண்டையில் முழுவதுமாக ஒப்புக்கொடுத்துவிட்டு, அவர் ஒருவருக்கே ஊழியஞ்செய்துவந்தாள். அவர் நாம மகிமைக்கென்றே ஜீவித்தாள். இதை வாசிக்கிறவர்களே மற்றவர்களுக்கு எவ்விதத்திலும் நன்மையுண்டாகத்தக்கதாக நடக்க ஜீவிக்கிறீர்களா? உலகமுழுவதிலும் உள்ள ஜனங்களும், இவ்வுலகத்தைவிட்டு மறு உலகத்தில் போயிருக்கும் ஏராளமான கூட்டத்தாரும் இந்த கண் பார்வையற்ற ஸ்திரீயின் கீதங்கள் மூலமாக சோதனைகளை எதிர்த்து நிற்கத்தக்கதான ஒத்தாசையையும், பலத்தையும் அடைந்தார்கள். அவ்விதமான சிறந்த கீதங்களைப் பாடும்படியாக தேவன் தனக்கு உதவிசெய்தார் என்று அவள் நம்பினாள், தேவனும் அப்படியே உதவி செய்தார்.

அவள் மரித்து பரலோகஞ் சேர்ந்துவிட்டாள். மெய்யாகவே, அவளுடைய கண்கள் இப்போது திறக்கப்பட்டிருக்கின்றன. தன்னை மற்றவர்களுக்குப் பிரயோஜனமாக ஜீவிக்கச்செய்தவரும், மரணத்திலிருந்து தன்னை இரட்சித்தவருமாகிய தன் கர்த்தரை அவள் நோக்கிப் பார்த்தாள் என்பதற்குச் சந்தேகமில்லை. உலகத்தில் அவளுக்கு நேரிட்ட துன்பங்களை நினைத்து அவள் விசனப்பட்டிருப்பாளானால், அவைகளெல்லாம் தான் ஒருபோதும் கனவிலும் கண்டிராத பிரகாரமாக, தனக்கு அப்படிப்பட்ட மேலான ஆசீர்வாதத்திற்கென்றே இருந்திருக்க வேண்டுமென்று இப்போது அறிந்து கொள்ளக்கூடியவளாயிருக்கிறாள்.

இதை வாசிக்கிற ஸ்திரீயே, நீ பிறருக்கு எந்த விஷயத்தில் நன்மை செய்கிறவளாயிருக்கிறாய்? உன் படிப்பினாலாவது, உன் ஆஸ்தியினாலாவது உனக்கு கிடைத்திருக்கும் மற்றவர்களுக்கில்லாத சிலாக்கியங்களினாலாவது பிறருக்கு உதவிசெய்வது உன் கடமையென்று உணருகிறாயா? அல்லது மற்றவர்கள் பாவிகள் என்றும், துர்திஷ்டம் உள்ளவர்களென்றும், நீ பாக்கியவதி, ஆகையால் உனக்கு இவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் நினைத்து பெருமை கொண்டிருக்கிறாயா? சற்று நேரம் உன் அறையில் தனிமையாக உட்கார்ந்து ஜெபித்து, உன்னைத்தான் சோதித்து ஆராய்ந்துபார். நீ பட்டுவஸ்திரங்களால் உன்னை அலங்கரித்து, ஆலயத்திற்குப் போகும்போது கிழிந்த பழைய வஸ்திரந்தரித்துக்கொண்டு உன்னோடு ஆலயத்திற்குள் பிரவேசித்து, உனக்குச் சமீபமாய் உட்கார்ந்திருந்த ஏழை விதவையைக்குறித்து மிகவும் அற்பமாக நீ நினைக்கவில்லையா? நீ தங்க நாணயங்களால் உன்னை அலங்கரித்து பரிசுத்த ஆலயத்தில் உயர்ந்த ஆசனத்திலிருக்கும்போது, இருதய சுத்தமென்னும் விலையேறப்பெற்ற நாணயத்தால் தன்னை ஜோடித்து, தாழ்மையாக தரையில் முழங்காலூன்றி ஜெபித்த ஏழை ஸ்திரீயைப் பார்த்து, நகைத்து, உன்னைப்போல ஆசனத்திலிருந்த மற்றவளோடு அவளைக்குறித்துப் பரிகாசமாய்ப் பேசவில்லையா? இரண்டு கண்களுங் கெட்ட ஒரு ஏழை உன்னிடம் பிச்சை கேட்டபோது, எத்தனைதரம் ஏறிட்டுப்



பாராமல் நீ போனதுண்டு; வஸ்திரமில்லாமல் கந்தையை உடுத்திக்கொண்டு, உன் சமீபமாய் உதவிக்காக கதறி நின்ற ஏழையைப்பார்த்து, "சமீபமாய் நிற்காதே தூரம்போ" என்று எத்தனையோ தடவைகளில் துரத்தினாய். உனக்குக் கிடைத்திருக்கும், ஐசுவரியம், படிப்பு, மேன்மை ஆகிய இவைகளெல்லாம், மற்றவர்களுடைய நன்மைக்கென்று ஆண்டவர் உன் வசத்தில் ஒப்புவித்தவைகள். ஆண்டவருக்கு முன்பாக நியாயத்தீர்ப்புநாளிலே, நிற்கும்போது, அவைகளுக்காக உத்தரவாதம் பண்ணவும், கணக்குக் கொடுக்கவும் வேண்டுமென்பதைத் திட்டமாய் உணர்ந்துகொள். அவைகளை தகுந்தவிதமாக நீ உபயோகித்தால் மாத்திரம் உனக்கு அவைகளால் ஆசீர்வாதமுண்டு. அவைகளைத்தகாதவிதமாய் உபயோகித்து, ஒரு தாலந்து வாங்கின மூடனைப்போல புதைத்துவைப்பாயானால், மெய்யாகவே, அவைகளால் சாபமும் தேவ கோபாக்கினையுமே உனக்குக் கிடைக்கும் நித்திய பங்கு என்பதை மறந்து போகாதே.

---

## WHOM WOULD YOU LIKE TO BE?

## யாரைப்போலிருக்க நீ விரும்புகிறாய்?

---

ஒரு நல்ல வீட்டிலுள்ள ஒரு பையன் சாகிற நிலைமையிலிருந்தான். அவன் ஒரு பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த பையன். அவன் பாடசாலையில் பிரவேசித்த காலத்திலேயே அதிகத் திறமையுள்ளவனாகக் காணப்பட்டான். சிலகாலம் சென்றபிறகு, அவனில் காணப்பட்ட சிறந்த லட்சணங்கள் குறைந்து போவதை அவனுடையபெற்றோர் கவனித்தார்கள், ஆனால் அதற்குக் காரணத்தை அவர்கள் அறியவில்லை. அவன் சரீரமும், வளர்த்தியும் குறைந்துபோவதையும் கண்டார்கள். அவர்கள் அவனை ஒரு கிராமத்திற்கு அனுப்பினார்கள். அங்கே இருக்கும்போது கொஞ்சம் விர்த்தியடைந்துவந்தான், ஆனால் அவன் பட்டணத்திற்குத் திரும்பி வந்தவுடனே மறுபடியும் முன்போல குறைந்துகொண்டுவந்தான். படிப்படியே அதிகக் கேவலமான நிலைமைக்குள்ளாகி இப்போது மரணப் படுக்கையில் கிடந்தான்.

தன் நிலைமைக்குக் காரணத்தை இப்போது அவன் ஒத்துக்கொண்டான். அவன் சிகரட்டுப் பிடிக்கும் பழக்கத்திற்குள்ளாகி, ஒரு நாளைக்கு 35 சிகரட்டுகள் பிடிப்பான். ஆகையால் அவன் மரித்ததைப்பற்றி ஆச்சரியப்படவேண்டியதில்லை. அவனை அறுத்துச் சோதித்துப் பார்த்தபோது, அவன் இரத்தாசயத்தின் ஒருபாகம் ஒன்றுமில்லாமல் வெந்துபோய்விட்டது. அவன் மரணப்படுக்கையிலிருக்கும்போது, தன் இளைய சகோதரனை சிகரட்டுப் பிடிக்கும் வழக்கத்தை விட்டுவிடும்படி கெஞ்சினான். "ஏராளமான பையன்களை இரட்சிக்க விரும்புகிறேன், ஆனால் நான் சாகவேண்டும்" என்று பரிதாபமாய்ச் சத்தமிட்டு அழுதான்.

கணக்கற்ற பையன்கள் இந்தப் பையனைப்போல் அளவுகடந்துபோயிருக்கிறார்கள். அவர்கள் அவனைப்போல் அத்தனை சிகரட்டுகள் பிடிக்காவிட்டாலும், இந்த கெட்ட பழக்கத்தைக் கையாடியிருப்பார்களானால், தங்களுக்குத் தாங்களே மோசத்தை வருவித்துக்கொள்ளுகிறார்கள் என்பது நிச்சயமே. ஏனென்றால், அது அவர்களை மதிமயக்கி, அதினுடைய பிடிப்பிலிருந்து அவர்கள் தப்புவித்துக்

கொள்ளாதபடி அவ்வளவு கொடிய பழக்கமாகிவிடுகிறது.

ஒரு கொடிய கெட்ட பழக்கத்திலிருந்து, தன்னைத் தப்புவித்துக்கொண்ட ஒரு மனுஷனைப்பற்றி கொஞ்சம் பார்ப்போம்.

சேர் பிரான்சிஸ் கால்ட்டன் என்பவர் சமீபகாலத்தில் இங்கிலாந்தில் 88 வயதில் மரித்தார். இவர் ஆப்பிரிக்காவில் அநேக ஆராய்ச்சிசெய்து, உலகத்தாருக்கு மிகுந்த அறிவைப்புகட்டினார். அவர் முதல் முதலாக ஆப்பிரிக்காவுக்குப் போகும்போது, அத்தேசத்தின் காடுகளுக்குள் ஜீவிக்கத்தக்கதாக, அவருடைய பலம் போதுமோவென்று, ஒரு வைத்தியரிடம் ஆலோசனை கேட்டார். அப்போது வைத்தியன் ஒரேயொரு விஷயத்தில் தவிர மற்றபடி அவருடைய தேகசௌக்கியம் சரியாயிருக்கிறது என்று சொன்னார். அதாவது, அவருடைய இருதயம் அளவுக்குமிஞ்சி, அதிவேகமாய் அடித்துக்கொண்டிருந்தது. ஆகையால், "ஒழுங்கீனமான சாப்பாடாவது, அல்லது நீர் கையாடிவரும் ஒரு கெட்ட பழக்கமாவது அதற்குக் காரணமாயிருக்கலாம். நீர் ஆப்பிரிக்காவிற்குப் போவதைவிட்டுவிடவேண்டும், அல்லது, உம்மிலிருக்கும் அந்தக்கொடிய பழக்கத்தை விட்டுவிடவேண்டும்" என்று திட்டமாய்ச் சொன்னார்.

அவரில் குடிகொண்டிருந்த கெட்ட பழக்கம் இன்னதென்று நமக்குத் தெரியாது, ஆனால், சேர் பிரான்சிஸ் ஆறு மாதம் இங்கிலாந்திலிருந்து அவரில் காணப்பட்ட கெட்டப்பழக்கத்தை மேற்கொள்ளுவதில் அந்தக் காலத்தைக் கழித்தார். மெய்யாகவே, அவரில் அந்தக் கொடிய பழக்கம் பலமாக கிரியைசெய்யவில்லை. அதற்கப்புறம், வைத்தியனிடம் போய் தன்னைக்காண்பித்தார். "இப்போது நீர் எவ்விதமான தேசத்திலும் போய்க் குடியிருக்கத் தகுதியுள்ளவர்" என்று வைத்தியர் சொன்னார்.

"என்னை அடக்கியாளும் எஜமான் நான்தான்" என்று சேர் பிரான்சிஸ் சொன்னார். உலகத்திலுள்ள மற்ற எல்லாரிலும் அவர் பெயர் மிகவும் கீர்த்தியுள்ளதாயிருந்தது. அதிலும் அவர் அந்தப் பழக்கத்தைக் கையாடிவராமலிருந்திருப்பாரானால், அவர் கீர்த்தி இன்னும் எவ்வளவுக்கதிகமாயிருந்திருக்கலாம்.

---

MATERNITY WITHOUT SUFFERING

## கஷ்டமில்லாமல் பிள்ளைகளைப் பெற்றுவளர்த்தல்

(தொடர்ச்சி.)

ஒருதாயானவள் தன் சரீர விர்த்திக்குரிய நிலைமைக்காவது, அல்லது தான் பெறப்போகிற பிள்ளையின் வருகைக்காவது, தன்னை ஆயத்தம் பண்ணிக்கொள்ளவேண்டியது மாத்திரமல்ல, இதிலும் பெரிய ஒரு காரியத்திற்காக தன்னை ஆயத்தம் பண்ணிக்கொள்ள வேண்டியது மிகவும் அத்தியந்த ஒரு விஷயமாயிருக்கிறது. அதென்னவெனில், "நான்பெற்றெடுக்கும் குழந்தை சகலவித ஆசீர்வாதங்களாலும் நிறைந்திருக்கத்தக்கதாக, சரீரப் பிரகாரமாகவும், ஆத்துமப்பிரகாரமாகவும் என்னை ஆயத்தம்பண்ணிக்கொள்ள நான் செய்யவேண்டியதென்ன? என்னிலுள்ள குற்றங்குறைவுகள் என்பிள்ளைக்குள் காணப்படாதபடி, நான் செய்யவேண்டியதென்ன? என்னிலுள்ள அற்பசொற்ப நல்ல லக்ஷணங்கள், என்பிள்ளையில் அதிகமாகக் காணப்படும்படி என்னை எவ்வித



மாக ஆயத்தம்பண்ணிக்கொள்ளுவேன்?" என்ற இம்மூன்று முக்கியமான கேள்விகளை அவள் கேட்க கடமைப் பட்டவளாயிருக்கிறாள்.

ஒரு ஸ்திரீ தன்னை ஒரு குழந்தைக்குத் தாயாக்கத் தக்கதாக எவ்வளவு ஆயத்தஞ்செய்கிறாளோ அந்த ஆயத்தங்களோடு மேற்சொல்லிய மூன்று விசேஷித்த கேள்விகளுக்கும் பதில் சொல்லத்தக்கதாக தன்னை முழுவதும் ஆயத்தம் பண்ணிக்கொள்ளுவது மிகவும் முக்கியமான ஒரு காரியமே. இப்போது, ஒரு தாய் தன் சரீர விஷயமாய் தன்னை எப்படி ஆயத்தஞ் செய்யவேண்டுமென்பதைப் பற்றியும், கர்ப்ப நிலைமையில் தன்னைப் பற்றி எப்படி கவலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதைப் பற்றியும் கொஞ்சம் பார்ப்போம். மற்ற மேலானகேள்விகளைப்பற்றி பின்னால் தர்க்கிப்போம்.

**முதலாவது, அப்பியாசம்.**— இதைப் பொழிப்பாக இரண்டொரு வார்த்தைகளில் சொல்லி முடிப்பேன். ஒரு கர்ப்பஸ்திரீ எடுக்கவேண்டிய தேகாப்பியாசம் என்னவென்றால், அவளுடைய வீட்டு விஷயமாய் செய்யவேண்டிய பற்பலவிதமான கடமைகளே. இதுவே, எல்லாவற்றிலும் முக்கியமானதும், சிறந்ததுமான அப்பியாசம். மற்ற எவ்விதமான அப்பியாசத்தினாலும் பலப்படுத்தப்படாத சரீரத்தின் தசைகள் வீட்டுவேலைகளினால் பலப்படுத்தப்படுகின்றன. வீட்டு வேலையை அசட்டைசெய்து, சொகுசாகவும் சோம்பேறித்தனமாகவும் இருக்கிற ஒரு கர்ப்பிணி தனக்குத்தானே கேடுதியை உண்டுபண்ணிக் கொள்ளுகிறது மாத்திரமல்ல, பிரசவகாலத்தில் வேதனையைச் சகிக்கமாட்டாமல், சரீர பலவீனத்தினிமித்தம், காய்ச்சல், ஜன்னி, முதலிய அபாயமான வியாதிகளால் மேற்கொள்ளப்பட்டவளாய் அவள் உயிருக்கும் குழந்தையின் உயிருக்கும் மோசத்தை வருவித்துக்கொள்ளுகிறாள்.

பளுவான சுமைகளையாவது, தண்ணீர் நிறைந்த கனமான பாத்திரங்களையாவது, ஐந்துவயதுக்குமேற்பட்ட பெரிய பிள்ளைகளையாவது தூக்காதபடி அதிக ஜாக்கிரதையாயும், கவலையாயும் இருக்கவேண்டும். வீட்டுவேலையாயிருந்தாலுஞ் சரி, உற்சாகத்தைத் தரக்கூடிய வேறு எவ்விதமான அப்பியாசமாயிருந்தாலுஞ் சரி, மட்டான அளவோடு செய்துவரவேண்டும். ஒரு சிறிய குடும்பமுள்ள வீட்டின்வேலையும் ஒரு கர்ப்பஸ்திரீயை நாள்முழுவதும் உற்சாகப்படுத்துகிறது மாத்திரமல்ல, வசப்படாத அவள் அடிவயிறு, முதுகு முதலிய இடங்களிலுள்ள தசைகளை அசையச்செய்து, கெட்டிப்படுத்தி, எப்போதும் சுகமான நிலையிலேயே வைக்கிறது. இவ்விதமான கடமைகளைச்செய்வது உனக்கிஷ்டமில்லாதிருந்தால், இப்போதே அவைகளைச் செய்யக்கற்றுக்கொள். அப்போது, நீ தாயாகப்போகும் அந்த நிலைமைக்கு உன்னை அவைகள் பலப்படுத்துகிறது மாத்திரமல்ல, நீ பெறப்போகிற உன் குழந்தை பிற்காலத்தில் சுறுசுறுப்புள்ள ஒரு ஆளாகத்தக்கதாக அவ்வளவு நல்ல வழக்க பழக்கங்களை சிறுவத்திலேயே அந்தபிள்ளைக்குள் உண்டாக்குகிறது.

வீட்டில் ஒரு சிறுதோட்டத்தையுண்டாக்கி அதை பண்படுத்துகிறதும், ஒரு கர்ப்பிணிக்கு ஏற்ற ஒரு நல்ல அப்பியாசம். எப்படியென்றால், அவள் அடிவயிற்றின் தசைகளைப் பலப்படுத்தக்கூடிய அப்பியாசத்தோடு, வெளியிலுள்ள சுத்த ஆகாயமும் சேர்ந்து, அவள் இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, அவளுக்குள் புதுப்பலத்தையும், உற்சாகத்தை

யும் உண்டுபண்ணுகிறது. அதுமாத்திரமல்ல, பூச்செடிகளைவளர்ப்பது, ரசஞ்ஞானத்தை (Aesthetics) விர்த்திபண்ணி, இயற்கைப்பிரமாணத்தை அனுசரிக்கத்தக்கதாக அவளுக்குள் நல்லறிவை உண்டுபண்ணுகிறது. காலையில் ஒருமணி நேரமும், மாலையில் ஒருமணி நேரமும், சரீர அவயவங்களுக்கும், தசைகளுக்கும், கஷ்டதைக்கொடுக்காத தளர்ச்சியான உடுப்புகளை உடுத்திக்கொண்டிருப்பது, மற்ற வெளியின் அப்பியாசங்கள் கொடுக்கக்கூடாத பலத்தையும், உற்சாகத்தையும், ஒரு கர்ப்பஸ்திரீக்குத் தருகிறது.

உலாவுதல் எல்லாருக்கும் பொதுவான ஒரு அப்பியாசம். காலத்துக்கேற்றதும், உலாவும்போது தடையை உண்டாக்கக்கூடாததுமான வசதியான உடுப்பைத் தரித்துக்கொள்ளவேண்டும். மெதுவாக நடந்துபோவதினால் ஒரு ஸ்திரீ இரண்டொருமைல்தூரம் களைத்துப்போகாமல் நடக்கலாம். வீட்டுவேலை செய்வது அவசியமில்லை என்று நினைக்கிறவர்களும் அதிக சாவகாசமுள்ளவர்களும், உலாவுகிற இந்த அப்பியாசத்தை தினந்தோறும் ஒழுங்காய் எடுக்கவேண்டும்.

இந்த அப்பியாசங்களையெல்லாம் செய்யத்தவறுகிறவர்கள் புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கும் தேகாப்பியாசங்களை வீட்டில் செய்யலாம். ஆனால் அவைகளை மட்டுக்குமிஞ்சி செய்யாமல், சரீரத்திற்கு நல்ல பிரயோஜனத்தை உண்டாக்கத்தக்கதாக ஒழுங்காகச் செய்யவேண்டும். எவ்விதவேலையும் செய்ய பயப்படாதே. அதைச்செய்வதினால் உன்னைத்தாய்க்குறிய நிலைமைக்குத் தகுதியுள்ளவளாக்கிக்கொள்ளுகிறாய், உன்பிள்ளையையும் உலகத்தில் ஏற்றவிதமாக ஜீவிக்கத் தகுதியுள்ளவனாக்குகிறாய். எடுத்துக்கொள்ளும் அப்பியாசமானது, சரீரத்தின் பொருத்துகளையும், தசைகளையும், விர்த்திபண்ணி, அதனதின் ஸ்தானத்தில் பலப்படுத்திவைக்கக் கூடியதாயிருக்கவேண்டும்.

ஒரு ஸ்திரீ பொறுக்கக்கூடுமானால், குளிர்ந்த கடற்பஞ்சு ஸ்நானம் (Cold Sponge Bath) எடுப்பது நலம். அது தினந்தோறும் எடுக்கக்கூடிய சிறந்த ஒரு பலவிர்த்தி ஔஷதமாயிருக்கிறது (Tonic). சீக்கிரமாய் குளித்து, சீக்கிரமாய் உடம்பைத்துடைக்கவேண்டும். வாரத்திற்கு இரண்டொருதரம், வெந்நீர் ஸ்நானம் எடுப்பது நலம்.

உட்கார்ந்தநிலையில் எடுக்கும் ஸ்நானத்தைப்பற்றி (Sitz-bath) கடந்த மாசத்தில் பார்த்தோம். இது எப்படியென்றால், ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருக்கும்போது, அவள் இடுப்பு தண்ணீருக்குள் முழ்கத்தக்கதாக ஒரு தொட்டியில், பொறுக்கக்கூடிய அவ்வளவு சூடான தண்ணீரைவிட்டு, ஸ்நானம்செய்யவேண்டும். நான் கடந்தமாசப் பத்திரிகையில சொன்னபடி முதல் சிலமாதங்களாக வாரத்திற்கு இரண்டு மூன்று தடவையும், பிந்தினமாதங்களில், நித்திரைக்குப் போகுமுன் ஒவ்வொரு இராவிலும் எடுக்கவேண்டும். இந்த ஸ்நானம் சரீரத்தில் எந்தப்பாகத்திலாவது தகாத உதிரத்திரட்சிகளிருந்தால், அவைகளை நீக்கி, சரீர தசைகளை மிருதுவாக்கி, அவைகள் எப்பக்கத்திலும் வளையத்தக்கதாக அவைகளுக்கு சுவாதீனத்தைக்கொடுத்து, ஆச்சரியமான பிரகாரம் சரீரமுழுவதையும் ஆற்றுகிறது. வெந்நீர் ஸ்நானத்தைத் தாங்கக்கூடாதவர்களைத் தவிர மற்றவர்கள் குளிர்ந்தஸ்நானம் எடுக்கவேண்டுமென்று நான் சொல்லுகிறதில்லை. சில ஸ்திரீகளுக்கு வெந்நீர்ஸ்நானம் ஒத்துக்



கொள்ளாதபடியால் அப்படிப்பட்டவர்கள், உட்கார்ந்த நிலையில் எடுக்கும் குளிர்ந்த ஸ்நானத்தை (Cold Sitz-bath) கையாடுவது மிகவும் உத்தமம்.

**இளைப்பாறுதல் (Rest).**—ஒரு கர்ப்பிணிக்கு எவ்வளவு இளைப்பாறுதல் தேவை? வேலை, அப்பியாசம், இளைப்பாறுதல் முதலிய விஷயங்களில் அப்படிச்செய், இப்படிச்செய்யாதே, அவ்வளவுசெய், அதற்குமேல் செய்யாதே என்று ஒரு காவலாளி சமீபமாகவேயிருந்து கற்றுக் கொடுக்கத்தக்கதாக, சில ஸ்திரீகளின் சரீர அமைப்பு இருக்கிறது. நின்றுகொண்டு வேலைசெய்வது ஒருஸ்திரீக்குக் களைப்பை உண்டுபண்ணினால், ஒருநாளைக்கு மூன்றல்லது நாலுதரம் பதினைந்தல்லது இருபது நிமிஷம் காழியனுநேராக நீட்டி, மல்லாந்து படுத்து ஆறு, சிறந்த இளைப்பாறுதலும், நசர்ந்தைக்குமாயிருக்கிறது. நீ களைத்திருசாயிருக்கும்போது, உன் ஆயாசந்தீரும்வரையில் இளைப்பாறவேண்டுமென்பதை நல்ல ஒரு சட்டமாக்கிக்கொள். வித்தியாசமான வேலைகள் ஒரு இளைப்பாறுதலாகவே இருக்கின்றன. வீட்டுவேலையில் அதிகமாக உழைக்கும் ஒரு ஸ்திரீ வித்தியாசமான வேலையை (Change of work) செய்வாளானால் அது அவள் சரீரத்தில் ஒருபக்கத்திலுள்ள தசைகள் வேலைசெய்யும்போது மற்ற பக்கத்திலுள்ள தசைகளுக்கு இளைப்பாறுதலைத் தருகிறது. உன்னால் கூடியபோதெல்லாம் எல்லாவேலையையும் உட்கார்ந்துசெய்யும் பழக்கத்தைப் பயிற்சிபண்ணும். மறுபடியும் சொல்லுகிறதென்னவென்றால், விளையாட்டு முதலிய அப்பியாசம் ஒரு கர்ப்பிணிக்கு அடிக்கடி நல்ல இளைப்பாறுதலை உண்டுபண்ணுகிறது.

**மார்பைப்பற்றிய கவலை.**—ஒரு ஸ்திரீ கர்ப்ப நிலைமையிலிருக்கும்போது தன் மார்பைப்பற்றி விசேஷித்தகவலை எடுத்துக்கொள்ளவேண்டும். மார்பை இறுக்கக்கூடியதும், நமச்சலை உண்டாக்கக்கூடியதுமான எவ்விதமான உடையையும் களைந்துபோடவேண்டும். ஏனென்றால், முலைக்காம்புகள் மெதுவாயிராமல் கடினப்பட்டுப்போவதினால், பிள்ளைபிறந்த சிலநாள்களாக தாய் அவைகளை கையினால் பிசைந்து கஷ்டத்தோடு பால்கொடுக்கவேண்டியிருக்கிறது. அதுவுமல்லாமல் பிரசவமாகிறதற்கு அநேகவாரங்களுக்கு முன்னாகவே, மார்பையும், முலைக்காம்புகளையும் குளிர்ந்த தேயிலைத்தண்ணீரினாலாவது, மஞ்சள் பூக்களுள்ள ஒருவித அமெரிக்கன் இலைகள்போட்ட குளிர்ந்த தண்ணீரினாலாவது (Witch Hazel) தினந்தோறும் கழுவிக்கொண்டேவரவேண்டும்.

**அடிவயிறு (Abdomen).**—வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்றுதரம் அடிவயிற்றில் ஒலிவ எண்ணெய் (Olive oil) தேய்த்து வருவதினால், தசைகள் மலர்ந்து, இளகி நெகிழ்ந்துறழத்தக்க (Elastic) நிலைமையில் வந்துவிடுகிறது. சாப்பாட்டைப்பற்றி கடந்துபோன மாசத்தின் பத்திரிகையில் விவரமாய்ச் சொன்னேன். சாதாரணமானதும், இலேசானதும், சரீரத்தைப் போஷிக்கக்கூடியதுமான போஜனத்தைச் சாப்பிடு.

பிரசவகாலத்திற்கு முன்னும், விசேஷமாய் பிரசவகாலத்திலும், வைத்தியர்களும், நர்சுகளும் உன்னைப்பற்றி அதிக கவலை எடுத்துக்கொள்ளத்தக்கதாக, ஏற்கனவே ஏற்ற ஒழுங்குகள் செய்துகொள். நர்சுகளைப்பற்றி அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஒன்றுந்தெரியாதவளும், நன்மைக்குப் பதிலாக தீமை

யையும், உயிர் மோசத்தையும் உண்டு பண்ணி, ஞானமாயும், விவேகமாயும், அவள் செய்யக்கூடிய சகல காரியங்களையும் செய்யாமல், அவளுக்குச் செல்ல வேண்டிய கூலியைமாத்திரம் சர்வ ஜாக்கிரதையோடு பெற்றுக்கொண்டுபோகும் கால் அல்லது அரைப்படிப்புள்ள எந்த நர்சையும் அழைத்துக்கொண்டு மோசம் போகாதே. தெய்வத்துக்குப் பயப்படுகிறவளும், நல்ல அனுபவமுள்ளவளுமான நர்சைத் தெரிந்துகொள்.

எல்லாவற்றிலும் மேலாக உன் பிரசவ காலத்தில் உன் பாரத்தையும், முழு நம்பிக்கையையும் உனக்கு இவ்வித வேதனையை உன் பாவத்தின் பலனாகத் தந்த உன் சிருஷ்டி கர்த்தாவின்மேல் போட்டு விட்டு, சமாதானத்தோடு உன் பிரசவ அறைக்குள் பிரவேசி.

கடைசியாக இந்தப் பாடத்தை முடிக்குமுன், சுமார் நாலு வருஷங்களுக்குமுன் ஒரு ஏழைப்பெண் பிரசவகாலத்தில் எப்படி அநியாயமாய் உயிரிழந்தாள் என்று சொல்லி உனக்கு ஒரு எச்சரிப்பையுண்டாக்க விரும்புகிறேன். அந்தப்பெண்ணின் பிரசவகாலத்தில் ஒரு மருத்துவச்சி அழைக்கப்பட்டிருந்தாள். அதே சமயத்தில் விசுவாசத்தினால் எல்லாம் நடந்துவிடும் என்ற கொள்கையுடைய மற்ற இரண்டு ஸ்திரீகளும் அறைக்குள் பிரவேசித்தார்கள். இவர்கள் என்ன செய்துவிட்டார்கள் என்றால், அவர்கள் ஜெபத்திலேயே தரித்திருக்கப்போகிறபடியால் மருத்துவச்சி எவ்விதமான காரியங்களையும் செய்யாமலும், அவள் கையை கர்ப்பஸ்திரீயின்மேல் போடாமலுமிருக்கும்படி அவளைத் தூரத்தில் நிறுத்திவிட்டார்கள். இவர்கள் கால் விசுவாசிகளோ அல்லது அரை விசுவாசிகளோ எனக்குத் தெரியவில்லை. ஆகவே குழந்தை அதிக கஷ்டத்தோடு மருத்துவச்சியின் உதவியன்றியே காலை ஒன்பது மணிக்குப் பிறந்தது. ஆனால் முக்கியமானதும் உயிரைக் கொல்லக்கூடியதுமான நஞ்சு வெளியே வரவில்லை. மருத்துவச்சி கையைப்போட்டு அதை வெளியே எடுக்கப்பார்த்தபோது, இந்த இரண்டு விசுவாசிகளும் அவள் கையைப் பிடித்து இழுத்து, "தொடாதே நீ கொல்லப்போகிறாய்" என்று சொல்லி அவளைப் பயப்படுத்தி தூரத்தில் போகச் சொல்லிவிட்டார்கள். வேதனையைச் சகிக்கமாட்டாமல் மயங்கிக்கிடந்த நோயாளியைப் பார்த்து "பிசாசுக்கிடங்கொடாதே, விசுவாசமாய் ஜெபம்பண்ணு, பிசாசு உன்னைச் சோதிக்கிறான்" என்று பயங்கரமான வார்த்தை[illegible]ச் சொல்லி ஏழைப்பெண்ணை [illegible]ச்செய்து, அதிகமான கலக்கத்[illegible]டுபண்ணி, தன்னறிவற்றவளாக[illegible]லைமைக்குள்ளாக்கிவிட்டார்கள். ப[illegible]ரியானது, நஞ்சு வரவில்லை. பன்னிர[illegible] மணியானது. நஞ்சு வருகிறதாகக் காணப்படவில்லை. நோயாளியின் வயிற்றைச்சுற்றி கட்டுகளும் போடக்கூடாது என்று சொல்லி விட்டார்கள். மருத்துவச்சியும், மற்றவர்களும் சமீபமாய் போய் உதவிசெய்யவேண்டாமென்று சொல்லி விட்டார்கள். நஞ்சானது சரீரத்திலுள்ள முழு இரத்தத்தையும் விஷமாக்கிவிட்டது. இரத்தாசயத்தோரம் அந்த நஞ்சு நின்றுகொண்டது. நோயாளியின் வயிறு படிப்படியே ஊதிக்கொண்டே வந்தது. மேல்சுவாசங் கண்டுவிட்டது. நோயாளியை இடம் மாற்றாமல் இரத்தத்திலேயே ஒரே நிலையில் கிடக்கும்படி செய்துவிட்டார்கள். ஐயோ, நாகரீகமான இந்தக்காலத்தில் இது நடக்கக்கூடிய ஒரு காரியமா? என்ன அறிவீனம்!



என்ன பரிதாபம்! மத்தியம் இரண்டுமணியானது நஞ்சைக் காணோம். சற்றப்புறம் இன்னொரு மருத்துவச்சி வந்தாள். அவளையும் கைபோடவேண்டாம் என்று கையைப் பிடித்திழுத்தார்கள். அவளோ வென்றால், கையைப்போட்டு நஞ்சை வெளியேற்றினாள். ஆனால் காலங்கடந்து விட்டது. நோயாளியின் சரீரத்திலுள்ள இரத்தமெல்லாம் வெளியேறிவிட்டது. ஆகவே பிள்ளைப்பெற்று சுகமாக இருக்க வேண்டிய பெண் தானே எழுந்து உட்கார்ந்துகொண்டு தன் புருஷனைக்கூப்பிட்டு, "நான் பரலோகம் போகிறேன் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்" என்று திடீரென்று இடியும் மின்னலும் தலையின்மேல் விழுந்தாற்போல், மேல் சுவாசத்தோடு சொல்லி, தன் இனத்தாரையும் வழியனுப்பிக்கொண்டு அதே நாள் மாலை ஆறு மணிக்கெல்லாம் பரலோகம் சேர்ந்ததை நாம் அறியும்போது நமது இருதயங்கொதிக்கிறதல்லவா? இதைப்பார்க்கிலும் அறிவீனம் வேறுண்டோ? நஞ்சு வயிற்றிலிருந்து இரத்தாசயத்தை தாக்கி, இரத்தத்தை விஷமாக்கி, நோயாளிதன்னறிவற்று, மயங்கிக்கிடக்கிற சமயத்தில் பிசாசு வந்துவிட்டான் பார்த்தாயா என்று அந்த ஏழைப்பெண்ணுக்கு சொன்ன அந்த மூடத்தனத்திலும் பெரிது வேறுண்டோ?

இதென்னத்தைக் காட்டுகிறதென்றால், தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் கிருபையின் எத்தனங்களையும் அறிவையும் அனுபவத்தையும் அற்பமாக எண்ணி, அவைகளை உபயோகிக்காதபடி அசட்டைசெய்து, அறிவீனத்தில் மூழ்கியிருக்கிறதற்கு அத்தாட்சியைக் காட்டுகிறது.

கர்ப்பஸ்திரீயே எச்சரிக்கையாயிரு, அறிவீனமான ஜனங்களின் பேச்சைக் கேட்டு மோசம்போகாதே.

கர்ப்பஸ்திரீயாயிருக்கும்போதும், குழந்தைக்கு பால் கொடுக்கிற காலம் வரைக்கும், புருஷனும் மனைவியும் பிரிந்திருக்கவேண்டியதவசியமே. ஏனென்றால் அதிக மோசத்தையும் கெடுதியையும் அது விளைவிக்கிறது.

## THE WAR—WHO IS RESPONSIBLE?
## யுத்தம்—காரணம் யார்?

ஐரோப்பாக் கண்டத்தில் தற்சமயத்தில் நடக்கும் யுத்தத்திற்குக் காரணம் யார் என்று உறுதியாய்ச்சொல்லுவதைப் பற்றி பலரும் பலபல அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். ஜெர்மனி, தான் இதற்குக் காரணம் இல்லையென்று சொல்லுகிறது. இங்கிலாந்து, தான் காரணம் இல்லையென்று சொல்லுகிறது. பக்ஷபாதமில்லாத ஒரு நியாயாதிபதியிடம் இந்தக் காரியத்தை ஒப்புவிப்போம். மத்தியஸ்தமான நிலைமையிலுள்ள அமெரிக்காகண்டத்தின் ஒரு துரை பலவிதமான அத்தாட்சியின் மூலமாக இந்த யுத்தத்திற்குக் காரணங்களைக் கண்டுபிடித்து பின்வருமாறு எழுதுகிறார்:—

ஜெர்மனி மற்றவர்களுடைய செய்கையின் மூலமாக மெய்யாகவே சண்டைக்குப்போகக்கட்டாயப்படுத்தப்பட்டதோ, அல்லது தானே வேண்டுமென்று சண்டைக்குப் போனதோ என்பதைப்பற்றித் தான் ஒரு பெரியகேள்வி உண்டு என்று அவர் சொல்லுகிறார். இக்கேள்விக்கு பின்வரும் மறுமொழியைக் கொடுக்கிறார். ஜெர்மனியின்மேல் மற்ற ஜாதியார் வேண்டுமென்ற மனதோடு யுத்தத்திற்குப் போயிருந்தால், உலகத்திலுள்ள மற்ற ஜாதிகள் எல்லாம் ஜெர்மனியைப் பற்றி புகழ்ந்துபேசி, அதற்குச் சகாயம் பண்ணி, அதின் எதிராளிகளைத் தண்டிக்

திறதற்கான வழிவகைகளையும் தேடுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், ஜெர்மனிக்கு விரோதமாய் இந்த மூர்க்கமான யுத்தம் தொடுக்கப்படாதிருந்தால், அதைப்பற்றி புகழ்ந்து பேசுகிறதற்குப் பதிலாக நீசத்தனமாய் நினைத்து அதை நிந்திப்பார்கள் என்பது நிச்சயமும், நியாயமுமாயிருக்கிறதல்லவா? அதுமாத்திரமல்ல, ஜெர்மனிக்கு உதவி செய்கிறதற்குப் பதிலாக, அதின் சத்துருக்களைப் புகழ்ந்து, அவர்களுக்கு ஏற்ற சகாயத்தையும் ஒத்தாசையையும் உலகத்திலுள்ள சகல ஜாதியாரும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

இந்த யுத்தத்தைத் தொடக்கினதார்? இங்கிலாந்தா? மெய்யாகவே இல்லை. ஏனென்றால், யுத்தஞ் செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு இங்கிலாந்து தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேயில்லை. இன்னும் அநேகவருஷங்களுக்குப்பிறகாவது தன்னை ஆயத்தம் பண்ணவேண்டுமென்று நினைக்கவுமில்லை. இந்த யுத்தத்தைத் தொடங்கினது பிரான்சா? ருஷியாவா? அதைப்பற்றியும் உண்மையாக யாரும் சொல்லமுடியாது. பின்னை, யார் காரணமாயிருந்தது? ஜெர்மனியின் உதவியைக்கொண்டு, செர்பியாவை அநியாயமாயும், இரக்கமில்லாமலும் தாக்கின ஆஸ்ட்ரியாதான் இந்த மகாகொடூரமான யுத்தத்திற்குக்காரணம். ஜெர்மனி ஆஸ்ட்ரியாவுக்கு உதவி செய்ததுமாத்திரமல்ல, ஆஸ்ட்ரியாவுக்கு விரோதமாய் எந்த ஜாதியாரும் இந்த யுத்தத்தில் தலையிட்டுக்கொண்டால், தனக்குக் கோபமூண்டு தானும் அவர்களுக்கு விரோதமாய் பயங்கரமானவிதமாய் யுத்தஞ்செய்வதாக, ஐரோப்பாவின் சகலபெரிய இராஜாங்கங்களுக்கும் பகிரங்கமாய் அறிக்கையிட்டது.

அது மாத்திரமல்ல, மத்தியஸ்தமான நிலைமையிலுள்ள பெல்ஜியம் தேசத்திற்குள் அக்கிரமமாகப் பிரவேசித்தது பெரிய குற்றம் என்று ஜெர்மனியின் சொந்த வாக்குமூலத்தினாலே வெளியிடப்பட்டிருக்கிறது. ஜெர்மனியிலுள்ள சில பெரிய மனிதர் அப்படியல்லவென்று மறுக்கிறார்கள் பெல்ஜியத்திற்குள் அக்கிரமமாய் ஜெர்மன்காரர் பிரவேசித்தார்கள் என்பது அத்தேசத்து இராஜ ஆலோசனைக்காரர் (Imperial Chancellor) இந்த யுத்தத்தைத் துவக்குமுன் சொன்ன வார்த்தைகளால் தெளிவாகிறது. "பெல்ஜியம் தேசத்திற்குள் நாங்கள் செய்யப்போகிற பெரிய குற்றத்தை, எங்கள் பட்டாளத்தார் போகிறநோக்கம் நிறைவேறினவுடனே சீர்திருத்தி சரிப்படுத்திக்கொள்ளுவோம்" என்று ஒன்றையும் ஒளிக்காமல் திறந்து சொல்லுகிறேன் என்று சொன்னார். இவர் தப்பிதம் என்று ஒத்துக்கொண்டபடியே, அவர்கள் பட்டாளத்தார் மிலேச்சத்தனமாய், மிருகங்களைப்போல பெல்ஜியம் தேசத்திற்குள் செய்த கொலைபாதகமும், அக்கிரமும் கணக்கிடக்கூடாததாயிருக்கிறது. இந்த யுத்தத்தில் தலையிடாவது, அல்லது ஜெர்மனிக்கு விரோதமாகச் சண்டைக்குப் போகவாவது ஒருபோதும் நினைத்திராத இந்தச் சிறிய இராஜ்யத்திற்கு பெரிய நாசத்தை உண்டுபண்ணிவிட்டதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகிறதல்லவா? அந்த அமெரிக்கதுரை இந்த யுத்தத்தைத் தொடங்கச்செய்த பல காரணங்களையும் எடுத்துக்காட்டுகிறார். விசேஷமான காரணம், என்னவென்றால், கடந்துபோன 25 வருஷங்களாக தன் இராணுவத்தைப்பற்றி ஜெர்மனிகொண்டிருந்த, புகழ்ச்சியும், பெருமையுமே. நியாயப்படி சொல்லவேண்டுமானால் 25 வரு



ஷங்களுக்குமுன்னே இரண்டாவது உவில்லியம் சிங்காசனம் ஏறினபோதே இந்த யுத்தம் தொடங்கினது. எப்படியென்றால், தான் சிங்காசனம் ஏறினவுடனே, தானே யுத்தத்திற்செல்லாம் எல்லாரிலும் பிரதானமான கர்த்தா (Supreme War Lord) என்று தன்னைப்பற்றி பிரசித்தஞ்செய்து, தன் ஜாதியாரை யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்த முயன்றார். அவர் பிள்ளைகளும், சிறுவர்களாயிருக்கும்போதே, தங்களைப் போர்வீரராகப் பாவித்துக் கொண்டார்கள். இராஜ்யத்திலுள்ள மற்ற இளமையான ஆண்பிள்ளைகள் எல்லாரும் அவருடைய சொந்த பிள்ளைகளோடு வளர்க்கப்பட்டு வந்தார்கள்.

இது மாத்திரமல்ல, ஜெர்மன்காரருடைய வார்த்தைகளின் மூலமாக அவர்கள் யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்திக்கொண்டே வந்தார்கள் என்று பிரத்தியக்ஷமாய் விளங்குகிறது. நாம ஐரோப்பாக்கண்டத்துக்குப் போகவேண்டாம், நமது இந்து தேசத்திலேயே அநேக ஜெர்மன் பாதிரிகள் தங்கள் பள்ளிக்கூடங்களிலுள்ள வாத்திமார்களிடமும், பிள்ளைகளிடமும் பேசும்போது "உங்கள் இராஜா, எங்கள் சக்ரவர்த்தி, உங்கள் இராஜகுமாரர், உங்கள் பட்டாளத்தார், உங்கள் மந்திரி, என்று வித்தியாசப்படுத்தியே பேசிவந்தார்கள். சென்னபட்டணத்தில், லுத்தரன்மிஷன் பாடசாலைக்குத் தலைவராக இருந்த ஒரு ஜெர்மன் பாதிரியிடம் அப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் போய் "ஐயா பரிட்சைவருகிறது, இராஜாவின் படம் பள்ளிக்கூடத்திலிருந்தாலதான் இன்ஸ்பெக்டர் கிராண்டு தருவார், இல்லாவிட்டால் தரமாட்டார்" என்று சொல்ல "இராஜாபடமா? எந்த இராஜாபடம்?" என்று பாதிரிகோபத்தோடு கேட்டார். "ஜியார்ஜ் இராஜாவின் படம்" என்று உபாத்தியாயர் சொல்ல, "இல்லை இல்லை, நமது இராஜா கெய்சர் தான், நாம் அவருக்குக் கீழேதானிருக்கிறோம்" என்று நாயைப்போல சீறிவிழுந்தாராம். இப்போது அப்படிப்பட்ட இராஜவிசுவாசத்துக்கு விரோதமான கேடுபாடான அநேக காரியங்களை பாடசாலைகளில் கற்றுக்கொடுத்த இராஜதுரோகிகளான, வஞ்சகமும், சூதும் நிறைந்த ஜெர்மன் கள்ள பாதிரிகள் எல்லாரையும் பிடித்து நமது பிரிட்டிஷ் கோட்டைகளில் காவலறைகளில் போட்டு, பூட்டி நமது போர்வீரர் அவர்களை ஜாக்கிரதையோடு காவற்செய்து வருவது நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய காரியமே.

ஆகவே, இவர்கள் ஜாதியார் யுத்தத்திற்கு நெடுங்காலமாக தங்களை ஆயத்தப்படுத்தி வந்தார்கள் என்பதற்கு இவைகளெல்லாம் அத்தாக்ஷியல்லவா? உலகத்திலுள்ள மற்ற ஜாதியாருக்கெல்லாம் மேற்பட்டவர்கள் தாங்கள் தான் என்றும், யுத்தத்தின் மூலமாகத்தான் உலகத்தின் இராஜாங்கங்களைக் கீழ்ப்படுத்தவேண்டுமென்றும் நினைத்து ஜெர்மனி மற்றஜாதிகளோடு சேராமல் தனிமையாகவே நின்றுகொண்டிருந்தது. இதற்காகவே, மிலேச்சத்தனமும், அநியாயமுமான இந்த சண்டையைத் தொடங்கி இதின் மூலமாக உலகத்தார் அதைப்பற்றி கொண்டிருந்த நம்பிக்கையையும், பெருமையையும் இழந்து இப்போது அந்தரத்தில் நிற்கிறது.

அமெரிக்காவிலுள்ள ஒரு விசேஷபத்திரிகை சொல்லுகிறதென்னவென்றால்:— ஜெர்மனி யுத்தத்தில் ஜெயமடைவதை உலகம் பார்க்கமாட்டாது, அதற்கு இடம் கொடுக்கவுமாட்டாது. ஐரோப்பாவை

ஜெர்மனி அடக்கியாளும் காலமாத்திரம் வந்தேயானால், உலகம் முழுவதிலுமே உள்ள செல்வமும், சமாதானமும் ஒன்றுமில்லாமல் மாயமாய் மறைந்துபோகும். சில மாதங்களுக்கு முன்னாகத்தான் ஜெர்மனி எந்த நிலையிலிருக்கிறதென்று இவ்வுலகமே நன்றாய் அறிந்துகொண்டது. தன்னில் சமாதானமும், செல்வமும், தன் குடிகள் க்ஷேமமுமாயிருக்க வேண்டுமானால், உலகம் முழுவதுக்குமே பெரிய அபாயத்தை உண்டுபண்ணியிருக்கும். ஐரோப்பாவின் மத்தியிலுள்ள, ஜெர்மனியின் இராணுவப்பெருமை, அலங்காரமாகிய கோபுரங்களை இடித்து தரைமட்டமாக்கவேண்டுமென்று உலகம் நன்றாயறிந்து அதிக ஜாக்கிரதையோடு சகல எத்தனங்களும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

உலகத்தின் வாழ்வையும், சமாதானத்தையும் குடிகளின் க்ஷேமத்தையுங் கெடுத்த மிலேச்சத்தனமான ஜெர்மனிக்கு ஐயோ!

ஜெர்மன் ஆகாயக் கப்பல் செய்த மோசம்.—ஜெர்மன் ஆகாயக் கப்பல்கள், இங்கிலாந்திலுள்ள பட்டணங்களுக்கு மேல் ஆகாயத்தில் பறந்துபோய் பாம் என்னும் பயங்கரமான வெடிகுண்டுகளை பட்டணங்களின்மேல் எறிந்தன. ஒரு பட்டணத்தில் ஆகாயக் கப்பல் செய்யப்போகும் மோசத்தை ஏற்கனவே அறிந்து அதிலுள்ள ஜனங்கள் முன் ஜாக்கிரதையோடு தங்களுயிரைக் காத்துக்கொண்டார்கள். மற்ற இடங்களில், சிலர் மாண்டுபோனார்கள். சிலர் காயப்பட்டார்கள், சில கட்டடங்கள் தீப்பற்றிக்கொண்டன. சில இடங்களில் விளக்குகள் எரியாமல் அணைத்துப்போடப்பட்டன; மின் சாரத்தின் மூலமாக ஓடுகிற ட்ராம் வண்டிகள் நிறுத்தப்பட்டன; பட்டணங்களில் எவ்விதமான சிறு சத்தமும் கேட்கப்படாதபடி, ஜனங்கள் வாய்பதறி கை பதறி பூமிக்குள்ளிருக்கும் அறைகளில் தங்கள் மாசற்ற குழந்தைகளோடும் இனத்தாரோடும் ஒளித்துக்கொண்டா கள். இவ்வித மோசத்தை இரவில் ஆகா யக்கப்பல்கள் செய்யவேண்டியிருக்கி படியால் பட்டணங்களில் விளக்குகளை அணைத்தபிறகு, அதிக மோசம் செய்ய கூடாமற் போய்விடுகின்றன. இந்த ஆகா யக் கப்பல்கள் யுத்தத்திலுண்டாகி அவ்வளவு நஷ்டத்தை உண்டுபண்ண விட்டாலும், அநேக உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் பயங்கரத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்குகிறதென் தைப்பற்றி அதிகத் துக்கப்படவேண்டிய வர்களாயிருக்கிறோம். இரவில் பறக்கு இவ்வாகாயக் கப்பல்களுக்கு ஜெப்பலின் என்று பெயர். அதாவது, இவற்றை கண்டுபிடித்த ஜெர்மன் பெயர் ஜெப் லின், இந்த ஜெப்பலின் நீளம் ஏற குறைய 437 அடி. இது புகைக்கூண் டைப்போல் (Baloon) ஒருவித பளு வான வஸ்துவால் செய்யப்பட்டது. இதற்குள் நாலைந்து பெரிய அறைகள் நித்திரை செய்கிறதற்கும், குளிக்கிறதற்கும், சாப்பிடுகிறதற்கும் உண்டு தவிர பெரிய எஞ்சின்கள் இருக்கத்தக்கதான அறையும், மூன்று அல்லது நாலு டன் நிறையுள்ள வெடிமருந்து குண்டுகள் வைக்கிறதற்கான அறையும் உண்டு. இது ஒரு மணிக்கு 45 மைல் தூரம் பூமிக்குமேல் சுமார் 1500 அடிக்குள்ளாகவே பறந்துபோகும். மப்பு மந்தாரமான காலங்களில் பறக்கமுடியாது. மார்ச்சுமாதமுதல் ஆகஸ்டு வரையில் இது பறந்து ஆகாயமெல்லாம் செல்லக்கூடிய நல்லகாலம். ஒரு வெடிக்குண்டுபட்டால் அது உடைந்து சேதமடையும்.

(177)

Vol. XXVIII Registered No. M. 209 No. 12

JUNE, 1915

MADRAS. 17 JUL

# மாதர் மித்திரி.

# Tamil Woman's Friend

"MATHAR MITHIRI"

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

22-6-15

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின்பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபால் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபால் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபால் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை | 179 |
| கிரீடங்கள் | 180 |
| துக்கத்தை மேற்கொள்ளல் | 184 |
| யுத்தக்களத்தில் நிற்கும் உவெல்ஸ் இளவரசன் | 187 |
| யுத்தம் | 188 |
| அவன் உன் பாட்டைப் பாடிக்கொண்டிருக்கிறான் | 190 |
| வர்த்தமானக் குறிப்புகள் | 191 |




# மாதர் மித்திரி.

புத். உஅ    க௯௧௫ ௵ - ஜூன் ௴.    இல. ௰உ.

## THE ONLY NAME.

இராகம், ஜனஸ்பதி.    ஆதிதாளம்

### பல்லவி.

யேசு நாமமல்லால்—உலகினில்
வேறு நாமம் இல்லை—கிறிஸ்து.

### அநுபல்லவி.

தேசுலாவிய கேருபீம்பணி
திவ்விய வானவர் முனிவர் கண்மணி,
மாசில்லாத மெய்ஞ்ஞான சிகாமணி,
மதிக்கும் சத்திய வேத சிரோமணி,—    யேசு

### சரணங்கள்.

1. வானமும் புவியும்—கதி—ரோன் மதி உடுவும்
கானல் வரை கடலும்—நர—ரான எவ்வுயிரும்
தானே படைத்தருள் ஆதி காரணன்,
சர்வ ஜீவ தயாபர பூரணன்,
ஈனர் வாக்குக் கெட்டாத மெய்யாரணன்,
இலங்கும் வேத சங்கீத பாராயணன்,—    யேசு

2. காவிலாத மேவை—செய்—தீவினையதனால்
பூவின் மாந்தர் படும்—துயர்—தேவ கோபமற,
பாவிகளைப் பரனோடுறவாக்கப்,
பரம எருசலேம் நகர் சேர்க்க,
மேவுமலகை அரணைத் தூளாக்க,
மேதினியில் சமாதானம் உண்டாக்க,—    யேசு

3 பண்டு வேதியர்கள்—கைக்—கொண்ட மாமறையில்
விண்ட நாமமல்லால்,—உயர்—அண்ட மீதினிலும்,
மண்டலத்திலும், ஆழி கீழிலும்,
மாருதம் செலும் அட்ட திக்கிலும்,
தொண்டர் கூக்குரல் எட்டும் தூரத்திலும்,
துஷ்டப்பேய்கள் சுற்றுத இடத்திலும்,—    யேசு

## CROWNS.
## கிரீடங்கள்.

இங்கிலாந்து தேசத்தரசன் அணிந்துகொள்ளும் கிரீடம் எதைப்போலிருக்கிறதென்று உங்களெல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். தபாலாபீசில் வழங்கும் ஒவ்வொரு ஸ்டாம்பிலும், அரைக்கால், கால், அரை, முழு ரூபாய்களிலும் அவர் கிரீடம் அணிந்தவராக இருப்பதை நீங்கள் பார்க்கலாம். அது தங்கத்தால் செய்யப்பட்டு விநோதமான பற்பல விலையுயர்ந்த கோமேதகம், வைடூரியம், புஷ்பராகம், மாணிக்கம் முதலிய கற்களால் சித்திரிக்கப்பட்ட ஓர் நூதன வேலைப்பாடுள்ளதாயிருக்கிறது. அவைகள், அவர் ஒரு விஸ்தாரமான இராஜ்யத்தை ஆளுகிற உயர்குல அரசனும், சக்கரவர்த்தியுமாயிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

தவிர, இங்கிலாந்து தேச அரசனைப்போலக் கிரீடம் அணிகிற மற்ற இராஜாக்களுமுண்டு. இத்தாலிய அரசனும், ஆஸ்திரியா ஜெர்மனிய தேசங்களின் சக்கரவர்த்திகளும், வீரமுள்ள பெல்ஜியம் தேசத்தரசனும் கிரீடங்களணிந்துகொள்ளுகிறார்கள். மெய்யாகவே, ஒவ்வொரு அரசனும் கிரீடம் அணியவேண்டுமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. நாமும் கிரீடத்தைக் கண்டவுடன் அது அரசருக்குரிய ஆபரணங்களிலொன்று என்பதை உடனே அறிந்துகொள்ளுகிறோமல்லவா? ஆனால் கிரீடங்கள் அரசருக்குரிய ஓர் அடையாளமாகமாத்திரமல்ல, அதிலும் மேலான வீரச்செயல்களுக்கு சின்னமாக அளிக்கப்படும் அறிகுறிகளாகவுமிருக்கின்றன.

ஒரு ரோம வாலிபனைப்பற்றி ஒரு கதை சொல்லுகிறேன்; அவன் மிகவும் துஷ்டத்தனம் நிறைந்த ஒரு பட்டணத்தை முற்றுகை செய்த ஒரு சேனையிலிருந்தான். அந்தப் பட்டணத்திலுள்ள மனிதர் சில ரோமக் குடிகளைப் பிடித்து, அசுத்தமும், இருண்டதும், ஈரமுமான சிறைச்சாலைகளில் அடைத்துவைத்தது மாத்திரமல்ல, அவர்களை வெளியே கொண்டுவந்து நிறுத்தி, அருவருக்கப்படத்தக்கதான பலவித குரூரச் செய்கைகளின் மூலமாக சித்திரவதை செய்து கொன்றார்கள். ஆகையால் ரோம அதிகாரிகள் அவ்விதமான துஷ்ட செய்கையைச் செய்த குரூர நெஞ்சர்களைத் தண்டிக்கும்படியாக ஒரு சேனையை அனுப்பியிருந்தார்கள். அந்தப் பட்டணமோ மிகவும் பலமான கோட்டை மதில்களால் சூழப்பட்டிருந்தது. கொத்தளங்களின் மேல் வில்வித்தையில் தேர்ந்தவர்களும், கவணைப் பிரயோகிப்பதில் தேர்ந்தவர்களும், ஈட்டிக்காரர்களும் தங்கள் ஆயுதங்களோடு அணிவகுத்து நின்றார்கள். அது மாத்திரமல்ல, அநேக கஜ தூரத்திற்கப்பால் வரும் எதிரிகளின்மேல் பெரிய கற்களை எறியக்கூடிய காற்றப்பல்ட்ஸ் (Catapults) என்னப்பட்ட ரப்பர் வில்லுகளும் வைக்கப்பட்டிருந்தன. ரோம சேனையும் அநேக நாட்களாக அந்தப் பட்டணத்தைக் கிட்டிச் சேராதபடி மேலே சொல்லப்பட்ட எதிரியின் ஆயுதங்களால் சேதமடைந்து, தடைபட்டிருந்தது. கடைசியாக, லூசியஸ் (Lucius) என்ற ஒரு வாலிப ரோமப்போர்வீரன் "இன்று நான் அந்த மதில்களின்மேல் ஏறி பட்டணத்திற்குள் பிரவேசிப்பேன், அல்லது நான் துணிந்துசெய்யும் என் பிரயத்தனத்தின் மூலமாக என் உயிரை இழப்பேன். என்னைப் பின்பற்றி வருகிறவன் யார்? இதோ நான் எல்லாருக்கும் முன்னே போகிறேன்" என்று வீரதீரமாய்ச் சொன்னான். காலை வெளுக்கிற



நேரத்தில் ஒரு ஏணியைக்கொண்டுபோய், ஒரு கோபுரத்தினடியில் நிறுத்தி, தன் தலையின்மேல் எதிரிகளால் எறியப்படும் கற்கள், அம்புகள், ஈட்டிகள் முதலியவைகளையும், தன்பேரில் ஊற்றப்படும் கொதி தண்ணீரையும் தடுக்கும்படியாக தன் பரிசையை தலைக்குமேலாகச் சுழற்றிக்கொண்டே அலங்கத்தின் ஓரத்தில் ஏறிச் சென்றான். அவனுடைய மனிதரிலும், எதிரிகளின் ஆயுதங்களால் சேதப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் அவனோடு சென்றார்கள். கோட்டைக்குள் போக வேறு வழியில்லை, ஆகையால் லூசியஸ் பீரங்கி வைக்கும் துவாரத்தின் மூலமாக நுழைந்து, உள்கோட்டைக்குள் சென்றான். அவன் மனிதரும் தைரியமாக அவனோடு உட்புகுந்தார்கள். ஒடுங்கிய அந்த அலங்கத்தின் மதில்மேல் மிகவும் பயங்கரமான சண்டை நடந்தது. ஆனாலும் அந்த வாலிபன் ஒரு மணிநேரத்திற்குள்ளாக கோட்டையைப் பிடித்து, குரூரச்செய்கையைச் செய்த அந்த துஷ்டர்களெல்லாரையும் சிறையாக்கினான்.

இந்த வீரனுடைய துணிகரச் செய்கைக்கு ஈடாக அவனுக்குக் கிடைத்ததென்ன? அந்தப் பட்டணத்தின் அலங்கங்களைப்போல சித்திரமெழுதப்பட்ட ஒரு தங்க வட்டம் கிரீடமாகக் கொடுக்கப்பட்டது. இதைத்தான் ரோமர் 'அலங்கக்கிரீடம்' என்று அழைக்கிறார்கள். எதிரியின் அலங்கத்தின்மேல் ஏறினவனும் அதை அணிந்துகொள்வதில் அதிகப் பெருமையுள்ளவனாயிருந்தான்.

இன்னொரு கிரீடத்தைப்பற்றி உனக்குச் சொல்லட்டுமா? மத்தியதரைக் கடலில் இரண்டு கப்பல்கள் போர்புரிந்துகொண்டிருந்தன. அந்தக்காலத்தில் பீரங்கிகளாவது, துப்பாக்கிகளாவது, டர்ப்பிடோ (Torpedoes) போட்டுகளாவது, தண்ணீருக்குள் ஒரு மணிக்கு ஏழு மைல் வீதஞ்சென்று எதிரியின் கப்பல்களைத் தாக்கி மோசஞ்செய்யும் சப்மரீன்களாவது (Submarines) இருந்ததில்லை. அநேக மனிதர் வரிசையாக உட்கார்ந்து தண்டு வலித்துக்கொண்டு கப்பலை ஓட்டுவார்கள். தங்கள் கப்பலின் வெண்கல முன்னணியம் (Bronze peaks of Prows) எதிரியின் கப்பலை மோதியடிக்கத்தக்கதாக அவ்வளவு விரைவாகத் தள்ளிக்கொண்டு அதற்கெதிரே அம்புபோல் பாய்ந்துபோவார்கள். ஆகவே, இரு கப்பல்களும் ஒன்றையொன்று மோதியடிக்கும்போது, (ரோமக்கப்பல்) அதிவேகமாய்ச் சென்ற கப்பலிலுள்ளவர்கள் தங்கள் கப்பலின் பாய்மரத்தில் தொடுக்கப்பட்டிருக்கும் நீண்ட பலகையை எதிரியின் கப்பலில் படத்தக்கதாக எறிவார்கள். அந்தப் பலகையின் ஒரு அந்தத்தில் கூர்மையான நீண்ட ஆணிகள் கடாவப்பட்டிருக்கும். இந்த ஆணிகள் அந்தக் கப்பலின் பலகைக்குள் ஊடுருவிச்சென்று இரண்டு கப்பல்களையும் பூட்டப்பட்டதுபோல பொருத்திவிடுகின்றன. இப்போது, ரோமக்கப்பலிலுள்ளவர்கள் எதிரியின் கப்பலுக்குள் பிரவேசிக்கத்தக்கதாக அந்தப் பலகை ஒரு பாதையாகிவிடுகின்றது. அந்த யுத்தத்தில் இவ்விதமான தந்திரச்செயல் மூலமாக ரோம சேனையை நடத்தின மார்க்கஸ் (Marcus) என்னும் ஒரு வாலிபன் அந்தப் பலகையின்மேல் சென்று தன் போர்வீரரோடு எதிரியின் கப்பலுக்குள் பிரவேசித்தான். ஆனால் எதிரியோடு சண்டைசெய்து, களைத்து, அதைரியப்பட்டவர்களாக பயந்து திரும்பவும் தங்கள் கப்பலுக்கு ஓடிவிடவேண்டுமென்று அவனுடைய மனிதர்

அநேகந்தடவைகளில் பிரயாசப்பட்டார்கள். ஆனால் சண்டை மும்முரமாய் நடந்த முன்பக்கத்தில் நின்று மார்க்கஸ் விடாமுயற்சியோடும் வீரதீரமாயும் போர்புரிந்தபடியால், அவனுடைய மனிதர், அவனுடைய தைரியத்தைப்பார்த்து எழுப்பப்பட்டவர்களாக எதிரியின் கப்பல் பிடிபடும்வரையில் அவனோடு நின்று அவனை வெற்றிவேந்தன் என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். வெற்றி சிறந்தவனாக மார்க்கஸ் ரோமாபுரிக்குச் சென்றவுடன் அவனுக்குக் கிடைத்த பரிசு என்ன? ஒரு கிரீடம். ஆனால் அரசர்களணியும் கிரீடமல்ல. அவனுடைய தேசம் எவ்வித சத்துருக்களாலும் தாக்கப்படாதபடி, அவன் ஜெயித்த எதிரியின் கப்பலின் முன்னணியம் சித்திரிக்கப்பட்ட ஒரு தங்க வட்டம் அவனுடைய நெற்றியில் அணிந்துகொள்ளத்தக்கதாக அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

இன்னொரு கிரீடத்தைப்பற்றி கொஞ்சம் சொல்லட்டுமா? அநேக பிரிட்டிஷ், பிரஞ்சு, பெல்ஜியம் தேசத்துப் போர்வீரர்கள் அக்கிரீடத்தை அணிந்துகொள்ள பாத்திரவான்களாயிருக்கிறார்கள். ஒரு விஸ்தாரமான மைதானத்தில் ரோமதளகர்த்தன் தன் தேசத்துச் சத்துருக்களோடு சண்டைசெய்து சித்தியடைந்தான். தன் சத்துருக்களோடு போர்புரிந்து, ஜெயமடைந்து, அவர்களுடைய சகல யுத்தத் தளவாடங்களையும், பொக்கிஷங்களையும் கைப்பற்றிக்கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால் சிலசமயங்களில் தன்னால் கூடாதென்றுங் கண்டுகொண்டான். ஏன்? அவனுடைய சத்துருக்கள் ஒரு பெரிய உபாயஞ்செய்தார்கள். அதாவது உத்திரங்களைக் கொண்டுவந்து, அவைகளைக் கூர்மையான பட்டயங்களைப்போல சுற்றிலும் சதுருத்தி, கயிறுகளாலும், சங்கிலிகளாலும் தொடுத்து, ரோம சேனையைச் சூழவேலியைப்போல அடைத்து விட்டார்கள். ஏனென்றால் ரோமர் மூர்க்கமாய் அவர்கள் பேரில் பாய்ந்து போர்புரிய வரும்போது, அந்தக் கூர்மையான உத்திரங்கள்மேல் மோதி சேதமடைந்து, திகைத்து நிற்கையில், அவர்கள் மேல் பாய்ந்து தங்கள் அம்புகளை எய்து அவர்களை நாசமாக்கிப்போடலாமென்ற தந்திரத்தோடு அப்படிச் செய்தார்கள். இந்த வேலியை ரோமர் எப்படி உடைத்தார்கள்? மிகவும் சாவதானமான கெயஸ் (Caius) என்னப்பட்ட ஒரு கிழப்போர்வீரன் தன் ரோம சேனைக்காக அந்த பலத்த வேலியைத் தகர்க்கும்படி தன் தளகர்த்தனிடம் உத்திரவு கேட்டான். நடு இரவில் அவனும், மற்ற இரண்டு போர்வீரரும் புறப்பட்டு சதுப்புநிலத்தின்மேல் நகர்ந்துகொண்டே போனார்கள். மிகவும் ஜாக்கிரதையோடும், அமைதியோடும் சதுப்புநிலத்தில் நடப்பட்டிருந்த ஒவ்வொரு உத்திரத்தையும் தரைக்குள்ளிருந்து தோண்டி எடுத்து தாங்கள் போகத்தக்கதான பாதையை உண்டாக்கினார்கள். அந்தப் பாதை மிகவும் ஒடுக்கமானதாயும், சறுக்கலானதாயுமிருந்தது. ஆனால் அவர்கள் கடந்து போகக்கூடிய நல்ல பாதையாக இருந்தபடியால் சூரியன் உதயமாகுமுன்னே ரோமசேனையைச் சேர்ந்த எல்லாப் போர்வீரரும் சத்துருக்களுடைய சேனைக்குள் பிரவேசித்தார்கள். தங்கள் சத்துருக்களோடு சண்டைசெய்து, தங்களுக்காக அவர்கள் செய்த அந்த வேலிக்குள்ளாக அவர்கள் எல்லாரையும் துரத்தி சர்வ சங்காரஞ் செய்தார்கள்.

அதிகப் பொறுமையோடும், தைரியத்தோடும் துணிந்து தங்கள் சேனை செல்லத்தக்கதாக இரவெல்லாம் கஷ்டத்தோடு உழைத்து, பாதையையுண்டாக்கி, ஜெயமடைந்த அந்தப் போர்வீரனுக்கும் ஒரு கிரீடங்கொடுக்கப்பட்டது. சத்துருக்கள் தங்களைச் சூழப்போட்டிருந்த கூர்மையான அந்த உத்திரவேலியைப்போல சித்திரமெழுதப்பட்ட ஒரு தங்கவட்டம் அவன் நெற்றியின்மேல் அணிந்துகொள்ளத்தக்கதாக அவனுக்கு அளிக்கப்பட்டது.



இவைகள் எல்லாவற்றிலும் மேலாக சர்வலோகாதிபதி அணிந்துகொண்ட ஒரு உன்னதப் பொற்கிரீடத்தைப்பற்றி சற்று சுருக்கிச் சொல்லட்டுமா?

வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள அனைத்தையும் உண்டாக்கி, அவைகளை அதினதின் ஸ்தானத்தில் வைத்து, அவைகளுக்குப் பிழைப்பையும், ஜீவன் சுகம் பலம் முதலிய எல்லா ஆசீர்வாதங்களையும் சம்பூரணமாய்த் தந்தவரும், உலகத்திலுள்ள சகல இராஜாக்களையும் அபிஷேகம்பண்ணி அவர்களுக்கு விலையுயர்ந்த முத்துக்கள் பதித்த பொற்கிரீடங்களைத் தரிப்பித்தவருமான இயேசுமாஇராஜன் அணிந்த கிரீடம் 'முள்கிரீடமே.' தற்காலத்திலுள்ளபடி யுத்தங்களை உண்டாக்க அல்ல, அவைகளை ஒழியப்பண்ணி பூமியெங்கும் சமாதானத்தையுண்டாக்கவே அவர் இவ்வுலகில் மனுஷாவதாரமெடுத்து, ஓர் ஏழையாக ஜென்மித்தார். வியாதியஸ்தரை சொஸ்தமாக்கினார், மரித்தவர்களை உயிரோடெழுப்பினார், இன்னும் நமது புத்திக்கெட்டாத அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார். சத்துருக்களை ஜெயித்த ஒரு போர்வீரனுக்கு பொற்கிரீடம் கொடுக்கப்பட்டதானால், சத்துருக்களுக்காக தமது விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தின சேனை தளகர்த்தனுக்கு முத்துக்கள் பதித்த பொற்கிரீடம் போதுமா? அப்படியிருக்க, அந்த அருமையுள்ள இயேசுமாஇராஜனுக்கு அளிக்கப்பட்டது பொற்கிரீடமல்ல, முள்கிரீடந்தான. இது நமது ஞானத்துக்கு பயித்தியமாகத் தோன்றுகிறதல்லவா? ஆம், பாவிகளாகிய நமக்காக, உலகம் பிசாசு மாம்சம். ஆகிய நமது சத்துருக்களோடு போர் புரிந்து, வெற்றி சிறந்து, நாம் நமது பாவத்திற்காக மரிக்கிறதற்குப் பதிலாக, நாம் முட்கிரீடஞ் சூட்டப்படுகிறதற்குப் பதிலாக, அவர் முள்கிரீடம் சூட்டப்பட்டு, சிலுவையின் நீசமரணத்தை யடைந்தார். என்னையா அன்பு பார்.

7s, 6s, 81.

இரத்தம் காயம் குத்தும்
நிறைந்து, நிந்தைக்கே
முட்கிரீடத்தாலே சுற்றும்
குத்துண்ட சிரசே,
முன் திவ்யமேன்மை கொண்ட
நீர் லச்சை காண்பதேன்?
ஐயோ! வதைந்து நொந்த
உம் முன் பணிகிறேன்.

7777.

வாரால் பட்ட காயமும்,
போர்த்த சிவப்பங்கியும்,
முட்கிரீடம் நிமித்தமும்
கேளும், தூய இயேசுவே.
கூர்முள் உம் கிரீடமாம்
குருசாசனம்;
சிந்தினீர் எனக்காய்
உம் ரத்தம்.

மெய்யாகவே, நம்மை நமது சத்துருக்களின் கைகளினின்று மீட்க முட்கிரீடந் தரித்த இயேசு ராஜன் நமக்கு என்ன கிரீடந்தருவதாக வாக்குப்பண்ணுகிறார் என்று பார்ப்போம். "சாவுவேளைமட்டும் என்னில் விசுவாசமாயிருப்பவனுக்கு

என்றுமழியாததும், உலக அரசர்களணியும் முத்துக்கள் பதித்த பொற்கிரீடங்களைப் பார்க்கிலும் மேலானதுமான ஜீவகிரீடத்தைத் தருவேன்" என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். ஜீவகாலமெல்லாம் தங்களை வெறுத்து, அவருக்குள் விசுவாசமுள்ளவர்களாக, அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி, தங்கள் சத்துருக்களாகிய உலகம் மாமிசம் பிசாசு ஆகிய இம்மூன்று பேரோடும் போர் புரிந்து வெற்றி சிறந்தவர்களுக்குத்தான் வாடாத அந்த ஜீவகிரீடத்தைத் தருவார்.

ஆகையால் நமது இயேசுமாஇராஜனுடைய சேனையில் இராஜவிசுவாசமுள்ளவர்களாகவிருந்து, அவருடைய கட்டளைப்படி நடந்து, அவர் நம்மை நடத்துகிற எவ்விடத்திற்கும் அவருக்குப் பின் செல்வோமாக.

---

## GETTING OVER SORROW.

## துக்கத்தை மேற்கொள்ளல்.

---

துக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று ஜனங்கள் நினைக்கிறது ஒரு தப்பிதமான கொள்கையே. நமது ஜீவியத்தில், மரணத்தின் மூலமாகவாவது அல்லது வேறெவ்விதமான நஷ்டத்தினாலாவது, நமக்கு உண்டாகிற ஆறாத மனத்துயரத்தை நீக்கிவிடவாவது, மறந்துவிடவாவது அல்லது மேற்கொள்ளவாவது வேண்டுமென்று நினைக்கிறது இலேசான ஒருகாரியமல்ல.

ஒரு பட்டணத்தில் ஒரு போதகருக்குக் கீழிருந்த சபையில் திடீரென்று பெருந்துக்கத்திற்குள்ளான ஒரு பெண்ணிருந்தாள். அந்தப்போதகர் அவளைத் தேற்றவும், அவளோடு அனுதாபப்படவும் அவள் வீட்டிற்குப்போனார். சபையிலுள்ள சிலமனிதரும் அங்கேயிருந்தார்கள். அப்போது அவர்களில் ஒரு பெண் வியாகுலத்தில் மூழ்கியிருந்த அந்தப் பெண்ணைப்பார்த்து "உன் துக்கத்தைச் சீக்கிரம் மறந்துவிடப் பிரயாசப்படு. தவிர உன் விசனத்தை நீ மேற்கொள்ளத்தக்கதாக இன்னொரு ஊருக்குப் போகவேண்டும்" என்று புத்திசொன்னாள். ஆனால், போதகரோ இந்தப் பெண் அவளுக்கு புத்திமதிசொல்லி முடிக்கும்வரை காத்திருந்து, "உன் துக்கத்தை நீ மறந்து விடவேண்டாம். எல்லா ஆறுதலுக்கும் பொறுமைக்கும் காரணராகிய தேவனை நோக்கிப்பார், உனக்கு நேரிட்டிருக்கிற இந்தப் பெரிய நஷ்டத்திலிருந்து உன்னைமீட்டு, உன்னை ஆற்றித்தேற்றவும், உன் குறைவை நீக்கி நிறைவையும், உன்னோடு ஜீவியகாலமெல்லாமிருந்து உன்னை ஆதரித்துக் காத்து சகல ஆசீர்வாதங்களையுந் தருகிறவர் அவர் ஒருவரே" என்று அவளுக்குச் சொன்னார்.

மெய்யாகவே, நமக்கு நேரிடும் சஞ்சலமும், திகைப்பும், குழப்பமும், திடீரென்று கைவிடப்பட்டு தனித்த நிலைமையில் இருப்பதும் ஆகிய இக்காரியங்களெல்லாம் நமது புத்திக்கெட்டாத ஓர் பரம இரகசியமாயிருக்கிறது. ஆனால் நாம் நீடியபொறுமையோடு தேவன் நம்மை வைக்கச் சித்தமான நிலைமையில் அவருடைய ஆறுதலுக்காகக் காத்திருப்போமானால், நிச்சயமாகவே, இரவின் இருளை நீக்க சூரிய ஒளி தோன்றுவதுபோல, நமது இருதயத்திலுண்டாகும் ஆறாத்துயரமென்னும் காரிருளை நீக்க உன்னத ஒளி திடீரென்று நமதிருதயத்தில் உதயமாகிறது.

ஜனங்கள் துக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று விபரீதமாகப் பேசுகிறார்கள். அது தப்பு. ஒருவரும் அப்படிச் செய்யப்போகிறதுமில்லை. நாம் செய்யவேண்டிய ஒரேயொருவழி என்னவென்றால், இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தைப் பொறுமையோடு கடந்ததுபோல, நாமும் நமக்கெதிராக இருக்கும் துன்பக்கடலை பொறுமையோடும், தாழ்மையோடும், விசுவாசத்தோடும், மெதுவாகக் கடக்கவேண்டும். அப்போது தான் துன்ப அலைகள் இரண்டாகப்பிரிந்து, நமது வலபக்கத்திலும் இடபக்கத்திலும் பெரிய மதில்களாக குவிந்து நிற்கும். நாம் செல்லச்செல்ல துன்பக்கடல் ஒடுங்கிக்கொண்டே போகும். நாமும் பத்திரமாக அக்கரையிலுள்ள பரம ஆறுதலென்னும் கானானுக்குப்போய்ச் சேருவோம்.



நமது ஜீவியத்தில் நமக்கு இருக்கிற பெரியபோராட்டமும், வியாதிகளோடும் சரீர நரம்புத் தளர்ச்சியினாலுண்டாகும் பலவீனங்களோடும் நாம்பண்ணும் யுத்தமும் நமது ஜீவியத்தில் ஏதோ ஒரு புதிய மாறுதலையும், உலகத்திற்கு அதின் மூலமாய் ஒரு படிப்பினையையும் உண்டாக்குகிறது.

லூயில் ஸ்டீவன்சன் என்பவர் தன் ஜீவியத்தில் ஈளைநோவோடு (Tuberculosis) தனக்கிருந்த போராட்டத்தைபற்றி "நான் நோவாயிருந்தாலுஞ்சரி, அல்லது சுகமாயிருந்தாலுஞ்சரி, மனமகிழ்ச்சியுள்ளவனாக என் நாட்களைக் கடத்தினேன்" என்று பொழிப்பாகச் சொல்லியிருக்கிறார். தன் சரீர நரம்புகளோடு தனக்கிருந்த போராட்டத்தைப் பற்றி ஒரு கவிஞர் தன் தாயாருக்கு எழுதினகாகிதத்தில் "எனக்கு அதிக துன்பத்தையுண்டாக்கி என்னோடு போராடும் அந்த நரம்புகளில்லாவிட்டால், மற்றவர்களுக்கு இன்பத்தைக் கொடுக்கக்கூடிய கவிகளை நான் எழுதமுடியாது" என்று காட்டியிருந்தார்.

துக்கத்தை மறப்பதின் மூலமாக நமக்கு ஆறுதல் கிடைக்கும் என்று நினைக்கிறது மிகவும் தப்பான காரியம். அப்படிப்பட்ட எண்ணம், துக்கத்தின் மூலமாக கிடைக்கிற ஆசீர்வாதத்தையும், ஒருவருடைய ஜீவியத்தை சீர்தூக்கிப் பார்ப்பதையும், பொறுமையையும், தன்னைப்போல அதேவிதமான துன்பத்திலிருக்கிறவர்களுக்காக காட்டவேண்டிய அனுதாபத்தையும் தடுத்துவிடுகிறது மாத்திரமல்ல, துன்பத்தைத் தனக்கு அனுப்பினவரும், அந்தத் துன்பத்தை இன்பமாக மாற்றக்கூடியவருமான தெய்வத்தை மறந்து, அவரில் சார்ந்திராதபடி செய்துவிடுகிறது. ஆனால், அவ்விதமான துன்பதுக்கங்கள் தனக்கு மாத்திரந்தான் நேரிட்டிருக்கிறதென்றும், அவைகளை தன் இருதயத்திலிருந்து நீக்கி ஆறுதல்படுத்தக்கூடிய ஒருவருமே இல்லை என்று முடிவுபண்ணி, தன் மனதில் அவைகளை நினைத்து, நினைத்து, நொந்துபோகிறதும் ஒருபெரிய தப்பு. சிலர் மரித்துப் போனவர்களை அடிக்கடி நினைத்து அழுவதும், துக்கப்படுவதும், அவர்களுக்காகக் காட்டக்கூடிய ஒரு பெரிய கனம் என்று நினைக்கிறார்கள். ஆனால், உண்மையாகவே அவர்கள் உயிரோடிருக்கிறவர்களுடைய ஜீவனுக்கு துன்பத்தையும், மரித்துப்போனவர்களுக்கு அவமரியாதையையும் உண்டுபண்ணுகிறார்கள். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாரச்சுமையை பொறுமையோடு சுமந்து, அவைகளை திடமனதோடு சகித்து, நம்மோடிருக்கிற மற்றவர்களை ஆறுதல்படுத்த முயல்வதே மிகவும் உத்தமம். நாம் அப்படிச்செய்யும்போது, தேவன் தாமே நமக்கு வேண்டிய உதவியைத்

தந்து, ஆறுதலையும், தேறுதலையும், இன்னும் நமக்கு அவசியமான சகல ஆசீர்வாதங்களையும் சம்பூரணமாக அளிக்கிறார்.

இன்னும் சிலர் மரித்துப்போனவர்களுக்காகச் செய்கிற சில காரியங்களைப் பற்றி கொஞ்சம்சொல்ல விரும்புகிறேன். நாகரீகமான படித்த குடும்பங்களிலுள்ள சில ஸ்திரீகளும் இந்த அறிவீனத்தில் மூழ்கி மிகவும் அருவருப்பான காரியங்களைச்செய்கிறார்கள். தங்களைவிட்டு மரித்துப்போனவர்களின் மரண நாள் ஒவ்வொரு வருஷத்திலும் வந்தவுடன் அவர்கள் மரித்தவர்களின் உடுப்புகளையும், நகைகளையும், இன்னும் அவர்களுக்குச் சொந்தமான சகல வஸ்துக்களையும் உள் வீட்டில் அல்லது அவர்கள் மரித்த அறையில் வைதது சாம்பிராணி, சூடம் முதலிய தூபவர்க்கங்காட்டுகிறார்கள். சிலர் ஒவ்வொரு வாரத்திலும் அந்நாள் வந்தவுடன், மரித்தவர்களின் படத்துக்கு நேராக ஒருமேஜையின்மேல் வெற்றிலை, பாக்கு, நீண்ட மஞ்சள் முதலியவைகளை வைத்து மரித்தவர்களை நினைக்கிறார்கள்.

அவர்களுடைய எண்ணம் என்னவென்றால் மரித்துப்போனவர்களின் ஆவி அந்த வஸ்துக்களைப் பார்வையிட்டு, அவைகளை அனுபவித்துவிட்டு, அவைகளை வைத்தவர்களுக்கு அவைகளின் மூலமாக ஏதோ ஒரு பெரிய நன்மையை விட்டுப் போகிறதாக நினைத்துக்கொள்ளுகிறார்கள். இது எவ்வளவு பெரிய தப்பு. நாகரீகமான இந்தக்காலத்தில் இது நடக்கக்கூடிய ஒரு காரியமா? கிறிஸ்தவர்கள் இவ்வித தெய்வத்துக்கு விரோதமான காரியங்களைசெய்வது எவ்வளவு பெரிய அறிவீனம். மரித்துப் போனவர்களின் ஆவி மண்ணான சரீரத்தை விட்டு, மகத்துவமான பொன்னுலகத்தில் சேர்ந்து விட்டபிறகு, பாவம் நிறைந்த உலகத்தில், பாவிகள் செய்கிற சடங்காசாரங்களையும், அவர்கள் கொண்டாடும் துக்கத்தையும் பார்க்க திரும்பிவருமா? ஒருபோதும் இல்லை. இது ஆண்டவருக்கு விரோதமான ஒரு பெரிய பாவம் என்பதை அவர்கள் முழுவதுமாக மறந்து, அவர் அவர்களை ஆறுதல்படுத்தும்படி அவர் பாதத்தில் விழுந்து மன்றாடுகிறதற்குப் பதிலாக, மரித்துப்போனவர்களின் ஆவிகள் வந்து அவர்களை ஆறுதல்படுத்துமென்று இவ்வித வியர்த்தமான கொள்கையுள்ளவர்களாக, தப்பான அறிவீனக் கிரியைகளைச் செய்துவருகிறார்கள். இவைகளைச் செய்வதின் மூலமாக ஒருவேளை அவர்கள் துக்கம் மாறிப்போகுமா? இல்லை. அவர்களுடைய சரீரத்திலும், ஆத்துமாவிலும், துன்பமும், துக்கமும் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே போகிறதென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

ஒருவேளை அவர்கள் மரித்தவர்களை நினைத்து அழவாவது, துக்கப்படவாவது கூடாதா என்று கேட்கலாம். நாம் துக்கப்பட்டு அழவேண்டுமென்றுதான் தேவன் கண்ணீரை நமது கண்களில் வைத்தார். நமதருமையுள்ள இயேசு கண்ணீர்விட்டாரல்லவா? எப்போது? லாசருவின் இரண்டு சகோதரிகளும், அவனுக்காக அழுது புலம்பும்போது அவர் கண்ணீர் விட்டார். அதுவுமல்லாமல் அழுகிறவர்களுடன் அழுங்கள், சந்தோஷப்படுகிறவர்களுடன் சந்தோஷப்படுங்கள் என்று சொன்ன ஆண்டவர் அதற்கு மாறாக யாதொரு பிரமாணத்தையும் உண்டாக்கவில்லை. ஆகையால் நமக்கு நேரிடும் துக்கத்தையும், துன்பத்தையும் அசட்டைபண்ணவேண்டும்மென்பது கருத்தல்ல. எந்தச்சமயத்தில் துக்கப்படவேண்டுமோ



அந்தச்சமயத்தில் துக்கப்படவேண்டும். நமது துக்கம்மாறி எந்தச்சமயத்தில் ஆறுதலாயிருக்கவேண்டுமோ அந்தச்சமயத்தில் ஆறுதலாயிருக்கவேண்டும். நமது மிஞ்சிய துக்கத்திலும், நம்மைவிட்டுப் பிரிந்துபோனவர்களைப்பற்றி நினைப்பது மாத்திரமல்ல, நம்மை ஆற்றித்தேற்றவும், நமக்குமுன் இவ்வுலகத்தை விட்டுக் கடந்துபோன நமக்கருமையானவர்கள் காட்டிப்போன சிறந்த முன்மாதிரிகளை நாமும் பின்பற்றி நடக்கவும், எல்லாபுத்திக்கும் மேலான சமாதானத்தை நமக்கு அருளக்கூடிய நமதருமை இரட்சகர் பாதத்தில் விழுந்து கெஞ்சுவோமாக.

---

## THE PRINCE OF WALES IN THE FIELD.

## யுத்தக்களத்தில் நிற்கும் உவெல்ஸ் இளவரசன்.

---

பிரான்சுக்கு வடக்கே, யுத்தக்களத்தில் நிற்கும் உவெல்ஸ் இளவரசனைப்பற்றியும், யுத்தத்தில் மடிந்தவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும் அவர்காட்டுகிற பட்சத்தைப்பற்றியும், அதின் மூலமாக அவருக்குக் கிடைத்த கீர்த்தி பிரஸ்தாபத்தைப்பற்றியும், நேர்த்தியான சில கதைகள் சொல்லப்படுகின்றன. யுத்தத்தில் தமது சேனையோடு நின்று போர்புரிவது அவருக்கு அதிக இஷ்டமாகக் காணப்படுகிறது. நாள்முழுவதும், சில வேளைகளில் காலை 6-மணி முதல் மறுநாள் காலை 6-மணிவரையில் தமது சேனையில் செய்யவேண்டிய ஏராளமான வேலைகளிருந்தாலும், அவர் மனச்சந்தோஷமுள்ளவராக இருக்கிறார்.

அவர் செய்யும் வேலையை யாராவது வந்து செய்து, அவரை அக்கஷ்டத்திலிருந்து விடுவிக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறதேயில்லை. மற்றவர்களுக்கு எவ்வித இடையூறையும் உண்டாக்காதபடியும், தம்மை இன்னாரென்று அவர்கள் அறிந்துகொள்ளாதபடியும், தமது பட்டாளத்திலுள்ளவர்களை அவ்வளவு அன்போடும், அனுதாபத்தோடும் பாராமரித்துவருகிறார்.

அவரை அறியாத மனிதர் நடுவே போயிருக்க அதிகப் பிரியப்படுகிறார். ஒருநாள் யுத்தக்களத்திலிருந்து, காயப்பட்டவர்களைக் கொண்டுவரும் மோட்டார் வண்டியில் ஒரு காயப்பட்ட சார்ஜன்றேடுப் (Sargeant) இன்னும் மற்ற ஆறு போர்வீரரோடும் உட்கார்ந்திருக்கிறவராகக் கண்டுபிடிக்கப்பட்டார். அந்த சார்ஜன்ற் வரும்போதே, இளவரசனுக்கு ஜெர்மன்காரர் துப்பாக்கிகளை எவ்வளவு குறிப்பாக பிரயோகிக்கிறார்கள் என்பதைப்பற்றி விவரமாகச் சொல்லிக்கொண்டுவந்தான். அந்தச்சமயத்தில் செய்திகொண்டுவருகிற ஒருவன் ஓடிவந்து அவரிடத்தில் ஏதோ ஒன்று சொன்னான். உடனே அவர் எழுந்து, அந்த வண்டியிலிருந்த எல்லாருக்கும் வந்தனஞ் செய்துவிட்டுப் போய்விட்டார். ஒரு நிமிஷஞ் சென்றவுடன் பக்கத்தில் நின்ற ஒரு போர்வீரன் வந்து மோட்டார் வண்டிக்குள் எட்டிப்பார்த்தான். அப்போது அதற்குள்ளிருந்த சார்ஜன்ற் அந்த மனிதனைப் பார்த்து "அந்த கிரனேடியர் ஆள் யார்?" (Who was that Grenadier chap?) என்று கேட்டான். உவெல்ஸ் பிரபு கிரனேடியர் பட்டாளத்திலுள்ள ஒரு உத்தியோகஸ்தனாயிருந்தப்படியால் அந்தப் பட்டாளத்துக்குரிய காக்கி உடுப்பை அணிந்திருந்தார். "உனக்கேன் தெரியாது, அவர்தான் உவெல்ஸ் பிரபு" என்று பற்களைக் கடித்துக்கொண்டு அந்தப் போர்வீரன்

சொன்னான். அந்த சார்ஜன்ட் திடுக்கிட்டு, பெரிய திகிலுக்குள்ளானான், அவன் முகம் வெளுத்து வித்தியாசப்பட்டது. "என்றாலும், நான் அவரை ஐயா என்று தான் அழைத்தேன்" என்று சொன்னான். அந்த திகில் அவனுடைய இருதயத்திலிருந்து மறைய அநேகநாள் சென்றது. ஆனால், சாதாரண ஒரு சிநேகிதனைப்போல கண்ணியமற்றவிதமாயும் முறைகேடாகவும் அழைக்கப்படுவது தான் உவெல்ஸ்பிரபுவுக்கு அதிகஇஷ்டம். அவரைப்பற்றி இன்னொரு கதை சொல்லப்படுகிறது. பெல்ஜியத்திலுள்ள ஒரு பட்டணத்தில் வழியோரமாக ஒரு சத்திரமிருக்கிறது. அதை நடத்திவரும் ஸ்திரீயின் புருஷன் யுத்தத்தில் மாண்டுபோனான். அவன் ஒரு மகா பராக்கிரமசாலி. ஆனால் அவன் வசித்த அந்த கிராமத்திலுள்ளவர்களைத் தவிர மற்றவர்களுக்கு அவனைப்பற்றி யாதொன்றுமே தெரியாதிருந்தது. பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள், அந்த மனிதனுடைய வீரச்செயல்களுக்காகவும், அவன் விதவையைக் காப்பாற்றும்படியாகவும், அந்தச் சிறிய சத்திரத்தை பரிபாலித்து வருகிறார்கள்.

ஒருநாள் உவெல்ஸ் பிரபு அதைப்பற்றிக் கேள்விப்பட்டு, தம்மோடு வந்த மற்ற இரண்டு உத்தியோகஸ்தர்களோடும் பாதையோரமாய் நின்று அந்தச் சத்திரத்திற்குள் பிரவேசித்து, காப்பி கேட்டார். அந்தச் சத்திரக்காரியின் ஆறு வயதுள்ள அழகிய பிள்ளை, கூச்சத்தோடு அவர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்து, அவருடைய உடுப்பை மிகவும் கவனத்தோடும், ஆச்சரியத்தோடும் பார்த்துக்கொண்டு நின்றது. இளவரசன் புன்சிரிப்போடு அந்தப் பெண்ணை கைகைகாட்டிக் கூப்பிட்டு, ஒரு பிராங்க் (Franc = $9\frac{1}{2}$ As.) எடுத்துக்கொடுக்கும்படியாகத் தமது பாக்கெட்டில் கையைப் போட்டுப் பார்த்தார். அப்படியே அந்தக் காசை எடுத்து அவள் கையில் கொடுத்தார். அவளோ சமீபமாய்வந்து, அதைவாங்கி, திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, அதைத் திரும்பவும் அவர் கையில் கொடுத்துவிட்டு, அவருடைய சட்டையில் போட்டிருந்த விருதுக்களில் (Badges) ஒன்றைச் சுட்டிக்காட்டி "அவைகளிலொன்றை ஆபரணமாக அணிந்துகொள்வது எனக்கிஷ்டம் ஐயா" என்று சொன்னாள். உடனே, இளவரசனோடு இருந்த தோழர்களில் ஒருவன் தன்னுடைய விருதுக்களிலொன்றைக்கழற்றி, அவளுக்குக்கொடுக்கப்போனான். ஆனால் உவெல்ஸ் பிரபு அவனுடையவைகளில் ஒன்றையாவது கொடுக்கவேண்டாமென்று சொல்லி, தமது விலையுயர்ந்த ஆபரணங்களிலொன்றைக் கழற்றி, அந்தச் சிறுபெண்ணின் உடுப்பில்மாட்டி, "நீ நினைத்து விரும்பிய பிரகாரம் ஒரு கோப்பைக் காப்பியின் விலை இதுதான். சந்தோஷமாய்ப் போய் உன் தாயாருக்கு இதைக்காண்பி" என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டார்.

THE WAR.

## யுத்தம்.

அமெரிக்காவிலிருந்து ஐயர்லாந்து தேசத்திற்கு மே மாசம் 7-ம் தேதி வந்த லூசிட்டானியா என்ற கப்பலை ஜெர்மன் சப்மரீன், டர்ப்பிடோ போட் மூலமாய் மோசஞ்செய்து தண்ணீருக்குள் அமிழ்த்திவிட்டது. அந்தக் கப்பலில் பிரயாணமாக வந்த மிஸ்டர் கவ்பர் (Cowper) என்ற ஒரு பத்திராதிபர்



குவீன்ஸ்டௌனில் வந்து பின்வருமாறு சொன்னார்:—"நான் பகல் 2-மணிக்கு என் சிநேகிதனோடு பேசிக்கொண்டிருக்கும்போது, 1,000 கஜ தூரத்தில் ஜெர்மன் சப்மரீனுடைய உச்சி தண்ணீருக்கு மேலாகக் கொஞ்சம் தெரிந்தது. சற்று நேரத்திற்கப்புறம் ஒரு டர்ப்பிடோ போட்டுத் தண்ணீருக்குள் வருகிற பாதையையும் கண்டேன். ஒரு நிமிஷத்திற்குள்ளாக, கப்பலின் அடிப்பாகத்திலிருந்து உடைந்த துண்டுகள் ஆகாயத்தில் எறியப்பட்டன. சற்றுநேரத்திற்கப்புறம் இன்னொரு டர்ப்பிடோ, கப்பலின் வலபக்கத்தில் மோதியடித்து, பயங்கரமானவிதமாய் வெடித்து, கப்பலை இரண்டாகப் பிளந்துவிட்டது" என்று சொன்னார். இந்தக்கப்பல் உலகத்திலுள்ள பெரிய கப்பல்களில் ஐந்தாவது. 767 அடிநீளமும், 87 அடி அகலமும், 50 அடி ஆழமுமுள்ளது. ஒரு மணிக்கு 25 மைல் தூரஞ்செல்லும். அதிலிருந்த பிரயாணிகள் 2,160 பேர். இவர்களில் ஏறக்குறைய 658 பேர்தான் இரட்சிக்கப்பட்டவர்கள். இவர்களிலும் அநேகர் கரைசேர்ந்தவுடன் மரித்துப்போனார்கள். அநேகர் ஆஸ்பத்திரிகளிலிருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து பிரயாணமாய் வந்த இரண்டு கோடீஸ்வரரும் தண்ணீரில் அமிழ்ந்துவிட்டார்கள். கப்பலை நடத்தின உத்தியோகஸ்தரில் ஒரேயொருவர்தான் இரட்சிக்கப்பட்டார். கடைசி படவில் ஏறிவந்த மிஸ்டர் கவ்பரை மூழ்கிப்போகிற நிலைமையிலிருந்த 6 வயதுள்ள ஒரு பெண்பிள்ளை தன்னை இரட்சிக்கும்படி கூவிக் கெஞ்சினாளாம். அமிழ்ந்திப்போனவர்களில் அநேகம் ஸ்திரீகளும், இரண்டாவது கிளாஸ் அறையில்மாத்திரம் ஒரு வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள் 40 பேருமிருந்தார்கள். ஐயர்லாந்துக்குச் சமீபமாய்க் கப்பல்வரும்போது இந்தப்பெரிய மோசம் நடந்தது. 21 நிமிஷத்திற்குள்ளாக இந்தப் பிரயாண்டமான கப்பல் தண்ணீருக்குள் காணாமல் மறைந்துபோனது. டர்ப்பிடோவின் மூலமாயும் கப்பலிலிருந்த அநேகர் மாண்டுபோனார்கள். இது நமது இராஜ்யத்துக்கு நேரிட்ட பெரிய நஷ்டந்தான்.

—தற்சமயம் நடக்கும் யுத்தத்தில் ஒரு மாதத்திற்கு 260,000 ஜெர்மன் போர்வீரர் மாண்டுபோகிறார்கள். அவ்வளவு லக்ஷக்கணக்கான உயிர்களைக் கொடுத்து பிரிட்டிஷ், பிரஞ்சு பட்டாளங்கள் முன்னேறிச் செல்லாதபடி தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தவிர, ஒருவிதமான விஷக்காற்றை (Asphyxiating gas) நமது பட்டாளத்தார்மேல் பிரயோகித்து அதிக நஷ்டத்தை உண்டுபண்ணுகிறார்கள். என்றாலும், பிரிட்டிஷ் சேனைக்கு அது அதிக நஷ்டத்தை உண்டுபண்ணாதபடி, கண்களில் ஒருவித கண்ணாடிகளும், மூக்கிலும் வாயிலும் ஒருவித ஈரத்துணிகளும் போட்டுக்கொண்டு, அதிக வீரமாய்ப் போர்செய்து சத்துருவை எதிர்த்துச் செல்லுகிறார்கள். நமது இந்திய சேனையைச் சேர்ந்தவர்களும் சத்துருக்களாகிய ஜெர்மன்காரரே புகழத்தக்கதாக அவ்வளவு வீரதீரமாய்ச் சண்டைசெய்து அவர்களைத் துரத்திச் செல்லுகின்றார்கள். இவர்கள் ஜெர்மன் காரரை எதிர்க்கும்படியாக முன்னேறிச் செல்லும்போது ஒரு பெரிய குண்டு இவர்கள் மத்தியில் விழுந்து 16 பேரை காயப்படுத்திக்கொன்றுவிட்டது என்றாலும், விடாமுயற்சியோடு விரைந்து சென்று சத்துருக்களிருக்கும் இடத்திற்கு 1,200 கஜ தூரத்தில் நின்று அவர்களோடு எதிர்த்துச் சண்டைசெய்தார்கள்.

இந்த இந்திய பட்டாளத்தை நடத்திக்கொண்டுபோன இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களில் ஒருவர், தன் சேனையோடு போகும்போதே நாலுதரம் வெடிக்குண்டினால் அடிபட்டார். என்றாலும் மகா தைரியத்தோடும், வீரியத்தோடும் தன் சேனையை சத்துருக்களுக்கு நேராக நடத்தி, கடையாக, ஒரு பீரங்கிக் குண்டினால் இவர் சரீரம் துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டு, யுத்தக்களத்திலே மாண்டார்.

—துருக்கருக்குச் சொந்தமான டார்டனல்ஸ் என்னப்பட்ட இடத்துக்கு கப்பலில்சென்ற ஆஸ்டிரேலியா பட்டாளத்தார் கரைக்குச் சற்றுதூரமாய் வரும்போதே, படவுகளைவிட்டு சமுத்திரத்தில் குதித்து நீந்திக்கொண்டே கரையேறி, துருக்கர் விடாமல் சுட்டுக்கொண்டேயிருந்தபோதிலும், தைரியமாய் ஒரு பாறையின்மேல் தாவியேறி ஒரு பகலும் இரவும் போஜனமில்லாமல் தொங்கிக்கொண்டேயிருந்தார்கள். அவர்களுக்கு உணவு, தண்ணீர், வெடிமருந்துபோகிறதற்கு வழியில்லை. ஒடுங்கிய கணவாய்களின் மூலமாகவும், சமுத்திரக்கரை மார்க்கமாகவும், அவர்கள் சண்டைசெய்கிற மலைக்குக் கொண்டுபோகப்பட்டன. இங்கிலீஷ், பிரஞ்சுப் பட்டாளத்தார் துருக்கருடைய கோட்டைகளை உடைத்துத் தகர்த்துப் போட்டார்கள். ஆயிரக்கணக்கான துருக்கர் யுத்தத்தில் மாண்டும், சிறையாக்கப்பட்டும் போனார்கள். துருக்கர் சேனையை நடத்துகிற அநேக ஜெர்மன் உத்தியோகஸ்தர்களை துருக்கரே விரோதத்தினால் கொன்றுபோட்டார்கள். அவர்களுக்குள்ளேயே கலகம் நேரிட்டிருக்கிறது. ஜெர்மன்காரரை நம்பி இங்கிலீஷ்காரரோடு சற்றும் யோசனையில்லாமல், முன்னந்தலை [illegible] முடுக்காகச் சண்டைசெய்யும் துடுக்கான துலுக்கர், ஐரோப்பாவில் தங்களுக்குக் கிடைத்திருக்கும் கையகலகாணியையும் இழந்து வையகத்தில் அலைந்து திரிய மெய்யாகவே காலம் வந்துவிட்டது.

---

HE IS SINGING YOUR SONG.

## அவன் உன் பாட்டைப் பாடிக்கொண்டிருக்கிறான்.

கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டுமென்ற எண்ணத்தோடு ஒரு மனிதன் ஒரு ஓட்டலில்போய்க் குடியிருந்தான். ஒருநாள் அவன் அந்த ஓட்டலிலுள்ள ஆபீசில் உட்கார்ந்துகொண்டு, ஒரு கீதத்தின் இராகத்தை உங்கார சத்தத்தோடு (Hum) பாடிக்கொண்டிருந்தான். அவனுக்குச் சமீபமாய் இன்னுஞ் சில மனிதரும் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவராவது அந்த மனிதனுடைய இராகத்தைக் கவனிக்கவில்லை. சற்றுநேரஞ் சென்றவுடன் இன்னொரு மனிதன் ஆபீசுக்குள் பிரவேசித்து பாடிக்கொண்டிருந்த அந்த மனிதனண்டை கொஞ்சந் தாமதித்து நின்று, அங்கேயிருந்த கடிகாரத்தில் மணிபார்த்துவிட்டு, அவன் பாடிய கீதத்தையே இவனும் பாடிக்கொண்டு, மிக வேகமாய் வெளியே போய்விட்டான். அந்தக்ஷணமே, அங்கே உட்கார்ந்திருந்தவர்களில் இரண்டுபேர் முதலில் அந்த இராகத்தைத் தொடங்கின மனிதனைப் பார்த்து "என்ன ஐயா! வெளியேபோன அந்த மனிதன் சும்மாபோகாமல், உம்முடைய பாட்டைப் பாடிக்கொண்டே போகிறான்" என்று சொன்னார்கள்.

ஆம் மெய்யாகவே, நாம் எல்லாரும் யாரோ ஒருவருக்காகத்தான் பாட்டுகளைத் தொடங்குகிறோம், நமது வீட்டில்,



நமது பள்ளிக்கூடத்தில், கோவிலில், ஆபீசில், இன்னும் மற்ற இஷ்டர்கள் ஒன்றாகக் கூடியிருக்குங் கூட்டத்தில், நமது இராகத்தைப் பிடித்து, நமது பாட்டை மற்ற ஜனங்கள் பாடிக்கொண்டே போகிறார்கள். அது துக்கத்தைக் கொடுக்கக்கூடிய பாட்டாயிருந்தாலுஞ் சரி, மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு இன்பக்கீதமாயிருந்தாலுஞ்சரியே, அவர்கள் எப்படியாவது நினையாதபிரகாரம் பாடிக்கொண்டு போவதை நாம் அடிக்கடி கேட்டும், பார்த்துமிருக்கிறோம். நாம் யோசித்துப் பார்க்கும்போது, இது மகா முக்கியமான ஒரு விஷயமாயிருக்கிறது. மற்றவர்களைத் தூண்டக்கூடிய காணப்படாத ஏதோ ஒரு சக்தி நம்மிலிருந்து புறப்படுகிறது. நாம் மற்றவர்களைப் பாடும்படி தூண்டுகிறதற்கு முன்னே, நம்மிலிருந்து, தற்செயலாக அந்த சக்தி புறப்படுகிறது. மற்றவர்கள் சில காரியங்களைச் செய்யும்படியான அவ்வித சிந்தனைகளை அவர்களிருதயங்களில் உண்டுபண்ணுகிறோம். சில வேளைகளில் சித்தியுமடைகிறோம். ஆனால் மற்றவர்கள் பெருமூச்சுவிடவோ அல்லது பாடவோ அவர்களைத் தூண்டத்தக்கதான ஒருவித ஆச்சரியமான சக்தியை அவர்கள்மேல் பிரயோகிக்கிறோம் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. நினையாதபிரகாரம் நாம் பாடுகிற பாடல்கள், நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதைத் திட்டமாய்க் காட்டுகிறது.

---

NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

ஹார்ட்வார் என்னுமிடத்தில் சமீபகாலத்தில் துக்கமான ஒரு சம்பவம் நேரிட்டது. அங்கே நடந்த ஒரு சந்தையில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள். அதற்குச் சமீபத்தில் இருந்த ஒரு குளத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் குளிக்கும்படி ஆசைகொண்டு, இறக்கமான ஒரு பாதைவழியாக அதற்குச் சென்றார்கள். பின்னாகப்போனவர்கள் முன்னாகச் சென்றவர்களை நெருக்கித் தள்ளினார்கள். போலீஸ்காரர் அந்தப் பெரிய கூட்டத்தில் ஒன்றுஞ் செய்யக் கூடாதவர்களாகப் போய்விட்டார்கள். முன்னாகப் போனவர்களில் இரண்டு கிழவிகள் வழுவி விழுந்தார்கள். திரும்பவும் எழுந்திருக்க அவர்களால் கூடாமற்போயிற்று. அநேக ஜனங்கள் அவர்கள்மேல் இடறி விழுந்தார்கள். ஆகவே மொத்தம் 23 பேர் மற்றவர்களால் மிதிபட்டு நசுங்கிப்போய்விட்டார்கள். இந்த விபத்து இரண்டொரு நிமிஷத்திற்குள் நடந்தது. முதலில் விழுந்த இரண்டு கிழவிகளையும் தூக்கி எடுக்காவிட்டாலும், மற்றவர்கள் அவர்கள்மேல் இடறிவிழாமல் தடுத்திருக்கவேண்டியது. ஆனால் அப்படிச் செய்யாமல் ஆடுமாடுகளைப்போல திரண்டு போனதினால் அத்தனைபேர் சாகவேண்டியிருந்தது.

—இப்போது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தில் தலையிட்டிருக்கும் சிறு ஜாதியார் சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவேண்டுமென்று ஆவலாயிருக்கிறார்கள். துருக்கர் தங்கள் இஷ்டப்படி இங்கிலீஷ்காரர் செய்கிறதாயிருந்தால் சமாதானத்துக்கு வருகிறதாக பயமுறுத்துகிறார்கள். இதிலும் விசேஷமாக ஆஸ்திரியா ஹங்கேரியின் குடிகளுக்குள் ஒரு பெரிய குழப்பம் நடக்கிறது. நந்திச்சமாசாரத்தின்படி யுத்தகளத்திலல்ல, குடிகளின் இருதயங்களில் பெரிய குழப்பம் நேரிட்டிருக்கிறது. அந்த தேசத்து ஜனங்கள் இப்போதே சமாதா

ணம் பண்ணவேண்டுமென்று கூவுகிறார்கள்.

சிலர் சமாதானத்தை விரும்பினாலும், அது சீக்கிரத்தில் நடக்கக்கூடிய ஒரு காரியமாகத் தோன்றவில்லை. இங்கிலாந்து தேசத்திலும், உலகத்தின் மற்ற பாகத்திலும், நடுநிலையிலுள்ள மற்ற தேசங்களின் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை சர் எட்வட் கிரே என்பவர் பின்வருமாறுரைக்கிறார். இங்கிலாந்து யுத்தத்திற்குப் போயிருக்கிற முக்கியமான காரணங்கள் இரண்டுண்டு. இந்த இரண்டு காரணங்களுக்கும் அவர்கள் எதிர்பார்த்திருக்கிறபடி சரியான திருப்தி கிடையாத பட்சத்தில் சமாதானமே பண்ணமுடியாதென்று சொல்லுகிறார்.

முதலாவது, பெல்ஜியம் தேசத்திற்குரிய சுயாதீனத்தையும், அவர்கள் தேச அரசாட்சியையும், ஜெர்மன்காரர் அவர்களிடத்திலிருந்து எடுத்துக்கொண்ட சகல நாடுகளையும் திரும்பவும் அவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் தேசத்தில் அவர்கள் செய்த சகல அக்கிரமச்செயல்களுக்கும், மிலேச்சத்தனமான கொலைகளுக்கும், இன்னும் பெல்ஜியம் தேசத்தில் ஜெர்மன்காரர் உண்டாக்கிய சகல நஷ்டங்களுக்கும் ஈடுபண்ணினாலொழிய சமாதானங்கிடையாது.

இரண்டாவது, ஐரோப்பாவிலுள்ள எந்த ஜாதியாராயிருந்தாலுஞ்சரி, பெரிய இராஜ்யமானாலுஞ்சரி, சிறிய இராஜ்யமானாலுஞ்சரி, அவர்கள் முழு சுயாதீனத்தோடு ஜீவிக்கவேண்டும் என்பதுதான். இந்த இரண்டு காரியங்களும், மற்ற ஜாதிகளுக்கெல்லாம் தாங்களே பெரியவர்களென்று பெருமைகொண்டுபோயிருக்கும் ஜெர்மன்காரருடைய கொள்கைக்கு முற்றிலும் விரோதானவைகள். ஐரோப்பாவிலுள்ள சகல ஜாதியார்மேலும், தங்கள் அதிகாரத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்றெண்ணங்கொண்டு, மிருகங்களைப்போல மிலேச்சத்தனமான காரியங்களை நடப்பித்த சீர்கெட்ட ஜெர்மன்காரர் சுயாதீனத்திற்கடுத்த சமாதானத்தையல்ல, தங்கள் மிருகச்செயல்களுக்கும், மிலேச்சத்தனத்திற்கும் துணையான சுய சமாதானத்தையே நாடிக்கொண்டிருக்கிறார்கள்.

—தற்சமயத்தில், ஆண்களெல்லாரும் யுத்தக்களத்தில் நிற்க பெண்களெல்லாரும் அவர்கள் செய்யவேண்டிய வேலைகளை செய்துவருகிறார்கள். ட்ராம்வண்டி (Tram car), ரெயில்வண்டி, மோட்டார் வண்டி முதலியவைகளை பெண்களே ஓட்டுகிறார்கள். வியாபாரச்சாலைகளிலும், இன்னும் மற்ற அநேக ஸ்தலங்களிலும் ஆண்களைப் பார்க்கிறது மிகவும் அரிது. பிரைமரி பாடசாலைகளில் உபாத்தியாயர்களாயிருந்த சகல ஆண்களும் ஜெர்மன் பட்டாளத்தில் போய்ச் சேரும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இங்கிலாந்தில் பார்லிமென்டில் தங்களுக்கு இடங்கொடுக்கப்படவேண்டுமென்று கலகஞ்செய்த ஸ்திரீகளைப்பற்றி (Suffragettes) உங்களுக்குத் தெரியும். அவர்களெல்லாரும் நமது இங்கிலீஷ் பட்டாளத்தில் சேர்ந்து யுத்தக்களத்தில் நிற்கிறார்களென்றும், அவர்கள் பயங்கரமான சத்துருக்களாகையால் அவர்களைப்பற்றி தங்கள் போர்வீரர் அதிக எச்சரிக்கையுள்ளவர்களாகவுமிருக்கவேண்டும் என்றும் ஜெர்மன்காரர் பொய்யான ஒரு விளம்பரஞ் செய்திருக்கிறார்கள்.

—கடைசியாக இத்தாலியா தேசத்தாரும் நமது இங்கிலீஷ் சேனையோடு சேர்ந்து ஆஸ்ட்ரியரோடும் ஜெர்மன்காரரோடும் யுத்தஞ்செய்யப் புறப்பட்டுவிட்டார்கள். ஆஸ்ட்ரியரை எதிர்த்துத்தாக்கி, இரண்டு மூன்று கோட்டைகளையுந் தகர்த்து அவர்களைத் துரத்திக்கொண்டே அவர்கள் தேசத்தில் முக்கிய பட்டணங்களிலொன்றாகிய ட்ரென்ற் (Trent) பட்டணத்தைப் பிடிக்கும்படி செல்லுகிறார்கள். ஆஸ்ட்ரியர் பின்னிட்டு ஓட்டம் பிடித்துவிட்டார்கள்.

193

Vol. XXIX. Registered No. M. 209 No. 1

JULY, 1915

# மாதர் மித்திரி

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

14-7-15

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின்பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை | 3 |
| இழக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டது | 4 |
| ட்சை டிங் கான் சரித்திரம் | 6 |
| பாலினாலுண்டாகும் கைத்தொழில் பிரயோஜனம் | 8 |
| ஆங்கிலேய இராஜாங்கம், ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி என்னும் இராஜ்யங்களோடு சண்டையிட நேரிட்டதென்ன? | 10 |
| வெட்டுக்கிளிகள் | 13 |
| ஒன்பதைப்பற்றிய வியப்பான காரியங்கள் | 14 |
| சிறுவர்க்கான பக்கம் | 15 |


# மாதர் மித்திரி.


புத். ௨௯. ௧௯௧௫ ௵ - ஜூலை ௴. இல. ௧.


ALL CLASSES INVITED.

இராகம், தோடி. ரூபகதாளம்.

### பல்லவி.

வாரும், வாரும்;—என தடி—வந்து சேரும்.

### அனுபல்லவி.

ஆரானாலும், துர்ப் பாவியன் ஆயினும்,
அச்சம் இல்லாமலே இக்ஷண மேவியே,— வாரும்

### சரணங்கள்.

1. பாரம் சுமந்து தவிப்பவரே,—கன—பாடுகள் நிறைந்திருப்பவரே,
ஆறுதல, தேறுதல் அளிக்கிறேன், என்று
அன்புடன் சொல்ல யான், பின்னும் தடை ஏது?— வாரும்

2. தாகம் மிகுந்தவரே, வாரும்;—பதில்—தாவும் பணம் இன்றி வாரும்;
தாகம் தீர்த்துக்கொள்ளும் தடை இல்லாமலே
சந்தோடமே பெற இந்தத் தருணமே.— வாரும்

3. தீவிதிராட்ச ரசமும் கொளும்,-மிக-திருத்திசெய்யும் அமுதும் கொளும்;
தாவீதின் நிச்சயக்கிருபை யாவையும்
சந்தத உடன் படிக்கையே செய்வோம்.— வாரும்

4. ஜெபதபத்தொடு சேர வாரும்,—வெகு—திட நம்பிக்கையோடேகிவாரும்;
உவமை ஏதும் இலாத தயாள நல்
உருக்க மேவிய கிறிஸ்துவசு நான்.— வாரும்

LOST AND FOUND.

## இழக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இயேசுகிறிஸ்து இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே உலகத்தில் வந்தார்.

அதினுடைய அர்த்தம் என்ன? அவர் மனுஷரை இரட்சிக்க வந்தார். மனுஷர் தங்கள் வழிகளை இழந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பக்கூடாதவர்களாயிருந்தார்கள் என்று சொல்லுகிறதைவிட அவர்கள் இழக்கப்பட்டார்கள் என்று சொல்லுவது சரியா? ஆம், ஆவிக்குரிய விஷயத்தில் மனுஷர் இழந்துபோகப்படலாம். இதைப்பற்றி ஒருவர் சொல்லுகிறதைச் சற்றுக் கவனியுங்கள்.

இழந்துபோகப்படுவது என்றால் என்ன? மனுஷர் கேடான ஜீவியஞ்செய்கிறார்கள் என்பது அதின் அர்த்தம் இல்லை. அவர்கள் யாதொரு நோக்கமுமற்றவர்களாக பிரயோஜனமற்ற ஜீவியஞ்செய்வார்களானால் அதே போதுமல்லவா? ஒரு மனுஷன் அல்லது ஸ்திரீ தான் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கத்தைவிட்டு தவறி நடந்தால் அதுதான் இழந்துபோகப்படுவது. வழங்கப்படாத ஒரு நாணயம் இழந்துபோகப்படவேண்டியதுதானே; ஏனென்றால் அது பிரமாணத்தில் குறைந்து, தேய்ந்துபோகுமானால் அதை யாரும் விலைமதிக்கமாட்டார்கள்.

இழந்துபோகப்படுவது என்று சொல்லும்போது ஏதோ ஒரு விலைமதிப்பைக் காட்டுகிறது. நீ பாதையில் நடந்துபோகும்போது ஒரு கூழாங்கல்லைக் கண்டால் உன் சிநேகிதனுக்கு அது இழந்துபோகப்பட்ட கல்லென்று சொல்லமாட்டாய். ஆனால் ஒரு பணத்தை அல்லது தங்கக் கடிகாரத்தை அல்லது தங்கக் காப்பைக் காண்பாயானால் அதை யாரோ இழந்துவிட்டார்கள் என்று சொல்லுவாயல்லவா? 'இழந்துபோகப்பட்டது' என்ற வார்த்தையானது ஏதோ ஒரு விலைமதிப்பைக் காட்டுகிறது. மனுஷன் எங்கேயிருந்தாலுஞ்சரி, அவன் தேவனுடைய பார்வையில் விலைமதிக்கக்கூடாத ஒரு பொருளாகவிருக்கிறான்; ஏனென்றால் அப்படிப்பட்ட பொருளைத்தான் இயேசுக்கிறிஸ்து இரட்சிக்கும்படி வந்தார்.

இன்னும் பார்ப்போமானால், 'இழந்துபோகப்பட்டது' என்ற வார்த்தை உரித்தைக்காட்டுகிறது. யாரோ ஒருவர் அந்தப் பணத்தை இழந்துவிட்டார், அந்தக் கடிகாரத்தை இழந்துவிட்டார் என்றும், அந்த ஸ்திரீ காப்பை இழந்துவிட்டாள் என்றும் பேசிக்கொள்ளுகிறோம். இழந்துபோன ஒரு பொருளை மற்றவர்களுடைய கைகளில் நீ பார்ப்பாயானால் அந்தப் பொருள் என்னுடையது என்று நீ சொல்லுவாய். உன் பொருள் உன் சுதந்தரத்தைவிட்டு எவ்விதமாகவோ வெளியேறிவிட்டாலும், இன்னும் அந்தப்பொருள் உனக்குச் சொந்தந்தான். ஒரு தாயையும் அவள் மகனையும் எடுத்துக்கொள். அவன் தன் தாயைவிட்டு இங்கிலாந்துக்குப் போகிறான்; அங்கேயிருக்கும்போதும் அவன் அந்த ஸ்திரீயின் மகன்தான், அவன் வியாதிப்பட்டு மரித்துப்போனாலும் அவளுடைய மகன்தான். அதுபோலவே மனுஷன் எங்கேயிருந்தாலுஞ்சரி, அவன் தேவனுக்குச் சொந்தமானவனே. அவன் தேவனுடைய சொத்தாயிருக்கிறான். அவன் இழந்துபோகப்பட்ட பொருளாகவிருந்தாலும், அவனுக்குச் சொந்தக்காரர் தேவன்தான். பாதகனும், கைவிடப்பட்டவனும் தேவனுடைய பொருள்தான். அவன் இழந்துபோகப்பட்டாலும் தேவனுக்குச் சொந்தமானவன் என்பது நிச்சயமே.



இப்போது கண்டுபிடிக்கப்பட்டது என்ற இரண்டாவது வார்த்தைக்கு வருகிறேன்: இது மனுஷ ஜீவியத்தைப்பற்றிச் சொல்லுகிற வேதத்தில் மாத்திரம் காணப்படுகிற ஒரு வார்த்தை. கெட்டுப்போன மனுஷ தன்மையைத் திருப்பக்கூடுமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் எந்த தத்துவசாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறதாக எனக்குத் தெரியவில்லை.

ஒருவன் வேண்டுமென்ற மனதோடாவது அல்லது மற்றவர்களுடைய குற்றங்குறைவுகளாலாவது இழந்துபோகப்பட்டாலுஞ்சரியே, அவனைத் திருப்பிச் சேர்ப்படுத்துவது கூடியகாரியந்தான். சுவிசேஷமும், சுவிசேஷத்தின் துவக்கமும் அதுதான். ஒவ்வொரு மனிதனும், ஸ்திரீயும் இரட்சிக்கப்படுவது நிச்சயம். நமது இரட்சகர் ஒருவரையாவது இரட்சிப்பது கூடாதகாரியமாச்சே என்று நம்பிக்கையின்றி துயரப்படுகிறதுமில்லை, துயரப்பட்டதுமில்லை. அவருடைய பார்வையில் கூடாதகாரியமொன்றுமில்லை. எவ்வித காரணத்தாலும் ஒருவன் இழக்கப்பட்டாலும் அவன் இரட்சிக்கப்படுவது நிச்சயமே.

ஆனால், ஒருவன் இழக்கப்பட்டு இரட்சிக்கப்படாமலே போவதுமுண்டு. எப்படியாவது மனிதன் இரட்சிக்கப்படுவான் என்று நிச்சயப்படுத்திக்கொண்டு உன்னிருதயத்தைக் கடினப்படுத்திக்கொள்ளாதே. ஒருவேளை இரட்சிக்கப்படுவான், ஒருவேளை இரட்சிக்கப்படாமலும் போவான். உண்மையையும், பரிசுத்தத்தையும் அவமதித்து அற்பமாயெண்ணுகிறவர்கள் இதை உணர்ந்தறிந்துகொள்ளவும். சொந்தக்காரனால் ஒருபோதும் கண்டுபிடிக்கப்படாத இழந்துபோகப்பட்ட அநேக நாணயங்களுமுண்டு. பெற்றோரால் கண்டுபிடிக்கப்படாத இழந்துபோகப்பட்ட அநேக பிள்ளைகளுமுண்டு. மனிதர் கடைசியாக இழக்கப்பட்டால், தேவனுக்கு யாதொரு பிரயோஜனமுமற்றவர்களாய்ப் போய்விடுவார்கள் என்ற வேத வசனத்தை என்னிருதயத்திலிருந்து எடுத்துப்போட முடியாது. ஆனாலும், எப்படியாவது அவர்கள் இரட்சிக்கப்படலாம். இதுதான் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய நம்பிக்கை. ஒருதரம் இழக்கப்பட்டபிறகு, மறுபடியும் களைப்பும் கஷ்டமுமான அந்தப் பாதைவழியே போவது மனதுக்கு கசப்பையுண்டாக்குமென்பதை நாம் அறிந்து, மற்றவர்களையும் அறியும்படி செய்வோமாக.

பாவத்தைச்செய்து இரட்சிக்கப்படவேண்டுமானால் துன்பத்தின் மூலமாகத்தான் தேவனிடத்தில் போகவேண்டும். நமது பாவத்திற்காக மன்னிப்புப்பெற்றுக்கொண்டாலும், பாவத்திற்கு கிடைக்கவேண்டிய தண்டனை அப்படியே இருக்கிறதென்பதை நாம் மறந்துபோகாமலிருப்போமாக. புண் ஆறிப்போகிறது என்றாலும், தழும்பு எப்போதும் மறையாமலிருக்கிறதல்லவா? தாவீது இராஜன் பெரிய பாவத்தைச் செய்தான். அவன் செய்த பாவத்துக்காக உண்மையான மனஸ்தாபப்பட்டான். ஆனால் தேவன் சொன்னதென்ன? "நீ உரியாவை பட்டயத்தால் கொன்றாய், ஆகையால் உன் வீட்டை விட்டு பட்டயம் ஒருபோதும் விலகுவதில்லை. உன் பாவத்தை உன்னைவிட்டு நீக்கிவிட்டேன்; ஆனால் சத்துருக்

கள் தேவாரமத்தைத் தூஷிக்கிறதற்கு நீ இடங்கொடுத்தபடியால் எப்படியும் உனக்குப் பிறந்த பிள்ளை சாகவே சாக வேண்டும்" என்று சொன்னார். தேவனுடைய ஆலயமாகிய நமதிருதயங்களை நாம் ஏன் பன்றியின் குடியிருப்பாக்கிக் கொள்ளவேண்டும்? தேவனுக்கென்று படைக்கப்பட்ட இருதயத்தை நாம் ஏன் கெட்ட ஆசாபாசங்களுக்கு உறைவிடமாக்கிக்கொள்ளவேண்டும்? நாம் ஏன் நீங்கக்கூடாத துக்கத்திற்குள்ளாக வேண்டும்? நாம் கர்த்தருக்கென்று நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து அவர் காட்டும் வழியில் விலகாமல் நடப்போமானால், நாம் இழந்துபோகப்படமாட்டோம். நம்மைத் தேடிவந்த நமது இரட்சகர் நம்மைப் பத்திரமாய் அவருடைய செட்டைகளின் நிழலில் நித்தம் நடத்துவார்.

## THE STORY OF TSAI TING KAN.
## ட்சை டிங் கான் சரித்திரம்.

---

1873-ம் அமெரிக்காவிற்குப் படிக்கும்படியாகப்போன அநேக சீன மாணாக்கரோடு ட்சை டிங் கான் என்ற இந்தச் சீனப்பையனும் அனுப்பப்பட்டான். இங்கே ஒன்பது வருஷம் இருந்து உயர்தரப் பாடசாலையில் முதன்மையாகத் தேறினான். அமெரிக்காவிலிருந்து சீனாவுக்குத் திரும்பிவந்தவுடனே மாலுமிகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையில் உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார். ஜப்பானோடு யுத்தஞ் செய்யும்போது டார்ப்பிடோ போட்டின் தளகர்த்தனாக கீர்த்திபெற்றார். ஒரு சமயத்தில் ஜப்பானோடு சண்டை செய்யும்போது அதைரியப்பட்டுத் தன் டார்ப்பிடோ போட்டைக் கரைக்கு நேராகக்கொண்டு ஓடிவிட்டார். கரையோரமாய் சேர்ந்தவுடன் தன் உதவி வேலைக்காரரோடு தண்ணீரில் குதித்துத் தப்புவித்துக் கொண்டார். அவரோடு தண்ணீரில் குதித்த மற்றவர்கள் எல்லாரும் மாண்டுபோனார்கள். ஆனால் இவர் அதிக அபாயமான நிலையிலிருக்கிறதைக் கண்ட ஒரு ஜப்பான் போர்வீரன் இவரை இரட்சித்து, சிறைச்சாலையில் கைதியாகப் போட்டுவிட்டான்.

ஒருநாள் சிறைச்சாலையிலுள்ள கைதிகளைப் பார்க்கும்படியாக ஒரு பாதிரியார் அங்கே போனார். அப்போது அந்தச் சீனமனிதன் "உம்மோடு கைகொடுக்கட்டும். நான் என்னை எறக்குறைய ஒரு அமெரிக்கனாகப் பாவித்துக்கொண்டிருக்கிறேன். நான் மத்திய மாகாணங்களில் (United States) ஒன்பது வருஷமிருந்தபடியால் அந்தத் தேசத்திலிருந்து வருகிற எல்லாரையும் என் முக்கியமான சிநேகிதராக எண்ணுகிறேன்" என்று அந்தப் பாதிரியார் ஆச்சரியப்படத்தக்க விதமாய் அவ்வளவு நேர்த்தியான இங்கிலீஷில் சொன்னாராம். அமெரிக்காவிலிருந்தபோது அவர் கோவில்களில் நடந்த ஆராதனைகளுக்குப்போவதிலும், வேதபுஸ்தகங்களையும் இன்னும் மற்ற சன்மார்க்கப் புஸ்தகங்களையும் வாங்கி கிறிஸ்த மதத்தைப்பற்றி பூரண ஆராய்ச்சி செய்வதிலும், அதிக உற்சாகமுள்ளவராயிருந்தார். அதின் பலன் என்னவென்றால், அவர் உத்தம கிறிஸ்தவனானார்.

யுத்தம் ஒழிந்து, கைதிகளை ஒருவருக்கொருவர் மாற்றவேண்டிய காலம் வந்தபோது போர்க்கப்பற்கூட்டத் தலைவனாகிய டிங் (Admiral Ting) தன் சேனையைவிட்டு மோசஞ்செய்து ஓடிப்போனபடியால், அவர் தலையை வெட்டிப்போடவேண்டுமென்று உத்தரவு பிறந்தது. இப்போது அவர் இனோசக்கா (Inosaka) என்ற விடத்திலிருந்தார். அங்கே மேலே சொல்லப்பட்ட பாதிரியாராகிய Mr. லூமிஸ் போகக்கூடாதவராகவிருந்தார். அவ்வளவு தூரமான இடம் என்றாலும் அந்தச் சீனமனிதன், தன் சிநேகிதனாகிய அந்தப் பாதிரியாரை எப்படியாவது தன்னிடம் அனுப்பவேண்டுமென்று தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணிக்கொண்டிருந்தார். இந்த விஷயம் அந்தப் பாதிரியாருக்கு எப்படியோ முன்னறிவிக்கப்பட்டபடியால், அவர் அந்த இடத்திற்குச்சென்று காரியங்களை விவரமாய் அறிந்துகொண்டு அதிகாரிகளிடஞ்சென்று ட்சை டிங்குக்காக வாதாடித் தன்னோடு அவரை அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். ட்சை சீக்கிரத்தில் பர்மோசா (Formosa) என்ற விடத்தில் கவர்ன்மெண்ட், துவிபாஷிகனாக (Interpreter) நியமகம்பெற்றார். இங்கே கிறிஸ்தவ ஆலயங்களுக்கு ஒழுங்காகப்போய், உண்மையான கிறிஸ்தவனென்று பேர் பெற்றார். மிஷன் வேலைக்கென்று தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுக்கத்தக்கதாக, அவர் எடுத்துக்கொண்ட சகல பிரயத்தனங்களிலெல்லாம் சித்தியடைந்தார்.

Mr. லூமிசுக்கு எழுதின காகிதத்தில் "நான் வேதபுஸ்தகத்தை அவ்வளவு அருமையாக நேசிக்கிறேன், நீர் கொடுத்த புஸ்தகம் எனக்கருமையானதோழனாக இருந்திருக்கிறது. உலகத்திலுள்ள எந்தப் புஸ்தகமானாலும், வேதபுஸ்தகத்தைப்போல மனுஷரை உயர்த்தக்கூடிய சக்தியுள்ளதல்ல. நமது மனதை உற்சாகப்படுத்துவதில் அளவிடக்கூடாத அவ்வளவு வல்லமை அதற்குண்டு. சில புஸ்தகங்கள் முதலில் வாசிக்கும்போது இன்பத்தைக் கொடுக்கும். இரண்டாவது தரம் வாசித்தால் அருவருப்பைக் கொடுக்கின்றன. ஆனால் வேதபுஸ்தகமோ அப்படியல்ல, திருப்பித்திருப்பி வாசிக்கவாசிக்க, புது எண்ணங்களை உண்டாக்கி மனதுக்கு உற்சாகத்தையும், இன்பத்தையுங்கொடுக்கிறது. அது எண்ணங்களின் உலகம், இன்பங்களின் உலகம், ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்கள் நிறைந்த உலகம்" என்று எழுதினாராம்.

சில வருஷங்களுக்குப் பிறகு அவர் சீனாவுக்குத் திரும்பினார். அங்கே அவர் சீர்திருத்தக் கூட்டத்தாரோடு (Reform Party) சேர்ந்திருக்கிறதாகக் கண்டுபிடிக்கப்பட்டார். ஒருதரம் அவருடைய தலையை வெட்டும்படி பார்த்தார்கள், ஆனால் அந்த மோசத்திலிருந்து தப்பிக்கொண்டார். 1903-ம் மனைவியையும், இரண்டு பிள்ளைகளையும் பிளேக் வியாதியின் மூலமாக இழந்துவிட்டார். இந்த விசனத்தினால் அவருடைய விசுவாசமும் குன்றிப்போய்விட்டது. ஒன்பது வருஷமாய் தேவனிடத்தில் அவருக்கிருந்த பக்திவைராக்கியமெல்லாம் போய்விட்டது. அவருடைய கிறிஸ்தவ சிநேகிதர்களோடிருந்த நேசத்தை ஒழித்துவிட்டார். சீனாதேசத்து பிரஜாதிபதியாகிய யூன்ஷிகைக்கு ட்சை டிங் கான் வலக்காமாயிருக்கிறதாகவும், தேச ஆளுகையை சீராக நடத்திவருவதற்கு ஆலோசனை சொல்லக்கூடிய முக்கியமான மனிதனாக எண்ணப்பட்டிருக்கிறதாகவும் 1911-ம் Mr. லூமிஸ் ஒரு பத்திரிகை மூலமாக அறிந்துகொண்டார். ஆகவே, திரும்பவும் தன் சிநேகத்தைப் புதுப்பிக்கவேண்டுமென்றும் தீர்மானம் பண்ணிக்கொண்டார்.

சிலகாலத்திற்குப் பிறகு Mr. லூமிசுக்கு ட்சை டிங் கான் எழுதின காகிதத்

தின் மூலமாக தன் ஆவிக்குரிய நிலைமையைப்பற்றி பின்வருமாறு வெளிப்படுத்தினர். "என் மனைவி பிள்ளைகளுடைய மரணம் என் விசுவாசத்தை தவிர்த்து, உமக்கு யாதொரு காகிதமும எழுதாதபடி செய்துவிட்டது. உமது அருமையான கடிதங்களை திரும்பத்திரும்ப வாசித்துப் பார்த்தேன். உமக்குக் காகிதம் எழுதும்படி என் பேனாவை நான் எடுக்கும்போதெல்லாம், என்னிருதயத்திலுண்டான போராட்டமானது, நான் தேவனை மறுதலித்துவிட்டேன் என்று ஒத்துக்கொள்ளுவதினால் உமது இருதயத்தை வருத்தப்படுத்தக்கூடாது என்று தீர்மானம்பண்ணும்படி என்னை ஏவினது. என் அருமைச் சிநேகிதனே நான் இவ்வளவு காலமாக அமைதியாயிருந்ததற்காக தயவுசெய்து மன்னிக்கவேண்டும். மதமானது ஆத்துமாவுக்கு கல்வியையும், சன்மார்க்கப் பயிற்சியையும் புகட்டுகிறது. ஒருமனுஷனுடைய நடக்கையை சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்தும் சக்தியுள்ளது. அது மனிதருக்கு உலக இன்பங்களைக்கொடுக்கிறதேயில்லை. நமது ஜீவியத்தில் நமக்கு நேரிடும் துன்பங்களை திடமனதோடு சகிக்கத்தக்கதான பலத்தைத்தருகிறது. உலகப்பிரகாரமான சந்தோஷங்களை நமக்குக் கொடுக்குமென்று எதிர்பார்க்கிறது தப்பு. அநேக வருஷங்களாக பலவித எண்ணங்களும், பொல்லாத சோதனைகளும், துன்பங்களும், என்னிருதயத்தைவிட்டு எடுபடாத இவவித குற்றவுணர்ச்சியை யுண்டாக்கிவிட்டது" என்று எழுதினாராம்.

இந்தக் காகிதத்தை Mr. லாமிசுக்கு எழுதினவுடன், கப்பற்கூட்டத் தலைவனாகிய ட்சை என்பவரிடமிருந்து Mr. லாமிசுக்கும் Mrs. லாமிசுக்கும் ஒரு அழைப்புப்பத்திரம் வந்தது. அதில் தன்னை பீக்கிங்கில் வந்து பார்க்கும்படியாக எழுதியிருந்தார். சகல பிரயாணச் செலவும் அவரே போட்டுக்கொள்ளுகிறதாக எழுதியிருந்தார். இந்தப் பாதிரியாரும் அவருடைய மனைவியும் அங்கே போனவுடன் ட்சை அதிக உண்மையும் இருதயசுத்தமுள்ளவருமாக இருந்து சீனகவர்ன்மெண்டில் நல்ல வேலைசெயது வந்ததைக் கண்டு அதிக சந்தோஷப்பட்டார்கள். எல்லாவற்றிலும் மேலாக தன்னிருதயத்திலிருந்த சகல சந்தேகங்களும் நீங்கி, கர்த்தரிடத்தில் தன் விசுவாசம் அதிகமாக உறுதிப்பட்டிருக்கிறதென்று அவர் கொடுத்த சாட்சியானது அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தது.

---

THE INDUSTRIAL USES OF MILK.

## பாலினாலுண்டாகும் கைத்தொழில் பிரயோஜனம்.

---

பாலிலிருந்து ஆடையை எடுத்தபிறகு உணவாக மாத்திரமல்ல, ஆனால் வர்த்தகத்துக்குமடுத்த மிகவும் விலையுயர்ந்த ஒருவித வஸ்து பாலிலிருக்கிறதாக நம்மில் எத்தனைபேருக்குத் தெரியும்? இந்த வஸ்து கேசீன் (Caseinin) என்றழைக்கப்படுகிறது, அதின் நிறம் மஞ்சள். அது தண்ணீரிலாவது, சாராயத்திலாவது கரையாது, ஆனால் மாவுப்பில் (Alkali) கரையக்கூடியது. அதில் மாவுப்பிருக்கிறபடியால்தான் எந்த நேரத்திலும் அது கரைந்துகொண்டே யிருக்கிறது.

பற்பல பிரயோஜனத்திற்காக கேசீன் விஷயமாக பற்பல முறைகளையும் அனுசரிக்கிறார்கள். பால்கட்டி (Cheese) செய்வதில் அது மிக்க உபயோகமுள்ளது. பங்காளத்திலும் (Bengal) இந்தியாவின் மற்ற பாகங்களிலும் செய்யப்படும் நேர்த்தியான மிட்டாய்களில் இந்த வஸ்து அதிகமாகச் சேர்க்கப்படுகிறது.

மின்சார சக்தியின் மூலமாக நீற்றப்பட்டு, அது காலாலித் (Galalith) அல்லது பால்கல் (Milkstone) என்ற கடினமான வஸ்துவாக மாறிவிடுகிறது. இந்த வஸ்து தந்தம், ஆமையோடு (Tortoise Shell) செல்லுலாய்ட (Celluloid) முதலிய வஸ்துக்களுக்குப்பதிலாக உபயோகிக்கப்படுகிறது. அது செல்லுலாய்டைப்பார்க்கிலும் மிகவும் மேன்மையான வஸ்து. ஏனென்றால், அது நெருப்புப் பற்றதக்கதல்ல (Incumbustible). ஆனால் செல்லுலாய்டோ. சில விஷயங்களில் உபயோகிக்கக்கூடாதபடி அவ்வளவு சீக்கிரத்தில் நெருப்புப்பற்றக்கூடிய சக்தியுள்ளது. இந்த காலாலித் என்ற வஸ்து ஊடுருவிப்பார்க்கத்தக்கதும், அழகான வர்ணமுமுள்ளது. பேனாப்பிடிகள், படச்சட்டங்கள், மிருதுவான சிறு பெட்டிகள் (Fancy boxes), மயிரூசிகள் (Hair pins) முதலிய சிறு அழகிய சாமான்கள் இந்த காலாலித்திலிருந்து செய்யப்படுகின்றன. ஆனால் நம்மில் எத்தனைபேர் இவ்வித நேர்த்தியான பொருள்கள் நாம் சாப்பாட்டில் உபயோகிக்கும் பாலிலிருந்து செய்யப்படுகின்றனவென்று அறிந்திருக்கிறோம்? இந்தி மிஷம்வரையில் இதை அறியாத அநேகர் நம்மிலிருக்கிறார்கள்.

பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா முதலிய தேசங்களில் கேசீன் தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு, அதின் மூலமாக நல்ல லாபம் கிடைக்கிறது. பிரான்சிலுள்ள ஒரு தொழிற்சாலையில் கேசீனிலிருந்து பிஸ்கற்றுகள் செய்கிறார்கள். இதைத்தான் சிலர் பால் பிஸ்கற்றென்று சொல்லுகிறார்கள். இந்த பிஸ்கற்றுகளுக்கு யாதொருவாசனையும், உருசியுங் கிடையாது. ஆனால் அநேக நாள்களுக்குக் கெடாமல் அவைகளை வைத்திருக்கலாம். காப்பி, சூப்போடு அவைகளைச் சேர்த்துச் சாப்பிடலாம். சரீரத்திற்கு நல்ல போஷிப்பைக்கொடுக்கின்றன.

இந்தக் காலாலித் அல்லது பால்கல்லிலிருந்து இன்னும் அநேக பொருள்கள் செய்யப்படுகின்றன. வியன்னாவிலுள்ள ஒரு தொழிற்சாலையில் சிலமரக்கறிகளின் எண்ணெய்களையும், குங்கிலியத்தையும் இந்த கேசீனோடுசேர்த்து வல்க்கனைட் (Vulcanite) என்ற வஸ்துவை யுண்டாக்கி மின்சாரக்கருவிகள், பொய்பற்கள் (False Teeth) முதலியவைகள் செய்வதில் உபயோகிக்கிறார்கள்.

துணிகள் நீரொழுகாதிருக்க (Water-proof) இந்தக்கேசீனை உபயோகிக்கிறார்கள். 40 பங்கு கேசீனும், 200 பங்கு தண்ணீரும் சேர்த்து, அதோடு கொஞ்சம் சோப்பும், சுண்ணாம்புத்தண்ணீரும் சேர்க்கப்படுகிறது. துணியை இதற்குள் அமிழ்த்தி அப்புறம் ஒரு திராவகத்தில் (Acetate of Aluminium) அப்படியே செய்து நன்றாக அலசி எடுத்தால் நீரொழுகாத பலமான அங்கியாகிவிடுகிறது.

கடிதாசிகளில் கேசின் சேர்ப்பதினால் தான் அதில் தண்ணீர் ஊறாமலிருக்கிறது. நேர்த்தியான சீட்டிகள் செய்வதில் அதைச் சேர்ப்பதினால் அவைகள் இறுக்கமாகவும், தடிப்பாகவுமாகின்றன. கேசீன் சேர்த்துச் செய்த துணிகள் பளபளப்பாகவும் பட்டுநிறமுமுள்ளவைகளாகவு மிருக்கின்றன.

## WHY THE BRITISH EMPIRE IS AT WAR WITH GERMANY, AUSTRIA AND TURKEY

## ஆங்கிலேய இராஜாங்கம், ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி என்னும் இராஜ்யங்களோடு சண்டையிட நேரிட்டதென்ன?

ஆங்கிலேய இராஜாங்கத்தார் சமாதானப்பிரியர் என்பதும், யுத்தத்தினால் வருங்கெடுதியை அறிந்து அதை வெறுக்கிறவர்கள் என்பதும் இக்தேசத்தார் நன்றாயறிந்தவிஷயமே. அப்படியிருக்க, இப்போது இவர்களே மேலே சொல்லப்பட்ட இராஜாங்கங்களோடு சண்டைபோடவேண்டியது என்னவென்று அநேகர் அறியவிரும்புவது இயல்பு. ஆகையால் எக்காரணத்தால் இவர்கள் இப்பெரிய சண்டையில் பிரவேசிக்கலாயிற்று என்று தெளிவாய் எடுத்துரைப்பதே என் தாற்பரியம். காரியாதிகளை இங்கே விஸ்தாரமாய்க் கூறுவது சாத்தியமல்ல. ஆதலின் முக்கிய காரணங்களை மாத்திரம் பிசகில்லாமல் எடுத்துக்காட்டுகிறேன்.

1914-ம் ௵ ஜூன் ௴ 28-ம் தேதி ஆஸ்திரிய மகாபிரபுவாகிய பிரான்ஸிஸ் பார்டினாண்ட் என்னும் சீமானும் அவர் சீமாட்டியும் ஆஸ்திரிய ராஜ்யத்தின் ஒரு பாகமாகிய பாஸ்னியா நாட்டிலுள்ள ஸாராஜீவோ (Sarajevo) என்னும் பட்டணத்தில் வன்கொலைசெய்யப்பட்டார்கள். இவர் ஆஸ்திரியா இளவரசராகையால் இப்பாதகக்கொலை ஆஸ்திரிய இராஜாங்கத்தாருக்கு சொல்ல முடியாத கோபத்தை உண்டாக்கியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இக்கொலை யாருடைய துர்எண்ணத்தாலும், தூண்டுதலினாலும் நடந்திருக்குமென்று விசாரணைசெய்ததில், அது செர்பியா தேசத்தின் தலைநகராகிய பெல்கிரேட்டில் ஆலோசிக்கப்பட்டு, செர்பிய உத்தியோகஸ்தர்களே வேண்டிய கொலைக் கருவிகளைக் கொடுத்துதவினதாக கொலைபுரிந்தவர்களே ஒப்புக்கொள்வதாயும், செர்பியரே இக்கொடிய பாதகத்துக்குக் காரணமாயிருப்பதினால் கீழ்கூறிய ஆறு நிபந்தனைகளுக்கும் அவர்கள் உடன்படவேண்டுமென்று தீர்மானித்து இருப்பதாயும், ஆஸ்திரியர் ஜூலை ௴ 23-ம் தேதி செர்பிய ராஜாங்கத்துக்கு ஒரு கடிதம் அனுப்பினார்கள்.

1. செர்பியா தேசத்தில் ஆஸ்திரியாவுக்கு விரோதமாய் பரவப்படும் சகல பொய்ப்பிராதுகளையும் கண்டிப்பதாய்ச் செர்பியர் ஜூலை ௴ 26-ம் தேதி வெளியாகும் தங்கள் சர்க்கார் பத்திரிகையில் விளம்பரம்பண்ணவேண்டியது என்றும்,

2. செர்பியாவின் உத்தியோகஸ்தரும் ஆஸ்திரியாவுக்கு விரோதமாகச் சொல்லப்படும் பொய்ப்பிராதுகளைப் பரவச்செய்வதில் கலந்திருப்பதைக்குறித்து ஆஸ்திரியா மெத்த விசனமடைகிறது என்றும்,

3. இவ்வித அயோக்கிய நடபடிக்கைகளில் குற்றவாளியாய்க் காணப்படும் ஒவ்வொருவனுக்கும் கடுந்தண்டனை விதிக்கப்படவேண்டியது என்றும்,

4. இராணுவ உத்தியோகஸ்தனானாலுஞ்சரி, சர்க்கார் உத்தியோகஸ்தனானாலுஞ்சரி, இப்பொய்ப்பிராதுகளைப் பரவச்செய்கிறவர்களில் ஒருவனென்று ரூபகாரப்படுமானால் செர்பியர் அவனை உடனே உத்தியோகத்தினின்று நீக்கவேண்டியது என்றும்,

5. இவ்வித அக்கிரமங்களை அடக்குவதற்கு செர்பியா எடுத்துக்கொள்ளும் சிரமங்களில் ஆஸ்திரியா ராஜாங்கத்தாரும் தங்களோடு கலந்துகொள்ள செர்பியர் சம்மதிக்கவேண்டியது என்றும்,

6. ஜூன் ௴ 28-ந் தேதி நடந்த மேற்படி கொலைவிஷயமாய் ஆஸ்திரியருக்கு விரோதமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படும் சதியாலோசனைக்கட்சியில் சேர்ந்தவர்களைக் கண்டுபிடிக்க ஏற்படும் நியாயவிசாரணைகளில் ஆஸ்திரியா ராஜாங்கத்தாரும் கலந்துகொள்ள செர்பியர் இடங்கொடுக்கவேண்டும் என்றும் எழுதியனுப்பினார்கள்.

ஆனால் ஆஸ்திரியர் செர்பிய உத்தியோகஸ்தர்மேல் எடுத்துக்காட்டிய இவ்வளவு பிராதுகளில் ஒன்றையாகிலும் அவர்கள் ரூபகாரப்படுத்தக்கூடவில்லை.

மேற்சொல்லிய கடிதத்திற்கு உத்தரவாக ஆஸ்திரியர் கேட்டிருக்கும் அநேக காரியங்களுக்குச் செர்பியர் சம்மதிப்பதாயும், ரூபகாரமில்லாமல் செர்பியரை ஸாராஜீவோவில் நடந்த கொலையில் உடன்பட்டவர்கள் என்று குற்றப்படுத்துவது அநியாயமென்றும், அப்படி உடன்பட்டவனென்று யாரை ரூபிப்பார்களோ அவன் மேன்மகனானாலுஞ்சரி, உயர்ந்த அந்தஸ்துடையவனானாலுஞ்சரி, அவனை ஆஸ்திரியர் கையில் ஒப்புவிக்கச்சம்மதிப்பதாயும், அதோடு ஜூலை ௴ 26-ந் தேதி பிரசுரமாகும் தங்கள் சர்க்கார் பத்திரிகையில் ஆஸ்திரியாவுக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்ட பொய்யான சங்கதிகளையெல்லாம் கண்டிப்பதாயும் ஒப்புக்கொண்டு, ஜூலை ௴ 25-ந் தேதியில் ஆஸ்திரியா தலைநகரான வியன்னாவுக்கு எழுதியனுப்பினார்கள். ஆனால் ஆஸ்திரியர் கேட்கிறபிரகாரம் செர்பியர் தங்கள் நியாயவிசாரணைகளில் ஆஸ்திரியரைச் சேர்த்துக்கொள்ள சம்மதிக்கவில்லை. இதைத் தவிர தங்கள் தேச எல்லைக்காவலில்



அஜாக்கிரதையாயிருக்கும் உத்தியோகஸ்தரையும், மற்றும் ரூபகாரப்படுத்தப்படும் சகல குற்றவாளிகளான உத்தியோகஸ்தரையும் தக்க சிட்சைசெய்ய ஏற்பாடு செய்வதாயும் செர்பிய ராஜாங்கத்தார் ஆஸ்திரியாவுக்கு அறிவித்தார்கள்.

அதேதினத்தில் ஆஸ்திரியர் செர்பியருக்கு மேல்கண்ட காரியங்களை நிறைவேற்றக் கொடுத்திருந்த நாள் கெடுவைக் கொஞ்சம் அதிகப்படுத்தும்படி ருஷியர் ஆஸ்திரியாவைக் கேட்டுக்கொள்ள வியன்னா (Vienna) என்னும் ஆஸ்திரியாவின் தலைநகரிலிருந்த தங்கள் ஸ்தானாபதிக்கு அறிவித்தார்கள். ருஷியர் செர்பியர் மீது ஏன் இவ்வளவு தயவு பாராட்டினார்களென்றால் ருஷியரும் செர்பியரும் ஸ்லாவ் என்னும் பொதுஜாதியைச் சேர்ந்தவர்கள். மேலும் அதே சமயத்தில் ஆங்கிலேய புறதேசத்து மந்திரியாகிய ஸர் எட்வர்ட் கிரே என்பவர் வேறு நாலு பெரிய ராஜாங்கத்தார் ருஷியருக்கும் ஆஸ்திரியருக்கும் நடுவில் மத்தியஸ்தம்பண்ணவேண்டியதென்று கோரினார். அப்படியே ஜூலை ௴ 26-ந் தேதி ஸர் எட்வர்ட் கிரே பிரான்சு, இத்தாலியா, ஜெர்மனி முதலிய தேசங்களின் ஸ்தானாபதிகள் லண்டன் பட்டணத்தில் தம்மோடு கலந்து இக்காரியத்தைச் சரிவர தர்க்கித்து எந்த ராஜ்யமாவது இவ்விஷயத்தைப் பற்றிச் சண்டை சச்சரவுகளில் பிரவேசியாது பார்த்துக்கொள்ளவேண்டியது என்று கூறினார். இந்த அபிப்பிராயம் நல்லதென்று பிரான்சும் இத்தாலியாவும் ஒத்துக்கொண்டது. ஜெர்மனியோ ஒத்துக்கொள்ளமாட்டேன் என்று மறுத்துவிட்டது.

இதற்கடுத்த நாள் ருஷிய புறதேச மந்திரி தானே ஆஸ்திரிய ராஜாங்கத்தோடு நேரில் இக்காரியத்தை ஆலோசித்து

முடிவுசெய்ய மனமுடையவராய் இருக்கிறதாய் அறிவித்தார். அதேதினத்தில் ஜுலை ௬வ முதல் சமுத்திர யாத்திரையிலிருந்த ஜெர்மன் சக்கரவர்த்தியாகிய கெய்சரும் (Kaiser) தம் தேசத்துக்குத் திரும்பி, தலைநகரான பெர்லினுக்கு (Berlin) அடுத்துள்ள போட்ஸ்டாம் என்னும் பட்டணத்தையடைந்தார். இவ்வளவு நாள்களாய் ஜெர்மன் சக்கரவர்த்தி பெர்லின் பட்டணத்திலில்லாததால் ஜெர்மனியர் செய்த தீர்மானத்துக்கு அவர் உத்தரவாதியல்லவென்று தோன்றலாம். இவர் இவ்விதமாய் ஆஸ்திரியர் செர்பியாவின்மேல் தாக்கல் செய்த கடுமையான கட்டளைகள் அடங்கிய கடிதத்துக்குத் தம்மை உடன்பட்டவரல்லவென்று காட்டியிருக்கலாம். வாஸ்தவத்தில் இவருக்குத் தெரிவிக்காமல் ஆஸ்திரியர் செர்வியருக்கு விரோதமாய் ஒன்றுஞ்செய்யவில்லை. இவர் பிற்பாடு ஆஸ்திரியா விஷயமாக எடுத்துக்கொண்ட பிரயாசம் இதைத் தெளிவாய்க் காட்டுகிறது.

ஜுலை 28-ந் தேதி ஆஸ்திரியர் செர்வியர் கொடுத்த பதிலிலுள்ள விஷயங்களை, யோசிக்கவாவது, திரும்பக் கடிதப்போக்குவரவுக்கு இடங்கொடுக்கவாவது, மனமற்றவர்களாய் செர்பியாவின்மேல் சண்டைக்குப் போனார்கள். இதற்கடுத்த நாளாகிய ஜுலை 29-ந் தேதி செர்பியாவின்மேல் அநுதாபமுள்ள ருஷியா ஆஸ்திரிய எல்லைக்கருகிலுள்ள தங்கள் சேனைகளை ஒன்றுசேர்த்து செர்பியருக்கு உதவிசெய்ய தயார்பண்ணினது. இத்தருணத்தில் ஜெர்மனியர் முன்னேறி வந்து, அங்கிலேயர் இச்சண்டையில் சேராமலிருக்கும் பக்ஷத்தில் தாங்கள் பிரான்சு தேசத்தைப் பிடிக்க முயல்வதில்லை என்று அங்கிலேயருக்கு அறிவித்தார்கள். அதேபிரகாரம் அவர்கள் ஆபிரிக்காவிலுள்ள பிரான்சு குடியேற்ற நாடுகளையும் பிடிக்காமலிருப்பார்களா வென்று பெர்லின் பட்டணத்திலிருந்த அங்கிலேய ஸ்தானாபதியாகிய ஸர். எட்வர்ட் கோஷன் (Sir Edward Goschen) என்பவர் ஜெர்மனியரைக் கேட்க, அவர்கள் அது சொல்லக்கூடாத காரியமென்று சாதித்துவிட்டார்கள். இப்படி பிரான்சின் விஷயத்தில் அங்கிலேயர் கேட்டுக்கொண்ட விஷயத்தை ஜெர்மனி தவிர்த்துநடக்க எத்தனிப்பதினால், அங்கிலேயரும் யுத்தத்தில் கலக்கவேண்டியது வருமென்று ஸர் எட்வர்ட் கிரே இங்கிலாந்திலுள்ள ஜெர்மன் ஸ்தானாபதிக்குத் தெளிவாய்த் தெரிவித்தார். ருஷிய சக்கரவர்த்திக்கும் ஜெர்மனிய சக்கரவர்த்திக்கும் நடந்துகொண்டிருந்த தந்தி சமாச்சாரம் முழுவதும் இதை வெளியாக்குகிறது.

ஜுலை 30-ந் தேதி ஆஸ்திரிய சேனை செர்பியாவுக்கு தலைநகரான பெல்கிரேட்டைத் தாக்கி, குண்டுகளைப்போட ஆரம்பித்தது. ஆஸ்திரிய சேனை பெல்கிரேட் பட்டணத்தைத் தாக்கினது ருஷியாவுக்கு மிகவும் விசனத்தை உண்டுபண்ணினதென்று காட்ட ஜுலை 31-ந் தேதி ருஷியா தன் சேனை முழுமையும் யுத்தத்திற்கு தயாராகும்படி கட்டளையிட்டது. இச்சமயத்தில் ஆங்கிலேய புறதேச மந்திரியான ஸர் எட்வர்ட் கிரே ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும், ருஷியாவுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் கண்டிப்பாய் நடக்குமென்பதை எதிர்பார்த்து அவ்விதம் யுத்தம் ஏற்படுமாகில் விரோதியல்லாத பெல்ஜியம் நாட்டை அதன் பாட்டுக்கு விட்டுவிடுவார்களா அல்லது அதையும் சண்டைக்கு இழுப்பார்களா வென்று பிரான்சையும் ஜெர்மனியையும் கேட்டார்.



ஸர் எட்வர்ட் கிரே இப்படிக் கேட்கவேண்டியதற்குக் காரணம் என்னவெனில் இங்கிலாந்து, ஆஸ்திரியா, ருஷியா, தற்கால ஜெர்மனிராஜ்யத்தின் முக்கியபாகமாகிய ப்ரஷியா (Prussia) என்னும் இந்நான்கு ராஜாங்கத்தாரும் லண்டன் பட்டணத்தில் 1839-ல் ஒரு உடன்படிக்கை செய்திருந்தார்கள். எவ்வித யுத்தவிஷயமான காரியங்களிலும் பெல்ஜியம் ராஜ்யத்தை உட்படுத்தாதபடி அதைப் பாதுகாக்கவேண்டும் என்பதுதான் இந்த உடன்படிக்கையின் நோக்கம். இவ்வுடன்படிக்கைப்பிரகாரம் பிரான்சு தன் சேனைகள் எதிரிகளைத் தாக்கும்படி பெல்ஜியத்திற்குள் செல்லாமலும் வேறு எந்தக்காரணத்தினாலாவது பெல்ஜியத்துக்குச் சங்கடம் வருவிக்காமலுமிருப்பார்கள் என்று உடனே ஸர் எட்வர்ட் கிரேயிக்குத் தெரியப்படுத்தினது. ஜெர்மனியோ இதற்குத் தான் கொடுக்கும் பதில் தன் யுத்த உபாயங்களை வெளிப்படுத்திவிடுமென நினைத்து இப்பொழுது ஒன்றுஞ் சொல்லமுடியாதென்று மறுத்துவிட்டது.

அதேதினத்தில் ஆஸ்திரியா தான் செர்பியாவுக்கு முதல் முதல் அனுப்பின தீர்மானத்தை மறுபடியும் ஆலோசிக்க விரும்பினது என்று நினைக்கிறதற்கு சில முகாந்தரம் இருக்க, ஜெர்மனியோ இந்தச் சமாதான யோசனைக்குட்பட சிறிதும் மனதில்லாமல் ருஷியா கோபங்கொள்ளும்படி பன்னிரண்டு மணி நேரத்துக்குள் ருஷியர் நடத்திக்கொண்டிருக்கும் யுத்த முஸ்திப்புகளை நிறுத்தவேண்டுமென்று அவர்களுக்குச் செய்தியனுப்பினது. அதோடு ஜெர்மனி தனக்கும் ருஷியாவுக்கும் சண்டை நிகரும் பக்ஷத்தில் பிரான்சு என்ன செய்யப்போகிறதென்று பிரான்சைக் கேட்டது.

(இன்னும் வரும்).

## GRASSHOPPERS.

## வெட்டுக்கிளிகள்.

ஒவ்வொரு வருஷமும் நாற்றங்கால்களிலும், வயல்களிலும் வளருகிற நெல்லை ஒருவிதமான பச்சை வெட்டுக்கிளி பயிரின் எல்லாப்பருவங்களிலும் கூட்டங் கூட்டமாகத் தோன்றி இலைகளையெல்லாம் தின்று அதிக நஷ்டத்தையுண்டுபண்ணுகிறது.

இந்த வெட்டுக்கிளிகள் வயல்களைச் சுற்றிலுமுள்ள வரப்புகளில் முந்தின வருஷம் வைக்கப்பட்ட முட்டைகளிலிருந்து உற்பத்தியாகின்றன. அவைகள் குஞ்சுபொரித்த புதிதில் இறக்கைகளில்லாமல் சிறியதாயிருக்கும். ஆனால் அவைகளுக்கு வளரவளர இறக்கைகள் முளைக்கும். இவ்விதமாய் வளர்ந்த வெட்டுக்கிளிகள் நாம் வயலில் நடக்கும்போது இங்கும் அங்கும் பறப்பதைப் பார்க்கலாம். இவைகள் வயல்களில் மாத்திரமல்ல, வீடுகளில் அநேக ஸ்திரீகள் அதிகப் பிரியத்தோடு உண்டாக்கிவைத்திருக்கும் காய்கறிகளுள்ள சிறு தோட்டங்களிலும் பெரும்பாலுங் காணப்படுகின்றன. விசேஷமாய் கோபிஸ் (Cabbage) அவரை அல்லது பீன்ஸ் (Beans) முதலியவைகளுள்ள தோட்டங்களில் இந்த வெட்டுக்கிளிகள் அதிக நஷ்டத்தை உண்டுபண்ணுகின்றன. இவைகள் பெருத்த நஷ்டத்தையுண்டாக்காதபடி அநேக உபாயங்கள் செய்யலாம்.

முதலாவது, ஓர் அகன்ற பாத்திரத்தில் தண்ணீரும் மண்ணெண்ணையும் (Kerosine Oil) சேர்த்துத் தோட்டத்தின் நடுவில் வைக்கலாம் அல்லது அவ்விதமான நாலு பாத்திரங்களை தோட்டத்தின் நாலு மூலைகளிலும் வைத்தால்,

வெட்டுக்கிளிகள் பறந்து அவைகளில் விழுந்து மாண்டுபோகும்.

இரண்டாவது, வெட்டுக்கிளிகளுக்குச் சத்துருக்களான வாத்துகளை தோட்டத்திற்குள்ளேயே மேய்ந்து திரியும்படி செய்யலாம்.

மூன்றாவது, வெட்டுக்கிளிகளைப் பிடித்துத் தின்னும் பறவைகள் தோட்டத்திற்குள் தாராளமாய் பிரவேசிக்கும்படி வேண்டியவரையில் தூண்டிவிடவேண்டும். இதற்கோர் உபாயஞ் செய்யலாம். தோட்டத்தின் நடுவில் இரண்டு மூங்கிலை நிருத்தி அதன்குருக்கே இன்னொரு மூங்கிலை சேர்த்து நாட்டலாம் அல்லது தோட்டத்தைச் சுற்றிலும் பெரிய மரங்களை வளர்க்கலாம். அப்போது பக்ஷிகள் தாராளமாய் வந்து அவைகளின்மேலுட்கார்ந்து, தோட்டத்திலுள்ள செடிகளை நாசஞ்செய்யும் வெட்டுக்கிளிகளை சர்வ சங்காரஞ்செய்யும்.

நாலாவது ஓர் உபாயஞ்செய்யலாம். இந்தவெட்டுக்கிளிகளைப் பிடிக்கிறதற்கென்றே செய்யப்பட்ட துணிவலைகளின் மூலமாக அவைகளை அழிக்கலாம். இரு பக்கங்களிலும் இரண்டுபேர் வலையைப் பிடித்துக்கொண்டே தோட்டத்திற்குள் போக, வெட்டுக்கிளிகள் பறந்து இந்த வலைக்குள் நுழைந்துகொள்ளும்.

---

STRANGE THINGS OF THE NUMBER NINE

## ஒன்பதைப்பற்றிய வியப்பான காரியங்கள்.

---

எண்களிலெல்லாம் ஒன்பதைப்பற்றி ஆச்சரியப்படத்தக்க சிலகாரியங்களுண்டு. நீ ஒருதரம் அந்த எண்ணை உபயோகித்தபிறகு, நினையாத பிரகாரமாக அது அடிக்கடி உன் கண்முன்பாகவே தானாகவந்து நிற்கும். பெருக்கல் வாய்ப்பாட்டுப் பிரகாரம், நீ கடைசிவரையில் பெருக்கிக்கொண்டே போனாலும் பெருக்கி வந்த விடை ஒன்பதாகத்தான் நிற்கும். நீ எந்த எண்ணைக்கொண்டு பெருக்கினாலுஞ்சரி, அல்லது தொகைகளை மாற்றினாலுஞ்சரி, விடை ஒன்றே.

உதாரணமாக:— $9 \times 2 = 18 = 1 + 8 = 9$; $9 \times 3 = 27 = 2 + 7 = 9$; $9 \times 5 = 45 = 4 + 5 = 9$; $9 \times 9 = 81 = 8 + 1 = 9$; $9 \times 12 = 108 = 1 + 0 + 8 = 9$; $9 \times 16 = 144 = 1 + 4 + 4 = 9$ ஆனால் $9 \times 11 = 99 = 9 + 9 = 18 = 1 + 8 = 9$. உன்னால்கூடியமட்டும் எந்தத் தொகையைக்கொண்டு பெருக்கினாலுஞ்சரியே, அந்த ஒன்பதைக் காணாமலிருக்கமாட்டாய், மறந்துபோகாமலுமிருப்பாய். பதினாறு வாய்ப்பாடுமட்டுமா? இல்லை, அதற்குமேலும் போகலாம். அதற்கொரு உதாரணங்கொடுக்கிறேன்:—$9 \times 450 = 4,050$. இந்தவிடையிலுள்ள முழு எண்களைக் கூட்டினால் 9 வரும். $9 \times 940 = 8,460$, இதிலுள்ள முழு எண்களைக் கூட்டிப்பார், 18 வரும். பின்பு ஒன்றையும் எட்டையுங் கூட்டு, 9 வரும்.

உனக்குத் தெரிந்த அல்லது உன் மனதில் வந்த ஒரு தொகையை எழுதி, பின்பு அதைத் தலைகீழாக மாற்றி எழுது. பிற்பாடு அவைகளில் சிறிய தொகையை பெரிய தொகையிலிருந்து கழித்தால், அதற்குவரும விடையானது எப்போதும் ஒன்பதாக அல்லது ஒன்பதால் பெருக்கப்பட்டு வந்த ஈவாக இருக்கலாம்.

உதாரணம்:—5,071—இதைத் தலைகீழாக எழுதினால் 1,705. இந்தத் தொகையை 5,071-லிருந்து கழித்தால் 3,366 வருகிறது. இதிலுள்ள முழு எண்களையெல்லாம் இப்போது [illegible] 18 வருகிறது. நான் மேலே காட்[illegible] $1 + 8 = 9$.

ஒரு தொகையை [illegible]தரம் பெருக்கினாலுஞ்சரி, இரண்டுதரம் பெருக்கினாலுஞ்சரி, நான் மேலேகாட்டிய முறையை அனுசரித்தால் உன் சிநேகிதனாகிய ஒன்பதை எப்படியாவது காணாமல் போகமாட்டாய். உதாரணம்:—$55 \times 55 = 3,025$. இதைத் தலைகீழாக எழுது, 5,203 வருகிறது. சிறிபதொகையாகிய 3,025-ஐ, 5,203-லிருந்து கழி, 2,178 வருகிறது. இதிலுள்ள முழு எண்களைக் கூட்டு, 18 வருகிறது. இப்போது $1 + 8 = 9$.

ஒன்பதைக் கண்டுபிடிக்கும் இன்னொரு வழி சொல்லுகிறேன். நீ உன் மனதில் நினைத்த ஒரு தொகையை எழுதி, அதிலுள்ள முழு எண்களைக்கூட்டி, இப்படிக் கூட்டி வந்த தொகையை நீ முதலில் நினைத்த எண்ணிலிருந்து கழித்துப் பார்த்தால், தந்திரமான அந்த ஒன்பதைத் தவறாமல் பார்ப்பாய்.

உதாரணம்:—167 நினைத்தஎண். முழு எண்களைக்கூட்ட 14 ஆகிறது. இதை நினைத்த எண்ணிலிருந்து கழிக்கவும். $167 - 14 = 153$ இதிலுள்ள முழு எண்களைக்கூட்ட 9 வருகிறது

இப்படிச் செய்துகொண்டே போவாயானால், உனக்கே அதிக உற்சாகத்தையும், சந்தோஷத்தையும் இந்த நூதன எண்ணாகிய ஒன்பது கொடுக்கும்.

---

CHILDREN'S PAGE.

## சிறுவர்க்கான பக்கம்.

---

*CONCERNING THREE BIRDS.*

### மூன்று பட்சிகளைப்பற்றி.

நீண்ட சிறகன் (Mr. Longwing) என்ற ஒரு பட்சி பாதையின்மேலிருந்த தந்திக்கம்பியின் மேலுட்கார்ந்து தான் அசையாதபடி இருக்கத்தக்கதாக தன் நீண்ட வாலை சமநிறைக் கோலைப்போல (Balance pole) பாவித்து மேலுங்கீழுமாக ஆட்டிச் சீர்ப்படுத்திக்கொண்டிருந்தது. சற்றுநேரமானவுடன் தன் குள்ளமான கால்களையும், பாதங்களையும் முடக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்து சென்றது. அது பறக்கும்போது அதின் வால் அதை நடத்தும் சுக்கானைப்போல (Rudder) இருந்தது. கத்தி அலகு போலவிருந்த அதின் சிறகுகள் அது ஆகாயத்தில் அங்குமிங்கும் வட்டமிட்டுப் பறந்து திரியும் ஈக்களையும், இன்னும் மற்ற பிராணிகளையும் பிடித்துத் தின்னத்தக்கதாக உதவினது.

அது படுக்கைக்குப் போகிற நேரந்தவிர, ஆகாயத்தில் பறக்கும் மற்ற சமயங்களில், அதின் சிறகுகள், அதைப் போலொத்த மற்ற பட்சிகளின் சிறகுகளைப் பார்க்கிலும் அதிக நீளமாயிருந்தன. அந்தப்பட்சி எவ்வளவுதூரம் பறந்து சென்றாலும் அதின் சிறகுகள் ஒருபோதும் களைத்துப்போகவேயில்லை. அதின் கால்கள் குள்ளமாயும், பாதங்கள் சிறியவைகளாயுமிருந்தாலும், பூமியைக் கிளறித் தன் இரையைத் தேடிக்கொள்ளத்தக்கதாக, அதற்கு அவ்வளவு பிரயோஜனமுள்ளவைகளாகவிருந்தன.

சிறகில்லாதவன் (Mr. No-wing) என்ற ஒரு பட்சி நியூசிலன்ட் (New Zealand) தீவுகளிலொன்றில் உட்கார்ந்திருந்தது. அது தந்திக்கம்பியின் மேலுட்காரவுமில்லை, தன் வாலை சமநிறைக் கோலாகவாவது, அல்லது சுக்கானாகவாவது உபயோகிக்கவுமில்லை. அது தன் இரைக்காக ஆகாயத்தில் பறக்கவில்லை. ஏனென்றால் விநோதமான இந்தப் பட்சிக்கு வாலுமில்லை, சிறகுகளுமில்லை.

ஆனால் சிறகுகளிருக்கவேண்டிய இடங்களில் கூழையான மயிர்கள்மாத்திரமிருந்தன. அவைகளில்லாமலே அது நன்றாக ஜீவிக்கக்கூடும். ஏனென்றால், அதினுடைய இரை ஆகாயத்திலல்ல, பூமியின் மேலும், பூமிக்குக் கீழுமிருக்கும் நத்தைகள், புழுக்கள், மற்ற ஜெந்துக்களே. குள்ளமான கால்களுக்கும், சிறிய பாதங்களுக்கும் பதிலாக பலமான கால்களும், பெரிய பாதங்களும் அதற்கிருந்தன. அதினுடைய வாய் Mr. நீண்ட சிறகனுடையதுபோல அவ்வளவு பெரிதல்ல, ஆனால் உள்ளான் குருவியின் அலகுகள்போல நீண்டிருந்தது. அந்த அலகின் நுனியில் அதின் மூக்குத்துவாரங்களிருந்தன. அவைகளினுதவியினால் பூமியைக்கிளறி, வாசனையின் மூலமாகத் தன் இரையை இலேசாய்க் கண்டுகொள்ளும்.

Mr. சிறகில்லாதவன் அதிக ஜாக்கிறதையாயிருக்கவேண்டியிருந்தது. ஏனென்றால் ஆபத்துக்காலத்தில் அது பறந்து செல்லமுடியாது. இதற்காகவே அது காலை வெளுக்கிற நேரத்திலும், மாலை மயங்கினபிறகும் தன் இரைக்காக அலைந்து திரிந்துவிட்டு, நாள் முழுவதும் கற்பாறையின் சந்து பொந்துகளில் தன்னை ஒளித்துகொள்ளும். பிரகாசமான நேரத்தில் பந்துபோல் சுருண்டுகிடக்கும். இருண்ட காட்டுக்கு ஊடே நீ செல்வாயானால், நீ அதைப் பார்த்தவுடன் சிறிக்கத்தக்கதாக அவ்வித விநோதமான நிலையில் அது நிற்கும். அது தன் நீண்ட அலகை தரையில் முட்டுக்கொடுத்துக்கொண்டு கொண்டி நிற்கிறது போல நிற்கும். Mr. சிறகில்லாதவன் தன்னை ஒளித்துக்கொண்டிருக்கிறது ஆச்சரியமில்லை. ஏனென்றால் சில மனிதர் அதை வேட்டையாடி, அதின் தோலை உரித்து அந்[illegible]ச்சேர்ந்த மற்ற பட்சிகளு[illegible]லோடு சேர்த்து உடுப்புகளுக்[illegible]தைப்பார்கள். Mr. சிறகில்லாதவன் நமது வீடுகளிலுள்ள கோழியவ்வளவு பருமன்.

Mr. குள்ளச்சிறகன் (Mr. Short-wing) என்ற ஒரு பட்சி அமெரிக்காவிலுள்ள வயலில் உட்கார்ந்திருந்தது. அதற்குங்கூட பலமான கால்களும் பெரிய பாதங்களுமிருந்தன. ஆனால் அதற்கு பலத்த சிறகுகளிருந்தன. அதுவும் ஏதாவது அபாயம வருகிறதாகக்கண்டால் உடனே ஒளித்துக்கொள்ளும் என்றாலும் தனக்குச் சமீபமாய் மோசமிருக்கிறதாகக் கண்டாலொழிய தன் சிறகுகளை உபயோகிக்காது. அதற்கப்புறந்தான் தரையை விட்டுத் திடீரென்று எழும்பிப் பறந்துபோய் இன்னொரு இடத்தில் ஒளித்துக்கொள்ளும். அதின் நிறம் அது தன்னை எளிதில் ஒளித்துக்கொள்ளத்தக்கதாக அவ்வளவு உபயோகமாயிருந்தது. அது காட்டிற்குள் மரங்களுக்கூடே ஒளித்து அமைதியாய் நிற்கும்போது, யாரும் அதைக் கண்டு பிடித்துக்கொள்ளவே முடியாது. பழங்களையும், விதைகளையும், தானியவகைகளையும் தின்று பிழைத்து வந்தது. ஆனால் சமுசாரிகள் அதை வயல்களிலிருந்து தூரத்துகிறதேயில்லை; ஏனென்றால் அது வயல்களிலுள்ள கதிர்களை அழித்து நாசஞ்செய்யும் வெட்டுக்கிளிகளை சர்வசங்காரஞ்செய்து வந்தது. அது கோழியைப்போல நிலத்தைக்கிளறி தன் இரையைக்கண்டு பிடிக்கும். அதின் பாதங்கள் அப்படிச் செய்வதில் அதற்கு உதவியா யிருக்கத்தக்கதாக அமைக்கப்பட்டிருந்தன.

நான் மேலே சொல்லிய பெயர்கள் அவைகளுக்குரியதல்ல. அவைகளின் சரியான பெயர்கள் தெரியவில்லை.

Vol. XXIX Registered No. M. 209 No. 2

AUGUST, 1915

# மாதர் மித்திரி.

OFFICE OF THE REGISTRAR SEP 1915 MADRAS

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"

PUBLISHED BY THE

Woman's Foreign Missionary Society

Methodist Episcopal Church

U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

209

## மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின்பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

## THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for th benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

### பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... .... | 19 |
| சிட்சையினால் உண்டாகும் ஆசீர்வாதமான பலன்கள் .... .... | 20 |
| கிறிஸ்துவின் வல்லமை மனிதரை இரட்சிக்கக்கூடும் என்பதைக் காட்டும் திருஷ்டாந்தங்கள் .... .... .... .... | 22 |
| கழுகுகள் எப்படிப் பறக்கப் பழகுகின்றன .... .... .... | 24 |
| கண் வலி .... ... .... .... | 26 |
| பிரயோஜன சொற்கள் .... .... .... .... | 27 |
| சிறு ஞானோபதேசங்கள் .... .... .... .... | 29 |
| நடையை ஸ்திரப்படுத்தல் .... .... .... .... | 29 |
| பிள்ளைகளின் பக்கம் ... .... .... .... | 30 |
| சமாச்சாரக் குறிப்புகள் .... .... .... .... | 31 |


# மாதர் மித்திரி.


புத். உ௯. ௧௯௱௰௫ - ஆகஸ்டு மீ. இல. உ.


### THE DAY OF GRACE.

இராகம், ஆனந்தபைரவி. சாப்புத்தாளம்.

**பல்லவி.**

இந்நாள் ரட்சிப்புக் கேற்ற நல் நாள்,
ஏற்ற நல் நாள், ஏற்ற நல் நாள்.

**அனுபல்லவி.**

சொன்னார் கிறிஸ்துனக்குக் கிருபையைச் சொரிந்து,— இந்

**சரணங்கள்.**

1. கிறிஸ் தேசுவை உற்றுப் பாரு;—அவர்
கிருபையாய்ச் சிந்தின ரத்தத்தைச் சேரு;— இந்

2. பாவங்கள் அறச் சுத்திகரிப்பார்;—உனைப்
பரிசுத்த வஸ்திரத்தாலே அலங்கரிப்பார்;— இந்

3. நேர்மையாய்க் கிறிஸ்தின் பின்னே நில்லு,—தேவ
நீதியைப் பிடித் தவர்க்குப் பின்னாகச் செல்லு;— இந்

4. வருவார் கிறிஸ்து மக ராஜன்;—அவர்
வந்துனக்கு இன்பமது தருவார், நன் னேசன்;— இந்

5. மகிமை நிறைந்த கிரீடஞ் சூடி—நித்திய
வாழ்வை அருள்வார் உனக்கின்பங் கொண்டாடி;— இந்

6. ஏசுக்கிறிஸ்தை நீ தான் நம்பு;—அவர்
என்றென்றைக்கும் உனக் கிரட்சிப்பின் கொம்பு;— இந்

## THE BLESSED FRUITS OF CHASTENING.

## சிட்சையினால் உண்டாகும் ஆசீர்வாதமான பலன்கள்.

வேதபுஸ்தகத்தில் ஒரு சங்கீதம் உண்டு. அதற்கு மேய்ப்பனுடைய சங்கீதம் என்று பெயர். அதின்மேல் எல்லாருக்கும் இஷ்டம். அதை அனேகர் காணாது படித்து சொல்லக்கூடும். அது 23-வது சங்கீதம். உன்னிடத்தில் ஒரு வேதபுஸ்தகம் இருந்தால் அதைக் கண்டுபிடித்து வாசித்துப்பார். அதில் பின்வரும் வார்த்தைகளைப் பார்க்கலாம். "உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்." இவ்வார்த்தைகளை அந்த சங்கீதக்காரன் தமது சொந்த அனுபவத்திலிருந்து எடுத்துப் பேசினார்.

ஒரு கோல் நோவையும் துன்பத்தையும் கொடுக்குமேயன்றி, தேறுதலை கொடுக்கும் என்று யார் நினைக்கக்கூடும்? ஆனால் சங்கீதக்காரன் கர்த்தருடைய கோல் தன்னைத் தேற்றுகிறது என்று சாட்சி பகருகிறார். அது எப்படியாகும்? எப்போதாகிலும் சிட்சை தேறுதலைக் கொடுக்குமா? ஆம், அது அப்படி செய்யக்கூடும். எப்படியெனில் சிட்சிக்கப்பட்ட ஒருவனுடைய ஜீவியத்தில், அவ்வித சிட்சையினால் அனேக மாறுதல்கள் உண்டாகி, தனக்கு தேறுதல் உண்டாவதோடு, மற்றவர்களுக்கும் தேறுதலை அடிக்கடி உண்டுபண்ணக்கூடும். ஏனெனில், தன்னுடைய அனுபவத்தை மற்றவர்களுக்குச் சொல்லி அவர்களுடைய துன்பத்தில் அனுதாபத்தைக் காண்பிக்கக்கூடும்.

நான் இப்பொழுது சொன்ன சத்தியத்தை பின்வரும் கதை திருஷ்டாந்தப்படுத்திக் காட்டும்:—

மேரி என்றொரு அனாதபெண் இருந்தாள். அவள் தன் சிறியதகப்பனார் சிறியதாயார் வீட்டில் வாசஞ்செய்தாள். ஆனால் அந்தவீடு அவளுடைய மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. சிலகாலம் சென்றபிற்பாடு, நேர்மையும், சுறுசுறுப்புள்ள ஒரு வாலிபனை அவள் கலியாணஞ் செய்துகொண்டாள். அப்போ எல்லாரும் அவளை மெச்சிக்கொண்டார்கள். அவர்கள் மிகவும் நல்ல நிலைமையிலிருந்தார்கள். மேரி முன் அடைந்த துன்பத்திற்குப் பதிலாக, அவளுடைய பிற்கால நிலைமை மிக நேர்த்தியாயிருக்கும் என்று எண்ணத்தக்கதாயிருந்தது. சிலகாலத்துக்குள் அவர்களுக்கு மூன்று அழகான பிள்ளைகள் பிறந்தார்கள். மேரியுடைய ஜீவியம் இன்னம் அதிக சந்தோஷமாயிருந்தது.

ஆனால் ஐயோ! திடீரென்று அந்த ஊரில் மிகப் பயங்கரமான ஒரு விஷஜுரம் உண்டானது. மேரியுடைய மூன்று பிள்ளைகளும் அந்நோயினால் பிடிக்கப்பட்டு மரித்துப்போனார்கள். அதற்கப்புறம் மேரிக்கு வேறு துன்பங்களும் உண்டாயின. அவளுடைய புருஷன் மற்றவர்களோடு சேர்ந்து நடத்தின சில காரியங்களில் நஷ்டப்பட்டுத் தன்னுடைய சொத்துக்களை இழக்கவேண்டியதாயிற்று. அப்புறம் அவன் வியாதிப்பட்டு, ஐந்து வருஷங்களாக படுக்கையிலிருந்தான். மேரியினுடைய சிறுபிராயத்தில் அவள் பட்ட கஷ்டங்களைப் பார்த்தவர்கள், அவள் மறுபடியும் அடைந்த துன்பத்தைப்பார்த்து "இவளுடைய ஜீவியகாலமுழுவதும் இவளுக்கு துன்பந்தான்" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். அவளுடைய புருஷன் சொத்தில் மீதியானது கிராமத்துக்குப் புறம்பே



இருந்த ஒரு ஏழைக்குடிசைதான். தன் புருஷன் இறந்தபிற்பாடு மேரி அந்தக் குடிசைக்குப்போய் ஜீவித்தாள். சிலவருஷங்களாய் சரியான நித்திரை இல்லாமல், பலவிதமான துன்பங்களையும், கவலையையும் அடைந்ததால் அவள் தலைமயிர் வெளிறி, தோட்கள் குன்றிப்போயின. என்றாலும், அவள் ஏதாகிலும் ஒரு வேலைசெய்து தன் சாப்பாட்டைத் தானே நடத்திக்கொண்டாள்.

பிற்பாடு அவளுக்கும் வியாதி வந்தது. கிராமத்திலுள்ள ஜனங்கள் மேரியினுடைய இனிமையான பொறுமையுள்ள முகம், தங்களுக்குத் துன்பமுண்டான காலங்களில் எவ்வளவு தங்களை சந்தோஷப்படுத்தினதென்றும், தான் பட்ட பாடுகளினால் அவள் மற்றவர்களோடு எவ்வளவு அனுதாபத்தைக் காட்டக்கூடிய சக்தியடைந்தாள் என்றும் கண்டார்கள். அவளுடைய வியாதியினின்று அவளுக்கு பூரண சுகம் வரவில்லை. ஆனால் அவள் மற்றவர்களுக்குச் செய்யும் பணிவிடை அதிகப்பட்டது. வாலிபரும் முதியோரும் ஐசுவரியவான்களும் ஏழைகளும் ஆலோசனை கேட்கவும், ஆறுதலடையவும் அவளிடம் வந்தார்கள். வந்த ஒவ்வொருவருக்கும், தன்னுடைய அன்பும் இரக்கமுமுள்ள இருதயம் கொடுக்கக்கூடியதைக் கொடுத்தாள். கிராமத்திலுள்ள வாலிபப்பெண்கள் தங்கள் எண்ணங்களையும், ஒருவேளை மனவருத்தங்களையும் அவளிடம் தெரிவித்தார்கள். சிலருடைய சோதனைக்குள் அவர்கள் விழுந்துவிடாதபடி மேரியின் எச்சரிக்கையான வார்த்தை தடுத்தது. அயலகத்தாருக்குள் மனஸ்தாபங்கள் உண்டானால் மேரி அவர்களுக்குள் எந்தவிதமாயாவது சமாதானத்தை உண்டுபண்ணிவிடுவாள்.

ஒரு இளந்தாய் தன் குழந்தையை இழந்துவிட்டாள். அதற்கு ஒரு வாரத்திற்கப்புறம் ஒருநாள் அவள் அவ்வூர்ப் பாதிரியாரிடம் சொன்னதாவது "மேரியினிடம் நான் என் காரியங்களைச் சொன்ன பின்பு எல்லாம் எனக்கு வித்தியாசமாய்த் தோன்றுகிறது. அவள் என்னிடம் அதிகம் பேசவில்லை. ஆனால் என்னுடைய துக்கம் என்ன விதமானது என்பதை அவள் திட்டமாய் அறிந்திருந்தாள்" என்பதே.

உடனே பாதிரியார் அவளைப்பார்த்து சாந்தமாய், "செல்வி, நமது ஜீவியத்தில் உண்டாகும் கடினமான காரியங்கள் எப்போதும் நமக்கு நல்ல பாடங்களைக் கற்றுக் கொடுக்கும். கர்த்தருடைய அவ்வித நடத்துதலை நாம் சரியானபடி கவனியாமல், துக்கம், உயிர்ச்சேதம், பொருள் நஷ்டம் இவைகள் ஒரு வீட்டில் உண்டாகி, அதினால் அவ்வீடு இருக்கும் நிலைமையைக்கண்டு அதிசயிக்கிறோம். ஆனால் கர்த்தருடைய நோக்கம் நன்மைக்கென்றே இருக்கும்" என்றார்.

இதுவே கர்த்தருடைய நோக்கம். வேதபுஸ்தகத்தில் இன்னொரு இடத்தில் "என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாயெண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்" என்று சொல்லியிருக்கிறது. சிலருக்கு மட்டுக்கு மிஞ்சி துன்பங்கள் உண்டாவதை நாம் பார்த்திருக்கிறோம். நல்ல மனுஷருக்கு சில சமயம் இவ்விதம் நேரிடுவதுண்டு. அப்போ நாம் கர்த்தர் ஏன் இவர்களுக்கு இப்படிச் செய்தார் என்று எண்ணுகிறோம். தேவன் அநீதியுள்ளவரல்ல. அவர் தமது அன்பான கரத்தினால்

நம்மை சிட்சிக்கும்போது, அந்த சிட்சை நம்மை சீர்திருத்தி இன்னமும் அதிக அலங்காரமான ஸ்திரீ புருஷர்களாக்குவதோடு, மற்றவர்களையும் அதிக உறுதியுள்ளவர்களாகவும் அலங்காரமுள்ளவர்களுமாக்கத் தகுந்தவர்களாக்குகிறது.

---

## STORIES OF THE POWER OF CHRIST TO SAVE.

## கிறிஸ்துவின் வல்லமை மனிதரை இரட்சிக்கக்கூடும் என்பதைக் காட்டும் திருஷ்டாந்தங்கள்.

---

இதை வாசிக்கிற அருமையான சிநேகிதியே, ஒருவேளை நீ கிறிஸ்துவை விசுவாசியாதவளாயும், உன் பாவங்களை நீக்கி உன்னை இரட்சிக்கக்கூடிய இரட்சகராக அவரை ஏற்றுக்கொள்ள இஷ்டமில்லாதவளாயும் இருக்கலாம். ஆனால் மற்றவர்களுடைய இருதயங்களுக்கு அவர் கொடுத்திருக்கிற சமாதானத்தையும், அவர்களுடைய ஆத்துமாவுக்கு அவர் மூலமாய் உண்டாயிருக்கிற இளைப்பாறுதலையும் குறித்துச் சொல்லும்போது அதற்காகத் துக்கப்படுவாயோ? எப்படி அவர் இந்தவிதமான சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் கொடுத்திருக்கிறார் என்பதைக் காண்பிக்க சில கதைகளை நான் இங்கே சொல்லுகிறேன். இவ்வித பாக்கியம் யாருக்குக் கிடைத்ததென்றால் முன்னே அவரை விசுவாசியாதவர்களுக்கும், அந்தச் சமயம் வரையிலும் ஒருவேளை ஒருநாளும் அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்களுக்குந்தான்.

டெல்லி பட்டணத்துக்கு அருகே ஒரு துரைசானி வசிக்கிறார்கள். அவர்களுடைய வேலை அந்த மாகாணமுழுவதும் சுற்றித் திரிந்து இயேசுகிறிஸ்துவின்மூலமாய்க் கிடைக்கும் இரட்சிப்பை ஜனங்களுக்கு கூறி அறிவிப்பது. அந்த அம்மாளுடைய வாஞ்சை தன்னுடைய இருதயத்தில் உண்டாயிருக்கும் ஆச்சரியமான சமாதானத்தை மற்றவர்களும் அடையவேண்டும் என்பதே. அந்த அம்மாள் அந்த மாகாணத்தில் நடந்த சில விசேஷங்களை பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்.

ஒரு தடவை ஒரு கிராமத்துக்குப் போனேன். அந்தக் கிராமத்தில் அநேக பெரிய விருட்சங்கள் நின்றன. பச்சையும், பொன்னிறமுமான கோதுமைமணிகள் நிறைந்த வயல்கள் அறுப்புக்கு தயாராய்க் காணப்பட்டன. ஒரு மரத்தின் கீழ் போட்டிருந்த ஒரு கட்டிலின்மேல் என்னை உட்காரச்சொன்னார்கள். அங்கே நாங்கள் உட்கார்ந்து "இயேசுவையன்றி வேறோர் இரட்சகர்" என்ற பாட்டைப் பாடினோம். சில ஜனங்கள் வந்து கூடினார்கள். அப்புறம் நான் தேவன் உலகத்தை சிருஷ்டித்ததையும், ஆதித் தகப்பன் பாவத்தில் விழுந்ததையும், பாவத்தினின்று மனிதனை இரட்சிக்க இயேசு வந்ததையும் குறித்துச் சொன்னேன். எல்லாரும் அமைதலாய்க் கேட்டார்கள். அதற்கு சற்றப்பால் ஒரு கிழவன் உட்கார்ந்து கையில் ஒரு ஜெபமாலையை வைத்துக்கொண்டு, தேவனுடைய நாமத்தைச் சொல்லி, வேறொரு மந்திரக்கோலை தன் பக்கத்தில் பிடித்துக்கொண்டு, அதினால் தான் பேய்களை ஓட்டக்கூடும் என்று சொன்னான். அவனைப் பார்க்க மிகவும் பரிதாபமாயிருக்கிறது. அவன் என்னைப் பார்த்து 'நான் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்து பார்த்தேன். ஆனாலும் என் இருதயத்தில் சமாதானமே இல்லை. என்னுடைய குலதெய்வமாகிய ஜாஹர்பீருக்கு பத்து ரூபாய் செலவு



பண்ணி பலிசெலுத்தினேன். ஆனாலும் என் மனசில் தெளிவும் இளைப்பாறுதலும் உண்டாகவேயில்லை' என்றான். அப்போ நான் அவனிடம் கிறிஸ்து அவனை நேசித்து அவனுடைய பாவத்தை நிவிர்த்திசெய்ய மரித்தார் என்பதை விஸ்தரித்துச் சொன்னேன். அப்போ அவன் "கிறிஸ்து என்னை நேசிக்கிறார் என்பது கூடாத காரியம். நான் எப்பேர்ப்பட்ட கொடிய பாவி என்பது உங்களுக்குத் தெரியாது. என்னுடைய பாவங்கள் எப்படி மன்னிக்கப்படக்கூடும்?" என்று சொல்லிக்கொண்டு தன் இருகரங்களாலும் தன் முகத்தை மூடிக்கொண்டு துக்கத்தோடு தலையைக்குனிந்தான். அப்போ நான் அவனைப்பார்த்து "உங்கள் பாவங்கள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் அவைகள் பஞ்சைபோல் வெண்மையாகும்" என்கிற வாக்கியத்தைச் சொல்லி என் கையை அவன் மேல் வைத்து 'கிறிஸ்து இவ்விதமாக உனக்கு இப்பொழுது செய்யக்கூடியவர் என்று விசுவாசிக்கிறாயா?' என்று கேட்டேன். அப்போ அவன் "இயேசு கிறிஸ்துவே என்னை இப்போது இரட்சியும்" என்று சொல்லி சமாதானம் நிறைந்த முகத்தைக் காண்பித்து, ஜெபமாலையைத் தூரத்தில் எறிந்துவிட்டு 'இன்றுமுதல் நான் அவரையே பின்செல்வேன்.' என்று சொன்னான்.

அப்புறம் இன்னம் சில மைல்களுக்கு அப்பால் சென்றோம். வேறோர் கிராமம் இருந்தது. ஒரு வயது சென்ற குருடன் ஒரு குடிசையின் அருகே உட்கார்ந்து கோபமும், எரிச்சலுமான முகத்தோடு கிறிஸ்து மார்க்கத்தை சபித்துக்கொண்டு ஏகதேசம் நூறு வருஷமாகக் கும்பிட்டு வரும் விக்ரகத்தை நான் ஒருபோதும் விடவேமாட்டேன் என்றான். அந்த விக்ரகத்தை பார்த்தால் மகா பயங்கரமாயிருந்தது. அப்புறம் நாங்கள் 'உன் முழு இருதயத்தை இயேசுவுக்குத்தா' என்கிற பாட்டைப் பாடினோம். அங்கேயும் ஜனங்கள் கூடினார்கள். ஆனால் குருடனோ அசையாமல் கோபத்தோடு உட்கார்ந்திருந்தான். அப்புறம் நான் ஜனங்களோடே 'நீங்கள் யாரைச் சேவிப்பீர்களென்று இன்றே தெரிந்துகொள்ளுங்கள், இன்றைக்கே உங்களை ஒப்புக்கொடுங்கள்' என்று மன்றாடிப் பேசவே எல்லாரும் பேசாமல் அமைதலாய் நின்றார்கள். ஒரு வயது சென்ற ஸ்திரீ என்னண்டை வந்து என் பாதத்தருகே உட்கார்ந்து 'நீங்கள் சொல்லுகிறது நிஜந்தான். நம்முடைய பாவங்களை எப்படி நாம் இயேசுவுக்கு மறைக்கக்கூடும்? நாம் எல்லாரும் ஒருநாள் இறந்துபோகவேண்டியவர்கள்தான்' என்றாள். நான் அவர்களிடம் 'ஒன்றிலோ நீங்கள் நித்திய ஜீவனை, அல்லது மரணத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்' என்றேன். இப்படி நான் அந்த ஸ்திரீயினிடம் பேசுகையில் ஏதோ ஒடிந்து விழுகிறாப்போல் சத்தம் கேட்டது. அந்தக் கிழவன் ஒரு மண்வெட்டியால் விக்கிரகத்தை கீழே விழுத்தள்ளி உடைத்து கோவிலின் கற்களை நொறுக்கி "இயேசு என்னை இரட்சிக்கிறார், என்னை இரட்சிக்கிறார்" என்று மலர்ந்த முகத்தோடே சொன்னான். கர்த்தருடைய வல்லமை மாத்திரந்தான் இவ்வளவு ஆச்சரியமான மாறுதலை அத்தனை சீக்கிரம் உண்டுபண்ணியிருக்கக்கூடும்.

இன்னொரு கிராமத்தில் நான் ஜனங்களிடத்தில் இரட்சிப்பின் வழியைக்குறித்துச் சொல்லி 'நீங்கள் உலகமுழுவதும் தேடிப்பார்த்தாலும், ஒரே ஒரு வழிதான் உண்டு' என்றேன். நான் இப்படிப் பேசுகையில் என்னுடைய வண்டி சக்க

ரத்தைப் பிடித்துக்கொண்டு நின்ற ஒரு மனிதன் என்னைப் பார்த்துக்கொண்டு, இவ்வார்த்தைகளை கவனமாய்க்கேட்டு சற்று நேரத்துக்கப்பால் தனக்குள்ளே மெதுவாய் 'ஓ இயேசுவே, இயேசுவே, நீர் உண்மையுடையவர் என்று அறிவேன். நான் இதைத்தான் அநேக வருஷங்களாகத் தேடிக்கொண்டு இருந்தேன். நீர் ஒருவரே இரட்சிப்பைக் கொடுக்கக் கூடியவர்' என்று சொன்னான். அப்போ அவனுக்கு நேரே நான் திரும்பி அவனைப்பார்த்து "சகோதரனே, அவர் உன்னை இப்பொழுது இரட்சிக்கக்கூடும் என்பதை நீ விசுவாசிக்கிறாயா?" என்றேன். அப்போது அவன் 'நான் எல்லா வழிகளையும் சோதித்துப் பார்த்தேன். எனக்கு ஒருவிதத்திலும் ஆறுதல் கிடைக்கவில்லை, ஆனால் இப்பொழுதோ இயேசுவின் திவ்யநாமமே என் இருதயத்தை சமாதானத்தால் நிரப்புகிறது' என்றான். அப்புறம் நாங்கள் அந்தக் கிராமத்தை விட்டுப்போகையில், திடீரென்று அந்த மனிதன் பின்னாக வருவதைக் கண்டேன். அவன் கையிலே ஜெபமாலையைப் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு மணியையும் பிடித்து இயேசுவின் நாமத்தைச் சொல்லி ஜெபித்தான். அப்போ நான் அவனைக் கூப்பிட்டேன், அவன் ஓடி வந்தான். அவனிடம் "இந்த விதமான ஜெபமாலை கிறிஸ்துவை இருதயத்தில் உடையவர்களுக்கு அவசியமில்லை" என்று தெளிவாய்க் காண்பிக்கவே, அவன் அந்த ஜெபமாலையை என் மடியில் போட்டு 'இயேசு என் இருதயத்தில் இருக்கிறார், இது இனிமேல் எனக்கு அவசியமில்லை' என்றான்.

## HOW EAGLES LEARN TO FLY.
## கழுகுகள் எப்படிப் பறக்கப் பழகுகின்றன.

தாய்க்கழுகுகள் நிஜமாகவே தங்கள் குஞ்சுகளை தங்கள் செட்டைகளின்மேல் ஏற்றிச் சுமந்து அவைகள் பழகும் வரையிலும் பறக்கப் படிப்பிக்கின்றனவா? சில சிறுஜாதிப் பறவைகள் தங்கள் கூட்டிலிருந்து குஞ்சுகளை வெளியிலே வரும்படி அசைத்து தள்ளிவிடும். அப்போ, அவைகள் பறக்கப் பிரயாசப்பட்டு கீழே விழுந்து விடுவதுண்டு. அப்போ தாய்ப் பறவை அவைகளண்டை கீழே பறந்து போய், தங்கள் இரக்கைகளை அடித்து, பறக்க ஆரம்பிக்கிறது எவ்விதம் என்று காண்பிக்கிறப்போல் முன்னால் பறக்கின்றன; பின்னும் குஞ்சுகளண்டை ஓடி வருகின்றன; திரும்பவும் போய் அவைகளைச் சுற்றி வட்டமிட்டு, ஆகாரத்தை அவைகள் முன்னாலே பிடித்து காண்பித்து இப்படியாக அவைகளை தைரியப்படுத்தியும், கோபித்தும், மிரட்டியும் பறக்கப் பழக்குவிக்கும். காகங்களும் சிறு காகங்களின் கீழாகப் பறந்து சிறிது தூரம் அவைகளைத் தங்கள் இரக்கைகள் மேலே வைத்து பறக்க பழக்குவித்து மறுபடியும் அவைகள் தாமே பிரயாசப்படும்படி விட்டுவிடுகின்றன. ஆனால் கழுகுகளோ இதைவிட ஜாஸ்தி பிரயாசப்படும். ஸ்கோத்லாந்து தேசத்து மலை ஒன்றில் வசித்த இரண்டு கழுகுகள் தங்கள் குஞ்சுகளை எப்படிப் பழக்கினதென்றால், ஒரு மலையுச்சியில் நின்று மேலே எழும்பி முதலாவது சிறு வட்டமிட்டன. அதேவிதமாய் கழுகு குஞ்சுகளும் பிரயாசப்பட்டன. அப்போ தாய்ப்பறவைகள் குஞ்சுகளுக்கு கீழாய் வட்டமிட்டன. சற்று நேரத்தில், குஞ்சுகள்



சோர்ந்துபோயின. உடனே தாய்ப்பறவைகள் அவைகளைத் தங்கள் முதுகின் மேல் தாங்கிக்கொண்டன. அப்புறம் தாய்ப்பறவைகள் மேலே எழும்ப எழும்ப குஞ்சுகளும் பறந்து பார்த்தன. இப்படியாக அவைகளும் வரவர மேலே எழும்பிற்று. இப்படியாக இரண்டொரு நாள் பழக்குவிக்கவே அப்புறம் குஞ்சுகள் தங்கள் காரியங்களை தாங்களே பார்த்துக்கொண்டன.

அமெரிக்கா கண்டத்திலுள்ள ஓய்யமிங் நாட்டு மலைகளில் இதேவிதமாக நடக்கிறதாக ஒரு பக்ஷி சாஸ்திரி சொல்லுகிறார். குஞ்சுகள் சற்று பக்குவமடைந்தவுடன், தாய்ப்பறவைகள் அவைகளை கூட்டிலிருந்து வெளியே கட்டாயமாய்க் கொண்டு வருகின்றன. அப்போ குஞ்சுகள் கூட்டுக்கு சமீபத்திலிருக்கும் வேறொரு குன்றுக்கு சிறகடித்துப் போகவேண்டியதாகிறது. அப்புறந்தான் தாய்ப்பறவை ஆகாரம் கொண்டுவரும். இப்படியாக ஒவ்வொரு தடவையும் குஞ்சுகள் கொஞ்சம் கொஞ்சமாய் பறக்கும். ஒரு வாரத்துக்குள் எந்த செங்குத்தையும் பறந்து தாண்டும். அப்புறம் தாய்ப்பறவைகளில் ஒன்று வேறொரு சிறிய பறவையாவது அல்லது சிறு மிருகத்தையாவது வாயில் கௌவிக்கொண்டு அவைகளுக்கு முன்னாலே ஒவ்வொரு செங்குத்தை அல்லது பள்ளத்தாக்குகளை தாண்டிப் பறந்து சென்று குஞ்சுகள் தன்னைப் பின்செல்லும்படி செய்யும். அப்புறம் தாய்ப்பறவைகள் சுற்றி சுற்றிப் பறந்து குஞ்சுகள் தங்கள் சமீபத்தில் வந்து ஆகாரத்தை உட்கொள்ளும்படி செய்யும். அதற்கப்புறம் குஞ்சுகள் தாய்ப்பறவைகளோடு இன்னம் மூன்று வாரங்கள்போல் இருக்கும். பின்னால் அவைகள் தங்கள் ஆகாரத்துக்காகத் தாங்களே பிரயாசப்படும்படி விடப்படுகின்றன.

அநேக காலங்களாய் பட்சிவேட்டையாடின ஒருவன் சொல்லுகிறதாவது: 'கழுகுகள் பருவமடைந்த தங்கள் குஞ்சுகளை கூட்டினின்று கொத்தி அசைத்து வெளியே புறப்படப்பண்ணி, அவைகள் சமீபத்திலிருக்கும் குன்றின்மேல் பறந்து போகும்படி பலவந்தமாய்த் தூத்தும். இப்படியாக அடிக்கடி பண்ணவே குஞ்சுகள் அலட்டலை சகிக்கமுடியாமல் ஆகாயத்தில் பறக்கப் பிரயாசப்படும். இப்படி இளங்குஞ்சுகள் பறக்கையில் ஏதாகிலும் கஷ்டத்துக்குள் அகப்பட்டால் உடனே தாய்ப்பறவைகள் தங்கள் நகங்களால் அவைகளைப் பிடித்து தூக்கி கூட்டுக்குத் திரும்பக் கொண்டுபோகும். அதன்றி குஞ்சுகள் முதல் தடவை பறக்கையில் சோர்ந்துபோனால், தாய்ப் பறவைகள் அவைகளுக்குக் கீழே பறந்து போய் தங்கள் முதுகின்மேல் அவைகளை ஏற்றிக்கொண்டுபோம்' என்பதே.

கழுகு தன் குஞ்சுகளை நடத்தும் விதத்தைக் கவனித்த பூர்வகாலத்து மனிதரில் ஒருவர் தேவன் தமது ஊழியக்காரரைப் போதிக்கும் விதமும், தாம் அவர்களுக்கு கொடுத்திருக்கும் வல்லமையை பிரயோகிக்க அறிந்துகொள்ளும் விதமும், அவர்கள் தமக்குக் கீழ்ப்படிய பிரயாசப்படுகையில் அவர் அவர்கள்மேல் எடுத்துக்கொள்ளும் கவலையும், தாய்க்கழுகுக்கும் அதன் குஞ்சுகளுக்குமிருக்கிறதுபோலயிருக்கிறதென்று ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார். அதை வேதபுஸ்தகத்தின் 5-வது ஆகமத்தில் அதாவது உபாகமம் 32-ம் அதிகாரம், 11-ம் வசனத்தில் பார்க்கலாம்.

"கழுகு தன் கூட்டைக்கலைத்து,
தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி,
தன் செட்டைகளை விரித்து,
அவைகளை எடுத்து, அவைகளைத்

தன் சட்டைகளின்மேல்
 சுமந்துகொண்டு போகிறதுபோல
கர்த்தர் ஒருவரே
 அவர்களை வழி நடத்தினார்."

**நன்மை செய்வதிலிருந்து புறப்படும் சக்தி.** எந்த ஸ்திரீயாவது புருஷனாவது எவ்வளவு ஏழையாயிருந்தபோதிலும், அதிக சக்தியுடையவர்களாகலாம், பரிசுத்தராகலாம், நல்லவர்களாகலாம். ஆனால் முதலாவது அவர்கள் உலகத்திலுள்ள ஜனங்களை சீர்திருத்தவேண்டும், உதவிசெய்யவேண்டும், ஆறுதல் படுத்தவேண்டும்.

**ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வேலை உண்டு.** உலகத்தில் பிறக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வேலை உண்டு. வேலை எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது. வேலைக்கு வேண்டிய ஆயுதங்களும் அப்படியே. ஆனால் மனிதனுடைய மனது ஆயத்தமாயில்லை. அதுதான் தடை.

## SORE EYES.
## கண் வலி.

இந்த நோய் இந்தியாவிலே வெகு சாதாரணமாயிருக்கிறது. ஆகையால் இது எப்படி உண்டாகிறதென்றும், இது வராமல் தடுக்கக்கூடிய விதம் எப்படி என்றும், வந்தால் எப்படி சுகப்படுத்துகிறது என்றும் எல்லாரும் அறியவேண்டியது அவசியம்.

சாதாரணமாய் இது கண் உள்ளிருந்து உண்டாகிறதல்ல, மேல் தோலில் உண்டாகும் நோயே. கண் வலி உண்டானால் இருக்கும் எரிபந்தத்துக்கு காரணம் இதரப் பொருள்கள் அதனுள்ளே பிரவேசித்து, வேறொருவருடைய கண் வலியை நமக்குக் கொடுப்பதுமல்லாமல், மேல் தோலை அடிக்கடி சேதப்படுத்துவதுமுண்டு. இதரப் பொருள்கள் எவையெனில் பலவகையான பூச்சிகள், முக்கியமாய் சிறு ஈக்கள், கொசுகு முதலியவைகளாம். இவைகள் கண்ணைத் தொட்டால் அல்லது உள்ளே விழுந்துவிட்டால் பெரிய வேதனையை உண்டாக்கும். அவைகளை உடனே நீக்கிவிடாவிட்டால் நோயைக் கொண்டுவரும். இதன்றி தூசி, அழுக்கான பொடிகள், நெருப்புப் பொறிகள், சிறு உலோகப்பொடிகள் முதலியவை கண்களுக்குள் விழுந்துவிட்டால் உடனே எடுத்துவிடவேண்டும். அதில் ஒரு சிறு பொடி முதலாய் தங்கி இருக்கவிடக்கூடாது. இல்லாவிட்டால் கண்ணுக்கு எரிவையும் ஒருவேளை பார்வைக்குக் கெடுதியையும் கொண்டுவரும். ஏனென்றால், அவைகளில் நோயைப் பரப்பும் கிருமிகள் நிறைந்திருக்கும். பெலவீனமும், சுகவீனமுமுள்ள ஒரு மனுஷனுக்கு வெகு லேசாய் இந்நோய் உண்டாகும். நல்ல பெலனும் சுகமுமுள்ளவர்களுக்கு கண் நோய் தொத்துவது கஷ்டம். பெலவீனனால் நோயைப் பரப்பும் கிருமிகளை எதிர்க்கமுடியாது. அப்படிப்பட்ட பெலவீனரை வெகுசீக்கிரத்தில் பெலப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய கண்கள் எப்பொழுதும் புண்ணாகவே இருக்கும். கண்ணுக்குள் ஏதாகிலும் விழுந்துவிட்டால் அதைத் தேய்க்கக்கூடாது. கண் கீழ் இமையை உறுதியாயும் மெதுவாயும் இழுத்துப் பிடித்துக்கொண்டு, வேறொருவரைக்கொண்டாவது அல்லது கண்ணாடியினாலாவது கண் உள்ளே கிடக்கிறதென்ன என்று பார்க்கவேண்டும். அப்படிச் செய்யமுடியாவிட்டால் தூசி விழாத கண்ணை மற்ற கையினால் தேய்த்துக்கொண்டு, குற்றப்பட்ட கண்ணின் கீழ் இமையை அழுக்கிக்கொண்டிருக்கவேண்டும். நல்ல கண்ணை அவ்விதம் தேய்த்தவுடன் மற்றக்கண்ணிலிருந்து கண்ணீர் சுரந்துவரும். அப்போது கண்ணிற்குள்ளிருக்கும் தூசியோ அல்லது வேறெதுவோ வெளியே வந்துவிடும். பிற்பாடு போரூஸிக் திராவகம் (Boracic acid) ஒரு அவுன்ஸ் ஜலத்தில் பத்து துளிகள் விட்டு வைத்துக்கொண்டு கண்ணை சுத்தம்பண்ணி அதில் அடிக்கடி விடவேண்டும். அதன்றி மறுபடியும் கண்ணுக்குள் ஏதாகிலும் விழுந்துவிடாதபடியும், வெளிச்சம் அதற்குள் அடிக்காதபடியும் ஒரு கார்ட்போர்ட் துண்டைக் கொண்டாவது, நிறமான மூக்கு கண்ணாடியினாலாவது மறைத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாளிலும் மூன்று அல்லது நான்கு தடவை கண்ணைக் கழுவவேண்டும். ஆனால் எந்த வகையான போல்டீசுகளும் (Poultices) கட்டுகளும் உபயோகிக்கவேகூடாது சில சமயங்களில் இரண்டு கண்களுக்கும் சுடுதண்ணீர் ஒற்றிடம் சற்றுநேரம் கொடுத்தால் மிகுந்த பிரயோசனமுண்டாகும். ஆனாலும் அப்படிப் பண்ணுமுன்னால் நோயாளியை சிகிற்சிக்கும் டாக்டரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும்.



கண்வியாதியால் அவதிப்படும் நோயாளி, கண்களுக்கு எப்போதும் தாராளமான இளைப்பாறுதல் கொடுக்கவேண்டும். சில நாட்களுக்கு கொஞ்சம் வாசிக்கலாம் அல்லது முற்றிலும் வாசிக்காமலிருக்கவேண்டும். கண்ணில் எந்த நோய் வந்தாலும் உடனே கவனித்து சிகிற்சைசெய்தால் வெகுசீக்கிரம் சுகமாகிவிடும் அல்லது அதிக வருத்தம் செய்யாது. இல்லாவிட்டால் முழுவதும் மோசமாய்ப் போகும்.

நனறாய் ஆராய்ந்து பார்க்குமளவில் இந்தியாவிலுள்ள சிறுவர்களில் அநேகர் கண் நோயினால் கஷ்டப்படுவதற்குக் காரணம் அவர்கள் கண்கள் சுத்தமல்லாதிருப்பதும், பெற்றோர் அவர்களைச் சரியாய்ப் பேணாதிருப்பதுமே. சில இடங்களில் சிசுக்களை சற்றும் கவனியாமல் போட்டுவிடுகிறார்கள். அவர்களுடைய கண்களை ஈக்கள் மொய்க்கின்றன. காரணம் யாது? கண்களில் இருக்கும் அழுக்குதான். பரிதாபம்! இன்னும் சில நாட்களில் அக்கண்கள் புண்ணாய்ப் போகின்றன. அக்கண்களின்மேல் உட்கார்ந்திருந்த ஈக்கள் வேறொருவருடைய நோயை வெகு லேசாய் தொற்றுவைக்கக்கூடியது ஆச்சரியமல்லவே. நமது அவயவங்களில் மிகப்பத்திரமாயும் கவனமாயும் நாம் பார்த்துக்கொள்ளவேண்டியது நமது கண்களே. இல்லாவிட்டால் நாம் பார்வையை இழந்து குருடராய்ப் போவோம்.

## HELPFUL SAYINGS.
## பிரயோஜன சொற்கள்.

சிறந்த ஜீவியம்.—ஆம், நான் ஒரு நல்லபுஸ்தகத்தை நேசிக்கிறேன். ஆனால் அழகான ஒரு புஸ்தகத்தைப் பார்க்கிலும், மிகவும் சிறந்த ஒருகாரியம் உண்டு. அதுதான் அழகான அல்லது சிறந்த ஒரு ஜீவியம். ஒருபுஸ்தகம் வாசிக்கப்படாமலிருக்கலாம், ஆனால் ஒருவருடைய ஜீவியம் வாசிக்கப்படாமல் போகமாட்டாது. ஒருவேளை அது அற்பமும், அறியப்படாததுமான ஒரு ஆத்துமாவின் ஜீவியமாயிருக்கலாம். ஆனால் அது அன்பு நிறைந்ததும் உண்மையும் பரிசுத்தமுமான ஜீவியமாயிருந்தால், அதுதான் ஆச்சரியமான அழகையுடைய ஒரு

சிறந்தஜீவியம். அதின் சக்தி எப்படிப்பட்டதாயிருக்குமென்று கடவுள் ஒருவருக்குத்தான் தெரியும். "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழிக்கிசைய ஒருவனுடைய இருதயம் சுத்தமாயும் சகலவித நற்குணங்களாலும் நிறைந்திருந்தால், அவனுடைய ஜீவியத்தை அவன் முகத்தின் மூலமாய் எளிதில் வாசித்துப்பார்க்கலாம். இருதயம் அசுத்தமாயும், துக்கத்தாலும், பலவித துர்க்குணங்களாலும் நிறைந்திருந்தால் அப்போதுங்கூட முகத்தின் மூலமாக ஒருவன் ஜீவியம் வாசிக்கப்படும் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. "இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்" என்ற வேதவாக்கியத்தின்படி ஒருவன் ஜீவியம் நல்லதோ அல்லது கெட்டதோ என்று அவனுடைய வாயிலிருந்து புறப்படும் சன்மார்க்கமான அல்லது துன்மார்க்கமான வார்த்தைகளுக்குத் தக்கதாக ஒரு நிமிஷத்தில் அறிந்துகொள்ளலாம். இந்த ஜீவியம் ஒருதலைவாயில் (Vestibule).—இவ்வுலக ஜீவியம், கல்லறைக்கப்பால் நாம்பிரவேசிக்கவேண்டிய உன்னத ஜீவியத்திற்கு ஒரு தலைவாயில்மாத்திரந்தான் என்று நாம் அதிகமதிகமாகக் கற்றுக்கொள்ளவேண்டும். இந்த ஜீவியத்தில் நாம் எடுத்துக்கொள்ளும் சகல உண்மையான பிரயத்தனங்களுக்கும், நாம் செய்கிற நல்ல காரியங்களுக்கும் தக்க பலனை அடுத்த ஜீவியத்தில் அடையாமற்போக மாட்டோமென்று நம்புகிறேன். நாம் இவ்வுலகத்தில் அற்பமாய் எண்ணுகிற காரியங்கள் மறு உலகத்தில் மிகவும் விசேஷித்தவைகளாயிருக்கலாம்.

நாம் இவ்வுலகத்தில் பிரயாணிகளாயிருக்கிறோம். எப்படி ரெயில்வண்டியில் பிரயாணம்பண்ணுகிறவர்களும், கப்பலில் பிரயாணஞ்செய்கிறவர்களும், வழியில் நேரிடக்கூடிய சகல உபத்திரவங்களையும் கஷ்டங்களையும் சகித்து தாங்கள் போய் சேரவேண்டிய தேசங்கள் அடைகிறார்களோ, அப்படியே நாமும் இவ்வநித்திய உலகத்தில் நெடும் பிரயாணஞ்செய்துகொண்டே போகிறோம். கடைசியாக நாம் போய்ச்சேரவேண்டிய உலகத்திற்கு இப்பால் நிற்கவேண்டிய இடுக்கமானவாசல் ஒன்றுண்டு, அது தான் மரணவாசல். ரெயில் அல்லது கப்பலில் பிரயாணம்பண்ணுகிறவர்கள் தாங்கள் சேரவேண்டிய இடங்கள் சமீபித்தவுடனே எப்படித் தங்கள் உடைகளை மாற்றிக்கொள்ளுகிறார்களோ அதுபோல நாம் இந்த மரணவாசலண்டை வந்தவுடனே, இப்பாழுலகத்திற்குரிய உடைகளை களைந்துவிட்டு, மேலுலகத்திற்குரிய வெண்வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ள வேண்டியதவசியமே. மரணவாசல் எப்படியிருக்கும்? நீலகிரிமலைக்குப் போகிற வழியில் நாலைந்திடங்களில் ரெயில்வண்டி போகிறதற்கு சரியான பாதை கிடைக்காதபடியால், மலையைத்தொளைத்து சுரங்கத்தின் (Tunnel) வழியாக ரெயில் பாதையைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த டன்னலுக்குள்ளே பிரவேசித்தவுடனே பிரயாணிகள் தங்கள் மூக்கையும், கண்களையும் மூடிக்கொண்டு எப்போது அடுத்தபக்கம் சேருவோமென்று ஆவலாயிருப்பார்கள். ஏனென்றால், டன்னலில், எஞ்சின் புகை போகிறதற்கிடமில்லாதபடியால், ஜனங்கள் இருக்கும் வண்டிகளுக்குள் பிரவேசித்து சற்று நேரம் திக்குமுக்காடச்செய்யும். அதுபோலவே மரணவாசலும் ஒரு டன்னலாகவேயிருக்கிறது. அதற்குள் பிரவேசித்தவுடனே மனுஷன் பேச்சற்று, மூச்சற்று, மெய்மறந்து, எப்போது அடுத்த பக்கம் சேரலாமென்று, தன் கண்களையும், மூக்கையும் கெட்டியாய் மூடினவனாக தான் சேரவேண்டிய இடம் ஒரு நிமிஷத்தில் அடைகிறான்.



## LITTLE BITS OF WISDOM.
## சிறு ஞானோபதேசங்கள்.

---

நீ அடிக்கடி ஆப்பிள் (Apple) பழம் சாப்பிட்டிருக்கிறாய். அதின் விதைகள் எந்தப் பக்கமாக நோக்கியிருக்கின்றனவென்று இப்போது நீ சொல்லக்கூடுமா? அவைகள் மரத்தை நோக்கியிருக்கின்றனவா அல்லது பூவின் நுனியை நோக்கியிருக்கின்றனவா? ஒரு உபாத்தியாயர் ஒருநாள் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைப் பார்த்து, இந்தக் கேள்வியைக் கேட்டார். ஆனால் உத்தரவு சொல்லத்திறமையுள்ளவர்களாயிருக்கத்தக்கதாக, அவ்வளவு போதுமான கவனமுள்ளவர்களாயிருக்கவில்லை. அப்படிப்பட்ட சாதாரணவிஷயமாயிருந்தும், விதைகள் எந்தப் பக்கத்தை நோக்கியிருக்கின்றனவென்று சொல்லமுடியாமற்போயிற்று. உனக்குத் தெரியுமா? அடுத்த ஆப்பிளைத் தின்னும்போது, கவனமாய்ச் சோதித்தறிந்துகொள்.

சில சமயங்களில் ஒரு புட்டியிலிருந்து நாமவிலாசத்தை (Label) நீக்கவேண்டியது அவசியமாகவிருக்கிறது. இதையு மிகசுலபமாகச் செய்யலாம். இதைச் செய்யும் விதமெப்படி என்று பிரயாசப்படுப்பார். நாமவிலாசத்தைத் தண்ணீரால் நனைத்து, இரண்டொரு வினாடி (Seconds) அதை அக்கினிக்குமேல் காண்பி. அப்பொழுது நீராவியானது, அந்த நாமவிலாசத்தைச் சீக்கிரமாயூடுருவிச்சென்று அதிலிருக்கும் பிசினை இளக்குகிறது. பிறகு நீ கஷ்டமில்லாமல் புட்டியிலிருந்து அதை எடுத்துப்போடலாம்.

கொஞ்சக்காலத்திற்கு வெள்ளியைப் பத்திரப்படுத்தவேண்டுமானால் உலர்ந்த மாவில் அதைப்போட்டு மூட்டையாகக் கட்டிவை. அப்போதது கறைப்படாமலிருக்கும்.

சிறு தோட்டமுண்டாக்குகிறவர்கள் கைக்கேற்ற ஆயுதங்களைப் பிடித்து வேலை செய்ய விரும்புகிறார்கள். இவைகளில் சிலவற்றையொருவன் மிகவும் எளிதில் செய்துகொள்ளக்கூடும். பூஞ்செடிகள் வைத்திருக்கும் தொட்டிகளில் மண்ணைப் போட்டு, அதைச்சரிபண்ணி மிருதுவாக்குகிறதற்கு, கைவிரல்களை யுபயோகிக்கிறதற்குப்பதிலாக, ஒரு சிறு மரப்பெட்டியை எடுத்து, அதின் அடிப்பாகத்தில் ஆணியால் துவாரம் பண்ணி வைத்துக்கொண்டால், மண்ணைப் போட்டுத் தூளாகச் சலிக்கக்கூடிய ஒரு நேர்த்தியான சல்லடையாக அது உதவுகிறது.

---

## TO ESTABLISH CHARACTER.
## நடையை ஸ்திரப்படுத்தல்.

---

"ஆயிரந்தரம் மறுத்தல் நடத்தையின் ஒரு சிறு அணுவையும் ஸ்திரப்படுத்தவே மாட்டாது." தன்னைப்பற்றிச் சொல்லப்பட்ட அவதூறான பழிச் சொற்களை ஆக்ஷேபித்து அநியாயமென்று ரூபகாரப்படுத்துவதில் பவுல் அப்போஸ்தலன் எத்தனை மணி நேரத்தை செலவிட்டான் என்று எண்ணிப்பார். கொள்ளைநோயையுண்டாக்குகிறவனென்றும், கலகக்காரனென்றும் அழைக்கப்பட்டான். அப்படி ஜனங்களால் சொல்லப்பட்ட வார்த்தைகளை பொய்யென்று ரூபிக்க அவன் எப்போதாவது ஒரு மணி நேரத்தையாவது செலவழித்தானா? ஆம், அவனுடைய ஜீவிய காலத்தையெல்லாம் அதற்கென்றே செலவிட்டான். குற்றமற்ற சுத்த ஜீவியஞ்செய்வதினாலும், அவனைச்

சூழயிருந்த மற்றவர்களை நேசிப்பதினாலும் அவர்கள் சாட்டின பழிக்காவது, குற்றத்திற்காவது உள்ளான மனுஷனல்லவென்று, தெளிவாகத் தன்னைக் காண்பித்தான். ஒவ்வொருநாளும் தேவனோடு சம்பாஷிப்பதில் அநேகமணி நேரஞ் செலவிட்டான். இது, மற்றவர்களுடைய வார்த்தைகள் அவதூறானவைகளென்று ரூபிக்கத்தக்கதான அவ்வித உத்தம ஜீவியத்தைச் செய்யத்தக்கதாக அவனைப் பலப்படுத்தினது. நமக்கு விரோதமாய்ச் சொல்லப்படும் ஒவ்வொரு பழிச்சொல்லையும் பொய்யென்று ரூபிப்பது நமது கடமையென்று நம்மில் அநேகர் நினைக்கிறோம். இப்படிச்செய்வது மிகவும் வருத்தமான ஒருகாரிய மாத்திரமல்ல, அதற்காகப் பிரயத்தனம் எடுத்துக்கொள்ளுவது காலநஷ்டத்தையும் உண்டாக்குகிறது. ஆனால், நாம் பவுல் அப்போஸ்தலனுடைய முன்மாதிரியைப் பின்பற்றி, அவனைப்போல பரிசுத்த ஜீவியஞ்செய்வோமானால், ஜனங்கள் நம்மைப்பற்றிச் சொல்லும் பொய்யான பழிச்சொற்கள், தங்கள் முகங்களைக் காட்டாதபடி, மாயமாய் மறைந்துபோவது மாத்திரமல்ல, நமக்கும் யாதொரு தீங்கையும் ஒருபோதும் செய்யாது. நாம் அவ்வித சிறந்த ஜீவியஞ் செய்யவேண்டுமானால், பவுல் அப்போஸ்தலன் யாருடைய பலத்தைப் பெற்றுக்கொண்டானோ அவரிடத்திலிருந்து நாமும் பெற்றுக்கொள்ளவேண்டும்; ஏனென்றால் நமது சொந்தப் பலத்தின் மேலாவது, அல்லது சொந்த நற்கிரியைகளின்மேலாவது சார்ந்திருப்போமானால், பரிசுத்த ஜீவியஞ் செய்யக்கூடாதவர்களாக பயங்கரமான தவறுதல்களுக்குள்ளாவோம்.

## CHILDREN'S PAGE.

## பிள்ளைகளின் பக்கம்.

---

### *Chinchilla's Bell.*

### ஸின்ஸிலாவின் மணி.

ஒரு கிராமத்திலுள்ள பிள்ளைகளுக்கு தெருவில் நின்ற பெரிய மரங்களில் குடியிருந்த அழகான அணில்கள்மேல் அதிகப்பிரியம்.

காலையில் படுக்கையை விட்டு எழும்பினதும் அவர்கள் மரங்களிலுள்ள அவ்வணில்களுக்கு 'காலை வந்தனம்' சொல்ல ஓடிப்போவார்கள். அணில்கள் ஞானமுள்ள சிறு ஜெந்துக்களாகையால் தெருவிலுள்ள எல்லாப் பிள்ளைகள்மேலும், தங்களுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டார்களென்று நம்பிக்கையுடையவைகளாயிருந்தன. எல்லாவற்றிலும் பெரிய ஆண் அணில் ஓடிவந்து சுசீலா என்னும் பெண்ணின் தோளின்மேல் உட்காரும். அதுபோல் பெண் அணில் பிப்பின் என்னும் பையனுடைய கையின்மேல் உட்கார்ந்து விளையாடும். ஒருதடவை ஸின்ஸிலா என்னும் ஒரு பெரிய கறுப்பு பாரசீக பூனை மஞ்சள் வீட்டில் வந்து குடியிருந்தது. அது ஒருநாள் தோட்டத்தில் உலாவும்போது நடுத்தரமான அணில் ஒன்றைக்கண்டு அதைத்துரத்த ஆரம்பித்தது. அந்த ஏழை அணிலுக்கு ஒன்றும் தெரியவில்லை, ஆனாலும் பூனையால் அதைப் பிடிக்கமுடியவில்லை. ஏனென்றால் அணில்கள் சிறுஜெந்துக்களாகையால் வெகு துரிதமாய் ஓடும். வரவர அணில்களுக்கு இந்தப்பூனை தங்களைப் பிடித்து கொல்லவேண்டுமென்றுதான் இப்படி ஓட்டம் காண்பிக்கிறதென்று மனதில் தென்பட்டது. அதன்பின் அவைகள் முன்னிலும் அதிவேகமாய் ஓடும்.

சிலகாலம் செல்லவே பூனை எப்படியாகிலும் நாள்தோறும் ஒரு அணிலை பிடித்து சாப்பிட்டுவிடவேண்டும் என்று தீர்மானித்தது. இதற்காக பூச்செடிகளுக்குள் ஒளித்து நின்றுகொண்டு அணில்கள் எப்போ வரும் என்று காத்திருக்கும். ஒருநாள் பெரிய ஆண் அணில் பிராந்தாவில் வந்து விளையாட வந்தது. பூனை உடனே அதைத் துரத்தி பிடிக்க ஆரம்பித்தது. ஆனாலும் ஆச்சரியமாய்த் தப்பி ஓடிற்று. இப்படி இரண்டு மூன்று தடவை நடந்தது.

சுசீலா ஒரு நாள் பூனையின் தந்திரத்தைக் கண்டு உடனே அதை அதனுடைய வீட்டிற்கு ஓட்டிவிட்டாள். ஆனால் ஏழை அணிலோ அதிக பயத்தினால் மரத்திலிருந்து இரைதின்னமுதலாய் இறங்கி வரவில்லை.

அன்று சாயரட்சை சுசீலாவும், பிப்பினும் அத்தெருவிலிருந்த வேறு அநேக சிறுவரும் ஸின்ஸிலா பூனையின் எஜமாட்டியைப் பார்க்கப் போனார்கள். அந்த துரைசானி மிகவும் நல்லவள். பிள்ளைகளுடைய வார்த்தைகளை மிகவும் பட்சமாய்க் கேட்டாள். பூனை அணில்களை தொந்தரவுபண்ணின விதத்தைக் குறித்து இவர்கள் சொன்னதும் 'நான் என்ன செய்ய?' என்று அவர்களைக் கேட்டதோடு, 'என் பூனையின்மேல் எனக்கு அதிகப்பிரியம். அணில்களினிமித்தம் அதை ஒரு அறைக்குள் அடைத்துவைத்தால் அது செத்துப்போகுமே' என்றும் சொன்னாள்.

சுசீலா மிகவும் துக்கமடைந்து கண்ணீரோடு 'பூனையின் கழுத்தில் ஒரு மணியைக் கட்டிவிட்டால், அது ஓடிவரும்போது அணில்கள் கேட்டு அதன் முன்னே வரா. அதைச்செய்ய உங்களால் கூடுமா?' என்று கேட்டாள்.

அப்போ அந்த துரைசானி சிரித்துகொண்டு 'நீ ஒரு கெட்டிக்காரப் பெண். நாளையத்தினம் ஸின்ஸிலாவைப் பார். அது ஒரு பெருமையுள்ள பூனை. அதற்கு அப்படிச் செய்வது அதிக இஷ்டமிருக்கும்' என்றாள்.

அடுத்தநாள் காலையில் பூனை பெருமையாய் நடந்துகொண்டு சுசீலாவின் வீட்டிற்கு வந்தது. அது நடக்கையில் கழுத்தில் கட்டியிருந்த அழகானமணி 'கிணிங் கிணிங்' என்று சப்தம் கொடுத்தது.

சசிலா 'ஸின்ஸிலாவே நீ ஒரு அழகான பூனை' என்று அதை தட்டிக்கொடுத்தாள், அது மிகச் சந்தோஷத்தோடு அவளைப் பார்த்தது.

அணில்கள் அதற்கப்புறம் அந்த மணியினால் பூனைவரும் சத்தத்தை அறிந்து ஓடி தங்கள் உயிரைக்காப்பாற்றின.



---

## NEWS AND NOTES.

## சமாச்சாரக் குறிப்புகள்.

---

மந்திராலோசனை சங்கத்தின் புதிய ஒழுங்கு.

சென்ற மே மாதத்தின் மத்திபத்தில், இப்போது அதிகாரஞ் செலுத்திவரும் லிபரல் (Liberal) கக்ஷிக்காரரும், எதிர்கக்ஷிக்காரரும் சேர்ந்த ஒரு புதிய மந்திராலோசனை சங்கம் ஏற்பாடாயிற்றென்று இங்கிலாந்திலிருந்து ஒருசெய்தி வந்தது. சர்க்கார் தோற்றுப்போனார்களென்று ஆரம்பத்தில் அநேகர் தப்பபிப்பிராயங்கொண்டிருந்தார்கள். அது உண்மையல்லவென்று இப்போது தெரியவருகிறது. பெரிய ஆபத்தான இக்காலத்தில், தேசத்தை இரக்ஷிக்கும்படிக்கும், பிறர் இராஜாங்கத்தாரை குறைகூறாதிருக்கும்படிக்கும், மேற்படி ஒழுங்குசெய்யப்பட்டது. ஆகையாற்றான், எதிர்கக்ஷிக்காருள் முகாமைக்காரராயிருந்த சிலர் சங்கத்துக்குள் சேர்க்கப்பட்டார்கள். சகலபேரின் அனுமதியின்பேரில், கனம் ஆஸ்குத் (Asquith) துரையே பிரதான மந்திரியாக நியமிக்கப்பட்டார். இருகக்ஷிக்காரரும் தற்சமயத்தில் நடந்தேறும் சண்டை விஷயத்தில் விகற்பமற்றிருக்கிறபடியால், மேற்கூறிய மாறுதல் செய்யப்பட்டது. இந்த ஒழுங்கு சண்டையினிமித்தம் செய்யப்பட்டதேயொழிய சர்க்காரின் ஆளுகை முறைமைக்கு விரோதமான

தல்லவென்று பிரதானமந்திரி உரைத்திருக்கிறார்: அதாவது லிபரல் கக்ஷிக்காரர்தான் இராஜாங்கத்தை நடத்துகிறார்கள்; தற்காலத்திய ஒழுங்கு யுத்தம் முடியுமட்டுந்தான் நிற்கும்.

### யுத்தத்தின் தற்கால நிலைமை.

இந்த யுத்தத்தில் உபயோகிக்கப்பட்டு வரும் ஏற்பாடுகள் முந்தியகாலத்து யுத்தங்களில் ஒன்றிலாகிலும் பிரயோகிக்கப்பட்டவைகளல்ல. ஆகையால், யாருடைய பக்கம் ஜெயமென்றும், யாருடைய பக்கம் தோல்வியென்றும் அல்லது சண்டையின் விர்த்தி இவ்விதமாயிருக்கிறதென்றும் தெளிவாய்க்கூற முடியவில்லை. முந்தியகாலத்தில் சரியான சண்டைகள் நடந்திருக்கின்றன. ஒரு கக்ஷிக்காரர் எதிர்த்து போர்புரிந்தபோது, ஜெயம் அல்லது தோல்வியடைந்திருக்கிறதைப் பார்த்திருக்கிறோம். இப்போது அதிக வித்தியாசத்தைக் காணலாம். மைதானங்களில் வந்து இருகக்ஷிக்காரரும் சண்டைபுரிவதைக் காண்பது அரிதாயிருக்கிறது. ஒவ்வொரு சைனியமும் குறுகுமறுக்குமான அகழ்களைவெட்டி, அவைகளின்மேல், இராணுவ வீரர் தூங்குவதற்கும் ஆகாரம் புசிப்பதற்குமேற்ற அறைகளை கட்டி இவைகளிலிருந்து போர்புரிகிறார்கள். ஆகையால், ஒரு திறத்தார் மற்றொரு திறத்தாரின் நடமாட்டத்தை அறிந்துகொள்ள சரியான ஏதுவில்லை. யுத்தமும் ஒரேவிதமாய் நடந்தேறுகின்றது. சற்று முன்னேறிச்சென்று, யுத்தவீரரையும் பீரங்கிகளையும் பிடித்துக்கொள்ளும்போது, வெற்றியடைந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆங்கிலேயரும் அவர்கள் பக்ஷத்தாரும், யுத்தத்தில் சற்று விர்த்தியடைந்திருக்கிறார்கள். ஆனால் பூரணவெற்றி சீக்கிரத்தில் கிடைக்குமென்று நினைக்கக்கூடாது. யுத்தம் அநேக வித்தியாசமான பிரங்களில் நடக்கிறது. கீழ்பாகத்தில் ருஷியர், ஜர்மானியர்மேல் படையெடுக்க முயற்சிசெய்து, சற்று சித்தியையுமடைந்திருக்கிறார்கள். மேற்குதிக்கில், பிரான்சுக்காரரும், ஆங்கிலேயரும் தங்களுடைய இடம் பெயராமல், தீரமாய் ஜர்மானியரோடு போர் புரிகிறார்கள். இத்தாலியர் இப்போது ஆங்கிலேயர்பக்ஷமாய்ச் சேர்ந்து யுத்தம் செய்துவருகிறார்கள். இது தவிர துர்க்கிபக்கமாகவும் சண்டை நடக்கிறது.

### கல்கத்தாவில் சேகரிக்கப்பட்ட பணம்.

உதாரத்துவமுள்ள ஒரு வியாபாரி மோட்டார்வண்டி வாங்க ஒரு லக்ஷ ரூபாயும், ஆகாயகமன வண்டிகள் வாங்க ஒவ்வொன்றிற்கு அரைலக்ஷ ரூபாயும், கல்குத்தா நகரத்தார் கொடுக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்லியிருக்கிறார். உடனே, மூன்று ரூபாயிலிருந்து, பத்தாயிரம் ரூபாய்வரை பணமுதவிசெய்திருக்கிறார்கள். ஒருவர், மோட்டார் வண்டியை ஓட்ட தன் மகனையும், மற்றொருவர் ஆகாயகமன வண்டியிலிருந்து குண்டுகளைப்போட தன் மகனை அனுப்புவதாகவும் வாக்களித்திருக்கிறார்கள்.

### ரயிலில் நடந்த அசம்பவம்.

பிரிட்டிஷ் ரயில் பாதைகளில் ஒருக்காலும் நேரிட்டிராத ஒரு பெரிய அபாயம் இங்கிலாந்தில் மேமாசக் கடைசியில் நேரிட்டது. இராணுவ வீரரையேற்றிக்கொண்டு ஒரு வண்டி தெற்குமுகமாயும், கிளாஸ்கோவுக்கு ஒரு எக்ஸ்பிரஸ் வடக்கு முகமாயும் வந்துகொண்டிருந்தன. சைனியம் நிறைந்திருந்த வண்டி கடந்துபோகும்படி ஒரு லோக்கல் வண்டி ரெயில் பாதையின்மேல் நின்றுகொண்டிருக்கையில், மேற்சொன்ன வண்டி வேகமாய்வந்து பிந்தியதோடு மோதி அதிக நாசம் விளைவித்ததோடு, வடக்கேயிருந்துவரும் பாதையின்மேல் லோக்கல்வண்டியை சாய்த்துவிட்டது. ஆகையால் கிளாஸ்கோ எக்ஸ்பிரஸ் இதன்மேல் மோதி அதிக நாசமடைந்தது. இந்த அசந்தர்ப்பத்தால் 200-பேர் மாண்டார்கள். இன்னுமநேகருஞ் சேதப்பட்டார்கள். இந்த அபாயம் தந்திக்காரனின் தப்பிதத்தினால் நேரிட்டதென்று தெரிய வருகிறது.

# மாதர் மித்திரி.

புத். ௨௯. ௧௯௰௫ ௵ - செப்டெம்பர் ௴. இல. ௩.

## PREACH THE WORD.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

### பல்லவி.

ஜீவ வசனங் கூறுவோம்,—சகோதரரே;
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்.

### அனுபல்லவி.

பாவிகள் மேலுருகிப் பாடுபட்டு மரித்த
ஜீவாதி பதி யேசு சிந்தை மகிழ்ந்திடவே— ஜீவ

### சரணங்கள்.

1. பாதகப் பேயின் வலையில்,—ஐயோ! திரள்பேர்
பட்டு மடியும் வேளையில்
பேதமை யோடு பிடிவாத மருள் மிகுந்து
வேதனை தானடையப் போவோர் கதி பெறவே— ஜீவ

2. காடுதனிலே அலைந்தோம்;—கிறிஸ்துவினால்
கர்த்தன் ஊழியத்தில் அமர்ந்தோம்;
நாடு, நகர், கிராமந் தேடி நாம் பெற்றடைந்த
நல்ல ஈவு வரங்கள் எல்லாருங் கண்டடைய— ஜீவ

3. பூலோகம் எங்கும் நமையே—கிறிஸ்து நாதர்
போகச் சொல்லி விதித்தாரே;
காலா காலங்களிலும் கூடிஇருப்போம், என்ற
கர்த்தன் வாக்கை நினைந்து எத்தேசமுந் திரிந்து— ஜீவ

4. விண்ணின் மகிமை துறந்தார்;—கிறிஸ்து நமை
மீட்கக் குருசில் இறந்தார்;
மண்ணின் புகழ், பெருமை எல்லாம் தூசுகுப்பை என்
றெண்ணிச் சிலுவைதனை எடுத்து மகிழ்ச்சியொடு— ஜீவ

## THE MOTHERS' CRY FOR PEACE.

## சமாதானத்தைக் கோரும் தாய்மாரின் சத்தம்.

தற்சமயம் ஐரோப்பா கண்டத்தில் மகா பயங்கரமான யுத்தம் ஒன்று நடக்கிறதல்லவா? இதன் மத்தியில் ஒல்லாந்து தேசத்து ஸ்திரீகள் உலகமெங்குமுள்ள தாய்மாருக்கும் ஒரு அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள். அதெதற்காகவெனில் சமாதான ஐக்ய கூட்டத்தை சேரும்படிக்காகவே (Peace Congress). சமாதான அரமனை (Peace Palace) என்னுமோர் புதிய கட்டடத்தின் வாசல்கள் யுத்தம் ஆரம்பித்தவுடன் திறக்கப்பட்டு, சற்றப்பால் மூடப்பட்டன. இப்போ அவைகள் தாய்மாராகிய ஸ்திரீகள் கூட்டத்துக்காக திரும்பவும் திறக்கப்பட்டிருக்கின்றன. அத்தாய்மாரில் ஒருத்தி இப்போ கூடப்போகிற சமாதான ஐக்யகூட்டத்தை ஸ்திரீகளுடைய சரித்திரத்தில் மிகவும் முக்கியமான ஒரு விசேஷமாக எடுத்துச்சொல்லி, பிள்ளைகளைப்பெற்று வளர்த்து யுத்தத்துக்கு அனுப்புவது சரியல்ல என்பதை கூட்டத்தில் தாய்மார் பேசவேண்டும் என்று சொல்லுகிறாள். அதன்றி "தற்காலத்தில் நடக்கும் பயங்கரமான யுத்தத்தில் ஒரு ஜாதியார் இன்னொரு ஜாதியார் செய்யும் கொடுமைகளை நிவிர்த்திசெய்ய கைகலந்து யுத்தம் செய்வது ஒருபோதும் சரியல்ல. தங்கள் புத்தியை உபயோகித்து நீதி நியாயங்களை எடுத்துரைத்து ஒருவரையொருவர் அடக்கவேண்டும். ஆகையால் தாய்மாரெல்லாரும் சேர்ந்து சமாதானம் உண்டாக செய்யக்கூடிய பிரயத்தனங்களைச் செய்தால் மாத்திரம் நாம் சரியான தாய்மாராவோம்" என்றும் சொன்னாள். இப்போ யுத்தம் நடக்கிற இடங்களிலுள்ள ஸ்திரீகளனேகரும் யுத்தத்தில் வீராயிருக்கிறவர்களுடைய தாய்மாரும் வெகு வாஞ்சையோடு, சமாதானத்துக்காக ஒல்லாந்து தேசத்து ஸ்திரீகள் தங்களாலான பிரயத்தனங்கள் பண்ணவேண்டுமென்று கடிதங்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

---

## MORE HOPE FOR WOMEN.

## ஸ்திரீகளுக்கு அதிக நம்பிக்கை உண்டாக்கக்கூடியவை.

சில வருஷங்களுக்கு முன்னே இந்தியாவிலிருந்த ஒரு பிஷப், இங்கிலாந்தில் ஒரு கூட்டத்தில் மிகவும் எழுப்புதலான வார்த்தைகளைச் சொன்னார். அவை ஒரு ஸ்திரீ முன்னேறி செல்லக்கூடிய வழிகள் தற்காலத்தில் எவ்வளவோ இருக்கின்றன என்பதே. அவர் இங்கிலீஷ் ஸ்திரீகளைக்குறித்துப் பேசினார். ஆனாலும் அது இந்தியாவிலுள்ள நமக்கும் ஏற்றதுதான். அவர் சொன்னதாவது:—

"கடந்த நூறு வருஷங்களாக ஆங்கிலேய சரித்திரத்தைக் கவனித்தால் ஸ்திரீகள் ஜனசமுதாய அபிவிர்த்தியிலும், புத்திக்கூர்மையிலும், நாகரீகத்திலும் அதிகமாய் முன்னேறிச் சென்றிருக்கிறார்கள் என்பதை ஜனங்களெல்லாரும் சந்தோஷத்துடன் ஒத்துக்கொள்வார்கள். மற்ற மனிதரால் ஏவப்படாமலே, மிகவும் ஆச்சரியப்படத்தக்கதான அனேக காரியங்களை, சில கிறிஸ்தவ மாது சிரோமணிகள் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குள் பிலண்டனே என்பவளைப்போன்ற இரத்த சாட்சிகளும், பாபியோலா என்பவளைப் போன்ற ஏழைகளின் சிநேகிதரும், ஹில்டாவைப்போன்ற பரிசுத்தவாட்டிகளும், ப்ரை துரைசானியைப்போன்ற பரோபகாரிகளும், ஐக்ய மாகாணத்திலுள்ள சீர்திருத்தக்காரரும், எலிஸ் ஹாப்கின்ஸ், பிளாரன்ஸ் நைற்றிங்கேல், ஆக்டேவியா ஹில் என்பவர்களைப் போன்ற தெய்வபக்தியுள்ள மார்க்க சீர்திருத்த மிஷனரி துரைசானிமாரும் செய்திருக்கிற வேலைகள் பரிசுத்த ஜீவியம் செய்கிற ஸ்திரீகள் எவ்வளவு ஏராளமான நன்மைகளைச் செய்யக்கூடும் என்பதை மிகத் தெளிவாகக் காணபிக்கிறது. இதை வாசிக்கிற சகோதரிகளே உங்களுடைய கடமை என்ன? நீங்களும் நூதனமான நன்மைகளை உலகத்துக்குச் செய்யுங்கள். மிகப்பெரிதும், உத்தரவாதமுமான காரியங்களை உங்கள் தோள்மேல் ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது சாதாரணமாய் உங்களைக் குறித்துள்ள மதிப்புக்கும், நாகரீகமுள்ள மனிதருக்கிருக்கும் மேன்மையான எண்ணத்துக்கும், கனத்துக்கும், நீங்கள் பெலவீன பாண்டங்கள் என்று எண்ணும் எண்ணத்துக்கும், உங்களுடைய கற்புக்கும் ஒரு குறைவும் உண்டாகமாட்டாது.

இயேசுகிறிஸ்து எல்லா ஸ்திரீகளுக்கும் சொல்லமுடியாத மிகமேன்மையான மதிப்பை உண்டுபண்ணி வைத்திருக்கிறார் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். நீங்கள் ஒருபோதும் அதை மறக்கவேண்டாம். உங்களுக்கு மீட்பின் காலம் சமீபித்திருக்கிறது. ஒன்றும் அதைத் தடுக்கமுடியாது. ஒன்றும் அதைத் தாமதிக்கப் பண்ண முடியாது. உங்களுக்காக காத்திருக்கும் தேவ ஊழியத்தின் அழைப்பைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள். நீங்கள் மாத்திரமல்ல, உங்களுக்குப் பின்வரும் ஸ்திரீகளும் அப்படியே செய்வார்களாக.



மானிட ஜென்மத்தின் மகா விசேஷித்த பதவி நற்குண ஸ்திரீயாயிருப்பது. சாதாரணமாய் புருஷருடைய குற்றங்களுக்கு கிடைக்கும் தண்டனையைவிட, ஸ்திரீகளுடைய குற்றங்களுக்கு தண்டனை ஜாஸ்தி. ஏனென்றால் உலகமுழுவதிலுமுள்ள ஜனங்களுடைய அபிப்பிராயம் என்னவெனில் ஒரு வீடோ, குடும்பமோ, ராஜ்யமோ கெட்டுப்போக வேண்டுமானாலும் அல்லது நிலைநிறுத்தப்பட வேண்டுமானாலும் ஸ்திரீயினால்தான்.

'புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக்கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ அதை இடித்துப்போடுகிறாள்.'

சிலகாலங்களுக்கு முன்னால்தான் ஸ்திரீகள் பார்லியமெந்தென்னும் மகா சபையில் தங்களுக்கு இடம் வேண்டும் என்று கேட்க ஆரம்பித்தார்கள். அப்பேச்சு ஆரம்பித்த காலம் மிகவும் உத்தமமும், அதிக மேன்மையான குணங்களுமுடைய விக்டோரியா ராஜாத்தியின் காலத்தில்தான். அந்த மகா புண்ணியவதியான ராஜாத்தி தன் பிரஜைகளுக்கு காண்பித்துப் போயிருக்கும் மாதிரி மிகவும் மேன்மையானது, மகா பரிசுத்தமுள்ளதுமாயிருக்கிறது. சிங்காசனம் வகித்த ராஜாத்திகளில் அவர்களுக்கு நிகரானவர் யாருமில்லை. 1838-ம் வருஷம் அவர்கள் சிங்காசனம் ஏறின நாள் முதல் அவர்கள் மரணநாள் வரையிலும் நடந்திருக்கும் சம்பவங்கள் மிகவும் ஆச்சரியமானவைகள். யாரும் எதிர்பாராத அனேக விஷயங்கள் நடந்துள்ளன. மாறுதல்கள் உண்டாயின. சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஸ்திரீகளே! ஒருவேளை நீங்கள் விரும்புகிற எல்லாம் நடக்காவிட்டாலும், ஒரு புண்ய ஸ்திரீயாகிய ராஜாத்தியின் மூலமாய் நடந்திருக்கும் மாறுதல்களையும் சம்பவங்களையும்

மறந்துபோகவேண்டாம், அற்பமாயும் எண்ணாதிருங்கள். 'உங்கள் தலைகளை நிமிர்த்தி மேலே நோக்கிப்பாருங்கள்.' உங்களுடைய இருதயங்களையும், வல்லமையையும் பேரின்ப நாட்டிற்கு நேராக திருப்புங்கள். வருங்காலம் உங்களுடையது. சுவர்ண யுகம் (Golden Age) உங்களுக்கு முன்னாக இருக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாடு உங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறது. நான் உங்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் உங்கள் மேலான அழைப்பின் உயர்ந்த பதவிக்கு நேரே எழும்புங்கள். நீங்கள் எழும்பிப் பிரகாசிக்கவும், ஆண்களைப்போன்ற நிலைமைக்கு வரவும் அவர்களைப்போல் மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்யவும் ஆசைகொண்டு பிரயாசப்பட்டு வருகிறீர்கள், நிஜந்தான். ஆனால் தேவன் உங்களுக்கு ஜெயத்தைத்தந்து அதினால் நீங்கள் முன்னிலும் அதிக பரிசுத்தமுள்ளவர்களாயும், கற்புள்ளவர்களாயும், இயேசு கிறிஸ்துவாகிய நமது ஆண்டவரால் மீட்கப்பட்டவர்களாயும் ஜீவிக்கக் கிருபை செய்வாராக. அப்படிச் செய்வதினால் நீங்கள் பாவமும் நோவும் நிறைந்த இவ்வுலகத்தை தேவஅன்பு நிறைந்திருக்கும் மோட்சத்துக்கு சமீபத்தில் கொண்டுபோகக்கூடிய வல்லமையும் மாதிரியும் அடைந்து கொள்வீர்கள்."

---

## THE BLIND MAN AND THE SHRINE.
## குருடனும் பேயின் கோவிலும்.

---

நாங்கள் ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தபோது அங்கே சில கிறிஸ்தவர்கள் கூடி ஒரு கூட்டம்வைக்க ஆயத்தமாய் இருந்தார்கள். அவர்களுக்கு கிறிஸ்து நல்ல மேய்ப்பன் என்பதையும், மேய்ப்பன் தன் மந்தையின்பேரில் எப்படி கவனமாய் இருந்து அதை பாதுகாக்கிறான் என்பதையும், அதுபோல் கிறிஸ்து தம்மை பின்பற்றுகிறவர்களை பாதுகாக்கிறார் என்பதையும் அவர்களுக்கு சொன்னேன். நாங்கள் இப்படி சொல்லிக்கொண்டிருக்கும்போது நான் ஒரு கிழவனான குருடனை கவனித்தேன். அவன் மற்றவர்களோடு சேராமல் மிகவும் விசனமாய் சற்று அப்பால் உட்கார்ந்திருந்தான். நான் அவன் பக்கமாய் திரும்பி அவனைநோக்கி நீ உனக்கு பார்வை கிடைக்கும்படி அந்த விக்கிரகக் கோவிலுக்கு அதிக பணத்தை சிலவு பண்ணினாய். ஆனால் நீ யாதொரு பிரயோஜனத்தையும் அடையவில்லை. ஆனால் கிறிஸ்துதான் உண்மையான வைத்தியர் என்கிற சத்தியத்தை அறிவிக்கும்படிக்கு என்னை இப்போது அனுப்பியிருக்கிறார். உன்னுடைய ஆவியின் கண்கள் திறக்கப்படவும், அவருடைய அதிசயமான தயவை நீ காணும்படியாகவும் அவர் விரும்புகிறார். 'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்று சொல்லுகிற அவர் இப்பொழுது உனக்கும் சொல்லுகிறார். நீ அவருடைய சத்தத்தை கவனிக்கமாட்டாயா என்றேன். உடனே அவனுடைய வாடின முகமானது ஒருவித அதிசயத்தால் நிறைந்து அவன் என்னிடமாய் வந்து 'நான் என்ன செய்யவேண்டும் சொல்லும்' என்று என்னைக் கேட்டான். நான் அவனுக்கு மறுமொழியாக: உன்னுடைய ஜீவகாலம் எல்லாம் உனக்கு சாபமாய் இருந்த அந்த பேயின் கோவிலை உடைத்துபோடு. உன்னுடைய விருத்தாப்பிய காலத்தில் உனக்கு துணையாயிருக்கிற இயேசுவை ஏற்றுக்கொள் என்று சொன்னேன். அந்த பேயின் கோவில் இருநூறு அல்லது முந்நூறு வருஷகாலங்களாக என்னுடைய முன்னோர் வசமிருந்தது, அதை நான் எப்படி உடைக்ககூடும் என்று அவன் சொன்னான். அதற்கு நான் தேவனுடைய வல்லமையில் எல்லாம் கூடியதாயிருக்கிறது என்றேன். பிற்பாடு நாங்கள் ஜெபம்பண்ணி முழங்காலைவிட்டு எழுந்த உடனே அந்த வயது சென்றவனுக்கு தான் அடையவேண்டிய பெலன் உண்டாகிவிட்டது. உடனே அவன் வேலைக்காரனைக் கூப்பிட்டு அந்தக் கோவில் அண்டைக்குக் கொண்டு போகச் சொன்னான். என்றாலும் அவனுக்கு பின்னும் சில தடைகள் உண்டாயிற்று. அது என்னவென்றால் அவனுடைய வயதுசென்ற மனைவி கோபதீபமாய் அதை உடைக்கக்கூடாது என்று தடுத்தாள். ஆனால் தேவன் அவனுக்குப் பெலனைக் கொடுத்ததால் அவன் இளக்கரித்துப்போகவில்லை. அவன் முழுத் தைரியம் கொண்டவனாய் தன் மகனைக் கூப்பிட்டு ஒரு மண்வெட்டியைக் கொண்டுவரச் சொன்னான். அப்புறம் ஒவ்வொரு கல்லையும் பெயர்த்தெடுத்தான். அப்படிப் பண்ணும்போது "நான் இன்றுமுதல் உயிரோடிருக்கிற காலமுழுவதும் இயேசுகிறிஸ்துவை மாத்திரம் என் இரட்சகராக ஏற்றுக்கொள்வேன். நான் சாகும்போது அவர் தம்முடைய மேல்வீட்டில் என்னை சேர்த்துக்கொள்வார்" என்று சொல்லிக் கொண்டே இடித்தான்.

---

## HUNGER FOR SALVATION.
## இரட்சிப்பின் பேரில் பசி.

---

"நாங்கள் மாட்டுவண்டியில் ஏறி அதிக துரிதமாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது, சில உயர்குல ஸ்திரீகளும் புருஷரும் எங்களைச் சூழ்ந்துகொண்டார்கள், அந்தக் கிராமத்தின் தலைவன் முன்னால் நின்று எங்கள் வண்டியைப் போகவிடாமல் தடுத்தான். அதின் காரணத்தை நான் விசாரித்தபோது, அவர்கள் இயேசு கிறிஸ்துவைக்குறித்து தங்களுக்கு ஏதாகிலும் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள். அப்போது நான் சில நிமிஷங்களாக திகைத்து நின்று 'இதற்கு இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள ஜனங்கள் எங்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள்' என்று சொன்னேன். ஆனால் அவர்கள் அதை பின்னுக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்று தடுத்துச் சொன்னார்கள். ஆகையால் நான் அவர்களுக்கு இணங்கவேண்டியதாயிற்று. அப்புறம் எங்கள் வண்டி அவர்கள் கிராமத்தை சமீபிக்கவே சில நிமிஷங்களுக்குள்ளாக முந்நூறு ஜனங்களுக்கு அதிகமான பேர் எங்களைச் சூழ்ந்துகொண்டார்கள். உடனே 'இயேசு என்னை இரட்சிக்கிறார்' என்ற பாட்டை பாடினோம். பிற்பாடு இந்த இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தால் இரட்சிப்பின் கிரயத்தை தாமாய் செலுத்திவிட்டார். இதற்கு ஈடாக நம்முடைய இருதயத்தின் அன்புமாத்திரம் அவருக்கு வேண்டியது என்று சொன்னேன். நான் அவர்களைக் கவனித்தபோது ஸ்திரீகளில் அநேகர் அழுது கொண்டு இதுதான் சத்தியம், இதுதான் சத்தியம் என்று ஒருவர்க்கொருவர் சொல்லிகொண்டு தங்களை காயப்படுத்தும் நிலைமையில் இருந்ததாகக் கண்டேன். நான் இரண்டுமணி நேரத்துக்கு அதிகம் பிரசங்கித்த பிற்பாடு என்னுடைய சத்தம் முற்றிலும் குன்றிபோனபடியால் என்னை போகவிடும்படியாய்

அவர்களை கேட்டுக்கொண்டேன்.. ஆனால் அவர்கள் "உமக்கு குடிக்கும்படி பால் கொண்டு வருவோம், நீர் குடித்து சற்று இளைப்பாறினபின் இந்த அதிசயமான சரித்திரத்தில் இன்னும் அதிகம் சொல்லும்" என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் நான் இன்னும் ஒரு பட்டணத்திற்குபோகவேண்டியதாயிருந்தது. பின் எங்களுடைய கூடாரத்துக்கு பதினைந்து மைல் சவாரிபோனோம். அப்போது சாயங்காலம் ஆறு மணியாயிருந்தபடியால் நான் இச்சமயம் நிறுத்திவிட்டு அடுத்த பிரயாணத்தில் அவர்களை மறுபடியும் சந்திப்பதாய் வாக்குக் கொடுத்தேன். அவர்கள் மறுமொழியாய் இன்னும் ஒரு தடவை நீங்கள் வரும்போது உங்களுக்கு பிரத்தியேகமாய் ஒரு வீடு கொடுத்து மூன்றுநாள் வரையில் உங்களை உபசரிப்போம். ஏனென்றால் கிராமத்தில் உள்ள ஜனங்கள் மெய்யாகவே ஜீவ அப்பத்தின்பேரில் பசியுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

---

SUBMARINES.

## ஸப்மரீன்ஸ் அல்லது கடலுக்குள் செல்லக்கூடிய சிறு கப்பல்கள்.

---

'ஸப்மரீன்' என்னும் வார்த்தைக்கு 'கடலின் கீழ்' என்று அர்த்தம். இதை வாசிக்கும் சிநேகிதரில் அநேகருக்கு தற்காலம் நடக்கும் பெரிய யுத்தத்தில் ஸப்மரீன்ஸ் என்னும் சிறு கப்பல்கள் எவ்வளவு பயங்கரமான காரியங்களை நடப்பித்துக்கொண்டு வருகின்றன என்பது தெரிந்த விஷயமாயிருக்கலாம்.

கடந்த மே மாதம் 7-ம்தேதி 'லூசிற்றானியா' என்னும் ஒரு பெரிய கப்பல் நியுயார்க் பட்டணத்திலிருந்து புறப்பட்டு லிவர்ப்பூல் துறைமுகத்தை அடுத்து வருகையில் ஒரு சிறு ஸப்மரீன் கப்பலால் குண்டு போடப்பட்டு சில நிமிஷங்களுக்குள் அமிழ்த்தப்பட்டுப் போயிற்று. கப்பலில் பிரயாணம்பண்ணின அநேகர் அமிழ்ந்து போனார்கள். இந்தப் பரிதாபமான விஷயத்தைக் குறித்து நீ கேள்விப்பட்டிருக்கலாம். அந்தக் கப்பல் மிகப்பெரிதும், ஏகதேசம் இரண்டாயிரம் பிரயாணிகளால் நிறைந்ததுமாயிருந்தது. அதை அமிழ்த்தினது ஒரு ஜர்மானிய ஸப்மரீன். உன் மனதில் இரண்டாயிரம் பேர் ஒருவரையொருவர் நெருக்காமல் ஜீவித்து நடமாடுவதற்கு எவ்வளவு இடம் தேவை என்று யோசித்துப்பார். அதன்றி கப்பலில் எவ்வளவோ சாமான்கள், தட்டுமுட்டுகள், மேசை நாற்காலிகள் இவைகள் இருந்தன. இவைகளெல்லாம் அடங்கக்கூடியதான ஒரு பிரமாண்டமான கப்பல் அது. எவ்வளவு யோசித்துப் பார்த்தாலும் உன் யோசனைக்குள் அதன் சரியான அளவு அடங்கக்கூடியதில்லை எழுநூறு அடி நீளமான ஒரு கோடு அளந்துபார். அப்போ உனக்கு அந்தக் புகைக்கப்பலின் நீளம் எவ்வளவாயிருந்திருக்க வேண்டுமென்று தெரியும். அதினின்று அதின் பருமன் எவ்வளவு பிரமாண்டம் என்பதையும் சற்று கிரகிக்கலாம். இந்த அளவுடைய கப்பல் கடலின் ஆழத்துக்குள் ஒரு நொடிக்குள் அமிழ்ந்து போனது. அதை அமிழ்த்தின சிறு கப்பலின் நீளம் இருநூற்றுபதினைந்து அடி மாத்திரம். தண்ணீருக்குமேலே அது நின்றால் ஆறு அல்லது எட்டு அடி மாத்திரம் உயரம் இருக்கும். அக்கப்பலை நடத்தினவர்கள் பத்து பன்னிரண்டு பேர் மாத்திரம். லூசிற்றானியா ஒரு மணி



நேரத்தில் இருபத்தொன்பது மைல் தூரம் ஓடக்கூடியதும், ஸப்மரீன் கப்பல் ஏறக்குறைய இருபது மைல் மாத்திரம் ஓடக்கூடியதாயுமிருந்தன..

நல்லது இப்படியிருக்க இந்த சிறு கப்பல் அந்தப் பெரிய கப்பலை எப்படி அமிழ்த்திவிட்டது? இதற்கு அநேக முகாந்தரங்கள் உண்டு. ஆட்கள் பிரயாணம் பண்ணுகிற கப்பலுக்கும், யுத்தக் கப்பலுக்கும் ஒரு வித்தியாசம் யாதெனில் லூசிற்றானியாவில் தண்ணீர் உட்செல்லாதபடி ஏற்பாடுகள் செய்யப்பட்ட அதிக அறைகள் (Water-tight Compartments) அதிகமாய் கட்டமுடியாது.. அப்போ ஜனங்கள் அதிகம் பிரயாணம் பண்ணமுடியாது. ஆனால் யுத்தக்கப்பலில் வெகு குறைவாய் ஜனங்கள் இருக்கிறபடியால் தண்ணீர் உட்செல்லாதபடி மிக நேர்த்தியான ஒழுங்குகள் செய்திருக்கும். என்றபோதிலும் இந்தப் பெரிய கப்பலை மிகவுமாழ்ந்த யோசனையோடு பண்ணியிருந்தது. சில வருஷங்களுக்கு முன்னே டைற்றானிக் (Titanic) புகைக் கப்பலுக்கு சம்பவித்த அதே விதமான ஆபத்து, இதே கப்பலுக்கும் நேரிட்டிருக்குமானால், அதைப்போல் அமிழ்ந்து போயிருக்காது. இதற்கு இரண்டு முன்னணியங்களிருந்தன, ஒன்று மற்றொன்றிற்குள் கட்டப்பட்டிருந்தது அந்த இரண்டிற்குமிடையிற் நிலக்கரி வைக்கப்பட்டிருந்தது. அதுதவிர தண்ணீர் செல்லக்கூடாத அநேக அறைகளும் கட்டப்பட்டிருந்தன. அதோடு அவ்வறைகள் ஒன்றிற்கொன்று சம்பந்தப்படாமலிருந்தன. ஆகையால் திடீரென்று ஜலம் சில அறைகளுக்குள் பிரவேசித்தாலும், எல்லா அறைகட்குள்ளும் பிரவேசியாது. அநிமித்தம் கப்பல் ஆழ்ந்துபோகாமற் மிதந்துகொண்டிருக்கக் கூடியதாயிருந்தது.

அதோடு ஸப்மரீன் கப்பலைவிட 'Submarine) துரிதமாய்ச் செல்லக்கூடிய கப்பலாகையால் அதற்கு முன்னால் ஓடிவிடக்கூடும். ஆனால் அப்படிச் செய்யக்கூடவில்லை. ஏனெனில், அயர்லாந்து தேசத்து கடலோரம் சமீபமாய், இந்த லூசிற்றானியா கப்பலை, சிறிதுநேரம் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தவேண்டியதாயிற்று. அந்தயிடத்தை சப்மரீன் கப்பல் தெளிவாயறிந்திருந்தபடியால் அதேயிடத்தில் கப்பலைத் தாக்கவும், லூசிற்றானியாத் தப்பியோடக் கூடாது போயிற்று, உதவியுங் கிடைக்கவில்லை.

எல்லாவற்றிலும் முக்கியமாய் அந்த சப்மரீன் கண்ணுக்கு தென்படாமற் முழுகி அதன்பின் திடீரென்று மேலே எழும்பி பெரிய கப்பலைத் தாக்கும் இயல்புடையது. மெய்தான் தண்ணீருக்கு மேல் செல்லும் வேகத்தைவிட தண்ணீர்க்குள்ளே அரைவாசி குறைவாய் தான் செல்லக்கூடியது என்றாலும் இன்ன இடத்தில் நங்கூரம் பாய்ச்சி கப்பல் சற்றுநேரம் தாமதிக்குமென்பதை சப்மரீன் திட்டமாயறிந்திருந்ததினால் வெகு சாக்கிரதையாய் அதின் சமீபத்திலேயே மறைந்துகொண்டிருந்து திடீரென்று கப்பலைத் தாக்கினது. அதன்றி ஒவ்வொரு சப்மரீனிலும் மிக விசேஷித்த ஒரு யுத்தாயுதமுண்டு. அது யென்னவெனில் டார்ப்பிடோ (Torpedo) வென்னும் ஆயுதவளமைதான். அது ஒரு பெரிய பென்சில்மாதிரியிருக்கும். இருபது அல்லது முப்பது அடி நீளமுள்ளது. அதின் நுனி நீண்டிருக்கும். அதற்குள் ஏகதேசம், நாநூறு ராத்தல் நிறையுள்ள வெடிமருந்து நிரப்பியிருக்கும். அந்த நுனி கப்பல் முதலில் ஒன்றைபோய் தொட்டடித்தவுடனே, வெடிமருந்து வெடித்து அந்த டார்ப்பிடோவை பயங்கரமான வேகத்தோடு கப்பற்குள் செலுத்தி அதின் இரும்பு முன்னணியம் எவ்வளவு உறுதியும் கனதியுமாயிருந்தபோதிலும், ஒரு கடுதாசியைப்போல கிழித்துக்கொண்டு, கப்பலின் உட்பாகத்தை வெடித்து சுக்கல் சுக்கலாகப் பண்ணும். உடனே ஜலம் தாராளமாய் உள்ளே சென்றுவிடும். அப்போது எவ்விதத்திலும் கப்பலை காப்பாற்ற முடியாது. வெகு சீக்கிரத்தில் கப்பலமிழ்ந்து

விடும். இவ்விதமாய்த்தான் லூசிற்றுனியாவுக்கும் நடந்தது.

இந்த லூசிற்றுனியா ஒரு பிரிட்டிஷ் கப்பல். அதை அமிழ்த்தின சப்மரீன் ஒரு ஜெர்மன் கப்பல். லூசிற்றுனியாவில் பிரயாணம் பண்ணினவர்கள் ஜெர்மனியரோடு யுத்தம் செய்ய வரவில்லை. எத்தனையோ பிரபுக்கள், ஜெர்மனியருக்கு ஒரு தீங்கும் நினையாத ஸ்திரீகள், குழந்தைகள், வயோதிபர் யாவரும் அநியாயமாய் அமிழ்ந்துபோனார்கள். ஐயோ யுத்தம் எவ்வளவு கொடியது! பரிதாபம்! பயங்கரம்!

---

## CHINA AND CHRISTIANITY.
## சீனாவும் கிறிஸ்துமார்க்கமும்.

---

சீன தேசமானது சந்தேகமின்றி பூர்வீக ராச்சியம் என்பது நம் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அது மிகவும் பூர்வீகமாய் இருந்தாலும் சில வருடங்களுக்கு முன்னதியாகத்தான் ஒரு தேசாதிபதிக்குள்ளான சுய ராச்சியம் ஆயிற்று. அந்த தேசாதிபதிக்கு (Yuan Shikai) யான் சிக்காய் என்று பெயர். இவன் மிகவும் தீர்க்கமுள்ளவனாய் இருந்தாலும் சற்று நிலை அற்றவன். சீனருக்குள்ளே (Confucious) கன்பிசியஸ் என்பவன் ஒரு பெரிய சாஸ்திரி. இவன் சன்மார்க்கத்தின் மேன்மையானதை போதித்து வந்தான். இதுவே அந்த ஜாதியாரின் மார்க்கமாயிற்று. கொஞ்சக்காலத்துக்குமுன் சிறந்த லட்சணமுள்ளவன் என்று எல்லாராலும் அறியப்பட்ட ஒரு மனிதன் அந்த தேசாதிபதியோடு பேசிக்கொண்டிருந்தான். (Yuan Shikai) யான் சிக்காய் என்பவன் தன் சம்பாஷணையின் ஊடே சீனர்களின் சுய அரசாட்சி மிஷனரிமார் செய்த வேலையின் பயன் ஆயிற்று என்று சொன்னான். (Confucious) கன்பிசியஸ் என்பவன் இதற்கு எதிரிடையாக மிஷனரிமார் தேச சம்பந்தமான போதனைகளில் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல என்று தடுத்துச் சொன்னான். அதற்கு அவன் இது எல்லாம் உண்மைதான். தேவன் பிதாவென்றும், மனுஷர் ஒருவருக்கொருவர் சகோதரர் என்றும், குடிஅரசாட்சியின் துர்நடக்கை போதிக்கமாட்டாதே. ஆனபடியால் குடிஅரசாட்சியின் நடபடியில் இருந்துதான் இந்த சுய அரசாட்சி வந்தது என்று விளக்கிக் காண்பித்தான். அப்படியிருக்க எல்லா உலகத்தாராலும் அறியப்பட்டவனும் மனுஷருடைய பொது நன்மையில் எல்லாம் தலைவனாயிருந்து நடத்திவந்த ஒரு கிறிஸ்தவன் அந்த தேசாதிபதியோடு இன்னொரு சமயம் பேச நேரிட்டது. இந்த கிறிஸ்தவன் மாணாக்கருக்கு சில கூட்டங்கள் வைத்து அவர்களை கிறிஸ்துவின் அண்டைக்கு திருப்பவேண்டும் என்கிற முழு தீர்மானத்தோடு சீனாவுக்கு போனவன். அந்த கூட்ட சபயத்தில் யான் சிக்காய் என்னும் தேசாதிபதி அந்த கிறிஸ்தவன் சீன வாலிபருக்குப் போதித்து வந்த அவன் கொள்கையின் பொது விஷயங்களை அறிய விரும்பி அவனுக்கு ஆள் அனுப்பினான். டாக்டர் மாட் (Dr. Mott) அப்படியே போய் பின் வருகிறபடி அந்த சீன வாலிபருக்கு போதித்த மூன்று வகையான ஒப்பந்தங்களுக்கு அவர்கள் கையொப்பம் இடவேண்டும் என்று கேட்டுக்கொண்டவைகளை அவனுக்கு வாசித்தான். அவையாவன :—

I. நாலு சுவிசேஷங்களிலும் உள்ள கிறிஸ்துவின் ஜீவியத்தையும் போதனையையும் வேதத்தில் எழுதியிருக்கிறபடி நான் விடாமல் வாசித்துப் பாடம்பண்ணுவேன். இதை அனுகூலமாகக்கொண்டு நடத்த இவ்வகையான நோக்கமுடைய மற்றவர்களை ஒரு மணி நேரம் சந்திப்பேன்.



II. அதில் உள்ள சத்தியத்தை கண்டுபிடிக்கத்தக்க ஞானத்தையும், அதின்படி நடக்கத்தக்கதான தைரியத்தையும் கொடுக்கும்படி நான் தேவனை நோக்கி நாள்தோறும் ஜெபிப்பேன்.

III. அவ்விதமாய் நடக்க என்னுடைய நியாயமும் மனச்சாட்சியும் இடங்கொடுத்தால் கிறிஸ்துவை என் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்வேன் என்பதே. அதற்கு அந்த தேசாதிபதி யாதொரு தடையும் சொல்லாமல் அந்தக் கிறிஸ்தவன் உயர்தரப் பள்ளிக்கூடத்து மாணாக்கருக்கு மாத்திரமல்ல, தாழ்ந்த பள்ளிக்கூட மாணாக்கருக்கும் இதை போதிக்கும்படியாக அவனுக்கு உத்தரவு கொடுத்தான். அதோடு கன்பிசியஸ் (Confucious) என்கிற சாஸ்திரி போதித்த சன்மார்க்கத்தின்படி நம்முடைய சீனர்கள் ஜீவிக்கும்படி கிறிஸ்து அவர்களுக்குத் தேவையானவர் என்று சொன்னான். நான் சொன்னதுபோல் அந்த சாஸ்திரி அதிசயமான சன்மார்க்க ஒழுங்குகளை போதித்து வந்தான். ஆனால் கிறிஸ்துவினுடைய சன்மார்க்கப் பிரமாணங்களை கற்றுக்கொண்டவர்கள், அவைகள் எப்படிப்பட்டவைகள் என்றும், அவைகளிலும் மேன்மையானவைகள் ஒன்றும் இல்லை என்றும் அறிந்துகொள்வார்கள். இவைகளை அல்லாமலும் அந்தப் போதனைகளின்படி நடக்கவும் அவைகளின் பலனை நம்முடைய ஜீவியத்தில் காண்பிக்கவும் இயேசு வல்லமையையும் கொடுக்கிறார். கன்பிசியஸ் என்கிற சாஸ்திரி தானும் தன்னைச் சேர்ந்தவர்களில் ஒருவனைப்போல் இதின்பிரகாரம் நடந்துகொள்ளக்கூடாது. அவன் இறந்து நெடுங்காலம் ஆயிற்று. அவன் நல்லவன்தான், ஆகையினால் அவனுடைய ஜீவியத்தையும் போதகத்தையும் கற்றுக்கொள்வது உத்தமம். ஆனால் அந்த சாஸ்திரியினுடைய பிரமாணங்களை ஒருவன் காத்துக்கொள்ள அவனுக்கு உதவி செய்ய அந்த சாஸ்திரியால் கூடாது. கிறிஸ்துவோ என்றென்றைக்கும் ஜீவிக்கிறவராயும், தம்முடைய போதனைகளின்படி நடக்கிறவர்களுக்கு உதவிசெய்ய திராணி உள்ளவராயும் இருக்கிறார்.

---

## CHILDREN'S PAGE.
## பிள்ளைகளின் பக்கம்.

---

### *A BOY AND A GOAT.*
### ஒரு பையனும் வெள்ளாடும்.

பின்வரும் கதை ஒரு பையனைக் குறித்தது. ஆனால் அது ஒரு பெண்பிள்ளைக்கும் ஏற்றதுதான். இருபக்கத்தாரும் நல்ல பாடத்தை இதிலிருந்து கற்றுக்கொள்ளலாம்.

**பில்லி** என்னும் ஒரு பையன் இருந்தான். அவன் ஒருநாள் தன் புஸ்தகத்தை கையில் வைத்துக்கொண்டு மறுபடியும் மறுபடியும் 'இந்தப்பாடத்தை படிக்க என்னால் முடியவே முடியாது; ஒரு போதும் கூடாது' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

இவ்விதமாக பில்லி சொல்லச் சொல்ல பாடம் அதிக கஷ்டமாகவும், நம்பிக்கையற்ற விதமாகவும் காணப்பட்டது. அவன் பள்ளிக்கூடத்தில் வைத்து பிரயாசப்பட்டிருந்தால் இவ்வளவு கஷ்டமாகக் காணப்படமாட்டாது. ஆனால் இப்போ விடுமுறை சமயம். அதோடு அவன் இந்தப் பாடத்தை உபாத்தியாயர் கற்றுக்கொடுத்த நாளில் பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லை. வேறொரு சிநேகிதரைப் பார்க்கப் போயிருந்தான், அதினால் பாடம் படிக்க முடியவில்லை.

பில்லி இவ்வளவு கஷ்டப்படக் காரணம் என்ன? அந்தப் பாடம் மிகவும் கடினமானதோ! இல்லை, ஒருபோதும் இல்லை. அவனுடைய கையில் புஸ்தகம் இருக்கிறது, ஆனால் அவனுடைய எண்ணமெல்லாம் தெருவில் விளையாடிக்கொண்டிருந்த டிக், தாம் என்னும் பையன்கள் பேரிலிருந்தது. பாடத்தின்பேரில் சற்றாகிலும் மனதைச் செலுத்தவில்லை. மனதில் அந்தப் பாடம் கஷ்டமானதென்று அதைரியப்பட்டுக்கொண்டேயிருந்தான்.

சற்றுநேரம் பொறுத்து இந்தப் பாடத்தை நான் எத்தனையோதடவை வாசித்தபோதிலும் மனசில் ஆகவில்லை. ஆகையால் இதைப் பிரயாசப்பட்டு படிப்பதில் ஒரு பிரயோஜனமுமில்லை என்று முறுமுறுத்துக்கொண்டிருந்தான்.

இப்படி இருக்கையில் தெருவழியாக மிஸ்டர். பீச். என்னும் மேய்ப்பன் தன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தான். உடனேபில்லி தன் புஸ்தகத்தை கீழே வைத்துவிட்டு ஆடுகளைப் பார்க்க ஓடினான். டிக்கும் தாமும் அவனோடு சேரவே மூன்று பேருமாக மேய்ப்பனை பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்கள். ஏனென்றால் அவர்களில் ஒருவருக்காகிலும் ஆடுகளைக் குறித்துள்ள விசேஷங்கள் தெரியாது.

பீச் என்பவர் கயிறுபோட்டு பெரிய ஆட்டை முன்னால் ஓட்டிக்கொண்டு போனார். போகையில் அதை தன் பின்னங்கால்களில் நிற்கச்சொன்னார், உடனே அது பெருமையாய் நின்றது.

பில்லி அதைப் பார்த்து 'இந்த ஆடு நீண்ட தாடியும், புத்தியுள்ள கண்களுமுடைய ஒரு கிழவனைப்போலிருக்கிறது' என்று சொன்னான்.

அப்போ பீச் 'அநேக விஷயங்களில் அது ஒரு பையனைப்போலிருக்கிறது, அதற்கு அங்குமிங்கும் ஏறி ஓடவும், விளையாடவும், குறும்புகள் பண்ணவும் அதிக இஷ்டம்' என்றார்.

'அப்படியா—பையன்கள் அப்படித்தான் செய்கிறது வழக்கம்' என்று டிக் ஒத்துக்கொண்டான்.

மறுபடியும் பீச் 'எப்போதும் அது பசியுள்ளதாகக் காணப்படும்' என்றார்.

'பையன்களுக்கும் அப்படித்தான் பசி உண்டாகும்' என்று சொல்லி தாம் சிரித்தான்.

பின்னும் பீச் 'இந்த ஆட்டை எங்கள் கம்பவுண்டில் கட்டாமல் விட்டு விட்டால் தன் கண்ணுக்கு பச்சையாய்த் தோன்றும் புல், செடி, கொடி, கீரைவகைகள் எல்லாவற்றையும் தின்றுவிடும். பூக்களை முதலாய் விட்டுவிடுகிறதில்லை. நான் அதையும், அதின் குடும்பத்தையும் பசும் புல் தரையைச் சுற்றிலும் கம்பியினால் வேலியடைத்து அவைகள் வெளியே போகாமல் அடைத்து, அங்கேயே மேயும்படியாக விடுகிறேன். அப்படியிருந்தும் இந்தப் பெரிய ஆடு ஒரு நாள் வெளியேவந்து ஒரு இளஞ்செடியை கடித்துக்கொண்டு நின்றது. அந்த வேலியின் நாலு மூலைகளிலும் நீண்ட கொம்புகள் குறுக்கு மறுக்காய் நடப்பட்டிருந்தது. அந்த ஆடு உள்கொம்பில் ஏறி வெளிக்கொம்பைக்கடந்து வெளியில் வந்துவிட்டது' என்றார்.

அப்போ டிக் மறுபடியும் சிரித்துக்கொண்டு 'ஆஹா சரியாய் ஒரு பையனைப்போல் செய்திருக்கிறது! இப்படி பின்னங்கால் ஊன்றி நிற்க படிப்பிக்கிறது உங்களுக்கு மிகவும் கஷ்டமாயிருந்ததா? அது எப்படி இவ்வித குறும்புகளை கற்றுக்கொண்டது' என்று கேட்டான்.



அப்போ பீச் பிரதியுத்தரமாக 'ஆடுகளை வெகு லேசாய் பழக்குவிக்கலாம். அதற்குக் கஷ்டமேயில்லை. முதலாவது அதற்கு தன் பின்னங்கால்களை மாத்திரம் ஊன்றி நிற்க இஷ்டமில்லை. அதற்கு காரணம், அது தன்னால் கூடாத காரியம் என்று நினைத்ததினால்தான். ஒரு ஆடு முதலாய் மனிதனைப் போலவே கூடாது என்று ஒரு காரியத்தை நினைக்கும்போது கூடாமல்தான் போகும். அந்த எண்ணத்தை மனதிலிருந்து நீக்கிவிட்டுப் பிரயாசப்பட்டால் அதைச்செய்யக்கூடும். அப்படியே இந்த ஆடும் பிரயாசப்பட்டு பழகிக்கொண்டது' என்றார்.

அச்சமயம் பில்லிக்கு இஷ்டமானால் 'ஒரு பையனும் அப்படித்தான் செய்வான்' என்று சொல்லியிருக்கலாம்.

சாதாரணமாய் பையன்கள் அப்படிச் செய்வது வழக்கம் என்று பில்லிக்கு நன்றாய்த் தெரியும். அவன் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவன் மனதில் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டிருந்தான். அந்த எண்ணம் என்னவென்றால் 'இந்த ஆடு என்னை ஜெயிக்க விடமாட்டேன், நான் அதினின்று ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டேன், என் பாடத்தைப் படிப்பேன், எப்படியாகிலும் பிரயாசப்பட்டு செய்வேன்' என்பதே.

நல்லது பில்லி அப்படியே வீட்டுக்குப் போய் தன் புஸ்தகத்தை எடுத்துப் பாடம் படித்தான். பாடம் மிக லேசாய் காணப்பட்டது படித்து முடித்தவுடனே பில்லி தனக்குள் சிரித்துக்கொண்டான்.

அடுத்த நாள் பில்லி, பீச் என்பவரின் தோட்டத்தின் வழியாய்ப் போகையில் பெரிய ஆடு அவனை எட்டிப்பார்த்தது. அதின் பார்வை "பில்லி என்னும் பையனே, நீ என்னிடமிருந்து நேற்று ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக்கொள்ளவில்லையா" என்று சொல்லுகிறதுபோலிருந்தது.

---

## THE MOST COMMON OF BODILY ILLS.

## சரீர நோய்களில் மிகச் சாதாரணமானதைக் குறித்தது.

---

இதை வாசிக்கிறவர்கள் உடனே ஜுரம்தான் அந்த நோய் என்று சொல்வார்கள். ஆனால் ஜுரமல்ல. ஜுரத்துக்கும் வேறு அநேக நோய்களுக்கும் காரணமாயிருக்கும் அந்த நோய் வலக்கட்டுதான். ஏகதேசம் எல்லா ஜனங்களுக்கும் எப்போதாவது ஒரு சமயம் இந்நோய் வருவதுண்டு. வலக்கட்டினால் உண்டாகும் உபத்ரவங்கள் எவையென்று எல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். ஆனால் அந்நோயின் தன்மையை சரியாய் அறிந்தவர் எத்தனை கொஞ்சம். சிலர் அந்நோய் நாம் சாப்பிடும் ஆகாரம் முதலியவை தாமதித்து மெதுவாய் ஆகாரக்குழாய் வழியாய்ச் செல்வது என்று சொல்வார்கள். இன்னும் சற்று விபரமாய்ச் சொன்னால் ஆகாரம் இரைப்பைக்குள்சென்று, அதன் பின் குடல்களுக்குள் வெகுநேரம் தாமதித்து செல்வதினால் உண்டாகும் நோய் என்று சொல்வார்கள். நாம் உண்ணும் உணவு ஜீரணமாகி ஆசனவழியாய்க் கழிந்து போக, குறிக்கப்பட்ட சமயம் இருபத்து நான்கு முதல் நாற்பத்தெட்டு மணிநேரம். அதிகமாக இருபத்துநான்கு மணிநேரம் மிகவும் உத்தமம். இத்தனை மணிநேரங்களுக்குள் வலம் வெளியாகாவிட்டால் அது குடலுக்குள் தங்கி புளிப்புண்டாகி, தொந்தரவும் கஷ்டமும் கொடுக்கிறது. சரீரத்துக்குள்ளே அது விஷமாக மாறிவிடுகிறது. அப்போ தலை

சோவு, அசதி, மனச்சோர்பு இவை உண்டாகின்றன. ஜீரணசக்திக்கு குறைவுண்டாகி, ஆகார வெறுப்புக் கொடுக்கும் அல்லது மட்டுக்குமிஞ்சின ஆசையைக் கொடுக்கும். அதன்றி வாயு உபத்ரவமுண்டாகி நித்திரை முதலியவை வாராமல் மிகவும் கஷ்டப்படுவார்கள். தேகத்தின் மேல்தோல் ஒருவகை நிறங் கொடுத்து, கட்டிகள் உண்டாகும் அல்லது கிராணி என்றொரு வியாதியைக் கொண்டுவரும். இப்படியாக நமது தேகம் தன் சுகத்தை இழந்து நோயுள்ளதாகி விடுகிறது. படிப்படியாக வேறு அனேக வியாதிகளும் இதன் மூலமாய் உண்டாகும். அவைகளையெல்லாம் விஸ்தரிக்க முடியாது. ஒரு பெரிய வைத்தியன் என்ன சொன்னாரென்றால் 'நாம் சுகமாயிருக்கவேண்டுமானால் நமது கால்களைச் சூடாயும், தலையைக் குளிராயும், குடல்களை வலக்கட்டு இல்லாமலும் வைத்துக் கொள்ளவேண்டும்'.

காரியம் இப்படியிருக்கிறதினால், வலக்கட்டு உபத்ரவம் உண்டாகி நாம் உபத்ரவப்படாதிருப்பது நல்லது என்று யோசிப்போம். ஆனால் நடக்கிற சங்கதியாதெனில் அனேக மனுஷர் இந்நோயைக்குறித்து சற்றேனும் கவனமில்லாதிருக்கிறார்கள். முதலாவதாக அனேகருக்கு இந்நோய் உண்டாகத் தாங்களே காரணமாயிருக்கிறார்கள் என்பது தெரியாது, சிலருக்கு அது தெரிந்திருந்தும் அந்நோயை சட்டைபண்ணாது அஜாக்ரதையாயிருக்கிறார்கள். நல்லது ஒருவனுக்கு இந்நோய் தன்னால்தான் உண்டாகிறதென்று எப்படிச் சொல்லலாம்?

அது எப்படியெனில்:— அனேக ஜனங்கள் நன்றாய்ச் சாப்பிடுவார்கள். ஆனால் அந்த ஆகாரம் ஜீரணமாகவேண்டுமானால் சரியான அப்பியாசம் எடுக்கவேண்டும். அப்படி எடுக்கிற அப்பியாசமும், ஆகாரத்தை ஜீரணப்படுத்தத் தகுந்த விதமும் அளவுமுடையதாயிருக்கவேண்டும். சரீரத்துக்கு சரியான அப்பியாசம் கொடுத்தால்தான், தசைகள் தங்கள் வேலையை சரியாய்ச் செய்யும். இல்லாவிட்டால் எடுக்கிற அப்பியாசத்தால் உண்டாகும் முச்சு இரத்த ஓட்டத்தை துரிதப்படுத்தாது.

பின்னும் சொல்லவேண்டுமானால், இன்னொரு காரணத்தினாலும் ஒரு மனிதன் தன்னால் தானே இந்தநோயை வருவித்துக்கொள்ளுகிறான். எப்படியெனில் நம்முடைய வயிற்றிலிருக்கும் மலம் வெளியே போய்விடவேண்டிய நேரம் வரும்போது நமக்குத் தெரிகிறது. ஆனால் நாம் அடிக்கடி வேலைத்தொந்தரவினாலும், சிலவேளை சோம்பேறித்தனத்தினாலும் அதைக்குறித்து அசட்டையாய் எண்ணிவிடுகிறோம். நல்லது இப்படி இரண்டொரு நாள் நடந்துவரவே வயிற்றிற்குள் அழுக்கும் விஷமும் நிறைந்து ஒருவகையான கஷ்டம் உண்டாகிறது. எப்போ வயிற்றிலுண்டாயிருக்கும் உபத்ரவம் நீங்கும் என்கிற எண்ணம் வருகிறது. சரீர அவயவங்கள் ஒன்றும் தன் வேலையைச் சரியாய்ச்செய்ய காணோம் அல்லது செய்யவேண்டிய விதமாய்ச் செய்யவில்லை. உடனே ஏதாகிலும் ஒரு குளிகையையோ அல்லது வேறுபேதி மருந்தையோ சாப்பிட்டு வயிற்றிற்கு இலகுவுண்டாக்குகிறோம் அல்லது குடலுக்குள் சூடான சோப் தண்ணீரை அனுப்பி (Enema) வலசுத்தியாகிறது. இவ்விதக் கஷ்டங்களெல்லாம் பட்டும் சரியான சுகம் இருக்கிறதா, இல்லை. வரவர சரீரசுகம் கெட்டுப்போய், தசைகள் தங்கள் சக்தியை இழந்து விடுகின்றன.